

162018

ஓம்

ஸ்ரீஜிநாயநம:.

# தருமசிலன்.

“ அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.”

(All Rights Reserved.)

OFF... 2- NOV 1920 MADRAS.

புத்தகம் 3 } இரௌத்திரி௵ சித்திரை௴ 1920௵ ஏப்ரல்௴ { சஞ்சிகை 1

## தருமோபதேசம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கற்றுணர்ந்த வாசிரியன் றனையடுத்துக்
கசடறவே யிலக்கியங்கள் கற்கவேண்டும்
உற்றவிலக் கணமதன்மேற் பயில வேண்டும்
ஓதுமிவை யிரண்டுமறிந் தான பின்பு
நற்றமாங் கவியாலும் வசனத் தாலும்
நானிலத்தில் நூற்கள்பல வியற்ற வேண்டும்
செற்றபிர சங்கமது செய்தல் வேண்டும்
துங்கமிகு மிவையுள்ளோர் கலைவல்லாரே. (௧௪)

இன்னவெழுத் தின்னவிடத் தெழுதவேண்டு
மெனுநியமந் தெரியாதோ னிலச்சை யின்றி
என்னவித மானபெரு நூலை யிங்கு
வெழுதினுமுப் பில்லாத வடிசில் போல
அன்னதுதான் சிறவாது கேட்போர்க் கென்று
மருவருப்பே யுண்டாகு மவனை யெண்ணில்
புன்னகையே புரிவார்க ளெவரு மிந்தப்
புத்திகற்றுக் கொள்ளாதோன் புல்ல னாமே. (௧௫)

எந்தவகை நூல்செயினு மெதன் பொருட்டிங்
கிசைந்தபிர சங்கமது செய்திட் டாலும்
சொந்தநிரு பங்கள்தமை வரைந்திட் டாலும்
தொடர்ந்தபல கணக்குகளைப் பதிந்திட் டாலும்
செந்தமிழி னிலக்கணத்தில் வழுவே யின்றிச்
சிறப்புற்ற சொற்களினா லெழுத வேண்டும்
இந்தவிலக்கணந்தவறு மெழுத்தி னாலே
யிடரன்றிச் சுகமெதுவு மெய்தி டாதே. (௧௬)

# தருமசீலன்.

இரௌத்திரி௵ சித்திரை௴

16 அ 018

## தருமசீலனின் மூன்றாவது ஆண்டு.

வாழ்த்து.

கோச்சகக்கலிப்பா.

*ஞாலமதில் ஞானநெறி நவிற்றிவரும் நற்றரும*
*சீலனிகழ் தருமூன்றாந் திருவயதிற் சீர்த்தியுடன்*
*மேலவர்கள் கொண்டாட விளங்கியினி மேல்வருநற்*
*காலமெலா நிலைத்தோங்கக் கடவுள்கழ லிணைதொழுவாம்.*

தமிழபிமான முள்ள சகோதரர்களே!

நம்சீலனுக்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகி இப்போது மூன்றாவது வருடம் ஆரம்பமாகிறது. சீலன் தோன்றி நடைபெற்ற இந்த இரண்டு வருடங்களுக்குள் இதனால் நேர்ந்துள்ள நன்மைகள் பலவுள: ஆங்காங்கே பத்திரிகை வாசிக்கும் பழக்கங்கள் அதிகரித்துள்ளன; வியாசங்கள் எழுதும் ஆவல்மிகுந்திருக்கின்றது; கல்வியபிவிருத்தி மதாபிவிருத்தி முதலியவற்றிற் கனுகூலமாகப் பல சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன; ஜனங்களுக்கு அறிவை விருத்தி செய்யத் தக்க உபந்நியாசங்கள் அடிக்கடி அறிவுடைய பலரால் செய்யப்பட்டு வருகின்றன; பல கல்விச்சாலைகளும் புத்தக சாலைகளும் ஸ்தாபிக்கப் பட்டுள்ளன; வேறு சில தருமங்களும் நடத்தப்பட்டு வருகின்றன; இன்னும் பல நன்மையான காரியங்களும் நிகழ்ந்து வருகின்றன. இவற்றைப் பற்றி நாம்முன் சில சஞ்சிகைகளில் வரைந்துள்ளோம். ஆதலின் இங்கு விரித்தெழுதல் மிகையாம். இங்ஙனம் சீலனால் நிகழ்ந்து வரும் நன்மைகள் பலவற்றையும் சீலன் நேயர்கள் ஒவ்வொருவரும் உணர்வர். இதனாலேயே வருடந்தோறும் சீலனுக்குச் சந்தாதாரர்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றார்கள். முதல் வருடத்தில் ஆயிரத்துக்குக் குறைந்தவர்களாயிருந்தார்கள்; இரண்டாவது வருடத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர்கள்; இம்மூன்றாவது வருடத்தில் இரண்டாயிரத்துக்கு மேற்படுவோர்களென்பது திண்ணம். இந்த இரண்டு வருடங்களிலும் அநேகம் கனதனவான்கள் சந்தாதாரராகச் சேர்ந்ததோடு தங்கள் நேயர்களையும் சந்தாதாரராகச் சேரும்படி செய்தார்கள்; சீலனுக்கும் இடையிடையே நன்கொடையும் அளித்து வந்தார்கள்; ஆங்காங்கே சீலனைப் பற்றிப் பிரசங்கங்கள் புரிந்து நல்ல அபிப்பிராயங்களை வெளியிட்டுச் சீலனுடைய விருத்திக்கான பல நன்முயற்சிகளையும் செய்தார்கள்; தருமசீலன் அச்சுக்கூடம் விருத்தியாவதற்கும் வேண்டி அச்சுக்கூடத்தில் தங்கள் சொந்தச் செலவில் பல நூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். இம்மகோபகாரிகள் செய்த பேருதவியினாலேயே சீலன் இவ்வளவு சீக்கிரத்தில் விருத்தியடைந்தான். அச்சுக்கூடமும் நடைபெற்று வருகின்றது. ஆயினும் அச்சுக்கூடத்தின் விருத்திக்காக இன்னும் சில நிலவரமான ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கின்றன. சீலனுக்கும் சந்தாதாரர்கள் அதிகப்பட வேண்டும். ஆதலின் நண்பர்கள் இதுவரை செய்து வந்தது போலவே நம் சீலனுக்கும் அச்சுக்கூடத்திற்கும் தக்க உதவிகளைச் செய்து மேலும் மேலும் சீலனும் அச்சுக்கூடமும் விருத்தியடையும் படியான மார்க்கங்களில் ஒவ்வொருவரும் தாம் தாமே பிரவேசிக்குமாறு எல்லோரையும் வேண்டுகின்றனம். இங்ஙனம் எல்லோரும் செய்யுமாறு ஒவ்வொருவருக்கும் ஊக்க மளித்துச் சீலனும் அச்சுக்கூடமும் என்றென்றும் நிலைபெற்று விளங்குமாறு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிக்குமாறு அவன் பதப்போதை எப்போதும் இதயத் திருத்திச் சிரந்தாழ்த்திக் கை குவித்து வணங்குவோமாக. சுபம்.

பத்திராதிபர்.

தேதி 21.01.15 H.5.7

---

## வேலை வாங்கும் முறைமை.

வேலைக்காரர்கள் பலரையோ சிலரையோ தம்மிடம் வைத்து வேலைவாங்கும் பாக்கியத்தை ஒருவர் அடைதல் மிகவும் அருமை. பூர்வபுண்ணிய வசத்தினாலேயே இந்நிலைமை வாய்க்கவேண்டும். இத்தகைய கௌரவத்தை அடைந்தவர்கள் தம்மிடம் வேலைக்காரர்களை வைத்து நடத்தும்முறைமைகளை நன்றாக அறிந்திருத்தல் வேண்டும். அங்ஙனம் அறிந்து நடத்துவோர்க்கே கௌரவமும், புகழும், விசேஷலாபமும், பொதுஜன விசுவாசமும் ஏற்படும். இவற்றை உணராது கண்மூடித் தனமாய் வேலைக்காரர்களை நடத்துவோருக்கு அவமதிப்

யும், அபகீர்த்தியும், விசேஷ நஷ்டமும், பலஜன விரோதமுமே உண்டாகும். பண்டைக் காலத்தில் எஜமானர்களாய் இருந்தவர்கள் இம்முறைகளை நன்றாக உணர்ந்திருந்தார்கள் என்பதை புராண இதிகாசங்களால் நாம் நன்குணர்கிறோம். இராமாயணத்தில் இராமரிடத்தே சேவகம் செய்துவந்த அநுமாருடைய விஷயங்களையும் அவரிடத்தே இராமர் அன்பு செலுத்தி வந்ததையும் கவனித்தால் இவ்விஷயம் நன்குபுலப்படும்.

இப்படி யிருந்தும் இக்காலத்தி லுள்ளவர்களில் சிலர் இம்முறைகளைத் தெரிந்து கொள்ளாம லிருக்கிறார்கள். இதனால் இவர்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங் களுக்கோ அளவில்லை. ஒருரயில்வே இன்ஜின் எவ்வளவோ பாரங்களை வெகு சுலபமாக இழுத்துக் கொண்டு செல்லு கின்றது.

இஃது இவ்வாறு பெரிய வேலையை எளிதில் செய்துமுடிப்பது எதனால் நிறைவேறுகின்றது? அடிக்கடி இதன்யந்திரங்கள் கெட்டுப்போகாமல் அவற்றைத் துடைத்து எண்ணெய் முதலியவற்றாற்பளபளப்புறச் செய்துநன்னிலைமையில் வைத்திருப்பதினாலும், இதற்குவேண்டிய நிலக்கரி, நெருப்பு, நீர்முதலியவற்றைக் குறைவின்றிக் கொடுப்பதனாலு மல்லவா? இவைகளை யெல்லாம் செய்யாவிடில் இந்த இன்ஜினானது ஓர்அடியாவது நகருமா? நம்முடைய தொழில்களுக்கு உபயோகமாகும், கத்தி, அரிவாள், முதலிய கருவிகளை எவ்வளவுக் கெவ்வளவு சாணைபிடித்துத் தேய்த்துக் கூராக்கி எண்ணெயிட்டுத்துடைத்துச்சுத்தமாகவைத்திருக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு அவைகள் நமக்கு விரும்பிய வேலைகளை விரைவில் முடித்துக் கொடுப்பனவாம். இவ்வாறு செய்யாமல் அவற்றைஒரு மூலையில் துருப்பிடிக்கும்படி போட்டு விட்டால் அவற்றைக் கொண்டு ஒருபற்குச்சியும் நறுக்கமுடியாது. நமக்குப்பல வகையிலும் உதவி செய்யும் எருதுக்கு நல்லதீனி போட்டு அடிக்கடி அதைக் குளிப்பாட்டிப் பாதுகாத்துவந்தால் மாத்திரந்தான், அதுநம்முடைய காரியத்தை நிறைவேற்றிநமக்குஇலாபத்தைக் கொடுக்கும். அப்படியின்றி அதைப்பட்டினி போட்டு அதனிடத்தே கடுமையான வேலைகளை வாங்கத் தொடங்கினால் அதுநாளடைவில் தன்னுடைய சக்தியை இழந்து, படுத்த இடத்தைவிட்டுஎழுந்திருக்கமுடியாமல் உயிரை விட்டுவிடும். அப்போது அதற்குக் கொடுத்தவிலைப்பணமும் போய்மேலும் பெருத்த நஷ்டமு முண்டாகும். இப்படியே மனிதர்க் குதவிசெய்யும் மற்றப்பிராணிகளுமாம். இவற்றை யெல்லாம் மேற்கூறிய கடின சித்தமுடைய எஜமானர்கள் சிறிதும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. இவர்கள் வேலைக்கு ஆள்வைத்து விட்டால் தங்கட்கு வேலை நடப்பது ஒன்றைமாத்திரமே கவனிக்கிறார்கள். மற்ற எவ்விஷயத்தையும் இவர்கள் கவனிப்பதேயில்லை. வேலைக்காரர்களைப் பாதுகாக்க வேண்டும் என்னும் விஷயம் இவர்கள் மனத்தில் சொற்பனத்தில் கூடத்தோன்றுவதில்லை? வேலைக்காரர்களைத் துரிதப்படுத்தி வேலைவாங்கி அவர்களால் நடக்கும் அதிக வேலைகளையும் அவற்றால் வரும் இலாபத்தையும் கண்டு மனதிற்குள் சந்தோஷிப்பார்கள். தங்களுக்கு எவ்வளவு இலாபம்வந்தாலும் அதை வேலைக்காரர்களிடம்தெரிவிக்க மாட்டார்கள். வேலைத்திறமைக்குத்தக்கபடி அவ்வேலைக்காரருக்கு ஜாஸ்திசம்பளமும் கொடுக்கமாட்டார்கள்.



ஏற்பட்ட சொற்ப சம்பளத்தையும் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து அவர்கள் மனதைப் பலவாறு வேதனைப் படுத்திக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்து வருவார்கள். வேலைக்காரர்கள் பட்டினி கிடந்தாவது நேரத்தோடு போய் அவர்களுடைய வேலைகளைக் குறைவின்றிச் செய்துமுடித்தல் வேண்டும். பணியாளர்கள் எவ்வுளவு கஷ்டப்பட்டுத் தங்கள் குறைகளைச் சொல்லி அழுதாலும்இவர்கள் சிறிதும் இரங்காமல் 'எல்லாருக்கும் கஷ்டந்தான்; நாங்களும்கடன்வாங்கித் தான் சாப்பிடுகிறோம், என்று அவர்களுடன் எதிர்ப்பாட்டுப் பாடுவார்கள்.

இவர்களுக்கு மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபாய் இலாபம் வந்தாலும் நூறு ரூபாயாவது வேலைக்காரர்களுக்குக் கொடுக்க நினைக்கமாட்டார்கள். வரும்படி அதிகமாக அதிகமாக இன்னும் வேலைக்காரர்கள் சம்பளத்தை எந்தெந்தவழியில் குறைக்கலாமென்று யோசனை செய்வார்கள். 'வேலைக்காரர்கள் சௌக்கியமாயிருந்தால்தானே உற்சாகத்தோடு அதிகம் வேலை செய்வார்கள். அதனால் அதிகம் இலாபம்வரும், என்று இவர்கள் சிறிதும் கருதுவதேயில்லை. மலட்டுப் பசுவில் பால் கறப்பதுபோல் தரித்திரத்தால் மெலிந்து மனம் வெந்து போயிருக்கும் வேலைக்காரர்களிடம்இவர்கள் கசக்கிக் கசக்கி வேலைவாங்குவார்கள். சாப்பிடுவதற்கும் வேலைக்காரரை நேரத்தோடுஅனுப்புவதில்லை. ஓய்வுநாளும் கொடுப்பதில்லை. இளைப்பாற வேண்டிய நேரங்களிலும் இளைப்பாற விடுவதில்லை. நடுஇராத்திரி வரையிலுங்கூடவேலை வாங்குவதற்கு இவர்களுக்கு மிகவும் பிரியம். இத்தகையினர் பலவேலைக் காரர்களை வைத்துத் தொழில் நடத்துவதற்கு அருகராகமாட்டார். இவர்கள் தொழிலும் விருத்தியடையாது. வெகுசீக்கிரமாகவே இவர்கள் தொழிற் சாலையை மூடிவிட்டு ஒருமூலையில் உட்கார்ந்து விடஏதுவாகிறது. ஏனென்றால் இவர்கள் வேலைக் காரர்களைச் சரியாக நடத்தாமையால் அவர்கள் விசுவாசம் குறைந்து வேலைகளைச் சரியாகச் செய்வதில்லை. "நயினார் கோவில் ஊழியத்தை நடையில் தேய்த்தது" போல, இவர்கள் வேலையில் இறங்கிக் கைகால்களை அசைத்தபடியேபார்ப்பவர் கண்களுக்குவேலை செய்பவரைப்போல பாவனைகாட்டி ஒருவேலையுஞ் செய்யாமல் நேரத்தைப் போக்கி விடுவார்கள். தோலிருக்கச் சுளையை விழுங்குவது போல் தொழிற்சாலை இருந்தபடியே இருக்க, சாமான்களை இரகசியமாக நாளடைவில் மடியிலும்முடியிலும் வைத்து மறைத்துக் கொண்டு போய்த் தொழிற்சாலையைக் காலிசெய்து விடுவார்கள். அடிக்கடி வேலைநிறுத்தமும் செய்வார்கள். இப்போது பெரும்பாலும் நடந்துவரும்வேலை நிறுத்தங்களால் இஃதுணரப்படும். இக்காரணங்களினாலேதான் எஜமானர்கள் பெருநஷ்டத்திற் குள்ளாகிறார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் அவர்களுடைய கடின சித்தமே. இவர்கள் வேலைக்காரர்களை அன்புடன் செலுத்து வார்களேயானால் இவர்களுக்கு எவ்வித நஷ்டமும் வராது. தொழிலாளர்கள் மிக்க விசுவாசத் தோடு வேலை செய்து வருவார்கள். எஜமானனுக்கு உயிரையும் கொடுக்கத் துணிவார்கள். "முன் கை நீண்டால் முழங்கைநீளும்" என்ற பழமொழி இங்கு ஆராயத்தக்கது. சட்டியிலிட்டது

தான் அகப்பையில் வரும்" என்றபடி நாம்வேலைக் காரர்களுக்கு எவ்வளவு உத
வி புரிந்து வருகிறேமோ அதற்குத் தக்கபடிதான் நமக்கும்பலன் கிடைக்கும்.
இவற்றை யுணராதசில எஜமானர்கள் வேலைக்காரர்கள் மீது குறை கூறி வரு
கிறு கின்றனர். ஆனல்,சில வேலைக் காரர்களுக்கு எஜமானர்கள்எவ்வளவுஉதவி
புரியினும் அவர்கள் நன்றி மறந்தவர்களாய் எஜமானத்துரோகமே செய்து வ
ருவார்கள். என்றாலும் பரோபகாரகுணமுடைய எஜமானர்களுக்கு இத்தகைய
சிலரால் மேற்கூறியபடி பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விடமாட்டாது. தொழிற்
காரர்களுள் இவர்களுடைய உபகாரத்தைப்பற்றி இவர்கள் மீதுவிசுவாசம்
செலுத்து வோர்களே பெரும்பான்மையும் அங்கு இருப் பா ர் க ள ா த லி ன்
இவர்களுக்கு நன்மையே உண்டாகும். வேலைக்காரர்களை விஸ்வாஸமாக நடத்
துவதனல் பெருஞ் செல்வத்தை அடையலா மென்பதை தற்காலம் மேல் நாட்
டவர்களிடம் நன்கு உணரலாம். அவர்கள் வேலைக்காரர்களிடம் வேலைவாங்கு
ம் முறைமையை நாம் கவனித்தால் மனதிற்கு மிகவும் சந்தோஷமுண்டாகி
றது. எந்த வகுப்பாரும் அவர்களிடத்தில் வேலைசெய்ய மிகவும் பிரியப்படுகிற
ர்கள் "வேலைசெய்தால் வெள்ளைக் காரர்களிடத்தில் வேலைசெய்யவேண்டும்"
என்று ஒரு பழமொழி வழங்குவதைக் கொண்டே இதைத் தெரிந்து கொள்ள
லாம். அவர்கள் தொழிலாளர்களைக் கொண்டு தொழில் நடத்தும் முறைமைக
ளை நன்கு தெரிந்து கொண்டிருப்பதனலேயே அளவிலாத செல்வத்தை அடை
ந்து வருகின்றார்கள். இவற்றை யெல்லாம் நம்மவர்கள் கண் கூடாகக் கண்டும்
இம் முறைகளை அனுசரிப்பதில்லை. அவர்களைப் போல் போலிகடைஉடை பா
வனைகளை அனுஷ்டிப்பதில் மாத்திரம் வெகு தீவிரமாகப் பிரவேசிக்கிறார்கள்.
இதனல் ஏற்படும் பயன் ஒன்றுமேஇல்லை.

ஆகலின்,நம்நாட்டவர் அத்தகைய பயனற்ற காரியங்களையெல்லாம் ஒழித்து
எதுபயனுடையதோ அதைத்தெரிந்து செய்தல் வேண்டும். எல்லாவற்றுள்ளும்
தொழில் நடத்தும் முறைமையைத் தெரிந்து கொள்ளுதலே முதன்மையானதா
ம். இஃதொன்று தெரிந்தால் மற்றெல்லா நலங்களும் கைகூடும். தொழில் நடத்
துவோர் தங்கள் கருவிகளையும் வேலைக்காரர்களையும் நல்லநிலைமையில் வை
த்துக் கொள்ளல் வேண்டும். இதுவே சகல செல்வங்களையும் உண்டாக்குவதற்கு
மூலாதாரமாகும்.

தாசன்.

# பிறர்மன ஆராய்ச்சி.

பிறர் மன ஆராய்ச்சியாவது, அன்னியருடைய மனத்திலுள்ளதை ஆராய்
ந்தறிதலாம். இந்தப் பிறர்மன ஆராய்ச்சியானது சகலருக்கும், சகல தொழில்
களுக்கும் மிகவும் அனுகூலஞ் செய்யும். ஆனல், இதனை அறிதல் எல்லோருக்



கும் சாத்தியமாகாது. அறிவிற் சிறந்தோரே சுலபமாகப் பிறர் மனத்திலுள்ள
தை அறிந்து கொள்வார்கள். அதனலேயே அவர்களுக்குக் காரிய சித்தியும்,
மற்றையர்க்குக் காரியக் கெடுதியு முண்டாகின்றன. இதனைச் சுலபமாக அறி
ந்து கொள்வதற்குச் சில வழிகளிருக்கின்றன. அவற்றைக் கடைப் பிடித்தொ
ழுகினல் எல்லோருமே பிறர் மனத்திலுள்ளதை அறிந்து கொண்டு தொழில்
நடத்தலாம். அம்முறைகளை உணராமையால் சிலர் இடர்ப்பாடுறு கின்றனர்.
ஆதலின், அவற்றைப் பற்றி இங்குச் சிறிது விவரிப்பாம்.

ஒரு மனிதன், மற்றொருவனிடம் ஒரு காரியம் பெற விரும்பிச்சென்றால்
முதலில் அவனுடைய மனம் என்ன நிலைமையிலிருக்கிற தென்பதைப் பற்றி
ஆராய வேண்டும். அந்த ஆராய்ச்சியில், அவன் சந்தோஷத்தோடிருப்பதும்,
விசனத்தோடிருப்பதும், கோபத்தோடிருப்பதும், நன்கு விளங்கும். காரியசித்
தியும், காரியக் கெடுதலும் இந்த மூன்று குணங்களுக்குள்ளே தான் அமைந்தி
ருக்கின்றன. அவன் சந்தோஷமாயிருந்தால் முகமலர்ச்சியாகவும், புன் சிரிப்
புடனும், தேகப் பூரிப்புடனும் இனிய வசனங்களைப் பேசிக்கொண்டிருப்பான்.
விசனத்தோடிருந்தால் முகம்வாடி மருண்ட பார்வையுடன் இதழ்கள் சுருங்கி,
நாவறண்டு, அடிக்கடி கைகளைக் கோத்துச் சடக் கொடித்துக் கொண்டும், கோ
ட்டுவாய் விட்டுக் கொண்டும், தலையைச் சொறிந்து கொண்டும், தரையைப்பார்
த்தபடியும் மெல்லிய குரலுடன்கொஞ்சநேரத்துக் கொருவார்த்தையாகப்பேசு
வான். கோபத்தோடிருந்தால், கண் சிவந்து, உதடு, புருவம், மீசை முதலிய
வை துடிக்க, முகம் வியர்த்துப் பெருங் குரலிட்டுப் பட பட வென்று பேசு
வான். இச்செய்கைகளினல் அவனிடமுள்ள மூன்று குணங்களும் எளிதில்
விளங்கும். இவற்றுள் சந்தோஷ நேரத்தில் காரிய சித்தியுண்டாகும். மற்ற
இரண்டும் உள்ள நேரத்தில் காரியக் கேடே உண்டாகும். அவன் சந்தோஷத்
தோடிருக்கும் போது, அவனிடம் சென்றவன் தனக்குரிய காரியத்தைச் சொ
ன்னல் அன்போடு கேட்டு இனியபதில் கூறி அப்பொழுதே அதை நிறைவே
ற்றுவான். துக்கத்தோடாவது கோபத்தோடாவது இருக்கும்போது காரிய
த்தைத் தெரிவித்தால் அவன் அதை எளிதில் நிறைவேற்றக் கூடியவனயிருந்
தாலும் சொல்வதைச் செவி சாய்த்துக் கேட்க மாட்டான்; அதற்குத் திருப்தி
யான மறுமொழியும் பேசமாட்டான்; அக்காரியத்தை மனம் பொருந்திச் செய்
யவு மாட்டான்; கடுகடுத்துப் பேசுவான், அல்லது ஒன்றும் பேசாமலிருப்
பான். ஆகவே நன்காராய்ந்து ஒருவன் சந்தோஷமாயிருந்தால் மாத்திரம் அவ
னிடம் காரியம் பெறச் செல்வோர் தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்க வேண்
டும்; இல்லையேல் பேசாமல் திரும்பி விடவேண்டும்.

இன்னும், பிறருக்குக் காரியத்தை நிறைவேற்றி வைக்கக்கூடியவர்களும்
தங்களிடம் வருவாரின் மனோநிலைமையை நோக்கிக் காரியம் நடத்த வேண்டும்.
மனதில் மிகுந்த வேதனையை வைத்துக் கொண்டு வருபவர்களின் முகக்குறிப்
பால் அவர்களுடைய கஷ்டத்தை யுணர்ந்து உடனே அதை அகற்றி வைக்க
வேண்டும். சந்தோஷமாயிருப்பவர்களிடத்திலும், வேதனையில்லாதவர்களி
டத்திலும், அவசரமில்லாதவர்களிடத்திலும், சற்று தாமத மாகக் காரியம் நடத்

டு அவர்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்யலாம். இம்முறைகளை அனுசரிக்காவிடில் காரியம் பெறவருபவர் கஷ்டமுடையவர்களாயிருந்தால் முன்னிலும்அதிக வேதனை அடைவார்கள் மறுபடியும் அவ்வாறு செய்யும் மனிதர்களிடத்திற் செல்லவே மாட்டார்கள். அவர்கள் எவ்வளவு தொழில் வல்லமையுடையவர்களாயிருந்தாலும் அவர்களை மதிக்கவே மாட்டார்கள். இதனால் அவர்களுக்கு கௌரவக் குறைவும், வருவாய்க் குறைவு முண்டாகும்.

இப்படி யிருந்தும் இக்காலத்தில் சிலர் இம்முறைகளைத் தெரிந்து கொள்ளாமல் அவஸ்தைப் படுகிறார்கள் 'ஆசை வெட்க மறியாது' என்றபடி தங்கள் காரியம் ஒன்றை மாத்திரமே குறித்த மந்த மதியினர் சிலர், பிறரிடம் சென்று அவர்களிருக்கும் சந்தர்ப்பத்தை உணராமல் துக்கமாயிருக்கும் போதும், கோபமாயிருக்கும் போதும் தங்கள் காரியத்தை எடுத்துச் சொல்லி மூச்சு விடாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சொல்வதெல்லாம் அவர்களிடத்தில் 'செவிடன் காதில் சங்கை ஊதுவது' போலிருக்கின்றது. முடிவில் காரியம் ஒன்றும் கடவாமல் இவர்கள் மனம்வெதும்பி வந்த வழியைப் பார்த்துத் திரும்பிவருகிறார்கள். தங்கள் மதியீனத்தைச் சிறிதும் கவனியாமல் அவர்களை நிந்தித்தலும் செய்கின்றார்கள். தற்பெருமை கொண்ட சிலர், தங்களிடம் ஒரு காரியத்தைக் குறித்து வருவோர் மிகுந்த சங்கடத்திற் குள்ளாகி வந்திருந்தாலும் அவர்களுடைய மனக் குறிப்பைச் சிறிதும் உணராமலும், அவர்களுடைய சங்கடத்தை விரைவில் தீர்த்து வைக்காமலும், அவர்களிடம் தங்கள் பெருமையைக் குறித்தும், வேறு பல வீண் விஷயங்களைக் குறித்தும் நாளெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அவர்கள், 'இளம்பசிக்காரனும் புளியேப்பக் காரனும் ஒன்று சேர்ந்தது' போலவும், 'தாடி பற்றி யெரியும்போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டது' போலவும் அளவிலாச் சங்கடத்தை மனத்திலடக்கி தாக்ஷண்யத்திற்காக இவர்கள் சொல்வதை ஊம் கொட்டிக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு முடிவில் அரும் பிரயாசையில் இவர்களிடத்தை விட்டு வெளியேறி 'நாம் சங்கடத்திலிருக்கும் போது தெரியாமல் இந்தச் சனியனிடத்திலும் வந்து மாட்டிக் கொண்டோமே' என்று ஓடிவிடுகிறார்கள். மறுபடி திரும்பி வருகிறதே யில்லை. எத்தகையராயிருந்தாலும் பிறர் மனோநிலைமையை உணர்ந்து செய்யத் தக்கதைச் செய்யாவிடின் அது மகா பாதகமாம். இத்தகையர் மனிதர் வகுப்பைச் சார்ந்தவராகார்.

ஆதலின், இம்மை மறுமைப் பயன்களை அடைய விரும்புவோரனைவரும் பிறர் மன ஆராய்ச்சியைக் கடைப் பிடித்தொழுகுமாறு விரும்புகிறேன்.

இங்ஙனம்,

வீ. ஆறுமுகஞ் சேர்வை.



# பாலபோத விளக்கம்.

---

கல்விச் சாலைகளில் கல்வி பயிலும் மாணவர்க்கு இதனடியில் வரும் நீதிகள் முக்கிய பாடங்களாம். ஆதலின், வித்தியார்த்திகள் இவற்றைக் கவனித்து நடப்பார்களாயின் சகல விதத்திலும் நன்மையே அடைவார்கள்.

1. காலையில் படுக்கை விட்டெழுந்திருக்கும்போது, தாய் தந்தையர்களைச் சிந்தித்தபடியே எழுந்திருக்க வேண்டும்; அவர்களைத் தெய்வமென்றே பாவிக்க வேண்டும். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,' என்றபடி பிள்ளைகள் பிறந்ததும் முதலில் அறிவது அவர்களையே ஆதலாலும், பிள்ளைகள் தோன்றி வளர்வதற்குக் காரணம் அவர்களே ஆதலாலும், பிள்ளைகளை அவர்கள், தெய்வம் போலிருந்து, உயிரைப்போல பாதுகாத்து வருவதாலும் அவர்களைத் தெய்வமென்றே தியானித்தல் தகுதியாம்.

2. விடிந்தபின் நெடுநேரம் வரை தூங்கக்கூடாது. அவ்வாறு தூங்குவதால் சோம்பலும், பல வியாதிகளும், புத்திக்குறைவும், மறதியும், தரித்திரமும்அதிகமாக உண்டாகும்.

3. விடிய இரண்டு நாழிகை அல்லது மூன்றே முக்கால் நாழிகை யிருக்கும்போதே எழுந்திருக்க வேண்டும். அவ்வாறு எழுந்திருக்கும் போதே –1 வது பாடத்திற் கூறியபடி பெற்றோர் தியானத்துடன் எழுந்து பின்பு இஷ்ட தெய்வ சிந்தனை செய்துவிட்டு அதன் மேல் சிறிது தேகப்பயிற்சி செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் உடம்பில் சுறுசுறுப் புண்டாகும்; நோய் வாராது; புத்தித்தெளி வுண்டாகும்; செல்வம் அதிகரிக்கும்; இலட்சுமி கடாக்ஷம் ஏற்படும்.

4. காலையில் எழுந்து தேகப் பயிற்சி செய்த பின் சும்மா குந்தியிருக்கலாகாது; 'சூரியனுதயங்காரியங்தேடு,' என்ற படி மல ஜல பாதைகளைக் கழித்துத் தந்தசுத்தி செய்து ஸ்நானம் புரிந்து தங்கள் தங்கள் மதத்துக்குரிய அடையாளங்களை (சந்தனம் முதலியவை அணிந்தல்) நெற்றியிலிட்டுக்கொண்டு இஷ்ட தெய்வ ஸ்தோத்திரஞ் செய்துவிட்டுத் தாய் தந்தையரால் கொடுக்கப்பட்ட சிற்றுண்டிகளை உண்டு பசியாறிய பின், ஏற்பட்ட பாட புஸ்தகங்களைச் சோம்பலின்றிப் படித்துக்கொண்டிருக்க வேண்டும். மணி ஒன்பதரையான பின் ஆகார முண்டு உடைகளைச் சுத்தமாக அணிந்து கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும்.

5. பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது விளையாட்டுப் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடக் கூடாது; சண்டை சச்சரவு நடக்கு மிடங்களிலும், கும்பல் கூடியிருக்கு மிடங்களிலும் நின்று வேடிக்கை பார்க்கலாகாது; சண்டைக்காரர்கள் கற்களையும் தடிகளையும் வீசி யெறியும்போது அவை மேலே பட்டு அபாய முண்டாகும். கூட்டத்திற் போவதால் ஜனங்களின் நெருக்கடியால்

பல அபாய முண்டாகும். தெருவின் நடுவில் நடந்து அங்கு மிங்கும் பராக்குப் பார்த்தபடியே செல்லக்கூடாது. தெருவின் ஓரமாக ஒதுங்கி முன்னும் பின்னும், வண்டி, குதிரை, மாடு முதலியவை வருகின்றனவா என்று பார்த்துக்கொண்டு அதிக ஜாக்கிரதையுடன் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாவிட்டால், வண்டி குதிரை முதலியவற்றால் அபாய முண்டாகும். ஜாக்கிரதையில்லாமல் செல்லுங் குழந்தைகளில் எத்தனையோபேர் அபாயத்திற் குள்ளாவதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம்.

6. பள்ளிக்கூடத்திற் போய்ச் சேர்ந்தவுடன், உபாத்தியாயருக்கு வந்தனஞ் செய்துவிட்டுத் தங்களுக்கென்றேற்பட்ட விடத்தில் மிகவும் மரியாதையுடன் உட்கார வேண்டும். உபாத்தியாயருக் கெதிரில் கால்மேல் கால் போட்டுக் கொண்டாவது, குந்து காலிட்டு ஒரு பக்கமாக உடம்பை வளைத்துச் சாய்ந்து கொண்டாவது உட்காரலாகாது. நாற்காலியி லிருந்தால் இரண்டு கால்களையும் தொங்க விட்டுக்கொண்டும், கீழே யிருந்தால் கால்களை மடக்கியும் உட்கார வேண்டும். நகத்தைக் கடித்தல், உடம்பில் அழுக்குருட்டுதல், ஓயாமல் காலாட்டுதல், கையினால் நாற்காலி மேஜைகளில் தட்டித் தாளம் போடுதல், புஸ்தகங்களைத் தட்டிக்கொண்டிருத்தல்,' நாசி யுறிஞ்சுதல், காறிய எச்சிலை உள்ளே விழுங்குதல், மூக்குத் தூள் போடுதல், பக்கத்திலுள்ள பையன்களைக் கிள்ளுதல், கையால் தட்டுதல் முதலிய அங்க சேஷ்டைகளைச் செய்தல், வாயில் புகையிலை அடக்குதல், வீண் பேச்சுக்களைப் பேசுதல் முதலியவற்றை அடியோடு நீக்கிவிட வேண்டும்.

7. உபாத்தியாயரிடத்தில் மிகவும் விசுவாசம் வைக்க வேண்டும்; மரியாதையாகப் பேச வேண்டும்; நெருக்கி அவர் தேகத்திற் படும்படி இருக்கலாகாது; அவரைப் பரிகசிக்கலாகாது; அவருடைய வார்த்தைகளைத் தடுத்துப் பேசக்கூடாது. அவர் மற்றொரு பக்கம் திரும்பும்போது பின் பக்கமாக விருந்து நாக்கை நீட்டியும், கண்ணைச் சிமிட்டியும் அவரை ஏளனம் செய்யலாகாது. அவர் தலைப்பாகையைத் தட்டியும், மேல் வஸ்திரத்தைப் பிடித்திழுத்தும் அவரை அவமதிக்கலாகாது. இவ்வாறு செய்பவர்களுக்குப் படிப்பே வரமாட்டாது; அவர்கள் ஒரு வழியிலும் விருத்தியடையவே மாட்டார்கள். அவர்களுக்கு கல்லு கறியும் கிடைக்க மாட்டாது. இக்காலத்திலுள்ள மாணவச் சிறுவர்கள் இத்துர்ச்சேஷ்டைகள் செய்து வருவதை நாம் நேரில் பார்க்கிறோம். இவர்கள் இந்த அக்கிரமங்களுக்குத் தக்கபடி பின்னே கஷ்டப்பட்டு அலைவதையும் அறிந்து வருகிறோம். ஆதலின், இந்தத் துர்ச்செய்கைகளை மாணவர் நீக்கி விடுவதே நல்லதாம்.

8. உபாத்தியாயர் பாடஞ் சொல்ல ஆரம்பித்தவுடன் புஸ்தகத்தை விரித்துக் கையில் வைத்துக்கொண்டு புஸ்தகத்தைப் பார்த்தபடியும், உபாத்தியாயர் முகத்தைப் பார்த்தபடியும் அவர் சொல்வதைச் சிரத்தையுடன் கவனிக்க வேண்டும். அவர் பாடஞ் சொல்லும்போது அதற்குச் சம்பந்தப்படுவதும், படாததுமாகிய பல விஷயங்களையும் சொல்வாராதலின், பாடத்திற்குரிய விஷயங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு, உபயோகமில்லாத மற்ற விஷயங்களைத் தள்ளிவிட வேண்டும். இவ்வாறே ஒவ்வொரு பாடத்தையும் கேட்டுக்கொள்ள வேண்டும். பாடம் முடிந்தவுடன் உபாத்தியாயர் எழுந்து வேறே வகுப்புப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லச் சென்றால், அவர் தாம் போய் விட்டாரே என்று புஸ்தகத்தைக் கீழே எறிந்து விட்டு ஒருவரோ டொருவர் பேசி விளையாடக் கூடாது; அவர் உட்கார்ந்திருந்த விடத்திற் போய் உட்காரலாகாது; அவருடைய மேஜையில் என்ன விருக்கிறதென்று புஸ்தகங்களையும், மற்றவைகளையும் புரட்டிப் புரட்டி ஆராய்ந்து பார்க்கக்கூடாது. உபாத்தியாயரிடத்தில் எப்பொழுதும் அச்சமிருக்க வேண்டும். அவர் இல்லாத சமயத்தில் தங்கள் பாடங்களையே அக்கறையாகப் படித்துக்கொண்டும், அவற்றில் வரும் சந்தேகங்களை அக்கம் பக்கத்து மாணுக்கரிடம் வினவித் தெரிந்து கொண்டு மிருக்க வேண்டும்.



9. பாடத்திற்குப் பல பாஷைகளை எடுத்துக்கொள்ளலாகாது; இரண்டு அல்லது மூன்று பாஷைகள் மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும். பல பாஷைகளை எடுத்துக்கொண்டால் ஒன்றிலும் பூர்த்தி பெற முடியாது. அவசியமாக எடுத்துக்கொள்ளும் இரண்டு மூன்று பாஷைகளிலும் முக்கியமாக இராஜ பாஷையையும், தங்கள் தங்கள் சொந்தத் தாய்ப் பாஷையையும் கவனிக்க வேண்டும். இராஜ பாஷை உலகத்தில் கஷ்டமின்றி ஜீவிப்பதற்கும் தாய்ப் பாஷை நீதியாக இல்லறம் நடத்தி நற்கதி அடைவதற்கும் ஏதுவாம். ஆதலின் இவ்விரண்டும் மாணவர்க்கு இரண்டுகண்கள் போன்றனவாம். இக்காலத்தில் பலர் தாய்ப் பாஷைகளை அலக்ஷியம் செய்து வருகின்றனர். அதனால் அவர்கள் ஒரு பெரிய நன்மையை இழந்தவர்களாய் உலக நடக்கை ஒன்றும் தெரியாமல் பூமிக்குச் சுமையாய்த் திரிவதை நாம் நேரில் பார்க்கின்றோம்.

10. மேற் கூறியபடி எடுத்துக் கொள்ளப்படும் பாஷைகளில், நீதி நூல்களையும், இலக்கண நூல்களையும், கணித சாஸ்திரங்களையும், பூகோளம் வான சாஸ்திரம் முதலியவற்றையும், பண்டைக்காலத்துப் புண்ணிய புருஷர்களுடைய சரித்திரங்களையும், தேச சரித்திரங்களையும், தேக தத்துவ சாஸ்திரங்களையும், வைத்திய நூல்களையும், கைத்தொழில் சாஸ்திரங்களையும், இராஜாங்க சட்ட நூல்களையும், தெய்வ ஸ்தோத்திர நூல்களையும் இன்னும் இவை போன்ற அவசியமான நூல்களையும் சிரத்தையோடு படித்து அவற்றில் தேர்ச்சி அடைய வேண்டும். புத்தியைக் கெடுக்கும் மயக்க நூல்களைப் படிக்கலாகாது.

(தொடரும்)

ச ந் த ந.

## பொழுது போக்கு

ஒரு நாளில் அறுபது நாழிகைகளே இருக்கின்றன. ஆனால் இந்த அறுபது நாழிகைகளும் எல்லோருக்கும் ஒரே வேகமாகச் செல்லுகிறதில்லை. பள்ளிக்கூடத்திற்குப் போகும் சிறுவனுக்குப் பள்ளிக்கூட நேரம் ஆமை நடையாய்ப் போகும். கை நிரம்பக் கக்ஷியுள்ள வக்கீலுக்கு ஓய்வு நாள்கள் செல்லும் வேகத்துக்குத் தேவாங்கின் நடையே நாணும். காந்தனைப் பிரிந்த காந்தைக்கு அவன் வராத நேரம் அப்படியே நின்று விட்டது போல இருக்குமே யொழியப் போவதாகவே தோன்றாது. இதற்கு மாறாக, பள்ளிச் சிறுவர்களுக்கு ஓய்வு காலம் இறக்கை கட்டிப் பறந்து செல்லும். சாமர்த்தியமும் வெற்றியுமுள்ள வக்கீலுக்கு நீதிஸ்தலம் நடக்கும் நாள்கள் போவதே தெரியாது. காந்தனோடு ஏகாந்தமாயிருக்கும் காந்தையின் நேரத்துக்கு இறக்கையும் வேண்டுமோ?

ஆனால் பெரும்பாலார் இந்தச் சிறப்பு நிலைமைகளில் இருப்பதில்லை. அவர்கள் நிலைமை மத்தியஸ்தமானது. அவர்களுடைய பொழுது முன் சொன்னவர்களுக்குக் கழிவது போல அத்தனை மெல்லவாவது, பின் சொல்லியவர்களுக்குக் கழிவது போல அத்தனை வேகமாயாவது செல்வதில்லை. தினப்பிரதி காரியங்களில் சில மணி நேரமும் தூக்கத்தில் சில மணி நேரமும் போக, மனம் போனபடி செலவிட வென்று கொஞ்சம் பொழுதுதானிருக்கும்.

தனிகர் வீட்டில் இக்காலத்தில் முக்கால் வாசி வேலை சமையற்காரனும் வேலைக்காரர்களும் பார்த்துக் கொண்டு போகிறார்கள்; பட்டணங்களில் தனிக்குடித்தனம் செய்கிற சிறு பெண்களுக்கு கையில் நேரம் அதிகமாகவே இருக்கும். ஆனால் கொஞ்சம் பொழுதோ, அதிகப் பொழுதோ, வேறு காரியமின்றிக் கையிலிருக்கும் பொழுதை எவ்விதம் போக்குவது என்கிற கேள்வி அனேகமாய் எல்லோருக்கும் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் பிறந்து கொண்டே இருக்கும். எப்படியோ பொழுது போய்க் கொண்டுதானிருக்கிறது. ஆனால் போகும் பொழுதினின்று பயனாகவும் விளையாட்டாகவும் எத்தனை பிரயோசனம் பெறமுடியுமோ அத்தனையும் பெறுவது தான் அறிவுடையோர்க்கு அழகு.

கையில் விடுதியாக இருக்கும் நேரத்தில் ஒரு பாகத்தைப் பத்திரிகைகள், நூல்கள், முதலியன வாசிப்பதில் செலவிடுவதன் அவசியத்தைப் பற்றி அதிகம் எழுத வேண்டுவதில்லை. ஆனால் வாசிப்பது நல்ல நூல்களாக இருக்கவேண்டும். உயர்ந்த அபிப்பிராயங்களும் உயர்ந்த ஆதர்சங்களும் உள்ள நூல்களே நாம் வாசிக்கத் தக்கவை. அவையின்றி அனர்த்தமான சம்பவங்கள் நிறைந்த கதைகளைப் படித்து அறிவைக் கெடுத்துக் கொள்ளுவதை விட நல்ல விளையாட்டுக்கள் விளையாடுவது எத்தனையோ உத்தமமானது.



விளையாட்டும் மனிதருக்கு அவசியமே. எப்பொழுதும் புத்தியை விசாரத்திலும் காரியங்களிலும் செலுத்தி வருதல் அனேகமாய் அசாத்தியம். அப்படிச் செலுத்த முடிந்து செலுத்திவந்தால் அவ்விதம் செய்வோர் சீக்கிரம் பித்தர்களாகி விடுகிறார்கள். வீணை, பிடில் முதலிய தந்தி வாத்தியங்கள் எப்பொழுதும் ஏற்றியே வைத்திருந்தால் காலத்தில் வாத்தியங்கள் நாதங் கெட்டுப் போய்ப் பயன்படாது போய்விடும். அவைகளின் தந்திகளை அடிக்கடி தளர்த்தி வைக்க வேண்டியதுபோலவே மனிதனுடைய புத்திக்கும் பொழுது போக்குக் காட்டி அவன் நரம்புகளையும் அடிக்கடி தளர்த்திக் கொடுக்க வேண்டும். ஆகையால் "பல்லாங்குழி," "அம்மானை," "பதினைந்து நாயும் புலியும்," "தாயக்கட்டம்," "சொக்கட்டான்," "பச்சீஸ்," முதலிய விளையாட்டுக்களில் சிறிது பொழுது செலவழிப்பது நன்மையே பயக்கும். ஆனால் விளையாட்டுக்களில் அறிவைத் தூண்டக்கூடிய விளையாட்டுக்களே உத்தமமானவை. மேற் சொன்னவைகளில் "பதினைந்து நாயும் புலியும்" ஒன்று தான் அவ் வியற்கையுள்ளது. சதுரங்கம் கற்றுக் கொண்டு விளையாடுவது மிகவும் உயர்ந்த விளையாட்டாகும். ஆட்டங்களுக்குள் இஃது அரசு. பாரஸீகத்தின் மகா கியாதிமானான அரசனாகிய நவுஷேர்வான், தன் பிரதம மந்திரியை நம் நாட்டுக்கு அனுப்பி, 'அங்குள்ள மிக உயர்ந்த பொருளைக் கொண்டுவருக' என்று ஆக்ஞாபித்த போது, அவன் பஞ்ச தந்திரத்தையும் சதுரங்கத்தையும் கொண்டு போனானாம். அந்நூலையும் விளையாட்டையும் பார்த்து விட்டு நவுஷேர்வான் மந்திரியைப் பெரிதும் மெச்சிக் கொண்டானாம். அப்பேர்ப்பட்ட விளையாட்டாகிய சதுரங்கத்தை நமது நாரீமணிகள் விளையாடினால் மிகவும் அழகாக இருக்கும். இது நாயகர்களோடும் விளையாடத் தக்க விளையாட்டாகையால் இதனால் நாயக நாயகிகளுக்குள்ள அன்னியோன்னியமும் விருத்தியாகும்.

ஆனால் விளையாட்டிலேயே பொழுதைக் கழித்து விடுதல் புத்திசாலித்தனம் ஆகாது. விளையாட்டு விளையாடுவதற்கு இரண்டு பேராவது வேண்டும். அப்படிச் சந்திக்கிறவர்கள் ஒருவரோடொருவர் சம்பாஷித்தல் இதை விட உயர்ந்த விதமான பொழுது போக்காகும். சம்பாஷணை செய்வதில் மனிதருடைய பயிற்சி விளங்குவதுபோல வேறு எதிலும் அத்தனை விளங்காது. தற்காலம் நமது பெண்மணிகளுக்குக் கல்வி புகட்டுவது மிக அருமையாக இருக்கிறபடியால் இவர்களிற் பெரும்பாலார் பேசுகிற பேச்சுக்கள் பயனற்றவையாயும் சுவையற்றவையாயும் இருக்கின்றன. தங்களுடைய ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் பற்றிப் பேசுதல், மற்றோருடைய அழகின்மை, வறுமை, கயமை ஆகிய இவற்றைப்பற்றிப் பேசுதல், சமையலைப்பற்றிப் பேசுதல், இவற்றை விட்டால் வேறு ஒன்றும் பேசத்தெரியாதவர்கள் எத்தனையோ பேரிருக்கிறார்கள். ஆனால் பேசுவதற்கு நல்ல விஷயங்கள் எத்தனை இருக்கின்றன. நூல்களிலுள்ள நாயகர்கள், நூல்களின் அமைப்பு, கவிதை, கானம், சித்திரம், சிற்பம், நமது நாட்டு ராஜீய நிலைமை, ஜாதியில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் இவைகளெல்லாம் சம்பாஷணைக்குரியன. கொடுமையின்றிக் குதூகல ஆகிக்

கத்தினால் சிரிப்பு எழும்படி பேசுவதிலிருந்து நண்பினருக்குள் சந்தோஷமும் கலகலப்பும் பிறக்குமாதலால் மாதர்கள் அந்தக் கலை பழகுதல் அவசியமாகும். மயிலினும் அழகிய தோற்றத்தோடு தங்கக் கம்பிபோல இழையும் குரலில் மனச்செம்மையும் இளமையின் தளதளப்பும் சரீரம் ஆதியந்தம் பெருகியோடும் நங்கைகளினுடைய அறிவும் நல்லுணர்ச்சியும் சுவையும் நிரம்பிய பேச்சுக்களைக் கேட்டலே மனிதர்க்குக் கலைப்பயிற்சியாகும். அத்தகைய சம்பாஷணைகளைப் போலப் பொழுதை இனிது போக்கக்கூடிய சாதனங்கள் வேறு இல்லை

தொடரும்.

தே—வி.

---

## உதயண குமார காவிய வசனம்.

(முன் தொடர்ச்சி புத்தகம்: 2 சஞ்சிகை-4. பக்கம்-96)

### துறவு காண்டம்.

---

மேற்கூறியபடி உதயண மன்னன் வித்தியாதர லோகஞ் சென்று திரும்பி வந்த பின் சித்திரப்பாவையை நிகர்த்த தன் மனைவியாகிய வாசவதத்தை, பதுமை, மானினீகை, விருசிகை ஆகிய நால்வரோடும், திருமடந்தை, கலைமடந்தை, பூமடந்தை என்னும் மூன்று தேவியருடனும், நரவாகனன், கோமுகன் ஆகிய புதல்வருடனும், உருமண்ணு, விடபகன், யூகி, வயந்தகன் ஆகிய நான்கு அமைச்சருடனும் பொருந்தி இனிதாக வாழ்ந்துவந்தான். அப்படி வாழ்ந்து வருங்காலத்தில் "நமக்கு எத்தொழிலிலும் ஜெயத்தையே யுண்டாக்கிய யூகி என்பான் முக்கிய மந்திரியாகவும், தோழனாகவும் அமைந்ததும்; வாசவதத்தை முதலியோர் மனைவியரானதும்; நரவாகனன் முதலியோர் புத்திரரானதும்; வித்தியாதர நாடும் நரவாகனனுடைய வல்லமையால் நம் ஆளுகைக்குட் பட்டதும்; தேச மன்னர்களெல்லாம் நமக்குக் கீழ்ப் பட்டதும்; இந்திரனும் நம்மைப்பூஜித் தனுப்பியதும் நாம் செய்த தவத்தின் பயனாகவே நமக்கமைந்தன. எனினும், உலகபோகம் நிலையற்றதாதலின் இதனை விடுத்து அருகதேவனை வழிபட்டுத் தவம் புரிந்து மோக்ஷவீடடைதலே நிலைத்த செல்வமாம்" என்று துணிந்து துறவை நாடிய சிந்தையுடையவனா யிருந்தான்.

அப்படி யிருக்கும்போது அவனுடைய பட்டத்துயானையானது மதங்கொண்டு கட்டுத்தறியை முறித்துச் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு ஒரு தினம் வெளியேறி மிகுந்த கோப முடையதாய்க் காலன் போல் சீறிப் பல ஜனங்களையும், பாகர்களையும் காலினாலே தேய்த்து இடியைப் போல முழங்கி, மதில்களையும், பல மாளிகைகளையும் தந்தத்தால் இடித்துத் தகர்த்து ஒரு பர்வதம் போலத் தெருக்களில் உலாவித்திரிந்தது. அது கண்டு வேறு சில பாகர்களும், வீரர்களும், படபடத்து அதனை யடக்கும் பொருட்டு ஆயுத பாணிகளாய் அதனெதிரே சென்றார்கள். அவர்களை எல்லாம் அந்த யானையானது கோட்டாற்



குத்தியும், தும்பிக்கையால் வளைத்து அடித்தும், காலாற் றேய்த்தும் கொன்று அவர்களின் குடலைக் கோட்டில் மாலைகளாக அணிந்து இன்னம் பல உற்பாதங்களை விளைவித்தது. அதன் கொடுமையைக் கண்ட நகர மாந்தர்கள் நடுங்கி முடி மன்னனாகிய உதயணன்பாற் சென்று, "மன்னர் பெருமானே! நம் பட்டத்து யானையானது மதங்கொண்டு கட்டுத்தறியை முறித்து வெளியேறிப் பல ஜனங்களை மடித்ததோடு நகரத்தையும் அழித்துக்கொண்டு திரிகின்றது" என்று தெரிவித்தார்கள். அரசன் தன் மாளிகையின் மேல் மாடத்திற் போய் நின்று யானையின் கொடுமைகளை உற்று நோக்கினான். அப்போது அந்த யானை ஜனங்கள் கூறிய படியே அழகு பொருந்திய உத்தியான வனங்களையும், தடாகங்களையும், வயல்களையும் அழித்து, வழியில் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் பார்மைப் பிளந்து வதைத்து ஒருவருக்கும் அடங்காமல் திரிந்தது. அதைக் கண்டு மன்னன் அதிசய முற்றிருந்தான்.

அச்சமயத்தில் நான்கு வேதங்களையும் விரித்துரைப்பவரும், கூட்டமாகிய மலர்களின் மீது நடப்பவரும், அலை பொருந்திய ஜலத்தின் மீது செல்பவரும், கனி காய்களை அருந்துபவரும், நூலின் மீது நடப்பவரும், மலையின் உச்சியில் செல்பவரும், ஆகாயத்தில் செல்பவரும், பூமியிற் பாதம் படாமல் நான்கு விரலுக்கு மேல் நடந்து செல்வாரும், முழந்தாளினால் நடந்து செல்பவரும், மலைக் குகைகளில் வசிப்பவரும், இன்னும் பல அரிய தொழில்களைச் செய்பவருமாகிய பல தபோதனர்கள் நகரத்தையடுத்து ஆகாரங் கொள்வதற்காக அந்நகரத்தின் ஒரு சோலையிலே வந்து தங்கியிருந்தார்கள். அவர்களுள் சிரேஷ்டராகிய தர்ம வீரிய ரென்னும் முனிவரிடத்தில் அந்நகரமாந்தர்கள் வந்து வணங்கி அந்த யானை செய்யுங் கொடுமையைச் சாற்றினார்கள். அப்போது அம்முனிவரர் அந்த யானையால் கொல்லப்படும் ஜீவன்களின் தசை முதலியவற்றைத் தின்பதற்குப் பல பறவைகளும், பருந்தினங்களும் மேலும் கீழும் பறந்து பின் றொடர்ந்து செல்ல அந்த யானையானது பல தீங்குகளை விளைவித்துக் கொண்டு திரிவதைக் கண்டனர். அங்ஙனம் பார்த்த மாத்திரத்தில் அவர் அதனுடைய பூர்வவிருத்தாந்தத்தை உணர்ந்தவராதலின் அதற் கெதிரே சென்று தருமோபதேசஞ் செய்தனர்.

அங்ஙனம் அவர் தருமோபதேசஞ் செய்யத் தொடங்கவே அம்மத கரியானது தன் செருக் கொழிந்து வணக்கத்தோடு அவர் முன்னே நின்று செவி சாய்த்து அவ்வுபதேசத்தை பக்தி சிரத்தையோடு கேட்டுத் தன் பூர்வஜென்ம விருத்தாந்தத்தினை யுணர்ந்து, "அந்தோ! நாம் முற்பவத்தில் செய்த தீவினையால் இவ்வனம் விலங்காகப் பிறந்தோம்; பிறந்தும் இந்த ஜென்மத்தில் செருக்கால் பல உயிர்களைக் கொன்றொழித்தோம்; இந்தத் தீவினையானது மேலும் நம்மை மிகவும் பயமும் துக்கமும் நிறைந்த விலங்குகதியுட் கொண்டுபோய்ச் சேர்க்கும்; மீளுதற்கரிய நரகத்துட் செலுத்தும்; நாம் முன் பின் யோசனையின்றி என்ன காரியம் செய்தோம்" என்று நெஞ்சங் கரைந்துருகி நெடுங் கண்ணீர் விட்டழுது அரசன் அரண்மனையைச் சார்ந்து சாந்தத்துடன் கோட்டை வாயிலிற் போய் நின்றது. அது கண்டு காவலாளர் கோட்டை வாயிற் கதவைத் திறந்து

விட்டனர். உடனே அஃது உட்புகுந்து கட்டுத் தறியைச் சார்ந்து நின்றது. இவ்வதிசயத்தைக் கண்ட காவலாளர்கள் அப்பொழுதே உதயணமன்னனிடஞ் சென்று தெரிவித்தார்கள். இறைவன் ஆச்சரிய மடைந்து உடனே அமைச்சரோடு புறப்பட்டு வந்து யானை மிகவுஞ் சாந்தத்தோடு நிற்கக் கண்டு "மதங்கொண்டு நகரத்தில் பல உற்பாதங்களை விளைவித்த இம்மத்தகய மானது இவ்வாறு பித்து நீங்கி நிற்கும் அதிசய மென்னே?" என்று மந்திரிகளை நோக்கினான். அப்போது அம்மந்திரிகளுள் யூகி என்பான் மன்னனை நோக்கி "இறைவ! தர்மவீரிய முனிவரின் தருமோபதேசத்தைக் கேட்ட காரணத்தால் இந்த யானை யானது மதம் நீங்கிச் சாந்த மடைந்தது. இனி நீர் இதன் மீது நிர்ப்பயமாக ஏறலாம்" என்று கூறினான். அதைக் கேட்டவுடனே உதயணன் சந்தோஷித்து அந்த யானையின் வெள்ளிய தந்தத்தின் மீது இரண்டு பாதங்களையும் வைத்து ஏறி அதன் பிடரியிலமர்ந்தான். உடனே அவ்வேழம் மன்னனைச் சுமந்த படியே சென்று அம்முனிவரிருக்கும் சோலையைச் சார்ந்து அதனை வலமாகச் சுற்றி வந்து அத்தபசியின் சமீபத்திற் போய் நின்றது.

அங்ஙனம் நின்றவுடனே உதயணன் அந்த யானையை விட்டிழிந்து வாசனை பொருந்திய புஷ்பங்களும், இனிய கனி வர்க்கங்களும், பரிசுத்த நீரும் கொண்டு தன் பரிவாரங்கள் சூழச்சென்று தர்ம வீரிய முனிவரைக் கண்டு அவருடைய பாதங்களை சுத்தோதகத்தால் விளக்கித் தாமரை மலரால் அருச்சித்துத் துதித்து வணங்கினான். முனிவர் அவனுக்குப் பல ஆசிகள் கூறி 'இருக்கக் கடவாய்' என்று இருக்கை காட்டினார். அரசன் அவ்விருக்கையிலிருந்து பய பக்தியுடன் அவரிடம் அறத்தைக் கூறும்படி கேட்டான். முனிவரும் அவனை நோக்கி "கேளாய் அரசனே! நான் சொல்லும் தர்ம நெறிகளாகிய ஆபரணங்கள் மனிதர்க்குப் பெறுதற் கரியனவாகும். ஷட்த்ரவ்யம், பஞ்சாஸ்தி காயம், ஸப்த தத்வம், நவபதார்த்தம், பொறிகளாறு, தசதர்மம், த்வாதசாநுப்ரேக்ஷை, அடக்கம் ஆகியவற்றை யுணர்ந்து அவற்றின் வழி யொழுகி அற நூல்களை முற்றக் கற்றுணர்ந்து அவற்றின் வழியே சென்று சற்பாத்திர தானம், பூஜை, தபச்சீலங்கள் ஆகியவற்றையும் அனுஷ்டிப்பவர் சம்சார சாகரத்தினின்றும் நீங்கி அனந்த சுகக்கடலுள் ஆழ்வார்கள். ஆதலின் நீ இவற்றின்படி ஒழுகுவாயாக" என்று கூறினர்.

இவற்றைக் கேட்டவுடன் உதயண மன்னன் எழுந்து அவருடைய பாதங்களில் வணங்கி தரிசன விசுத்தனாகி அவரை நோக்கி "முனிசிரேஷ்டரே! இத்தக்களிறானது உம்முடைய தருமோபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தில் மதம் நீங்கியதற்குக் காரணம் யாது?" என்று வினவினான். அதற்குத் தர்ம வீரியர் "கேளாய் அரசனே! சாலக்கிராம நாட்டிலுள்ள கடக மென்னுமூரில் விருஷபாங்கன் என்னும் ஒரு வேதியனிருந்தான். அவன் தேவி ஜானகி என்பாள். இவ்விருவரும் கலந்து வாழ்கின்ற காலத்தே அவ்வேதியன் அமரி என்னும் வேசியின்வயப்பட்டுத் தூர்த்தனாய் வேதமோதுதல், வேள்வி செய்தல் முதலிய பிராமண ஒழுக்கங்களை விட்டுக் கள்ளுண்ணல் முதலிய துர்க்கிரியைகளை அனுஷ்டித்து இரவும் பகலும்அப்பரத்தையை விட்டு நீங்காமல் திரிந்த



தால் முடிவில் மரண மெய்தி விலங்குகதியுட் புகுந்து இந்த யானையாயினான். இப்போது நாம் தர்மோபதேசஞ் செய்ததால் இக்களிற்றிற்குப் பூர்வஜன்ம விருத்தாந்தம் தோற்றிற்று. அதனாலேயே இது மத நீங்கி அடங்கிற்று" என்று கூறினார். அதன்மேல் அரசன் "அந்த யானைக்கு சுத்தோதகாபிஷேகஞ் செய்து, அன்னமும், பாலும், நெய்யுங் கலந்த கவளத்தை ஊட்டக் கடவீராக' என்று பாகர்க்குக் கட்டளையிட்டு முனிவரிடம் வணங்கி விடை பெற்றுச் சென்றான். அது முதல் அந்த யானைக்குப் பாகர் அவ்வாறே கவளங் கொடுத்து வந்தனர். அரசன் நாடோறும் அம்முனிவரிடம் சென்று நல்லுபதேசங்களைக் கேட்டு வந்தனன். யானை அரசனிடத்தில் முன்னினும் அதிகமாகப் பிரியங் காட்டியிருந்தது. அதனால் அரசனுக்கும் அந்த யானையின் மீது விருப்ப மதிகரித்து வந்தது. அங்ஙனமாகவே ஒரு தினம் உதயணன் தர்ம வீரிய முனிவரிடத்தில் "முனிபுங்கவ! இந்த அத்தியின் மீது எனக்கு விருப்பம் அதிகரித்துள்ளது; இதற்குக் காரணம் யாது?" என்று வினவினான். அதற்கு முனிவர் அவனை நோக்கிக் "கேளாய் அரசனே! மேகங்கள் படிந்த சோலையினாற் சூழப்பட்ட வெள்ளி மலைமேலுள்ள உத்தரசிரேணியைச் சார்ந்த மத்தியம நாட்டில் விளங்கும் சுகந்தி நகரத்தில் வயந்தகன் என்னும் மன்னன் அரசு புரிந்து வந்தான். இவன் தேவி ஸ்ரீரங்குலாங்கனை என்பாள்; புத்திரன் கோமுகன் என்பான்; இந்தக் கோமுகனை வளர்த்த கைத்தாய் சோமசுந்தரி யென்பாள்; அவளுடைய புத்திரன் விஜயன் என்பான். இந்த இரண்டு புத்திரர்களும் நண்பர்களாகி விளையாடிப் பருவமடைந்து, அக்காலத்தில் அளவில்லாத இன்பங்களை யெல்லாம் அனுபவித்து வந்தனர். சின்னாட்கள் கழிந்த பின்னர், கோமுகன் உயிர்நீத்து அரசபுத்திரனாகத் தோன்றினன்; அவன் நீயே. விஜயன் தன்னுயிர் நீங்கிய பின்னர் மேற்கூறிய விடபகன் என்னும் அந்தணனாகத் தோன்றிக் கெட்ட ஒழுக்கங்களிற் பிரவேசித்து அந்த ஜென்மமும் விட்டுநீங்கி இப்பொழுது இங்குவந்து இந்த யானையாகத் தோன்றியிருக்கின்றனன். நீங்களிருவரும் பூர்வத்தில் நண்பர்களாயிருந்த காரணத்தினால் இக்காலத்தில் அதன் மீது உனக்கு அன்பு ஏற்படுகின்றது; அதற்கு உன்மீது விருப்பம் அதிகரிக்கின்றது. இன்னும் ஏழுதினங்களில் இந்த யானைக்கு ஆயுள் நீங்கிவிடும்," என்று கூறினர்.

(இன்னும் வரும்)

வீ. ஆறுமுகஞ் சேர்வை.

## நீதிமொழித் திரட்டு.

### கல்வி.

கல்வி, அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய புருஷார்த்தங்களைப் பயக்கும். கடலாற் சூழப்பட்ட இப்புவியுலகு முழுவதிலும் கீர்த்தியை நிலை நாட்டும். மனதுக்குக் கவலை நேர்ந்த காலத்து, அக்கவலையை நீக்கும். ஆபத்துக் காலத்தில் சிநேகிதரைப் போல் கை கொடுத்து உதவி செய்யும். மனிதன் தனக்கு இடைக்

கண் வந்தால் உதவும் பொருளைக் கொடுத்துங் கல்வி கற்க வேண்டும். கற்ற பின்பு ஞானக்கண்ணு முண்டாகும்; அது தத்துவத்தினை விளக்கும்; வருத்தத்திற்கு உதவியுமாம்; ஆதலின், இதனை யொழிந்த பொருள்கள் பொருளல்ல; இதனால் மீண்டும் பொருள்களுண்டாம்; கீர்த்தியு முண்டாகும்.

தலை மயிரினழகும், மார்பினழகும், நகத்தினழகும், செவியினழகும், பல்லினழகும் ஆகிய இவற்றினும், நூல்களிலுள்ள சொல்லழகே சிறந்தது. தலை மயிரினழகு முதலியன தம்மைப் பார்க்கும் பிறர்க்கே யன்றித் தமக்கு இன்பந் தருவனவல்ல; கல்வி யொன்றே தம் மனத்துக்கு இன்பந்தருவது.

இடையினது அழகும், தோள்களினது அழகும், பெருமையினது அழகும், நடையினது அழகும், நாணத்தினால் உண்டாகும் அழகும், பக்கங்கள் நன்கமைந்துள்ள கழுத்தினது அழகும், அழகாகா. ஒருவர்க்குக் கணித நூலுணர்ச்சியும் இலக்கண நூலுணர்ச்சியுமாகிய அழகே அழகாகும்.

அறிவு நூல்களைக் கற்றவர் தேவரை நிகர்ப்பார்; கல்லாதவர் பிசாசுகளை நிகர்ப்பார்.

பொருள்கள் பலவற்றுள்ளும் கல்விப் பொருளே சிறந்ததாம்; ஏனெனில், அது கொள்ளை கொள்ள முடியாதது; பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்கச் செல்வம் போல் குறைவு படாதது; தாயாதிகளால் பங்கிட்டுக்கொள்ள முடியாதது; தணல் தண்ணீர் முதலியவைகளால் அழிவு படாதது; வேந்தரால் கொள்ள முடியாதது. இத்தகைய பெருமை வாய்ந்த கல்வியை ஒருவன் விரும்பிக் கற்பானானால், அதனால் அறிவையும், அறிவினால் பெருமையையும், பெருமையினால் பொருளையும், பொருளினால் தர்மத்தையும், தர்மத்தினால் சுகத்தையும் அடைகிறான். கல்வி கற்றவர்கள் தங்கள் வாழ் நாட்களை சாஸ்திர ஆராய்ச்சி செய்வதிலேயே கவனம் செலுத்தி அதனால் வரும் இன்பத்தை மேன்மேலும் அனுபவிப்பார்கள். கல்வி யறிவில்லாதவர்கள், துக்கத்திலும் தூக்கத்திலுமே தங்கள் வாழ் நாட்களைக் கழித்து அதனால் வரும் இன்னலை மேன்மேலும் அனுபவிப்பார்கள்.

கண்களுக்கு அணியாவது தாட்சணியம்; விரும்பப்பட்ட குலமகளுக்கு அணிதற்குரிய அணியாவது கல்வி யறிவாம்.

வீட்டுக்குப் பொலிவின்மையாவது நற்குண நற்செய்கையுடைய மனையாளையுடையதாயிராமை; மனிதன் தான் சென்ற இடத்துக்குப் பொலிவின்மையாவது தன்னுடன் கட்டுக் கொண்டவரை உடையனாயிராமை; பலர் கூடின சபைக்குப் பொலிவின்மையாவது, பல நூல்களையும் கற்று அறிதலில்லாத உடம்பினனாயிருத்தல்.

ஒருவன் நூல்களைக் கற்பதினால் மிகுதியாகிய பேதைமை குறைவான்; அறியாமை நீங்குவதினால் புல்லறிவு நீங்கி, இவ்வுலகத்தினது இயல்பினை அறிவான்; அவ்வியற்கையை உணர்ந்தவன் உண்மையாகிய வழியில் செல்லுவான்; சென்ற அவ்வழியினால் இம்மையில் உலகத்தில் புகழை நிலை பெறச் செய்து மறுமையில் உயர்ந்த முத்தி யுலகத்தில் புகுவான்.

௨:



கற்றோர் முகத்திலிருப்பது இரண்டு கண்கள்.
கல்லார் முகத்திலிருப்பது இரண்டும் புண்கள்.

(தொடரும்)

மே—ச.

## கல்விப் பயிற்சி.

முற்காலத்திலிருந்த கல்விப்பயிற்சியானது மிகவும் சிரேஷ்ட முடையது; இக்காலத்தில் கல்விபயிலும் முறைமையோதலைகீழாக மாறிப்போய்க் கிடக்கின்றது. இது பற்றிச் சிறந்த கல்வியாளர் மனமெல்லாம் புண்ணாகின்றது. இம்முறை கேட்டைப் பற்றி இப்போது எவ்வளவுதான் எழுதினும், சொல்லினும் அவையெல்லாம் இப்போதைய மாறு பாட்டுவழியைச் சார்ந்த சிலருக்குச் செவிடன் காதில் சங்கை ஊதினது போன்றனவேயாம். அவற்றையெல்லாம் அவர்கள் ஒரு சிறிதும் இலக்ஷியம் செய்யவே மாட்டார்கள். அவர்கள் இவ்வாறு கூறுகிறவர்களையும் நிந்தித்துப் பரிகசித்து விட்டுத் தங்கள் மனம் போனபடியே மாறு பாட்டுக் கல்வி பயிலும் முறைமையைக் கைக் கொள்ளுவார்கள். ஆயினும் தமிழ்க் கல்வியானது சீர் கேடடையும் விஷயத்தைப் பார்த்துச் சகித்திருக்க முடியவில்லையாதலின், கல்வி பயிலுவதில் முற்காலத்திலிருந்த முறைமைகளைப் பற்றியும், இக்காலத்திலிருக்கும் முறைமைகளைப் பற்றியும் சிலவற்றை எழுதுவாம். அவற்றைக் கவனிப்போர் கவனிக்க; கவனியாதிருப்போர் கவனியாதிருக்க.

ஒருவன் சில எழுத்துக்களைக் கூட்டிப் படிக்கத் தெரிந்து கொள்வதும், சில கணக்குகளைப் பழகிக் கொள்வதும் மாத்திரம் கல்விப் பயிற்சியாகமாட்டா. எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டபின் நல்லாசிரியனை யடுத்து இலக்கண இலக்கியங்களையும், நாற் பொருள்களையும் விளக்கிக் காட்டும் பல சாஸ்திரங்களையும் முறையே கற்றுக் கொள்ள வேண்டும். இது தான் சரியான கல்விப் பயிற்சியாகும். அங்ஙனம் கற்றுக் கொள்வதினும் மாணாக்கர், ஆசிரியனை யடுத்து,

“அழலினீங்கா னணுகானஞ்சி
நிழலினீங்கா னிறைந்த நெஞ்சமோடு
எத்திறத்தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே”

என்றபடி குளிருக்காக அனல் காய்பவன் விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற நெருப்பைப்போல அவ்வாசிரியனை நினைத்து, அச்சங் கொண்டு

நீங்காமலும், கிட்ட நெருங்காமலும் இருந்து, அவன் சென்ற விடத்தெல்லாம் நிழலைப்போல விடாது பின் தொடர்ந்து சென்று, அன்பு நிறைந்த மனத்துடனே கூடி, எவ்வகையில் அவ்வாசிரியன் மகிழ்வானோ அவ்வகையோடு பொருந்தி, தருமத்தினின்றும் மாறுபடாத நடத்தையை யுடையவராய் அவ்வாசிரியனுக்கு வழிபாடு செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்து வருவதோடு பாடங் கேட்கச் செலுங் காலத்தில்,

"கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன் குறிப்பிற் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவனன்னஆர் வத்தனாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்."

என்றபடி, தக்க காலத்திலே ஆசிரியனிடம் போய், வழிபாடு செய்வதில் வெறுப்பில்லாதவராய், ஆசிரியனது குணத்துக்குத் தக்கபடி அவனோடு பழகி, தாம் வரலாமென்று ஆசிரியன் குறிப்புக் காட்டிய பின் அக் குறிப்பை யறிந்து அவன் சமீபத்திற் சேர்ந்து, அவன், 'இரு' என்று சொன்னபின் இருந்து, படி யென்று சொன்னபின் படித்து, மிக்கதாக முள்ளவன் நீரினிடத்துக் கொள்ளும் ஆசையைப் போலத் தாம் பாடங் கேட்டலில் ஆசையை யுடையவராய், சித்திரத்திலெழுதிய பிரதிமையானது எப்படி அசைவற்றிருக்கின்றதோ அப்படியே மன மொழி மெய்களடங்கி, காது வாயாகவும், மனம் கொள்ளுமிடமாகவும் ஆசிரியனிடத்தில் பன்முறை கேட்ட நூற் பொருள்களை மறந்து விடாமல் தம்மனதில் நிரம்பப் பதிய வைத்துக் கொண்டு, 'போ' என்று ஆசிரியன் சொன்ன பின்பு வீட்டிற்குப் போக வேண்டும். இவ்வாறு பாடங் கேட்டுக் கொள்வதில், அன்னத்தையும் பசுவையும் போன்ற முதல்மாணக்கர் இலட்சணப்படி அமைந்து, அன்னம் பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலைமாத்திரம் உட்கொள்ளுவது போல ஆசிரியன் கூறிய பல விஷயங்களுள் தள்ள வேண்டியவைகளைத் தள்ளிச் சாரமானவைகளை மட்டும் கொண்டும், பசுவானது நல்ல புல் அகப்பட்ட விடத்தே விரைவில் அவற்றை மேய்ந்து வயிற்றை நிரப்பிக் கொண்டு ஓரிடத்திற் போய் அசை வற்று நின்று தின்றவற்றை யெல்லாம் மீளச் சிறிது சிறிதாகக் கக்கி அசையிட்டு மென்று பக்குவப் படுத்திச் சாரத்தை உட்கொள்ளுவதுபோல, ஆசிரியன் கூறிய நல் விஷயங்களை யெல்லாம் விரைவில் மனத்தில் வாங்கிக் கொண்டுபோய்த் தனியே யிருந்து மீண்டும் ஒவ்வொன்றாக நினைத்து நினைத்து ஆராய்ந்து மனத்திற் பதித்தும்,



"நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்."

என்றபடி, உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்குகளை யறிந்தும், மூலபாடங்களை மறவாமல் பாது காத்தும், ஆசிரியனிடத்துக் கேட்ட பழைய பாடங்களாகிய நூற்பொருள்களைப் பல முறை சிந்தித்தும், ஆசிரியனை யடுத்து முன் கேட்ட வற்றையே மனத்திற் பதியும்படி மறுபடியுங் கேட்டும், தம்மைப் போலவே பாடங் கேட்கும் மாணாக்கரோடு பழகியும், தாம் சந்தேகித்த பொருள்களைக் குறித்து அவர்களிடம் கேள்வி கேட்டும், அவர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தாம் உத்தரஞ் சொல்லியும், கல்வி பயிலவேண்டும். இந்த முறைகளின் படி கற்றாலும் "ஆசானுரைத்த தமைவரக் கொளினுங் காற்கூறல்லது பற்றலனாகும்" என்றபடி ஆசிரியன் உரைத்தவற்றில் காற்பாகந்தான் கற்றுக் கொள்ள முடியும். மற்ற முக்கால் பாகம் எவ்வாறு பூர்த்தி பெறுமெனில்,

"அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகால்
செவ்விதி னுரைப்ப வவ்விருகாலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்."

என்றபடி, ஆசிரியனிடம் நூல்களைக் கற்று வெளியேறிய பின்னரும், தம்மைப் போலக் கற்ற மாணாக்கரோடு பழகி வரவேண்டும்; இதனால் காற்பங்கு பூர்த்தி பெறும்; அதன்மேல், தம்மிடம் பாடங் கேட்க வருவார்க்குத் தாம் கற்றவற்றைச் சொல்ல வேண்டும்; பலர் கூடிய சபையில் பிரசங்கம் புரிய வேண்டும். இவற்றால் மற்ற அரைப்பாகமும் பூர்த்தி பெறும். கல்வி பயில்வோர் இம்முறைகளின்படி யெல்லாம் நடந்து தான் கல்வியில் முழுத்தேர்ச்சியையும் அடைய வேண்டும். இவ்வாறு பூர்த்தி பெறுவதிலும் இன்னும் சில முறைகளைக் கடைப்பிடித்தொழுக வேண்டும். அவையாவன:—

முதலில் திவாகரம், நிகண்டு முதலியவற்றை மனப்பாடம் பண்ணி இலக்கியப் பயிற்சி செய்த பின், இலக்கண நூல்களையும் ஐயந்திரி பறக் கற்றுக்கொள்ள வேண்டும். அதன்மேல் செய்யுள்களாலமைந்த தோத்திரப் பிரபந்தங்களையும், நீதி நூல்களையும், இதிகாச புராணகாவியங்களையும், இன்னும் பல வகையான சாஸ்திரங்களையும் வாசிக்க வேண்டும். அப்படி வாசிப்பதிலும்,

"கல்வி கரையில கற்பவர் நாட்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்

ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து"

என்றபடி கண்ட கண்ட மயக்க நூல்களை யெல்லாம் மாடு நுனிப்புல் மேய்வது போல அதிலொன்றும் இதிலொன்றுமாகப் படித்து வீணே ஒன்றிலும் பூர்த்தி யடையாது காலைப் போக்காமல் பயனற்ற நூல்களைத் தள்ளிப் பயனுடைய வற்றையே விரைந்து கற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் செய்யுட்கள் எழுதவும், நடைகள் எழுதவும், நூற்களின் சாரங்களைப் பெரியசபைகளில் எடுத்து விளக்கமாகச் சொல்லவும் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு பழக்கி கொண்டவர்கள் தாம் எந்த வகையான நூல்களையும் கவியாகவோ நடையாகவோ செய்யவும், பெரிய சபைகளில் மேலான விஷயங்களைப் பேசவும் அருகராவார். வித்வா னென்ற பட்டத்துடன் வெளியேறவும் உரியராவார். இவ்வளவு சக்தியையும் அடையாதவர்கள் வித்வானென வெளியேறினால் அரசர்களாலும் பிரபுக்களாலும் தண்டிக்கப் படுவார்.

இவை தாம் பண்டைக்காலத்துக் கல்விபயிலும் முறைகள். இம்முறைகளைக் கைக்கொண்டிருந்ததினாலேயே அக்காலத்து வித்துவான்கள் சகல தொழில்களிலும் வல்லவர்களா யிருந்தார்கள். அவர்கள் செய்யும் நூல்களில் எவ்வகை விஷயங்களையும் விளக்கமாகச் சொல்லும் சக்தியையும் அடைந்திருந்தார்கள் அதிலும் தமிழுக்கு இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் மிகவும் பொருத்தமுடையவைகளா யிருந்தபடியினாலே அவர்கள் மற்றவற்றைக்காட்டினும் இம்மூன்றையும் தெளிவாகக்கற்று அவை சம்பந்தமாகவே பல நூல்களையும் இயற்றி யிருக்கின்றனர். இக்காரணத்தாலேயே தமிழும் முத்தமிழ், எனப் பெயர் பெற்றது. அக்காலத்து வித்வான்கள் முத்தமிழிலும் சிறந்திருந்தார்களென்பதை, சிலப்பதிகாரம், சிந்தாமணி, முதலிய சங்க இலக்கியங்களால் நன்குணரலாம். கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றிய காலத்தில் சாற்றுக்கவி வாங்கும்போது ஒவ்வொரு தொழிற்காரரும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்க விடையளித்தார் என்ற சரித்திரத்தினாலேயே அக்காலத்துப் புலவர்கள் எல்லாத் தொழில்களின் வகைகளையும் அறிந்திருந்தார்களென்பது வெள்ளிடை மலை போலத் தெள்ளிதில் விளங்கும்.

இன்னும் அக்காலத்தில் கல்வியைப்பற்றி வேறு சில சட்டதிட்டங்களும் ஏற்பட்டிருந்தன. நன்றாக இலக்கண இலக்கியங் கல்லாதவன், வித்வானென வெளி வருதல் முடியாது. அரசர்களின் ஆதரவின் கீழ்ச் சிறந்த வித்வான்களாகிய தமிழ்ப்பரிசோதகர்கள் ஏற்பட்டிருந்தார்கள். ஆங்காங்கே தமிழ்ச் சங்கங்களும் இருந்தன. ஒருவன் தமிழ்ப்புலவனென வெளி வருவதாயிருந்தால் இராஜ சமஸ்தானங்களுக்கும், தமிழ்ச்சங்கங்களுக்கும் சென்று தன்னுடைய கல்வித்திறமையைக் காட்டித் தமிழ்ப் பரிசோதகரால் யோக்கியதா பட்டம்பெற்று வெளி வரவேண்டும். புதிதாகக் கல்விகற்று வெளிவருவோரால் செய்யப்படும் நூல்களும் அவர்கள் பரிசோதனையின்பேரிலும், சாற்றுக்கவிகளின்பேரிலுந் தான் வெளிவரவேண்டும். அங்ஙனமின்றித் தான்தோன்றிகளாக வெளிவரும் வித்வான்களுக்கும், நூல்களுக்கும் கண்டனை தண்டனைகளுண்டு. சங்கப்புலவ



ர்களுள், நக்கீரனார், மதுரைச்சொக்கனாரால் பாடப்பட்ட 'கொங்கு தேர் வாழ்க்கை' என்ற பாசுரத்திற்கும் குற்றங் கூறினாரென்றால் அக்காலத்திய தமிழ்ச்சட்டதிட்டங்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ! தெய்வப் புலமையுடைய திருவள்ளுவர், திருத்தக்கதேவர் முதலிய பெரியோரும் தாங்கள் பாடிய நூல்களைச் சங்கத்தில் அரங்கேற்றிய பின்னரே வெளியிட்டார்கள். என்ன அக்காலத்திய தமிழ்க்கல்வியின் கிரமங்கள்! அவற்றை நினைக்குங்கால் தேகம் சிலிர்க்கின்றது. இந்தக் கிரமங்கள் தவறி எவனேனும் வித்வானென வெளிவந்தால், பண்டைக்காலத்தில் பிள்ளைப்பாண்டியன் என்னும் ஓர் அரசன், அவனைத் தலையில் குட்டி யொழித்து விடுவான்; வில்லிபுத்தூராழ்வார் அவனுடைய செவிகளை ஒட்ட அரிந்து விடுவார்; ஒட்டக்கூத்தன் கல்விநிரம்புதலில்லாமல் வெளிவந்த பலரைச்சேர்த்துத் தலையோடு தலை சேர முடிந்து சிரச்சேதம் செய்து விடுவான். இதனை,

"குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியளா வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லை யில்லை
இரண்டொன்றா முடிந்து தலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிகடமை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே."

என்னும் தனிச்செய்யுளாலுணரலாம். சீத்தலைச் சாத்தனாரென்பவர் சரியாகப்படிக்காதவர்களுடைய செய்யுட்களைக் கேட்டவுடன் அவர்களை ஒன்றுஞ் செய்யாமல் 'அந்தோ! இந்த வழுப்பாடலைக் கேட்கவும் நேர்ந்ததே' என்று தம் தலையில் தானே வயிற்றெரிச்சலால் குட்டிக்கொள்வார். அதனால் அவர் தலையில் விரணமாகி எப்பொழுதும் சீழ் ஒழுகிக்கொண்டே யிருக்கும். இக்காரணத்தினாலேயே அவருக்குச் சீத்தலைச் சாத்தனார் என்னும் பெயர் ஏற்பட்டது. தப்பான நூல்களை எவனேனும் பாடிக்கொண்டு மேற் கூறிய இடங்களுக்குச் சென்றால் அந்நூல்கள் வெளிவராமல் கிழித்தெறியப்பட்டுவிடும்.

இப்படி யெல்லாம் தமிழைப்பற்றி அக்காலத்தில் கண்டிப்பான ஏற்பாடுகள் இருந்தமையினாற்றான் பண்டைக் காலத்தவர் பன்னிரண்டு வருடங்கள் வரை தொண்டு செய்தேனும் தமிழைக் கசடறக் கற்று வெளியேறி வந்தார்கள். தெய்வீகம் பொருந்திய நூல்களை யெல்லாம் இயற்றி வெளிப்படுத்தினர்; ஆசுகவி பாடுந்திறம் பெற்றிருந்தார்கள்; நாகபந்தம், மாலை மாற்று முதலிய சித்திர கவிகள் பாடுந்திறம் பெற்றிருந்தனர்; வாது நிகழ்ந்த காலத்தில் அரிகண்டம் எமகண்டம் முதலிய வற்றிலிருந்து கேட்டவர் வாயடங்கச் சாற்றொணாக் கவி பாடிக் கீர்த்தி பெற்றனர்; அஷ்டாவதானம், சோடசாவதானம், சதாவதானம் முதலிய வற்றை யெல்லாம் செய்து தெய்வீகப் புலவரெனத் தேச மெங்கும்,

புகழ் பெற்றனர். அவர்க்கு வாக்கும் பலித்தது; அவர் கவியிற் சொன்னவை அப்படியே நடந்தன; அவர்களிடம் மனப் பரிசுத்தம் கூட குடிகொண்டிருந்தது; அதனாலே அவர்கள் வாக்கு நிறைவேறும் தெய்வீகம் அவர்களிடம் தங்கியிருந்தது. அவர்கள் இவ்வாறு மகிமையுடையவர்களாயிருந்ததால் முன்னிருந்த அரசர்கள், பிரபுக்கள் முதலிய எல்லோருமே அவர்களைக் கொண்டாடி அவர்கள் சொற்படியே நடந்து வந்தார்கள்; அவர்களுக்குப் பல்லக்குச் சுமத்தல் முதலிய தொண்டியற்றவும் இசைந்தார்கள்; அவர்க்குத் தலையைக் கொடுக்கவும் சம்மதித்தார்கள்; இன்னும் எவ்வளவோ அருமையான செய்கைகளையெல்லாம் செய்தார்கள். இவற்றை, குமணன், சேரசோழ பாண்டியர்கள், இரகுநாத சேதுபதி, போஜன் முதலியவர்களுடைய சரித்திரங்களால் கண்டுணரலாம். இன்னும் அக்காலத்துத் தெய்வீகப் புலவர்களால் செய்யப்பட்ட நூல்களும், தனிப் பாசுரங்களும் என்றென்றும் அழியாமல் நிலை பெற்று நிலவக் கூடியனவாயிருக்கின்றன. இவ்வாறிருத்தலே அவர்களின் தெய்வீகத் தன்மையை விளக்குவதற்குப் போதியசான்றாயிருக்கின்றது. இன்னும் முற்காலத்தில் வித்வான்களைக் கண்டால் எவரும் அஞ்சுவார்கள்; அவர்களைக் கண்டவுடன் அவர்க்கு வேண்டிய மரியாதைகளையெல்லாம் செய்துவிட்டுத் தான் மறு வேலை பார்ப்பார்கள். இந்த கௌரவம் அவர்களுடைய தெய்வீகத் தன்மையினாலே தான் ஏற்பட்டது. இன்னும் சிலர் தங்கள் தெய்வ பக்தியாலும் மனத் தூய்மையாலும் ஓதாதுணர்ந்த மேதாவிகளாகவும் விளங்கினார்கள். இவர்கள் தெய்வ கிருபையால் கடாக்ஷ வித்வான்களெனப் பெயர் பெற்று எங்கும் புகழ் பரப்பி விளங்கினார்கள்.

பண்டைக் காலத்திய தமிழ்க் கல்விப் பயிற்சியின் முறைமைகளும், வித்வான்களின் தன்மைகளும் இவ்வாறிருந்து வந்தும், இக்காலத்தில் அவை நேர் மாற்றமாக மாறி, வரவரக் குறைந்துகொண்டே வந்து மிகவும் பரிதபிக்கக் கூடிய நிலைமையிலிருக்கின்றன. சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்னிருந்த நிலைமையைக் காட்டிலும் இப்போதைய நிலைமை மிகுந்த கேவல ஸ்திதியிலிருக்கின்றது. நாற்பது ஐம்பது வருஷங்களுக்கு முன் பழைய ஏற்பாட்டின்படியே ஏறக்குறையப் பாட முறைகள் நடைபெற்று வந்தன; வித்வான்களும் முன்னிலைமைக்கு அரைப்பங்காவது பெற்றிருந்தார்கள்; ஆங்கிலக் கலாசாலைகளிலும் தாய்ப் பாஷைப் பாடங்கள் சிறந்த வித்வான்களாகிய தமிழ்ப் பண்டிதர்களால் பண்டைய முறைகளையனுசரித்தே பெரும்பாலும் நடத்தப்பட்டு வந்தன. அதனால் தமிழும் சிறிது ஜீவன் பெற்று நிலவி வந்தது. பிற்பட்ட இக்காலத்திலோ அவற்றைப்பற்றிப் பேசுதற்கும் நாவெழவில்லை. தமிழ் கற்கும் மாணவன் ஆசிரியரைத்தேடிப் போவதில்லை. ஆசிரியரே மாணவன் வீடு தேடிப் போக வேண்டும். நேரத்தோடு உபாத்தியாயர் போகாவிட்டால் அவனுக்குக் கண்டனை தண்டனைகளும் அதிகமாவுண்டு. மாணவன், உபாத்தியாயரைக் கோபித்துக் கொள்வான். மாணவனுக்கு நேரங் கிடைக்கும் வரை ஆசிரியர் காத்திருந்து பாடஞ் சொல்லிவர வேண்டும்; இன்னும் மாணாக்கன் ஏவியவேலைகளையும் ஆசிரியன் செய்யவேண்டும். இவ்வாறு படிப்பதிலும் மாணாக்கன்



ஆறு மாதம் அல்லது ஒரு வருஷத்துக்கு மேல் படிக்க மாட்டான். இதற்குள்ளும் ஒரு நூலையும் முற்றுற வாசிப்பதில்லை. நிகண்டில் பத்துப் பாட்டும், நீதி நூலில் ஐந்தாறு செய்யுட்களும், இலக்கணத்தில் ஐந்தாறு சூத்திரங்களும், பாரதத்தில் பத்தும், இராமாயணத்தில் இரண்டும், நைடதத்தில் நான்கும், அரங்கத் தந்தாதியில் ஆறும் படித்து விட்டு இந்த அரைகுறையான படிப்பைக்கொண்டு இவன் வித்வானென வெளியேறி விடுவான். சிலர், ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு ஆசிரியராகப் பல ஆசிரியர்களிடத்தும் சென்று ஆங்காங்கே சிறிது பாடங்கேட்டு விட்டுத் தங்களுக்குத் தெரிந்த இருபது முப்பது பாடல்களை வைத்துக்கொண்டு வித்வான்களென வெளியேறி விடுகிறார்கள். இனிக் கலாசாலைகளிலுள்ள தாய்ப்பாஷைப் பாடங்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. இவற்றில், நன்றாகப் படித்த தமிழ்ப் பாஷை ஆசிரியர்களுமிருக்கிறார்கள்; சாதாரண ஆசிரியர்களுமிருக்கிறார்கள். பாடமோ ஒரு நூலும் பூர்த்தியின்றி இதிலொன்றும் அதிலொன்றுமாக எடுத்துப் புதிய நாகரீக மேதாவிகளால் கதம்பமாக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு வைக்கப்பட்ட பாடத்தையும் மாணாக்கர் சரியாகப் படிப்பதில்லை. பரீக்ஷை என்னும் உபத்திரவத்திற்காகச் சிறிது கவனித்து அந்தக் காலத்தில் கேள்விக்கு மாத்திரம் ஏதோ விடை யெழுதி விட்டுத் தங்கள் டன்புஸ் என்ற நாகரீகத்தில் திரும்பி விடுகிறார்கள். இதனால் அவர்கள் உபாத்தியாயரைச் சிறிதும் மதிப்பதில்லை. மீசையைப் பிடித்திழுத்தும், தலைப் பாகையைத் தட்டியும், பலவித ஏளன வார்த்தைகளைப் பேசியும் பரிகசிக்கிறார்கள். இவர்களுக்கு எங்கே சுய பாஷைப் படிப்பும், இல்லற வொழுங்குகளும் ஏற்படப்போகின்றன. பக்தி சிரத்தையுடன் பல சாஸ்திரங்களையும் முற்றுற வாசித்தாலன்றோ இவை ஏற்படும்? உப்பில்லாப் புற்கை போன்ற இந்தப் படிப்புக்கும் மத்தியில் அழிவு நேர்ந்து ஏதோ தெய்வ சங்கல்பத்தால் கொஞ்சம் இருப்பது போலத் தலை காட்டிக்கொண்டிருக்கின்றது. மேற் கூறியபடி பூர்த்தியற்ற சுய பாஷை ஞானத்தோடு ஆங்கிலக் கல்வித் தேர்ச்சியை வைத்துக்கொண்டு கௌரவப் பட்டம் பெற்ற நம்மவரிற் சிலர் சுய பாஷை நூல்களை அவமதித்து நல்லதைக் கெட்டதாகவும், கெட்டதை நல்லதாகவும் எண்ணித் தங்கள் மனம் போனபடியே காலடைவில் பற்பல மாறுதல்களைச் செய்து வந்ததாலேயே இக்குறை நேர்ந்தது.

இவ்வாறு தமிழ்க் கல்விப் பயிற்சி முறையானது பல விதத்தும் மாறுபட்டிருப்பதால் தான்றோன்றி வித்வான்களும், போலிப் புலவர்களுமே அதிகமாகக் கிளம்பி விட்டனர். இவர்களுக்கிடையில் முறைப்படி கல்வி கற்றுத் தேர்ந்த பெரிய வித்வான்கள் சிலர் அகப்பட்டுக் கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். பாட்டே பாடத் தெரியாத சிலர் பாட்டினால் புகழடையக் கருதிக் கவிவாணர்களைத் தொந்தரவு செய்து அவர்களிடம் கவிகளை யெழுதி வாங்கிக் கொண்டு போய்ப் பற்பல விடங்களில் தாங்களே பாடினதாகச் சொல்லிப் பெருமை யடைகிறார்கள். ஒரு வரி கூடத் தமிழில் பிழையின்றி எழுதத் தெரியாத சிலர் படிப்பாளிகளிடம்

புத்தகங்களை எழுதச் சொல்லி வாங்கிக் கொண்டு தாங்களே எழுதினதாகத் தங்கள் பெயரால் வெளிப்படுத்திப் பொய்ப் புகழடைகின்றார்கள். படிப்பே யில்லாத சிலர், படித்த வித்வான்களுக்குச் சொற்ப சம்பளம் கொடுத்து அவர்களைச் சிறைச்சாலையி லடைப்பதுபோல் வீட்டிற்குள் அடைத்து வைத்துக் கொண்டு அவர்களாற் பல நூற்களை யெழுதச்செய்து அவற்றைப் பெயர்மாற்றித் தாமே எழுதினதாக வெளிப்படுத்திப் பேராசிரியர்களெனப் பெருமை பாராட்டித் திரிகின்றனர். கல்வி யறிவே யில்லாத சில அச்சுக்கூடத் தலைவர்கள் சிறந்த வித்வானென ஒருவரைத் தாங்களே மதிப்பிட்டு வைத்துக் கொண்டு, வேறு பல விவேகிகள் பிரயாசைப் பட்டு எழுதின நூல்களை யெல்லாம் அவர்களே எழுதினதாக அவர் பெயருடன் வெளிப்படுத்தி விடுகின்றனர். இத்தகைய திருட்டு நூல்களுக்குப் பெரிய வித்வான்களெனப் பெயரெடுத்தவர்களும் சாற்றுக் கவிகள் கொடுத்து விடுகின்றனர். இவ்வாறே யான் பிரயாசைப் பட்டுச் செய்த தமிழ் அகராதி யொன்று சென்னையில் வேறொருவர் பெயரால், சிறந்த மேதாவிகளுடைய சாற்றுக் கவிகளுடன் வெளி வந்திருக்கின்றது. இன்னும் சிலர் இலக்கணக் கல்வி நிரம்புதலின்றி மிகவும் ஆபாசமாக நூல்களை எழுதி வெளிப்படுத்துகின்றனர்; அவனூற்றின்கண் குற்றங்களை அறிந்தோர் கூறினால், 'அவை அப்படித்தான் இருக்க வேண்டும்' என்று வாயடி அடிக்கின்றார்கள். சிலர் மனம்போனபடி யெல்லாம் நூற் கருத்துக்களை மாற்றி எழுதி விடுகின்றனர். அவற்றைப்பற்றி எவரேனும் கேட்டால் அவை சரிதான் என்கிறார்கள். சிலர் கவிபாடுவதால் ஒன்றும் பிரயோசனமில்லை என்கிறார்கள்; சிலர் பழைய நூல்களெல்லாம் ஆபாசமாயிருக்கின்றன; அவற்றில் வரும் கற்பனைகளெல்லாம் அருவருப்பைத் தருகின்றன என்கிறார்கள். சிலர் நினைத்த போதெல்லாம் சபை கூட்டி நூற்கருத்துக்கள் ஒன்றுமேயின்றி வாயில் வந்த வற்றை யெல்லாம் சொல்லிப் பிரசங்கங்கள் புரிகின்றார்கள். இவர்களுக்குத் தகுதியற்ற விச்வப்பட்டங்களை அங்கு வந்து கூடுவோர் கொடுக்கின்றார்கள்; நற்பரிசுகளு மளிக்கின்றார்கள். சிலர் தாங்களே சில மெடல் தோடாக்களைச் செய்து அன்னியரிடம் இரகசியமாகக் கொடுத்துத் தங்களுக்குச் சபையில் வித்தைத் திறமைக்குப் போட்டதுபோலப் போடும்படி செய்து வெட்கங்கெட்ட கௌரவத்தை அடைகிறார்கள். சிலர் அவதான மென்னும் தெய்வீக வித்தையையும் போலித்தனமாகச் செய்து பொய்க் கௌரவத்தை அடைகிறார்கள். பண்டைக் காலத்தில் பாட்டின் கணக்கின் மேல் அவதானம் ஏற்பட்டிருந்தது. கேள்விக்காரர் கேள்விப்படி எட்டுச் செய்யுள் கூறுவோனுக்கு அஷ்டாவதானி யென்றும், பதினாறு சொல்வோனுக்குச் சோடசாவதானி யென்றும், நூறு சொல்வோனுக்குச் சதாவதானி யென்றும், ஆயிரம் சொல்வோனுக்கு சகஸ்ராவதானி யென்றும் பட்டங்கள் ஏற்பட்டிருந்தன. இதர கேள்விகளுக்கு விடை, படிக்காதவனும் ஞாபக சக்தியுடையவனாயிருந்தால் கூறிவிடக் கூடுமாதலால் வித்வான்கள் செய்யும் அவதானத்திற்குப் பாட்டுக்களே முக்கியமாக ஏற்பட்டிருந்தன; இதர கேள்விக ளெல்லாம் பாட்டுச் சொல்வதற் கிடையூறும்படி ஏற்பட்டவை. அவற்றைக் கணக்கில் சேர்ப்ப



தில்லை. இம் முறையை "எட்டெட் டெழுத்தாணிக் கேற்ற கவி சொல்லும் அட்டாவதானியுநா னாகினேன்" என்னும் விறலிவிடு தூதுக்காரர் வாக்கா லுணரலாம். இம் முறைப்படி மெய்யாக அவதானஞ் செய்வோர் இக் காலத்திலும் சிலருண்டு; பேறையூர் மீனாக்ஷி சுந்தரக் கவிராயர் இரண்டு கண்ணும் தெரியாத அந்தகரா யிருந்தும் எட்டுப் பாடல் சொல்லி இதர கேள்விகளுக்கும் விடை பகர்ந்து அஷ்டாவதானம் செய்து வந்ததை நான் நேரில் கண்டிருக்கிறேன்; முறையூர். ஸ்ரீமாந். பழ. சி. சண்முகஞ் செட்டியாரவர்களால் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் தனிச் செய்யுட் சிந்தாமணி யென்னும் புத்தகத்தில், மேற்கூறிய கவிராயரவர்கள் ஓர் அவதானத்திற்கூறிய எட்டுச் செய்யுட்களு மிருக்கின்றன; அவற்றாலேயே அவதானக் கணக்கிற்கு பாட்டே முக்கியமாக ஏற்பட்ட தாம் என்பதை நன்குணரலாம். இப்படி யிருந்தும் இக்காலத்தில் சிலர், அவதான லட்சணத்திற்கு ஆதாரமில்லை என்றும், விறலிவிடு தூதுக்காரர் எட்டெட்டு எழுத்தாணி என்று சொன்னது அறுபத்து நான்கு எழுத்தாணி என்று அருத்தமாவதால் பாட்டிற்குக் கணக்கில்லை என்றும், இஷ்டம் போல பாட்டை வைத்துக் கொள்ளலா மென்றும், பாட்டோடு சேர்த்து மற்ற கேள்விகளையும் கணக்காக்கிக் கொள்ளலா மென்றும், அவ்வாறு கணக்காக்குங்கால் எட்டு வரை அதற்குக் குறைந்திருந்தாலும் அஷ்டாவதான மென்றும், அதற்கு மேல் பதினாறு வரை அதற்குக் குறைந்திருந்தாலும் சோடசாவதான மென்றும், அதற்கு மேல் இரண்டொன்று அதிகப்பட்டாலும் சதாவதானத்திற் சாருமென்றும் மனம்போனபடி பேசிக்கொண்டு அவதான மென்பதே இன்னதென்றுணராத சிலரைச்சேர்த்து வைத்துக்கொண்டு இஷ்டம்போல் நாலைந்து கேள்விகளையும் இரண்டொரு பாடல்களையும் வைத்துக் கொண்டு, அவற்றையும் முன்னரே தயார் செய்து பாடம் பண்ணிக்கொண்டு பிறரிடம் அவற்றைக் கொடுத்துத் திருட்டுத் தனமாகக் கேட்கச்செய்து கெம்பீரமாக விடை பகர்ந்து அவதானி யென்னும் பட்டத்தையும் ஏற்றுக்கொள்கின்றனர். 'எட்டு எட்டு' என்பது ஒவ்வொரு அவதானத்திற்கு எட்டு எட்டுச் செய்யுளாமென்று அவர் விதந்து கூறிய அடுக்கா மென்றும், எட்டு என்னும் கணக்கைக்கொண்டே அஷ்டாவதானமென்னும் பெயர் ஏற்பட்டதென்றும் இவர்கள் சிறிதும் உணர்ந்திலர்.

இன்னும் சிலரோ பாட்டென்று சொல்லத்தகாத வழுச் செறிந்த பாடல்களைப் பாடிக்கொண்டு பெரிய வித்வான்களென அகங்கரித்துத் திரிகின்றனர். சிலர் எல்லாம் தெரிந்தவர்களைப்போல நடித்துத் தமிழின் குறைவைப் பற்றி எழுதத்தொடங்கி அதற்குதாரணங்காட்டுஞ்செய்யுட்களையே தப்பாக எழுதித் தாங்களே அதற்குதாரணமாகித் திரிகின்றனர். சிலர், ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி இலக்கண வரம்பேயின்றிப் புத்தகமெழுதி, படிப்பாளிகள் 'இதில் இலக்கணப்பிழைகள் அதிக மிருக்கின்றன,' வென்றால் இதற்கு இலக்கணம் வேண்டியதில்லை, விஷயந்தான் முக்கியம், என்கிறார்கள். கல்விநிரம்புதல் இல்லாதவர்களெல்லோரும் புராணப் பிரசங்கங்கள் செய்கிறார்கள். நாடகங்களிலுள்ளவர்களைப் பற்றிப் பேசத்தொடங்கினாலோ அது பெரிய இராமா

யமாகும். எழுத்து வித்தியாசம் தெரியாதவர்களெல்லாம் நாடக வாத்தியார்களாய் விடுகிறார்கள்; நிரக்ஷரகுக்ஷிகளெல்லாரும் ஆக்டர்களாக வந்து விடுகிறார்கள்; அவர்களைக் கொண்டாடும் பாமரஜனங்களுக்கோ அளவில்லை; வரும்படிக்கோ கணக்கில்லை. சிலர், பல புஸ்தகங்களிலிருந்து விஷயங்களை எடுத்து ஒரு புஸ்தகமாக்கி அதைத் தாங்களே இயற்றியதாக வெளிப்படுத்துகிறார்கள்; சிலர், தங்கள் வாய்க்கு வந்ததையெல்லாம் ஒரு நூலாக எழுதி அதனைப் பண்டைக்காலத்து ரிஷிகள் பேரால் வெளியிட்டு விடுகிறார்கள்; சிலர், பண்டைக்காலத்தவர் இயற்றிய நூல்கள் அச்சில் வெளிவராதிருந்தால் அவற்றைத் தாங்களே இயற்றியதாக வெளியிடுகின்றனர். சிலர், இங்கிலீஷ் விற்பத்தியை மாத்திரம்கொண்டு தமிழிலும் தேர்ச்சி யுற்றவர்போலத் தமிழைச் சீர்திருத்தம் செய்கிறோமென்று சிறந்த பழைய நூல்களையெல்லாம் சிதைத்துச் சின்னாபின்னப் படுத்தி விடுகின்றனர்; ஸ்திரீவர்ணனைகளைப் படித்தால் பிள்ளைகள் கெட்டுப்போவார்களென்று அது சம்பந்தமான சில வாக்கியங்கள் வரும் அரிய பெரிய நூல்களையெல்லாம் வெளிப்படுத்தக்கூடாத ஏற்பாடுகளையெல்லாம் செய்து விடுகிறார்கள். சாமானியர் செய்த சில ஆபாச நூல்களை ஒழித்துவிடுதல் தகுதியே என்றாலும், படிப்பார்க்குப் பல விதத்திலும் அறிவு கொடுக்கத்தக்க பெரிய நூல்களுக்கும் இவ்வாறு செய்யப்புகுந்தது தகாது. ஆங்கிலம் கற்கும் மாணவர் பலவிதத்திலும் இந்திய வொழுக்கத்தைக் கைவிட்டு எவ்வளவோ, கெட்ட வழக்கங்களிற் பிரவேசிக்கிறார்கள்; நாடகங்களில் எவ்வளவோ ஆபாசங்கள் நடக்கின்றன; தெருவில் செல்லும் ஆண் பெண்களிற் சில வருப்பார் நாணமின்றிக் கைகோத்துக் கொண்டு பார்ப்போர் அருவருக்கும்படி செல்கின்றார்கள்; பார்த்த உடனே புத்தி கெட்டுப் போகத்தக்க சிற்றின்ப விஷயங்களடங்கிய எத்தனையோ இங்கிலீஷ் புஸ்தகங்களிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் ஒருவித கண்டனை தெண்டனைகளும் இல்லை. தமிழ் நூல்களுக்குத்தான் எல்லாக்கேடும் வந்து விட்டது.

இன்னும் தமிழ் விற்பத்தி அதிக மில்லாத சாமானியரால் எழுதப்படும் ஆபாசப் புத்தகங்களும், எழுத்துப் பிழைகள்கூடக் களையப்படாத பல புஸ்தகங்களும், எவ்விதத்தும் மாணவர்க்கு அறிவூட்டத்தகாத நாவல்களும் மாணவர்க்குப் பாடமாக வைக்கப்படுகின்றன; சில தந்திரங்களைக் கொண்டு ஒருவருடைய புஸ்தகமே பல வருடங்களிலும் பாடம் ஏற்படுத்தப் படுகின்றது. முதிர்ந்த வித்வான்களுடைய புத்தகம் எவ்வளவு உயர்ந்ததாயிருந்தாலும் இந்த ஸ்தானத்திற்கு எட்டுவதில்லை. மாமியார் குற்றத்தை மருமகள் சொல்ல முடியாதிருப்பதுபோல இதைப்பற்றிக் கற்றறிந்த வித்வான்கள் ஒன்றுஞ் சொல்லக்கூடாதவர்களா யிருக்கிறார்கள். வித்வான்களை எவரும் மதிப்பதில்லை. இன்னும் இவ்விஷயங்களைப் பற்றி எவ்வளவோ குறைகளிருக்கின்றன. அவற்றை விரிக்கிற் பெருகும். இந்த முறை கேட்டிற்கெல்லாம் கேள்விமுறையே இல்லையாகும். தமிழ்த் தெய்வமே இக்குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.



ஒவ்வொரு பத்திராதிபர்களும் உலக நன்மையைக் கருதி இதனைத் தங்கள் தங்கள் பத்திரிகைகளில் வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஓர் தமிழ்த் தொண்டன்.

---

## ஆரணி ஸ்ரீஜைன சகோதர சங்கத்தின் வருடாந்திரக் கொண்டாட்டம்.

ஜம்பூத் வீப பரத க்ஷேத்திர ஆர்ய கண்டத்து வர்த்த அவசர்ப்பிணி காலத்து பிரதம தீர்த்த நாதராகிய பகவான் ஸ்ரீ விருஷப தீர்த்தங்கரருக்கு ஸ்ரேயாம்ஸ மஹா ராஜன் தான மளித்து பஞ்சாச்சரியத்தை யடைந்த அக்ஷயதிரிதியை என்னும் மஹா புண்ய தினங்கூடிய ரௌத்திரி ஹு சித்திரை மீ 9உ (21—6—20) ல், ஷை ஜைன சகோதர சங்கத்தின் வருடாந்திரக் கொண்டாட்டம் நடைபெற்றது.

அன்றிரவு 8 மணிக்குச் சபை கூடியது. ஸ்ரீமான் பொன்னைய வாத்தியாரவர்களால் கடவுள் ஸ்தோத்திரப் பாடல் இன்னிசையுடன் பாடப்பட்டது.

பிறகு வரவேற்புக் கமிட்டி அக்கிராசனரான மனிகை ஸ்ரீமான் C. வசுபால நைனாரவர்களால், நல்வரவேற்பின் மொழி கூறப் பட்டது.

பிறகு யூனியன் சேர்மனும் பிரபல வியாபாரியுமாகிய ஸ்ரீமான் A. தனதேவ நைனாரவர்கள், பிரேரேபணையின் பேரில் தச்சாம்பாடி லேட் மணியம் ஸ்ரீமான் பொன்னுசாமி நைனாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

அக்கிராசனர் முன்னுரையாகத் தம்மை இம் மகா சபைக்கு அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுத்ததைப் பற்றித் தாம் இம் மஹா சபையாருக்குத் தம் மனப்பூர்வமான வந்தனத்தை அளிப்பதாகச் சொல்லி நீண்ட கரகோஷ ஆரவாரத்தினிடையே அமர்ந்தனர்.

அதன் பிறகு அம்மஹா சபைக்கு வர சந்தர்ப்பப் படாதவர்களுடைய அநுதாபக் கடிதங்கள் வாசிக்கப் பட்டன.

அவைகளாவன:

சென்னை பிரசிடென்சிகாலேஜின் தத்வப் போதகரா ஸ்ரீமான்ன சக்கிரவர்த்தி நைனாரவர்கள் M. A.

மைசூர் சமஸ்கிருத வித்வான் ஸ்ரீமான் சாந்திராஜ சாஸ்திரியாரவர்கள்.

நாகை ஸ்ரீமான் A ஜீவேந்திரஜைன் அவர்கள்.

வீடூர் போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீமான் A. சின்னராஜு நைனாரவர்கள்.

மேல் மின்னல் ஸ்ரீமான் M. சக்கிரவர்த்தி நைனாரவர்கள்.

1. அதன் பிறகு சென்னை ஸ்ரீமான் P. R. வஜ்ரபாகு நைனாரவர்கள் முயற்சியின் பலன் என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யாசித்தார்கள்.

2. தச்சூர் ஜோஸ்யர் ஸ்ரீமான் தனபால சாஸ்திரியாரவர்கள் பஞ்ச கல்யாண பூஜையின் கால அளவை நிர்ணயித்து உபன்யசித்தார்கள்.

3. சென்னை ஸ்ரீமான் C. S. மேக குமாரஜைன் அவர்கள் நமது கடமை என்பதைப் பற்றி விரிவாக உபன்யசித்தார்கள்.

4. திருவண்ணாமலை ஸ்ரீமான் S சக்கிரவர்த்தி நைனாரவர்கள் இல்லறம் என்பதைப் பற்றி விரிவாகச் செந்தமிழில் உபன்யசித்தார்கள்.

5. ஆரணி யூனியன் சேர்மனும் பிரபல வியாபாரியுமாகிய ஸ்ரீமான் A. தனதேவ நைனாரவர்கள் ஜைன சகோதர சங்கத்தின் சார்பாக ஓர் சமஸ்கிருத பாடசாலை நியமனம் செய்ய வேண்டுமென்னும் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதன் அவஸ்யத்தைப் பற்றி நன் கெடுத்துரைத்தார்கள்.

மணிகை ஸ்ரீமான் C. சக்கிரவர்த்தி நைனாரவர்கள் அதை ஆமோதித்து, தானத்தில் நான்கு வகை யுண்டென்றும், அவற்றுள் வித்யாதானமே சிறந்ததென்றும், பாடசாலையின் அவஸ்யத்தைப் பற்றியும் விரிவாகவும், தெளிவாகவும் பேசினார்கள்.

மணிகை ஸ்ரீமான் கோ. வி. இராமநாத நைனாரவர்கள் அதைஆதரித்ததும சபையோரால் அது அங்கீகரிக்கப்பட்டது.

அதன் பிறகு அக்கிராசனாவர்கள் முடிவுரையாக இச்சங்கம் நீடூழி வாழ இறைவனடியை இறைஞ்சுவதாகச் சொல்லி நீண்ட கரகோஷத்தினிடையே அமர்ந்ததும் அவர்களுக்கு வந்தனமளித்துக் கூட்டம் ஜய ஜய கோஷத்துடன் கலைந்தது.

சித்திரை மீ 10 உ (22—4—20)ல் நடந்தமேடி சபையின் நடவடிக்கைகள்

இத்தினம் சபை மீண்டும் கூடியது.

இன்று தச்சாம்பாடி ஸ்ரீமான் பொன்னுசாமி நைனாரவர்கள் ஏதோ அவசர நிமித்தமாகத் தங்கள் ஊருக்குப் போய் விட்டமையினால் அன்னவருக்குப் பதிலாக இன்றிரவு நாவல் சமஸ்கிருத வித்வானும், தேசாபிமானியும், மதாபிமானியுமாகிய ஸ்ரீமான். பத்திரபாகு நைனாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

1. அக்கிராசனாவர்கள் முன்னுரையாகத் தம்மை இச்சபைக்கு அக்கிராசனராகத் தேர்ந்தெடுத்த தற்காக இச்சங்கத்துக்குத் தாம், நன்றியாராட்டக் கடமைப் பட்டிருப்பதாகச் சொல்லி ஜிநமதம் என்பதைப் பற்றி மணிப்பிரவாள நடையில் வெகு அழகாக உபன்யசித்தார்கள்.

2. அதன் பிறகு ஜைன சகோதர சங்கத்தின் முதல் வருடாந்திர அறிக்கைப் பத்திரம் A. V. வர்த்தமானனால் வாசிக்கப் பட்டது. அது அடுத்த பத்திரிகையில் வெளிவரும்.

3. அதன் பிறகு சென்னைத் தருமசீலன் பத்திராதிபர் ஸ்ரீமான் திரு. ஆதி நைனாரவர்கள் தர்மம் என்பதைப் பற்றி உபன்யசித்தார்கள்.



4. பின்னர் மணிகை ஸ்ரீமான் C. சக்கிரவர்த்தி நைனாரவர்கள் ஜினர்களின் நித்தியகிரியை என்பதைப் பற்றி மணிப்பிரவாள நடையில் உபன்யசித்தார்கள்.

5. அதன் பிறகு சென்னை ஸ்ரீமான் P. R. வஜ்ரபாகு நைனாரவர்கள் [illegible]யின் பயன் என்பதைப் பற்றி உபன்யசித்தார்கள்.

6. அதன் மேல் சென்னை ஸ்ரீமான் C. S. மேக குமார ஜைன் அவர்கள் [illegible] முன்னேற்றம் என்பதைப் பற்றி உபன்யசித்தார்கள்.

7. பின்பு நாகை ஸ்ரீமான் A. ஜீவேந்திரஜைன் அவர்கள் எழுதி யனுப்பின நமது கடமை பணி செய்வதே என்னும் வியாசம் B. இந்திரகுமார நைனாரவர்களால் வாசிக்கப்பட்டது.

8. அதன் மேல் திருவண்ணாமலை ஸ்ரீமான் S. சக்கிரவர்த்தி நைனாரவர்கள் சங்கத்தின் மேல் இயற்றிய வாழ்த்துப் பாக்கள் வாசிக்கப்பட்டன. அவையாவன:—

“ சகோதரச் சங்கமென்று சாற்றிய நாமத்தோடு
மகோத்தம ஜைனர் கூடி மாண்புள குழுவைச் சேர்த்துக்
சுகோனந்தா ரெவருங் கண்டு களிக்கவாரணியில் வைத்த
மகோபகா ரஞ்சேர் ஜைன மாந்தர் நீடூழி வாழி ”

நேரிசை யாசிரியப்பா.

“ அவர் தலை புவதிற் கணியென விளங்கும்
ஆரணி தன்னி லான்றோர் ஜைனர்
தங்களின் மதமும் தர்மமா சாரமும்
சங்கையில் கல்வியும் சால்புடன் வளர்க்கச்
சங்கமொன்று ஸ்தாபித்தனரே
விற்பனச் சங்கம் விமலன் முன்னாள்
கற்பித்தாங்கே பல் வேறிடங்கள்
பாங்குடன் சென்று பகர்ந்தது தர்மம்
பான்மைக் குழவீ பகருமாண்டிரண்டில்
இறைவன தருளோ டென்றும்
நின்று நிலவுக நீடூழி வாழ்க ”

பின்னர் அக்கிராசனாவர்கள் முடிவுரையாக இச்சகோதர சங்கத்தின் வருடாந்திரக் கொண்டாட்டம் செவ்வனே முடிவு பெற்றதற்காகத் தாம் ஸ்ரீ அருக பரமேஷ்டியைத் துதிப்பதாகச் சொல்லி சமஸ்கிருத பாடசாலையை உடனே ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அதுவும் மறுதினம் (23–4–20)ல் வெள்ளியன்று நல்ல நாளாக இருப்பதால் அன்றே ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்காக கனவான்கள் யாவரும் தாராளமாய்ப் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் சொல்லி நீண்ட கரகோஷத்தினிடையே அமர்ந்தார்கள்.

அவ்வமயமே மேடி பாடசாலைக்காக மூலதனத்திற்கு ரூபா [illegible] கொண்டு வரப்பட்டது.

அதில் கையொப்ப மிட்ட தனவான்களின் பெயரை இதனடியிற் காண லாம்;—

பின்பு, அக்கிராசனரவர்களுக்கு வந்தன மளிக்கப்பட்ட வுடன் கூட்டம் ஜய ஜய கோஷத்துடன் கலைந்தது.

ஜைன தர்ம பாடசாலையின் மூலதனத்திற் குப் பொருளுதவி செய்த கன வான்கள்:—

| | |
|---|---|
| மகா-ள-ள-ஸ்ரீ A. தனதேவ நைனாரவர்கள் & சன்ஸ் மாதம் 1-க்கு ரூபா. 2—0—0 | ரூபா. 300—0—0 |
| „ C. சக்கிரவர்த்தி நைனார் | ரூபா. 500—0—0 |
| „ C. செண்டலங்கார நைனார் & சன்ஸ் | 500—0—0 |
| „ கோ. வி. இராமனாத நைனார் & சன்ஸ் | 400—0—0 |
| „ தேசூர் A பத்திரபாகு நைனார் | 200—0—0 |
| „ சேரிவிஸ்வநாத நைனாரவர்கள் | 10—0—0 |
| „ „ சிகாமணி நைனார் „ „ | 5—0—0 |
| „ „ முனி பத்திர நைனார் „ „ | 5—0—0 |
| „ „ A. அப்பாசாமி நைனார் | 1—0—0 |
| „ „ அய்யாதுரைநைனார் | 5—0—0 |
| „ மேலப்பழந்தை மு. அய்யண்ணநைனார் | 5—0—0 |
| சொறையூர் பாபு நைனார் & அய்யண்ண நைனார் | 20—0—0 |
| „ சென்னை தருமசீலன் பத்திராதிபர் திரு. ஆதி நைனாரவர்கள் | 25—0—0 |
| „ ஷாப். N. M. பார்சுவநாத நைனாரவர்கள் | 25—0—0 |
| „ சென்னை P. R. வஜ்ஜிரபாகு நைனாரவர்கள் | 10—0—0 |
| „ சென்னை ஜைன கெஜட் பத்திராதிபர் C. S. மல்லிநாத் ஜைன் அவர்கள் | 5—0—0 |
| „ காவல் பத்திரபாகு நைனாரவர்கள் | 10—0—0 |
| „ பேரி அனந்த நைனார் | 25—0—0 |

ஜைன தர்மபாடசாலையின் நிர்வாக கமிட்டி

மகா-ள-ள-ஸ்ரீ A. தனதேவ நைனாரவர்கள்-அக்கிராசனாதிபதி
„ C. சக்கிரவர்த்தி நைனாரவர்கள்-பொக்கிஷதார்
„ C. வசுபால நைனாரவர்கள்-காரியதரிசி
„ K. இராமனாத நைனாரவர்கள் } நிர்வாக மெம்பர்கள்
„ A. பத்திரபாகு நைனாரவர்கள் }

இந்த ஜைன தர்ம பாடசாலையானது, 23-4-20 ல் வெள்ளிக்கிழமை தினமே ஸ்தாபிக்கப்பட்டது.

அன்று காலை ஜிநேஸ்வரருக்கு பஞ்சாம்ருதாபிஷேகமும் சுருத குரு பூஜையும் நடந்தவுடன் ஸ்ரீ நாககுமார காவியம் ஆரம்பிக்கப்பட்டது.

விளம்பரம்:

ஆரணி ஜைன் சகோதர சங்கத்துக்கு மெம்பர்களாகச் சேர விரும்பு வோர் பிரவேசக் கட்டணம் ரூ. 0-4-0-ம், வருடாந்திரக் கட்டணம் ரூபா 1—0—0-ம் கொடுத்து மெம்பர்களாகச் சேரலாம்.

ஜயகீர்த்தி நைனார்,
காரியதரிசி.

ஓம்
ஸ்ரீஜிநாயநம:.

# தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)

OFFICE ... 2- NOV 1920 ... MADRAS.

| புத்தகம் 3 | இரௌத்திரி ௵ வைகாசி ௴ 1920 ௵ மே ௴ | சஞ்சிகை 2 |
|---|---|---|

## தருமோபதேசம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கணவனில்லாச் சமயத்தில் கூந்தல் சீவிக்
கந்தமுள்ள மலர்சூடி முகமினுக்கி
வனமிகவே கண்ணுக்கு மையிட் டாடை
வகைவகையா வுடுத்திநகை மகிழ்ந் தணிந்து
குணமின்றி யுடல் குலுக்கித் திரியும் பெண்தான்
குடித்தனத்துக் காகாமூ தேவி யாவாள்
பணமீதிற் பேராசை கொள்ளும் பெண்டிர்
பதிவிரதை யாகாளே பாரின் மீதே. (௧௭)

மதியின்றித் தனவந்தர் பிள்ளை யென்று
மடையருடன் கூடியா விழுக்கும் வண்டி
அதிகெம்பீ ரத்துடனே யேறி யெங்கும்
அழகுடனே திரிகின்ற பேயருக்குத்
துதிபேசிக் கடன்சீட்டொன் றுக்குப் பத்தாத்
துரிதமுட னெழுதுவித்துப் பணங் கொடுத்துச்
சதியாக அவர்குடியைக் கெடுத்தே போடும்
சண்டாளர் நரகைவிட்டுத் தாண்டி டாரே. (௧௮)

தன்பிள்ளை செய்தகுற்றந் தன்னைக் கண்டும்
சட்டெனவே யவனைக்கண் டித்தி டாமல்
என்பிள்ளை யெத்துடுக்குஞ் செய்ய மாட்டான்
எனவன்மேல் நீங்கள்குறை யியம்பு கின்றீர்
என்று குறைசொன்னவர்மேற் குறைகள் கூறி
யெப்பொழுதும் சண்டையிடும் தந்தை தாயர்
பன்றியினு மூர்ப்பன்றிப் பிறப்பா மென்று
பகரலா மவர்முகத்தில் விழிக்கொண் ணாதே. (௧௯)

# தருமசீலன்.

இரௌத்திரி௵ வைகாசி௴

## மனிதர்க் குறுதி மொழிகள்.

ஆகமங் கூறிய வழிகளினாலே நன்மை தீமைகளை ஆராய்ந்து, நுட்ப மாகிய நற்பொருளினிடத்தே மனத்தைச் செலுத்தி, துன்மார்க்கங்கள் பல வற்றையும் ஒழித்து சூரியனை நிகர்த்து உலகத்து அஞ்ஞான விருளை நீக்குகின்ற அருகத் பரமேஷ்டியின் மார்க்கத்தைச் சார்ந்து நின்ற, நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்னும் இரத்தினத் திரயங்களாகிற குணங்களைப் பொருந்தினால், அச்செய்கையானது, நரக கதி, விலங்கு கதி, மக்கட் கதி, தேவ கதி என்னும் சதுர்வித கதிகளிற் சார்ந்து நின்ற பவ்விய ஜீவன்களுக்கு ஆக்கத்தைத் தருவதாம்.

"அறிவினாற் பெரிய நீரா ருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி யின்ப நிறைகட லகத்து நின்றார்
பொறியெனும் பெயர வைவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலு ணின்றார்"

என்றபடி, அறிவினாலே சிறந்த, பெருந் தன்மை யுடையோர், நீக்குதற் கரிய வினை நீங்குவதற் கேதுவாகி நின்ற சன்மார்க்கத்தைச் சார்ந்து, அநந்த சுகமாகிய இன்பவாரிதியிலே மூழ்கி, இன்பத்தை அனுபவித்து அவ்வானந்தத்திலே நின்றார்கள்; மிகுந்த உலக ஆசையாகிய நஞ்சை யுடைய உடம்பென்னும் பாம்பினிடத்தே யுள்ள, ஐம்பொறிகள் என்னும் பெயரை யுடையன வாகிய ஐந்து வாய்களுக்குக் களிப்பைச் செய்கின்ற விஷயாதிகளில் ஐந்தறிவையுஞ் செலுத்தி அவற்றில் அழுந்தி நின்றவர்கள் துன்ப சாகரத்தில் அழுந்தி மிக்க வருத்தத்தை அடைந்து நின்றார்கள்.

"கூற்றுவன் கொடியனாகிக் கொலைத் தொழிற் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீக்கி நுகர்ச்சியி னுலக நோக்கி
ஆற்றுறப் போதல் தேற்றோம் மளியமோ பெரிய மோகாண்."



என்றவாறு, எமனானவன், மிகுந்த கொடுமையை யுடையவனாய்க் கொலைத் தொழிலைச் செய்கின்ற வாத பித்த சிலேட்டு மங்க ளென்னும் வார்களை ஆராய்ந்தெடுத்து அவற்றினாலே, சிக்கினோர் தப்பிக் கொள்வதற்கரிதாகிய ஆயுக்கன்மம் (அதாவது: வாத பித்தசிலேட்டு மங்களால் ஆயுள் இவ்வள வென்றேற் படுத்தி வைப்பதாகிய வினை) என்னும் வலையை உண்டாக்கி வீசி வைத்தான். அவ்வாறு வலை வீசினவத்தை அறிவினாலே அறியத்தக்க நாமும் அறிந்து தவத்தைச் செய்து, அவன் அங்ஙனம் ஏற்படுத்தி வைத்த அவ்வலையினின்றும் நீங்கி, இதற்கு முன்னே அனுபவிக்காத அனுபவத்தை யுடையதாகிய முத்தி யுலகத்தை நோக்கி, நேரான வழி பொருந்தப் போவதை அறிய மாட்டோம்; இத்தகைய எளிய தன்மையை யுடைய நாம் ஓ! ஓ!! மிகவும் பெரியவர்கள்; நம்மைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் ஒருவருமே யில்லை.

"பேரஞ ரிடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர் தரிதிற் பெற்று மதன்பயன் கோடல் தேற்றோம்
ஒருமைம் பொறியு மோம்பி யுளபகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த வெல்லாம்."

என்றபடி, பெரிய மன வருத்தத்தைச் செய்கின்ற உலக துன்பங்களை யெல்லாம் தவஞ் செய்து நீக்குதற்குக் காரணமானதும், பிறப்பை நீக்கிக் கொள்ளத் தக்கதும், அமிர்தம் போன்ற சிறப்புள்ளதுமான இம்மானிட தேகத்தை நாம் அரியதவப் பயனாலே அடைந்தோம்; அப்படி யடைந்தும் இதனால் பெறத் தக்க பயனைக் கொள்ளும் விதத்தை அறியாமலிருக்கிறோம்; நாம் இப்படியே இருந்து ஐம்பொறிகளாலும் அனுபவிக்கும் அனுபவங்களை யெல்லாம் அவற்றிற்குரிய ஐம்புலன்களாலும் அனுபவித்துப் பேணி, நமக்கேற்பட்ட வாழ் நாள் கழிந்து போனால், அவ்வாறு நீங்கிய பிறகு நமது தேகத்தை அக்கினியானது பற்றி யெரித்துக் கவர்ந்து கொண்டு போகும்; அப்போது நாம் தரும காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அப்படி நினைத்தவை யெல்லாம் கை கூடுமோ? நீங்கள் எல்லோரும் இதனை ஆராய்ந்து பார்ப்பீராக.

"தழங்குரன் முரசிற் சாற்றித் தத்துவந் தழுவல் வேண்டிச்
செழுங்களி யாளர் முன்ன ரிருளறச் செப்பி னாலும்
முழங்கழல் நரகின் மூழ்கு முயற்சிய ராகி நின்ற
கொழுங்களி யுணர்வி னாரைக் குணவதங் கொளுத்த லாமோ?

என்றவாறு, உலகத்தில் எல்லோரும் உண்மைப் பொருளைத் தழுவி ஒழுங்கில் நடப்பதற்காக, அநந்தானுபந்திக்குரோதம், அநந்தானுபந்திமானம், அநந்தானுபந்தி மாயை, அநந்தானுபந்திலோபம், மித்தியாத்துவம், சம்மியக் மித்தியாத்துவம், சம்மியக்துவப் பிரகிருதி ஆகிய தரிசன மோகனீயப் பிரகிருதி ஏழும் பொருந்தியவர்களும், மிக்க மயக்கத்தை யுடையவர்களுமாகிய இவ் வுலகத்தவர்க்கு முன்னே, அறிவுடையவர்கள், முழங்குகின்ற சப்தத்தை யுடைய முரசறைந்து, இருள் நீங்கும்படி நல்ல உபதேசங்களைக் கூறினாலும் அவர்கள் அவற்றை மனத்திற் கொள்ளாமல் தீய காரியங்களையே செய்து, முழங்குகின்ற அழல்வடிவமான நரகத்திலே வீழ்ந்து மூழ்குவார்கள்; அவ்வாறு மூழ்கும் பாவத்தை முன்னே செய்தவர்களாகி, அவ்வழியில் நின்றவர்களும், அளவற்ற மயக்கம் பொருந்திய அறிவை யுடையவர்களுமாகிய அவர்களைக் குணவிரதத்திற் சாரும்படி செய்ய முடியுமோ? ஒரு நாளும் முடியாது. ஆதலின், அவர்களின் கூட்டுறவை விட்டு நல்லோருறவை நாடவேண்டும். மேற்கூறியவர்களுக்கு நல்ல உபதேசங்களைச் செய்யப் புகுந்தால், அவ்வாறு உபதேசிக்கத் துணிந்தவனுடைய அறிவுங் கெடும். மானிடப் பயிரை விளைவிக்கும் உழவுத் தொழிலை உடையவர்களே! இன்னமொன்று கேட்பீராக: கருவிடமாகிய நிலத்திலே, கருவாகிய விதையை விதைத்தலினாலே குழந்தை யாகிய நாற்று முளைத்தெழுந்து, காளைப் பருவமாகிய செழித்த கதிரை யீன்று, பின்பு மூப்பாகிய விளைவை யுண்டாக்கும்; இத்தகைய மானிடப் பயிரைத் தீவினைகளாகிற பல மிருகங்கள் மேய்ந்து விடும். ஆதலின், அவை அங்ஙனம் மேயாதபடி சீலமாகிய வேலியை ஏற்படுத்தி அதனைக் காப்பீராக; அவ்வாறு காத்து வரின் மானிடப் பயிரின் விளைவானது பேரின்பத்தை அடைதலாகிய நற்பயனைத் தரும்.

இவ்வுறுதிமொழிகள், அச்சணந்தியாசிரியரால் ஜீவகனுக்கு உபதேசிக்கப் பட்டவை. இவற்றினிடையில் வரும் செய்யுட்களும், செய்யுட் பொருள் வாக்கியங்களும் சீவக சிந்தாமணியிலிருந்து எடுத்தெழுதப் பட்டவை. இவ்வுபதேச மொழிகளைக் கொண்டே ஜீவகன், இம்மை, மறுமையென்னும் இரண்டிடத்தும் மேம்பாடுற்றதாக சீவக சிந்தாமணி முதலிய நூல்களால் நாம் உணர்கிறோம். ஆதலின்



பவ்விய ஜீவன்கள் ஒவ்வொருவரும் இவ்வுறுதி மொழிகளைக் கடைப்பிடித் தொழுகின் எவ்விடத்தும் நன்மை பெறுவார்க ளென்பது நிச்சயம்.

பத்திராதிபர்.

---

## பணி செய்யும் முறைமை.

முன் சஞ்சிகையில், நாம் வேலைக்காரரிடம் வேலை வாங்கும் முறைமையைப்பற்றி எழுதியிருந்தோம். அதனால், எஜமானர்கள் வேலைக்காரர்களிடம் நடந்து கொள்ளும் கிரமங்களை நன் குணரலாம். அதே போல் வேலைக்காரர்களும் எஜமானர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய கிரமங்களை உணராமலிருந்து வருவதால் பல தீங்குகள் நடக்கின்றன வாதலின் அதைப் பற்றியும் இச் சஞ்சிகையில் சிறிதுவரைவாம். இதனை, வேலைக்காரர்கள் ஒவ்வொருவரும் கவனித்து நடந்து வந்தால் வேலைக்காரர்கள், எஜமானர்கள் ஆகிய இருவகுப்பாருக்கும் மிக்க நன்மை யுண்டாகும்:

எஜமானன், வேலைக்காரர்களுடைய கஷ்ட நஷ்டங்களைக் கவனித்து, அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை ஏற்படுத்தி அவர்களுடைய ஜீவனைகளைச் செவ்வனே நடத்துவிக்கக் கூடியவனாயிருப்பதால் அப் பணியாளர்க்குத் தந்தை போன்றிருக்கின்றான்; ஓர் இரக்ஷகர்த்தாவுமாகின்றான். ஆதலின், தந்தையினிடத்துப் பிள்ளைகள் எங்ஙனம் மரியாதையாகவும், விசுவாசமாகவும் நடந்து கொள்வார்களோ அவ்விதமாகவும், தெய்வத்தினிடத்தில் பக்தன் எவ்வாறு வணக்கமாகவும், பக்தியுடனும் நடந்து கொள்வானோ அவ்விதமாகவும் வேலைக்காரர்கள் எஜமானனிடத்தில் நடந்து கொள்ள வேண்டும்; எஜமானன் பல வித்ததிலும் இலாபத்தைப் பெற்று விருத்தியடைய வேண்டுமென்ற தியானத்துடனே வஞ்சனை யின்றி அவனுடைய வேலைகளைத் தங்களுடைய வேலைகளாகவே பாவித்துச் சுறுசுறுப்புடன் செய்ய வேண்டும். சம்பளம் வாங்குவதற்குத் தக்கபடி வேலையில் சிறிதும் கள்ளங்கபடின்றி உழைக்க வேண்டும். 'நமக்கென்ன சம்பளந்தானே குறி' என்று வேலையிலிறங்கி வேலை செய்வது போல் கால் கைகளை அசைத்து நடித்துக்கொண்டு வீணே நேரத்தைப் போக்கலாகாது; எஜமானனுடைய சாமான்களைக் கொள்ளையடித்து அவனை நஷ்டத்திற் குள்ளாக்கி விடக்கூடாது; எஜமானன் கஷ்டப்படும் போதும் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பணந்தேடிச் சம்பளங் கொடுக்க வாங்கிக்கொண்டு வேலைகளைச் சரியாகச் செய்யாமல் கெடுத்துத் தாங்கள் அக்கிரமஞ் செய்வதோடு பக்கத்திலிருக்கும் விசுவாசமான வேலைக்காரர்களையும் தங்க[illegible] போல் நடக்கும்படி தூண்டிப் பல விதத்திலும் எஜமானன் மனத்தைப் [illegible]ப்படுத்தலாகாது; எஜமானன் வரும்போது மாத்திரம் வேலை செய்வது போ[illegible] நடித்து விட்டு அவன் மறைந்தவுடன், சும்மாவிருந்து கொண்டு பக்கத்திலிரு[illegible]

வர்களையும் நோக்கி, "இப்பொழுது என்ன அவசரம், பேசாமலிருங்கள்" என்று சொல்லிக் கெடுக்கலாகாது. எஜமானனுக்கு அதிக வரும்படி வருவதைப் பார்த்து வயிறெரியலாகாது; 'அவன் க்ஷேமமாயிருக்க வேண்டும், அதனால் நாமும் சௌக்கியமாக ஜீவிக்க வேண்டும்' என்று சிந்தனை செய்ய வேண்டும்.

ஒரு தீங்கனி தரும் மரத்தை, பல பேர் கூடி அதற்கு வேறு ஜீவஜெந்துக்களால் கெடுதி வாராதபடி வேலியிட்டுத் தண்ணீர் வார்த்து மிக்க பிரியத்துடன் பாதுகாத்து வந்தால் எல்லோரும் அதிலுண்டாகும் பழங்களைத் தின்று இன்புறலாம்; ஆளுக்கொரு கிளையாக வெட்டி அம் மரத்தை நாளடைவில் குறைத்து விட்டால் அதனால் எப்பயனையும் அடைய முடியாது. இதே போல வேலைக்காரர்கள் எஜமானனைப் பல விதத்திலும் மேன்மைபடுத்தி வந்தாற்றான் அவனால் சௌக்கியமாக ஜீவிக்க முடியும்; அவனைக் கெடுத்து விட்டால் தங்கள் ஜீவனத்துக்கே மிகுந்த கஷ்டமுண்டாகும். ஒரு வீட்டிலுள்ளவர்கள் அடிக்கடி அவ் வீட்டில் கூரை பிரிந்து போகாமலும், சுவர் இடிந்து விடாமலும், பெருச்சாளி முதலியவைகள் அடியில் தோண்டிக் கேடு செய்யாமலும் பார்த்து ஒவ்வொரு சமயத்திலும் பழுது போக்கி அதனை நல்ல நிலைமையில் வைத்திருந்தால் மாத்திரந் தான் மழையினாலும் வெயிலினாலும் உபத்திரவமடையாமல் அதில் சௌக்கியமாக எப்பொழுதும் குடியிருந்து வரலாம். இந்தக் கெடுதிகளையும் கவனியாமல் அடுப்பெரிக்க வேண்டிய சமயத்தில் தாங்களும் கூரையைப் பிடுங்கி எரித்து வந்தால், கூடிய சீக்கிரம் எல்லோருமே அவ் வீட்டை விட்டு வெளியேறி, இருக்க, வேறிடமின்றித் திரிந்தலைய வேண்டும். இது போல எஜமானனுக்கு நஷ்டம் வரும்போது வேலைக்காரர்கள் உதவி செய்யாமல் தாங்களும் பல விதத்திலும் அவனை நஷ்டப்படுத்தி வந்தால் அதி சீக்கிரத்தில் வேலை யின்றி ஜீவனத்திற்குக் கஷ்டப்படும் நிலைமை அவர்களுக்கு வந்து விடும். ஓர் ஊரிலுள்ளவர்கள் அவ்வூர்க் குளத்தை நன்றாக வெட்டி அதன் கரைகளைப் பலப்படுத்தி, அதற்குத் தண்ணீர் வரும் கால் வாய்களையும் ஏற்படுத்தி வைத்தால் மாத்திரந் தான் அதில் எப்பொழுதும் நீர் நிறைந்திருக்கும்; அவ்வூராரும் அந்நீரை உபயோகித்து கஷ்டமின்றி ஜீவிப்பார்கள்; அக் குளத்தின் கரைகளை நாலா பக்கங்களிலும் வெட்டி விட்டு அதனை மேடிட்டுப் போகும்படி செய்தால் அவ்வூரார் எப்பொழுதுமே ஜலமகப்படாமல் கஷ்டப்பட்டு வருந்துவார்கள். இது போல எஜமானனை வேலைக்காரர்கள் பல விதத்திலும் நஷ்டப்படும்படி செய்து விட்டால் அவர்கள் எந்நாளும் ஜீவனத்துக்குக் கஷ்டப்படுவார்கள். தெய்வமும் அவர்களுக்குத் துணை செய்யாது. வேலைக்காரர்கள் எஜமானத் துரோகமின்றி வேலை செய்வார்களேயானால் அவர்களுக்கு இம்மை, மறுமை என்னும் இரண்டிடத்தும் நன்மையே கிடைக்கும். பண்டைக் காலத்தில் இலக்குமணன் இராமருடைய வனவாசம் தீருமளவும்(?) ஆகாரமும் நித்திரையுமின்றியிருந்து தம்முடைய தொண்டை நிறைவேற்றினார்; அனுமார் தம்முடைய சௌகரியங்கள் ஒன்றையுமே கவனியாமல் இராமருக்குப் பணியியற்றினார்; சத்திய கீர்த்தி, அரிச்சந்திரன் கேடுற்ற காலத்



தி லெல்லாம் தானும் கூடவே யிருந்து அக்கஷ்டங்களை அனுபவித்தான்; அதனால் இவர்களுடைய புகழ் உலகத்தில் என்றும் நிலை பெற்று விளங்குகின்றது. இவர்களின் செய்கைகளை வேலைக்காரர் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும்.

இக் காலத்திலோ சில வேலைக்காரர்கள் ஒழுங்கென்பதையே கவனிப்பதில்லை. கோணலான அவர்களின் மனப்போக்கின் படியே நடக்கத் தலைப்படுகிறார்கள். எஜமானர்கள், இவர்களுக்கு எவ்வளவு அதிகச் சம்பளம் கொடுத்தாலும், இவர்களின் கஷ்ட நஷ்டங்களைக் கவனித்து எவ்வளவு உதவிகளை இவர்களுக்குச் செய்தாலும், முன் பணம் கொடுத்தாலும், ஆபத்தில் பணம் கொடுத்துதவினாலும், வீடு கட்டி வைத்தாலும், தாங்கள் உண்ணும் உணவைப் பங்கிட்டுக் கொடுத்து இவர்களை அன்புடன் குழந்தையைப் போல் வளர்த்தாலும் இவர் மனதில் எஜமானன் மீது சிறிதும் விசுவாசம் ஏற்படுவதே யில்லை. 'களப்பால் வார்த்து வளர்த்தாலும் பாம்பு தன் விஷத்தை விடாது' என்பது போல இவர்க்கு எவ்வளவு உதவி செய்யினும் இவர்கள் தங்கள் துர்க்குணத்தை விடுவதே யில்லை. 'களக்கம்பு போட்டு வளர்த்தாலும் காடை காட்டில் தான் ஓடும்' என்பது போல இவர்க்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும் இவர்கள் மனத்தில் நன்றியறிதல் என்பது சிறிதும் ஏற்படாமல் அது வேறொரு வழியிற்றான் செல்லும். இவர்கள், தங்களுக்குப் போதுமான சம்பளம் கொடுக்கும் எஜ்மானனிடத்திலும் விரோதம் பாராட்டி 'எங்களுக்கு ஜீவனத்துக்குப் போதுமான சம்பளம் கிடைப்பதில்லை' என்று குறை கூறி அவருடைய வேலையைச் சரிவர நிறைவேற்றாமல் அவரைப் பல விதத்திலும் நஷ்டப்படுத்தி விடுகிறார்கள்; அவர் நஷ்டமடைந்த காலத்திலும் 'எஜமானன் அதிக லாபத்தை அடைகிறான்! இந்த லாபம் எங்களால் தானே வருகிறது; இதை நான்கு பங்கு வைத்து எங்களுக்கு மூன்று பங்கைக் கொடுத்து விட்டு அவன் ஒரு பங்கை எடுத்துக் கொண்டால் என்ன ?' என்று அவனைத் தூற்றி வேலை நிறுத்தம் செய்து அவர் குடி அடியோடு முழுகிப் போகும்படி செய்கிறார்கள். முன் பணம் வாங்கிக்கொண்டு எஜமானரை ஏமாற்றி விட்டு வேறு பற்பல விடங்களுக்கும் ஓடி விடுகிறார்கள்; அடிக்கடி இடம் மாறிச் செல்கிறார்கள். 'எஜமானன் நாசமாய்ப் போனாலும் பாதகமில்லை' என்று அவரை நிந்திக்கிறார்கள்; தூஷணையான வார்த்தைகளையும் பேசுகிறார்கள். எஜமானர்களில் சில கடின சித்தமுடையவர்களு மிருக்கின்றார்கள். அவர்களிடம் இவ்வாறு செய்தல் ஒருவாறு நியாயமே எனினும் எல்லா விடங்களிலும் செய்தல் தகுதியாகாது. இப்படிச் செய்வதால் எஜமானர்களும் கெட்டுப் போவார்கள், வேலைக்காரர்களும் ஜீவனத்துக்குக் கஷ்டப்படுவார்கள். எஜமானர்கள் எவ்வளவோ பணத்தைப் போட்டு எத்தனையோ வகையில் செலவிடுகிறார்கள். ஆதலின் அவர்களுடைய லாப நஷ்டத்தைக் கவனிக்க வேண்டும். ஆனால் எல்லா வேலைக்காரர்களுமே நன்றி மறந்தவர்களென்று நாம் கூறவில்லை; நன்றி மறவாமல் எஜமானர் மீது விசுவாசமாய் ஆயுள் வரை ஒரே இடத்தில் வேலை செய்யும் உத்தமர்களும் அநேகர் இருக்கின்றார்கள். இவர்கள் எப்பொ

ழுதும் சௌக்கியத்தையே அடைவார்கள். இங்கு நாம் கூறிய தெல்லாம், சிலர் பேதைமையால் நன்மை தீமைகளை உணராமல் கொடுமை செய்து எஜமானர்களைக் கெடுத்து விடுவதைப் பற்றியே. முன் பின் யோசியாமல் எஜமானர்கள் பல காலும் செய்து வந்த நன்றியை மறந்து அவர்களுக்குப் பல விதத்திலும் கெடுதி செய்வது நன்மையாகாது. முதலில் எஜமானரைப் பற்றி இவர்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்று ஆராய வேண்டும். அவர்கள் கெட்டவர்களாயிருந்தால் மாத்திரம் தங்கள் இஷ்டம் போல் விகற்பம் செய்ய வேண்டும், நல்லவர்களாயிருந்தால் நன்மையே செய்ய வேண்டும்.

ஆதலின், தொழிற்காரர்கள் ஒவ்வொன்றையும் நன்காராய்ந்து நல்ல எஜமானர்களிடத்தில் 'ஒருவனைப் பற்றி ஓரகத்திரு' என்றபடி நிலைத்திருந்து நற்பயனை அடைவார்களாக. கடவுள் அருள் புரிவார்.

சன்மார்க்கன்.

---

## ஜைனரின் தற்கால நிலைமை.

ஜினமத நேசர்களே!

முற்காலத்தில், நம் மதத்தார் உலகமுழுதும் ஆண்டனரென்றும், உலகத்தில் பெரும்பாலும் ஜைனர்களே வியாபித்திருந்தனரென்றும், நமது புராணங்கள் கூறுகின்றன. இதுவுமன்றிக் கல்வியினாலும் செல்வத்தாலும் மேன்பாடுற்றிருந்தனரென்பதுந் தெரிய வருகிறது; உலகத்தில், பற்பல இடங்களிலும், ஜைன விக்ரகங்கள், இப்பொழுதும் காணப்படுகின்றமையால், இம்மதத்தோர் எங்கும் பரவியிருந்தார் என்பது ஊகிக்க வேண்டியதாயிருக்கிறது. புத்த மதத்தை ஸ்தாபித்த கௌதம புத்தர் பிறப்பதற்கு முன்னமே, இந்த ஜினமதம் ஓங்கி வளர்ந்திருந்தது என்பதற்கு, வேண்டிய அத்தாட்சிகள் இருக்கின்றன. இனி தருமசீலன் பத்திரிகையில், வெளிவரும் தனி வியாசங்களின் மூலம் நேயர்கள் விரிவாகக் காணலாம். முன்னர் இவ்வளவு உன்னத நிலைமை அடைந்திருந்த நம்மதத்தின் தற்கால நிலையை விசாரிப்போமாயின்; நம்முளம் உருகுமென்றே சொல்லலாம்.

ஒரு மதத்தினரது மேன்பாடு, அவரது ஜனத்தொகை, கல்வி, செல்வம், ஒழுக்கம் என்ற இந்நான்கினையும் பொறுத்திருக்கின்றது. இவைகளை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொண்டு நமது தற்கால நிலைமையைச் சிறிது ஆராய்வாம்:—



### 1. ஜனத்தொகை.

2000 லக்ஷங்களடங்கிய உலக ஜனத்தொகையில், ஜைனர்கள், ஒரு லக்ஷமும், புத்தர்கள் 500 லக்ஷங்களும், ஹிந்துக்கள் 300 லக்ஷங்களுமாக இருக்கின்றனர்.

சற்று விளக்கமாகச் சொல்லில் 2000 பேர்களடங்கிய ஜனத்தொகையில் 500 புத்தர்களும், 300 ஹிந்துக்களும், ஜைனன் ஒருவனுமே! இருக்கின்றனர்.

### 2. செல்வம்.

வட இந்தியாவில் இருக்கும் சில லக்ஷாதிபதிகளைக் கண்டு, ஜைனர்கள் தனிகர்களென்று நினைப்பது தவறு. இந்தியாவின் இராஜப் பிரதிநிதியாயிருந்த கர்ஸன் பிரபுவானவர், "ஜைனர்கள் மிக்க தனிகர்கள்" என்று கூறியது வட இந்தியாவிலுள்ள சில பெரிய வியாபாரிகளையே குறிக்கும்.

2000 பேர்கள் கொண்ட ஓர் வகுப்பினருள், 10 பேர் மிக்க தனிகர்களாயும், ஏனையோர், ஜீவனத்திற்கே வழியில்லாத ஏழைகளாகவுமிருந்தால் அவ்வகுப்பினரை மிக்க செல்வர்களென நாம் கூற முடியுமோ? இதுவுமன்றி, இவர்களை விட மிக்க தனிகர்கள் மற்ற ஜாதிகளிலும் இருக்கின்றனர். ஆனதால், சுருக்கிச் சொல்லில், நம்மவருள் ஏழைகள் பலரும், செல்வர்கள் சிலருமாக இருக்கின்றனர்.

### 3. கல்வி.

நமது ஜனத்தொகை குறைவுற்றதற்கும், செல்வம் குன்றியதற்கும் முக்கிய காரணம் நமது கல்வியின் குறைவேயாகும்: எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை மாத்திரம் கற்றவர்களென்று நாம் எவ்வாறு கூறுவது? மத நூல்களையும் மற்ற நூல்களையும் செவ்வனே கற்று, அவைகளின் உட்கருத்தை அறிய வல்லவரையே கற்றவர்களெனக் கூறல் வேண்டும். இத்தகைய கல்வியறிவை யுடையவர் நம்மவருள் சிலரே. இராஜாங்க முறைகளைத் தெரிவதற்கும், மற்ற சௌகரியங்களுக்கும் ஆங்கில பாஷை முக்கியமாக வேண்டியிருக்கிறது. அவ்வாறு ஆங்கிலம் தெரிந்தவர்களும் மிகவும் சொற்பமாயிருக்கின்றனர்.

நம்மைவிட ஜனத்தொகையில், குறைவுற்றிருக்கும் பார்ஸி ஜாதியார் கல்வியின் தேர்ச்சியால், உயர்தர உத்தியோகங்களை வகித்தும், மிக்க செல்வவான்களாகவு மிருக்கின்றனர். இவர் தம் சுயபாஷையையும், ஆங்கிலத்தையும் சமத்துவமாகக் கற்றதினால் இத்தகைய உயர்வை அடைந்தனர். கீழ்க்கண்ட குறிப்பைக் கொண்டு, கல்வியில், நமக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசத்தை நன்கு அறியலாம்.

இங்கிலீஷ் தெரிந்தவரின் தொகை.

10,000 பேர்களுக்கு.

| | 1901 வருஷத்தில் | 1911 வருஷத்தில் |
|---|---|---|
| ஜைனர்கள் | 134 | 202 |
| ஜைனஸ்திரீகள் | 1 | 3 |
| பார்ஸியர் | 40 75 | 4,956 |
| பார்ஸி ஸ்திரீகள் | 961 | 1704 |

இதிலிருந்து, ஆங்கிலம் கற்ற நம்மாடவர்களின் தொகை, ஆங்கிலம் கற்ற பார்ஸி ஸ்திரீகளின் தொகையில் எட்டில் ஒரு பங்கு கூட இல்லை யென்றால், ஆங்கிலம் கற்பதில் நம்மாடவருக்குள்ள ஊக்கம் எத்தன்மைத்து என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ள வேண்டியது. இவ்வாறு ஆங்கிலம் கற்றவரி லும், உயர்தர ஆங்கிலக் கல்வியைக் கற்றவர் மிகவும்சிலரே. நமமதத்தில் 100க்கு 27 பேர்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்; மற்ற 73 பேர்களும், எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே யிருக்கின்றனர். 100 க்கு, 78, பார்ஸியரும், 97, ஜப்பானியரும், 98, அமெரிக்கரும், 99, ஆங்கிலேயரும் எழுதப் படிக்கத் தெரிந்தவராயும், அவர்களிலனேகர் உயர்தரக் கல்வியைக் கற்றவராயும் இருக் கின்றனர். இதிலிருந்து பார்ஸியர்களும், ஜப்பானியர்களும், அமெரிக்கரும், ஆங்கிலேயரும் உயர்வுற்றதற்கு அவரது கல்வியே காரணமென்பது உள்ளங் கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

## 4 ஒழுக்கம்.

ஒழுக்கம் என்பது ஒழுகு என்ற பகுதியினடியாகப் பிறந்த தொழிற் பெயர். இது ஒழுகுதல் (நடத்தல்) எனப் பொருள்படும். எவ்வாறு ஒழுகல் உரியதெனில் கல்வியால் நிறைவுற்றிருந்த நமது முன்னோர்களால் இயற்றப்பட்ட நூல்களின் கருத்தை யுணர்ந்து அதன்படி ஒழுகுதலேயாம். நம்மதத்தின் மேன்மையை வளர்க்கும் இது நம்மவரிடம் இப்போது குறைந் திருக்கிறது. அவ்வாறு அவரது கருத்தையறியாது, தர்மத்தை அதர்மமென



வும், கூடா ஒழுக்கத்தை நல்லொழுக்க மெனவும் கொண்டு, ஒற்றுமையின் வாழ்ந்து வ தமையால், நாம் இக்கெதியை அடைந்தோம்.

நமது குரவர்களின் பெருமையையும், அவர்களது கல்வித் திறமையை யும், நாம் அறிய சக்தி யில்லாதவர்களா யிருக்கின்றோம். நம்மையும், நம் முன் னோர்களையும், உண்மை நூலுணர்ச்சி யில்லாதோரும், தத்தம் மத நூல்களையே "ஆடு தழை மேய்வதுபோல்" படித்தவரும், அவதூறாகப் பேசும் இப்பொழுது அவரது அஞ்ஞானத்தை அகற்றி அவர்க்குப் புத்தி புகட்ட நாம் முயலாமலிருக்கி ன்றோம்.

நமது, தீர்த்தங்கரர்களும், கணதரர்களும், மற்ற ஆசாரியர்களும், ஜீவர்க ளது இயற்கைக் குணத்தைக் கர்மம் மறைக்கிறதென்றும், நல்லொழுக்கத்தால் அதை அகற்றி, மெய்யுணர்வையடைந் தெய்வதே முத்தியென்றும் கூறுகின் ற உண்மைப் பொருளொன்றையே யாவர்க்கும் உபதேசித்தன ரென்பது. யாவரும் மறுக்க முடியாது.

1. லக்ஷ மடங்கிய நமது ஜனத்தொகையில், திகம்பரர்களுக்குள் ஒவ்வொ ருவகுப்பிலும் 500 பேர்களுள்ள 41 ஜாதிகளும், 500 பேர்வழிகளிலிருந்து 1,000 பேர் வரையிலுள்ள, 12 ஜாதியாரும், 1,000 த்திலிருந்து, 5,000 ஜை னர்களடங்கிய 20 ஜாதிகளும், 5,000 பேர்வழிகளுக்கு மேலுள்ள 15 ஜாதி களும், 2, 3, 4, 8, 16, அல்லது 20, பேர்களடங்கிய அனேக வகுப்பினர்களும் இருக்கின்றனர். எனினும் இவ்விவரத்தைப் பெரும்பாலார் உணர்வதில்லை. இருந்தால் உலகத்தோரனைவராலும் போற்றப்படும் நம்மத நூல்களை நாம் எவ் வாறு உணர்ந்திருக்கிறோ மென்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில் புலப் படும்.

இனி உய்வதற்கு உபாயமுண்டோ? எனின், உண்டு.

நண்பர்களே! நாம் நமது முன்னோர்களின் பெருமையை யுணர்தற்குக் கல் வி காரணமாயிருக்கின்றது.

நூல்களைப் பெரும்படியாகப் பார்த்துவிடுத்தல் விபரீத வுணர்ச்சி யடைத லுக்கே ஹேதுவாகும். கடலைப்பார்த்துக்கொண்டு கரையில் நிற்பவனுக்குக்கடல கத்துள்ள விலையேறப் பெற்ற முத்துக்கள், எவ்வாறு கிடைக்கும். ஊக்க முடை யார் சரீர சிரமத்தைப் பாராதும், செல்வத்தி னுதவியைக்கொண்டு தக்க அங்கி களை வாங்கி, உடலில் அணிந்து கொண்டும், சமுத்திரத்தி லிறங்கி முத்துக்களை வாரிக்கொண்டு, மிகக் கஷ்டப்பட்டு, வெளி வந்து, அவைகளை விற்று ஏராளமான ஊதியத்தைப் பெறுவார்கள். அதுபோல, நம்மதத்தோரனைவரும் தங்கள் தேக சிரமத்தைப் பாராது, செல்வத்தின் உதவியைக் கொண்டு, கல்வியாகும் அங்கி யைப்பெற்று அகத்தில் தரித்து, நம் முன்னோர்களால் இயற்றப்பட்ட ஞான சாகரத்தில் முழுகி, மனோ எழுச்சியை மேற்கொண்டு, அங்கு தென்படும் நிச்சய ரத்தினத்திரயங்களாகும், நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக் கென்ற முப்பணிக்கோவையை யடைந்து, அறப் பொருளென்ற புறட்பொ

12 ளையும், இன்பமாகும் அகப் பொருளையும் எய்திப்பிறகு இவற்றின் பற்றையும் நீத்து, உலகத்தோரனைவருக்கும் மெய்ஞ்ஞானோபதேசத்தையே மொழிந்து

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய் "

என்ற திருக்குறளின் திரு வாக்கின்படி இத்தகையரின் சிறப்பினால் ஜினமதம் சிறப்புறவும், மகாத்மாக்களைப் பெற்ற ஜினமதத்தின் சிறப்பே சிறப்பு என யாவரும் புகழும் படிக்கும் செய்தும் முடிவில் அழிவிலின்பத்தை யடையவேண்டு மென்பதையே, இங்கு வற்புறுத்துகின்றேன்.

" மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். " (திருக்குறள்)

(இ-ள்) நல்வினை, தீவினை யென்ற வாசனைபொருந்திய, மனமென்னும் மலரைக் கடந்தவனது (அதாவது, நல்வினை, தீவினைகளையும், அவற்றாலுண்டாகும் பிறப்பையும் சக்கிலத்தியான மெனனும் வாளாலறுத்தவனது) பெருமை பொருந்திய பாதத்தை (ஞானத்தை) அடைந்தோர் உலகத்தினுச்சியில் (மோட்ச வீட்டில்) வரம்பில் காலம் வாழ்வார்.

அகக் கண்ணழகு.

## உத்தம சிநேகிதன்.

என்னருமை நண்பர்களே!

ஆழி சூழுலகின் கண் வசிக்கும் நமக்கு "உத்தம சிநேகம்" அவசியம் வேண்டும். "சேரிட மறிந்து சேர்" என்னும் முது மொழிக்கிணங்க நாம் ஒருவரோடு சிநேகம் செய்யு முன்னமே, அன்னவர் யோக்கியரா, ஆபத்துக்குதவும் சிநேகிதராவரா, அல்லது, அயோக்கியரா, துஷ்ட குணமுள்ளவரா, என்று அவர் தன்மையை ஆராய்ந்துணர்ந்து நல்ல வருடன் சிநேகம் செய்ய வேண்டும். நாம் ஒருவரோடு கூடிச் சிநேகம் செய்து விட்டால் பின்பு பிரிதல் செய்யாதிருக்கவேண்டும். அஃது விளங்கும் பொருட்டு "கூடிப் பிரியேல்" என்று உலக மெஞ்ஞானச் செல்வியாகிய திரு "ஔவையார்" விளம்பிய தெய்வ வாக்கியத்தைக் கடைப்பிடித்து அவ்வழி நடக்க வேண்டும்.

உத்தமரைக் காணினும், அவரோடு கூடிச் சிநேகம் செய்யினும், அன்னவர் வாயினிடமாக வெளிவரும் மொழிகளைக் கேட்கினும், நன்மை யுண்டாமென்று பின் வரும் பாடல் வலி யுறுத்தா நின்றது:

" நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்



குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று. "

இவ்விதம் கூறப்பட்டுள்ள நமது ஞான மாதாவின் திருவாக்கை நாம் சிரமேற் கொண்டு இப் பூவுலகின் கண்ணே உத்தம சிநேகிதரையே தேட வேண்டும். சாந்த குணமுள்ள நண்பர்களே! இந்நீதி வாக்கியத்திற்கு மாறாக, துஷ்டருடன் கூடி அவர் சொற்களைக் கேட்டு, நமது பொருள்களையும் வீண் காரியங்களில் செல விட்டு, நாம் நல்லவ ரென்று பேரெடுத்தலுங் கெட்டு, நம்மையும் பிராண சங்கடத்திற்கு உட்படுத்திக் கொள்ளலாகாது. "அற்ப சிநேகம் பிராண சங்கடம்" என்னும் பழ மொழியையும் "மூர்க்கரோ டிணங்கேல்" என்ற ஔவை பிராட்டியார் திருவாக்கையும் உணர்ந்து துஷ்ட சிநேகத்தை விலக்குதல் தகுதி.

" தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. "

என்பது ஔவை திருவாக்கு.

இந்நில வுலகின்கண் கோடானுகோடி மனிதர்களிருந்தும், உத்தம சிநேகம் அகப்படுவ தரிதாகும். ஆயினும் நமக்கு அவ்வுத்தம சிநேகம் அவசியமானது, நண்பன் வேண்டுமானால் நாம் வீதியில் போகும்போதே ஆயிரம் பேர்களைக்கூட சினேகம் பிடித்து விடலாம். அவர்களெல்லாரும் சினேகராவரோ? ஒருகாலுமாகார், என்னருமை நேசர்களே!

" போகாத விடந்தனிலே போகவேண்டாம்.
நல்லிணக்க மில்லாரோ டிணங்கவேண்டாம்.
மாற்றானை யுறவென்று நம்பவேண்டாம்.
முன்கோபக் காரரோ டிணங்கவேண்டாம்.
வழிபறித்துத் திரிவாரோ டிணங்க வேண்டாம்.
சேராதவிடந்தனிலே சேரவேண்டாம் "

என்னும் வாக்கியங்கள் உலகநீதியில் கூறப்பட்டுள்ளன, நண்பர்களே! இந்நெறிகளையுணர்ந்து துஷ்ட சிநேகத்தை நீக்கி உத்தம சிநேகம் செய்து நிலவுலகத்தில் நற்பெயரெடுக்க வேண்டும். அன்புள்ள நேயர்களே! முடிவாக ஒன்று கவனியுங்கள்:

சென்னையின் கண் உதித்து "தருமசீலன்" என்று அருமைத் திருநாமம் பூண்ட பத்திரிகையானது, நமக்கு மாதம் மாதம் நம் வாசல் தேடிவந்து சற்குருவாகவும், உத்தம சிநேகனாகவும், நம் காத்திலமர்ந்து நல்ல மதிகளைப் புகட்டுகின்றது. ஆதலின் இத்தருமசீலனை உத்தம சிநேகிதன் என்னலாம். தரு

சீலன் வாயிலாக வரும் வாக்கியங்களோ சீனி, தேன், கற்கண்டு ஆகியவற்றினு மினியவை. இப்பேர்ப்பட்ட இனிமையான வியாசங்களைத் தன்னகத்தி லணிந்து பாரினிலுலாவும் சீலனைக் காண்கினும், இதன் சொற்களை வாசித்தாலும், இதை அடுத்தாலும் மிக்க நன்மையே உண்டாகும்.

நம் நாட்டிற்குச் சகல நன்மைகளையும் அளிக்கும் தருமசீலனை ஏற்படுத்திய ஸ்ரீமான்! திரு. ஆதி கயிஞர் அவர்களையும் உத்தமரென்ற எண்ண வேண்டும். சீலனில் வியாசங்கள் வரையும் கல்வி மான்களும் உத்தம சிகாமணிகளே யாவர். இவ் வுத்தமர்களைக் காணுவிடினும் இவர்கள் வாயிலுண்டாகும் மதுரமான வாக்கியங்களை, "தருமசீலன்" என்ற இப் பத்திரிகை மூலம் தெரிந்து கொள்கிறோம். ஆதலின், இதனைத் தவறாமல் வாசிக்க வேண்டும். அதனால் விளையும் நன்மை பல வாகும். நண்பர்கள் மனம் தருமசீலனில் நாடும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக. சுபம்.

கே. கோவிந்தசாமி பிள்ளை.

மாயவரம் தாலுக்கா, இலுப்பூர்.

---

## நீதிக் குறிப்புகள்.

---

### அமிர்த வசனங்கள்.

நமது பூர்வீகர்களாகிய மஹான்கள், குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பொழுது, புல் பூண்டு, பிராணிகள், நிலம், நீர், ஆகாயம் ஆகிய ஒவ்வொரு பொருள்களையும் சுட்டிக் காட்டி அவை யாவும் ஒரே பரம்பொருளால் படைக்கப் பட்டன வென உணர்த்திவந்தமையால், இக்காலத்தைப் பார்க்கினும் கடவுளின் மகிமையை யுணர்ந்து மகிழ்ந்த ஜனங்கள் அக்காலத்தில் அதிகமாக விருந்தனர் என்று கூறலாம்.

ஜீவன், மரங்கள் முதலிய எந்த உருவத்தி லடைக்கப்பட்டிருந்தாலும் அவன் கடவுளின் அம்சம் பொருந்தியவனென்றும், அவனை, இம்சை செய்யக் கூடாதென்றும் முற்காலத்தில் சிறுவர்கள் நன்கு கற்பிக்கப்பட்டு வந்தனர். அசோகன் இவ்வுண்மைகளை லட்சக்கணக்கான சிலாசாஸனங்களில் செதுக்கி யிருக்கின்றான். இவ்வுண்மையை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்தால் தேசம் நன்மை பெறும்.

ஆயுதத்தினால் ஒன்றையொன்று அடக்கியாளுதலைப் பார்க்கினும் கதேச் சொல்லாகிய அம்பினால் ஒருவரை யொருவர் வெல்வதைப் பார்க்கினும் அன்பினால் ஜயித்தல், இனிய சொல்லால் அடக்கியாளுதல் நன்று.



இந்தியாவுக்குத் தேவையில்லாததும், ஒரே மாதிரி அரசாட்சி முறையை விளக்குவதுமாகிய சில மேற்றட்டுப் பழங்கதைகளைக் கொண்டு இந்தியன் மூளையை யடைப்பதைப் பார்க்கினும், அவனுடைய தாய் நாட்டின் உண்மைச் சரித்திரத்தையும், அவனது சரீரத்தைப் பாதுகாப்பதாகிய ஆயுர்வேத சுகாதாரமுறைகளையும் அவனுக்குக் கற்பிப்பது மேல்.

"வயிற்றுக்கும் வாய்க்கும் சரியாயிருப்பவைகளை யெல்லாம் விழுங்குவது" என்ற கொள்கையைப் பார்க்கினும், அதிக இம்சைக்குள்ளாகாத மரக்கறி யுணவுகளை யுட்கொள்வது, என்ற விரதம் கடவுளுக்கு உகந்ததாகும்.

ஒருவருக்கொருவர், சுய நன்மை காரணமாக ஏற்பட்ட பிரத்தியேகமான மனஸ்தாபத்தைக் கொண்டு ஒரு இந்திய சாதீய நன்மை யளிப்பதைப் பார்க்கினும், இந்தியாவிலேயே யுள்ள சுயநலப் புலிகளாகிய துற்குணிகளையும் நல்வழிப் படுத்துவது என்ற திருத்தொண்டில் பங்குகொள்வது சிறந்தது.

பிறரைக் கெடுத்துத் தனது நலத்தை மாத்திரம் விரும்புவது மிருக சுபாவம். பிறர்க்குத் தீங்கு செய்யாது தன் வேலையை மாத்திரம் கவனிப்பது மனித சுபாவம். தன்னையும் தனது நலத்தையும் தியாகஞ் செய்வது தெய்வ சுபாவம்.

வேலை செய்ய மனமில்லாது, படாடோபமாய்ப் பேசுகின்ற மனிதர்களைப் பார்க்கினும், ஒரு தேசத்திற்கென உழைக்கின்ற மனிதர்களே மிகுதியாக வேண்டப்படுகின்றனர். அதுபோல், ஒரு அரசாங்கஞ் செய்துள்ள சில கடமைகளைப் பிரமாதமாகப் புகழ்ந்து பேசுகின்ற ஒரு விளம்பர சபையைப் பார்க்கினும், ஒரு அரசாங்கத்தின் கையில் ஒப்படைக்கப்பட்டு அதனையே நம்பியிருக்கின்ற தேசத்திற்கு, அதன் தேவைகளை முழுதும் நன்குணர்ந்து, உடனுக்குடன் நிறைவேற்றுவதையே தனது தொழிலாகக் கொண்டு வேலை செய்யத் தக்க "தேவைகளை நிறைவேற்றும் சங்கம்" ஒன்று இந்தியாவுக்கு வேண்டப்படுகின்றது.

ஒரு ஜன சமூகம் மேன்மையுடன் வாழ்வதற்குச் செல்வப்பெருக்கு, அதிகாரம் ஆகிய இரண்டுந் தான் தேவையெனத் தற்காலம் சில நாகரிகர்கள் கருதுகின்றனர். 'ஆத்மப் பயிற்சி' என்ற சொல்லை, இப்புதிய நாகரிகர்கள் ஒரு விளையாட்டான இலாகா எனத்தள்ளிப் பேசுகின்றனர். ஆத்மப் பயிற்சி யழிந்தநாள் முதல் தான் இந்தியா ஆத்ம சக்தியையும் தன் மதிப்பையும் இழந்தது என்பதை இவர்கள் ஞாபகப்படுத்திக் கொள்வதில்லை.

---

## கல்வி.

---

கனவான்களே! சீலனில் இக் கல்வியைப் பற்றிப் பல வியாசங்கள் வந்தன. ஆகலின் அதைப்பற்றியே நானும் எழுதுவது அனுவசிய மெனினும், இக் காலத்தில் ஒரு நல்ல விஷயத்தை எத்தனை முறை எழுதினும் பெரும்

னமையோர் கவனிப்பது அரிதாயிருக்கின்றது. அவர்கள் கவனிப்பதற்கு ஒன்றையே பன்முறை எழுத வேண்டியிருக்கின்றது. ஆனது பற்றி யான் இப்போது இதனை எழுத முன் வந்தேன்.

கல்வியானது பெருமையுள்ள தென்பதும், அது ஆடவரும் பெண்டிரும் ஒள்படப் புத்தியும் பகுத்தறிவும் வாய்ந்த சகலமான மானிடருக்கும் இன்றியமையாத தென்பதும், நவீன நாகரீகங்களிற் சிறப்புற்றோங்கி விளங்கும் ஏனைய தேசத்தாரைப் போல நமது தேசத்தாரும் நாகரீகத்திலும் செல்வத்திலும் நாளுக்கு நாள் அதிவிருத்தியடைய அது எவ்வளவோ அவசியமான தென்பதும் அனைவரும் அறிந்த விஷயங்களாம். மேல் நாடுகளில் 100க்கு 90 பேருக்கு மேல் கல்வி விருத்தியால் உலக அறிவை யடைந்து அதன் பயனை அனுபவித்துச் சந்தோஷிக்க, நமது தேசத்தில் 100க்கு 90 பேருக்கு மேல் அறியாமை யென்னும் அந்தகாரத்தினடுவே தத்தளித்துத் தாம் எடுத்த ஜன்மத்தின் விசேஷ குணமாகிய பகுத்தறிவின் பயனையடைய மார்க்க மில்லாது தவிக்கின்றார்கள்.

இக்குறையை நீக்க நமது இராஜாங்கத்தாரும், மற்றுமுள்ள தனிகர்களும், மதாபிமானிகளும் வேண்டிய முயற்சி செய்ய வேண்டும். கல்வி விருத்தியால் செல்வ விருத்தியும், செல்வ விருத்தியால் தேச க்ஷேமமு முண்டாகு மென்பது யாவருமறிந்த விஷயமே.

இக் கருத்தைக் கொண்டே கனம் ம-ா-ா-ஸ்ரீ பத்திராதிபராகிய தி. ஆதிநயினாரவர்கள் நமது தென்னாட்டு ஜைன சகோதர, சகோதரிகள், நாளுக்கு நாள் கல்வியில் விருத்தியடைய வேண்டும், என்னும் கருத்துடனே இந்த தருமசீலன் என்னும் பத்திரிகையைப் பிரசுரித்து வருகின்றார்கள்.

இதில் அநேக ஜைன கனவான்களும் மற்றுமுள்ள வித்வ சிரோமணிகளும் பல ஜயின மத சம்பந்தமான சாஸ்திரங்களையும், இன்னும் அரிய பெரிய விஷயங்களையும் விஷயதானம் செய்து வருகின்றார்கள். இவனில் மாதம், மாதம் வரும் அருமையான விஷயங்களை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டியது நமது கடமை என்று நாம் கருத வேண்டும்.

### கல்வியின் பெருமை.

"வெள்ளத்தே போகாது வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் போகாது கொடுத்தாலுங் குறையாது
கள்ளருக்கு மெட்டாது காவலுக்கு எளிமையாது
உள்ளத்தே பொருளிருக்க ஊரிலுழைந் துழல்வானேன்."



என்ற செய்யுளால் கல்வியின் பெருமை சுலபமாய் விளங்கும். கல்வி கற்றுக் கொள்வதிலும் இளமையிலேயே கற்க முயல வேண்டும். அதனால் தான் ஔவையாரும் "இளமையிற்கல்" என்றும் பாடி யிருக்கிறார்.

"காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும்" என்னும் பழமொழிப்படி தேகத்தில் வன்மையுள்ள இளமையிற்றானே கல்வியைக் கற்கா விட்டால் பின்னர் அடையமுடியாது. சாதாரணமாய் ஈ, எறும்பு புகள் முதலிய பிராணிகள் அந்தந்தக் காலத்தில் தங்கள் தங்க ளாகாரங்களை எப்படிச் சேகரித்துக் கொள்ளுகின்றனவோ, அம்மாதிரியே நாம் எந்தெந்தக் காலத்தில் கல்வி கற்க வேண்டுமோ அந்தந்தக் காலத்திலேயே கற்க வேண்டும். நாம் கல்வி கற்பதற் கேதுவான காலம் இளமை தான். அக்காலம் தவறினால் சம்சார தொல்லைகள் ஏற்படுவதால் அப்பால் வாசிக்க முடியாது. கல்வியானது சாமான்ய பொருளன்று. அப்படிச் சாமான்யமான பொருளா யிருந்தால் எத்தனையோ பிரபுக்கள் தங்களுக்கு சிரம மில்லாமலேகல்விக்குத் தருந்தபடி திரவியங்களைக் கொடுத்து அதனைவாங்கிக் கொள்ளுவார்கள். அது அப்படி அடையக் கூடியதன்று. கல்வியானது நமக்கு ஆரம்பத்தில் சிரமத்தைக் கொடுக்கும். கல்வியை ஒருவன் தன் மனதைத் திடப்படுத்தி கஷ்ட நஷ்டங்களையும் பாராமல் அடையப் பெற்றால் முடிவில் அதனாலுண்டாகும் நல்ல பலன்களை இம்மையிலும், மறுமையிலும் அடைவா னென்பதில் ஐயமில்லை. தொடக்குங்கால் துன்பத்தைக் கொடுப்பதும் பின்பு அறிவை விசாலப்படுத்துவதுமான இக்கல்வியை நாம் இளைய வயதிற் கற்பதில் நமக்கிருக்க வேண்டிய ஊக்கத்துடன், நம் ஒழுக்கங்குன்றா வகை நடந்து கொள்ள நாம் பழகுவதும் நமக்கு இன்றியமையாத தாகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்றபடி கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்கவேண்டும்: அந்நூல்களில் சொல்லும் வழியில் நிற்கவேண்டும். "அறிவோர்க்கழகு கற்றுணர்ந் தடங்கல்" என்றபடி நமக்கு நமதாசிரியர்களால் போதிக்கப்படும் கல்வியை நாம் நன்கு கற்று அக்கல்வியால் நாம் அடையக்கூடிய நல்லறிவைப் பெற்றும், நன்னடையில் ஒழுகியும், நம்பெற்றோர்களையும் நம்மையும் உலகினர் மதிக்கச்செய்து கொள்ளவேண்டியது நம்மைப் பொறுத்த கடமை என்று நாம் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். தானங்களில் உயர்ந்தது வித்தியாதானமே. ஏனெனில் கல்வியினால் அறிவு விருத்தியாகும்; அறிவினால் அறியவேண்டிய வஸ்துவை நிர்ணயிக்கக்கூடும். அவ் வஸ்து நிச்சயத்தியானத்தால் துன்பங்களுக் கேதுவான ஜனன மரணங்களை ஒழித்து நித்தியானந்தமான மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடையக்கூடும். அப் பதவியை யடைய ஜீவர்களுக்கு உதவி புரிவது கல்வியே: ஆதலின், அப்படிப் பட்ட கல்வியைக் கற்றுக் கொடுப்பதும் பெரும் புண்ணியமாகும்.

தவிர இவ்வுலக வாழ்க்கைக்கும் கல்வியே இன்றியமையாத சாதனமாயிருக்கிறது. கல்வி இல்லாவிடில் இவ்வுலக வாழ்க்கைக் குரிய எவ்வகைச் சௌபாக்கியமும் சம்பாதிக்க முடியாது. கல்வி யில்லாதவன் நடைப் பிணம்

[illegible] த்ச் சமான மாவான். என்னு மெழுத்தும் ஒருவனுக்கு கண்களென்னும் அவ்விரண்டும் அறியாதவன் கண்கள் புண்களென்றும் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட கண்களை நமக்கு இலவசமாகக் கொடுக்க முன் வந்திருக்கிற நம் சீலனின் பத்திராதிபரின் நன்றியை நாம் நம் ஆயுள் முழுதும் மறக்கக்கூடாது. ஒருவர் ஒரு காலத்திற் செய்த நன்றியை எப்பொழுதும் மறக்கலாகாது. மறந்தால் தீங்கு வரும். "உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்றார் குறளாசிரியரும். ஆகையால் நாம் செம்மையாய்க் கல்வியைக் கற்று, நம் தாய் தந்தையர்களையும், ஆசிரியர்களையும், நம் சீலனை அச்சிட முன் வந்த பத்திராதிபரவர்களையும் மனமொழி மெய்களால் வழிபட்டு அழியாப் புகழைப் பெற்று ஆயுள் நிறைவை அடைந்து மறுமையினும் சுகம் பெறுமாறு சர்வ வல்லமையுள்ள ஸ்ரீ அருகக் கடவுள் கிருபை புரிய வேண்டுமென நாம் பிரார்த்திப்போமாக.

தோ. விஜயபாலன்,
1-வது உதவி உபாத்தியாயர்,
போர்டு ஸ்கூல்,
திருப்பறம்பூர்.

---

## உதயண குமார காவிய வசனம்.

---

(முன் தொடர்ச்சி புத்தகம்: 3 சஞ்சிகை -1. பக்கம்- 17)

### துறவு காண்டம்.

இவற்றைக் கேட்ட மன்னன் குஞ்சரத்திற் கிரங்கித் துக்க முடையவனாகி, அந்த யானையினிடம் சென்று மிக்க விசுவாசத்தோடு அதனை நோக்கி "வாராய் மித்திரனே! நாமிருவரும் பூர்வத்தில் நண்பர்களாயிருந்தோம்; கெட்ட வினையினால் நீ இப்போது யானையாயினை; நம் பூர்வ சம்பந்தத்தை நான் சிறிதும் உணராமையினாலே உன்னை யானை யென்றே நினைத்து வலிய கயிற்றினால் உன்னை வரிந்து கட்டியும், நெருஞ்சி முள்ளைப் போன்ற கப்பணம் என்னும் ஆயுதத்தினால் நீவீழிட்டலறும்படி உன் சிரசில் மோதியும், கால்களுக்கு விலங்கிட்டு உன்னைச் சிறை செய்தும், விலங்குகளைத் துன்பப்படுத்துவது போல உன்னையும் மிகவும் துன்பப்படுத்தினேன். அந்தக் குற்றத்தை நீ பொறுப்பாயாக" என்று அதனுடம்பை பன்முறை தடவி அதற்குப் பல வுபசார வார்த்தைகள் கூறி அதன் பூர்வ விருத்தாந்தத்தையும் விளக்கிக் காட்டி, மீண்டு தர்ம வீரிய முனிவரை வணங்கி அவரிடம் விடை பெற்றுக்கொண்டு [illegible]னகன் சூழ்த்தன் திருமாளிகை சேர்ந்தான்.

[illegible] அதன் மேல் மேற்கூறியபடி சப்த தினங்களுஞ்சென்றபின்பு அந்த யானை



யானது உயிர் நீங்கும் நிலைமையை அடைந்தது. அதனைக் கண்ணுற்ற பாகர் யாளர் உடனே உதயண மன்னனிடம் சென்று வணங்கி யானையின் தன்மையைக் கூறினர். அது கேட்ட மன்னன் உடனே யானையின் சமீபத்திற் சென்றான். அப்பொழுது குஞ்சரமானது தேகத்தை நீத்துக் கல்பவாசி தேவனாய் அரசனை நோக்கி "மன்னனே! உலக செல்வம் அநித்தியம்; ஆதலின் நிலைத்த செல்வத்தைத் தேடுவாயாக." என்று கூறிச் சென்றது. அதன்மேல் வள்ளலாகிய உதயணன் "இந்த சம்ஸாரமானது அஸார மாகும்" என்று உலக போகத்தை வெறுத்து உடனே துறவடையக் கருதி, தன் புத்திரராகிய நரவாகனனையும், கோமுகனையும் அழைத்து அவர்களை நோக்கி "என் புத்திர சிகாமணிகளே! நான் முன்னே நியமித்தபடியே நீங்களிருந்து இராச்சியத்தை நடத்துவீராக; நான் தவத்திற்குச் செல்கின்றேன்." என்று கூறிவிட்டுப் பின், தன் மனைவியரிடத்தே "என் தன் பிற்குரிய இல்லக் கிழத்திகளே! இவ்வுலக வாழ்வு அநித்திய மாதலின், நான் நிலைத்த வாழ்வைத்தேடும் பொருட்டுத் தவத்திற்குச் செல்கின்றேன். உங்களுடைய விருப்பம் யாதோ அதனைத் தெரிவிப்பீராக" என்றனன். அவர்கள் "சுவாமி! யாங்களும் உம்முடனே வருகின்றோம்; எங்களுக்கும் அத்தவமே உரிய பொருளாகும்" என்றனர். அதன் மேல் உதயணன் தன் மந்திரிகளிடத்தே தன் விருப்பத்தைத் தெரிவிக்க, அவர்கள் அதனிசைந்ததோடு தாங்களும் தவம் செய்வதற்கு உடன் வருவதாகக் கூறினார்கள். பின்னர், உதயணன் தன் புதல்வர்களிடத்தே விடை பெற்றுக்கொண்டு, தன் மனைவியர் நால்வருடனும் உருமண்ணு, விடபகன், யூகி, வயந்தகன் என்னும் அமைச்சர் நால்வருடனும், புறப்பட்டு மருமலர் நிறைந்த சோலையிலே வாசஞ் செய்து கொண்டிருந்த தரும வீரிய முனிவரிடம் போய்ச் சேர்ந்தான்.

அவ்வாறு சேர்ந்த பின் அம் முனிவரைக் கண்டு அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து நாத்தழும் பேறும்படி பலவகையான ஸ்தோத்திரங்களைச் செய்து அவரை நோக்கி "சுவாமி அடியேன் உலக இன்பத்தில் வெறுப்புற்று என்னைச் சார்ந்தவர்களோடு தவத்தை விரும்பி வந்தேன். ஆதலின் தாங்கள் பரிபூரண கிருபை செய்து எங்களுக்குத் தவ மார்க்கத்தினைப் போதித்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தான். அவர் அவ்வாறே அம்மன்னன் வேண்டுகோட் கிணங்கி அவனுக்கும் மற்றையர்க்கும் தவ மார்க்கத்தினையும் ஞான மார்க்கத்தினையும் உபதேசித் தருளினர்.

இன்னும் வரும்,

வி. ஆறுமுகஞ் சேர்வை.

---

## ஆரணி ஜைன தரும சமஸ்கிருத பாடசாலை.

இவ்வருஷம் சித்திரை மீ 9உ முதல் நடந்த ஆரணி ஜைன சகோதர சங்
கத்தின் வருடாந்திரக் கொண்டாட்டத்திற்கு நாம் சென்றிருந்த காலத்தில் ஷை
சங்கத்தாரால் ஷை கொண்டாட்டம் மூன்று தினங்கள் வரை வெகு விமரிசை
யாக நடத்தப் பட்டதோடு ஷை பாடசாலையும் 23—4 20 ல் திறந்து வைக்கப்
பட்டது. அப்பொழுதே பல ஜைன கன தனவான்கள் 500-ரூபாயிலிருந்து
1-ரூபாவரையில் தங்கள் தங்களுக்கியன்றவளவு பொருளுதவி செய்தார்கள்.
அன்று தினமே ரூபா 2000—0—0 க்கு மேல் சேர்ந்து விட்டது. ஆரம்ப
தினத்திலேயே ஜைன தனவான்கள், தம் மதாபி விருத்தியைக் கருதி இதன்
விஷயத்தில் இவ்வளவு அபிமானம் காட்டியதனாலேயே இது நாள்டைவில்
விருத்தியடையுமென்பதில் சந்தேக மில்லை. சங்கங்கள் செய்ய வேண்டிய
காரியங்களில் இதுதான் முக்கிய மானது. இந்தச் சங்கமானது ஆரம்பித்த
சில மாதங்களுக்குள்ளாகவே மத விருத்திக்காக அநேகம் அருமையான காரியங்
களை யெல்லாம் செய்து வருகின்றது. இதன் விஷயங்கள் ஒவ்வொன்றும்
மிகவும் கொண்டாடத் தக்கன. இந்தக் கொண்டாட்ட மூன்று தினங்களிலும்
இச்சங்கத்தின் அங்கத்தினர் எம்போலியரை வரவேற்று ஒவ்வொருவர்க்கும்
தக்கவாறு உபசாரம் புரிந்து மிக்க பிரியாரை யுடன் நடத்திய நடபடிக்கைகள்
மிகவும் கொண்டாடத் தக்கன. மற்ற ஜைன சங்கங்களும் இங்வாறே ஒவ்
வொரு நற்காரியங்களிலும் பிரயாசை யெடுத்து வரும் பக்ஷத்தில் ஜைனமதம்
விருத்தி யடையு மென்பதில் ஐயமே யில்லை.

பத்திராதிபர்.

## சந்தா நேயர்க் கோர்விஞ்ஞாபனம்.

தருமசீல நேயர்களே!

இப்போது நேர்ந்திருக்கும் கடுதாசிப் பஞ்சம் முதலிய பல அசந்தர்ப்பங்களால்
கொஞ்சநாளாகச் சீலன் வெளிவரத் தாமதமாயிற்று. எனினும், காரணத்தை,
உணர்ந்து நேயர்கள் எல்லோரும் அவ்விஷயத்தைப் பற்றிக் குறை கூறாமலே
பொறுமையுடனிருந்தீர்கள்; இதைப்பற்றி நாம் மிகவும் திருப்தியடைகிறோம்.
நீங்கள் இவ்வாறு பொறுத்திருந்தது 'தருமசீலன் நமது சொந்தப் பத்திரிகை'
என்னும் அபிமானத்தினாலேயே ஏற்பட்டதென்பது நன்கு விளங்குகின்றது.
இந்த அபிமானத்தை நீங்கள் எப்பொழுதும் வைத்திருப்பீர்களானால், எவ்வித
இடையூறுகள் வரினும் பத்திரிகை தளர்வுறாது விருத்தியடையுமென்பது நிச்
சயம். ஆதலின், நண்பர்கள் ஒவ்வொருவரும் மேன் மேலும் சந்தாதாரர்களைச்
சேர்த்துச் சீலனை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.
பல சந்தா நேயர்கள் சென்ற வருஷத்துச் சந்தாத் தொகையையும் ஏதோ



அசந்தர்ப்பத்தால் செலுத்தாமல் வைத்திருக்கின்றனர். இந்த நெருக்கடியான
காலத்தில் இவ்வாறு சந்தாத் தொகை பாக்கி யிருப்பதால்சீலனுக்குக் கஷ்டமுண்
டாகுமென்பதை நாம் சொல்லாமலே ஒவ்வொருவரும் உணர்வர். ஆதலின்
பாக்கித் தொகையைச் செலுத்தி விடுவதோடு இவ்வருஷ சந்தாத் தொகை
யையும் உதவிச் சீலனை ஆதரிக்கும்படி நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.
இனி பத்திரிகை தாமதிக்கக்காரணமில்லை. ஒவ்வொரு மாதமும் கிரமமாக வெளி
வரும்.

பத்திராதிபர்.

---

## தரும சீலன் அநுபந்தம்.

### தர்ம சாகர சுவாமிகள் சத் சங்கம்.

ஸ்ரீசைலபுர மென்னும் திருப்பறம்பூரில் சித்தார்த்தி ஸ்ரீ மாசி மீ 22உ
வெள்ளிக்கிழமை யன்று தர்மசாகர சுவாமிகள் சத் சங்கம் கூடிற்று. இச்சங்
கத்திற்கு கள்ளப்புலியூர், ஸ்ரீமான் அப்பாசாமி சாஸ்திரியார் அவர்கள் அக்கிராச
னம் வகித்தார்கள். அடியிற் கண்ட கனவான்கள் கீழ்க்கண்ட விஷயங்களை
மிக்க தெளிவாக உபன்யாசித்தார்கள்.

### உபந்நியாச விவரம்.

ஸ்ரீமான் நல்ல அகலங்கியப்ப நயினார் அவர்கள்- நமது எதிர்கால நிலைமை
,, நாவல் பத்திரபாகு நயினார் ,, ஜினசேனாச்சாரியார், வாம
னாச்சாரியார், முதலியவர்களின் பெருமை.
,, ஜைனகெஜட் பத்திராதிபர் ஸ்ரீமான் C. S. மல்லிநாத் ஜெயின்- ஆத்மாவின் சுற்றம்.
,, ஜினதாச நயினார்- ,, நமது கடமை.

இவ்விஷயங்களை ஷை உபந்நியாசகர்கள் முறையே உபந்நியசித்து முடித்த
பின்பு, அக்கிராசனாதிபதியவர்கள் முடிவுரையாகச் சில விஷயங்கள் பேசி முடி
த்ததும் மோகனீய கர்மத்தைப் பற்றி ஓர் விரிவான பிரசங்கம் செய்தார்கள்.
பிரசங்கம் முடிந்ததும் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டுச் சபை கலைந்தது.

தீ. மே. புஷ்பதந்தன்.

இரௌத்திரி ஸ்ரீ சித்திரை மீ 9உ அக்ஷய திருதியையாகிய சுத்த புண்ய
தினத்தன்று ஆதீஸ்வர ஸ்வாமிக்கு விசேஷபூஜைகள் நடந்த பின்பு, மேற்கண்
ட தர்மசாகர ஸ்வாமிகள் சத்சங்கத்தாரால் ஒரு சபை கூட்டப்பட்டது.

### நடவடிக்கைகள்.

பார்ஸ்வநாத நயினார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

### உபன்யாச விவரம்.

ஸ்ரீமான் ந. அகலங்கியப்ப நயினார் அவர்கள் "மதக்கொள்கை"
,, மே. புஷ்பதந்த நயினார் ,, "நமது கடமை"
,, ந. அப்பாதுரை நயினார் "அறிவு இன்றி அமையாதது

இவர்கள் இவற்றைப் பிரசங்கித்த பின்பு அக்கிராசனர் சங்கத்தின் அவசிய[ம்]தைப்பற்றியும், ஒற்றுமையைப் பற்றியும், உபந்நியசித்தனர். பின்பு சபை [க]லைந்தது.

தி. ச. சக்கிரவர்த்தி.

## பேரணி ஜைன சகோதர ஷட்கிராம சங்கம்:

பேரணி, கீழ்வைலாமூர், முட்டத்தூர், மேழியனூர், செண்டியம்பாக்கம், கப்பியாம்புலியூர், ஆகிய ஷட்கிராம சிராவகர்கள், கீழ்வைலாமூர் ஜினசைத்தியாலயத்தில், நிகழும் இரௌத்திரி ௵ சித்திரை ௴ 9௳ அக்ஷயதிரிதியையாகிய புண்ணிய தினத்தன்று சங்கம் கூடினார்கள். ஆதீஸ்வரஸ்வாமிக்கு அஷ்டவிதார்ச்சனைகள் முதலாய சிறப்புக்களியற்றி முடிந்ததும், இரவு 7 மணிக்கு கீழ்க்கண்ட விஷயங்கள் உபந்நியசிக்கப்பட்டது.

இச்சங்கத்திற்கு, சென்னை இராஜதானி ஜைனர் சங்கத்தின் அக்கிராசனர் ஸ்ரீமான் A. P. சந்திரநாத நயினார் அவர்கள் அக்கிராசனம் வகிக்கவேண்டுமென ஆமணியம் ஸ்ரீமான் அருக்ககீர்த்தி நயினார் அவர்கள் பிரேரேபிக்க, சங்கத்தாரது ஏகோபகரகோஷத்தினிடையே அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அக்கிராசனர் முன்னுரைப்பிரசங்கம் செய்த பின்பு அடியிற் கண்ட கனவான்கள் கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றி உபந்நியசித்தனர்.

### உபந்நியாச விவரம்.

ஸ்ரீமான் குப்புசாமி நயினார் அவர்கள் "சிராவகநிலை"
,, பத்மராஜ நயினார் ,, "ஜீவகாருண்யம்"
,, பத்ரபாகு நயினார் ,, "அக்ஷயதிரிதியை மகத்துவம்"
,, சிம்மசந்திர நயினார் ,, "ஜைனர்களும், பூர்வீகமும்"
,, சோமப்பிரபை நயினார் ,, "வட இந்திய ஜைனர்களின் அபிவிருத்தி"
,, அபராஜித நயினார் ,, "லோகஸ்வரூபம்"
,, சந்திரகீர்த்தி நயினார் ,, "சங்கம்"
,, அப்பாவு உபாத்தியாயர் ,, "மானிட ஜென்மம்"
,, பார்ஸ்வநாத நயினார் ,, "ஒற்றுமை"

இவை முடிந்த பின் அக்கிராசனர், சங்கத்தின் அவசியத்தைப்பற்றி முடிவுரைப் பிரசங்கம் செய்து ஆசனத்திலமர்ந்தனர். பின்பு, ஷை சங்கத்திற்கு காரிய நிர்வாக அங்கத்தினரை நியமிக்கவேண்டிய விஷயமாய் ஆலோசித்துக் கீழ்கண்ட கனவான்கள் காரிய நிர்வாக அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### காரிய நிர்வாக அங்கத்தினர்கள்.

ஸ்ரீமான் K. A. தனபால நயினார் அவர்கள் "அக்கிராசனாதிபதி"
,, சந்திர கீர்த்தி நயினார் அவர்கள், உப அக்கிராசனாதிபதி
,, A. செல்வராச நயினார் ,, "காரியதரிசி"
,, P. பத்மராஜ நயினார் ,, "உப காரியதரிசி"
,, குப்புசாமி நயினார் ,, "பொக்கிஷதார்"

இந்தஅங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்த பின்பு, சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டுச் சபை கலைந்தது.

காரியதரிசி,
பேரணி ஜைன சகோதர சங்கம்.



## ஷை சங்கம் 2வது மீட்டிங்.

ஷை 2-வது மாதாந்தர சங்கம் இரௌத்திரி ௵ வைகாசி ௴ 15௳ செண்டியம் பாக்கம் கிராமத்தில் கூடிற்று. இச்சங்கத்திற்கு ஸ்ரீமான் K. A. தனபால நயினார் அவர்கள் அக்கிராசனம் வகித்து ஒற்றுமை ஒழுக்கம் முதலிய விஷயங்களை முன்னுரையாக உபந்நியசித்து ஆசனத்திலமர்ந்த பின்பு அடியிற் கண்ட கனவான்கள் கீழ்க்கண்ட விஷயங்களை முறையே உபந்நியசித்தார்கள்

### உபந்நியாச விவரம்.

ஸ்ரீமான் குப்புசாமி நயினார் அவர்கள் (ஸ்ரீ வீர வர்த்தமான ஸ்வாமிகள் பஞ்ச கலியாணம்.)
,, ஜோலியம் அய்யண்ண நயினார் ,, (அநித்தியம்)
,, இராயபுரம் P. R. வஜ்ரபாகு நயினார்- (கலம்பகம்)
,, மேல் மின்னல் M. சக்கிரவர்த்தி நயினார் (நமது வேலை)
,, ஆலகிராமம் பெரிய அய்யண்ண நயினார்- (சத்சங்கம்)
,, சிகாமணி ,, (கல்வி)

இவை முடிந்த பின் அக்கிராசனர் அவர்கள் முடிவுரையில் சங்கம் நல்ல வேலை செய்வதற்கு, சங்கத்தின் அங்கத்தினர்களும் மற்றவர்களும் சுப அசுப விசேஷ காலங்களில் சங்கத்திற்கு நன்கொடை யளிக்க வேண்டுமென்னும் விஷயமாய் உபந்நியசித்த பின்பு மங்கள வாழ்த்துடன் சபை கலைந்தது.

P. A. செல்வராசு,
V. B. பத்மராஜன்,
காரிய தரிசிகள்.

## ஓர் தனிச் சங்கம்.

போளூர் தாலுக்கா, "காம்பட்டூர்" என்னும் கிராமத்தில் இரௌத்திரி ௵ வைகாசி ௴ 10௳ ஸ்ரீமான் பூண்டி அப்பாண்டை நயினார் அவர்கள் இல்லத்தில் ஜெகிரில், ஆரணி ஜைன சகோதர சங்கத்தாரது நன் முயற்சியினால், ஸ்ரீமான் சோமநாத நயினார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் சங்கம் கூடிற்று.

### உபந்நியாச விவரம்.

ஸ்ரீமான் A. V. வர்த்தமான நயினார் அவர்கள் "சேர்திருத்தம்"
,, P. அய்யண்ண நயினார் ,, நமது கடமை)
,, திருமலை பிரதாபேந்திர உபாத்தியாயர்-"சிரேணிக மகாராஜன் சரிதம்".

இவை உபந்நியாசிக்கப்பட்ட பின் அக்கிராசனர் முடிவுரைப் பிரசங்கம் செய்தனர். பின்பு, ஸ்ரீமான் பூண்டி அப்பாண்டை நயினார் அவர்கள் தங்கள் கிரகத்தில் நடந்த விவாகத்தின் ஞாபகார்த்தமாக ஆரணி ஜைன சகோதர சங்கத்திற்கு 15 ரூபாய் பெறக்கூடிய கெடியாரம் ஒன்று நன்கொடை யளித்தனர். பின்பு மங்கள வாழ்த்துடன் சபை கலைந்தது.

கண்டு களித்தேன்.

## பத்திரிகை வரவு.

**வைசிய மித்திரன்**

இத்தலைப் பெயரமைந்த பத்திரிகை பொன்று நம்பார்வைக்கு வரப்பெற் றோம். இது, நந்தமிழ் நாட்டில் நிதியாலும், மதியாலும், அறத்தாலும், வாத் தாலும், கொடையாலும், இசையாலும், ஜாதி ஒற்றுமையாலும், மாநிலமதிக் கும் வாணிபத்தாலும், தெய்வ பக்தியாலும் சிறந்து விளங்கும் வைசிய வகுப் பாராகிய நாட்டுக் கோட்டை நகரத்தார்க்கு முக்கிய உறைவிடமாகிய காரைக் குடி யென்னும் சீருற்றபதியில், பிரதி சோமவாரந் தோறும் வெளிவரும் இனிய தமிழ்ப் பத்திரிகை. நகரத்தாராகிய வைசியர் சார்பை மிகுதியும் உடை யது. உலகத்தில் ஒவ்வொரு வகுப்பினருக்கும் தத்தம் ஜாதி மத முன்னேற்றத் திற் கனுகூலமாகப் பத்திரிகை ஒன்றோ பலவோ இருக்க வேண்டியது மிகவும் அவசியமாம். இது பற்றியே ஒவ்வொரு வகுப்பாருள்ளும் தங்களுக்கெனச் சிறப்புப் பத்திரிகைப் பிரசுரங்கள் வெளி வருகின்றன. அவற்றைக் கொண் டே அவ்வகுப்புக்களில் அநேகம் நன்மைகள் நிகழ்கின்றன. இந்த நோக்கத் தைக் கொண்டே இப்பத்திரிகையும் வைசியர்க்கெனச் சிறப்புப் பத்திரிகையாக வெளி வருகின்றது. உலகத்தில் ஒற்றுமையால் விருத்தி யடைவதற்கு நாட் டுக் கோட்டை நகரத்தார்களையே உதாரணமா காட்டி நம் சீலன் முதல் வருட சஞ்சிகைகளில் ஒன்றில் வியாச மொன்று விரிவாக வரைந்திருக்கின்றோம் அதனால் நகரத்தார்களின் உயர்வைப் பற்றி நன்குணரலாம். இத்தகைய அவர் களின் சார்பைப் பெற்று வெளிவரும் இவ் 'வைசிய மித்திரன்' என்னும் பத்திரிகை மிக்க செல்வாக்குடன் நடக்குமென்பதைப் பற்றி நாம் ஒன்றும் கூற வேண்டியதில்லை. அதனை உலகம் ஒதாதுணரும். தேவ கோட்டையி லும் இவ்வகுப்பாருக்கென்று ஒரு பத்திரிகை நடந்து வந்தது. அதுவும் நல்ல விதத்தில் நடந்து வருமென்றே நினைக்கிறோம்.

இவ் வைசிய மித்திரன் ஒரு வகுப்பினரைச் சார்ந்த சிறப்புப் பத்திரிகையா யினும் பொதுவாக எல்லா வகுப்பாருக்கும் பயன் படக்கூடியதே. இதில், கைத் தொழிலைப் பற்றிய விஷயங்கள், தேச நன்மையான காரியங்கள், விவசாயக் குறிப்புக்கள், இந்தியாவின் புராதன நிலைமைகள், கல்வி சம்பந்தமான விஷயங் கள், சுகாதாரக் குறிப்புக்கள், நீதி மொழிகள், அன்னியதேச சுயதேச வர்த்த மானங்கள், தமிழ் விருத்திக்கான விஷயங்கள், வாணிபத்தைப் பற்றிய விஷயங் கள், உலகத்தில் நிகழும் அதிசய சம்பவங்கள் முதலிய அநேகம் விஷயங்கள் வெளி வருகின்றன. இது செவ்விய தமிழ் நடையில் அமைந்தது. தமிழர் எல்லோருக்கும் மிகவும் உபயோகமானது. ராயல் முழுச்சீட்டு இரண்டு கொண் டது. அரைச் சீட்டில் நான்கும், பக்கம் எட்டுமாகும். வருஷ சந்தா ரூபாய் 3—0—0.

வேண்டுவோர் "வைசிய மித்திரன் ஆபீஸ் காரைக்குடி" என்ற விலாசத் திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

OFFICE OF ... 2- NOV 1920 ... MADRAS.

சிவமயம்.
ஸ்ரீ ஜினாயநம:

# தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)

| புத்தகம் 3 | இரௌத்திரி௵ ஆனிமீ 1920௵ ஜூன்மீ | சஞ்சிகை 3 |
|---|---|---|

## தருமோபதேசம்.

எண்சீர்க் கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

மன்னர்தமை யடுத்திருப்போர் பலர்க்கு நன்மை
மனம்பொருந்திச் செயவேண்டும் வந்த வர்க்கு
இன்னல்வரும் படிக்கில்லா ததும்பொல் லாதும்
இறைவனுக்குச் சொல்லியவன் மனங் கெடுத்து
அன்னவன்செய் யுபகாரந் தனைத் தடுக்க
லாகாது தடுக்கில்வரு மளவில் பாவம்
அன்னமிட்டார் வீடதனிற் கன்ன மிட்டோர்
ஆழ்நரகில் மீளாமல் வீழ்வ ரம்மா. (௪௦

எல்லார்க்குந் தெய்வமொன்றே யென்றவுண்மை
யிதயத்தி லெப்பொழுது மிருக்க வேண்டும்
பொல்லாத மதிமயக்கங் கொண்டே யிந்தப்
பூமிதனில் தர்க்கங்கள் பலபுரிந்தே
கல்லாது நீண்டுபல ரோடுஞ் சண்டை
கணந்தோறும் புரிவோரைக் கடவுள் வேண்டார்
இல்லாத கதைபேசு மிவர்கள் நன்மை
எது மடை யார்தீதே யிவர்க்குண் டாமே. (௪௧)

விதிவலியா லொருவனிட ருற்ற போது
விசனமடை யாதவனைப் பரிகசிப்போன்
மதிகெட்ட மாடாகு மவனு முற்ற
வலிமை கெட்டு மறுநாளே வாழ்விழப்பான்
நதிகுளத்தி லுடையின்றி நடந்த பேர்கள்
நாசமுற்றே போவார்கள் நல்லோர் கூடி
வதிகின்ற தலத்தினிலா பாச மாக
மலசலங்க விடுவோரின் வாழ்க்கை...

# தருமசீலன்.

இரௌத்திரி௵ ஆனி௴

## உண்மைத் தவம்.

உலகத்தில் சிலர், உண்மையான தவத்தைச் செய்யும் மார்க்கம் இன்னதென்றுணராமல் பொய்த்தவ வேடங்களைத் தரித்து, மனத்தூய்மை சிறிது மின்றிப் பசுவானது புலியின் றோலைப் போர்த்துக் கொண்டு உழு தொழிலாளரை ஏமாற்றிப் பயிரை மேய்வதுபோல, சாதுக்கள்பக்தியுள்ளவர்களை ஏமாற்றிப் பல உலக இன்பங்களை எளிதில் அடைந்து பாவத்தை மூட்டை கட்டிக் கொண்டு திக்கதிக்காளாகின்றனர். இத்தகையரை நம்பி உலகத்தவரிற் பேதைகள் பலருங் கெட்டுப் போகின்றனர். ஆதலின் இவ்வகைக் கேடுகள் நேராதிருக்கும் பொருட்டுப் போலித் தவம் இன்னதென்பதையும், உண்மைத் தவம் இன்னதென்பதையும், அவற்றாலுண்டாம் பயன்களையுந் தக்க நூற்பொருளாதாரத்தோடு இங்கு விளக்கிக் காட்டுவாம். இவற்றை ஒவ்வொருவருங் கவனித்தொழுகின் மேற்கதிக்குச் செல்வது நிச்சயம்.

ஸ்திரீகளின் கூட்டுறவை வைத்துக் கொண்டு 'தவஞ் செய்கிறோம்' என்று ஒரு தவ நடிப்பைச் செய்பவர்களுக்கு நிச்சயமாக எப்பொழுதும் தவங் கைகூடாது. அவர்கள் மேற் கதியைச் சார்ந்துய்வதற்கும் மார்க்கம் ஏற்படாது. பெண்ணாசையை வைத்துக் கொண்டு ஒருவன் தவஞ் செய்து மேற்கதியடைந்தானென்பது எள்ளளவும் நம்பத் தகுந்ததன்று "......சையம் பூண்டு சமுத்திர நீந்துவார்; ஐய்யு மேற்றொடர்ப் பாட்டினிங் கியாவையு, மெய்திறார்களுமுய்ப......" என்றபடி, கல்லைக் கழுத்திலே கட்டிக் கொண்டு கடலை நீந்து கின்றவன் பிழைப்பானானால், சிற்றின்ப நுகர்ச்சியுடனே இவ்விடத்து விரதங்களை அநுஷ்டித்தவர்களும் பிழைப்பார்கள். இன்னும்,

> "வீடு வேண்டி விழுச்சடை நீட்டன் மெய்ம்
> மூடு கூறையின் மூடுதல் வேண்டலை



> ஓடு கோட லுடுத்தலென் றின்னவை
> பீடி லாப்பிற விக்குவித் தென்பவே"

என்றபடி, மோக்ஷ வீட்டைப் பெற விரும்பி மனத்தூய்மை சிறிது மின்றிச் சடையை வளர்த்தலும், காவி வஸ்திர மணிதலும், கையிற் கபால மேந்துதலும், ஒற்றை வஸ்திரத்தை யணிந்து ஏகாங்கியாதலும் ஆகிய இவைகள் பெருமையில்லாத பிறவிக்கு வித்தாகுமேயன்றி, எட்டுணையும் முத்திக்குதவியாக மாட்டா.

சிலர், 'உறியிற் கிடந்து ஊஞ்சலாடுவதாலும், காய் கனி கிழங்கு முதலிய வற்றைத் தின்பதாலும் உங்களுக்குத் தீவினைகள் நீங்கும் என்று எங்களிறை கூறினார்' என்று சொல்லிக் கொண்டு கடவுள் கூறிய உண்மை மார்க்கத்தினை உணராமல் இங்குக் கூறியவற்றை அநுஷ்டித்துத் திரிவர். இவற்றால் தீவினை நீங்கவே மாட்டாது. தீவினை கழிய வேண்டுமானால் மனதைப் பரிசுத்தமான நிலையில் வைத்து மெய்த்தவம் புரிய வேண்டும்.

> "தூங்குறிக் கிடந்து காயும் பழங்களுந் துய்ப்ப தில்லா
> பாங்கலா வினைக ளென்றார் பகவனு மெங்கட் கென்னின்
> ஓங்குநீண் மரத்திற் றூங்கு மொண்சிறை யொடுங்கல் வாவல்
> பாங்கரிற் பழங்க டுய்ப்பப் பழவினை பரியு மென்றே"

என்றபடி, இவர்கள், 'தொங்குகின்ற உறியிலே கிடந்து காய்களையும், கனிகளையும் தின்ன, தீவினைகள் நில்லாவென எங்கட்குப் பகவனார் கூறினா'ரென்று மேற் கூறியபடியே சொல்லிக் கொண்டு தீவினை நீங்குமென்று நம்பி இவ்வாறே இக் காரியங்களைச் செய்து வர, இவர்கள் எண்ணப்படியே தீவினை கழியும் பக்ஷத்தில், ஓங்கி வளர்ந்த மரத்திலே தூங்குகின்ற வௌவால் பழங்களைத் தின்னுவதால் அதற்கும் பழவினை நீங்குமன்றோ? அஃதின்மையால் இதுவும் நிகழ்வதின்றாம். இன்னும் சிலர், 'அல்லியரிசி யுணவையும், புல்லரிசிக் கஞ்சியையும் உண்டு நிறைந்த பஞ்சாக்கினியின் மத்தியிலே நின்று தவஞ் செய்ய வெவ்வினைகள் நீங்கும் என எங்கள் பகவான் கூறினார்' என்று மனக் களங்கத்தை நீக்காமல் தவஞ் செய்து [illegible]வர்;

> "அல்லியும் புல்லு முண்டாங் காரழ லைந்து னின்று
> சொல்லிய வகையி னோற்பத் தனியும் வெவ்வினைக ளென்னி

கல்லுண்டு கடிய வெம்புங் கானுறை புறவ மெல்லாம்
புல்லிய வினைகள் வென்று புறக்கொடை காணு மன்றே."

என்றவாறு, அங்ஙனம், அவற்றை உண்டு பஞ்சாக்கினி மத்தியில் தவஞ் செய்ய வெவ்வினை நீங்கு மெனில், கல்லை யுண்டு வெம்புங் கடிய காட்டிலே தங்கு கின்ற புறாக்களெல்லாம் இருவினைகளை வென்று, அவற்றைப் புறமுதுகிட்டோடச் செய்யு மல்லவா?

இன்னும் சிலர், 'நீட்டிய சடையை யுடையவர்களாகி, நீரிலே மூழ்கி, நிலத்திற் சேர்ந்து படுத்து, உடம்பை வாடச் செய்து அதனாலே நாங்கள் மேலான கதியை அடைவோம்' என்று மனத்துறவு சிறிது மின்றி அவ்வாறே செய்து கொண்டு திரிவர்;

"நீட்டிய சடையமாகி நீர்மூழ்கி நிலத்திற் சேர்ந்து
வாட்டிய வுடம்பின் யாங்கள் வரகதி விளைத்து மென்னிற்
காட்டிடைக் காடி போகிக் கயமூழ்கிக் காட்டி னின்று
வீட்டினை விளைக்க வேண்டும் வெளிற்றுரை விடுமினென்றான்"

என்றபடி, அங்ஙனம் இவர்கள் உண்மைத் துறவின்றிச் செய்வதால் மேலான கதியை உண்டாக்கிக் கொள்வோ மென்று சொல்லும்பக்ஷத்தில், காட்டி லுள்ள காடியும், அக்காட்டினின்றும் போய்க் கயத்திலே மூழ்குவதால், மோக்ஷவீட்டைப் பெற வேண்டு மன்றோ? ஆதலின் இவை யெல்லாம் பயனற்ற வார்த்தைகளாம்.

வேறு சிலர், "அழகிய பஞ்சணை மெத்தையிற் படுப்பதை விட்டு நீங்கி இலையினால் வேயப்பட்ட சிறு குடிசையிலே நிலத்தையே படுக்கையாகக் கொண்டு குடும்பத்தோடு படுத்துறங்குவதால் இருவினைகளும் நீங்கும்" என்று சொல்லிக்கொண்டு பெண்ணாசையைச் சிறிதும் ஒழிக்காமல் அவ்வாறே செய்து திரிவர். இவர்கள் சொல்லுகிற படி மனதில் பெண்ணாசையை வைத்துக் கொண்டு இவ்வாறு செய்வதால் இருவினைகளும் நீங்கும் பக்ஷத்தில் இப்படியே குடும்பத்தோடு காட்டில் குடிசையில் தரையின்மீது படுக்கும் குறவர்க்கும் இருவினைகள் கழிய வேண்டுமே? வெள்ளை வஸ்திரத்திலே பட்டு கறையாகியிருந்த உதிரத்தை உதிரத்தினாலே போக்க வொண்ணாது! அது போல, முன் ஜென்மத்திலே ஸ்திரீகளின் பற்றினாலேற்பட்ட பாவத்தை இப்பிறப்பில் அப்பெண்களின் கூட்டுறவாலே போக்க வொண்ணாது; இன்னும்,



"நுண்டுகில் வேத லஞ்சி நெருப்பகம் பொதிந்து நோக்கிக்
கொண்டுபோய் மறைய வைத்தாற் கொந்தழல் சுடாது மாமே
கண்டத்தி னவி யார்தங் கடிமனை துறந்து காட்டுட்
பண்டைச்செய் தொழிலிற் பாவம் பறைக்குற்றாற் பறைக்க
[லாமே"

என்றபடி, நுண்மையான வஸ்திரம் நெருப்பில் வெந்து போகுமென்றஞ்சிப் பின்னும் அதற்குள்ளே நெருப்பையே பொதிந்து வைத்தால் அது வேகாமலிருக்குமோ? அதுபோல குடும்ப பந்தத்தால் பழவினை நீங்காதென்று கருதி, அதனை யொழிக்க வேண்டிக் கழுத்திலே கஸ்தூரியை யணிந்த ஸ்திரீகள் இருக்கும் இல்லத்தை மாத்திரம் விட்டு நீங்கி அவர்களுடனே காட்டிற்குச் சென்று அவர்களையும் தம்முடனே வைத்துக் கொண்டு, முன்செய்த தொழிலாற் பிறந்த பாவத்தைப் போக்க முயன்றால் அவ்வாறு போக்க முடியுமோ? ஒரு நாளும் முடியாது; மேலும் அப்பாவம் அதிகப்படும்.

ஆதலின், நற்கதி யடைய விரும்புவோர், நோய்முதிர்ந்த குரங்கைப் போல இந்தச் சிற்றின்ப நுகர்ச்சிகளை நோக்கலாகாது; காயானது பழமாகி மரத்தை விட்டு உதிர்வது போல இந்த உடம்பானது விரைவில் ஊழ்த்து வீழும். அதனால், இதனையும், இதனால் ஏற்படும் நிலையற்ற சிற்றின்பங்களையும் சதமென்றெண்ணாமல், வனத்திலே சென்று உண்மைத் துறவு பூண்டு, அனங்கனை வென்ற கடவுளுருவத்துடனே தவஞ் செய்து முத்தியின்பத்தை எப்பொழுதும் அனுபவிக்கத் தக்க முயற்சிகளையே செய்தல் வேண்டும்.

இன்னும் இருவினைகள் கழிய வேண்டு மென்றால், ஞானம், காட்சி, ஒழுக்கம் என்னும் மூன்றையும் கைக்கொள்ள வேண்டும். அம்மூன்றின் விவரமாவது:—

"மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய பொருள்கடம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சியைம் பொறியும் வாட்டி
உய்வகை யுயிரைத் தோயா தொழுகுத லொழுக்க மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே யிருவினை கழியு மென்றான்"

என்றபடி, ஞானமாவது உண்மை யறிதலாம்; காட்சியாவது அங்ஙனம் அறிந்த பொருள்களைப் பொய்யின்றாகத் தெளிதலாம்; ஒழுக்கமாவது ஐம்பொறிகளையும் ஐம்புலன்களிற் செல்லாமல் கெடுத்து, உயி

ரைக் கெடாதே அவ்வுயிர் உய்யும் வகை ஒழுகுதலாம். இம்மூன் றொழுக்கங்களும் ஒருவனிடத்தே இப்படி நிறைந்த பொழுதே இரு வினைகளும் கெடும்.

ஆதலின் உண்மையான தவத்தைச் செய்து இருவினைகளையும் நீக்கி மோக்ஷ வீட்டை யடைய இச்சிப்பவர்கள், இங்குக்கூறிய போலிமார்க்கங்களை யொழித்து உண்மை மார்க்கங்களைக் கொண்டு ஒழுகுவாராக. இது எல்லோருக்கும் உத்தமமான மார்க்கமாம். ஜீவக சிந்தாமணி கேமசரியாரிலம்பகத்தில், ஜீவகன் சில ஒழுக்கங் கெட்ட முனிவர்க்குப் புத்தி கூறியதாக வரும் செய்யுட்களிலிருந்து சார மாக இஃது எடுத்தெழுதப் பட்டது. இங்குக் காட்டப் பட்டிருக் கும் செய்யுட்களும் ஜீவக சிந்தாமணிச் செய்யுட்களே. போலித்த வசிகட்கு இவ்வுபதேசம் நன்கு அறிவுறுத்தற் பாலது.

பத்திராதிபர்.

---

## ஜீவஸ்வரூப விளக்கம்.

உலகத்திலிருக்கின்ற சீவன்கள், முத்தி சீவன்களென்றும், சம்சார சீவன் களென்றும், இரண்டு விதமாகும். அவற்றுள் ஞானாவரணீயம் (௫) தரிசனா வரணீயம் (௯) வேதநீயம் (௨) மோகநீயம் (௨௮) ஆயுஷ்யம் (௪) நாமகர்மம் (௯௩) கோத்திரகர்மம் (௨) அந்தராயம் (௫) ஆக உத்தரப்பிரகிருதி (௱௪௮) ஆகிய இந்த கர்மம் முழுதும் கெடுத்து, ஜலத்துக்கு சீதளம்போலவும், அக்கினிக்கு உஷ்ணம்போலவும், புஷ்பத்துக்கு கந்தம் போலவும், ஜீவனினின்றும் வேறு பிரிக்கக்கூடாத வைகளும், ஜீவனுக்கு சுபாவ குணங்களுமாகிய, அநந்தஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்தசுகம், அவ்வியா பாதத்துவம், அகுருலகுத்துவம், அதிசூக்ஷ்மத்துவம், அவகாகத்துவம், என்னும் ஜீவகுணங்களெட்டையும் வெற்றியினால் பெற்றுக்கொண்டு பூமியினின்றும் ஒரு சமயத்தில் மேலோங்கிப்போய் உலக உச்சியிலிருக் கின்ற தநுவாதாக்கிரத்தில் அனந்தானந்த காலத்திலும் அழிவில்லாமல் பிறப்பு, இறப்பு, மூப்பு முதலான துன்பங்களில்லாமல் சாசுவதமாயிருப்பது முத்திஜீவனாம்.

இனி சம்சாரஜீவன், திரஸஜீவனென்றும், ஸ்தாவர ஜீவனென்றும் இர ண்டுபேதமாம். அவற்றுள், திரஸஜீவன் (௫) பேதமாகும். அப்பேத ங்களில், மரம், செடி, கொடி, பூண்டு, ஆகியவை ஏகேந்திரிய ஜீவ ன்கள்; கத்தை, சிப்பி, சங்கு, முதலானவை துவிந்திரிய ஜீவன்கள். செல்லு, எறும்பு, தேள், கம்பளிப்பூச்சி, முதலியன திரிஇந்திரிய ஜீவன்கள். அந்து



தும்பி, வண்டு, முதலியவை சதுரிந்திரிய ஜீவன்கள். உடும்பு, ஓணான், பல் லி, சாரைப்பாம்பு, முதலியவை அசஞ்ஞிய பஞ்சேந்திரிய ஜீவன்கள். கரடி, புலி, பன்றி, மான், குரங்கு, பட்சி, இன்னுமுள்ள நாலுகால் மிருகங்கள், கல் ப்பட்சி, மனுஷன், தேவன், நாரகன், முதலிய ஜீவன்களெல்லாம் சஞ்ஞிய பஞ் சேந்திரிய ஜீவன்கள். ஆக திரஸ ஜீவன் அஞ்சு பேதமென்றறிக. இங்குக் கூறிய பஞ்சேந்திரிய ஜீவன்களில் தோற்செவியுடையன வெல்லாம் சஞ்ஞிய பஞ்சேந்திரிய சீவன்களென்றும், துளைச்செவி யுடைய ஜீவன்களில் சஞ் ஞியை, அசஞ்ஞியை ஆகிய இரண்டு முண்டென்றும் தெரிந்து கொள்க.

இனி, ஸ்தாவர ஜீவனும் அஞ்சு பேதமாகும்: அப்பேதங்களில் மண்ணிலே சணப்புவிரை ஆகாரமாயிருப்பது பிருத்விகாயிக ஜீவன். ஜலத்தில் பனித்திவலை ஆகாரமாயிருப்பது அப்புகாயிக ஜீவன். நெரு ப்பிலே செப்பூசி ஆகாரமாயிருப்பது தேஜஸ்காயிக ஜீவன். காற்றிலே து வஜாகாரமாயிருப்பது வாதகாயிக ஜீவன். புல், பயிர், செடி, கொடி, மரம் முதலானவை வனஸ்பதிகாயிக ஜீவன். ஆக ௫ பேதங்களாமாறுணர்க.

இவற்றுள் வனஸ்பதிகாயிக ஜீவன், பிரத்தியேக வனஸ்பதி ஜீவனென்றும், சாதாரண வனஸ்பதி ஜீவனென்றும் இரண்டு பேதங்களாகும். இவற்றில் சாதா ரண வனஸ்பதி ஜீவனுக்கு நிகோத ஜீவனென்றும் பெயருண்டு. முன்னெழுதிய பிரத்தியேக வனஸ்பதி ஜீவனானது பிரதிஷ்டித பிரத்தியேகம், அப்பிரதிஷ்டித பிரத்தியேகம் என இரண்டு பேதங்களாகும். அவற்றுள் முன்னெழுதிய நிகோ த ஜீவன்களை அனந்தானந்த ஜீவன்களுக்கு இருப்பிடமாகவுடையது பிரதிஷ் டித பிரத்தியேக சீவன். அப்படி இல்லாமல் ஒரு சீவனுக்கு ஒரு சரீரமே யுடையது அப்பிரதிஷ்டித பிரத்தியேக சீவன். இந்த எழுதிய சீவன்களுக்குப் பொதுவில் பிராணன் (௰) அவை பரிசனேந்திரியம், ரஸனேந்திரியம், கிராணே ந்திரியம், சக்ஷுரிந்திரியம், சுரோத்திரேந்திரியம் ஆக இந்திரிய பிராணன் (௫) மனோபலப் பிராணன், வாக்குபலப்பிராணன் காயபலப்பிராணன், ஆக பலப்பிராணன் (௩); உச்சுவாச நிச்சுவாசப் பிராணன் (௧); ஆயுஷ்ய பிராணன் (௧) ஆக பிராணன் (௰) ஆம். இந்தப்பத்துப் பிராணன்களில் முன்னெழுதிய ஸ்தா வர சீவனாகிய ஏகேந்திரிய சீவன்கள் அஞ்சு பேதத்துக்கும் பிராணன் (௪) அ வை: இந்திரியப்பிராணன் அஞ்சினில் பரிசனேந்திரியப்பிராணன் (௧), பலப்பி ராணன் மூன்றினில் காயபலப்பிராணன் (௧) ஆயுஷ்யப்பிராணன் (௧) உச்சுவாச நிச்சுவாசப் பிராணன் (௧) ஆக பிராணன் (௪) ஆம். முன்னெழுதியசங்கு முத லிய துவீந்திரிய சீவன்களுக்குப் பிராணன் (௬); அவை முன்னாலே ஏகேந்தி ரியத்துக்குச் சொன்னபிராணன் (௪) இந்திரியப்பிராணனில் ரசனேந்திரிய பிராணன் (௧) பலப் பிராணனில் வாக்குபலப் பிராணன் (௧) ஆகப் பிராணன் (௬).

செல்லு முதலிய திரி இந்திரிய சீவனுக்குப் பிராணன் (௭); அவை மு ன்னாலே திரிஇந்திரியத்துக்குச் சொன்னபிராணன் (௬), இந்திரியப்பிராண னில் கிராணேந்திரியப்பிராணன் (௧) ஆகப்பிராணன் (௭). அந்து, தும்பி மு தலான சதுரிந்திரிய சீவனுக்குப் பிராணன் (௮); அவை முன்னெழுதிய பி

ணன் (௭) இந்திரியப் பிராணனில் சக்ஷுரிந்திரிய பிராணன் (௧) ஆகப் பிராண ன் (௮). உடம்பு முதலிய அசஞ்ஞிய பஞ்சேந்திரிய சீவனுக்குப்பிராணன் (௯) அவை முன்னெழுதியபிராணன் (௮) சுரோத்திரேந்திரியபிராணன். (௧) ஆகப் பிராணன் (௯). காடி புலி முதலான சஞ்ஞிய பஞ்சேந்திரிய சீவனுக்குப் பிரா ணன் (௰) அவை முன்னெழுதிய பிராணன் (௯) பலப்பிராணனில் மனோபலப் பிராணன் (௧) ஆகப் பிராணன் (௰). இந்தக் கிரமத்தினால்பத்துப்பிராணன்களை யும் அறிக.

முன்னெழுதிய சீவபேதங்களில் பிறந்த பிரத்வீகாயிக சீவன், அப்புகா யிக சீவன், தேஜஸ்காயிக சீவன், வாதகாயிக சீவன், நித்திய நிகோத சீவன், சதுர்க்கதி நிகோத சீவன் ஆக ஆறு சீவனும் ஸ்தூலசூக்ஷ்மபேதத்தினால் பன் னிரண்டு பேதமாமென்று அறிந்து கொள்க.

இனி முன்னெழுதிய சீவன்களுக்கு குணஸ்தானம் (௧௪); அவை மித்தி யாதிர்ஷ்டி, சாசாதனன், மிஸ்ரன், அசம்யதன், தேசஸம்யதன், பிரமத்தன், அப்பிரமத்தன், அபூர்வ காணன், அநிவிரத்திகரணன், விரதிகன், சூக்ஷ்மசாம் பராயன், உபசாந்தகஷாயன், க்ஷீணகஷாயன், சயோகிகேவலி, அயோகி கே வலி ஆக (௧௪) ஆம். இந்த குணஸ்தானம்பதினாலில் நாலாவது குணஸ்தானத் தான் சம்மியக்திருஷ்டியாகும்; அஞ்சாவது குணஸ்தானன் சிராவக நிலையை யுடையவனாகும்; ஆறாவது குணஸ்தானன் முதல் பன்னிரண்டு குணஸ்தானன் வரைக்கும் ஜினமுனீஸ்வரராவர். பதின்மூன்றாவது பதினாலாவது ஆகிய இர ண்டு குணஸ்தானமுடையவர் சர்வஞ்ஞரான அருகராவர். மேலெழுதிய பதினா லு குணஸ்தானத்துக்கு மேற்பட்டவர் சித்தபரமேஷ்டி என்றறிந்து கொள்க.

இனி உபசமசம்மியக்தரிசனம், வேதசம்மியக் தரிசனம் க்ஷாயிக ம்மியக்தரிசனம் ஆகசம்மியக்தரிசனம் (௩); இவற்றுள் மித்தியாத் துவம், சம்மியக் மித்தியாத்துவம், சம்மியத்துவப் பிரகிருதி, அனந்தா னுபந்தி குரோதம், அனந்தானுபந்தி மானம், அனந்தானு பந்தி லோ பம், அனந்தானுபந்தி மாயை ஆகிய இந்தக்கர்மமேழும் தேற்றாங்கொட் டையினால் தேற்றின ஜலம்போல உபசமித்தால் அது உபசமசம்மிய க்தரிசனம்; சம்மியத்துவப் பிரகிருதி ஒன்றும் உதயங்கொடுத்து, மற்ற ஆறு கர்மமும் உபசமித்தால் அந்த பரிணாமம் வேதகசம்மியத்துவம்; இந்த எழுவிதகர் மமும் நாசமானால் அது க்ஷாயிக சம்மியக்தரிசனம். இப்படியே மூன்று சம்மி யக்தரிசனங்களையுமறிக. இந்த சம்மியக்தரிசனம் மூன்றினில் உபசம்மியக்த ரிசனம்பெற்ற ஜீவன் உலகத்திலுள்ள புத்கலங்களை பாதி அனுபவிக்கிற காலம் வரைக்கும் சம்சாரத்திலிருக்கும்; அதற்குமேல் முத்தியடையும். வேதக சம்மி யக் தரிசனம் பெற்ற சீவன் (௬௬) கடல்காலத்துக்குமேல் முத்தியடைந்து ாம். க்ஷாயிகசம்மியக்தரிசனம்பெற்ற சீவன் நாலுபவத்துக்குமேல் முத்தி யடையும். இது உத்கிருஷ்டத்தினாலென்று அறிக. மேலெழுதிய காலத்து க்குள்ளே முத்தியடையாவிட்டால் எழுதிய உத்கிருஷ்டகாலத்துக்குமேல் சம் சாரத்தில் இருப்பதில்லை.



இனி முன்னெழுதிய பிரத்துவிகாயிக சீவனில் காபிரத்துவி சீவனென் றும், சுத்த பிரத்துவி சீவனென்றும் இரண்டுவிதமுண்டு. அவற்றுள் கா ரத்துவி சீவனுக்கு உத்கிருஷ்ட ஆயுஷியம் ௨௨ ஆயிர வருஷமாகும்; சு பிரத்துவி சீவனுக்கு ௰௨ ஆயிர வருஷமாகும்; அப்புகாயிக சீவனுக்கு ௭-ஆயி வருஷமாகும்; தேஜஸ்காயிக சீவனுக்கு மூன்று நாள்; வாதகாயிகசீவனுக்கு ௩-ஆயிர வருஷம்; வனஸ்பதிகாயிக சீவனுக்கு ௰-ஆயிர வருஷம்; துவிந்திரிய சீவனுக்கு ௰௨-வருஷம்; திரிந்திரிய சீவனுக்கு ௪௯ நாள்; சதுரிந்திரிய சீவ னுக்கு ஆறுமாசம்; மீன்களுக்கு பூர்வகோடி வருஷம்; சமசரித சீவனுக்கு ௯ பூர்வாங்கம்; பட்சிகளுக்கு ௭௨ ஆயிர-வருஷம்; பாம்புகளுக்கு ௪௨ ஆயிர வரு ஷம்; உத்தமபோக பூமியாருக்கு அத்தாரபல்லம் ௩; மத்திம போக பூமியாருக்கு அத்தாரபல்லம் ௨; ஜகன்னியபோக பூமியாருக்கு அத்தார பல்லம் ௧; விதேகத் தாருக்கு பூர்வகோடி வருஷம். உத்தம போக பூமியில் சரீர உயரம் ௬-ஆயிரம் வில்லாகும்; மத்தியம போக பூமியில் உயரம் ௪-ஆயிரம் வில்லாகும்; ஜகன்ய போக பூமியாருக்கு உயரம் ௨-ஆயிரம் வில்லாகும்.

சீவஸ்வரூப விளக்கம் முற்றுப் பெற்றது.

குறிப்பு: கும்பகோணத்தில் வசிக்கும் வேதாரண்ணியம் அநந்த விஜய முதலியாரால் பழைய ஏட்டுப் பிரதியிலிருந்து இது எடுத்து எழுதி முன் தனி த்துண்டுப் பத்திரிகையில் அச்சிடப்பட்டது.

## பொதுக் குறிப்புகள்.

### சத்தமில்லாத இரயில்வே ஸ்டேஷன்.

இவ்வுலகத்திலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களி லெல்லாம் மிகப் பெரி யது அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கு என்னும் ஸ்டேஷனும். இதன் விஸ் தீரணம் 79 ஏக்கர். இதனைக் கட்டுவதற்கு 36 லட்சம் பவுன் செலவிடப்பட்ட தாம். இது முழுதும் சலவைக்கல்லினால் செய்யப்பட்ட தாதலின் இதனை ஓர் அரண்மனை என்றே சொல்ல வேண்டும். இது 445 அடி நீளமும், 445 அடி அகலமும், வீதி மட்டத்திலிருந்து 159 அடி உயரமும் இருக்கின்றதாம். இதில் 33 மைல் நீளமுள்ள தண்டவாளங்களும் 69 தனிப் பாதைகளும், 40 ப்ளாட் பாரங்களும்(மேடைகளும்)இருக்கின்றனவாம்.800 வண்டித்தொடர்கள் வந்து போவதற்கும், ஒரு லக்ஷம் ஜனங்கள் ஒவ்வொரு நாளும் ஏறி இறங்குவ தற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவாம். ஸ்டேஷனிலிருந்து 10 மைல் தூரத்திலேயே ஒவ்வொரு வண்டித் தொடரும் மின்சார இஞ்சினால் கொண் டுவரப்படுகின்றதாம். இங்ஙனஞ் செய்வதனால் புகையும் சத்தமும் கொஞ்ச மேனும் இல்லையாம். ஆனால் சில தென் இந்திய ரெயில்வே ஸ்டேஷன்

களில் டிக்கட் வாங்கும் பொழுது ஏற்படுகின்ற பணச்செலவும், பிராணாவஸ்தையும் இந்த ஸ்டேஷனில் இருக்கின்றனவா எனச் சிலர் கேட்கக்கூடும். அவ்வித சந்தேக முடையவர்கள் மதுரை திருச்சி முதலிய ஜங்ஷன்களிலுள்ள டிக்கட்டுண்மைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே !

## இந்தியாவில் கல்விகற்ற மாதர்களின் சங்கியை.

இந்தியா மொத்தம் மாதர்களின் சங்கியை 119273295 பிரிட்டிஷ் இந்தியாவில் 1916-17ல் செகண்டரி கல்விகற்ற மாதர்களின் சங்கியை 17652 கைத்தொழில் கல்வி கற்றவர்கள் 370. அவர்களில் 32 பெயர் பிராமணப் பெண்கள். 330 பேர் பிராமணரல்லாதார்.

## குருடர்கள் பார்க்கும் இயந்திரம்.

கிளாஸ்கோ சாவகலா சங்கத்திலுள்ள டாக்டர் பார் என்பவர் குருடர்கள் பார்த்து வாசிக்கும் படியான இயந்திரம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறார். இப்புதிய இயந்திரத்தால் படிக்கத்தெரிந்த இரண்டு குருட்டுப் பெண்கள் ஒரு நிமிஷத்துக்கு 25 வார்த்தைகள் படித்தார்களாம். காக்ஷிப் பொருள்களாக நாய்த்தலை, மான் தலை முதலிய சிற்ப வஸ்துக்களை வாங்கி யுபயோகிக்கும் பிரபுக்கள் இதுபோன்ற இயந்திரங்களைக் காக்ஷிப் பொருள்களாக உபயோகித்தால் தேசத்திற்கு நன்மையுண்டு.

## புகையிலையும் நிகோடைன் என்ற விஷ சத்தும்.

புகைக்குடிப்பதனால் புகையிலையிலுள்ள நிகோடைன் என்ற விஷ சத்தானது தேகத்தில் கலக்கின்றது, என்பதைப் பற்றிய சந்தேகம் வெகு காலமாக இருந்துகொண்டு வருகிறது. தென்னாப்பிரிக்காவில் "கெமிகல் நியூஸ்" என்ற பத்திரிகை இதைப்பற்றிச் சில சமாசாரங்கள் வெளியிட்டிருக்கின்றது. சாதாரணமாகப் புகைக் குடிப்பவர்கள் செய்வதுபோல இதற்கென்று ஒரு இயந்திரம் இயற்றப்பட்டுப் புகைக் குடிக்கும்படி செய்ததில், புகைச்சுருட்டு ஒன்றில் 20 மில்லி கிராம் அளவு நிகோடைன் என்ற விஷசத்து இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டதாம். புகைக்குடிக்கும் கருவி மூலம் மூன்றில் இரண்டு பங்கு குடிக்கப்பட்டதும் சாதாரண மனிதர்கள் புகைக் குடிப்பது போல வெளியில் தள்ளப்பட்டது. தள்ளுபடியானது போக மீதியைக் கழித்துக் கணக்குச் செய்யப்பட்டதில் நிகோடைன் என்ற சத்தில் பாதி நீக்கிரையாய் விடுவதாயும், பாதி சரீரத்தில் பிரவேசிப்பதாயும் சொல்லப்படுகின்றன. அதாவது 20 மில்லி கிராம் விஷசத்துள்ள ஒரு சுருட்டில் எரியாமல் போவதுபோக 14 மில்லி கிராம் இருக்கிறதென்றும் அதில் 7 மில்லி கிராம் சரீரத்தில் செல்லுவதாயும் கண்டு பிடிக்கப்பட்டன.

## இரத்த மழை.

இரத்த மழை பெய்வதைப்பற்றி முற்காலத்தில் எழுதப்பட்டிருப்பதைக் குறித்துச் சில குறிப்புக்கள் குறிப்பிடப்படுகின்றன. 1222-ம் வருஷத்தில் ரத்த மழை பெய்ததாயும், அதில் தூளியும், ரத்தமும் கலந்திருந்ததாகவும், செவ்வனத்துக்கிடையே சூர்யன் சிவப்பு நிறத்தில் தோன்றியதாகவும் ரோம் தேசத்து சரித்திரக்காரர்கள் எழுதியிருக்கின்றனர். 1226ல் சிரியாவில் பெய்த பனி தெருக்களில் ரத்த பிரவாக மெடுத்ததாகக் கூறுகின்றனர். இட்டாலியின் தென் பாகத்தில் ரோட்ஸ் தீவு வரை 1336-ம் வருடத்தில் மூன்று நாளைக்கு ரத்த மழை பெய்ததாகச் சொல்லப்படுகிறது.



## கையின் ஒரு அங்குலத்தில் 80000 விஷப்பூச்சிகள்.

புதிதாக ஒருவரை யொருவர் காணும் பொழுது அன்பின் அறிகுறியாகக் கைகுலுக்குவது ஐரோப்பிய நாகரிக வழக்கங்களில் ஒன்று, என்பது நம் நேயர்களுக்குத் தெரியும். ஆனால் இது சுகாதார முறைக்கு ஏற்றதல்ல வென்று ஒரு பிரபல டாக்டர் கூறுகின்றனராம். ஏனெனின் அவருடைய ஆராய்ச்சியில் "மனிதனுடைய கையின் 1 அங்குலச் சுற்றளவுக்குள் 80000 விஷப்பூச்சிகளிருக்கின்றன" என்பது விளங்கிற்றும். அவைபரவாமலிருக்க வேண்டுமாயின் அவ்வாறு செய்தலைத் தவிர்த்தல் நலம், என அவர் அபிப்பிராயப்படுகின்றனர்.

## ஓர் புதிய கண்ணாடி.

தந்தியில்லாமல் செய்தி யனுப்பும் வித்தையை சிருஷ்டித்த மார்க்கோனி என்பவரின் நண்பரொருவர் சமுத்திரத்தின் ஆழத்திலுள்ள பொருள்களை விளக்கும் ஜல திருஷ்டிக் கண்ணாடி யொன்றை உண்டுபண்ணி யிருக்கிறார். இதனால், இப்பொழுது மகா யுத்தம் காரணமாகப் பகைவரால் சமுத்திரத்தில் அமிழ்த்தப்பெற்ற பற்பல பொருள்களையும் எளிதிற் காணலாம். முத்துக் குளிப்போர்க்கும், மற்றும் சமுத்திரத்துள்ள பற்பல பொருள்களை எடுப்போர்க்கும், நீர் வாழும் பிராணி வர்க்கங்களின் உயிர் வாழ்க்கையை யறிய விரும்புவோர்க்கும் இது பேருதவியாம்!

வைசிய மித்திரன்.

## தருமசீலன் வாழ்த்து.

இசைப்பா.

இராகம்-பைரவி-ஆதி தாளம்.

பல்லவி.

சுகம் பெறலாமே—தருமசீலனை
ஜெகம் பெறலாமே.

அநுபல்லவி.

இதயமே நாடு—இந்தச் சீலனைக்கூடு
பதம் பெற்றவனைத்தேடு பஞ்சவி தங்கள் பாடு. (சுகம்)

சரணங்கள்.

செழிக்கும் ஜிநேச தருமம் சீலமார்க்கமும் இன்பம்
பழிக்கும் பவக்கடலைப் பிரமனருள் தருமம்
விழிக்கும் ஞானபார்வை விந்தை சரித்திரமர்பம்
கழிக்கும் பஞ்ச பாபத்தை யொழிக்கும் தருமசீலன். (சுகம்)

உத்தமமான தானம் உகந்திடக்களிப்புண்டு
சத்திய அபயதானம் சாஸ்திரதானமும் பூண்டு
முத்தி யவுஷதங்கள் முகமலர்ந்திடங் கொண்டு
பத்தியாய்ப் படைத்த பேர்க்கு பரமனருளு முண்டு. (சுகம்)

அஷ்டமி சதுர்த்தசி அடுக்குட னேத்திக் கொண்டு
முட்டப் பழுதில்லாமல் முடியவும் போற்றிக் கொண்டு
திட்ட சாஸ்திரப்படி ஸ்திரமாய்ச் சீலனைக் கொண்டு
அஷ்ட கன்மங்களைத் தூர விடவே கொண்டு (சுகம்)

சென்னை ஸ்ரீ ஆதிநயினார் சீலன் தர்மனைக் கண்டு
உன்னத அச்சாபீசுக் குயர் சீலனுக்குப் பண்டு
மன்னரறியப் பத்திரம் மகிழ்வாயா வரும் கொண்டு
பின்னமில் லாமலேதான் பேணல் செய் வதைக்கண்டு. (சுகம்)

பாலவனம் நகராம் பதம் செய்ய வேண்டிக் கொண்டு
சாலவும் சின்னத்தம்பி சாஸ்திரி விகிதம் கொண்டு
சீலன் விஷயமாகச் சார்ந்தார்கள் சேர்ந்து கொண்டு
காலையும் மாலையும் கனமாம் சீலனைக்கண்டு (சுகம் பெறலாமே)

வாழ்த்து விருத்தம்.

எங்கிலும் செழித்து வாழி இலகிய அன்பர் வாழி
மங்கள மிலங்கி வாழி மாமுனி வோர்கள் வாழி
எங்கினும் புகழ் படைத்த வேலாச்சாரியரும் வாழி
சங்கையில் லாமல் நன்றாய் சரஸ்வதி தேவி வாழி.

ஜோதிடம் சின்னதம்பி சாஸ்திரி.

---



இந்த ஜம்பூத் தீவத்தின் கண் பரதமென்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் பவ்வியர்களுக்கு தர்மோபதேசம் பண்ணும் பொருட்டு, தீர்த்தங்கரர் என்னும் திவ்விய நாமத்தைத் தாங்கி அவதரித்தருளிய இருபத்து நான்கு தீர்த்தங்கர பரமதேவர்களுள்

19-வது தீர்த்தங்கரராகிய

## ஸ்ரீமல்லிநாத ஸ்வாமிகள்

### அவதார விருத்தாந்த தீபிகை.

1. தீர்த்தங்கர பரமதேவநாமம் ... —ஸ்ரீமல்லி நாதசுவாமி.
2. துவிசரமபவ தேவலோகம் (இந்த அவதாரத்திற்கு முந்திப் பிறந்த இடம்) ... —பஞ்சாநுத்தர அபராஜித விமானத்திலிருந்து (பஞ்சாநுத்தர மென்பது எல்லாத் தேவருலகத்திற்கும் மேலான உலகம்.)
3. சுவர்க்காவதரண காலம் (அபராஜித விமானத்திலிருந்து கர்ப்பத்தில் பிறந்த காலம்) —சித்திரைமீ கிருஷ்ண பட்சம் பிரதமை, அசுவதி நட்சத்திரம்.
4. உத்பத்தி தேசம் ... ... —மிதிலாபுரம் என்னும் பட்டணம்.
5. கோத்திரம் ... ... ... —காசியப கோத்திரம்.
6. வம்சம் ... ... ... ... —இக்ஷுவாகு வம்சம்.
7. பிதா ... ... ... ... ... —கும்ப மஹாராஜா.
8. மாதா ... ... ... ... —பிரஜாவதி மஹாதேவி.
9. கர்ப்பாவதரண காலம் (கருப்பத்திலிருந்து பூஜநநமான காலம்) —மார்கழிமீ சுக்கில பட்சம் ஏகாதசி திதி அசுவதி நட்சத்திரம்.
10. நிறம் (சரீரத்தின் நிறம்) ... —பீதவர்ணம் (பொன்னிறம்)
11. உயரம் (சரீரத்தின் உயரம்) ... —இருபத்தைந்து வில்லு.
12. அவர் வயது (பூமியிலிருந்த காலம்) — ஐம்பத்து ஐயாயிரம் வருஷம் (நூற்று வருஷம் குறைந்த ஐம்பத்து ஐயாயிரம் என்று மகா புராணம் கூறும்.)
13. அவரது ஆச்சிரமம் ... ... —குமாராச்சிரமம் (விவாகம் இராச்சிய பாரம் முதலியவை இல்லாமலே குமாராச் சிரமத்தோடே இருந்தார்)
14. பரிநிஷ்கிரமண தேசம் (சகல பற்றையும் துறந்து தீட்சை கொண்ட தேசம்) —மிதிலாபுரத்தைச் சேர்ந்த சுவேதவனம் என்னும் உத்தியானவனம்.
15. பரிநிஷ் கிரமண காலம் (சகல பற்றையும் துறந்த காலம் —மார்கழி மாதம் சுக்கில பட்சம் ஏகாதசி அசுவதி நட்சத்திரம் அபராக்கம் (மாலைப்பொழுது.)

16. ஷடி விருட்சம் ... ... ... —அசோக மரத்தடியில்.

17. கேவலஞ் ஞானமடைந்த இடம் —சுவேதவனம்.

18. கேவலஞ் ஞானகாலம் ... ... —தை மீ கிருஷ்ண பட்சம் துவிதியை திருவாதிரை நட்சத்திரம் பூர்வாங்கம் (முற் பகல்)

19. ஸமவஸரணம் ... ... ... — மூன்றரை யோஜனை உயரம்.

20. பரிநிர்வாண தேசம் ... ... — ஸம்மேதகிரி.

21. பரிநிர்வாண காலம் ... ... —பங்குனி மீ சுக்கிலபட்சம் பஞ்சமி பரணி நட்சத்திரம் முன் இரவு.

22. தீர்த்தசந்தானகாலம் (அடுத்த தீர்த்தங்கரர் அவதாரம் வரையில் இவர் தருமம் விளங்கிவந்தகாலம்)— 54,00,000 (ஐம்பத்துநாலுலட்சம் வருஷம்.)

23. சின்னம் (அவருடைய முக்கிய அடையாளம்)—கும்பம் (கொடி குடை முதலியவைகளில் கும்பம்போல் எழுதியிருப்பது.)

24. யக்ஷன் ... ... ... ... — கேந்திரன் என்னும் யக்ஷதேவன்.

25. யக்ஷி ... ... ... ... — அஜிதா என்னும் யக்ஷிதேவி.

26. கணதரர் 28, பூர்வதரர் 550, சிக்ஷகர் 29,000, அவதிஞ்ஞானிகள் 2,200, கேவலிகள் 2,200 வைக்கிரியிகர் 2,900, மனப்பர்யஞ்ஞானிகள் 1,750, மகாவாதிகள் 1,400, ஆகத்தபோதனர்கள் 40,000, ஆர்யாங்கனைகள் 55,000, சிராவகர் 1,00,000, சிராவகிகள் 3,00,000, பேர்கள். இத்தகைய கூட்டத்தாருடன் உள்ள இவர் ஸம்மேதகிரி சிகரத்து ஆயிரம் முனிவரோடு கூட ஒருமாசம் பிரதிமாயோகதாரியாகி நின்றருளி யோகத்திரயங்களை நிரோதித்துச் சரீரத்திரயங்களை நிவாரித்து திரிலோக சூடாமணியாய் அபவர்க்க சாம்ராச்சிய பரமபதம் அடைந்தருளினர்.

குறிப்பு:— இது வேதாரணியத்திலிருந்து கும்பகோணம் வந்திருக்கும் அ. அநந்த விஜய முதலியாரால் 1902௵ மே மீ 10உ தனித்துண்டுப் பத்திரத்தில் அச்சிடப்பட்டது.

---

## பாலபோத விளக்கம்.

(முன் தொடர்ச்சி புத்தகம். 3. சஞ்சிகை. 1-பக்கம் 11.)

1. பாடங்கள் முடிந்து பள்ளிக்கூடம் விட்டவுடன் ஆசிரியருக்கு வந்தனம ...ரித்து விட்டுப் புத்தகங்களையும், எழுது பலகை முதலியவைகளையும் ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டு வெளியேற வேண்டும். வெளியேறும் போது



படிகளில் இரண்டு மூன்று படிகள் விட்டுக் கீழே குதித்து விளையாடிக்கொண்டும், பையன்களை இடித்து மோதித் தள்ளிக் கொண்டும் இறங்கக் கூடாது. அப்படி யிறங்கினால் படிக்கட்டுகளிலே வீழ்ந்து கால் கைகள் முறிவதற்கும் பல்லுடைந்து போவதற்கும், தேகம் உராய்பட்டுப் பல காயங்கள் உண்டாவதற்கும் ஏதுவாகும். ஆதலால், துஷ்டச் செய்கை யொன்றும் செய்யாமல் மெதுவாக இறங்க வேண்டும்.

12 பள்ளிக் கூடத்தை விட்டு வெளியேறியவுடன் தேகப் பயிற்சிக் கென ஏற்பட்ட விடத்திற்குப் போய்த் தேகப் பயிற்சி கற்பிக்கும் உபாத்தியாயர் சொல்லும் கிரமப்படி ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் வரையிலும் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். பின்னர் வீட்டுக்குவர வேண்டும்.

13 வீட்டிற்குத் திரும்பும் போது நேராக வீடு போய்ச் சேர்வதை விட்டுத் துஷ்டப் பிள்ளைகளுடன் சேர்ந்து கண்ட கண்ட விடங்களுக்கெல்லாம் போகக் கூடாது. கற்களை யெடுத்துப் பையன்களின் பேரிலாவது, நாய் ஆடுமாடு முதலிய ஜீவ ஜெந்துக்களின் பேரிலாவது, மரங்களின் மேலாவது எறிந்து விளையாடக் கூடாது. ஏரி, குளம், கிணறு முதலிய வற்றில் இறங்கி நீரில் குதித்து விளையாடலாகாது. நீர்ப்பாம்பு, தவளை, ஓணான், எலி, நண்டு முதலியவற்றைப் பிடித்துக் கயிற்றில் கட்டிக் கொண்டு வருத்தி விளையாடக் கூடாது. சிறிய ஜெந்துக்களையோ பெரிய ஜெந்துக்களையோ கல், தடி முதலிய வற்றால் அடித்து ஹிம்சித்துக் கொல்லலாகாது. கழுதைகளின் வாலில் ஓலை கொத்துக்களைக் கட்டி அவற்றைத் துரத்தியும், அவற்றின் மேல் ஏறியும் எருமை மாடுகளின் மீது ஏறியும் விளையாடக் கூடாது. இவற்றாலெல்லாம் மிகுந்த அபாய முண்டாகும். இப்படிப்பட்ட இழிவான விளையாட்டுக்களையும் சில பிள்ளைகள் செய்து அபாயத்திற்குள்ளாவதை நாம் நேரில் பார்க்கின்றோமாதலின் இவற்றை இங்கு விசேஷமாக எடுத்துக் கூறினோம்.

(தொடரும்)

சந்த்ரு.

---

## ஆரணி ஜைன சகோதர சங்கம்.

### மாதாந்தர நடவடிக்கைகள்.

இரௌத்திரி ௵ சித்திரை மீ 21உ கும்பகோணம்-ஸ்ரீமான் சக்கிரவர்த்தி செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ௸ சபை கூடிற்று.

உபந்நியாச விவரம்.

ஸ்ரீமான். A. D. ஜின சந்திர நயினார் அவர்கள் "ஜைன மதம்"
" B. இந்திர குமார நயினார் " "நமது மதத்தொண்டு"
" A. V. வர்த்தமான நயி[illegible] " "தானம்"

உபந்நியாசகர்கள் முறையே மேற்கண்ட விஷயங்களை உபந்நியசித்த பின்பு அக்கிராசனர் முடிவுரையில் சங்க விஷயமாகச் சில நன் மொழிகள் கூறினார்கள். பின்பு மங்கள வாழ்த்துடன் சபை கலைந்தது.

---

## அகங்காரம்.

இது, அகம்—காரம் எனப்பிரியும். இதனை ஆறாம் வேற்றுமைத் தொகையாகவும், ஏழாம் வேற்றுமைத் தொகையாகவுங் கொள்ளலாம். ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளுங்கால் 'அகத்தினது காரம்' எனவும், ஏழாம் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளுங்கால், 'அகத்திலுள்ளகாரம்' எனவும் விரியும். "வேற்றுமை மப்போய் வலி மெலி யுறழ்வும், அவ்வழி யுயிரிடை வரினியல் பும்முள" என்ற நன்னூல், மெய்யீற்றுப் புணரியல் 17-ஆம் சூத்திரத்தில், 'வலி மெலி யுறழ்வும்' என்றது பற்றி, வேற்றுமைப் புணர்ச்சியாகிய இதில் அகம் என்பதனீற்றிலுள்ள மகரம் கெட்டு ஙகர மெல்லொற்று மிக்கு அகஙகாரம் என வந்தது. அகம்—மனம், காரம்—உறைப்பு. இன்னும் காரம் என்பதற்கு உறைப்புங் கொடுமையான சேர்வை, கார்த்தல், ... என்பனவும் பொருள்களாம். ஆதலின், அகங்காரம் என்பதற்கு, 'மனத்திலுள்ள உறைப்பான ... கொடுமை என்று பொருள் படும். அதாவது மனத்திலுண்டாகும் கருவமாம். ... மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் உட்கரணங்கள் நான்கிலொன்று. "மனமான செயல் நினைக்கும் புத்தி விசாரிக்கும் அகங்கார கொண்டெழுப்புஞ் சித்த மொன்று விக்கும்" என்றபடி இந்த நான்கு காரணங்களில் மனமானது ஒரு செய்கையைப் பற்றி நினைக்கும்; புத்தி யானது அதைச் செய்யலாமா செய்யக் கூடாதா என்று ஆராயும்; அகங்காரமானது அதைச் செய்யலா மென்று கிளப்பிவிடும்; சித்தமானது அதனை முடிவுக்குக் கொண்டு வரும். இந்தக் கிரமப்படி இவை நான்கும் ஒன்று சேர்ந்து தான் ஒரு காரியம் நிகழ வேண்டும். இந்த நான்கும் உள்ள வரையில் உலக காரியங்கள் நடைபெறும்; இவை ஒடுங்கின நிலையில் யோகங் கை கூடி முத்திக்கு வழி யுண்டாகும். இங்கு கூறிய நான்கனுள்ளும் அகங்காரந்தான் மிக்க வலிமை யுடையது, பொல்லாதது, ஆத்மாவை மறைத்து உடலையே நான் என்று மதிக்கச் செய்வது, பிறவிக்கு மூலகாரணமானது. இஃதின்றேல் மற்ற மூன்றுக்கும் சிறப்பில்லை. இஃதொழிந்தால் மாத்திரந்தான் மற்ற மூன்றும் ஒழியும். இது நல்ல காரியங்களிலும் ஏற்படும் கெட்ட காரியங்களிலும் ஏற்படும். எப்படி யிருந்தாலும் இது பிறவிக்கு வித்தாதலால் இதனை அடியோடு ஒழித்து விடுதலே நன்றாம். இதனை யொழித்தவரே மேற்கதிக்காளாவர்.

இவ்வகங்காரமானது இவ்வாறு கெட்டதாயும் நீக்கத் தக்கதாயு மிருந்தாலும் இதனை உலகத்தில் நீக்குவார் அகப்படுவது அருமையினு மருமை. இஃது ஒருவரையும் விடுவதில்லை. ஒவ்வொரு ... வெண இதுபிடித்துப் பித்தரைப்போல



ஆட்டி வைத்துக்கொண்டே யிருக்கிறது. கருவி கரணாதிகளை யெல்லாமொடுக்கி யோகஞ் செய்பவர்கள் தவிர மற்றஎல்லோரிடத்திலும் இஃதான் ... நல்லவரிடத்தும் நீங்குவதில்லை கெட்ட வரிடத்தும் நீங்குவ தில்லை. சிற... சக்கரவர்த்திகளும் தமக்கு மிஞ்சி அரசு செலுத்துவா ரொருவரு மிலர் என்... அகங்கரிக்கின்றனர்; கொடுங்கோல் மன்னவரும் தாங்கள் கௌரவத்துட... அரசு செலுத்துவதாக நினைத்துக் கருவ மடைகின்றனர்; சிற்றரசர்களும் த... க்கு மிஞ்சியவரில்லை யென்று செருக்குகிறார்கள்; கோடீஸ்வரரும் தாமே உல... த்தில் சிறந்தவரென்று நினைக்கின்றனர்; இலட்சாதிபதிகளும் அவ்வகே... நினைக்கின்றனர்; அதற்குக் குறைந்த பணக்காரரும் அப்படியே அகக்கரு... மடைகின்றார்கள்; அளவற்ற நிலங்களைப் பயிரிடும் பெரிய சமுசாரியும் தன... கும்மிஞ்சி வேளாண்மை செய்வாரில்லையென்று நினைக்கிறான்; ஏழைக்குடித்தன... காரனும் அப்படியே நினைக்கிறான். பெரிய வியாபாரியும் செருக்குகிறான் பழக்கூடை தூக்கி விற்கும் பாமரனும் செருக்குகிறான்; வைத்தியம் தெரிந்... வரும் தமக்கு மிஞ்சிய வைத்தியரில்லை யென்றும், தம் மருந்துகளைப் பே... ன்ற மருந்துகள் உலகத்தில் எங்குமே இல்லை யென்றும், வருவார் போவாரிட... மெல்லாம் தற்பெருமை பேசுதலையே வேலையாகக் கொண்டு உத்தமர்க் குற்... துயரை நீக்க ஒரு சிறிதும் எண்ணாமல் நாளெல்லாம் வீணாகக்கழிய நேர... தைப் போக்கி அளவற்ற அகங்காரத்தை அடைகின்றனர். வைத்தியந் தெ... யாதவனும் அவ்வாறே செருக்குகிறான்; சங்கீதந் தெரிந்தவனும் செருக்... கிறான்; அது தெரியாத அபசுரக் குடுக்கையும் செருக்கடைகிறான்; பதிவிரதை... யும் அகங்கரிக்கிறாள்; பரத்தையும் ஏதோ சிறந்தவள் போல் கருவ முறுகிறா... தன்தாரா தார பாதிரா புத்திரனுயிருக்கும் உத்தமனும் தன்னுடைய நற் குண... தைப் பற்றிக் கருவங் கொள்கின்றான்; தூர்த்தனும் எதிலோ சிறந்தவன் போல்... செருக்கடைகிறான்; பொருளாசை யற்றவனும் செருக்கடைகிறான்; தி... னும் தன் தொழிலை வியந்து பேசுகிறான்; தரும குணமுடையவனும் செ... கடைகிறான்; உலோபியும் தன்னை நிகர்ப்பா ரெவருமில்லை யென்கின்றா... மன்மதனைப் போன்ற அழகுடையவனும் அகங்காரம் கொள்கின்றான்; குஷ்... ரோகியும் ஏதோ சிறந்தவன் போல் பேசுகிறான்; உலகத்தைத் துறந்... தவஞ் செய்யச் சென்ற சாதுவும் தன்னைப் போல் தவஞ் செய்வாரெவ... மில்லை யென்று பெருமை யடிக்கிறான்; பிச்சை யெடுக்கும் பரதே... சியும் தன் தொழிலை வியந்து பேசுகிறான்; குப்பை யெடுக்கும் குற... னும் தன் தொழிலைப்பற்றித் தற்பெருமை கொண்டு பேசுகிறான்; நன்மை... தீமைகளைப் பாகுபடுத்தி உலகத்திற்குதவியாக நூல் செய்யத்தக்க வித்வான்... களைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை. உலகத்திலுண்டான அகங்கார... முழுதும் திரண்டு இவர்களிடத்திற்றான் குடியேறி யிருக்கின்றது. இவர்களி... நன்றாய்ப் படித்தவர்களுக்கு ஒரு பங்கு செருக்கிருந்தால் படிக்காத போலிக... க்கு நூறுபங்கிருக்கின்றது; இவர்கள் தங்கள் குற்றத்தைச் சிறிதும் கவனியா... மலும் பிறர் சொல்வதைக் கேளாமலும் அளவற்ற அகங்காரங்கொள்வர்; இத...

யரிற் சிலர் அகங்காரம் முதலிய துர்க்குணங்கள் கூடாவென உலகத்தார் நுப் புத்தி கூறிக்கொண்டே தாங்கள் அகங்கார பொக்கிஷமாகவே யிருப்பார் ர்.

இப்படி எல்லோரையும் விடாமல் பற்றிக்கொண்டிருக்கும் இந்த அகங்கா த்தால் ஏதேனும் பயனுண்டாவென்று ஆராய்ந்து பார்த்தால் ஒரு பிரயோச முமில்லை; பிறவிப்பிணியிற் சிக்கிக்கிடந்து உழல்வதே இதன் பிரயோசன ாயிருக்கின்றது. அகங்காரங்கொள்வதற்கு மனிதரிடத்தில் ஏதேனும் பெரி சத்தியாவது இருக்கின்றதா என்று ஆராய்ந்து பார்த்தால் ஒன்றுமிருப்பதாக தெரியவில்லை. மனிதருடைய நிலைமையோ மிகவும் அபாயகரமானது; ாழ்ந்தது. மனிதன் தாகத்திற்கு நீரருந்தும்போது விக்கிக்கொண்டாலும் யிர்போய்விடுகிறது. ஒரு கவளம் சாதம் விக்கினாலும் மரணம் வந்துவிடுகி றது. வீட்டிலிருக்கும்போதே ஒரு செங்கல் இடிந்து விழுந்தாலும் அபாய ஏற்படுகிறது. பாம்பு கடித்தால் மரணம் தலைமேலிருக்கின்றது. ஒரு மாடு த்தினாலும் மனிதன் இறந்து விடுகிறான்; புலியடித்தாலும் சாகிறான்; குதி ை உதைத்தாலும் சாகிறான்; வண்டியிலிருந்து கீழேவிழுந்தாலும் சாகிறான்; டியாலும் சாகிறான்; காற்றாலும் சாகிறான்; மழையாலும் சாகிறான்; மூட்டு பூச்சி கடித்தால் மனிதனால் அவ்வுபத்திரவத்தை நீக்கிக்கொள்ள முடியவில்லை; காசு கடித்தாலும் அப்படியே; இவை மனிதனை இராமுழுதும் தூக்கத்தை ழந்திருக்கும்படி செய்துவிடுகின்றன. இவற்றினிடம் மனிதன் சாமர்த்தி ம் ஒன்றுமே செல்லவில்லை; சக்கரவர்த்திகளானாலும் இவற்றிற்கடங்கித்தா ன் நடக்கவேண்டும். இன்னும் பறவைகள் ஆகாயத்திற் பறக்கின்றன; மீன் முதலியவைகள் நீரில் நீந்துகின்றன; சில ஜெந்துக்கள் ஆயிரக்கணக்கான வருஷங்கள் வரை ஜீவிக்கின்றன; சில செடிகளின் இலைகள் போனவுயிரை மீட்கின்றன. இத்தகைய சாமர்த்தியங்களில் இம்மியளவேனும் மனிதனி டத்தில் இல்லை. இவ்வாறு ஒரு திராணியுமற்ற மனிதர்க்கு ஏனோ அகங்காரம்! மனிதனுடைய அகங்காரம் ஒழிந்து அவன் மேற்கதியை அடைவதற்காகவே கடவுள் இவ்வாறு அவனுக்குப் பலவிதத்திலும் சக்தியைக் குறைத்திருக்கின் றார். இப்படிக் குறைத்திருந்துங்கூட மனிதர்க்குப் புத்திவருவதில்லை. இவர் கள் வீணே அகங்காரங்கொண்டழிகின்றனர். இவற்றையெல்லாம் ஆராய் ந்துபார்த்தால் ஒருவருமே செருக்குக்கொள்ளமாட்டார்கள். ஆதலின், நற்கதி யடைய நாடுவோர் இந்த அற்பகுணமாகிய அகங்காரத்தை அறவேயொழித்து அடக்கத்தைப்பெறுவாராக.

> "அடக்கம் அமருளுய்க்கும் அடங்காமை
> ஆரிருளுய்த்து விடும்"

என்பது தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் வாக்கு.

இங்ஙனம்,

வி. ஆறுமுகஞ் சேர்வை.



# தருமசீலன் அநுபந்தம்.

## ஸ்ரீ ஜைன சகோதர சங்கத்தின் முதல் வருடாந்திர நடவடிக்கைகளின் அறிக்கைப் பத்திரம்.

### சங்கத்தின் சரிதம்.

சென்ற கானயுக்தி௵ தைமீ 2௳ மாட்டுப் பொங்கல் தினத்தன்று "ஜைன மாணவர் சங்கம்" என்ற ஓர் சங்கம் ஏற்படுத்துவதாக நிச்சயித்து அதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

ஆனால் எதிர் பாராத அசந்தர்ப்பங்களால் அது செய்யத் தடைபட்டு பிறகு அது முதற்கொண்டு சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற அவா எல்லோருக்கும் குடிகொண்டிருந்ததின் பலனாகச் சென்ற சித்தார்த்தி௵ சித்திரை மீ 20௳ அக்ஷய திரிதியை புண்ணியதினத்தன்று கடவுள் கிருபையினால் இ சகோதர சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

அன்று தொடங்கி இன்றுவரையில் இச்சங்கம் செவ்வனே நடந்து வருகின்றது.

### சங்கத்தின் நோக்கங்கள்.

1. சமத்துவம் & சகோதரத்வத்தைப் பரவச்செய்தல்.
2. நம்மதக் கல்வி கேள்விகளை விருத்தி செய்தல், கடவுள் பற்றில் நம்மவரை முதிர்ச்சியடையச் செய்தல்.
3. மார்க்கப்பிரபாவனை செய்தல்.
4. வெளிவராத ஜைன நூல்களை அச்சுவாகனமேற்றி வெளிவரச் செய்தல்.

### நிர்வாக சபையினர்.

ஸ்ரீமான் திருவேங்கிய நைனார் அவர்கள், கௌரவ அக்கிராசனாதிபதி.
,, பொன்னையவாத்தியார் அவர்கள் அக்கிராசனாதிபதி.
,, C. சொர்ண பத்திர நைனார் அவர்கள்
,, A. B. சந்திரநாத நைனார் ,,
,, P. அய்யண்ண நைனார் ,,
,, A.D. சமந்தபத்திர நைனார் ,,
,, குணபால நைனார் ,,
} உப அக்கிராசனாதிபதிகள்.

ஸ்ரீமான் D. ஜெய கீர்த்தி நைனார் அவர்கள் காரிய தரிசி.

| | | |
|---|---|---|
| ,, | P. J. யசோதர நைனார் அவர்கள் | உப காரிய தரிசிகள். |
| ,, | B. இந்திரகுமார நைனார் ,, | |
| ,, | A. V. வர்த்தமானன் ,, | |
| ,, | A. D. ஜினசந்திர நைனார் ,, | |
| ,, | P. சமந்த பத்திர நைனார் அவர்கள் | பொக்கிஷதாரர்கள். |
| ,, | S. பார்சுவநாத பண்டிதர் ,, | |

ஆரம்ப கொண்டாட்ட நடவடிக்கைகளும்,

விசேட உபன்யாசங்களும்,

மாதாந்திர மீட்டிங்குகளும்:—

இவை அவ்வப்போது தருமசீலனில் வெளிவந்திருக்கின்றன.

## இவ்வாண்டு நடைபெற்ற புண்ய காலச்செயல்கள்.

ஐப்பசி௴ 5௳ தீபாவளிக் கொண்டாட்டம்; அபராயாமத்தில் ஸ்ரீ வாதத்ரன ஸ்வாமிக்கு அபிஷேக அஷ்ட விதார்ச்சனையும் ஸ்ரீ ூத குரு பூஜையும், சயத் யாலயத்தை தீபங்களால் அலங்கரித்து மகா அர்க்கிய மெடுத்து தீபாதனையும் செய்யப் பட்டன.

தை௴ 1௳ உத்தராயண புண்ணிய காலத்தன்று பிராதக் காலத்தில் ஸ்ரீ ...கேஸ்வாருக்கு பூஜை நடந்தது.

தை௴ 3௳ ஸ்ரீ சைலபுர மென்னும் திருமலை கிராமத்தில் ஸ்ரீ சிகாமணி ...தர் உற்சவத்தில் சாரணத் தொழில் செய்யப்பட்டு அன்றிரவு சபை கூட்டப்பட்டது.

தை௴ 5௳ ஸ்ரீ சொர்ண பூண்டி கிராமத்தில் நடந்த மஹா பூஜைக்கும், ...த்ஸவத்திற்கும், சாரணர் வேலைகள் செய்து சபை கூட்டப்பட்டது.

தை௴ 6௳ இவ்வூர் மண்டிக்காரர்களின் பொருள் உதவியால் ஸ்ரீ விரு...ப தீர்த்தங்காருக்கு ஸ்ரீ விஹார மஹோத்சவமும், செண்டலங்கார நைனார் ...சன்ஸ் மண்டியில் ஸ்வாமியை ஸ்தாபிதம் பண்ணி சங்கீத ரூபமாக அஷ்டவி...ார்ச்சனையும், தீபாராதனையும் செய்யப்பட்டன. பிறகு 4-மணிக்கு சுவாமியை ...சைத்யாலய மடைவித்து சுவாமிக்கு நவகலச கடங்களினால் அபிஷேகமும், ...ஜையும் நடத்தப் பட்டன.

## சங்க ஆலோசனை சபைகள்.

வைகாசி௴ 17௳ சங்கத்திற்கு அவசியமான சில விதிகளை ஏற்படுத்தவும், புரட்டாசி௴ 17௳ புத்தக சாலை ஏற்படுத்துவதற்கும், புரட்டாசி௴ 27௳ தீபா...வளி பண்டிகை கொண்டாடுவதற்கும், ஸ்வஸ்தி ஸ்ரீ நேமி சாகரவர்ணி சுவாமி...களவர்களை வர வேற்பதற்காகவும், சங்க ஒழுங்குகளைப் பற்றி ஆலோசிப்பதற்...கவும் மன்று ஆலோசனை சபைகள் கூடின.



## புத்தகாலயம்.

சென்ற ஐப்பசி௴ 22௳ ஸ்வஸ்தி ஸ்ரீ நேமி சாகரவர்ணி ஸ்வாமியார் அவர்களால் ஸ்ரீ சாரதாசதனம் என்னுமோர் புத்தக நிலயம் திறந்து வைக்கப்பட்டது. அவ்வமயம் தேவமான்ய தேவ ஸ்ரீ ஸ்வாமிகள் தமிழில் புத்தகாலயத்தின் அவசியத்தைப்பற்றி வெகு விரிவாகத் தமிழில் ஓர் வியாசம் வாசித்தார்கள்.

## புத்தக பிரசாரம்.

1. ஸ்ரீ அவிரோதிநாதர் அருளிச்செய்த திருமலை பத்தும் பதிகம் என்னும் ஓர் புத்தகம் திருமலை ஸ்ரீமான் A. சிகாமணி சாஸ்திரியார் அவர்களின் பொருளுதவியினால் சங்கத்தின் 1-வது பிரசுரமாகப் பிரசுரிக்கப் பட்டது.

அதன் விலை 0—0—6 பை

2. ஸ்ரீ தேவராஜ முனிவரால் இயற்றப்பட்ட ஜினேந்திர ஞானத் திருப்புகழ் என்னும் ஓர் அரிய நூல் சங்கத்தின் 2-வது பிரசுரமாக அச்சிடப் பட்டிருக்கின்றது.

அதன் விலை அணா 8.

இன்னும் நம்மதக் கிரந்தங்கள் சிலவற்றை அச்சிடுவதாக நாம் உத்தேசித்திருக்கிறோம். அதற்கு கனவான்கள் பொருளுதவி செய்யின் நலமாயிருக்கும்.

## பிற விஷயங்கள்.

### நன்றி தெரிவித்தல்.

சபைக்கு வேண்டும் போதெல்லாம் உபசாயம் செய்த பெரியோர்கட்கும், பொருள் கொடுத்து வந்த புண்ணியர்களுக்கும் காயத்தொண்டு செய்து வந்த அன்பர்கட்கும், மனமார்ந்த நன்றி யறிதலைச் சபையார் செலுத்துகின்றனர்.

## புத்தகாலயத்திற்குப் பொருள் உதவி செய்த கனவான்கள்:—

| | | | |
|---|---|---|---|
| ம-௱-௱-ஸ்ரீ | A. தனதேவ நைனார் | அவர்கள் | 5—0—0 |
| ,, | C. சக்கரவர்த்தி நைனார் | ,, | 5—0—0 |
| ,, | செண்டலங்கார நைனார் & சன்ஸ் | ,, | 5—0—0 |
| ,, | K. ராமநாத நைனார் | ,, | 3—0—0 |
| ,, | பாகுபலி நைனார் | ,, | 1—0—0 |
| ,, | பா. பார்ஸ்வநாத நைனார் | ,, | 1—0—0 |
| ,, | தேசூர் A. பத்திரபாகு நைனார் | ,, | 4—0—0 |
| ,, | தரணேந்திர நைனார் | ,, | 2—0—0 |
| ,, | ஸ்ரேயாங் குமார நைனார் | ,, | 1—0—0 |
| ,, | எரும்பூர் சின்னத்தம்பி நைனார் | ,, | 0—8—[illegible] |

| | | |
|---|---|---|
| ,, | போ அனந்த நைனர் ,, | 1—0—0 |
| ,, | கோடி புஷ்பநாத நைனர் ,, | 0—8—0 |
| ,, | M. மல்லிநாத நைனர் ,, | 1—0—0 |
| ,, | ஆதிநாத உபாத்தியாயர் ,, | 1—0—0 |
| ,, | பார்ஸ்வநாத பண்டிதர் ,, | 3—0—0 |
| ,, | தே. த. அப்பாண்டை நைனர் ,, ... | 2—0—0 |
| ,, | அ. குணபால நைனர் ,, ... | 1—0—0 |
| ,, | ம. முனிபத்திர நைனர் ,, ... | 1—0—0 |
| ,, | விருஷபநாத நைனர். ,, ... | 1—[illegible]—0 |
| ,, | விஜயபால நைனர் ,, ... | 1—0—0 |
| ,, | காம்பலூர் முனிபத்திர நைனர் ... | 3—0—0 |
| ,, | தி. சிம்மசந்திர நைனர் ,, ... | 1—0—0 |
| ,, | D. ஜெயகீர்த்தி நைனர் ,, ... | 1—0—0 |
| ,, | மணியம் ஜயேந்திர நைனர் ,, ... | 1—0—0 |
| ,, | காம்பலூர் சக்கிரவர்த்தி நைனர் ... | 2—0—0 |
| ,, | சு. பார்ஸ்வநாத நைனர் ,, ... | 1—0—0 |
| ,, | கே. அனந்தநாத நைனர் ,, ... | 1—0—0 |
| ,, | உ. முனிபத்திர நைனர் ,, ... | 0—8—0 |
| ,, | காம்பலூர் சந்திரநாத நைனர் ,, ... | 3—0—0 |
| ம-ள-ஸ்ரீ | தேசூர் ஆதிநாத நயினர் அவர்கள் ... | 2—0—0 |
| ,, | ஷை கு. தேவபால நயினர் ,, ... | 1—0—0 |
| ,, | ஷை ராஜமாணிக்க செட்டியார் ,, ... | 2—0—0 |
| ,, | S. பொன்னைய நயினர் ,, ... | 0—8—0 |
| ,, | மோட்டூர் தீபநாத நயினர் ,, ... | 1—0—0 |
| ,, | ஷை முனிபத்திர நயினர் ,, ... | 2—0—0 |
| ,, | ஷை சொர்ணபத்திர நயினர் ,, ... | 2—0—0 |
| ,, | நகரம் மாணிக்க முதலியார் ,, ... | 1—0—0 |
| ,, | நேத்திரப்பாக்கம் லோகநாத நயினர் | 2—0—0 |
| ,, | ஷை முனிபத்திர நயினர் ,, | 1—0—0 |
| ,, | ஷை பார்ஸ்வநாத நயினர் ,, | 1—0—0 |
| ,, | ஷை பாபு உபாத்தியாயர் ,, | 1—0—0 |



| | | |
|---|---|---|
| ,, | A. C. இராமனுஜ நயினர் மணியம் ஆரணி ,, | 1—0— |
| ,, | செல்லபெருமாள் நயினர் ,, | 0—4— |
| ,, | ராட்டணமங்கலம் அப்பாவு நயினர் | 3—0— |
| ,, | சேரி சிகாமணி நயினர் ,, | 3—0— |
| ,, | விஸ்வநாத நயினர் ,, | 3—0— |
| ,, | சின்னக்குழந்தை நயினர் ,, | 2—0— |
| ,, | விமலநாத நயினர் ,, | 1—0—0 |
| ,, | அப்பாசாமி நயினர் ,, | 0—8—0 |
| ,, | P. அய்யண்ண நயினர் ,, | 1—0—0 |
| ,, | காம்பலூர் சின்னத்தம்பி நயினர் | 2—0—0 |
| ,, | நெ. பொன்னைய நயினர் ,, | 2—0—0 |
| ,, | சேரி ஜினதாஸ நயினர் ,, | 1—0—0 |

,, A. தனதேவ நயினர் அவர்கள் அடிதண்டா நன்கொடையளித்தார்கள்.

,, சேரி மணியம் அய்யம்பெருமாள் நயினர் அவர்கள் 4 பலகைகள் சதவிற்காக நன்கொடை அளித்தார்கள்.

,, தே. த. அப்பாண்டை நயினர் அவர்கள் அட்டத்திற்காக ஒரு வரிசைக்கு ... ... ... ரூ. 2—0—

,, தே. த. சொர்ணபத்திர நயினர் அவர்கள் அட்டத்திற்காக ... ... ... ... ரூ. 2—0—

ஷை நிதிக்காக சொஸ்திஸ் ஸ்ரீமன் நேமிசாகரவர்ணி சுவாமியார் அவர்கள் ... ... ரூ. 5—0—

திருப்பறம்பூர் சொஸ்திஸ் ஸ்ரீமன் தருமசாகர சுவாமிகள். ... ... ... ... ரூ. 0—8—0

அண்ணமங்கலம் சொஸ்திஸ் ஸ்ரீமன் ஸ்வாமிகள் ரூ. 0—8—0

புத்தூர் ஷை ஷை ரூ. 0—8—0

## புத்தகாலயத்திற்கு புத்தகம் வாங்கி வைக்க நிதி கொடுத்தவர்கள்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீமதி | வ. குணமாலை அம்மாள் ... ... | 5—0—0 |
| ,, | ச. வசந்தலை அம்மாள் ... ... | 6—0—0 |
| ,, | தி. ஜோதிர்மாலை அம்மாள் ... ... | 1—0—0 |
| ,, | ப. லக்ஷ்மிமதி அம்மாள் ... ... | 5—0—0 |

## [illegible]ங்கள் வீட்டு விசேஷகாலங்களில் நன்கொடை அளித்த கனவான்கள்.

| | | |
|---|---|---|
| ம-ள-ஸ்ரீ | சொர்ணபத்திர நயினர் அவர்கள் ... ... | 2—0—0 |
| ,, | தே. த. அப்பாண்டை நயினர் ... ... | 2—0— |

| | | |
|---|---|---|
| „ | சேத்தப்பாக்கம் ஜெயராவ் நயினார் ... | 1—0—0 |
| „ | ஷெ பெண் வீட்டுக்காரர்கள் ... | 0—4—0 |
| „ | போ. அனந்தநைனுர் அவர்கள்... ... | 5—0—0 |
| „ | மோட்டூர் சொர்ணபத்திர நயினுர் ... | 1—0—0 |

புத்தக நன்கொடை யளித்தவர்கள்.

ம-ா-ஸ்ரீ சென்னை வஜ்ஜிரபாகு நயினுர் அவர்கள் ஜீவகசிந்தாமணி மூலமும் உரையும்.

சங்க அங்கத்தினர்.

---

## தவாவுல் ஹயாத் என்னும் சுகஜீவி லேகியம்.

இது ஒரு அபுரூபமான மருந்து. இரண்டு மூன்று வேளை உபயோகிப்பதனுலேயே இதன் விசேஷ குணத்தை அறிந்து கொள்ளலாம்!

இது நீர்த்துப் போன இரத்த சத்தைக் கெட்டிப் படுததும்; நல்ல வீரத் தன்மை யுண்டாக்கும்; சந்தான விருத்தியைத் தரும். பிருதுவாகித் தளர்ச்சியடைந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்திவிடும். தேகத்திற்கு வலுவேற்றிக் கைகாலசதி, இடுப்பு நோய், தேக உளைச்சல், சோம்பல் முதலியவைகளை நீக்கிச் சௌக்கியமாக்கும். மேலேகூறப் பட்டுள்ள வியாதிகளில்லாத பேர்களும், தேகதிடகாத்தித்திற்காக இதைச் சாப்பிடலாம். இது மூலிகைப் பிரயோகமானதால் தேகத்திற்கு யாதொரு கெடுதியும் செய்யாது. இதில் பிரமையடையாதார் ஒருவருமிரார். ஏனெனில் இம்மருந்தைச் சாப்பிட்டபின் இல்வாழ்க்கையில் ஒரு நூதனமான இன்பம் உண்டாகும். இக்குணம் இம்மருந்தில் அமைந்திருப்பது மஹா ஆச்சரியத்தைத் தரும்.

12-நாள் மருந்து டப்பி 1-க்கு ரூ. 1—8—0

24-நாள் மருந்து டப்பி 1-க்கு ரூ. 3—0—0

விலாசம்:—

ஹக்கீம் குலாம் தஸ்தகீர் சாகிபு,

14. அப்பு மேஸ்திரி தெரு, மாபூஸ்கான் தேவ்டி,

மதராஸ்

ஓம்

ஸ்ரீ ஜிநாயநம:

# தரும சீ[illegible]

OFFICE OF ... 2- NOV 1920 MADRAS

“ அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. ”

(All Rights Reserved.)

புத்தகம் 3 } இரௌத்திரி௵ ஆடி௴ 1920௵ ஜுலை௴ { சஞ்சிகை 4

## தருமோபதேசம்.

எண்சீர்க் கழிநெடி லடி யாசிரிய விருத்தம்.

நல்லோர்கள் தரும நிலைத் தோங்கு மாறு
நவையில்லாச் சாத்திரவுட் பொருள்க டம்மை
எல்லோரு மறியவெடுத் துரைக்கும் போது
இந்நெறியா லொழுக்கங்கள் வளரப் பெற்றுக்
கல்லாரு மறிவுபெற்று வாழ்வா ரென்று
கருதாம லிதையெதற்கா வெழுத வேண்டும்
பல்லோர்க்குந் தெரிந்ததிது தானே யென்று
பகர்ந்திடுவோர் மனிதரிலே பதரா வாரே. (ச

தன்னிடத்தி லுள்ளகுற்றந் தனை யெடுத்துத்
தக்கோர்கள் சாற்றிடும்போ தடங்கிக் கேட்டு
நன்னடக்கை தனிற்றிரும்ப நாடி டாமல்
நவைசேரு மனத்திலகங் காரங் கொண்டு
என்னிடத்திற் குறையிலைநான் செய்வ தெல்லாம்
ஏற்றதுவே யெனக்கெல்லாந் தெரியு மென்று
அன்னவர்சொல் லெடுத்தெறிந்து பேசு வோனை
அடங்காத மிருகமென வறையலாமே. (சச

பூமியிலே படிந்திடுமா பாசத் தோடு
புழுநெளிகு சேற்றினிலே புரளு மாறு
தோமில்லா வாடையிழு படவே கட்டிச்
சொகுசுடனே குலுக்கிநடந் திடுவோ ரெல்லாம்
தாமிதமி லாதுசுடு காட்டில் வீழ்ந்து
தடித்தனமாப் புரளுகின்ற கழுதை யாவார்
சாமியிவர்க் கெப்போதுந் துணையே செய்யார்
சாவுவந்தா லிவர்சொகுசு சாற்றொ ணாதே. (சரு

# தருமசீலன்.

இரௌத்திரி௵ ஆடி௴

## குதர்க்கம் அனர்த்த மூலம்.

மூ குதர்க்க மென்பது, அறிஞர்களோ, சாஸ்திரங்களோ கூறும்
ன் மொழிகளின் உண்மைப் பொருள்களைக் கண்டு சந்தோஷித்து
னத்திற் கொண்டு அவற்றின் படி நடக்கப் பிரயத்தனப் படாமல்,
அவற்றிற் கெல்லாம் சிறிதும் பொருத்த மற்ற எதிர் மொழிகளை
மனம் போனபடி பேசுதலாம். மனத்தில் அகங்கார மொடுங்காம
லும், கல்வி ஞானம் சிறிது மில்லாமலும், உலக இயல் இன்ன தென்
றே உணராமலும், நல்லது கெட்டது தெரியாமலும், பகுத்தறிவு
ம் சிறிது மில்லாமலும், தங்கள் அவிவேகக் கொள்கையையே தங்க
ிடம் நிறைந்த கல்வி யென்று கருதி யிருக்கும் பேதைக ளெவரோ
வரிடத்திலேயே இந்தக் குதர்க்க மென்பது பெரும்பாலும் பொரு
ந் தி யிருக்கும். இன்னும், கற்றவர் போல் எதை யெதையோ ஒரு
ிக் கொண்டு தங்கள் அவிவேகத்தை எங்கும் விளங்கச் செய்வ
ல் இவர்கள் கற்றறி மோழைக ளென்றும் கூறப்படுவர். சில
ல்களைப் படித்திருந்தாலுங் கூட உண்மை யறிவில்லாமல் இவ்
வாரு செய்யுட்களுக்கும் மனம் போன படி விபரீத அருத்தங்க
ளைக் கூறிக்கொண்டு திரிவோரும் குதர்க்கிகளே யாவர். இந்தக்
குணந்தான் கல்வி மூடமென்று சொல்லப்படுவது. கல்வியில் உண்
மை ஞான மென்றும், விபரீத ஞான மென்றும் இரண்டு உண்டா
கும். இவற்றுள் விவேகிகள் உண்மை ஞானத்தைக் கைக் கொள்
வார்கள்; அவிவேகிகள் விபரீத ஞானத்தைக் கொள்வார்கள். உண்மை
ஞானத்தைக் கொள்வது தான் படித்ததற்கு லக்ஷணம்; விபரீத
ஞானத்தைக் கொள்வோர் படித்தும் படிக்காதவராவர். உண்மை
ஞானமாவது நூற் பொருள்களை உள்ள படி உணர்ந்து அவற்றின்
படி நடத்தலாம். விபரீத ஞானமாவது நூற்கருத்துக்களுக்கு
மாறான பொருள் கொண்டு பேய்க் குணமடைந்து பல பேர் நிந்தி
க்கத் திரிதலாம். இன்னும் இவற்றை ஒரு கதை மூகத்தாலும்
விளக்கிக் காட்டுவாம்:—



ஓர் நகரத்தில் கல்வி கற்ற சில மாணாக்கரில், ஒருவன் தர்க்க
சாஸ்திரம் கற்றான்; மற்றொருவன் சங்கீத சாஸ்திரம் கற்றான்; ஒரு
வன் வியாக்கரணம் கற்றான்; ஒருவன் வைத்தியம் கற்றான்; மற்றொ
ருவன் சகுன சாஸ்திரம் கற்றான்; ஒருவன் மாந்திரீகம் கற்றான்.
இவர்கள் இந்தக் கல்விகளில் சிறிது சிறிது கற்றுக்கொண்ட வுடனே
மகா பண்டிதர்களைப் போலத் தங்களை நினைத்துக் கொண்டு ஒரு
தினம் எல்லோரும் ஒன்று கூடி "நாம் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு
தொழிலில் தேர்ச்சி யடைந்திருக்கின்றோம்; இனி வெளியேறிப்
பற்பல விடங்கட்குச் சென்று நம் கல்வித் திறமைகளைப் பல பிரபு
களிடம் காட்டி நற்பரிசு பெற்று வர வேண்டும்" என்று யோசித்து
உடனே புறப்பட்டு ஒரு நகரத்தை யடைந்து அவ்வூராள்வோனி
டம் சென்று தங்கள் தங்கள் வித்தைகளின் திறமைகளைக் கூறி அவ
ற்றைப் பரிசோதித்துத் தங்களுக்கு நற் பரிசளிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொண்டனர். உடனே அவ்வரசன் அவர்களை
பரிசோதிக்கத் தொடங்கினான். அப்போது மந்திரி அரசனை நோக்கி
"இவர்களோ கல்வி கற்றிருந்தாலும் உலக அநுபவந் தெரியாத
பேதைகள் போலக் காணப்படுகின்றனர். ஆதலின் இவர்களை விரை
வில் விவேகிகளென நம்பி விடக்கூடாது; முதலில் இவர்களுக்கு
அரிசியும் மேற் செலவுக்குப் பணமும் கொடுத்துச் சமையல் செ
ய்து சாப்பிட்டு வரும்படி இவர்களை அனுப்பினால் இவர்கள் படிப்பு
எவ்வாறு உலக விஷயத்தில் உபயோகிக்கிறார்களென்பது விளங்
கும்; அதன் மேல் இவர்களுடைய கல்வியைப் பரீக்ஷிக்கலாம்"
என்று கூறினான். அரசன் அவ்வாறே செய்தான்.

பின் வித்தியார்த்திகள் அறுவரும் ஓரிடத்தில் சமயல் செ
யத் தொடங்கினார்கள். சங்கீத சாஸ்திரக்காரன் அடுப்பை மூட்டி
உலை வைத்துப் பானையில் அரிசியைக் கொட்டி எரித்துக் கொண்டி
ருந்தான். வைத்தியங் கற்றவன் கீரை பறித்து வரச் சென்றான்;
சகுன சாஸ்திரக்காரன் இலை பறிக்கச் சென்றான்; தர்க்க சாஸ்திரி
தயிர் வாங்கச் சென்றான்; வியாக்கரணி நெய் வாங்கச் சென்றான்;
மாந்திரீகக்காரன் காய் கறிகள் வாங்கி வரக் கடைக்குச் சென்றான்.

சங்கீதக் காரன் அடுப்பெரித்துக் கொண்டிருக்கும்போது உலை
காய்ந்து 'சுர்' என்று ஒருவித சப்தமுண்டாயிற்று. அதை அவன் தம்
பூராசுருதி போலவே நடக்கு மென்று கருதி, 'சரிகம பதநிச'
என்று அதனோடு இணைத்துச் சுரம் பாட ஆரம்பித்தான். அந்த

ன் சாளிவரிசைக்குச் சரிப்பட்டு வருமா! அது தன்னுடைய பற்கைப் படியே சத்த மிட்டுக் கொண்டிருந்தது. சிறிது நேரம் வன் பாடிப் பார்த்தான்; அடுப்புலையின் நாதம் தன்னுடைய சாளி ரிசைக்குச் சரியாக வரவில்லை; அதனால் அவனுக்குப் பானையின் ல் கோபம் வந்து விட்டது. உடனே அவன், 'நான் எவ்வள வா பிரயாசைப் பட்டுப் பார்க்கிறேன்; நீ சரிப்பட்டு வருகிற யில் லையே' என்று ஒரு விறகுக் கட்டையை எடுத்துப் பானையின்மேல் ரு போடு போட்டான்; பானை தவிடாக நொறுங்கி அரிசி தண்ணீ ரெல்லாம் அடுப்புக்கு அர்ப்பணமாய் விட்டன. சங்கீத சாஸ்திரி ரன் செய்த கல்வி மூடச் செய்கையைப்பற்றிப் பிரமை யடைந்து ன்றும் பேசாமல் விழித்துக் கொண்டிருந்தான்.

 தர்க்க சாஸ்திரி போய்த் தயிரை ஒரு தொன்னையில் வாங்கிக் காண்டு திரும்பினான். அவ்வாறு திரும்பி வரும்போது தயிரைப் ற்றித் தர்க்கஞ் செய்யத் தொடங்கி, 'இந்தத் தயிருக்குத் தொன் ஆதாரவா தொன்னைக்குத் தயிர் ஆதாரவா? இதை ஆராய வேண் டு' என்று தொன்னையைத் தலை கீழாகக்கவிழ்த்தான். தயிர் கீழே ட்டிப் போயிற்று. அதன்மேல் அவன், 'சரிதான் தொன்னை ன் தயிருக்காதாரவாயிருக்கிறது' என்று விஷயந் தெரிந்து கொண் ற்காதத் திருப்தி யடைந்து வெறுங் கையோடு வந்து சேர்ந் ன்.

மூன்றாவது வியாக்கரணி கடைக்குப் போய் இலக்கணப்படி ப் என்னும் பெயருக்குக் காரணங் கண்டு பிடிக்கத் தொடங்கி, நெய் எங்கிருந்து வருகிறது? பசுவினிடத்திலிருந்து வருகிறது; து பசுவின் சாரமாம்; பசுவுக்கு ஆ வென்று பெயர்; ஆதலால் தை ஆறும் வேற்றுமைத் தொகைக் காரணப் பெயராகக்கொண்டு ஆசாரம்' என்றுரைத்தலே தகுதி" என்று கடைக்காரனிடத்தில், உன்னிடம் ஆசாரம் இருக்கிறதா?" என்று கேட்டான். கடைக்கார க்கு இவ்வளவு இலக்கணம் தெரியாது. அதனால் அவன், ஆசார ன்பதை ஒழுங்கெனக் கொண்டு வியாக்கரணி தன்னிடம் ஒழுங்கி ல்லையென்று பரிகசிப்பதாக நினைத்து, அவனை நோக்கி, "என்காணும் என்ன ஒழுங்கு கெட்டவனா? நீர் என்னிடம் ஆசார மிருக்கிறதா ன்று பரிகசிக்கிறீரே; ஜாக்கிரதையாகப் பேசும்" என்றான். அத ற்கு இலக்கணி "என்ன காணும் கொஞ்சம்கூட இலக்கணந் தெரி யாமல் பேசுகின்றீரே" என்றான். கடைக்காரனுக்கு முன்னிலும்



மிகுந்த கோப முண்டாய்விட்டது. அதனால் அவன் இலக்கணியை "மடையா! இனிமேல் இப்படிப் பேசாதே" என்று கன்னத்தில் நாலு அறை கொடுத்தனுப்பி விட்டான். இலக்கணி "இது கொஞ்சமும் இலக்கணந் தெரியாத ஊராயிருக்கிறது" என்று விம்மலும் பொருமலுமாக வீடுவந்து சேர்ந்தான்.

நான்காவது வைத்திய சாஸ்திரி போய் ஒவ்வொரு கீரையை யும் பார்த்து, 'இது வாதத்திற்கு ஆகாது, 'இது கபத்திற் காகாது' 'இது பித்தத்திற்காகாது' என்று தள்ளித் தள்ளிப் பார்த்து முடி வாக தோஷ மில்லாத கீரை ஒன்றும் அகப்படாமல் வெறுமனே திரும்பி வீடு வந்து சேர்ந்தான்.

ஐந்தாவது சகுன சாஸ்திரி போய் இலைபறிப்பதற்கு ஒரு மரத்திலேறினான். அப்போது ஒரு பல்லி கத்திற்று. அவன் அந்த சப்தத்தைத் தனது சகுன சாஸ்திரத்தின்படி ஆராய்ந்துபார்த்ததில் 'ஏறக்கூடாது' என்று அது சொல்வதாக ஏற்பட்டது. அதனால் அவன் உடனே இறங்கினான். மற்றொரு கௌளி சொல்லிற்று அதில் 'இறங்கக்கூடாது' என்றிருந்தது. உடனே அவன் அந்தர மாகக் கீழே குதித்து விடலாமென்று மரக்கிளை யொன்றைப் பிடித் துக் கொண்டு தொங்கினான். அப்போது மற்றொருபல்லி அப்படிக் குதிக்கக் கூடாதென்று சொல்லிற்று. அதனால் அவன் கீழேகுதிக் காமலும் மரத்தின் மேல் ஏறாமலும் அந்தரத்தில் தொங்கிக் கொண் டிருந்தான்.

ஆறாவது மாந்திரீகன் கடைக்குப் போய்க் காய்கறிகளை விலை பேசினான். கடைக்காரன் ஒரு விலை சொன்னான். இவன் ஒரு விலை கேட்டான். கடைக்காரன் அதற்கு இணங்க வில்லை. அதன் மேல் இந்த மாந்திரீகன் "நம்மிடத்திற்றான் மந்திர மிருக்கிறதே; நாம் மந்திரபலத்தால் கேட்ட விலைக்கே இந்தக் கடைக்காரன் கொ ண்டு வந்து கொடுக்கும்படி செய்ய வேண்டும்" என்று ஒரு மூலை யில் போய் உட்கார்ந்து கண்ணைமூடி முணமுணவென்று மந்திரஞ் செபித்துக் கொண்டிருந்தான். இவன் எண்ணப்படி இவனை ஒரு கடைக்காரனும் சட்டை பண்ணவில்லை.

நெடுநேரமாகியும் சகுன சாஸ்திரியும் மாந்திரீகக் காரனும் இரு ருப்பிடம் வந்து சேராமையால் மற்ற நால்வரும் வெளியேறி இவர் களைத் தேடிக் கண்டு பிடித்து அழைத்துக் கொண்டு போனார்கள்.

பின்னர் எல்லோரும் சேர்ந்து 'சாப்பாட்டுக்கு என்ன செய்யலாம்' என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் மந்திரி வந்து இவர்களுடைய மூடச் செய்கைகளை விசாரித்து அரசனுக்குத் தெரிவித்தான். அரசன் நகைத்து இவர்களை அழைத்து, "சற்றும் அறிவில்லாத பதர்களே! நீங்கள் போய் இன்னும் உலக இயலை நன்றாகக் கற்றுக்கொள்ளுங்கள்" என்று ஒன்றுங் கொடாமல் துரத்தினான்.

சற்றறி வோரைகளாகிய குதர்க்கிக ளெல்லாம் இவர்களைப் போலவே யிருப்பார்கள். இனி அவர்கள் தன்மைக்கு வேறு உதாரணந் தேவை யில்லை.

விவேகிகளோ இப்படியிருக்க மாட்டார்கள்; தாங்கள் கற்றவித்தையை எந்த எந்த இடங்களில் உபயோகப் படுத்தலாமோ அந்தந்த இடங்களில் உபயோகப்படுத்தி உலக நடையைத் தழுவி ஒழுங்குடன் நடப்பார்கள். இவர்களுக்கு எவ்விடத்தும் சிறப்புண்டாம்.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பல கற்றுங்
கல்லா ரறிவிலா தார்"

என்ற திருக்குறளுக்கு இலக்கியமாவார் குதர்க்கிகளே. இந்தக் குதர்க்கிகள் எவர் எதைச் சொன்ன போதிலும் மறுத்துப் பேசிக்கொண்டே யிருப்பார்கள். இவர்களுக்கு வேறொன்றும் தெரியாது. இவர்களிடத்தில் விவேகமிராது, கல்வியிராது, மற்ற மேன்மைகளுமிரா. எந்தக் கூட்டத்தாரிடத்தில் குதர்க்கம் அதிகமாயிருக்கிறதோ அவர்கள் எப்பொழுதும் க்ஷீண திசையிலேயே இருப்பார்கள். அவர்களுக்கு அனர்த்தமே மிகுதியும் உண்டாகும்; ஒரு செல்வாக்கு மிராது; இவர்கள் அறிவுடையோர் மத்தியில்,

"கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிரா
துரைப்பினு நாயுரைத் தற்று"

என்ற நாலடிச் செய்யுளுக்குதாரணமாக விளங்குவர். அறிவுடையார் நூல்களை யெழுதும் போது "இவற்றை எதற்காக எழுதவேண்டும்; இவை எல்லாருக்கும் தெரிந்தவை தாமே" என்று பேசும் குதர்க்கிகளுடைய அவிவேகத்தை என்னென்று புகல்வது. இந்தப் பதர்கள் அறிவென்னும் சண்டமாருதத்தின் முன் என் நிற்கும்?



## உதயண குமார காவிய வசனம்.

(முன் தொடர்ச்சி புத்தகம்: 3 சஞ்சிகை 3. பக்கம்- 51)

### துறவு காண்டம்.

அதன் மேல் அவர்கள், முறைப்படி வஸ்திரா பரணங்களை நீக்கிச் சிகையை போக்கித் தவத்திற்குரிய துவராடை முதலியன புனைந்து, சீலம் முதலிய வற்றைக் கைக்கொண்டு தவ மார்க்கத்தினை யனுஷ்டிக்கத் தொடங்கினார்கள்.

உதயண மன்னன், சகல சீவராசிகளிடத்தும் அன்பு செலுத்தியும், ஐம்புலன்களையும் பொறிகளிற் செல்லாதடக்கியும், புண்ணியம் மிகுந்த நோன்புகளை இயற்றியும், பகவத் தியானம் செய்தும் சித்தத் தெளிவடைந்து மனத்தினுள்ளும் வெளியினும் ஏற்படும் உலகப் பற்றுக்களை அறவே யொழித்தும், எந்த வகையினாலும் ஜீவன்களுக்குத் துன்பம் வராமல் அவற்றைக் காப்பாற்றியும் சிந்தையை ஒரு நிலைப்படுத்தியும், மனம் வாக்குக் காயங்களை பரிசுத்தமாக வைத்தும், ஆகாரம், பயம், சோகம், தூக்கம் ஆகிய வற்றை நீக்கியும், இன்னும் அநுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களை யெல்லாம் அநுஷ்டித்து முறைப்படி தவத்தைச் செய்து கிரியின் உச்சிமேலறி யோகத்திலிருந்து சுக்கிலத் தியானத்தால் இரு வினைகளையும் கெடுத்து சித்த பதவி யடைந்து என்று மழியாப் பேரின்ப சுகத்தினை யெய்தினான்.

பின்னர், அமைச்சர்களும், தேவிமாரும் நோன்பு நோற்று, அதனுலே உயர்ந்து ஸமாதி மரண முற்றுத் தேகத்தை நீத்து, சௌதர்ம கல்பத்தில் விளங்கும் அச்சுத கல்ப மீறாகவுள்ள கல்பங்களாகிற அமர ருலகங்களிற் பிறந்து அமரர் சுக மனுப வித்தின்புற்றனர். சுபம்.

வீ. ஆறுமுகஞ் சேர்வை.

துறவு காண்டம் முற்றுப் பெற்றது.

---

## ஜின மதமும் கல்வியும்.

---

கடல் புடை சூழ்ந்த இப்பரத க்ஷேத்ரத்தின் கண், நம் ஜின மதமானது புராதன காலந் தொடங்கி, அக்காலத்தில் விருத்தி யடைந்து வந்ததாக மஹா புராண நூல்களாலும் பண்டைக் காலத்துத் தமிழ் நூல்களாலும் நன்கு விளங்குகின்றது.

வட இந்தியாவிலுள்ள ஜைனர்கள் மத அபிமானத்திலும் மதப்படிப்பிலும் லௌகிக உயர்தரப்படிப்பிலும் சிறந்து விளங்கு கின்றனர். மேலும் இத் தென்தேயத்தின் கண் உயர்தரக் கல்வி பயிலும் நம் மாணவர்களுக்கும் பொருளுதவி புரிந்து அவர்களைக் கல்வியில் விருத்தி யடையச் செய்கின்றனர்.

இத்தென் தேயத்திலுள்ள ஜைனர்களாகிய நாம் கல்வியில் தேர்ச்சியின்றி விருத்தி யடைய வேண்டிய வழிகளை உணராதவர்களாய்த் திகைக்கிறோம். நமக்கு இலௌகிகக் கல்வி வைதீகக் கல்வி ஆகிய இரண்டும் வேண்டும். இலௌகிகக் கல்வியாவது ஆங்கிலம் முதலிய வற்றைக் கற்றல்; வைதீகக் கல்வியாவது நம்மத கிரந்தங்களை வாசித்தல். இவ்விரண்டினுள்ளும் நம்மதம் அபிவிருத்தி யடைவதற்கும், மதாசாரம் குன்றாமலிருப்பதற்கும் மதப்படிப்பாகிய வைதீகக் கல்வியே வலக்கண் போன்றது; மிக இன்றியமையாதது.

பண்டைக் காலத்தில் நம் முனீஸ்வரர்களாலும், மஹான்களாலும் வடமொழியிலும் தென்மொழியிலும் இயற்றப் பெற்ற இரத்தினங்களாகிய ஆகமபுராண காவியங்களும் இன்னு மநேக தமிழ் நூல்களும் சிறந்து விளங்குகின்றன. ௸ நூல்களின் விசேஷங்கள் சீலனின் முந்திய சஞ்சிகைகளில் பல நண்பர்களால் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

சூரியனைப் போல் பிரகாசிக்கும் ௸ நூல்களில் அநேகம் நம்மவரின் கல்விக் குறைவினால் ஆதரிப்போர் இன்றி ஒளி குறைந்து, ஏட்டுப் பிரதிகளிலிருந்து செல்லுக் கிரையாகிக் கொண்டு வருகின்றன. ௸ நூல்களை ஆராயுமளவில் முற்காலத்தில் சம்ஸ்கிருதமானது நமக்குத் தாய் பாஷையாய் விளங்கி வந்த தென்பதும் பிற்காலத்தில் தமிழும் அது போல் இருந்து வந்த தென்பதும் விளங்குகின்றன. அப்படி யிருந்தும் இப்போது தாய் பாஷையாய் விளங்கிய சம்ஸ்கிருத நூல்களைக் கை சோர விட்டுத் தமிழ் நூல்களையும் கசடறக் கற்காமல் சம்சாரச் சுழலில் அகப்பட்டு வருந்தி வரும் நம்மவர்களின் கொள்கை மிகவும் வியக்கத் தக்கதாயிருக்கிறது. இனியாகிலும் ௸ மதப்படிப்பின் அவசியத்தை நன்குணர்ந்து நம்மவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் சம்ஸ்கிருத பாடசாலையும், தமிழ்ப் பாடசாலையும் ஏற்படுத்த வேண்டும் என்னும் ஊக்கத்தைக் கை சோர விடாமல் ஒற்றுமையை ஓர் அணிகலனாகப் பூண்டு ஆங்காங்குப் பாடசாலை ஏற்படுத்தத் தக்க முயற்சி செய்வார்களாக.

இத்தென் தேயத்திலுள்ள நம் மதத்தினர்களுக்காக ஓர் பத்திரிகை வெளியானால், அது நலமாயிருக்குமென்று வெகு நாட்களாக யான் என் நேயர்களுடன் சம்பாஷித்து வந்த துண்டு. எனது எண்ணத்தின் படியே நம்மவரின் நற்காலத்தால் "தருமசீலன்" என்னும் பத்திரிகை வெளி வரலாயிற்று. இதனால் நம்மவர்க்கு நற்காலம் பிறந்ததென்றே நான் இயம்புவேன். ௸ தருமசீலன் பத்திரிகை நம்மவர்கட்கு விவேக பொக்கிஷத்தைத் திறக்கும் ஓர் நல்ல திறவுகோல் போன்றதாய் இயன்றுள்ளது. இப்பத்திரிகை நமது சிற்றறிவை விசாலப் படுத்தி, பாஷா ஞானம், உலக விஷயங்களை யறிதல், மதப்பற்று, ஒற்றுமை, கல்விப் பயிற்சியின் ஊக்கம் முதலியவற்றை அபிவிருத்தி செய்யத் தக்கது.

தற்காலத்தில் இப் பத்திரிகையை வெளியிட்டு அதிக சிரத்தையுடன் தேச நன்மைக்காகவும், மதாபி விருத்திக்காகவும், நம்மவரின் கல்வி அபிவிருத்திக்காகவும் உழைத்து வரும் இப் பத்திராதிபரின் நன்முயற்சியும், தருமகுணமும், பக்ஷாதாபமும் மிகப் பாராட்டத் தக்கன. இத்தகைய நற்செய்கை யுடைய இவ்வுத்தமருக்கு அநேக வந்தனமும் நன்றியும் செலுத்த நம்மவர் எல்லோரும் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இச்சீலன் உதவியைக் கொண்டே நாம் கல்வியை விருத்தி செய்து கொள்ளலாம். ஆதலின், நாம் மேற்கூறியபடி இரண்டு வகைக் கல்விகளையுங் கற்றுக் கொள்ள வேண்டும்.



நமது சரீரத்திற்கு ஆகாரம் எப்படி அவசியமாகிறதோ அவ்விதமாகவே கல்வியானது புத்திக்கு மிகவும் ஆவசியகமாக விருக்கின்றது. தினந்தோறும் விருத்தியாகின்ற இச்சரீரத்தை பகவான் நமக்குக் கொடுத்திருந்தாலும், அதற்குத் தக்க உணவுகளைக் கொடுத்து சௌக்கியத்தை யடையத் தக்க காரியங்களை எல்லாம் நாமே தேடிக் கொள்ளாவிடில் அத்தேகம் வளரமாட்டாது. அது போலவே ஏதோ பூர்வ புண்ணியபலத்தால் நம்மை ஞாநாத்மாவாக (ஜினமார்க்கத்தில்) பகவான் சிருஷ்டித்திருந்தாலும் நம்முடைய சுபாவ ஞானம் அதிகம் போதாமலிருப்பதால் கல்வி என்கிற ஆகாரத்தைக் கொடுத்து புத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டியது நம்முடைய முக்கிய கடமையாயிருக்கிறது. மனமானது எப்படிப்பட்டதென்றால் ஒரு க்ஷணப் பொழுதாயினும் வெறுமையாயிராமல் இப்புவி ஆகாய மண்டலம் முழுதும் உலாவிக் கொண்டேயிருக்கத் தக்கது.

இப்படிப் பட்ட மனதிற்கு கல்வி என்கிற துணைவன் இல்லாவிடில், கடிவாள மில்லா அஸ்வம் போலவும், கண்டபடி திரியும் குரங்கு போலவும், கரை கடந்த வெள்ளம்போலவும், கட்டுக்கடங்காக் காளைபோலவும், அது தேச மெல்லாம் திரிந்து, நம்மை துர்க்குணமாகிய காடு, மேடு, கல், முள் முதலியவைகளில் இழுத்துக் கொண்டு போய்க் கடைசியாக நரக மென்கிற பாதாளத்தில் தள்ளி விடும் என்பதற்கு ஐயமே இல்லை. இந்தக் காரணத்தைப் பற்றியே ஆண் பெண், பாலர், விருத்தர் முதலிய எல்லோரும் உத்தியோகம் முதலிய தொழில்களைச் செய்ய விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அவர்களைப் படிப்பிப்பது பெரியோர்களுடைய வழக்கமாயிருந்து வந்திருக்கின்றது. கல்வியைப் போதியாவிடில் அவர்களுடைய சித்தம் எப்படி நன் மார்க்கத்தில் நிலைக் கொள்ளும்? இன்னும்,

"எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்வி போன்
மம்ம ரறுக்கு மருந்து"

(கல்வியைப் போல் அஞ்ஞான மென்னும் மயக்கத்தை அறுக்க வல்ல மருந்தை எவ்வுலகத்தும் யாம் கண்டதில்லை) என்று நாலடியிலும்,

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

(விளங்கிய நூல்களைக் கற்றவரோடு சேர்ந்திருக்கும் கல்லாதவர், மனிதரோடு சேர்ந்திருக்கும் மிருகங்கள் போலாவர்) என்று திருக்குறளிலும் மேலோர் கல்வியை மிகவும் உயர்வாக உரைத்திருக்கின்றார்கள். ஆதலின்,

"எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்டதன்கண்
நின்றலுங் கூடப் பெறின்"

(எவ்வகைப் பிறப்பை ஆராய்ந்து பார்த்தாலும் ஒருவனுக்கு மிகக் களிப்புத் தருவது மனிதப் பிறப்பை விட வேறில்லை. எனினும், அஃதெப்படி யிருந்தால் சிறப்படையும்? அம்மனிதப் பிறப்பில் கற்றல் முதலியன அமையப் பெற்றால் மாத்திரமே.)

என்றபடி மனித ஜன்மம் கல்வியினாலேயே சிறப்படையும்.

இன்னும்;

"இளமையிற் கல்"

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்"

"எண்ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

"நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே"

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்"

"ஆக்கு மறிவா னலது பிறப்பினால்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க"

"ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை—அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாயினா
லாற்றுணா வேண்டுவ தில்"

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

"மயிர்வனப்பும் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர் வனப்புங் காதின் வனப்பும்—செயிர் தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற் கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு"



"இடை வனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பு
நடைவனப்பு நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு"

என்பவற்றாலும் இஃதுணரப்படும்.

ஆதலின், கல்வியை ஒவ்வொரு கிராமத்திலும் அவசியம் பரவச் செய்ய வேண்டும். மதாபிமானிகள் ஒவ்வொருவரும் ஒருங்கே கூடி, சகோதரர்களைப் போல் இவ் விஷயத்தில் பாடுபட வேண்டும். ஒவ்வொரு நேயர்களிடத்திலும் தர்ம சிந்தை அவசியம் ஊன்றி யிருக்க வேண்டும். கல்வி, தானம், தடாக பிரதிஷ்டை, ஆலயம் கட்டுதல், சத்திரம் கட்டுதல் முதலியன சாசுவதமான தர்மங்களாம். இவற்றுள் கல்வி எல்லாத் தர்மங்களிலும் அழியாத தர்மம் எனப்படும். ஆதலின், கல்வி விஷயமாகவே அவசியம் தர்மம் செய்தல் வேண்டும்.

தி. புஜபலராவ்.

## செல்வம் தரித்திரம்.

---

அன்புள்ள சகோதரர்களே! செல்வம், தரித்திரம் என்பவற்றின் பொருள்கள் யாவையென யோசிக்கப் புகுங்கால் செல்வம் என்பது நீங்குவோம் என்றும், தரித்திரம் என்பது தரித்து இருக்க மாட்டோம் என்றும் பொருள்களாகுமென விளங்குகின்றன. ஆகவே இவ்விரண்டும் ஓரிடத்தில் நிலைத்திரா வென்பது பெறப்படும்.

இது பற்றியே செல்வம் சகடக்கால்போல் வருமென ஆன்றோர் கூறியுள்ளார். இத்தகைய செல்வமும் முன் செய்த தவத்தினாலேயே உண்டாகும். இவ்வாறு செல்வமானது பூர்வ தவத்தினால் உண்டாகிற தென்பதை நூல்களிலே கூற்றால் உணர்வதோடு, செல்வந்தர்களைப் பார்த்துப் பலர் 'கொடுத்து வைத்தோர்' என்று கூறுவதாலும் உணரலாம். 'கொடுத்து வைத்தவர்' என்பதற்கு, 'முன்னே தவஞ் செய்து அதன் பயனைப் பின்னே தமக்குதவும்படி ஓரிடத்தில் சேர்த்து வைத்தவர்,' என்று பொருளாம்.

இவ்வாறு வந்தடையுஞ் செல்வமும் மேற்கூறியபடி ஓரிடத்தில் நிலைத்திருப்பதில்லை. ஆதலின் பொருள் படைத்தோர் தங்களிடம் அஃதிருக்கும் போதே விரைந்து தருமத்தைச் செய்ய வேண்டும். இவ்வாறன்றித் தானென்னு மகங்காரங் கொண்டு தம் வரையில் சுகித்துத் தாமே புசித்துப் பசித்து வருவோரை யாதரியாது நசித்து வசித்து வருகிற செல்வமுடையோர்கள் மனிதப் பிறவியில் சிறந்தோர்களாவரோ? ஒரு போது மாகார். இவர்களைப்பற்றி ஞானமே ஓர் வடிவாக உற்பவித் தருளிய பட்டினத் தடிகளும்,

" பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத்தங்கள்
திருத்திக் கறுசுவை போடுகின் றார்து றந் தோர்தமக்கு
வருத்தி யமுதிட மாட்டாவரையிம் மாநிலத்தி
லிருத்திக்கொண் டேனிருந் தாயிறை வாகச்சி யேகம்பனே"

என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார். இத்தகையினர் விரைவில் ...ரித்திரராகி வருந்துவர். இக்காலத்தில் தரித்திர முற்று வருந்துவோ ரெல் லாரும் முன் ஜென்மத்தில் ஈகை யில்லாதிருந்தவர்களே. அவர்களே இப் படி யானார்களென்பதை,

" மன்னர் சட்டி கரத்தேந்தி மறநாய் கௌவுங் காலினராய்
அன்னந் தேடி யிருப்பாரை யறிந்தோ மறிந்தோ மம்மம்மா
பன்னூர் மொழியார் பாலடிசில் பைம்பொற் கலத்தில் பரிந்தூட்ட
உண்ணு நின்ற போதொருவர்க் குதவா மாந்த ரிவர்தாமே"

...ன்பதால் உணரலாம். இப்படி யிருந்தும் சிலர் செல்வத்தையே நிலையுள்ள ...தென நினைத்துப் பெருமை யடைகின்றனர்.

" சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுளார் மூகராவார்
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்
குறியணி கண்ணு ளாரும் குருடராய் மூடி வரன்றே"

...றபடி அற்பரே இவ்வாறு செருக் கடைவர். இன்னும் இவர்,

" செல்வம்வந் துற்ற போது தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணைவு நோக்கார்
வெல்வதே கரும மல்லால் வெம்பகை பெரிதென் றெண்ணார்
வல்வினை விளைவும் பாரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்"

...ன்றபடி தெய்வ சிந்தனை முதலிய வற்றையும் மறந்து மனம் போனபடி நடப் ...ர்.

இவ்வாறு பொருளையே பெரிதாக நம்பி இல்லற வாழ்க்கை ஸ்திர மென் றெண்ணிப் பாவ புண்ணியங்களைப் பகுத்துணர்ந்து புண்ணியத்தைச் செய்யா ...ல் மேலு மேலும் பணத்தைச் சம்பாதித்துப் புதைத்து வைப்பதினால் இவர்கள் ...ன்ன பலனைத்தான் அடையப் போகிறார்கள்?

" பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்
டாவிதான் போயினபின் பாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்"



என்றபடி இவர்க்கு அந்தப் பணத்தால் ஒரு பயனுமில்லை.

ஐம்புலன்களையும் அடக்கிப்பிச்சை வாங்கிச் சாப்பிட வேண்டுமென்கிற எண் ணத்துடன் வருகிறபிச்சைக்காரரின் முகத்தைக்கண்டுஅவர்க்கு ஈயாதலோபிகள் இருந்தென்ன? இறு மாப்புக்கொண்ட இந்த லோபிகளைக் கண்டு தங்களுக்கு ஒன்றுங் கிடைக்காததனால் வறுமையுள்ளவர்கள் வருந்துவதில் பலனென்ன? "தாம் தாம் செய்த வினை தாமே யனுபவிப்பார்" என்னும் வாக்கியத்தை நினைத்து அவர்கள் அக் கஷ்டத்தை யனுபவித்துக் கொண்டே நற்கதி யடையும் வழியைத் தேட வேண்டும்.

" வாழ்வது வந்தபோது மனங்தனின் மகிழ வேண்டாம்
தாழ்வது வந்ததானுந் தளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்ததானா லொருவரால் விலக்கப்போமோ
ஏழையா யிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டி லீரோ"

" ஓடமீது மிடமது மணற்சுடும் சகடமு
மோடமிசை வே நடக்கு
முற்றதோ ராற்றின்மடு மேடாகு மேடெலா
முறுபுனல்கொள் மடுவாயிடும்
காடுசா டாகுமுயர் காடுநா டாகிவிடும்
கவிழ்சகடு கீழ் மேலதாய்
நடையுறுஞ் சந்தைபல கூடுமுட னேதனையும்
நன்னிலவு மிருளாய் விடும்
நீடு பகல் போயபின் பிரவாகு மிரவு போய்
நிறைபகற் போதாய் விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிஜமல்ல வாழ்வு கண்டாய்
மாடு மனை பாரிஜன மக்கணிதி பூஷணமும்"

என்றபடி உலகத்தில் எவைகளும் நிலைத்து நிற்க மாட்டா. ஆதலின தரித்திரமும் ஓரிடத்தில் நிலைத்து நிற்க மாட்டாது. அதனால் அறிவுடையோ அதைச் சிந்தித்து, வருந்தாமல் நற்காரியங்களைச் செய்ய முயல வேண்டு இதை யுணராமல் வறுமை யுள்ளவர்களில் சிலர்,

" பொருளிலார்க் கின்ப மில்லை புண்ணிய மில்லை என்று
மருவிய கீர்த்தி யில்லை மைந்தரிற் பெருமை யில்லை
கருதிய கரும மில்லை கதிபெற வழியுமில்லை
பெருநிலந் தனில் சஞ்சார பிரேதமாய்த் திரிகுவாரே"

என்னும் வாக்கியங்கள் நூல்களில் கூறப்படுகின்றனவே; இவற்றிற் கிணங்க நமக்குச் செல்வ மில்லாததால் ஒரு பெருமையும் ஏற்படாதே" என்று

னம் வருந்துகிறார்கள். இது பயனற்ற காரியம். இந்நிலைமையும் சீக்கிரம் மாறி விடுமென்று நினைத்து தரும காரியங்களைச் செய்து தெய்வத்தைத் தியானித் தலே சிறந்ததாம்.

உலோபத்தனமும், செல்வச் செருக்கு முடையவர்கள் நற்கதி யுடைவது மிகவும் பிரயாசை; ஏழைகள் நற்கதி யடைவது மிகவும் சுலபம். ஏனெனில்,

“கதிர்பெறு செந்நெல் வாடக் கார்க்குலங் கண்டு சென்று
கொதித்திரைக் கடலிற் பெய்யும் கொள்கைபோற் குவல யத்தே
மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப் பாரார்.
நிதியிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க் கீய மாட்டார்.”

என்பதற் கிணங்கத் தனவான்கள் வாடினோர் முகத்தைக் கண்டு அவர்க்குக் கொடுத்துத் தருமத்தைத் தேட மாட்டார்கள்; பெரும்பாலும் கெட்ட வழியிலேயே பணத்தைச் செல விடுவார்; ஆதலாலேயே அவர்கள் நற்கதி யடைவது பிரயாசை. ஏழைகள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைச் சகிக்க முடியாமையால் மனம் வருந்தித் தெய்வ சிந்தனை செய்து நற்கதி யடையும் வழியை முழு மனதுடன் நாடுவர். அதனால் இவர்கள் நற்கதி யடைவது சுலபம். ஆதலின் தனவான்களிலும ஏழைகளே மேலானவர்கள்.

இவற்றால் அறிவுடையவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது யாதெனில், “செல்வமும் தரித்திரமும் நிலையில்லாதவை; சுகத்தையோ துக்கத்தையோ அடைதல் இவற்றால் நேராது; ஆதலின் மனிதர் இவ் விரண்டையும் கருதாமல் நற் காரியங்களைச் செய்ய வேண்டும்” என்பதே. ஆதலின், மேற் கதிக்குச் செல்லும் நோக்க முடையார் இவ்வுறுதி மொழிகளைக் கடைப்பிடித் தொழுவாராக.

வி. பூ. துரைசாமி நயினார்,
தென்னார்.

---

## திருக்கலம்பகம் மூலமும் உரையும்.

### முகவுரை.

“திருக்கலம்பகம்” என்னும் இத் தொன்னூல் உதீசித்தேவர் அருளிச் செய்தது; இதில் பாவும் பாவினமும் விரவி அந்தாதியாகத் தொடர்ந்துள்ள நூற்றுப் பத்துச் செய்யுட்கள் அடங்கியுள்ளன. இது கலம்பகத்தின் உறுப்புக்களாகிய புய வகுப்பு, தவம், மதங்கு முதலியவைக ளெல்லாம் பொருந்தி விளங்குவது; ஜைனமத தர்ம விசேடங்களையும், மித்தியா மார்க்கத்தின் நிய



ஆற்றின் போக்குகளையும் செவ்வனே விளக்குவது; இதிலுள்ள பாக்கள் விழுமிய பொருள் கெழுமியன வாயும், இன்னோசையுஞ் செஞ் சொல்லும் உடையன வாயும், தத்துவ விஷயங்கள் ஆங்காங்கமைந்து அணி பெற்று விளங்குவனவாயும், மிகச் சிறு பொருளும் மிகப் பெரிய பொருளும் தன்னகத்தே காட்டவல்ல ஆடி போன்ற அறிவாளர்க்கு அகத்திலின்பம் பெருக்குவனவும், இச் செந்தமிழ் நாட்டு மக்கட்கு மிக்க பிரயோசனத்தைத் தரத்தக்கனவுமுள்ளன.

இவ் வருந்தமிழ் நூலை இயற்றி யருளிய உதீசித் தேவரைப் பற்றிய சரித்திரம் ஏட்டுப் பிரதிகளில் ஒன்றும் காணப்பட வில்லை. இவர், தமிழ்க் கற்பகமெனப் போற்றும் சீவக சிந்தாமணி யென்னும் சிறந்த இலக்கியஞ் செய்தருளிய திருத்தக்க தேவரது ஆசிரியரெனச் சிலர் கூறுகின்றனர். அவ் விஷயத்திற்குத் தகக ஆதாரம் ஒன்றும் இல்லை.

இவ் வாசிரியரைப் பற்றித் திருக்கலம்பகம் ஏட்டுப் பிரதியில்,

“வையக மடந்தை வாழ்முக மாகிய
மெய்வளர் தொண்டையம் பதிக்கு வடாஅது
கன்னி காரத்து மன்னிய பெரும் புகழ்ப்
பழியில் பல்குடிப் பையூர்க் கோட்டத்
தொழியாச் சீர்த்தியொடு வழியறம் பயப்பினும்
ஆங்கவை கருதா அன்புகொ ளியல்பிறற்
றூங்கா வீகைச் சான்றோர் குழீஇய
காரணி செந்நெற் கழனியம் படப்பை
ஆரணி நெடுந்துறை ஆர்ப்பா கைக்கோன்
அரசர்க் கரசெனு முரைசால் பெருமையிற்
றுவில் வடபான் மொழிதலை மணந்த
தேவ னென்னுந் தென்றிசைப் பெரும் பெயர்
மாவண் டமிழின் வாதுநெறி பயின்ற
சாயக நிலையோன் சாக்கிய குடாரன்
காதல் சார்ந்து மேதகப் புனைந்த
திருமலி பிண்டித் தெய்வ நாயகன்
அருமலர்ச் சேவடிக் கடர்ந்தன னணிந்த
தொன்மலரக் கலம்பகத் தூய மாலை
பன்முறை யோதுநர் பழிச்சுந ரெல்லாம்
சேதியம் பெருநெறி சேர்குவர் விரைந்தே”

ன்ற பாயிரம் காணப்படுகிறது. இப் பாயிரத்தால் இவர் தொண்டை நாட்டுப் பையூர்க் கோட்டத்து ஆரணி நெடுந்துறையைச் சார்ந்த ஆர்ப்பாக்கை யென்னும் பதியை அரசு செலுத்தியவ ரென்பது தெரிகிறது. இவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவ ரென்பது இந்நூலை ஆய்ந்தறியும் அறிவாளர்க்கே தெற்றென விளங்கும்.

இவ்வரிய நூலுக்கு விரிவுரையும் எழுதப் பட்டுள்ளது. இவ்வுரை செய்தார் யாரென்றெனத் தெரிய வில்லை. இவ்வுரை, அரும் பொருள்களை விளக்கி, பதவுரை, பொழிப்புரை, விசேடவுரை யென்னும் முப்பகுப்பை யுடைத்தாய் ஜைன சமயக் கோட் பாடுகளைச் செவ்வனே எடுத்துக் காட்டும் இயல்புள்ளது.

இந்நூல் தமிழ் வாசிப்போர்க்கு இன்றியமையாததாயிருந்தும் இப்பொழுது அருமையா யிருப்பதை நோக்கி நான் 'தருமசீலன்' பத்திரிகை வாயிலாக இதனைச் சிறுசிறு பகுதிகளாகப் பகுத்து வெளியிடத் துணிந்தனன்.

இஃது புத்தக ரூபமாகக் கூடிய சீக்கிரத்தில் வெளி வரும். இப் புத்தகம் வெளி வருவதற்கு முந்தியே இதனை வாங்குவதற்குத் தங்கள் பெயரை அடியிற் கையொப்ப மிட்ட என் விலாசத்திற்கு எழுதி ரிஜிஸ்டர் செய்து கொள்பவருக்குப் புத்தகத்தின் விலையில் நான்கி லொரு பங்கு தள்ளிக் கொடுக்கப்படும். ஆதலால் தமிழிலார்வ முள்ளவர்கள் முன்னுடி எழுதித் தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்ளும்படி பிரார்த்திக்கின்றேன்.

---

### காப்பு.

நேரிசை வெண்பா.

பதினறுவர் பொன்வண்ணர் பச்சை யிருவர்
மதிவண்ணர் மற்றோ ரிருவர்—கதியடைந்த
செம்மைநிறத் தோரிருவர் சேர்ந்த முகிலிருவ
ரெம்மைக்குந் தெய்வ மெமக்கு.

(பதவுரை.) பொன்வண்ணர்-பொன்னிற முடையவர்கள், பதினறுவர்-பதினறு தீர்த்தகரரும், பச்சை—பசுமை நிறமுடையவர்கள், இருவர்-இரண்டு தீர்த்தகரரும், மதி-சந்திரன் போன்ற, வண்ணர்-நிறமுடையவர்கள், ஓரிருவர்-இரண்டு தீர்த்தகரரும், கதி-பஞ்சமகதியை, அடைந்த-சேர்ந்த, செம்மை நிறத்தோர்-சிவந்த வண்ணமுடையவர்கள், இருவர்-இரண்டு தீர்த்தகரரும், சேர்ந்த-பொருந்திய, முகில்-மேக நிறமுடையவர்கள், இருவர்-இரண்டு தீர்த்தகரருமான இருபத்து நான்கு தீர்த்தகரரும், எம்மைக்கும்-இம்மை, மறுமை, அம்மை யென்னும் எப் பிறப்பினுக்கும், தெய்வம்-சுவாமி, எமக்கு-எங்கட்கு, என்றவாறு.



(பொழிப்புரை) பஞ்சம கதியை யடைந்த பொன் வண்ணர் பதினறுவரும், பச்சை வண்ணரிருவரும்; வெள்ளை வண்ணரிருவரும், சிவந்த வண்ணரிருவரும், நீல வண்ணரிருவருமாகிய தீர்த்தகரரா இருபத்து நால்வரும் இம்மை மறுமை, அம்மை யென்னும் எப் பிறப்பினுக்கும் எங்கட்குக் கடவுள். எ-று.

(விசேடவுரை) மற்று-அசை. கதி யடைந்த வென்றது நடுநிலைத் தீபத்து உத்ஸர்ப்பிணி, அவஸர்ப்பிணி, யென்னுங்கால விகற்பத்தான் முறையே இருபத்து நால்வராக அவதரிப்பினும், தன்மையா லொருவரே யாகையால் 'தெய்வம்' என ஒருமையாகக் கூறினர். இயற்கையாய் எண் குணமு மெய்தி, விருப்பு வெறுப்பின்றி, உருவமும் அருவமும் ஒருங் கெய்தி, முத்தியாகிய மூவுலகத்துச்சியின் விளங்குகின்ற சித்தரிடத்தில் வைத்த தியானத்தால் கற்பத்துச்சியாகிய அகமிந்திர லோகத்தினின்றும் அவதரித்து, மத்திம லோகத்தில் சுவாமி, சீவன், சருமம், வேதம், உலகம், காலம் என்னும் அறுவகை நித்தியப் பொருள்களினது குணங்களை விளக்கி, காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்ற முடையவர்களைக் கடவுளென்றும் முன்னொடு பின் மாறுபட்டுத் தீ நெறியை விரிப்பதாகிய நூலை வேத மென்றும் நம்பி மயங்கு மயக்கத்தை நீக்கி முத்தி யடைந்தவராகையால் "கதி யடைந்த" என்றார்.

ஸ்ரீ விருஷபர், அஜிதர், சம்பவர், அபிநந்தனர், சுமதி, சீதளர், சிரேயாம்சர், விமலர், அநந்தர், தர்மர், சாந்தி, குந்து, அரர், மல்லி, நமி, வர்த்தமானர் என்னும் பதினறுவரும் பொன் வண்ணர்; பார்ஸ்வர், சுபார்ஸவர் என்னுமிருவரும் பச்சை வண்ணர்; சந்திரப்பரபர், புஷ்ப தந்தர் என்னு மிருவரும் வெள்ளை வண்ணர்; பத்மப் பிரபர், வாசு பூச்சியர் என்னு மிருவரும் சிவப்பு வண்ணர்; முநிசுவ் விரதர், நேமி என்னு மிருவரும் நீல வண்ணர்; இம்மை-இப்பிறப்பு. மறுமை-வருபிறப்பு. அம்மை-முத்தி.

## நூல்

### கொச்சக வொரு போகக் கலிப்பா.

பூநான்கும் பொதுளிவெறி திசைநான்கும் போயுலவத்
தேனார்ந்து சுரும்பாடத் திகழ்பிண்டித் திருநீழல்
நிலவு மிழ்ந்து நீர்ததும்ப நிழன்மாலை நித்திலஞ்சூழ்
குலவிலங்கு மதிமூன்றிற் குடைமூன்று முடனிழற்றப்
பாங்கிலகு மணிக்கவரி பன்னூறு யிரமசைய
வோங்கரியா சனத்தும்ப ருலகுதொழ விருந்தனையே.

இது தரவு.

கயல்பிறழ்வ தெனப்பிறழுங் கருந்தடங்கண் ணார்கலவிச்
செயல்பிறவி வித்தென்று செறிதவர்முன் னுரைத்தருளி

தேருத பிறப்பிகந்த சித்தியெனுங் கன்னியுடன்
மாருத பேரின்ப மகிழ்வதுநின் குணனுமோ.

அடிமாற்ற லாருயிர்மே லாருது மிகுத்தசினந்
தடுமாற்றந் தருமென்று தவவரசர்க் குரைத்தருளி
இரியவிரு வினைப்பகைவ ரிகல் வாட்டி யைம்புலவெங்
கரியகதக் கடக்களிறு காய்ந்ததுநின் னருளாமோ.

உள்ளத்தா லெவ்வுயிர்க்கு மொத்தொழுகா தவர்பிறவி
வெள்ளத்தாழ் பவரென்று விரிதவர்முன் விரித்தருளி
அன்போடு தொழுதெழுவார்க் கமருலக மளித்தமையா
நின்போல வரகதியு ணிறுத்துதனின் னியல்பாமோ.

(இவை மூன்றுந் தாழிசை.)

கறையறு சுடர்மணி நடுவண் தெனமுழு துணரு நின்மதி
நறையலர் வெறியென நகுமணி யொளியென நணுகியல்
[பினது நின்சுகம்.
விரைசெறி முளரியின் மிசைமுறை பெயரல மதிபலவியலு
[நின்னடி,
யுரைபல சுருகுவ துடன்மலை விலதரு ளொடுபொரு டழீயது
[நின்மொழி.

இவை இரண்டும் அராகம்.

நறையோடத் தோடவிழு நறும்பூமென் கணைதுரந்து
நிறையோடப் பொருமதனை நீருக நோக்கினையே.

அலைமாருக் கதிக்கடலு ளழுந்துயிர்மேவட் டலர்மரூஉங்
கொலைமாருக் கொடியவெங் கூற்றினையுங் குதித்தனையே.

எழுதரு செஞ் சுடர்போனின் றிலங்கொளிமண் டலத்தினையே
தொழுதகுவீட் டிறைவிமணந் தூற்றுந்துந் துயியினையே,

இவை மூன்றும் பெயர்த்துந் தாழிசை.

அலர் பொழியத் தேன்பொழியு மசும்பொழியா முன்றினையே
உலகடங்க வுள்ளடங்கி யொலி யடங்கா வெயிலினையே.

இவை நாற்சீரோரடி யிரண்டம் போதரங்கம்.



தொன்மறையை விரித்தோய் நீ;
துருநயங்க ளழித்தோய் நீ;
நன்னெறியை வகுத்தோய் நீ;
நமனுறுகாக் கதிபோய் நீ:

இவை முச்சீரோரடிநான்கம் போதரங்கம்.

வீர னீ;
விமல னீ;
விண்ணு நீ;
கண்ணு நீ;
தீர னீ;
சுகத னீ;
சிவனு நீ;
தவனு நீ;

இவை இருசீரோரடி யெட்டம் போதரங்கம்.

என வாங்கு,

இது தனிச் சொல்.

ஒருதனிக் கடவுணிற் பரவுது முயிர்க
ளின்னல்வெங் கனல்சுட் புன்னெறித் தலைச்சென்
றுறுபுலக் கோண்மாத் திரிதரு மகன்றலைப்
பிறவிக் கானத்து மறவியுற் றுழந்தாங்
கலமரு துயரினை யெறியுநின்
னிலமரு திகிரி நீடுவாழ் கெனவே.

இது சுரிதகம்.

(தொடரும்)

இங்ஙனம்,

மேல் மின்னல்-சக்கிரவர்த்தி நயினார்.

( DHARMASEELAN SUPPLEMENT )

## திண்டிவனம் ஸரஸ்வதி விலாஸ ஜைன வித்யார்த்தி நிலயம்.

---

இதனால் தர்மசிந்தையுடைய ஸகல ஜைன ஸமயகனவான்களுக்குத் தெரிப்பது யாதெனில்:—

பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திண்டிவனம் ஸரஸ்வதி விலாஸ வித்யார்த்தி நிலயம் இந்த இரௌத்திரி ஸு ஆனிமீ 21உ (4—7—1920) ஆதிவாரம், ஆதித்தியனுதயம் பூர்வஷாட நக்ஷத்திரம் கடக லக்னம்கூடிய சுபமுகூர்த்தத்தில் ஸ்தாபிக்கப்பெற்றது, இதில் இலவசமாக போஷிக்கப் படுவதாக ஒத்துக்கொண்ட மாணவர்கள் ஏழுபேர்; போஜன செலவை கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சேர்ந்த மாணவர்கள் மூன்று பேர்; ஆகமாணவர்கள் பதின்மர் வித்தியாரம்பம் செய்யப்பெற்றார்கள்.

இந்நிலயத்தின் அபிவிர்த்தியை விரும்பி மாதாந்திர சந்தாவாகக் கொடுப்பதாக வாக்களித்த சாஸ்திரதான தர்மத்தில் பிரியமுள்ள கனவான்களுடைய பெயர் தொகை முதலிய விவரமும், இவ்வித சுபவிசேஷங்கள் நடந்தேறும் சமயங்களில் ஆசீர்வாத பூர்வகம் நாம் செய்துவரும் வழக்கம்போல் மேடிநிலயாரம்ப காலத்தில் சில கனவான்களால் அளிக்கப்பட்ட ஸன்மானத்தின் விவரம் இதனடியில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களைப்போல் எல்லோரும் இதற்குதவி செய்வது சிறந்த தருமமாம்.

ஆகையால் சாஸ்திரதானத்தில் அபேக்ஷையுள்ள தனவான்கள் மாதாந்திர சந்தாவாகவோ அல்லது ஸன்மானமாகவோ தாங்கள் கொடுக்க விரும்பும் தொகையை திண்டிவனம் ஸரஸ்வதி விலாச ஜைன வித்யார்த்தி நிலயத்தின் ஸெக்ரடரி A. ஸம்பந்ராவ் அவர்கள் பேருக்கு மணியார்டர் செய்யும்படி பிரார்த்திக்கிறேன்,

திண்டிவனம் }
—7—1920 }

A. P. சந்திரநாதன்
பிரஸிடெண்டு.

---

### மாதாந்திர சந்தா விவரம்.

| | ரூ. அ. ப. |
|---|---|
| மேல் மலையனூர் A. P. சந்திரநாத நயினார் | 20—0—0 |
| நெய்ப்பதம்பூர் குணமாலையம்மாள் | 10—0—0 |
| பெரும்புகை இராமசாமி நயினார் | 10—0—0 |
| வீடூர் விஜய கீர்த்தி நயினார் | 7—8—0 |
| சென்னை Prof. A. சக்கிரவர்த்தி நயினார் M. A. | 5—0—0 |



| | |
|---|---|
| திருவாரூர் A. துரைசாமி முதலியார் | 5—0—0 |
| ஆலக்கிராமம் வி. அப்பாவு நயினார் | 5—0—0 |
| தஞ்சாவூர் நேமிநாத முதலியார் | 5—0—0 |
| மேல் சித்தாமூர் வே. பார்சுவநாத நயினார் | [illegible]—0—0 |
| முளசூர் A. S. ஸ்ரீனிவாச ரெட்டியார் | [illegible]—0—0 |
| நெல்லியாங்குளம் ஜெயபால நயினார். | [illegible]—0—0 |
| சென்னை தி. ஆதி நயினார் }<br>ஷை பார்சுநாத நயினார் }<br>ஷை வஜ்ஜிரபாகு நயினார் } | [illegible]—0—0 |
| வெண்குணம் செல்வரசு சாஸ்திரியார் | [illegible]—0—0 |
| கூடலூர் அம்புஜம்மாள் | 2—8—0 |
| வெண்குணம் அனந்த விஜய நயினார் | 2—8—0 |
| வேம்பூண்டி மணியம் சிம்மசந்திர நயினார் | 2—8—0 |
| திண்டிவனம் ஸரஸ்வதியம்மாள் | 2—8—0 |
| நெல்லியாங்குளம் மணியம் தனபால நயினார் | 2—8—0 |
| திண்டிவனம் பத்திரபாகு நயினார் | 2—0—0 |
| பேரணி அப்பாண்டநாத நயினார் | 2—0—0 |
| வீடூர் A. ஜயகீர்த்தி நயினார் | 2—0—0 |
| மேல்சித்தாமூர் பா. சமுத்திரவிஜய நயினார் | 2—0—0 |
| பெலாகுப்பம் துரைசாமி ரெட்டியார் | 2—0—0 |
| கப்பியாம் புலியூர் தனபால நயினார் | 2—0—0 |
| வடமருதூர் மணியம் சக்கிரவர்த்தி நயினார் | 2—0—0 |
| பெருமண்டூர் அ. அனந்தவிஜய நயினார் | 2—0—0 |
| திண்டிவனம் க. சன்னதம்பி நயினார் | 1—0—0 |
| வேம்பூண்டி ஜோதிஷம் A. அய்யண நயினார் | 1—0—0 |
| திண்டிவனம் சக்கிரவர்த்தி நயினார் | 1—0—0 |
| ஆலக்கிராமம் அ. அப்பாசாமி நயினார் | 1—0—0 |
| ஆலக்கிராமம் அ. லோகபால நயினார் | 1—0—0 |
| கப்பியாம் புலியூர் பானுகுமார நயினார் | 1—0—0 |
| ஆலக்கிராமம் ஸ்ரீபால நயினார் }<br>அபராஜித நயினார் } | 1—0—0 |
| ஆலக்கிராமம் பத்திரபாகு நயினார் | 1—0—0 |
| பெருமண்டூர். வ. அய்யண நயினார் | 1—0—0 |
| காஞ்சீபுரம் ஆ. துரைசாமி நயினார் | 1—0—0 |
| பேரணி செல்வரசு நயினார் | 1—0—0 |

162012

| | |
|---|---|
| மோழியகல்லூர் மணியம் வைலாமூர் சந்திரகீர்த்தி நயினர் | 1—0—0 |
| மோழியகல்லூர் மல்லிநாத நயினர் | 1—0—0 |
| பேரணி குப்புசாமி நயினர் | 0—8—0 |
| வைலாமூர் பத்திரபாகு நயினர் | 0—8—0 |
| வைலாமூர் அர்க்ககீர்த்தி நயினர் | 0—8—0 |
| வைலாமூர் ஸ்ரீபால நயினர் | 0—8—0 |
| செண்டியம் பாக்கம் ஸ்ரீபால நயினர் | 0—8—0 |
| வைலாமூர் பத்மராஜ நயினர். | 0—8—0 |

## சன்மான தொகை விவரம்.

---

| | |
|---|---|
| மேல்மலையனூர் A. P. சந்திரநாத நயினர் | 25—0—0 |
| வேலூர் தனமதியம்மாள் | 25—0—0 |
| வீடூர் விஜயகீர்த்தி நயினர் | 15—0—0 |
| பெரும்புகை. இராமசாமி நயினர் | 15—0—0 |
| சென்னை பார்சுவநாத நயினர் | 10—0—0 |
| திருவாலூர் துரைசாமி முதலியார் | 10—0—0 |
| திண்டிவனம் ஸரஸ்வதி யம்மாள் | 10—0—0 |
| சித்தாமூர் பார்சுவநாத நயினர் | 10—0—0 |
| [illegible]நதூர் சக்கிரவர்த்தி நயினர் | 10—0—0 |
| திருப்பறம்பூர் குணமாலையம்மாள் | 10—0—0 |
| ஆலக்கிராமம் கோ. தனமதியம்மாள் | 10—9—0 |
| திண்டிவனம் பத்திரபாகு நயினர் | 5—0—0 |
| கப்பியாம்புலியூர் தனபால நயினர் | 5—0—0 |
| ஆலக்கிராமம் வீ. அப்பர்வு நயினர் | 5—0—0 |
| ஆலக்கிராமம் அ. அப்பாசாமி நயினர் | 5—0—0 |
| வேம்பூண்டி மணியம் சிம்மசந்திர நயினர் | 5—0—0 |
| சென்னை C. S. மல்லிநாத ஜெயின் | 5—0—0 |
| வேம்பூண்டி ஜோதிஷம் அய்யண்ண நயினர் | 5—0—0 |
| சித்தாமூர் ஜீ. சம்பத்துராவ் நயினர் | 5—0—0 |
| வீடூர். ஜெயகீர்த்தி நயினர் | 3—0—0 |
| வீடூர் அ. சக்கிரவர்த்தி நயினர். | 2—0—0 |
| பெருமண்டூர் அ. அனந்த விஜய நயினர் | 2—0—0 |



| | |
|---|---|
| காஞ்சீபுரம் அ. துரைசாமி நயினர் | 2—0—0 |
| ஆலக்கிராமம் அபராஜித நயினர் | 2—0—0 |
| சித்தாமூர் ஜினதாஸ் நயினர் | 2—0—0 |
| திண்டிவனம் சின்னத்தம்பி நயினர் | 1—0—0 |
| ஆலக்கிராமம் அ. அனந்தநாத நயினர் | 1—0—0 |
| ஆலக்கிராமம் அ. லோகபால நயினர் | 1—0—0 |
| சித்தாமூர் சமுத்திர விஜய நயினர் | 1—0—0 |
| ஆலக்கிராமத்தார் வரவு கிராமபொதுவில் அரிசி பாயத்தில் ரொக்கம் | 15—0—0 |
| வேம்பூண்டி கிராமத்தார் கிராமபொதுவில் அரிசி பாபத்தில் ரொக்கம் வரவு | 13—0—0 |

குறிப்பு:—இந்நிலையை விஷயத்தில் கனம் A. P. சந்திரநாத நயினரவர்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் எடுத்துக் கொண்டிருக்கும் அரும்பிரயாசை மிகவும் கொண்டாடத் தக்கது. தருமங்களிலெல்லாம் இதுவே சிறந்த தருமமாகும். நம்மவர்களெல்லோருமே இத்தகைய தருமங்களில் தலையிட்டுழைக்க முன்வருவார்களாயின் நம்மதம் விருத்தியடையுமென் பதில் என்ன தடை யிருக்கின்றது.

பத்திராதிபர்.

## ஜைன மகா சபை.

### காஞ்சிபுரம்.

### (Jain Mahasabha Conjeeveram)

**4—7—29.**

இரௌத்திரி ஆனிமீ 21உ காஞ்சிபுரம் மேட்டுத்தெரு 65-வது கெ பர் [illegible]தை வீட்டில் காலை 9 மணிக்கு ஷை நகரத்திய சகல ஜைன கனவான்கள், ஸ்ரீமான் புஷ்பநாத நயினார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடினார்கள். பிறகு "ஜைன மகா சபை" என்ற ஒரு சங்கம், ஸ்தாபிக்க வேண்டுமாய் ஸ்ரீமான். C. S. மேகுமார் ஜெயின் அவர்கள் பிரரேபிக்க சகல ஜைன கனவான்களும் அங்கீகார கரகோஷம் செய்தனர். பின்பு ஷை சங்கத்திற்கு கீழ் கண்ட கனவான்களை சங்க காரிய நிர்வாகத்தினராக நியமிக்கப்பட்டது.

## காரிய நிர்வாக மெம்பர்கள்.

| | | |
|---|---|---|
| ஸ்திர அக்கிராசனாதிபதி | ஸ்ரீமான் | தி. அனந்தநாத நயினார். |
| உப அக்கிராசனாதிபதி | ,, | ஜெய கீர்த்தி நயினார். |
| காரியதரிசி | ,, | தி. ஆ. பலதேவ நயினார். |
| உப காரியதரிசி | ,, | அ. அப்பாண்டை நயினார் |
| ,, | ,, | அய்ய நயினார். |
| பொக்கிஷதார் | ,, | அ. துரைசாமி நயினார். |
| உப பொக்கிஷதார் | ,, | T. N. தன்னீயநயினார். |

காரிய நிர்வாக மெம்பர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்தபின், ஸ்ரீமான் மேல் மின்னல் M. சக்கிரவர்த்தி நயினார் அவர்கள் "சங்கத்தின் அவசியம்" என்ற விஷயமாய் ஓர் உபந்நியாசம் செய்தார்.

இரண்டாவதாக, சென்னை, ஸ்ரீமான் C. S. மேகருமார் ஜெயின் அவர்கள் சங்கங்களின் நோக்கங்களும், அவைகளை நடாத்து முறைகளும்" என்ற விஷயமாய் ஓர் உபந்நியாசம் செய்தார்.

இவ்விரண்டு உபந்நியாசங்கள் நடைபெற்ற பின்பு இடை வேளை போசனத்திற்காக சபை கலைந்து, மறுபடியும் மாலை 3 மணிக்குக் கூடியது.

பின்பு ஸ்ரீமான் மேல் மின்னல் M. சக்கிரவர்த்தி நயினார் அவர்கள் ...த்து முன்னோர்களின் நல்ல வேலை" என்னும் விஷயமாய் ஓர் உபந்நியா...செய்தார். உபந்நியாசம் முடிவு பெற்றதும் சங்கத்திற்கு நன் கொ...யளிக்க வேண்டுமாய் காரியதரிசி கோர, சகல ஜைன கனவான்களும் ...கொடை யளித்தனர்.

காஞ்சிபுர ஜைனர்கள் ஒவ்வொருவரும் பிரதி மாதமும் ஷை சங்கத்திற்கு ...று அணா சந்தா செலுத்த வேண்டுமாய், ஷை ஸ்திர அக்கிராசனாதிபதி யவர் ...தீர்மானம் கொண்டுவர, சகல கனவான்களும் அங்கீகார ...ரகோஷம் செ...து ஷை தீர்மானத்தை ஒப்புக்கொண்ட பிறகு, அக்கிராசனாதிபதி யவர்களுக்கும் வெளியூர் உபந்நியாசகர்களுக்கும் காரியதரிசியால் வந்தன மளிக்கப்பட்டு, ...கள் வாழ்த்துடன் சபை கலைந்தது.

இங்ஙனம்.

ஜைன மகா சபை காஞ்சிபுரம் }
5—7—20. }

தி. ஆ. பலதேவ நயினார்,
காரியதரிசி.

---

2 - NOV 1920
MADRAS.

ஓம்
ஸ்ரீ ஜிநாயநம:

# தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)

| புத்தகம் 3 | இரௌத்திரி வருஷம் ஆவணி மீ 1920 வருஷம் ஆகஸ்டு மீ | சஞ்சிகை 5 |
|---|---|---|

## தருமோபதேசம்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கடையதனில் வியாபாரஞ் செய்யும் போது
காசுகொண்டு பலசரக்கு வாங்கு தற்கு
நடையாக வருவாரை நிறுத்தி வைத்து
நாளெல்லாம் வீண்கதைகள் பேசிக் கொண்டும்
தடையின்றிப் பிந்திவந்தோர் தம்மை யெல்லாந்
தாமதமி லாதனுப்பி முன்வந் தோர்க்கு
விடைகூறு திருந்தும்வியா பாரஞ் செய்யும்
வியாபாரி விவேகமற்ற மூட னாமே. (ச...

நோய்க்கேது மிடங்கொடா திருக்க வேண்டும்
நோய்வந்தால் மருந்துடனே யுண்ண வேண்டும்
வாய்க்கேது வானவற்றைத் தின்று நோயை
வளர்த்துவிட லாகாது மயக்க மோகப்
பாய்க்கிடையே யெப்பொழுதும் படுக்கொ ணாது
பத்தியத்தில் தவறேதும் செயலா காது
சாய்க்கவரும் பிணியொழிக்க வேண்டு மென்றால்
சாற்றுமிந்த நீதியைக்கை விடலா காதே. (ச...

அதிகார மிருந்தவுத்தி யோகம் பெற்றோர்
அவனியிலே மானிடர்மீ தன்பு கொண்டு
எதிரினும் நடுநிலைமை தவறி டாமல்
எவ்விஷயத் தையும்நேரில் போயா ராய்ந்து
நிதிவாங்கு மாசைவிட்டுக் குடிக ளுக்கு
நீதிதவ றாமல்நலம் புரிய வேண்டும்
சதியாகப் பலபேர்க்குந் துன்பஞ் செய்தால்
சகிக்கவொண்ணாக் கொடுநரகிற் சாய்வர் தாமே.

# தருமசீலன்.

இரௌத்திரி௵ ஆவணி௴

## பழகும் முறைமை.

பழகும் முறைமையாவது, மனிதர் ஒருவரோடொருவர் சிநேகஞ் செய்து கொள்ளும் கிரமமாம். இது, மானிடர்க்கு மிகவும் அவசியமானது. இஃதில்லாவிடின் மனித வாழ்க்கையானது திருப்தியுடன் நடைபெறாதென்பது திண்ணம். இன்னும் மற்ற ஜீவவஸ்துக்களும், அஜீவ வஸ்துக்களும் சேர்க்கையினாலேயே சிறப்புறும். உலகத்தில் சேர்க்கை யில்லாதது எதுவுமில்லை யென்றே சொல்லலாம். இருபொருட்கலப்பின்றி உலகம் நடைபெற மாட்டாதென்பதை யுணர்ந்தே சர்வக்ஞரான கடவுள் இவ்வாறு எல்லாவற்றிற்கும் இருபொருட் சேர்க்கையை ஏற்படுத்தி யிருக்கிறார். நாம் இப்பூமியில் எந்த வஸ்துவை எடுத்து ஆராய்ந்து பார்த்தாலும் ஒவ்வொன்றுக்கும் சிறப்பு மற்றொரு வஸ்துவின் சேர்க்கையினாலேயே யுண்டாகிற தென்பதை உணரலாம். மரம் செடி கொடி முதலியவையெல்லாம் நீரின் சேர்க்கையினால் செழிப்படைகின்றன. மலர்கள் நாரோடு சேர்த்துத் தொடுக்கப் பட்டபின் மாலையென்று சொல்லப்பட்டுச் சிறப்படைகின்றன. பால் சர்க்கரையோடு சேர்ந்து சுவை அதிகரிக்கின்றது. காய் கறி பதார்த்தங்கள் உப்போடு சேர்ந்து உயர்வடைகின்றன. செங்கல் சுண்ணாம்போடு சேர்ந்து உறுதிப்பட்டுக் கட்டிடமாகின்றது. ஆயுதங்கள் சாணையோடு சேர்ந்து கூர்மை யடைகின்றன. இரதம் முதலியவைகள் குதிரைகள் முதலிய மிருகங்களோடு சேர்ந்து நடைபெறுகின்றன. மணம் நாற்றோடு சேர்ந்த பின்னரே சிறப்படைகின்றது. ஸ்திரீ நாயகனோடு சேர்ந்தபின் சிறப்படைகிறாள். அவ்வாறே ஆடவனும் இல்லக் கிழத்தியால் புகழடைகிறான். மாணாக்கர் ஆசிரியரால் சிறப்படைகிறார்கள்; இராஜாக்களும் மந்திரிகளால் சிறப்படைகிறார்கள். சிறுகொடிகளும் கூடப் பக்கத்திலுள்ள மரத்தின் உதவியினால் அதில் படர்ந்து சிறப்படைகின்றன. இப்படியே நாம் எந்த வஸ்துவைப் பார்த்தாலும் எல்லாம் சேர்க்கையினாலேயே நடைபெறுவது செவ்வ



னே விளங்கும். இதனாலேயே அறிவுள்ளவர்கள், தங்கள் குணத்திற்குத் தகுதியானவர்களோடு பழக்கம் வைத்துக் கொள்ளுதல் இயற்கை. இவ்வாறு நல்லவர்களோடு பழக்கம் வைத்துக் கொள்வதால் எப்பொழுதும் மனத்திருப்தியோடு வாழலாம். தங்கள் குறைகளை அவர்களிடம் சொல்லி நிவர்த்தித்துக் கொள்ளலாம்; ஆபத்தில் அவர்களுடைய உதவியைப் பெற்றுக் கொள்ளலாம். இன்னும் எத்தனையோ அளவிறந்த நன்மைகளுண்டு. ஆனால் கெட்டவர்களுடைய பழக்கம் மாத்திரம் கூடாது. அது, பயிரை வெயில் எவ்வாறு எரித்து விடுமோ அவ்வாறே சேர்ந்தவரைக் கெடுத்துவிடும். ஆதலின் உத்தமர்களுடைய பழக்கத்தையே கைக்கொள்ள வேண்டும். இவ்வாறு சிநேகஞ் செய்வதற்கு,

"அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு"

என்றபடி முதலில் அன்பு ஏற்பட வேண்டும்; அதாவது அன்பான வார்த்தைகளைப் பேச வேண்டும். அவ்வாறு பேசுவதால் ஆசை அதிகரிக்கும்; அதாவது ஒருவர்மீதொருவர்க்குப் பிரிய முண்டாகும். அவ்வாறு பிரிய முண்டாகவே சிநேக மென்னும் ஓர் சிறப்புண்டாகிறது. அதாவது ஒருவரோடொருவர் கலந்திருத்தல் என்னும் இயற்கை யுண்டாகிறது. ஆகவே பழக்கம் அல்லது சிநேகத்திற்கு அன்பான வார்த்தையே ஆணி வேராகின்றது. அன்புள்ள வார்த்தையில்லாத விடத்தில் சிநேகம் ஏற்படுவது அருமை. இவ்வாறு அன்பான வார்த்தை கூறிக்கலந்துறவாடிப் பலவும் ஒன்று சேர்ந்து வாழும் இயற்கை எறும்பு முதலிய சில ஜீவராசிகளிடத்திலும் மிகவும் அதிசயிக்குமாறு காணப் படுகின்றது. சேர்க்கையாலுண்டாகும் நன்மையை உணர்ந்தே இவை பழகும் முறைமையை அவசியமாகக் கைக்கொண்டிருக்கின்றன. எறும்புகள் சாரியாகப் போய்த் திரும்பிக்கொண்டிருக்குமிடத்தில் அவைகளில் ஒவ்வொன்றும் எதிரில் வரும் ஒவ்வொன்றின் முன்னே போய் முகத்தோடு முகம் வைத்து விலகிச் செல்வதைக் காணலாம். இது அவை ஒன்றுடனொன்று அன்பான வார்த்தை கூறிச்செல்லுதற் கறிகுறியாம். அவை இப்படியே நிச்சயமாகப் பேசிச்செல்கின்றன. இப்பழக்கத்தால் அவற்றில் சுற்றச் சேர்க்கை அதிகம் ஏற்பட்டு அவை அநேகம் நன்மைக ளடைகின்றன. இன்னும் மாடுகளும் ஒன்றை யொன்று காணும்போது அன்போடு பார்த்து ஒ

வகைத் திணறுதலான சப்த மிட்டுச் செல்கின்றன. இவ்வாறு சப்தமிடுதல் அவை அன்பான வார்த்தை பேசிச்செல்வதற்கறி குறியாம். அவை அவ்வாறு நிச்சயமாகப் பேசியே செல்கின்றன. இன்னும் அநேக பிராணிகளிடத்தும் இக்குணம் அமைந்திருக்கின்றது. பழக்கத்தின் உயர்வை இத்தகைய பிராணிகளும் உணர்ந்திருப்பது அற்புதத்திலும் அற்புத மன்றோ!

இப்படி யெல்லாமிருந்தும் மனித வகுப்பாரில் சிலர்இந்த நற் பழக்கத்தின்கிரமத்தை உணராமலிருக்கிறார்கள். இது வியப்பினும் வியப்பே! சிலர் நல்லவரோடு பல நாள் பழகி யிருந்தாலும் அவரை எங்கேனும் ஓரிடத்தில் சந்தித்தால் எப்பொழுதுமே அறியாதவர்களைப்போல முகத்தைப் பார்த்த படியே பேசாமல் போகிறார்கள். சிலர், வேறு சில மனிதரிடத்தில் காரிய மிருந்தால் மாத்திரம் அவர்கள் நல்லவர்களா யிருந்தாலும் கெட்டவர்களா யிருந்தாலும் அவர்களோடு நெடு நாட்களாகப் பழகினவர்களைப்போல அவர்கள் தூரத்தில் வரும்போதே "அண்ணா! தாசன், தாசன்" என்று கள்ளக் கும்பிடு போட்டு அவர்களிடம் தங்கள் காரியத்தைப் பேசி முடித்துக்கொண்டு போய்ப் பின்னர்ச் சந்திக்கும்போது அவர்களுடன் வார்த்தை யொன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டு செல்வார்கள். இவ்வாறு செல்பவர்களிற் சிலர், தாங்கள் கிராப் என்னும் 'குரங்குக்குடுமி வைத்துக்கொண்டிருப்பதனாலும், காலர், கெட்டை, சட்டை, கக்குட்டை முதலியவற்றை யணிந்து போலித்துரைகளாய்க் கண்ணாடி போட்டு ஆகாயத்தைப் பார்த்தபடியே அண்ணாந்து நடப்பதாலும் எதிரில் வருபவரோடு பேசினால் தங்கள் அந்தஸ்திற்குக் குறைவாகுமென்று நினைத்து அவ்வாறு பேசாமல் செல்கிறார்கள்; சிலர், "நமக்குக் காரியமிருந்தால் தானே பேச வேண்டும்" என்று வஞ்சக எண்ணத்தால் அவ்வாறு செல்கிறார்கள்; சிலர் அவ்விதம் பேசிக்கொண்டிருந்தால் தங்கள் காரியம் கெட்டு விடுமென்று நினைத்துப் பேசாமல் போகிறார்கள்; சிலர் வெட்கத்தாலும் பயத்தாலும் பேசாமல் போகிறார்கள். கடனுக் கஞ்சிச் சிலர் தலை மறைந்து செல்கின்றார்கள். இந்தக் கொள்கைகளெல்லாம்முழுமூடக் கொள்கைகள். கெட்டவர்களோடு எந்த வார்த்தையும் பேசக்கூடாது. அவர்களுடன் சிநேகஞ் செய்தலும் தகாது. நல்லவர்களுடன் பழக்கம் செய்து கொள்ளாமலிருக்கும் அற்பருடைய மதியை என் னென்று புகல்வது! இதனால் இவர்களுக்கு மிகுந்த கெடுதி யுண்டாகுமே யொழிய நன்மை யுண்டாக மாட்டாது. கேவலம் எறும்பு முதலிய



வைகளும் இந்த நல்ல குணத்தைப் பெற்றிருக்கும் போது இந்த மனிதர்கள் உணராதிருப்பது புதுமையிலும் புதுமையே! இவர்களை என்னென்றுதான் புகல்வது? இவர்களுக்கு உவமை இவர்களே யன்றி வேறெதுவு மின்று. மற்ற அவிவேகிகள் தாம் இப்படியிருக்கிறார்களென்றால் படித்த வித்வான்களெனப் பெயரெடுத்த சிலருங் கூட இப்படி யிருக்கிறார்கள். இவர்களைப் பற்றி எதுவும் கூற நாவெழவில்லை.

இத் தன்மையைக் கொண்டிருப்பதால் சென்னை முதலிய சிலவிடங்களில் ஒரு வீட்டில் குடியிருப்பவர்களுங்கூட ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளாதவர்களா யிருக்கிறார்கள்; ஒரு வீட்டில் போய் ஒருவரிடம் மற்றொருவரை விசாரித்தால் "அவரை நான் அறியேன்" என்று அவர்கள் புகல்கிறார்கள்; இப்பேர்ப்பட்டவர்கள் இதுதான் ஒழுங்கென்றும் பெருமை பேசுகிறார்கள். இது போன்ற அவிவேகத் தன்மை வேறெதுவு மில்லை. இந்த மூடக் கொள்கையால் சிலர் தங்களுக்குப் பொறுக்க முடியாத நோய் வந்தாலும் வேறு பல துன்பங்கள் வந்தாலும் தேறுதல் சொல்வதற்கும் மனிதரின்றித் தாங்களே வீட்டிற் குள்ளிருந்தபடி அவற்றை அனுபவிக்கிறார்கள். சிலர் தாங்க முடியாத உபத்திரவம் வந்த காலத்திலும் தாங்கள் மட்டுமே வீட்டிலிருந்து பல்லைக் கடித்து முட்டி மோதிக் கொண்டு உயிர் விடுகிறார்கள்; இதனால் இவர்கட்குக் கிடைக்கும் பலனென்ன? இப்படியும் மனித சுபாவம் இருக்குமோ? இப்பேர்ப்பட்டவர்கள் உலகத்தில் இருப்பதால் ஒரு பயனுமில்லை. ஆதலின், கெட்டவர் பழக்கத்தைத் தள்ளி நல்லோருறவை நாடி அவருடன் பழகிச் சுகமடைவோரே விவேகிகளாவர்.

பத்திராதிபர்.

## விஜயபாலன்.

பண்டைக் காலத்திலிருந்த இராஜதானி நகரங்களில் க்ஷேமபுர மென்னும் பட்டணமுமொன்று. இதற்கு இராஜா ஜெயபாலன்; இவன் பத்தினி ஜெயமதி; மந்திரி ஜெயவர்மா. இவர்கள் நீதி தவறாமல் இராஜ்ய பரிபாலனஞ் செய்து வருங்காலத்தில், ஜெயமதி கருப்பவதியாகி நவமாதஞ் சென்று ஒரு புத்திரனைப் பெற்றனள். இராஜா அதிக ஆநந்தத்தை யடைந்து ஜினாலய பூஜை உத்ஸவ முதலானவைகளையும், தான தருமங்களையுஞ் செய்து புத்திரனுக்கு விஜயபால னென்னும் நாமகரணமிட்டு அவனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான்.

அப்படி வளர்த்து வருங்காலத்தில் ஒரு சமயம் சிம்மபுரி மென்னும் பட்டணத்தை அரசாட்சி செய்து வந்த சிம்மசேன ராஜன், ஜெயபாலனோடு யுத்தஞ் செய்யக்கருதி, நால்வகைச் சேனைகளோடும் வந்து க்ஷேமாபுரத்தை வளைத்துக் கொண்டு இரணபேரியை முழக்கினான். அதனைக் கேட்ட தூதன் சென்று ஜெயபால ராஜனுக்கறிவிப்ப, ஜெயபாலன், கோபா வேகமுடையனாய் இரத கஜ துரகபதாதிகளுடன் சென்று அவனுடன் யுத்தஞ் செய்தான். சிம்மசேனன், அனேக பாணங்களை ஒன்றின் பின் ஒன்றாக ஜெயபாலன் மீது எவினான். ஜெயபாலன் சகிக்க முடியாத வேதனை யுற்றான். அவனுடைய வில்லும் முறிந்து போயிற்று. அதனால் அவன் கைகள் சோர்ந்தன. அக்காலத்தில் சிம்மசேனன் அந்த ஜெயபாலன் மீது மீண்டுமொரு கொடிய பாணத்தையெவி அவனைமரிக்கச் செய்தனன். உடனே சிம்மசேனனுடைய சைனியங்கள், அதிக ஆநந்தத்தோடு ஜெய கோஷம் செய்தன. அதைக் கேட்ட ஜெயமதி துக்கித்து 'என்ன செய்வோ' மென்று மூர்ச்சித்தனள். அப்போது தாதிகள் அவளுடைய மூர்ச்சையை நீக்கி, அவள் தெளிந்தெழுந்தவுடன் அவளை நோக்கி, "தாயே! நீ எங்கேயாவது ஓடி மறைந்து நின் குழந்தையைக் காப்பாற்றுவாயாக" வென்று சொன்னார்கள். உடனே ஜெயமதி தன் கைவச மிருந்த பொருள்களையும் குழந்தையையும் எடுத்துக்கொண்டு யாருமறியாத படி இரவில் வெளியேறிச் சென்று சம்பாபுர மென்னும் பட்டணத்தை யடைந்து அங்குள்ள ஓர் வீட்டில் குடியிருந்து குழந்தையை வளர்த்து வந்தாள்.

அப்படி வளர்த்து வருங்காலத்தில் விஜயபாலனுக்கு ஐந்து வயதான படியால், ஜெயமதி, அவனைப் பள்ளிக்கூடத்தில் வைத்துச் சகல கலைகளையும் கற்கச் செய்தனள். அதன் மேல் விஜயபாலன், பதினாறு வயதடைந்து கல்வியிற் சிறந்தவனாயும், அதிக புத்திசாலியாயு மிருந்தனன்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்றபடி ஜெயமதி தன் மகன் கல்வியில் வல்லவனாயிருத்தல் பற்றிப் பெருமகிழ்ச்சி யடைந்திருந்தாள். அப்படியிருக்குங் காலத்தில் தன்னிடமிருந்த பொருள்கள் செலவழிந்து விட்டமையால் ஜெயமதி ஒரு தினம், கொஞ்சம் மனவருத்த மடைந்தாள். அதைக்கண்ட விஜயபாலன் தாயாரை நோக்கி "அன்னையே! இன்று உன் மனம் ஏதோ கவலைக்குள்ளாகி யிருப்பதாகத் தோன்றுகிறது. அதனை யெனக்கு விளங்க உரைப்பாயாக" என்றான். அதற்குத் தாய், "நம்மிட மிருந்த பொருள் செல வழிந்து விட்டதால் இனி யெப்படி ஜீவிப்பதென்று என் மனதில் வருத்தம் உண்டாய் விட்டது; இதை எப்படி உன்னிடம் சொல்வதென்று நான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொன்னாள்.



விஜயபாலன், தாயினுடைய கஷ்டத்தை யறிந்து தனக்கும் துயர முண்டானதால், அவளை நோக்கி, "மாதாவே! என் தகப்பன் யார்? நம் நாடுநகரங்கள் எவை?" என்று கேட்டான். தாய் தன் புத்திரனுக்கு பூர்வ சங்கதிகள் யாவற்றையுஞ் சொன்னாள். விஜயபாலன் அவற்றைக்கேட்டு அதிக வருத்தத்தை யடைந்து உடனே தேறி, தாயாரை நோக்கி, "அன்னையே! இனி நான் தேசசஞ்சாரம் செய்து, பொருள் தேடி ஒரு நன்னாட்டிலே குடியேறி என் பெயரை நிலைநாட்டி எதிரியையும் ஜெயித்து, அவனிடமிருக்கும் இராஜ்யத்தையும் என் சுவாதீனம் செய்து கொள்வேன்; நீ கவலைப்படாதே" என்று சொல்லித் தாயையுந் தேற்றினான். பிறகு சிலநாட்கள் சென்றதும், அவளும் மரித்தனள். அதன்மேல் விஜயபாலன், தாயாருக்குச் செய்யவேண்டியகிரியைகளைச்செய்து விட்டுத் தேச சஞ்சாரஞ் செய்யப் புறப்பட்டான்.

அவ்வாறு புறப்பட்டு ஒவ்வொருதேசத்திற்கும் தவறாமல் சென்று கடைசியில் உஜ்ஜையினி என்னும் பட்டணத்தை யடைந்தான். அப்போது அந்தப் பட்டணத்தில் செங்கோல் நடத்தி வந்த இராஜா ஜிநேந்திரன்; அவன் பத்தினி ஜிநமாலை; மந்திரி ஜிநதாஸன். இவர்களின் ஆட்சிக்குட்பட்ட அந்நகரத்தில் விஜயபாலன் புகுந்ததும் அந்தப் பட்டணம் முழுமையும் வீதி வீதியாகச் சென்று சுற்றிப் பார்த்து "இந்தப்பட்டணம் நீர்வளமும், நிலவளமும் பொருந்தி அதிகச் செழிப்புற்றிருக்கிறது. இங்குள்ளவர்களோ செல்வாக் குடையவர்களாயிருக்கிறார்கள்; ஆதலின் நாம் இங்குத்தான் தங்க வேண்டும்" என்று கருதித் தனக்கு அதிக இளைப்பாயிருந்த படியால் இராஜாவின் அரண்மனையைச் சுற்றிப் பார்த்துவிட்டுப்பறையறைவிக்கும் தலையாரியின் வீட்டுத் திண்ணையில் 'இங்கே சற்று இளைப்பாறுவோம்' என்று படுத்துக்கொண்டான்.

அவ்வாறு படுத்திருக்கும்போது, தலையாரி அவனைக் கண்டு "இவன் யார்? இராஜ புத்திரனைப் போலிருக்கின்றான்; அதிக லக்ஷணமுடையவனாயும், சிறுவயதுடையவனாயு மிருக்கின்றான்" என்று அதிசயித்து அவனை நோக்கி, "குழந்தாய்! நீ யார்? நீ இருப்பது எந்தத்தேசம்? நின் பெயரென்ன" வென்று கேட்க அவன் "ஐயா! என் பெயர் விஜயபாலன்; எனக்குத் தாய் தகப்பன் இல்லை; நான் ஒரு பரதேசி" யென்று சொன்னான். அதைக் கேட்டுத் தலையாரி, தன் வீட்டிற்குள் அப்பிள்ளையை அழைத்துக்கொண்டு போய் அவனுக்கு அன்னமளித்தனன். அவன் உணவு சாப்பிட்டு இளைப்புத் தீர்ந்து வெளியே புறப்பட்டான். அத்தருணத்தில் தலையாரி அவனைப் பார்த்து "புருட சிகாமணியே! எனக்குப் புத்திரனில்லாமையால் நான் உன்னை அபிமானபுத்திரனாகக்கொண்டு, என் பொருள்களை யெல்லாம் உனக்குத்தர உத்தேசித்திருக்கின்றேன்; ஆதலால் நீ எனதெண்ணத்தை மறுக்காமல் ஒப்புக்கொள்ளும்படி நான் உன்னிடம் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான். விஜயபாலன் அதற்குச் சம்மதித்தான்.

அதன்மேல் விஜயபாலன் தலையாரியின் வீட்டில் தங்கி அவன் சொற்படி நடந்து சௌகரியமா யிருந்து வந்தான். அக்காலத்தில் ஒருநாள் தலையாரிக்கு தேக அசௌகரியமாயிருந்ததால் அவன் விஜயபாலனாகிய புத்திரனை யழைத்

து அவன் நோக்கி, "குழந்தாய்! இன்று எனக்கு இராஜாவின் அரண்மனையைச் சுற்றி மாடவீதியில் பறையறைவிக்க அசாத்தியமாயிருப்பதால் நீ போய் அவ் வேலையை நிறைவேற்றி வா" வென்று சொன்னான். விஜயபாலன் அதற்கிசைந்து ராஜாவின் கீழ்மாட வீதியிற் சென்று முதல் ஜாமத்தில்,

" மாதா நாஸ்தி பிதா நாஸ்தி
நாஸ்தி பந்து சகோதர ஹ
அர்த்தம் நாஸ்தி கிரகம் நாஸ்தி
தஸ்மாத் ஜாக்ரதி ஜாகர:"

என்று சொல்லிப் பறையறை வித்தான். அந்தச் சமயம் ஜிநேந்திர ராஜாவும் பத்தினியும் அந்தப் புரத்தில் அதிக ஆநந்தத்தோடு பேசிக் கொண்டிருந்தார்கள். டாம் டாம் என்ற பறையொலியும், விஜயபாலன் கூறிய சுலோகமும் இராஜாவின் செவியிற் பட்டன. உடனே இராஜா, "இது என்ன ஆச்சரியம்! இன்று பறை யறை வித்தவன் கல்வியிற் சிறந்த வனாகவும், சிறுவயதுடையவனாகவும், கஷ்டத்தை யனுபவித்தனாகவும் விளங்குகிறான்" என்று யோசித்தான். அச் சமயத்தில் அவனுடைய பத்தினி "பிராண நாதா!" என்று அவனைக் கூப்பிட்டாள்.

இராஜா, மேற்கூறியபடி யோசனையிலிருந்த படியால் மௌனமாக விருந்தான். ஜிநமாலை அது கண்டு "என் அன்பிற்கிசைந்த நாத! திடீரென்று நீர் பேசாமலிருப்பதற்குக் காரணம் யாது?" என்று கையினால் அவனைத்தட்டிக் கேட்டாள். அதற்கு ஜிநேந்திர மகாராஜன், "பெண்ணே! இப்பொழுது தலையாரி பறையறைவித்ததில் என்ன விசேஷம் ஏற்பட்டது? அஃதுனக்குத் தெரியுமா? சொல்லுவாயாக" வென்றான். அதற்கு ராஜ ஸ்திரீ, "மகாராஜாவே! இதற்குமுன் டாம் டாம் என்னும் பறையின் சப்தத்தை மாத்திரம் சிற்சில நாள்களில் நான் தூங்காமலிருக்குஞ் சமயத்தில் கவனித்துக் கேட்டதுண்டு; இன்று தங்களிடம் வார்த்தை பேசிக்கொண்டிருந்ததனால் அதை நான் கவனிக்கவில்லை; நாதரே! இன்று அதில் என்ன விசேஷம் ஏற்பட்டது?" என்றாள்.

அதற்கு அரசன் "மாதர்க்கரசியே! இன்று பறை யறைவித்தவன், 'தாய், தகப்பன், பந்துக்கள், சகோதரர், பொருள், வீடு முதலானவைகள் இல்லை; நீ எப்பொழுதும் ஜாக்கிரதையாகத் தூங்காமலிரு' என்று அறிவித்தான். ஆகையால் நாம் யோசிக்கும் பொழுது,

" கூற்றுவன் கொடிய னாகிக் கொலைத்தொழிற் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீக்கி நுகர்ச்சியி லுலக நோக்கி
யற்றுறப் போத றேற்று மனியமோ ஓ பெரிய மோகாண்.
(சிந்தாமணி)



' துகடீர் பெருஞ்செல்வந்தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.' (நாலடி.

என்ற செய்யுட்களின் கருத்தின்படி, கொடியோனாகிய எமனானவன் வீசி வைத்த மரண மென்னும் வலைக்குட் சிக்கி, நாம் மரிப்பது திண்ணமென்பதும், அதை யறிந்தும் தவஞ் செய்யாமலிருப்பது தகுதி யன்றென்பதும், நம் நாடு, நகரம், வீடு, பொருள், கட்டில், மெத்தை, ஆடை, ஆபரணம் முதலானவைகள் அநித்திய மென்பதும், செல்வம் என்பது செல்லுவோ மென்று பொருள் படுவதாலும், தரித்திரம் என்பது தரித்து இரோ மென்று பொருள் படுவதாலும் இவ்விரண்டும் ஓரிடத்திலும் நில்லாமல் சக்கரம் போலச் சுழன்று வருமென்பதும், நமக்கு இந்த ராஜ்யம் நிச்சயமில்லை யாதலால் நிலைத்த பொருளாகிய தருமத்தைத் தேட, பலரு முண்ணும்படி அன்னதானம் நடக்கும் சத்திரம் கட்ட வேண்டு மென்பதும் விளங்கு கின்றன; ஆதலின் அவ்வாறே நாம் செய்ய வேண்டும்" என்றான். இவ்வாறு இருவரும் சம்பாஷணை செய்து கொண்டு தூங்காமலிருக்குஞ் சமயத்தித் தலையாரி தெற்கு மாடவீதியிற் சென்று இரண்டாவது ஜாமத்தில்,

" ஜந்ம துக்கம் ஜரா துக்கம்
ஜாயா துக்கம் புநர்ப்புந:
ஸம்ஸாரம் ஸாகரம் துக்கம்
தஸ்மாத் ஜாக்ரதி ஜாகர:"

என்று சொல்லிப் பறை யறைவித்தான். இந்த சுலோகத்தினை இருவரும் கேட்டார்கள். உடனே ஜிநமாலை, அரசனை நோக்கி, "பிராண வல்லபா! இப்பொழுது கேட்ட சுலோகத்தின் தாத் பரியம் என்ன?" வென்று கேட்டாள். இராஜன், அவளை நோக்கி, "ஜிநசாஸ்திரத்தைக் கற்றுணர்ந்த ஜிநமாலையே! 'ஜென்மமெடுப்பதும் துக்கம்; கிழத்தன்மை யடைவதும் துக்கம்; பாரியாளாலும் துக்கம்; மறுபடியும் இந்த ஸம்ஸாரத்தில் உழல்வதும் துக்கம்; ஆகையால் எப்போதும் தூங்காமல் ஜாக்கிரதையாக இரு' என்பது இந்த சுலோகத்தின் தாத்பரியமாம்; இதைப்பற்றி யோசிக்கு மிடத்து,

' நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார் புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
யின்னாங் கெழுந்திருப் பார்' (நாலடியார்)

என்று செய்யுட் கருத்தின்படி இழத்தன்மை வருமுன் துறவடைய வேண்டு மென்பது விளங்குகின்றது. ஆதலின் நான் துறவறம் பூண்டு காட்டுக்குச் செல்ல நினைக்கிறேன்" என்றான். அது கேட்டு அவள் துக்கித்து மன்னனை நோக்கி, "சிறிது காலஞ் சென்று அப்படியே செய்து கொள்ளலாம்" என்று சொன்னாள். அதற்கு ராஜன், "ஹே மாது! ஏன் நீ இவ்வாறு துறவைத் தடை செய்கிறாய்?" என்று வினவினான். அது கேட்டு ஜிநமாலை "சுவாமி! நமக்குச் சந்ததி உண்டான பிறகு அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டுச்சென்றால் அது உத்தமமாக விருக்கும்; அப்போது தங்களுடன் நானும் ஸம்ஸார விரக்தி யடைந்து வருவேன்; இதன் பொருட்டே நான் தடை கூறினேன்" என்றாள்.

(தொடரும்.)

தீ. அநந்தநாதநயினார்
காஞ்சீபுரம்.

---

# நரி விருத்தம் மூலமும், உரையும்.

(முன் தொடர்ச்சி புத்தகம்: 2, சஞ்சிகை 2. பக்கம்-56)

மான வேன்மன்னன் மாதவத் தார்க்குண்டி
தான மீயுழிச் சத்திய பாமையும்
ஊன மின்மனத் தாலுடன் பட்டனள்
ஈன மில்குரு வத்திடை யெய்தினாள்.

(இ-ள்) மானம்-பெருமை பொருந்திய, வேல்-வேலாயுதத்தை யுடைய, மன்னன்—ஸ்ரீ ஷேண மகாராஜன், மாதவத்தார்க்கு-சிறந்த தவத்தினை யுடையவர்க்கு, உண்டி-உணவை, தானம்-தானமாக, ஈயுழி-கொடுக்குமிடத்து, சத்திய பாமையும்-சத்திய பாமை என்பவளும், ஊனம் இல்-குற்றம் அற்ற, மனத்தால்-உள்ளத்தினாலே, உடன் பட்டனள்-அதற்கு இசைந்தவளாகி (அப்புண்ணிய விசேஷத்தினாலே) ஈனம் இல்-குறைவுபாடில்லாத, குருவத்திடை — உத்தர குருவென்னும் போக பூமியை, எய்தினள்-அடைந்து சுகம்பெற்றாள். எ-று.

(வி-ரை.) ஸ்ரீஷேண மகாராஜனால், கபிலன் என்னும் தாசி புத்திரனுக்கு விவாகஞ் செய்விக்கப் பெற்ற சத்திய பாமை யென்பாள், அம் மகாராஜன், தபஸிகளுக்கு ஆகார தானத்தினைச் செய்யுங் காலத்தில் தானும் அதற்குடன்பட்டிருந்த புண்ணிய விசேஷத்தால் உத்தர குரு வென்னும் போகபூமியிற் சார்ந்து சௌக்கியத்தை யடைந்தனள்' என்பது ஸ்ரீ புராண கதை. இது ஷை ஸ்ரீபுராணம் சாந்தி தீர்த்தங்கரர் மான்மியத்திலுள்ளது. மாதவத்தார்- ஆதித்திய மதிகள் அரிஞ்சயர் என்பார். உண்டிதானம்-ஆகாரதானம்; இது ஆகார, அபய, ஔஷத சாஸ்திர மென்னும் நால்வகைத் தானங்களு ளொன்று; அதாவது: மகா தபஸிக்கு விசுத்த ஆகாரத்தினை அளித்தல். குருவம்-உத்தரகுருவென்னும் போக பூமி; இது, புண்ணியஞ் செய்தாரெய்தி போகத்தை யநுபவிக்கின்ற பூமியாதற் குரியது. உழி-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு; சத்திய பாமையும் என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்புப் பொருளது. இறந்தது தழுவியதுமாம். (௬௦).



கயக்கில் கற்புடைப் பார்ப்பனி போசனம்
வியக்கப் பட்டவள் வேதியற் கில்வழி
மயக்கின் மாதவத் தாற்குண்டி யீந்தவள்
இயக்கி யாயின ளென்பதுங் கேட்டுமால்.

(இ-ள்) வியக்கப்பட்டவள்-எல்லோராலும் வியந்து கொண்டாடப்பட்டவளாகிய, கயக்கு இல்-வேறுபாடில்லாத, கற்புடை-பதிவிரதா தருமத்தை யுடைய, பார்ப்பனி-ஒரு பிராமணப் பெண்ணானவள், போசனம்-உணவு, வேதியற்கு-தன் கணவனாகிய பிராமணனுக்கு, இல்வழி-இல்லாத போதும், மயக்கு இல்-மயக்கமில்லாத, மாதவத்தாற்கு-சிறந்த தவத்தை யுடையவொரு முனிவருக்கு, உண்டி-உணவை, ஈந்தவள்-கொடுத்தவளாய், (அப்புண்ணியவசத்தினாலே) இயக்கியாயினள்-தரும தேவி யென்ற யக்ஷியாகிப் பிறந்தனள், என்பதும்-என்ற சரித்திரமும், கேட்டும்-கேட்டிருக்கின்றோம். (ஆதலின் ஆகார தானத்தினை விசேஷமாகச் செய்வோமாக) எ-று.

(வி-ரை) தன் கணவனுக்கு ஆகார மில்லாத காலத்தும் எதிர்ப்பட்ட முனிவர்க்குப்பிரியாசையுடன் அன்னமிட்ட பிராமணப் பெண் அத்தான பலத்தால் யக்ஷியாயினளாதலின், மனிதர் எவ்வகைக் கஷ்டகாலத்திலும் ஆகாரதானத்தினை அவசியம் செய்தல் வேண்டுமென்பதும், அதனால் நற்பயனுண்டா மென்பதும் இதனாற் பெறப்படும். பார்ப்பனியின் கதையாவது:—"கிருமலைநகரில் சோமசன்மாவென்னும் ஒரு பிராமணனுடைய மனைவியாகிய அக்னிலா வென்பாள் ஒரு தினம் தன் கணவனுக்கு ஆகார மில்லாமலிருக்கவும், வரதத்தாசாரிய ஜினமுனிவர் வீதியில் வரக்கண்டு அவரை எதிர்கொண்டழைத்து அவருக்கு வே[illegible] புண்ணியக்கிரமத்தினால் ஆகாரதானம் செய்தாள். அதைக் கண்ணுற்ற சோமசன்மா சில பிராமணர்களுடைய துர்ப்போதனையால் அவளை இம்சித்தான். அத்துன்பத்தைச் சகியாத அவள் தன் புத்திரிருவருடன் கிருமலைக்குச் சென்று அங்கே தன்னால் தானம் பெற்ற முனிவரிருக்கக் கண்டு அவரிடம் நடந்ததைக் கூறி சம்சார பந்தம் நீங்கும் மார்க்கத்தினைத் தனக்குபதேசிக்குமாறு வேண்ட அவர் அவ்வாறே அம் மார்க்கத்தினை யுபதேசித்தனர். அவள் அவ்வுபதேசங்களைப் பெற்று அங்கிருந்தனள். அப்போது அவளுக்குத் தீங்கு செய்யச் சோமசன்மாவைத் தூண்டிய பிராமணர் அக்கிராரங்கள் தீப்பட்டு வெந்தன. சோமசன்மன் இல்ல மாத்திரம் அவனுடைய மனைவி முனிவர்க்கு ஆகாரதானங் கொடுத்த புண்ணியத்தால் எரியாமலிருந்தது. இவ் வதிசயத்தைச் சகல பிராம்மணர்களும் கண்டு ஆச்சரிய முற்று, சோமசன்மாவின் மனைவி, முனிவர்க்கிட்டு மிகுதியாயிருந்த ஆகாரத்தை உண்டார்கள். அத்தனை பேரும் புசித்தும் அஃதெள்ளளவுங் குறையாமலிருந்தது. அதனால் அவர்கள், 'இது சத் பாத்திர தான மகிமையே' என்று அக்னிலாவைப் புகழ்ந்து அவளைத் தேடி யழைத்து

வரும்படி சோமசன்மனுக்குக் கூறினர்கள். சோமசன்மன் அவளைத் தேடிச் சென்றான். அப்போது, சூரியாஸ்தமன காலமாய் விட்டமையால், வரதத்தாசாரியர், தம்மிடமிருந்த அக்னிலாவை நோக்கி, 'இப்போது இராக்காலஞ் சமீபித்து விட்டபடியால் நீ இங்கிருப்பின் லோகாபவாதம் உண்டாகும்; ஆகலின், நீ செல்க' என்றனர். அக்னிலா அவ்விடத்தை விட்டு நீங்கி வந்து, வழியில் தனது தானபுண்ணிய வசத்தால் உலர்ந்த மாமானது செழித்துக்கனிகளையுடைதாயிருக்கவும், நீர் வற்றியிருந்த சுனையொன்று நீர் சுரக்கவும் கண்டு தன்னுடையபிள்ளைகட்கு அம்மாக் கனிகளைப் பறித்துக்கொடுத்து அவர்களை உண்ணச்செய்து அச்சுனை நீரையும் பருகுவித்து அவ்விடத்தில் பஞ்ச நமஸ்கார மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்; அவளைத் தேடி வந்த சோமசன்மா, மிருக பயத்தினால் கையில் வாளேந்தி மறுகாளுதயத்தில் அங்கே வந்தான். அக்னிலா அவனைக் கண்டதும், அவன் தன்னைக் கொல்லவருவதாகக் கருதி, ஸ்ரீநேமி பகவானைத் துதித்து அச்சுனையிற் குதித்துத் தேகம் நீத்து உடனே எக்ஷியாய்த் தன் பிரிவுக்காக அழுதிருந்த பிள்ளைகளைத் தேற்ற மூன் வடிவங்கொண்டு அவர்களைத் தேற்றியிருந்தனள். அப்போது சோமசன்மன் அவளைக் கண்டு 'நான் செய்த குற்றத்தை மன்னித்து நீ என்னுடன் வருக' என்று அவள்கையைப்பிடிக்கப்போனான். உடனே அவள் எக்ஷிவடிவத்துடன் ஆகாயத்தெழும்பிநின்று, "உன் மனைவியாயிருந்த யான், தானபிரபாவத்தால்எக்ஷியாயினேன்; நீ இனி என்னை விரும்பாது உன் மக்களுடன் இல்லஞ் சேர்வாயாக" என்று கூறித்தனக்குரிய விடஞ் சென்றாள்; பின்பு சோமசன்மனும் பத்தினி சோகத்தால் தன் பிள்ளைகளுடன் அச்சுனையில் வீழ்ந்து பிராணனைவிட்டுஷ்டைஎக்ஷி தேவிக்கு வாகனமாகப் பிறந்தான். பிள்ளைகள் அவளுக்குப் புத்திரராகப் பிறந்து நற்கதி பெற்றனர். இது ஸ்ரீ சைல மகாத்மியத்திற் கண்டது. தர்ம தேவதைகதையிலுமுள்ளது. (௧௧)

---

## பொருளழகு.

நல்வழியில் பொருளீட்டி நல்வழியில் செலவு செய்து இகபர சுகங்களையனுபவித்தலே பொருளழகாம். பொருளையுடையவர்கள்,

"சிறியரே மதிக்கு மிகுதச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்
குறிபெறு கண்ணு ளாருங் குருடராய் முடிவ ரன்றே"

என்றபடி பயனற்ற அற்பமாகிய செல்வச் செருக்கினால் மூடப்பட்டு வாயிருந்தும் மூங்கையராகாமலும், பொன்னணி யணிந்த காதுகளிருந்தும்மிகுந்தசெவிடர்களாகாமலும், குறிக்கும் பொருளைப் பார்த்தற்குரிய நேத்திரங்களை யடைந்திருந்தும் குருடர்களாகாமலும் பொருளற்ற ஏழைகளுக்குத் தேவையானவைகளைச் செய்ய வேண்டும். ஏழையாயிருந்தாலும் இப்பூவுலகத்தில் நல்லொழுக்கங்களை மேற்கொண்டு சீரும் சிறப்பும் பெற்று வாழலாம். ஆனால்பொருளையுடைய சீமான்களுக்கோ இப்படி வாழ்தலரிது. பொருள்,



"ஒல்லொழுக் கினரைத் தீய வொழுக்கரென் றுரைக்கச் செய்யும்
புல்லொழுக் கினரைத் தூய புலத்தரென் றுரைக்கச் செய்யும்
நல்லகற் புடைய மாதர் நலத்தையஞ் சாமை செய்யும்
பல்வகைத் துயருஞ் செய்யும் பாழ்ம்பொருள் பற்று ளார்க்கே"

என்று குசேலோபாக்கியானத்தில் கூறியுள்ளபடி, தன்னிடத்துப் பற்றுள்ளாரை, நல்லொழுக்க முடையவரைத் தீயொழுக்க முடையவரென்றும், தீயொழுக்க முடையவரைப் பரிசுத்தமாகிய அறிவை யுடையவரென்றும், சொல்லச் செய்யும்; கற்புள்ள மாதரது கற்புக்கு அஞ்சாமை செய்யும். துன்பத்திற்கேதுவாகிய பல்வகை இன்னலை விளைவிக்கும். அன்றியும் பொருள் உயிர்வதை செய்யச் சொல்லும்; சந்தேக மில்லாத சிநேகிதர்களிடத்தில் வஞ்சனையைச் செய்யத் தூண்டும். குற்றமற்ற பெரியோரைத் தூஷிக்க ஏவும். பரிசுத்தம் நிறைந்து விளங்கும் ஆலயங்களினிடங்களிலும் போய்க் கடவுளை மறந்து களவு செய்ய மனம் துணிவுறச் செய்யும். வேசி வீட்டில் வெட்க மில்லாமல் நுழையச் செய்யும்; லாகிரி வஸ்துக்களை வரம் பில்லாமல் உபயோகிக்கச் செய்யும்; எளியாரை எள்ளளவும் இரக்க மில்லாமல் வருத்த மனந்துணியச் செய்யும். பொருளின் தன்மை இதுவாகையால் பொருளுள்ள ஐசுவரியவான்கள் வாழ்நாளிடையில் இப்படிப்பட்ட செய்கைகளுக்குட் படாமல் நல்லவழியில் பொருளைச் செலவிட்டு பரலோக சாம்பிராஜ்யத்தைத் தேடிக் கொள்ள வேண்டும். சிலர் தாமும் சரியா யுண்ணாமல் பிறருக்கும் பயன் படாமல் பொருளீட்டிச் சேர்த்து வைத்து மரண மடைகிறார்கள். இத்தகைய பெருமை வாய்ந்த தனவான்கள் இவ்வுலகத்தின் கண் இருந்தென்ன? போயென்ன? "எட்டிபழுத்தாலென்ன? ஈயாதார் வாழ்ந்தாலென்ன?" என்றபடி இப்படிப்பட்ட உலோபிகள் இந்நிலவுலகில் ஜீவித்திருப்பினும் பூமிக்குப் பாரமே யொழிய வேறல்ல; பலராலும் உயிர்ப்பிண மென்று நிந்திக்கப் படுவார்கள். இப்படிப்பட்டவர்களுடைய திரவியம்,

"நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகுங் காண்"

என்ற பூலோக சரஸ்வதியாகிய ஔவைப்பிராட்டியார் திருவாக்கின்படியன்றோ! "பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்துமண்மே லிறக்கும் பொழுது கொடுபோவதில்லை" என்றபடி பிறக்கும்பொழுது கொண்டு வாராததும் இறக்கும் பொழுது கொண்டு போகாததுமாகிய இச்செல்வத்தினிடத்து அளவற்ற பற்று ஏனோ? ஆழ்ந்து யோசிக்குமிடத்து

இங்ஙனம் பொருளில் பற்று வைப்பது கல்வி யறிவற்ற கயவர்கள் தன்மையென்று ஏற்பட வில்லையா? "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்பதை யுணர்ந்தும் நாம் அளவு கடந்த பொருள் சம்பாதித்துக் குபேரனைப் போல் தனவந்தர்களாய் வாழக் காதல் கொண்டிருக்க வில்லையா? "பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை" என்றபடி பொருளை நாம் சம்பாதிக்கத்தான் வேண்டும். அதனிடத்தில் காதல் இருக்கத்தான் வேண்டும். பொருள் நம்முடைய உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததாய்த்தான் இருக்கிறது. ஆனால் அளவு கடந்த காதல் கொண்டு பொருளீட்ட எண்ணங் கொள்ளலாகாது.

பொருளுடையார் தாம் மாத்திரம் சிறப்புடன் மாடமாளிகை கூட கோபுரத்துடன் வாழாமல் "செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்" என்றபெரியோர் உரைப்படி தம் பந்து மித்திரர்களையும் காப்பாற்ற வேண்டும். பிறகு தர்மம் ஈதல் வேண்டும். தர்மமானது பிறந்து இறந்து துன்பத்தை யனுபவிக்கின்ற பிராணிகளுக்கு மோக்ஷ சுகத்தை யளிப்பதால் இதைவிட அருமையான பொருள் வேறில்லை என்றே துணிந்துரைக்கலாம். தடாகம் எடுத்தலும், சோலைகள் வைத்துக் காப்பாற்றலும், ஆலயங்கள் கட்டுவித்தலும், ஏழைப்பிள்ளைகளுக்குப் பாடசாலைகள் ஏற்படுத்தலும், நோயால் வருத்தப் படுபவர்களுக்கு வைத்தியசாலை கட்டலும், பிரயாணிகளுக்காகச் சத்திரம் சாவடிகள்கட்டிவைப்பதும், இரப்போர்க்கு இல்லையென்னாமல் ஈதலும், பசியால் வருந்துபவர்க்கன்ன மளித்தலும், தாகத்தைத் தீர்க்கத் தண்ணீர்ப் பந்தல் உண்டாக்கலும் ஆகிய இவை போன்ற யாவும் தருமத்தைச் சார்ந்தனவே. இப்படிப்பட்ட தருமங்களைச் செய்பவர்கள்,

"அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண்
டாக்கினோர் நீதிமன்னர்
அழியாத தேவால யங்கட்டி வைத்துளோர்
அகாரங்கள் செய்த பெரியோர்
தனையொப்பி லாப்புதல்வனைப்பெற்ற பேர்-பொருது
சமர்வென்ற சுத்தவீரர்
தாணிதனி னிலைநிற்க வெந்நாளு மாறாத
தருமங்கள் செய்த பேர்கள்
கனவித்தை கொண்டவர்கள் ஓயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினுள் மிகுந்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணம் செய்தோர்களிம்
மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராகுமன்றே"



என்று குருபாததாசர் நவின்றுள்ளபடி இறந்த பின்னும் எப்போதும் பலராலும் துதிக்கப்படுவார்கள். தர்மத்தைச் செய்பவர்கள் புண்ணியத்தை யடைகிறார்கள். புண்ணியத்தால் பரத்தில் முத்தியையடைகிறார்கள். இதை விட்டு விட்டு,

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டு
ஆவிதான் போயினபின் பாரே யநுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்"

என்றபடி பொருளைத்தேடியவர் தாமனுபவியாமல் பிறருக்கு முதவாமல் பூமியில் புதைத்து வைப்பது எவ்வளவு மதியீனம். ஆதலால் இந்த உலோபத்தை விட்டுத்தருமத்தை மனிதர் விரைந்து செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதிலும் இன்று செய்வோம் நாளைச் செய்வோமென்று காலத்தைக்கழிக்கலாகாது.

"ஒப்புடன் முக மலர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே யமுர்த மாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந்தானே"

என்ற பெரியார் வாக்கைத்துணைக்கொண்டு ஏழைகளுக்கு முகமலர்ந்து அவர்கள் விரும்பியதை அளித்து உதவி செய்யவேண்டும். கடல்சூழ்ந்த இவ்வையகத்தில் நம்முடைய வாழ்நாள் நீர்க்குமிழியை யொத்திருப்பதால்,

"எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான்-அதனால்
ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்"

என்ற கபிலர் திருவாக்கின்படி பொருளுடையார் யாவரும் இக்கணமே பொருளைக் கெட்ட வழியில் அழிக்காமல் அவற்றைக்கொண்டு பலவித தருமங்களைப் புரிந்து முத்தியை யடைவார்களாக. இது பொருளழகாகும்.

இங்ஙனம்:
சி. வி. கந்தசாமி.
(A Student of Christian Collage, Madras.)

## நன்கொடைகள்.

---

1. இரௌத்திரிஞு வைகாசிமீ 10உ ஆரணி இரும்புக்கடை கனம் ஜெயகுமார நயினார் அவர்கள், தமது குமாரர் துரைசாமி நயினாருக்கு விவாகம் நடந்ததை முன்னிட்டு ரூபா 5—0—0— நம்தருமசீலனுக்காக நன்கொடை யளித்திருக்கிறார்கள். இவர்களுடைய மதாபிமானம், பத்திரிகாபிமானம் முதலியவைகள் போற்றத் தக்கவைகள். இவர்கள் செய்த நன்றியை என்றென்றும் தருமசீலன் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றான்.

2. இரௌத்திரிஞு வைகாசிமீ 10உ வந்தவாசி தாலூக்கா பெரிய கொழப்பலூர், வடஆர்க்காடு ஜில்லா போர்டு மெம்பர், கனம்-பூரண சந்திர நயினார் அவர்கள், தமது குமாரத்தி சௌபாக்கியவதி புஷ்பாவதி அம்மாளுக்கு விவாகம்நடந்ததன் ஞாபகார்த்தமாக ரூபாய் 5—0—0 நம் தருமசீலனுக்காக நன்கொடை யளித்திருக்கிறார்கள். இவர்களுடைய மதாபிமானம், பத்திரிகாபிமானம் முதலியவைகளும் போற்றத் தக்கவைகள். இவர்கள் செய்த நன்றியை என்றென்றும் தருமசீலன் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றான்.

3. இரௌத்திரிஞு வைகாசிமீ 15உ போளூர் ஜைன சகோதரஷேத்திராம சங்க அக்கிராசனாதிபதி கனம் K. A. தனபால நயினார், அவர்கள்வைசங்கம் ஏற்படுத்திய ஞாபகார்த்தத்திற்காக ரூபாய்5—0—0நம் தருமசீலனுக்கு நன்கொடையளித்தார்கள். இச்சங்கத்தாரது மதாபிமானம்,பத்திரிகாபிமானம், தமிழபிமானம் முதலியவைகள் பாராட்டத் தக்கவைகள். இவர்கள் செய்த நன்றியை என்றென்றும் தருமசீலன் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறான்.

குறிப்பு:—மேற்கண்ட கனவான்களைப் போலவே மற்ற கனவான்களும் தங்களிடத்தில் நடைபெறும் சுப அசுப விசேட காலங்களில் நமது சீலனுக்கு நன்-கொடை யளித்து உதவி புரிகுவரின், சீலன் விருத்தி யடைவானென்பதில் ஐயமும் உண்டோ? இப்படியே நம்மவர்கள் ஒவ்வொருவரும் சீலன் விஷயத்தில் சிந்தை செலுத்தும்படி எல்லோரையும் வந்தனத்துடன் கேட்டுக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.



## திருக்கலம்பகம் மூலமும் உரையும்.

முன் தொடர்ச்சி புத்தகம் 3, சஞ்சிகை 4. பக்கம்-94.

---

(ப-ரை.) பூநான்கும்......இருந்தனையே—

பூநான்கும்—நால்வகை மலரும், பொதுளி - நெருங்கி, வெறி - அம்மலர்களின் வாசனை, திசை நான்கும் - நான்குதிக்கினும், போய் - சென்று, உலவுகிரிய, தேன் - அம்மலர்களின் மதுவை, ஆர்ந்து - உண்டு, சுரும்பு - நால்வகை வண்டுகளும், பாட - இசைபாட, திகழ் - விளங்கப் படுகின்ற, பிண்டி - அசோகினுடைய, திரு - அழகிய, நிழல் - நிழலில், நிலவு - பிரகாசத்தை, உமிழ்ந்து - வீசி, நீர் - குணமானது, ததும்ப - துளும்ப, நிழல் - குளிர்ச்சி பொருந்திய, மாலை நித்திலம் - முத்துமாலைகள், சூழ் - சூழ்ந்த, குலவிலங்கு - மிகவும் விளங்குகின்ற, மதிமூன்றின் - மூன்று மதிபோல, குடை மூன்றும் - முக்குடையும், உடன் - அவ்வசோக நிழலுடன், நிழற்று - நிழல் செய்ய, பாங்கு - இருமருங்கினும், இலகு - ஒளிர்கின்ற, மணி - அழகிய, கவரி - சாமரைகள், பன்னூறாயிரம் - நான்கு குறைந்த நாற்பது லட்சம், அசைய - சுழல, ஓங்கு - உயர்ந்த, அரியாசனத்தின் - சிங்காசனத்தின், உம்பர் - நான்கங்குலத்தின்மேல், உலகு - மூவுலகத்தவரும், தொழ - வணங்க, இருந்தனை - வீற்றிருந்தாய்;

கயல்பிறழ்வ.....குணனாமோ. கயல் - கயல்மீன்கள், பிறழ்வனை - புரள்வனபோல, பிறழும் - புரளாநின்ற, கரும் - கருமையாகிய, தடம் - பரந்த, கண்ணார் - கண்களையுடைய மாதாது, கலவி - புணர்ச்சியாகிய, செயல் - தொழிலானது, பிறவி - பிறப்பினுக்கு, வித்தென்று - மூலமென்று, செறி - நெருங்கிய, தவர்முன் - முனிவரெதிர், உரைத்தருளி - சொல்லியருளி, தேறாத - அளவு காணப்படாத, பிறப்பு - பிறப்பினின்றும், இகந்து - நீங்கிய, சித்தியென்னும் - முத்தியாகிய, கன்னியுடன் - பெண்ணுடன், மாறாத - நீங்காத, பேரின்பம் - அனந்த வின்பத்தினால், மகிழ்வது - நீ இன்புறுவது, நின் - நினது, குணனாமோ - குணமாகுமோ?

அடுமாற்ற......வருளாமோ. அடு - தம்மைக் கொல்ல வருகின்ற, மாற்றலார் - பகைவருடைய, உயிர்மேல் - சீவனிடத்தும், ஆறாத - அடங்காமல், மிகுத்த - அதிகரித்த, சினம் - கோபமானது, தடுமாற்றம் - பிறவியை, தருமென்று - கொடுக்குமென்று, தவ அரசர்க்கு - முனீந்திரருக்கு, உரைத்தருளி - சொல்லியருளி; இரிய - கெடும்படி, இருவினை - தேசகாதி சருவகாதி யென்னு மிருவினைகளாகிய, பகைவர் - மாற்றலருடைய, இகல் - வலியை, வாட்டி - கெடுத்து, ஐம்புலம் - பஞ்சவிஷயங்களாகிய, வெம் - வெப்பமாகிய, கரிய, கறுத்த; சதம் - கோபமும், கடம் - மதமுமுடைய-களிறு-யானைகளை, காய்ந்தது - கொன்றது, நின் - நினது, அருளாமோ - கருணையாகுமோ?

உள்ளத்தா......வியல்பாமோ. உள்ளத்தால் - உள்ளன்பினுல், எவ்வுயிர்க்கும் - ஐவகைப்பட்ட வுயிர்கட்கும், ஒத்து - ஒத்துநின்று, ஒழுகாதவர் - நடக்காதவரே, பிறவி - பிறப்பாகிய, வெள்ளத்து - கடலில், ஆழ்பவரென்று - மூழ்குவரென்று, விரி - பரந்த, முனி - முனிவர்முன், விரித்தருளி - சொல்லியருளி, அன்போடு - விருப்புடன், தொழுது - வணங்கி, எழுவார்க்கு - எழுபவருக்கு, அமருலகம் - வானவருலகத்தை, அளித்து - கொடுத்து, அமையா - கிடையாத, நின்போல் - உன்னைப் போல, வரகதியுள் - முத்தியில், நிறுத்துதல் - வைக்குதல், நின் - நினக்கு, இயல்பாமோ - தன்மையாமோ?

கறையறு......நின்மொழி. கறையறு - குற்றமற்ற, சுடர் - ஒளியையுடைய, மணி - இரத்தினமானது, கரதலம் - கையினுடைய, நடுவணதென - மத்தியிலிருப்பக் காண்பதுபோல், முழுதும் - உலக மனைத்தையும், உணரும் - அறியும், நின் - உனது, மதி - அனந்தஞானம்; நறை - தேன், பொருந்திய, அலர் - பூவினது, வெறியென - மணம் போலவும், நகு - விளங்குகின்ற, மணி - இரத்தினத்தை யுடைய, ஒளியென - விளக்கம் போலவும், கணுகு - பொருந்திய, இயல்பினது - தன்மையை யுடையது, நின் - உனது, சுகம் - அனந்த சுகம்; விரை - வாசனையானது, செறி - பொருந்திய, முளரியின் - தாமரைப்பூவின், மிசை - மேல், முறை - இருபாதமு முறையாக, பெயரல - நடவாதனவாகவும், மிதியல - மிதியாதன வாகவும், இயலும் - நடக்கும், நின் - உனது, அடி - பாதங்கள்; உரைபல - பதினென் மொழிகளையும், தருகுவது - கொடுப்பதாகியும், உடன் - அதனுடன், மலைவு - முன்னொடு பின் மாறுபாடு, இலது - இல்லாததாகியும், அருளொடு - சீவகாருண்ணியத்துடன், பொருள் - அறுவகைப் பொருளையும், தழீஇயது - தழுவி நிற்பது, நின் - உனது, மொழி - ஆகமம்.

நறையோட......நோக்கினையே. நறை - தேனானது, ஓட - பெருக, தோடு - இதழ்கள், அவிழும் - விரிகின்ற, நறும் - வாசனை பொருந்திய, பூ - மலர்களாகிய, மென் - மெல்லிய, கணை - பாணங்களை, துரந்து - எவி, நிறை - மனநிலை, ஓட - கெட, பொரு - போர் செய்கின்ற, மதனை - மன்மதனை, நீறுக - நீறுபட, நோக்கினை - பார்த்தாய்.

அலைமாறு......குதித்தனையே. அலை - பிறப்பாகிய திரைகள், மாறு - நீங்காத, கதி - நாற்கதியாகிய, கடலுள் - கடலில், அழுந்து - முழுகுகின்ற, உயிர் - சீவன்களை, வேட்டு - விரும்பி, அலமரூஉம் - சுழலுகின்ற, கொலை - கொல்லுந் தொழில், மாறு - நீங்காத, கொடிய - கொடுமையான, வெம் - வெப்பமுடைய, கூற்றினையும் - காலனையும், குதித்தனை - கடந்தாய்.

எழுதரு......துந்துபியினையே. எழுதரு - உதிக்கின்ற, செஞ்சுடர்போல், சூரியனைப் போல், நின்று - நிலைபெற்று, இலங்கு - விளங்கா நின்ற, ஒளி மண்டலத்தினை - பிரபாவலய மொன்றினை யுடையாய்; தொழுதகு - யாவரும் வணங்கத்தக்க, வீட்டிறைவி - முத்திநாயகியினுடைய, மணம் - கல்யாணத்தை, தூற்றும் - அறிவிக்கின்ற, துந்துபியினை - துந்துபியினை யுடையாய்.



அலர்பொழி......எயிலினையே. அலர் - மலர்களை, பொழிய - தேவர்கள் சொரிய, தேன் - அம்மலர்கள் மதுவை, பொழியும் - பொழிதலினாலே, அசும்பு - கசிவு, ஒழியா - நீங்காத, முன்றிலினை - முற்றத்தினையுடையாய்; உலகு - மூவுலகத்தவரும், அடங்க - தன்னுளடங்க, உள் - மத்திமலோகத்துள், அடங்கி - தானடங்கி, ஒலி - திவ்வியத்தொனியை, அடங்கா - அடங்காத, எயிலினை - மும்மதிலினை யுடையாய்.

தொன்மறை......கதியோய்நீ. தொல் - பழமையாகிய மறையை - வேதங்களை, விரித்தோய் நீ - சொன்னவன் நீயே; ஐயங்கள் - ஏகாந்தவாதங்களை, அழித்தோய் நீ - கெடுத்தவன் நீயே; நன்னெறியை - அநேகாந்த வாதத்தை, வகுத்தோய் நீ - வகுத்தவன் நீயே; நமன் - காலன், அணுகா - நெருங்காத, கதியோய் நீ - முத்தியை யுடையவன் நீயே.

வீரனீ......தவனுநீ. வீரன் நீ - அனந்த வீரத்தை யுடையவன் நீயே; விமலன் நீ - நிர்மலத்தை யுடையவன் நீயே; விண்ணு நீ - ஆகாயத் தானத்தை யுடையவன் நீயே; கண்ணு நீ - ஞானக் கண்ணினை யுடையவன் நீயே; தீரன் நீ - தீரத்தை யுடையவன் நீயே; சுகதன் நீ - நன்னடையை யுடையவன் நீயே; சிவனும் நீ - மங்கள கரத்தை யுடையவன் நீயே; தவனும் நீ - தவத்தை யுடையவன் நீயே.

என வாங்கு......என—என்று இவ்வாறாக.

ஒருதனி......எனவே. ஒருதனி - ஒப்பற்ற, கடவுள் - அருகபரமேட்டியே! நின் - உன்னை, பரவுதும் - யாம் துதிப்போம்: உயிர்கள் - சீவன்கள், இன்னல் - துன்பமாகிய, வெம் - வெப்பம் பொருந்திய, கனல் - நெருப்பானது, கூர் - மிகுந்த, புன் - அற்பமாகிய, நெறித்தலை - வழியில், சென்று - போய், உறு - பொருந்திய, புறம் - பஞ்சவிடயங்களான், கோள் - கொலைசெய்யும், மா - மிருகங்கள், திரிதரும் - திரிகின்ற, அகன்ற - பரந்த, தலை - இடத்தையுடைய, பிறவி - பிறப்பாகிய, கானத்து - காட்டில், மருவியுற்று - நின்னெறியிற் செல்ல மறந்து, உழந்து - உழன்று, ஆங்கு - அப்பிறவிக் காட்டில், அலமரும் - சுழல்கின்ற, துயரினை - துன்பத்தை, எறியும் - அறுக்கின்ற, நின் - உனது, ஞாலம் - மூவுலகத்தினும், மரு - மருவிய, திகிரி - அறவாழி, நெடு - அனந்த காலம், வாழ்கவே - வாழவேண்டுமென்றே. எ-று.

(பொ-ரை) நால்வகை மலரும் நெருங்கி அம்மலர்களின் வாசனை நான்கு திக்கினுஞ்சென்று திரிய, அம்மலர்களின் மதுவை உண்டு நால்வகை வண்டுகளும் இசைபாட, விளங்கப்படுகின்ற அசோகினுடைய அழகிய நிழலில் பிரகாசத்தை வீசிக் குணமானது துளும்ப, குளிர்ச்சி பொருந்திய முத்து மாலைகள் சூழ்ந்த, மிகவும் விளங்குகின்ற மூன்று மதிபோல, முக்குடையும் அவ்வசோகநிழலுடன் நிழல்செய்ய, இருமருங்கினும் ஒளிர்கின்ற அழகிய தாமரைகள் நான்கு குறைந்த நாற்பது லட்சம் சுழல, உயர்ந்த சிங்காசனத்தின் நான்கங்குலத்தின் மேல் மூவுலகத்தவரும் வணங்க வீற்றிருந்தாய்.

கயன்மீன்கள் புரள்வன போலப் புரளாநின்ற கருமையாகிய பரந்த கண்களையுடைய மாதரது புணர்ச்சியாகிய தொழிலானது பிறப்பினுக்கு மூலமென்று நெருங்கிய முனிவரெதிர் சொல்லியருளி, அளவு காணப்படாத பிறப்பினின்று நீங்கிய முத்தியாகிய பெண்ணுடன் நீங்காத அனந்த வின்பத்தினால் நீ யின்புறுவது நினது குணமாகுமோ?

தம்மைக் கொல்ல வருகின்ற பகைவருடைய சீவனிடத்தும் அடங்காமல் அதிகரித்த கோபமானது பிறவியைக் கொடுக்குமென்று முனீந்திரருக்குச் சொல்லியருளி, கெடும்படி தேசகாதி சருவகாதியென்னு மிருவினைகளாகிய மாற்றலருடைய வலியைக்கெடுத்து பஞ்சவிஷயங்களாகிய வெப்பமான கறுத்த கோபமும் மதமுமுடைய யானைகளைக்கொன்றது நினது கருணையாகுமோ?

உன்னன்பினுஞ் ஐவகைப்பட்ட வுயிர்கட்கும் ஒத்து நின்று கடக்காதவே பிறப்பாகிய கடலில் அழுந்துவரென்று பரந்த முனிவர் முன் சொல்லியருளி, விருப்புடன்வணங்கி யெழுபவருக்கு வானவருலகத்தைக் கொடுத்து, உன்னைப் போல, இடையாத முத்தியில் வைக்குதல் நினக்குத் தன்மையாமோ?

குற்றமற்ற வொளியையுடைய இரத்தினமானது கையினுடைய மத்தியில் விருப்பக் காண்பதுபோல உலக மனைத்தையு மறியும் உனது அநந்த ஞானம்; தேன்பொருந்திய பூவினது மணம்போலவும் விளங்குகின்ற இரத்தினத்தினுடைய விளக்கம்போலவும் பொருந்திய தன்மையையுடையது உனது அநந்த சுகம்; வாசனை பொருந்திய தாமரைப்பூவின்மேல் இருபாதமு முறையாக நடவாதனவாகவும் மிதியாதனவாகவும் நடக்கும் உனது பாதங்கள்; பதினெண்மொழிகளையும் கொடுப்பதாகியும் அதனுடன் முன்னொடு பின்மாறுபாடு இல்லாததாகியும் சிவ காருண்ணியத்துடன் அறவகைப்பொருளையுந் தழுவி நிற்பது உனது பரமாகமம்.

தேனுண்ணது பெருக இதழ்கள் விரிகின்ற வாசனைபொருந்திய மலர்களாகிய மெல்லிய பாணங்களையேவி மன நிலைகெடப் போர்செய்கின்ற மன்மதனை நீறுபடப் பார்த்தாய்.

பிறப்பாகிய இரைகள் நீங்காத நாற்கதியாகிய கடலில் முழுகுகின்ற ஜீவன்களை விரும்பிச்சுழலுகின்ற கொல்லுந்தொழிலில் நீங்காத கொடுமையான வெப்பமுடைய காலனையுங் கடந்தாய்.

உதிக்கின்ற சூரியனைப்போல் நிலை பெற்று விளங்காநின்ற பிரபாவலய மூன்றினையுடையாய்; யாவரும் வணங்கத்தக்க முத்திராயகியினுடைய கல்யாணத்தை அறிவிக்கின்ற துந்துபியினை யுடையாய்.

மலர்களைத் தேவர்கள் சொரிய அம்மலர்கண் மதுவைப் பொழிதலினாலே நனிவு நீங்காத முற்றத்தினை யுடையாய்; மூவுலகத்தவருந் தன்னுளடங்க நத்திமலோகத்துட்டாணடங்கி திவ்வியத் தொனியை அடக்காத மும்மதிலையுடையாய்.



பழமையாகிய வேதங்களைச் சொன்னவன்நீயே; ஏகாந்த வாதங்களைக் கெடுத்தவன்நீயே; அநேகாந்த வாதத்தை வகுத்தவன்நீயே;காலனெருங்காத முத்தியையுடையவன்நீயே.

அனந்த வீரத்தை யுடையவன் நீயே; நிர்மலத்தையுடையவன் நீயே; ஆகாயத்தானத்தை யுடையவன் நீயே; ஞானக்கண்ணினை யுடையவன் நீயே; தீரத்தை யுடையவன் நீயே; நன்னடையை யுடையவன் நீயே; மங்களகாரத்தை யுடையவன்நீயே; தவத்தை யுடையவன்நீயே.

என்று இவ்வாறாக.

ஒப்பற்ற அருகபரமேட்டியே! உன்னை யாந்துதிப்போம்: சீவன்கள் துன்பமாகிய வெப்பம் பொருந்திய நெருப்பானது மிகுந்த அற்பமாகிய வழியிற்போய்ப் பொருந்திய பஞ்ச விடயங்களான் கொலை செய்யும் மிருகங்கள் திரிகின்ற பரந்த இடத்தையுடைய பிறப்பாகிய காட்டில் நின்னெறியிற் செல்ல மறந்து உழன்று அப்பிறவிக்காட்டில் சுழல்கின்ற துன்பத்தை யறுக்கின்ற உனது மூவுலகத்தினும் மருவிய அறவாழி அநந்த காலம் வாழவேண்டுமென்றே. எ-று.

(வி-ரை.) நால்வகை மலரான:-கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ. நால்வகை வண்டுகளாவன:—கருவண்டு, பொன்வண்டு, ஞிமிறு, சுரும்பு குடைமூன்றாவன:—சந்திராதித்தியம், நித்திய விநோதம், சகலபாசனம். தேசகாதியாவன:—மதிஞானாவரணீயம், சுருதஞானாவரணீயம், மநப்பரியய ஞானாவரணீயம், சக்ஷுதர்சநாவரணீயம், அசக்ஷுதர்சநாவரணீயம் அவதி தர்சநாவரணீயம், சம்மியத்துவப் பிரகிருதி, ஸஞ்வலநக்ரோதம், ஸஜ்வலநமாநம், ஸஜ்வலநமாயை, ஸஜ்வலநலோபம், ஹாசியம், இரதி, அரதி, சோகம், பயம், ஜுகுப்ஸை, ஸ்திரீ வேதம், பும்ஸ வேதம், நபும்ஸ வேதம், தாநாந்தராயம், லாபாந்தராயம், போகாந்தராயம், உபபோகாந்தராயம், வீரியாந்தராயம்-என- உ௬. சர்வகாதியாவன:—கேவலஞாநாவரணீயம், கேவல தர்சநாவரணீயம், நித்திரா நித்திரை, பிரசலா பிரசலை, நித்திரை, பிரசலை, ஸ்தியான ஸ்ருத்தி, அநந்தாநுபந்திலோபம், அப்பிரத்தியாக்யாநக்ரோதம், அப்பிரத்யாக்யாநமாநம், அப்பிரத்தியாக்யாநமாயை, அப்பிரத்தியாக்யாநலோபம், பிரத்தியாக்யாநக்ரோதம், பிரத்தியாக்யாநமாநம், பிரத்யாக்யாநமாயை, பிரத்தியாக்யா நலோபம், மித்யா தர்சநம், சம்மியக் மித்தியாத்துவம்- என- உ௧. ஐந்து விடயங்களாவன:—சப்தம், ஸ்பரிசம் ரூபம், ரசம், கந்தம். ஐவகை யுயிராவன:— ஏகேந்திரியம், துவீந்திரியம், திரீந்திரியம், சதுரிந்திரியம், பஞ்சேந்திரியம். அறுவகைப் பொருளாவன:— ஜீவன், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம், காலம். பிரபாவலயம்மூன்றாவன: —ஆலோகம், [illegible] மதில்மூன்றாவன:—உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம். [illegible] இரணியகர்ப்பப் பிரபம், [illegible] என்பன கண்டக்குறை விகாரம். குலவிலங்கு, ஒருதனி என்பன மீமிசைப்பதம். ஏகாரந்தேற்றேகாரம். இதனால்இறைவனது பெருமையும் அவனருள் வழிபட்டு [illegible]

னும் அதவாழியினது தன்மையும், சீவன்களுடைய எளிமையும் கூறப்பட்டன. இதனுள் யான் என்பது தோன்றா எழுவாய். உன்னை, என்பது செயப்படு பொருள்; துதிப்போம் என்பது பயனிலை.

(தொடரும்.)

இங்ஙனம்,
மேல் மின்னல்-சக்கிரவர்த்தி நயினார்.

## தருமசீலன் அநுபந்தம்.

### பேரணி ஜைன சகோதர ஷட்கிராம சங்கம்.

#### மூன்றாவது மாதாந்தர சங்கம்.

இம் மூன்றாவது மாதாந்தர சங்கம், பேரணி கிராமத்தில் சென்னை இராஜதானி ஜைனர் சங்கத்தின் அக்ராசனாதிபதி ஸ்ரீமான் A. P. சந்திரநாதநயினார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் கூடியது. அடியிற் கண்ட கனவான்கள் கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி உபந்நியசித்தனர்.

#### உபந்நியாச விபரம்.

ஷெ சங்கத்தின் ஸ்திர அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் K. A. தனபாலநயினார், [தியானமகிமை.
பேரணி ஸ்ரீமான்செல்வரசுநயினார் போகபூமிஸ்வரூபமும், மனுக்கள்ஸ்வபாவமும்

| | | |
|---|---|---|
| „ „ | குப்புசாமி நயினார், | லோகஸ்வரூபம். |
| வயலாமூர் „ | பத்மராஜநயினார், | இல்லறம். |
| „ „ | பத்திரபாகுநயினார், | சர்வக்ஞனுடைய அதிசயம். |
| செண்டியம்பாக்கம் „ | அப்பாவு உபாத்தியாயர், | ஒற்றுமை. |
| சென்னை „ | பார்சுவநாதநயினார், | பஞ்சாஸ்திகாயம். |

அக்கிராசனர் முடிவுரைப் பிரசங்கம் செய்த பின்பு "திண்டிவனம்ஜெயின் போர்டிங்" (Jain Boarding Tindivanam) கிற்கு சங்கத்தியமெம்பர்களும், மற்றவர்களும் உபகாரம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி ஷெ சங்கத்தியவர்களும், மற்றவர்களும் பொருளுதவி புரிவதாக கையொப்பமிட்டனர். பிறகு, சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு சபைகலைந்தது.



#### நான்காவது மாதாந்தர சங்கம்.

இந்நான்காவது மாதாந்தர சங்கம் முட்டத்தூர் கிராமத்தில், ஷெ சங்கம் ஸ்திர அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் K. A. தனபாலநயினார் அக்கிராசனத்தின் கீழ் அடியிற்கண்ட உபந்நியாசங்கள் நடைபெற்றன.

#### உபந்நியாச விவரம்.

| | | |
|---|---|---|
| அக்கிராசனர் முன்னுரைப்பிரசங்கம். | | சதுர்விம்சதி தீர்த்தங்கரர் மஹிமை. |
| பேரணி | ஸ்ரீமான் குப்புசாமி நயினார் | சமவசரணவிபூதி. |
| மோழியனூர் „ | மணியம் சந்திரகீர்த்தி நயினார் | கல்விப்பொருள் |
| வயலாமூர் „ | பத்திரபாகு நயினார் | அவஸர்ப்பிணியின்காலஇயல்பு. |
| விழுக்கம் „ | பார்சுவநாத நயினார் | ஜைனர்களின்நிலைமை. |
| முட்டத்தூர் „ | M. D. ஜெயகீர்த்தி நயினார் | கல்விக்கற்பகம். |
| „ „ | பொன்னுசாமி நயினார் | சத்பாத்திர தானம். |
| நந்திவாடி „ | இராமஸ்வாமி அய்யர் | சங்கத்தின் பெருமை. |
| மரக்காணம் „ | இராஜரத்தினம் அய்யர் | கல்வி |
| செண்டியம்பாக்கம் „ | அப்பாவு உபாத்தியாயர் | எசோதர சரிதம். |

இங்ஙனம்,
செல்வரசு,
காரியதரிசி

### ஆரணி ஜைன சகோதர சங்கம்.

2 வது மாதாந்தர கூட்டம் இரௌத்திரி௵ வைகாசி௴ 19௳ பௌர்ணமியன்று வீடேர் போஸ்டு மாஸ்டர் ஸ்ரீமான் சின்னராஜு நயினார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சபை கூடிற்று. அக்கிராசனாதிபதியவர்கள் ஜினமத பூர்வீக நிலைமையை விஸ்தாரமாகவும் தெளிவாகவும் உபந்நியசித்தார்கள். ஸ்ரீமான் சக்கிரவர்த்தி நயினார் அவர்கள் சிராவக தர்மம் என்பதை சுருக்கமாகவும் தெளிவாகவும் உபந்நியசித்தார்கள். பிறகு ஆரணி வக்கீல் ஸ்ரீமான் சுப்பிரமண்ணிய சாஸ்திரியாரவர்கள் புஸ்தகாலய ஆவசியத்தைப் பற்றி விரிவாக உபந்நியசித்தார்கள். பிறகு ஆரணி ஜைன பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் ப. குப்புசாமி சாஸ்திரிகள் சத் சங்கம் என்பதைப் பற்றி உபந்நியாசம்செய்தார்கள். மங்களம் பாடப் பட்டு ஜய கோஷத்துடன் சபைகலைந்தது.

#### 3 வது மாதாந்தர சங்கம்.

இரௌத்திரி௵ ஆனி௴ 23௳ ஸ்ரீமான் குந்துநாதநயினார் அக்கிராசனம் வகிக்க சபை கூடிற்று.

ஸ்ரீமான் வர்த்தமான நயினார், ஸ்ரீமான் அய்யண்ண நயினார், ஸ்ரீமான் சிரவண பெளிகுளம் பிரம்மையா, ஸ்ரீமான் ப. குப்புசாமி சாஸ்திரிகள் ஆகியவர்கள். முறையே அனுவிரதம், அகங்காரம், சிராவகர்களின் ஷட்கிரியைகள், ஒழுக்கம் என்பவைகளைப்பற்றி உபந்நியாசம் செய்தார்கள். பிறகு மங்களம் பாடப்பட்டு ஜய கோஷத்துடன் சபை கலைந்தது.

### 4-வது மாதாந்தர சங்கம்.

இரௌத்திரி௵ ஆடி௴ 16-ந்தேதி பௌர்ணமியன்று மலையனூர் ஸ்ரீமான் லோகநாதநயினார் அக்கிராசனத்தின்கீழ் சபை கூடிற்று. ஸ்ரீமான், அய்யண்ணநயினார், ஸ்ரீமான் -வர்த்தமானநயினார், ஸ்ரீமான்-குணபத்திரநயினார் முதலியவர்கள் முறையே பொறுமை, கல்வி, கல்விக்கும் செல்வத்திற்குமுள்ள வித்தியாசம் என்பவைகளைப்பற்றி உபன்னியசித்தார்கள்.

நன்கொடைகள்.

இதனடியில் கண்ட கனவான்கள் கல்யாண விசேஷ காலங்களில் கீழ்க் கண்ட விவரப்படி இச்சங்கத்துக்கு நன்கொடை அளித்தார்கள்.

விவரம்.

1. ஸ்ரீமான்-ஜவுளி மளிகை C. சக்கிரவர்த்தி நயினார் அவர்கள் சுமார் 40—0—0 ரூபாய் மதிப்புள்ள மஹாபுராணம் 1.

2. ஸ்ரீமான் மோ. ராமநாத நயினார் சுமார் 80—0—0 ரூபாய் மதிப்புள்ள பத்ம புராணம் 1. ரொக்கம் ரூ. 5—0—0

ஸ்ரீமான் சத்திய விஜய பண்டிதர் 10—·— ரூபா மதிப்புள்ள ஞானத் திறவுகோல் 1. (Key of Knowledge.)

ஸ்ரீமான் தேசூர் தரணேந்திர நயினார் ரொக்கம் ரூபா 5—0—0
காப்பலூர் ஸ்ரீமான் சக்கிரவர்த்தி நயினார் ரொக்கம் ரூபா 5—0—0
செ. மல்லிநயினார் ரூபா. 5—0—0
நெத்தப்பாக்கம் லோகநாத நயினார் 2—0—0
„ பார்சுவநாத நயினார் 2—0—0

D. ஜய கீர்த்தி நயினார்,
காரியதரிசி.

### ஆரணி ஜைன சமோசரசங்கத்தின்
### 1-வது ஸ்பெஷல் மீட்டிங்.

இரௌத்திரி௵ ஆடி௴ 22உ (6—8—20ல்) ஸ்ரீவண பெளிகுளம் அமகூர் சமஸ்தான வித்வ சிரோன்மணி ஸ்ரீமான் தோர்பலி ஜினராச சாஸ்திரியார் அவர்களை, பாண்டு வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வந்த பிறகு ஸ்ரீமான் C. சக்கிரவர்த்தி நைனாரவர்கள் ஷை சாஸ்திரியார் அவர்களை அக்கிராசனம் வகிக்குமாறு பிரேரேபிக்க அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். பிறகு ஸ்ரீமான் C. வசுபால நைனார் அவர்களால் சமஸ்கிருத ஸ்லோகங்களினால் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டபின், அக்கிராசனர் ஜீவதத்வம் என்பதைப் பற்றி வெகு அழகாக உபன்னியசித்தார். பிறகு யூனியன் சேர்மனும் பிரபல வியாபாரியுமாகிய ஸ்ரீமான் A. தனதேவ நைனாரவர்களால் ஷை சாஸ்திரியாரவர்களுக்கு வந்தனம் செலுத்தப்பட்டபின் ஸ்ரீமான் ப. குப்புசாமி சாஸ்திரியாரவர்களால் வந்தனோபசாரபத்திரம் வாசிக்கப்பட்டது. பிறகு மங்களம் பாடப்பட்டு கூட்டம் கலைந்தது.

---

ஓம
ஸ்ரீஜினாயநம:.

# தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)

புத்தகம் 3 } இரௌத்திரி௵ புரட்டாசி௴ 1920௵ செப்டம்பர்௴ { சஞ்சிகை 6

## தருமோபதேசம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எருதினது வால்பற்றி ஆற்று வெள்ளத்
திறங்கினோ ரிடரின்றிக் கரைபோய்ச் சேர்வார்
எருமையின்வால் பற்றியிறங் கிடுவார் தம்மை
இமைப்பொழுதி லமிழ்ந்தியது கொல்லும் நீரில்
வருநீதி நூல்பலவுங் கற்றுத் தேர்ந்த
மதியாளர் துணைக்கொண்டால் மகிழ்ச்சி யுண்டாம்
திருவிழந்த மூடருடன் சேர்ந்திட் டாலோ
தீமைவந்து சேருமிது திண்ணந் தானே. (௪௯)

மட்டில்லாத் துயர்க்குள்ளாய் வருந்து வார்க்கு
மனமிரங்கித் தேறுதல்கூ றுமல் கையைக்
கொட்டிநகை செய்தவரைப் பரிக சிக்கும்
கொடியோர்கள் பொருளிழந்து கொண்ட தேகக்
கட்டிழந்து மனையிழந்து வாழ்வி ழந்து
காதல்மிகும் பிள்ளைகளைப் பறிகொ டுத்துக்
குட்டமுத லாப்பெருநோய் தொடரப் பெற்றுக்
குருடாய்க் கொடுநரகில் வீழ்வர் தாமே. (௫௦)

பலநாளும் பழகிவந்த நண்ப ருக்குப்
பழவினையால்துன்பம் வந்து சேரும் போது
நலமான வுதவிசெய்து மனதைத் தேற்றி
நாடோறும் மகிழ்ச்சிமிகச் செய்வோர் மேலோர்
பலனுடிப் பிறருக்குத் தாமே வேண்டிப்
பணங்கொடுத்து நன்மொழிகள் பேசி யேபொற்
கலமாப ரணங்கள்நல்கி யுபசார ஞ்செய்
கபடிகளைக் கீழ்களெனக் கழற லாமே. (௫௧)

# தருமசீலன்.

இரௌத்திரி ஸூ புரட்டாசி மீ

## காரியம் முடிக்கும் விதம்.

---

ஒருவர் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க ஆரம்பித்தால் இன்று செய்வோம் நாளைச் செய்வோம் என்று நேரத்தைக் கடத்திவிடலாகாது; நினைத்த சமயத்திலேயே அதிற் பிரவேசிக்கவேண்டும்; அதற்குரிய சாதனங்களை யெல்லாந் தேடிக் கொள்ள வேண்டும்; மனிதர் சகாயத்தைப் பெறவேண்டும்; பொருளைச் சேகரிக்க வேண்டும். இவ்வாறு யாவற்றையும் சேகரித்துக் கொண்டு தொழில் செய்யத் தொடங்க வேண்டும்; அவ்வாறு தொடங்கிய வுடனே அதனால் உடம்பிற்கு மிகுந்த வருத்த முண்டானாலும் அதைக் கவனிக்கலாகாது; பசிமிகுந்தாலும் அதையும் இலட்சியம் செய்யலாகாது; தூக்கங்கெட்டாலும் அதற்காகத் தளர்ச்சி யடையக் கூடாது; பலர் இடையூறு செய்யினும் அதற்கஞ்சி யிளைத்துக் காரியத்தைக் கைசோர விடலாகாது; அக்காரியத்தை முடிப்பதற்குப் போதுமான நேரமில்லாதிருந்தாலும் 'இந்த அற்ப காலத்திற்குள் காரியத்தை எப்படி முடிப்போம்' என்று காலத்தை உத்தேசித்து அதைரியங் கொள்ளலாகாது; என்ன அவமானம் நேர்ந்தாலும் அதனைக் கவனிக்கலாகாது; இவற்றை யெல்லாம் தள்ளி அந்தக் காரியம் முடித்தல் ஒன்றிலேயே கருத்தைச் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்யின் எத்தகைய காரியங்களும் எளிதில் முடியும். அதனால் கீர்த்தியையும் செல்வத்தையும் இம்மையில் அடையலாம்; மறுமையிலும் நற்கதி பெறலாம். இவ்வாறு முற்காலத்தில் காரியமுடித்து நற்பயன் பெற்றவர்களின் சரித்திரங்களை நம் பண்டைய புராணங்களால் கண்டுணரலாம். இக்காலத்திலும் மேல் நாட்டாரைக் கவனித்தால் அவர்கள் எளிதில் காரிய முடிக்கும் விதங்களும் அவற்றால் அடையும் பல நன்மைகளும் நன்கு விளங்கும். நம்



நாட்டிலும் பல வகுப்பார் இவ்வாறு காரியம் முடித்து மேம்பாடுறுவதைக் காணலாம். இவ்வாறின்றி ஒவ்வொரு விஷயத்திலும் தளர்ச்சி யடைந்தால் எந்தக் காரியமும் நிறைவேறாது.

ஆதலின், எந்தக் காரியத்தையும் நினைத்த போதே விரைவில் செய்து முடிக்க வேண்டும். இப்போது நம்மதத்தினரின் விருத்திக்காக ஆங்காங்கே சங்கங்கள் கூட்டப் பட்டுப் பல விஷயங்கள் பேசப்பட்டு வருகின்றன. அவை பேச்சளவாக இருக்கின்றனவே யன்றி ஒன்றும் முடிவுக்கு வரவில்லை. இவ்வாறு அவை பேச்சளவாக இருப்பதினால் ஒருபயனு மில்லை. ஒவ்வொரு காரியத்தையும் நம்மவர் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அப்பொழுது தான் நம் உத்தேசங்களெல்லாம் நிறைவேறும்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்---செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்"

(பத்திராதிபர்)

---

## முன்னேற்றத்திற்கு அவசியமானவை.

---

ஒரு தேசத்தாரோ ஒருஜன சமூகத்தாரோ, ஒருஜாதியாரோ ஒரு மதத்தினரோ முன்னேற்றம் அடையவேண்டுமானால் பின் கூறப்படும்விஷயங்களை அவசியமாகக் கைக்கொள்ள வேண்டும். அவ்வாறு கைக் கொண்டால் ஒவ்வொரு வகுப்பாரும் சகல விதத்திலும் மேன்மை அடையலாம். இவற்றைப் புறக்கணிப்பவர்கள் எவ்வழியிலும் மேன்மை அடைய மாட்டார்கள். அவர்கட்கு இம்மை மறுமையாகிய இரண்டிடங்களிலுமே ஒருவித சௌக்கியமும் ஏற்படமாட்டாது. அவர்கள் எப்பொழுதும் மனிதர்களில் தாழ்ந்தவர்களாக நிலவுவார்கள் என்பது நிச்சயம். ஒரு வகுப்பார் முன்னேற்றத்திற்காகக் கைக்கொளத் தக்க விஷயங்களாவன:—

1. எல்லோரும் மனம் ஒன்று பட்டிருத்தல்.

2. தங்கள் வகுப்பார் சகலரையும் சகோதரராக பாவித்தல்.

3. கஷ்ட நஷ்டங்களை நோக்காமல் தங்கள் வகுப்பார் முன்னேற்றமையும் பொது நன்மைக்காக உழைத்தல்.

4. தங்கள் தங்கள் பொருள்களில் ' வருவாயுட் கால்வழங்கி " என்றகியாயப்படி நான்கி லொரு பாகத்தையாவது ஜாதி மத விருத்திக்காகச் செலவிடல்.

5. ஆங்காங்கே சங்கங்களை ஸ்தாபித்தல்.

6. தம்மவர் இருக்கும் ஒவ்வொரு இடங்களிலும் பாடசாலைகளை ஏற்படுத்துதல்.

7. தங்கள் வகுப்பாருக்கென்றே பல பத்திரிகைகளை வெளிப் படுத்துதல்.

8. வேறு பல பத்திரிகைகளையும் வாங்கி வாசித்தல்.

9. தம்மத கிரந்தங்களை அச்சிட்டு வெளிப் படுத்திப் பலரும் வாசிக்கும்படி செய்தல்.

10. தம் ஆலயங்களுக்கு பூஜை திருவிழா முதலியவற்றைச் சரிவர நிறைவேறும்படி செய்தல்.

11. தம் மதாசார ஒழுக்கங்களினின்றும் தவறாதிருத்தல்.

12. நல்ல தலைவர்களுக்குக் கீழ்ப்பட்டு அவர்கள் சொற்படி நடத்தல்.

13. சாஸ்திரக் கருத்துக்களை ஆராய்ந்து சொல்லும் விவேகிகளுடைய வாக்கையும் பெரியவர்களுடைய கட்டுரைகளையும் ஏளனம் செய்து தள்ளாமல் தெய்வ வாக்காக ஏற்றுக் கொள்ளுதல்,

14. பேதைமையான பண்டைக் கொள்கைகளை நீக்குதல் ஆகியவைகளாம்.

முதலாவது ஒற்றுமை. இவற்றுள் எல்லோரும் மனம் ஒன்று பட்டிருத்தல் மிகவும் முக்கியமானது. இந்த ஒற்றுமையே சகல பெரிய காரியங்களையும் நிறைவேற்றுவிக்கும். ஒருவர் நம்மத விருத்திக்காக இன்னதைச் செய்ய வேண்டுமென்று ஒரு பிரேரபனை கொண்டு வந்தால் அதற்கு எல்லோரும் இசைந்து நடக்க வேண்டும். ' அவனென்ன சொல்வது நாமென்ன கேட்பது ' என்று ஒவ்வொருவரும் மனவிகற்பப் படலாகாது. இஃது எப்பொழுதும் கெடுதியையே விளைவித்து முன்னேற்றத்திற்கு நாசத்தை யுண்டாக்கி விடும்.

இரண்டாவது, சகோதரபாவனை இன்னும் விசேஷமானது. தங்கள் வகுப்பிலுள்ள எல்லோரையும் தங்கள் கூடப் பிறந்தவர்களென்றே எண்ணவேண்டும். தம்மவருள் ஒருவருக்கு ஒரு தீங்கு வந்தால் அது தமக்கு நேர்ந்ததாகவே பாவித்து அதை நீக்குவதற்குக் கூடியவரை முயற்சி செய்ய வேண்டும். அவர்களுக்கு ஏற்படும் சந்தோஷத்தைத் தங்களுடையதாகவே பாவிக்க வேண்டும். இந்தக் கொள்கையானது மத முன்னேற்றத்திற்குப் பெரிய அரணாம்.



மூன்றாவது, பொது நன்மைக்காக உழைப்பதில் மனம், மொழி, மெய் மூன்றும் உண்மையோடு பாடுபட வேண்டும். அதில் எவ்வளவு தேகசிரமம், மனோசிரமம், பொருட் செலவு முதலியவை நேர்ந்தாலும் அவற்றிற்காக மனம் இளைக்காது வெகு தீவிரமாகத் தாங்கள் கொண்ட நன்முயற்சிகளைக் கைவிடாமல் செய்தே தீர வேண்டும். இந்தப் பிடிவாதமானது மத முன்னேற்றமாகிய மலைச்சிகரத்தின் மேல் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு ஒரு ஏணி போன்றதாகும்.

நான்காவது, ஜாதிமத விருத்திக்காக பொருட் செலவு செய்வதில் ஒவ்வொருவருக்கும் மிகுந்த சிரத்தை இருத்தல் வேண்டும். எவ்வளவு பொருள் தேடினும் நாம் நீடித்திருந்து அவற்றை அனுபவிக்கப் போகிறதில்லை. தேகமோ அநித்தியம். ஆதலின், நாம் உயிரோடிருக்கும் பொழுதே பொருளை இத்தகைய நல்ல விஷயங்களுக்குச் செலவிட்டுப் புகழைத் தேட வேண்டும். அவ்வாறு செலவிடுவதில் பண முழுவதையும் செல விட வேண்டுமென்று நினைக்க வேண்டியதில்லை. வரும்படியை நான்கு பாகமாகப் பிரித்து மூன்று பாகத்தைக் குடும்ப விருத்திக்காக வைத்துக் கொண்டு ஒரு பாகத்தை இத்தகைய பொது நன்மைகளுக்குச் செலவிட்டால் போதும். இப்படியே சாஸ்திரமும் இருக்கின்றது. உலகத்தில் எந்தக் காரியமும் பொருளின்றி நடை பெறாதாதலால் ஒவ்வொருவரும் தம்மத விருத்திக்கான காரியங்களுக்குத் திரவிய சகாயம் செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானது.

ஐந்தாவது, சங்கங்களை ஸ்தாபிக்கும் விஷயத்தில் ஒவ்வொருவரும் கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு சிறு கிராமங்களிலுங்கூட தமக்கென்றே சங்கங்களை ஸ்தாபித்தல் வேண்டும். அவற்றில் பலருங் கூடித் தம் மத முன்னேற்றத்திற்கான விஷயங்களை அடிக்கடி பேசித் தீர்மானித்து எல்லோரும் அவற்றிற் கிசைந்து நடக்கும்படி செய்ய வேண்டும். சங்கந்தான் ஜாதிமத விருத்திக்கான சகல விஷயங்களுக்கும் ஆணி வேர் போன்றது. இதன் மூலமாகத்தான் எல்லா விஷயங்களும் நடை பெற வேண்டும்.

ஆறாவது, பாடசாலைகளை ஏற்படுத்துவது எல்லாவற்றிலும் சிறந்த கடமையாகும். படிப்பு இருந்தால்தான் சகல நன்மையான காரியங்களையும் அறிந்து நடந்து ஒவ்வொருவரும் உன்னத பதவியை அடைய முடியும். அந்தப் படிப்புக்கு கல்விச்சாலைகள் முக்கியமானவை. அவ்வாறு கல்விச் சாலைகள் ஸ்தாபித்து, தம் மதச் சிறுவர்களையும் சிறுமிகளையும் தம் மத கிரந்தங்களையும் ஆங்கிலம் முதலிய லௌகிக பாஷைகளையும் கற்றுத் தேறும்படிச் செய்ய வேண்டும்.

ஏழாவது, ஒருவகுப்பார் முன்னேற்ற மடைவதற்குச் சாதனமான விஷயங்களை யெல்லாம் விருத்தியடையச் செய்வது பத்திரிகைதான். பத்திரிகையின் மூலம் சகல நல்ல விஷயங்களையும் தம்மவருடைய கொள்கைகளையும் அன்னியருடைய கொள்கைகளையும், தூரதேச வர்த்தமானங்களையும் நன்கு உணரலாம். பிரசங்க முதலியவைகளாவது கேட்ட போது மாத்திரம் அறிவு

றுத்தும். பத்திரிகையோ அடிக்கடி வீடு தேடி வந்து எப்பொழுதும் நல்ல விஷயங்களைப் போதித்துக் கொண்டிருக்கும். பத்திரிகைகளைக் கொண்டு தான் மேல் நாட்டாரெல்லோரும் இவ்வளவு தூரம் விருத்தியடைந்திருக்கிறார்கள். ஆகலால் நம் மதத்திற் கென்றே சில பத்திரிகைகள் அவசியம் இருத்தல் வேண்டும். இதை முன்னிட்டே இரண்டு மூன்று வருஷங்களாக நம் தருமசீலன் நடை பெற்று வருகின்றது. அதனால் பல நன்மைகளும், உண்டாகி வருகின்றன. அப்படியிருந்தும் சிலர், துர்ப்போதனையாலோ வேறு எவ்வித காரணத்தினாலோ அதனைத் திருப்பி வருகிறார்கள். அது சிறிதும் கூடாத செய்கை. அவர்களுக்கெல்லாம் அறிவுறுத்தி எப்படியாவது பத்திரிகையில் அபிமானம் வரச் செய்ய வேண்டும். இன்னுஞ் சில பத்திரிகைகளையும் வெளிப்படுத்தச் செய்ய வேண்டும். இதற்குப் பலர் இடையூறு செய்யினும் அதை நிவர்த்திக்க முயற்சி செய்ய வேண்டும்.

எட்டாவது, நமக்கென்று ஏற்பட்ட பத்திரிகைகளைப் படிப்பதோடு வேறு அன்னியருடைய பத்திரிகைகளையும் வரவழைத்து வாசித்தல் வேண்டும். இதனால் பல லௌகிக தர்மங்களையும் வைதிக தர்மங்களையும் கற்றுக்கொள்ளலாம். அவற்றின் மூலம் விருத்தியடைந்திருக்கும் அன்னியர் போக்குகளைப் பார்த்தாவது நாமும் நம்மத விருத்திக்காகச் செய்ய வேண்டிய காரியங்களில் பிரவேசிக்க ஊக்க முண்டாகும்.

ஒன்பதாவது, நம்மத கிரந்தங்களை வெளிப்படுத்துதல் எல்லாவற்றை விட மிக அவசியமானதாகத் தெரிகிறது. நம்மத கிரந்தங்கள் எல்லாவற்றிலும் சிறந்திருந்தனவென்பது யாவரும் அறிந்த விஷயம். அப்படியிருந்தும் நம்மவரின் கல்விக்குறைவினாலேயே அவையெல்லாம் ஆங்காங்கே மறைந்து பாழடைந்து கிடக்கின்றன. இதனாலேயே நம்மவர்களும் நம்மதத்தின் உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் மனம் போனபடி கண்ட கண்ட வார்த்தைகளையெல்லாம் குதர்க்கமாகப் பேசிக் கொண்டு அனர்த்தத்திற்கு ஆளாகித் திரிகின்றார்கள். அன்னியரும் நம்மதக் கொள்கைகளை அறியாத காரணத்தால் ஏதேதோ பேசி நம்மை ஏளனம் செய்கின்றனர். ஆதலின் பல அச்சுக்கூடங்களை ஸ்தாபித்துப் பலரும் பொருளுதவி செய்து நம்மத கிரந்தங்களை வெளியிட வேண்டும். இப்போது முதலாவதாக நம் தருமசீலன் அச்சுக்கூடம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இதையும் விருத்திக்குக் கொண்டுவர வேண்டும். இன்னும் சில அச்சுக்கூடங்களையும் ஸ்தாபித்தல் வேண்டும்.

பத்தாவது, ஆலய பூஜை முதலியவற்றை நிறைவேற்றுதல்தான் எல்லாவித நன்மைகளுக்கும் அடிப்படையானது. தெய்வ அருள் இல்லாவிடின் எதுவும் நடைபெற மாட்டாது. ஆங்காங்கே இருக்கும் நம் ஆலயங்களைப் புதுக்கியும் சிறப்போடு திருவிழா பூஜை முதலியவைகள் நடத்தியும் நாம் அருகத் பரமேஸ்வரனுடைய அருளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்விஷயத்தில் எவ்வளவும் பாடு படலாம்.



பதினோராவது, நம்மத ஒழுக்கங்களை விட்டுத் தவறாதிருப்பதும் நமக்கு மிகவும் அவசியமானது. நம்மதாசாரங்கள் ஒருவிதமாயிருக்க இப்பொழுது இருப்பவர் நடக்கும் நடக்கைகளோ வேறு விதமாய் இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒழித்து நம்மவர்கள் ஒழுங்கில் நடக்கச் செய்ய வேண்டும்.

பனிரண்டாவது, எதற்கும் ஒரு தலைமை வேண்டும். தலைமை இல்லாவிடில் எந்தக் காரியமும் ஒழுங்காக நடைபெறாது. ஆதலின் நம் காரியங்கள் செவ்வனே நடைபெறுவதற்கு ஆங்காங்கே ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒவ்வொரு தகுதியான தலைவரை ஏற்படுத்தி அவர்க்குக் கீழ் அடங்கிக் காரியங்களை நடத்தல் வேண்டும். எப்பொழுதும் ஒழுக்கீனமானவர்கள் தலைமைக்கு அருகராக மாட்டார். தலைவர்கள் எவரேனும் ஒழுக்கீனமானவர்களாக இருந்தால் அவர்களை அக்கூட்டத்தார் உடனே நீக்கி வேறு தலைமையை ஏற்படுத்த வேண்டும். ஒழுக்கீனமானவர்களுக்கு உள்ளடங்கி நடப்பதிலும், தலைமை யின்றித் தங்கள் சுயேச்சையாக நடத்தல் மிகவும் சிறந்ததாகும்.

பதின்மூன்றாவது, பெரியோருரைப்படி நடப்பதுதான் ஒருவருப்பார் நன்மையடைவதற்கு மிகவும் முக்கியமானது. விவேகிகளும் பெரியோர்களும் சிறந்த சாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றின் கருத்துக்களை எடுத்து பிரசங்க மூலமாகவோ பத்திரிகைகளின் வாயிலாகவோ வெளிப்படுத்தினால் அவற்றைத் தெய்வ வாக்காகக் கருதி மனத்திற் கொண்டு நடத்தல் வேண்டும். அவ்வார்த்தைகளை எள்ளளவும் ஏளனம் செய்து தள்ளலாகாது. அவ்வாறு குதர்க்கம் செய்யும் கொடுமதியாளர் பாழ்ங் கதிக்கு ஆளாவது நிச்சயம். அவர்கள் எப்பொழுதும் ஈடேறப் போகிறதே இல்லை. நன்றாக ஆராய்ந்து பார்க்குமிடத்து, பெரியோர் வாக்கைத் தள்ளாது கொண்டு நடந்த வருப்பாரே விருத்தியடைந்திருக்கிறார் என்பது நன்கு விளங்கும். இதற்குதாரணமாக கிறிஸ்தவர் முதலியவர்களைப் பாருங்கள். அவர்கள் நூறு வருஷங்களுக்கு முன்னிருந்த நிலைமையென்ன! இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன. அவர்கள் இவ்வளவு தூரம் விருத்தியடைந்ததற்குக் காரணம் அவர்களுடைய பெரியோர்களின் வாக்கைத் தட்டாமல் அவர்கள் நடந்து வந்ததன்றோ. இது நம்மவர்களில் மிகவும் குறைவாயிருக்கின்றது. இதனாலேயே நம்மவர்கள் இப்பொழுது இருட்டறைக்குள் இருப்பது போல் தாழ்ந்த நிலைமையிலிருந்து விழிக்கின்றனர்.

பதினாலாவது, பண்டைக் காலத்திய சில பேதைமையான கொள்கைகள் நம்மத முன்னேற்றத்திற்கு மிகவும் இடையூறாயிருக்கின்றன. ஆதலின் அவற்றையொழித்து நம்மத விருத்திக்கான புதிய மார்க்கங்களைப் பின்பற்ற வேண்டும். வேப்பிலை தின்பது மிகவும் அருவருப்பான காரியமென்றால் என்னமோ எங்கள் முன்னோர்கள் வழக்கப்படி சாப்பிட்டு வருகிறோம் என்று சொல்லக் கூடாது. வாஸ்தவந்தான், வேப்பிலை கசப்பானது அதைத் தள்ளிக் கரும்பைத் தான் தின்ன வேண்டும் என்று பேதைமையான கொள்கைகளைத் தள்ளி நல்ல கொள்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பதினான்கு முறைகளையும் நாம் தெய்வ வாக்காகக் கொண்டு இவற்றின்படி நடப்போமானால் வெகு சீக்கிரம் முன்னுக்கு வரலாம். என்னமோ பேசினார்கள் என்று இவற்றை நீங்கள் புறக்கணித்து விட வேண்டாம். ஒவ்வொருவரும் மனத்தில் உறுதியாகக் கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் இப்படியே செய்வோமென்று சத்தியம் பண்ணுங்கள். உங்கள் எல்லோருக்கும் அருகர் துணை செய்வார். இதற்கறிகுறியாக எல்லோரும் கரகோஷம் செய்யுங்கள். (கரகோஷம்) சுபம்.

பத்திராதிபர்.

குறிப்பு:—கப்பியாம்புலியூரில் சென்ற ஆவணிமீ 21ᵘ நடந்தசங்கத்தில் இப்பதினான்கு முறைகளும் பத்திராதிபரால் உபந்யாசிக்கப் பட்டவை.

---

## திருக்கலம்பம் மூலமும் உரையும்.

முன் தொடர்ச்சி புத்தகம் 3, சஞ்சிகை 5. பக்கம்-126.

### வெண்பா.

என்மொழியி னென்னறிவி னென்னன்பின் யான்றொடுத்த
புன்மொழி மாலை புனைந்தக்காற்---பொன்மலர்மே
லம்மானுக் கிந்திரர்க ளாயிரம்வாய் கொண்டேத்து
மெம்மானுக் கென்னியையு மாறு.

(ப-ரை.) என்-எனது, மொழியின்-சொல்லினாலும், என்-எனது, அறிவின்-அறிவினாலும், என்-எனது, அன்பின்-அன்பினாலும், யான்- (நானாகிய) யான், தொடுத்த-கட்டிய, புன்-புன்மையான, மொழிமாலை-சொல் மாலையை, புனைந்தக்கால் - (திருவடியில்) தரித்தால், பொன்மலர்மேல் - பொற்றாமரைப் பூ மேலிருக்கின்ற, அம்மானுக்கு - அருகபரமேட்டிக்கு, இந்திரர்கள்- (நூறு) இந்திரரும், ஆயிரம் வாய் கொண்டு-ஆயிரம் வாயினை விகுர்வணையால் நிருமித்துக் கொண்டு, ஏத்தும்-துதிக்கும், எம்மானுக்கு-என்சுவாமிக்கு, என்-(அஃது) எவ்விதம், இயையுமாறு - பொருந்தும் விதம்? எ-று.

(பொ-ரை.) எனது சொல்லினாலும், எனது அறிவினாலும், எனது அன்பினாலும், நானாகிய யான் கட்டிய புன்மையான சொன்மாலையைத் திருவடியிற் றரித்தால், பொற்றாமரைப் பூ மேலிருக்கின்ற அருக பரமேட்டிக்கு, நூறிந்திரரும் ஆயிரம் வாயினை விகுர்வணையால் நிருமித்துக் கொண்டு துதிக்கும் என் சுவாமிக்கு, அஃது எவ்விதம் பொருந்தும்விதம்? எ-று.

(வி-ரை.) இசையா தென்பது குறிப் பெச்சம். இதனாலிறைவனது பெருமையுந் தனது சிறுமையுங் கூறப்பட்டன. இயையுமாறு எ-து எழுவாய்; என்ன எ-து பயனிலை.



நூறு இந்திராவார்:—பவணேந்திரர் நாற்பதின்மர்; வியந்தரேந்திரர் முப்பத்திருவர்; ஜோதிஷ்கேந்திரர் இருவர்; கற்பேந்திரர் இருபத்து நால்வர்; நரேந்திரன் ஒருவன்; மிருகேந்திரன் ஒன்று. (உ)

### கட்டளைக் கலித்துறை.

ஆறுரைத் தான்பொரு ளைந்துரைத் தான்கதி நான்குரைத்தான்
மாறுரைத் தாரை முருக்கு மறைவைய மூன்றினுக்கும்
வேறுரைத் தான்றொல் லறமிரண் டவ்விரண் டாலும்விடு
பேறுரைத் தானமக் கொன்றுரை யாத பெருந்தகையே.

(ப-ரை.) ஆறு-ஆறுவகையென்று, உரைத்தான்-சொன்னான், பொருள்-பொருளை; ஐந்து-அத்திகாயத்தை ஐந்து வகையென்று, உரைத்தான்-சொன்னான்; கதி-(உயிர் சென்று திரியுங்) கதியை, நான்கு-நான்கு வகை யென்று, உரைத்தான்-சொன்னான்; மாறு-மித்தியாத்துவமாக, உரைத்தாரை-சொன்னவர்கள் சொல்லை, முருக்கும்-கெடுக்கின்ற, மறை-(நான்கு) வேதங்களையும், வையம் மூன்றினுக்கும்-மூவுலகத்தாருக்கும், வேறு-சம்மியத்துவமாக, உரைத்தான்-சொன்னான்; தொல்- பழமையான, அறம் இரண்டு-இரண்டு வகை அறத்தையும்,உரைத்தான்-சொன்னான்; அவ்விரண்டாலும்-அவ்வற மிரண்டினாலும், விடு-(கருமமானது சீவனை)விடுகின்ற, பேறு-தன்மையை,உரைத்தான் -சொன்னான்;நமக்குஒன்று-நமக்கு ஒன்றினையும், உரையாத-சொல்லாத, பெருந்தகை-பெரிய குணத்தையுடைய சுவாமி எ-று.

(பொ-ரை.) (நெஞ்சமே!) நமக் கொன்றினையுஞ் சொல்லாதபெருந்தகை, மூவுலகத்தாருக்கும் பொருளை ஆறுவகை யென்று சொன்னான்; அத்தி காயத்தை ஐந்து வகை யென்று சொன்னான்; உயிர் சென்று திரியுங்கதியை நான்கு வகை யென்று சொன்னான்; மித்தியாத்துவமாகச் சொன்னவர்கள் சொல்லைக் கெடுக்கின்ற நான்கு வேதங்களையும் சம்மியத்துவமாகச் சொன்னான்; பழமையான இரண்டு வகை அறத்தையுஞ் சொன்னான்; அவ்வறம் இரண்டினாலும் கருமம் விடுகின்ற தன்மையைச் சொன்னான். எ-று.

(வி-ரை.) இதனால் சகல தத்துவங்களையும் உரைத்தவன் இவனே யென்பது கூறப்பட்டது. பெருந்தகை எ-து எழுவாய்; பொருண்முதலியவைகளை எ-து செயப்படு பொருள்; சொன்னான் எ-து பயனிலை.

அத்திகாயம், ஐந்தாவன:—ஜீவாஸ்தி காயம், புத்கலாஸ்திகாயம், தர்மாஸ்திகாயம், அதர்மாஸ்திகாயம், ஆகாஸாஸ்திகாயம். கதி நான்காவன:— நரககதி, திரியக்கதி, மநுஷ்யகதி, தேவ கதி. உலக மூன்றாவன:-சுவர்க்கம், மத்தியமம் பாதாளம். நான்கு வேதங்களாவன:—பிரதமாநு யோகம், கரணாநு யோகம், சரணாநு யோகம், திரவ்யாநு யோகம். அறம் இரண்டாவன:—இல்லறம், துறவறம்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பெருந்தகைநின் றெய்வமொழி தோன்றத் தோன்றிப்
பிறழாநின் றூயமொழி நிற்ப நின்றுன்
னருந்தகைய செய்யமொழி செல்லச் செல்லு
மகன்ஞால முழுதுமுட னென்றால் வானோர்
பொருந்தகைய முடிநெருக்க வெழுந்த சோதிப்
பொலந்துகளைப் பூந்துணரின் மதுநீர் மாற்ற
விருந்தவெயின் மூன்றுடையாய் நீய லான்மற்
றியாவர்படைத் தளித்தழிக்கு மியல்பி னோரே.

(ப-ரை.) பெருந்தகை-பெருந்தகையை யுடையவனே, நின் தெய்வமொழி-நின்னாற் சொல்லப்பட்ட பரமாகமம், தோன்ற-உண்டாக, தோன்றி-தானுந் தோன்றி, பிறழா-மாறுபாடில்லாத, நின் தூய மொழி – உன்னாற் சொல்லப்பட்ட பரமாகமம், நிற்ப-நிலைபெற, நின்று-தானும் நிலைபெற்று நின்று, உன்-நின்னாற் சொல்லப்பட்ட, அரும்-அருமையாகிய, தகைய-குணத்தையுடைய, செய்ய மொழி-அப்பரமாகமம், செல்ல-நீங்க, உடன்-உடனே, செல்லும்-நீங்கும், அகல்-பரந்த, ஞாலமுழுதும்-உலக மெல்லாம், என்றால்-என்று சொல்லப்பட்டால், வானோர்-தேவர்களுடைய, பொரும்-இருளை யோட்டுகின்ற, தகைய-தன்மையை யுடைய, முடி-மகுடங்கள், நெருக்க-(ஒன்றையொன்று) தாக்க, எழுந்த-அதனாலுண்டாகிய, சோதி-விளக்கமான, பொலந்துகளை-பொற்பொடியை, பூந்துணரின்-அம்முடியிற் றரித்த பூங்கொத்தினின்றுமிழ்ந்த, மதுநீர்-தேனாகிய ஜலமானது, மாற்ற-தணிக்க, இருந்த-வீற்றிருந்த, எயில் மூன்று உடையாய்-மும்மதிலை உடையவனே, நீ யல்லால்—நீயே யல்லாமல், மற்றுயாவர்-வேறே யெவர், படைத்து-அவ்வுலகத்தை யுண்டாக்கி, அளித்து-காத்து, அழிக்கும்-நீக்குகின்ற, இயல்பினோர்-தன்மையை உடையவர். எ-று.

(பொ-ரை.) பெருந்தகையை யுடையவனே! நின்னாற் சொல்லப்பட்ட பரமாகமம் உண்டாகத் தானுந் தோன்றி, மாறுபாடில்லாத உன்னாற் சொல்லப்பட்ட பரமாகமம் நிலைபெறத்தானும் நிலைபெற்று நின்று, நின்னாற் சொல்லப்பட்ட அருமையாகிய குணத்தையுடைய அப்பரமாகமம் நீங்க, உடனே நீங்கும் பரந்த வுலகமெல்லாம் என்று சொல்லப்பட்டால், தேவர்களுடைய இருளை யோட்டுகின்ற தன்மையை யுடைய மகுடங்கள் ஒன்றை யொன்று தாக்க அதனாலுண்டாகிய விளக்கமான பொற்பொடியை அம்முடியிற்றரித்த பூங்கொத்தினின்றுமிழ்ந்த தேனாகிய ஜலமானது தணிக்க, வீற்றிருந்த மும்மதிலையுடையவனே! நீயே யல்லாமல் வேறே யெவர் அவ்வுலகத்தை யுண்டாக்கிக்காத்து நீக்குகின்ற தன்மையை யுடையவர்? எ-று. (௪)

(வி-ரை.) இதனால் நீயே கடவுளென்பது பெறப்பட்டது. இயல்பினோர், ம்-து எழுவாய்; யாவர் எ-து பயனிலை.



அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இயல்கொண்ட பொருளனைத்து மெஞ்சாம
லெப்பொழுது முடனே காணுஞ்
செயல்கொண்ட திசைமுழுதுந் திகழ்ந்திலங்குந்
திருமுகத்து நின்னை யல்லான்
முயல்கொண்ட கறைதுடைத்த முத்தணிந்த
மும்மதிமுக் குடையா யிந்த
மயல்கொண்ட வகன்ஞாலந் திசைமுகனென்
றெவ்வாறு வழங்கு மாறே.

(ப-ரை.) இயல்கொண்ட-குணங்கொண்ட, பொருளனைத்தும்-அறுவகைப் பொருளையும், எஞ்சாமல்-குறையாமல், எப்பொழுதும்-முக்காலத்திலும், உடன்-ஒரு தன்மையாக, காணும்-பார்க்கின்ற, செயல் கொண்ட-செயலையுடைய, திசைமுழுதும்-நான்கு திக்கிலும், திகழ்ந்து-விளங்கி, இலங்கும்-ஒளிர்கின்ற, திருமுகத்து-அதிசயத்தால் நான்கு முகத்தையுடைய, நின்னையல்லால்-உன்னை யல்லாமல், முயல்-முயலை, கொண்ட-தன்னிடத்துக் கொண்ட, கறை-களங்கத்தை, துடைத்து-நீக்கி, முத்து அணிந்த-முத்து மாலைகள் தரித்த, மும்மதி—மூன்று மதிபோன்ற, முக்குடையாய்-மூன்று குடையினை யுடையவனே, மயல்-மயக்கத்தை, கொண்ட-மனதிற் கொண்ட, அகல்-அகன்ற, ஞாலம்-இவ்வுலகத்தார், திசை முகனென்று-விகாரத்தால் நான்கு முகம் பெற்றவனைத் திசைமுகனென்று, எவ்வாறு-எவ்விதம், வழங்குமாறு—சொல்லும் விதம். எ-று.

(பொ-ரை.) முயலைத் தன்னிடத்துக் கொண்ட களங்கத்தை நீக்கி முத்துமாலைகள் தரித்த மூன்று மதிபோன்ற மூன்றுகுடையினை யுடையவனே! குணங் கொண்ட அறுவகைப் பொருளையுங் குறையாமல் முக்காலத்திலும் ஒரு தன்மையாகப் பார்க்கின்ற செயலை யுடைய நான்கு திக்கிலும் விளங்கி ஒளிர்கின்ற அதிசயத்தால் நான்கு முகத்தையுடைய உன்னையல்லாமல் மயக்கத்தை மனதிற் கொண்ட அகன்ற இவ்வுலகத்தார் விகாரத்தால் நான்குமுகம்பெற்றவனைத் திசைமுகனென்று எவ்விதம் சொல்லும் விதம்? எ-று.

(வி-ரை.) இதனால் உலகத்தாருடைய பேதைமை கூறப்பட்டது. வழங்குமாறு எ-து எழுவாய்; எவ்வாறு எ-து பயனிலை. (௫)

கட்டளைக் கலித்துறை.

வழங்கும் பதினெண் மொழியு மிதமு மதுரமுமாய்
முழங்குங் கலைமகள் காந்தர்கண் டீர்முது நீர்மடுவுங்
கிழங்குந் தவிர விசும்பிடைப் பூத்தலர் கிண்டிவண்டு
தழங்குங் கமலத்து வந்துல கேழையுந் தந்தவரே.

(ப-ரை.) வழங்கும்-உலகத்தில் வழங்கும், பதினெண்மொழியும்-பதினெண்பாஷையும், இதமும்-இதமுள்ளனவாயும், மதுரமுமாய்-மதுரமுள்ளனவாயும், முழங்கும்-ஒலிக்கின்ற, கலைமகள்-சரஸ்வதியினுடைய, காந்தர்-நாயகர், முது-பழமையான, நீர்-ஜலத்தையுடைய, மடுவும்-குளமும், கிழங்கும்-கிழங்கும், தவிர-நீங்க, விசும்பிடை-ஆகாயத்தில், பூத்து-உண்டாகி, அலர்-மலர்ந்த, கிண்டு-குடைந்து, வண்டு-வண்டுகள், தழங்கும்-இசைபாடும், கமலத்து-தாமரை மலரில், வந்து-தோன்றி, உலகு எழையும்-எழுவகை உலகங்களையும், தந்தவர்-தெரிவித்தவர். எ-று.

(பொ-ரை.) பழமையான ஜலத்தையுடைய குளமும் கிழங்கும் நீங்க, ஆகாயத்திலுண்டாகி மலர்ந்த, குடைந்து வண்டுகள் இசைபாடும் தாமரை மலரிற்றோன்றி எழுவகை யுலகங்களையுந் தெரிவித்தவர் இதமுள்ளனவாயும், மதுரமுள்ளனவாயும் உலகத்தில் வழங்கும் பதினெண்பாஷையு மொலிக்கின்ற கலைமகளுடைய நாயகர்; எ-று.

(வி-ரை.) கண்டீர் என்பது முன்னிலையசை. இதனால் உலகைத்தரும் நாதன் இவனெனக் கூறப்பட்டது. உலகு எழையுந் தந்தவர் எ-து எழுவாய்; கலைமகள் காந்தர் எ-து பயனிலை.

எழுவகை யுலகாவன:—நாகலோகம்; பவணலோகம், நரலோகம், ஜோதிர் லோகம், கல்பலோகம், அகமிந்திர லோகம், மோக்ஷலோகம். (சு)

(தொடரும்.)

இங்ஙனம்,

மேல்மின்னல்—சக்கரவர்த்தி நயினார்.

---

## விஜயபாலன்.

(முன் தொடர்ச்சி. பக்கம்-144.)

---

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே தலையாரி மேற்குமாட வீதியுள் சென்று 3-வது ஜாமத்தில்,

“ஆசையா பத்தமே தலோகே கர்மணா வெகுசிந்தையா,
ஆயுக்ஷீணம் நஜாநாதி தஸ்மாத் ஜாக்ரதிஜாக்ர:”

என்ற சுலோகத்தைச் சொல்லிப் பறைசாற்றுவித்தான். அரசன் இதைக் கேட்டதும், ஜிநமாலையை நோக்கி, “பெண்ணே! இன்று எவனோ ஒருவன் ஒவ்வொரு ஜாமத்திற்கும், ஒவ்வொரு சுலோகத்தைச் சொல்லிக்கொண்டு டாம் டாம் என்று பறையறைவிக்கிறான். இப்பொழுது சொல்லியதையும் கேட்பாயாக; லோகத்தில், ஆசையினாலே பந்திக்கப்பட்டுக் கர்மத்தினால் அநேக சிந்தனைகள் உண்டாகின்றன. ஆகையால், ஆயுஷ்யம் போகாமுன்னம்



ஜாகிருதையாகத் தூங்காமலிரு' என்று இப்போது கூறிய சுலோகத்தால் தெரிவித்தான். இவற்றை ஆராயுமிடத்து,

“என்பினை நரம்பிற் பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறத் தோலின் மூடி யழுக்கொடு புழுக்கள் சோரு
மொன்பது வாயிற் றூய வூன்பயில் குரம்பை தன்மே
லன்பறு மாந்தர் கண்டா யறிவினற் சிறிய ரோர்” (மேருமந்தரம்)

“நார்த்தொடுத் திர்க்கிலென் னன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
றோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்” (நாலடி)

“சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து” (நாலடி)

என்ற செய்யுட்களின்படி, எலும்புகளை நரம்புகளினால் பின்னி இரத்தத்தையும் மாமிசங்களையும் மெத்தி அற்பமாகிய தோலினால் மூடி மலங்களும் புழுக்களும் சொரியும் ஒன்பது துவாரங்களையுடைய உருவமாகச்செய்த சரீரமாகிய குடிசையின் பேரில் ஆசை நீங்காதவர் சிற்றறிவினை யுடையர் என்பதும், தோல் பையாகிய உடம்பினுள்ளே தொழில்களைச் செய்விக்கும் ஆத்மாவானது போய்விட்டால் தேகத்தை நாரால் கட்டியிழுத்தாலென்ன புஷ்பங்களினால் அலங்காரஞ்செய்து அடக்கினாலென்ன பூமிக்குள் புதைத்தாலென்ன பலர்கள் பழித்தாலென்ன, செத்தவர்களை சாகப்போகிறவர் இரண்டு மூன்று தரம் பறையறைவித்துத் தூக்கிக்கொண்டெழுவார் என்பதும், விளங்குகின்றன. ஆகையால் அருக பரமனது ரூபம் தரிக்க என் மனந்துணிந்து விட்டது” என்றான். ஜிநமாலையும் புருஷனுடைய வைராக்கியத்தைக் கண்டு மதிமயக்கமுற்றிருந்தாள். அச்சமயத்தில் தலையாரியும் வடக்கு மாடவீதி சென்று நான்காம் ஜாமத்தில்,

“காமக்குரோத நிலோபஞ்ச தேகே திஷ்டந்தி தஸ்கரா:,
ஞானரத் நாபஹாராய தஸ்மாத் ஜாக்ரதி ஜாக்ர:”

என்றான். அப்போது இராஜன் பத்தினியைப்பார்த்து, “மாதே! இந்த நான்காம் ஜாமத்தில் அவன் சொன்னதைக் கவனித்தாயா?” என்றான். அதற்கவள், “நாதனே! நான் அதை நன்றாய்க்கேட்டேன்; தேகத்தில் காமக்குரோத லோப மோக மதமாச்சரிய மென்னும் திருடர்கள் குடியிருப்பதாக அவன் சொல்லுகின்றான். அவர்கள் தன்மை என்ன? மானிடராய்ப்பிறந்தவர்களில் திருடர்

ளாயிருப்பவர், வழிபறிப்பதுண்டு; வீடுகளில் கன்னம்வைத்துப் பொருள்களைத் திருடுவதுண்டு. மேல்கண்ட ஆறு திருடர்கள் எதைத் திருடுவார்கள்?" என்றாள். அதற்கு இராஜா அவளைநோக்கி "கேளாய் பாவையே! மேற்சொன்ன ஆறு திருடர்களும் ஞானரத்தினமென்னும் நற்காக்ஷி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகியரத்தினங்களைத் திருட, தேகத்தில் குடிகொண்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் வலையில் ஞானரத்தினங்கள் அகப்படாமலிருந்தால் நற்கதி அடைய ஹேதுவாகும். அவர்கள் சுவாதீனத்தில் ஞானரத்தினங்கள் போய்விட்டால் மனிதர் துர்க்கதியினை அடைகுவர். எப்படியெனில்,

"அல்லித்தா ளற்ற போது மறாதநூ லதனைப்போலத்
தொல்லைத்தம் முடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்து நீங்கா
புல்லிக்கொண் டுயிரைச் சூழ்ந்து புக்குழிப் புக்குப் பின்னின்
றெல்லையி றுன்பவெந்தீ சுட்டெரித் திடுங்களன்றே" (சிந்தாமணி)

என்றபடி, அல்லித்தண்டானது அற்று வீழ்ந்த போதிலும் அதிலுள்ள நூலறாதிருக்குந்தன்மைபோல நம் உடம்பை விட்டு உயிர் நீங்கினாலும் பழைய தீவினையானது அவ்வுயிரைவிட்டு நீங்காமல் மறு ஜென்மத்திலேயுங் கூடச் சென்று சுட்டெரித்துவிடும். ஆதலால் மானிடராய்ப்பிறந்து கொலை, பொய், களவு, காமம், பரிக்கிரகம், மது மத்விய மாமிசம் ஆகியவைகளை நிவர்த்திசெய்யாமல் அவற்றிற்கு உடன்படுகிறவர்கள் விலங்கு கதிகளிலும் சத்துரு மித்துருவாய்ப் பிறந்து அதிக துக்கங்களை யனுபவித்து நரககதியிலும் சென்று துன்பத்தை யனுபவிக்கப்போவர். அப்போது,

"விம்மாந்து வெந்நரகத் தில்வீழும் போதஞ்சி
அம்மாவோ வென்றழுதால் யாரொருவர் நோக்குவார்
எம்மானு மீரடியு மல்லாலிங் கென்கண்டாய்
செம்மா மலர்ப்பிண்டித் தேவர் பெருமானே."

என்றபடி அவர்க்கு நின்னடித்துணையின்றி வேறு துணையில்லை. ஆதலால் நரககதியில் துன்பத்தை யடையும்போது தாயைநினைத்தழுவதால் பிரயோஜனமில்லை; அப்போது அறவாழியந்தணனையும், தர்மத்தையும் நினைக்கவேண்டும்.

"அறவிய மனத்த ராகி யாருயிர்க் கருளைச் செய்யிற்
பறவையு நிழலும் போலப் பழவினை யுயிரோ டாடி
மறவியொன் றானு மின்றி மனத்ததே சுரக்கும் பால (மணி
கறவையிற் கறக்குந் தம்மாற் காமுறப் பட்டவெல்லாம்" (சிந்தா

என்றபடி மனிதர் பலவுயிர்களின் பேரிலும் தயை உள்ளவராயின் அந்நல்வினையானது பறவையைப்பற்றி நிழல்விடாது திரிவது போல அவ்வுயிரைவிடாமற் பற்றித் திரிந்து சிறிதும் மறப்பின்றி, அவர் மனதில் நினைக்கப்பட்ட



எல்லாவற்றையும் சுரபி போலக் கொடுக்கும்" என்றான். அதைக் கேட்ட ராஜஸ்திரீ, "நாதனே! நல்வினை தீவினைகளின் பயனை அறிவித்தீர்கள்; ஜீவனானது எப்படி முக்தியடைகின்றதென்பதைத் தெரிவிக்க வேண்டும்" என்றனள். அதற்கு இராஜா,

"வினைபற விட்ட போழ்தின் வெடித்தவே ரண்டம் போல
நினைவருங் குணங்க ளெட்டு நிறைந்துமே னோக்கி யோடி
முனிவரு முலக மூன்று மிறைஞ்சவு லகி னுச்சி
கனைகழ லரசநிற்றல் கைவல மாகுங் கண்டாய்" (மேருமந்திரம்)

என்றபடி வினைகளாகிய, ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்பம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பவை ஜீவனைவிட்டு அறவொழிந்தபின் அந்த ஜீவன் அநந்த ஜ்ஞானம், அநந்ததரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம், சூக்ஷ்மம், அவகாஹனம், அகுருலகுத்வம், அவ்வியாபாதத்துவம் என்னும் அஷ்டகுணங்கள் நிறைந்து முனிவர்களும்; நாக, சுர வித்தியாதரர் முதலான ஸகலரும் வணங்க மூன்று லோகத்திற்கும் உச்சியாகிய மோக்ஷஸ்தானத்தை யடையும்.

ஆகையால் நான் ஜினாலயங்களைக் கட்டுவித்து நித்திய நைவேத்திய பூஜா உத்ஸவங்களுக்கும் ஏற்பாடு செய்து தான தருமங்களும் நடத்தித் துறவறம் பூண்டு காட்டுக்குட் சென்று தவஞ்செய்வது நிச்சயம். உன் இஷ்டம் எப்படி" யென்றான். அதற்கவள், "நாதனே! தாங்கள் சொன்ன தருமங்களைச் செய்வதுடன் அடியாள் நினைக்கும் தருமம் மிகச்சிறந்ததாக என்மனதில் தோன்றுவதால் அதையுஞ் செய்விக்க பிரார்த்திக்கிறேன்" என்றாள். இராஜன் "கண்மணி! அஃதியாது?" என. அவள்,

"ஆதிமுற்கா லத்தி லகில முழுதுணரச்
சீதமொழி சொன்னான் ஜினேந்திரனும்---ஈதின்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்றபடி ஆதிகாலத்தில் திரிலோகத்திலுள்ள விஷயங்கள் யாவுமறிந்து கொள்ள குளிர்ச்சி பொருந்திய வார்த்தையாக விருஷப தீர்த்தங்கரரென்னும் ஆதிபகவான் இவ்வுலகிற்கு அகர முதல் எல்லா வெழுத்துக்களையும் எண்களையும் என்னைப்போன்ற பெண்பாலாகிய பிராம்மி சுந்தரிக்கு அருளியிருப்பதைசரித்திரங்களில் வாசித்திருக்கிறேன். அதன்பிறகு வைத்தியம், ஜோதிஷம், லக்ஷணசாஸ்திரம், சித்திரம், அஸ்வபரிக்ஷை, கஜபரிக்ஷை முதலியவைகளும், ஷட்கர்மத் தொழிலும், நாடுநகர முதலானவைகளும் உற்பத்தி செய்து ஆதிபகவான் இல்லற தர்மத்தையும் காண்பித்துப் பிறகு துறவற தர்மத்தையும் அருளிச் செய்ய தவ வேடம் பூண்டு தேவர்களால் சமவசரணமென்னும் கோயிலை நிர்மித்து தர்மங்களை போதனை செய்து பிறகு சமவசரணமும் கலைந்துவிட பரதேஸ்வர சக்கிரவர்த்தி, கைலாச பர்வதத்தின் மிசை ரத்தினங்களாலும் சுவர்ண

களாலும் கோயிலை நிர்மித்து இருபத்து நான்கு தீர்த்தங்கரரையும் தம்தம் வர்ணங்களால் பிரதி பிம்பங்களாகச் செய்து பூஜித்து வந்தார் என்பதையும் அறிந்திருக்கிறேன்.

ஆகையால் ஜிநேந்திர மகாராஜனே! தாங்கள் ஆதிபகவானருளியபடி ஆரம்பத்தில் அக்ஷரங்களை கற்பிக்க பல விடங்களிலும் பாடசாலைகளை அமைக்க அருள்புரிய வேண்டும். இதுதான் என் கோரிக்கை" என்றாள். அதுகேட்ட ராஜன் மிகவும் சந்தோஷித்து, அவளை நோக்கி, "பெண்ணே! நீ மிகவும் புத்திசாலி; சாஸ்திர ஆராய்ச்சி யுடையவள்; உன் இஷ்டம் போல ஆரம்பத்தில் பாடசாலைகளை ஏற்படுத்தி பின்பு ஜிநபவகமும் கட்டுவிக்கிறேன்" என்றான்.

அப்பொழுது சூரியோதய மாயிற்று; உடனே இராஜன் காலைக்கடனை முடித்துக் கொண்டு கொலு மண்டப மடைந்து சிம்மாசனத்தின் மிசை மந்திரிகள் சூழ அமர்ந்து பல விடங்களிலும் பாடசாலைகள் ஏற்படுத்தி அவற்றிற்கு கிராமங்களும் ஸாஸனமாக நியமித்துப் பிறகு ஜிநாலயங்களும் கட்டுவதற்குண்டான ஏற்பாடுஞ் செய்து மான்னிய முதலானவற்றை ஸாஸனங்கள் செய்து விட்டான்.

இவ்வாறு செய்த பின்பு அரசன் தலையாரியை வரவழைத்து அவனிடம் "இரவு பறைபறைவித்தவன் யாவன்?" என்று கேட்க, தலையாரி, அவனைத் தன் புத்திர னென்று சொன்னான். உடனே அரசன் அவனை வரவழைக்கும்படி சொன்னான். தலையாரி இரவு என்ன நடந்ததோ வென்று பயந்து புத்திரனிடம் சென்று விசாரித்து, அரசன் கட்டளையைத் தெரிவிக்க, அவன் யாதொன்று மில்லை எனச் சொல்லி இராஜனிடம் வந்தான். இராஜா, அவன் முகத்தைப் பார்த்து அவனிடம் முப்பத்திரண்டு லக்ஷணங்களு ம்மைந்திருப்பதைக், கண்டு 'இவன் தலையாரி புத்திரனல்ல; இராஜ புத்திரனாக விருக்க வேண்டும்,' என்றெண்ணி, அவனைப் பார்த்து, 'உன் தாய் தகப்பன் யார்? உண்மையைச் சொல்' என்றான். அதற்கவன், "அரசனே! என் விஷயத்தை நான் இரவு முதல் ஜாமத்திலேயே சொல்லி விட்டேனே" என்றான். அதன்மேல் ஜிநேந்திரன் "இவன் இராஜ புத்திரன்; பின்பு எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம்" என்று உடனே நல்ல சுப முகூர்த்தத்தில் அவனை சிம்மாஸனத்தில் ஏற்றி அவனுக்கு கிரீடதாரணஞ் செய்து செங்கோலையுங் கொடுத்து ராஜ்யாபிஷேகஞ் செய்து பிறகு தான் துறவறம் பூண்டு தவஞ் செய்து முக்தியையடைந்தான். இராஜ பத்தினியும் அனேக நோன்புகளை நோற்று சௌதர்ம கல்பத்தைச் சேர்ந்தாள். விஜயபால ராஜன் பின்பு தன் பிதுரார்ஜிதமான க்ஷேமாபுரஞ் சென்று சிம்மஸேனனுடன் எதிர்த்து அவனை வென்று இராஜ்யத்தைக் கைப்பற்றி மந்திரிகள் வசம் ஒப்புவித்துப் பிறகு உஜ்ஜெயினிவந்து விவாகஞ் செய்து கொண்டு உஜ்ஜெயினியையும் க்ஷேமா புரத்தையும் இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து மங்களமாக வாழ்ந்து வந்தான்.

தி. அனந்தநாத நயினார்.
காஞ்சீபுரம்.



## தருமசீலன் வாழ்த்துப் பாக்கள்.

### எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்மிகுஞ் சென்னை மாநகர தனில் செம்மையே விளங்கிடத் தோன்றி
ஏர்மிகும் நன்னூல் இலக்கண முணர்ந்தோர் இன்புற எங்கணும் [பாவிக்
கார்மிகு மழைபோற் கருணைமிக் கூர்ந்து களிப்புறும் நீதியே பொ
நேர்மிகும் தரும சீலனிந்நிலத்தில் நீடுற வாழ்ந்திட மாதோ.[ழியும்

### நேரிசை வெண்பா.

ஆதியா நாதர் அருளா லுதித்தெழுந்து
நீதிதொகுத்திந்த நீணிலத்தில்—போதிபெற்றுக்
கற்றோருங் மற்றோரும் கல்விதனை நன்குணர
உற்றானே சீல னுவந்து.

அமிழ்தாந் தமிழினால் அன்பான சீலந்
தமிழ்நாட்டார் நன்குணரத் தந்தான்—சமநிலைகொள்
ஆதி பகவனரு ளாலுதித்த சீலனிங்கு
மாத மொருதடவை வந்து.

அறந்திகழு நீதிகண்ட ஆசானைப் போல
சிறந்தபொருள் தான்கொண்டு சீலன்—பிறந்துவளர்
பாலர்முத லியாவர்களும் பண்பாக வேயுணர
ஞாலமதில் போதித்தான் நன்கு.

பிறப்பதனைப் போக்கிவிடும் பேதைமையை நீக்கும்
சிறப்பதனை யாக்கிவிடுஞ் செம்மை—அறச்சீலன்
அன்பாகப் பெற்றதனை ஆராய்ந் தறிவோரே
இன்பாக வாழ்வா ரிசைந்து.

சேரார்கள் தீக்கதியில் ஸ்ரீதரும சீலனுரை
சீராக நன்குணரும் ஸ்ரீமான்கள்—நேரான
முத்தி பெறுவார்கள் மும்மூடம் நீங்கிடுவார்
பக்திசிறந் தோங்கி யிருப் பார்.

சந்தா குறைத்துத் தருமமிகு சீலனைத்தான்
நந்தாமல் நம்மதமும் நன்கோங்கத்—தந்தோரும்
தாரணியிற் சீலனுமே தாழ்வின்றி நீடூழி
பூரணமாய் வாழ்கப் பொலிந்து.

அரும்பெறல் யாக்கைகொ ளன்பர்களே! இது வரையில் நம்மதத்தில் தமிழ் மொழியில் பத்திரிகை ஒன்றையேனும் ஒருவரும் பிரசுரிக்கவில்லை. அக்குறைவை நீக்க அருமையான விஷயங்களைத் தன்னுள் அடக்கிக்கொண்டு இந்நிலவுலகில் உலாவிவரும்படி, தி. ஆதிநயினர் என்பவர்கள் சீலனை வெளிப்படுத்தினர்கள். இவர்களே இருமைப்பயனை அடைய அருகர் என்று உறுதியாகக்கூறலாம். இவர்கள் பிரசுரித்துவரும் சீலன் நீடூழிவாழ்வதாக. பத்திராதிபரும் திடகாத்திராரோக்யத்துடனிருந்து சகல சௌபாக்யங்களையும் பெற்று நீடூழி வாழ்வாராக. சுபம்.

த. குப்சாமிநயினர்.
பெருமண்டூர்

## தருமசீலன் அநுபந்தம்.

திருப்பறம்பாபுரம்.

## தருமசாகர சுவாமிகள் சத்சங்கம்.

7-வது மாதாந்தரக் கூட்டம்.

---

ஆடிமீ 8௳ ஆதிவாரம், ஷை சங்கம் கூடியது. அக்கிராசனர், ஸ்வஸ்தி ஸ்ரீமான், தருமசாகர சுவாமிகள்.

உபந்நியாச விவரம்.

| | | | |
|---|---|---|---|
| | ஸ்ரீமான், | அகஸ்தியப்ப நயினர். | "கல்வி" |
| இராயபுரம் | ,, | வஜ்ஜிரபாகுநயினர். | "பொதுநன்மை" |
| | ,, | ஸ்ரீபாலநயினர். | "உலகவாழ்வு அநித்தியம்" |

அக்கிராசனர் அவர்களால் முடிவுரையாக மதப்படிப்பைச் சிறுவர்கள் நன்குணர்வதற்காக ஓர் பாடசாலை ஏற்படுத்த வேண்டும் என்னும் விஷயம் உபந்நியாசிக்கப்பட்டு மங்கள வாழ்த்துடன் சபை கலைந்தது.

தி. மே. புஷ்பநாதன்.
காரியதரிசி.



## பேரணி ஜைன சகோதர ஷட்கிராம ஸங்கம்.

இரௌத்திரிஸு ஆவணிமீ 21௳ ஐந்தாவது மாதாந்தரக் கூட்டம் கப்பியாம் புலியூரில் கூடிற்று.

அக்கிராசனர்.

வீடூர். மணியம், ஸ்ரீமான்-விருஷபதாஸ நயினர் அவர்கள்.

உபந்நியாஸ விவரம்.

ஸ்ரீமான்-B. பத்மராஜ நயினரால்-கடந்த மாதங்களில் கூடிய சங்கத்தின் நடவடிக்கைகள் வாசிக்கப்பட்டன. பின்பு,

,, ஜைந கஜட் பத்திராதிபர். C. S. மல்லிநாத் ஜைன் அவர்கள், நான்சங்கத்திற்கு வரக்கூடாத சந்தர்ப்பம் வாய்த்தமைக்காக எழுதிய ஒரு கடிதம் வாசிக்கப்பட்டது. இரண்டாவதாக ஆரணி ஜைன சகோதர சங்கத்தார் ஷை சங்கத்திற்கு அனுப்பிய பிரார்த்தனை சமஸ்க்ருத ஸ்லோகங்கள் வாசிக்கப்பட்டது. (இவற்றைப்பின்னே காண்க.)

தருமசீலன் பத்திராதிபர்

ஸ்ரீமான்- திரு ஆதிநயினர் அவர்கள்—முன்னேற்றத்திற்கு அவசியமானவை.

| | | | |
|---|---|---|---|
| ,, | மேல் மேல்மின்னல் சக்கரவர்த்தி நயினர் | ,, | நான்கு கேள்விகளும் அவற்றிற்கு விடைகளும். |
| ,, | வீடூர்-சின்னராஜ நயினர் | ,, | ஜைன மதத்தின் மேன்மை. |
| ,, | பேரணி-குப்புசாமிநயினர் | ,, | நந்தீஸ்வரத்வீபம். |
| ,, | B. பத்மராஜ நயினர் | ,, | நமது மதத் தொண்டு. |
| ,, | சிகாமணி | ,, | ஜீவகாருண்யம். |

அக்கிராசனர் முடிவுரையில் ஒற்றுமை, சமயவிருத்தி, கல்வி விருத்தி முதலியவைகளைப் பற்றி விரிவாக உபந்நியசித்தார். பின்பு ஷை சங்க ஸ்திர அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் K. A. தனபால நயினர் அவர்களால், அக்கிராசனருக்கும், வெளியூர் உபந்நியாசர்களுக்கும் வந்தனமும், சென்னை இராஜதானி சங்க அக்கிராசனர் ஸ்ரீமான் A. P. சந்திரநாத நயினர் அவர்கள் ஷை சங்கத்திற்கு வரக்கூடாமலிருந்ததற்காக அநுதாப மொழிகளும் கூறப்பட்டன.

பிறகு மங்கள வாழ்த்துக் கூறியதும் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டுச் சபை கலைந்தது.

### ஷை சங்கத்திற்கு வந்த கடிதங்கள்.

ஜைநகெஜட் பத்திராதிபர்- ஸ்ரீமான் C. S. மல்லிநாத் ஜைன் அவர்கள் எழுதிய கடிதம்.

ஸ்ரீஷட் கிராம ஜைன சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு பிரியத்துடன் எழுதிக் கொண்டது:—

நண்பர்களே !

உங்கள் சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர் இப்பொழுது என்னை அவ்விடம் வரும்படிக் கோரி அனுப்பிய அழைப்புக் கடிதத்தைப் பார்க்க நான் சந்தோஷமடைந்தேன். நீங்கள் என்னை அழைத்த அன்பிற்காக நான் உங்களுக்கு வந்தனம் செலுத்துகின்றேன்.

நம்மவர்களின் மேம்பாட்டிற்காகவும், நம் மதத்தின் உண்மைபிரகாசிக்கும் பொருட்டாகவும் நீங்கள் ஆரம்பித்துச் செய்யும் காரியங்களில் யானும் சேர்ந்து உழைக்கக் கடமைப் பட்டவனாயிருந்தும் இச்சமயம் கப்பியாம்புலியூரில் நடைபெறும் உங்கள் கூட்டத்திற்கு வரக் கூடாமலிருப்பதற்காக மிகவும் வருந்துகின்றேன். உங்களுடன் நேராகப் பேசி ஆனந்த மடைய சந்தர்ப்பம் சௌகர்யப் படாமையால் நான் கீழ்வருவனவற்றை எழுதி உங்களை திருப்தி யடையச் செய்கிறேன்;

தற்காலத்தில் நம்முடைய இராஜதானியில் ஆங்காங்கே ஜைன சங்கங்கள் ஏற்பட்டு நம்மவர்களின் நன்மைக்காகப் பாடுபடுவதைக் கவனிக்கும்பொழுது ஸ்ரீ மஹா வீரவர்த்தமான பகவான் இருந்த காலம் நமது ஞாபகத்திற்கு வருகின்றது. அவர்காலத்திலிருந்த ஜைனர்களெல்லோரும் ஒரே குடும்பத்தினரைப் போல ஏகோபித்து சம்மியக்துவத்தைப் போற்றினார்கள். அவர்களிடத்திலிருந்த சகோதரத் தன்மை, அன்பு, சமயப்பற்றுதல் ஆகிய பெரிய குணங்கள் அவர்களை ஒன்று சேர்த்து வைத்திருந்தன. காலம் ஏற ஏற ஜைனர்களின் மேம்பாட்டைக் கெடுக்கப் பற் பல இடையூறுகள் உண்டாயின. பிற சமயங்களின் எழுச்சியால் ஜைன சமயத்தின் உண்மை, மேகங்களால் மூடப்பட்ட சந்திரனைப் போல மறைய ஆரம்பித்தது.

விவேகக்குறைவால் சமயச்சண்டைகள் நிகழ்ந்தன. பலர் ஜைன சமயத்தை உள்ளவாறு அறியாமலே அதை தூஷித்து ஜைனர்களைப்பற்பல துன்பங்களுக்குள்ளாக்கினார்கள். அநேக பெரிய ஜைன புஸ்தகசாலைகள் தீ மூட்டப்பட்டு எரிந்தொழிந்தன. ஜைன சங்கங்கள் பல கலைக்கப்பட்டன. பல அழகிய புராதன ஆலயங்களும் இடிபட்டு வீழ்ந்தன. யாதுகாரணத்தினாலோ ஜைனர்களின் எண்ணிக்கையும் குறைய ஆரம்பித்தது. ஜைனர்கள் தங்களுடைய மத விஷயங்களை வாசிப்பதிலும் போதிப்பதிலும் ஊக்கமிழந்தனர். இவ்வாறு தளர்ச்சி யடைந்தநம்மதத்தினரைப்பழையபடி நல்ல நிலைமைக்குக் கொண்டுவரத் தகுதியான வசதிகள் ஏற்படவில்லை. சென்ற 1000-வருஷங்களாக நாம் துணையும், முயற்சியும் அற்றவர்களாகி நாளுக்கு நாள் க்ஷீண தசையை யடைந்துகொண்டே வருகிறோம்.

இப்பொழுதாவது நம்முடைய நிலைமையை அறிந்து நம்மைச் சீர்திருத்திக்கொள்ளாவிட்டால் இனிமேல் இன்னவிதமான கேவல ஸ்திதியை அடைவோம் என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்கு யூகித்து உணரலாம்.



நம்மவர்களின் தற்கால நிலைமையைச் சற்று கவனிப்போம். இப்பொழுது நம்மவர்களில் எத்தனை அரசர்கள் இருக்கின்றார்கள்? தர்க்கம், மீமாம்ஸம், வியாகரணம் முதலிய சாஸ்திரங்களைக்கற்பிக்கும் கல்லூரிகள் எத்தனை இருக்கின்றன? பல வித நூல்களும் அடங்கிய புத்தகாலயங்கள் எத்தனை உள்ளன? நம்முடைய அறச்சாலைகள் எங்கே? ஜீவரக்ஷணை கூடங்கள் எங்கே? வைத்திய சாலைகள் எங்கே? நம்மதத்தைக்காப்பாற்றவும் மதக்கோட்பாடுகளைப் பரவச் செய்யவும் எத்தனை மடங்களுள்ளன? அத்தகைய மடாதிபதிகள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள்? நம்மத நுட்பங்களை நன்கு கற்றறிந்த வித்வான்கள் எங்கே யுள்ளார்கள்? நம்மவர்களில் சாதாரண படிப்புள்ளவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள்? நம்மவர்களின் தற்கால நாகரீகம் எத்தகைத்து?

நண்பர்களே! இக் கேள்விகளுக்கு நீங்கள் சரியான விடை சொல்ல ஆரம்பித்தால் நம்மவர்களுடைய தற்கால நிலைமை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதாய் விளங்கும்.

இன்னும் ஸ்ரீ கௌதமஸ்வாமி, சுதர்மாச்சாரியர், ஜம்புஸ்வாமி முதலியவர்களுடைய காலத்திலிருந்த ஜைனர்களிடத்தில் பிரகாசித்த உத்தமகுணங்களில் பத்தில் ஒரு பங்கு கூட இப்பொழுது நம்மிடத்தில் காணப்படவில்லை. அக்காலத்திருந்த சிறந்த ஒழுக்கமும் இப்பொழுதில்லை. இதனால் அக்காலத்திலிருந்தவர்களெல்லாரும் நல்லவர்களா யிருந்தார்களென்பதும், இக்காலத்திலுள்ளவர்களில் பெரும்பான்மையோர் அவர்களுக்கு நேர் மாற்றமானவர்களென்பதும்விளங்குகின்றனவன்றோ? இதனால்நான் இக்காலத்திலுள்ள நம்மவரைத் தாழ்த்திக்கூறுகின்றேனென்று நீங்கள்நினைக்கலாகாது; நான்பொதுவாகஉலக இயலைக்கூறுகிறேன். உலகத்தின்நன்மையும் தீமையும்,ஒளியும்இருளும்போல என்றும் உள்ளன. இவை இரண்டும் எல்லாக்காலங்களிலும் எல்லா வகுப்பினர்களிடத்தும் ஒவ்வொருமனிதனிடத்தும் ஒன்று குறைந்தும் ஒன்று மிகுந்தும் தோன்றுகின்றன.

கி. பி. 540-ம் வருஷத்தில் ஸ்ரீ குணபத்ர ஸ்வாமிகள் எழுதிய ஆத்மாநுசாசனம் என்னும் நூலை வாசித்ததிலிருந்து கி. பி. 6-வது நூற்றாண்டிலேயே ஜைனர்கள் தாங்கள் க்ஷீணதசை யடைவதை உணர்ந்தார்களென்பது தெரிகின்றது. எவ்வாறெனில் "உங்களுடைய நிலைமை வரவரக்கேடாகின்றது; நீங்கள் கண்விழித்துப்பாருங்கள்; இப்பொழுதே உங்களைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள்" என்று அக்காலத்திருந்த மஹாத்மாக்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அவர்கள் காலத்திலோ ஜைநஸாதுக்கள் கிராமங்கள் தோறும் சென்று மதப்பிரசங்கம் செய்து வந்தார்கள். ஆனால் ஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு உதவியாகும் சாதனங்கள் அப்போதில்லை. அப்பொழுதில்லாத சாதனங்கள் சில இப்போதிருக்கின்றன. இருப்புப்பாதைகளும், அச்சியந்திரங்களும், பத்திரிகைகளும் ஏற்பட்டபிறகு ஜனங்கள் ஊருக்கு ஊர் சுலபமாகப் பிரயாணம் செய்யவும் நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தவும், பல

இடங்களில் சம்பவிக்கும் விஷயங்களையும் பலபேருடைய அபிப்ராயங்களையும் அறிந்து கொள்ளவும் சௌகரியங்கள் உண்டாயிருக்கின்றன.

இத்தகைய உதவிகளைக் கொண்டு நம்மவர்கள் மாத்திரம் இன்னும் ஒரு பிரயோசனத்தையும் அடையாதிருத்தல் வியப்பையும், துக்கத்தையும் விளைக்கின்றது. நாம் இனிமேலாவது நம்முடைய குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள முயல வேண்டும். இவ்வாறு முயலுவதற்கு முதற்குறியாக நாம் ஒவ்வொருவரும், 'நான் ஞானி, அவன் மூடன், நான் பணக்காரன், அவன் ஏழை, நான் தலைவன், அவன் அடிமை, நான் பெரியவன், அவன் அற்பன்' என்கிற எண்ணத்தை முதல் முதலில் விட்டொழிக்க வேண்டும். பணமும், படிப்பும், பதவியும் முயற்சியால் கிடைப்பன. ஜைனர்களெல்லோரும் சகோதரர்களென்றும், நம்மதத்தினர் முன்னேற்ற மடைந்தால் அதுவே நமக்கு நன்மையைத் தருமென்றும், நாம் ஒவ்வொருவரும் முன்னேற்ற மடைந்தால் நம்மதமும்முன்னேற்றமாகு மென்றும் உறுதியாகக் கொள்ள வேண்டும்.

நம்மவர்கள் முக்கியமாக விலக்க வேண்டியது இன்னும் ஒன்றுள்ளது. அதாவது: துஅஞ்ஞானம். இவ்விஷயத்தைப்பற்றி இண்டோர் ஹைகோர்ட் ஜட்ஜாகிய வரும், இங்கிலீஷ்பாஷையில் வெளிவரும் ஜெயினு கெஜட் என்னும் பத்திரிகைக்கு உதவி பத்திரிகாசிரியராய் இருப்பவரும், எல்லா இந்திய ஜைன மகா சங்கத்திற்கும் அக்ராஸனாதிபதியுமாகிய ஸ்ரீமான் ஜேகமந்தர்லால் ஜெயினி M. A., M. R. A. S. பாரிஸ்டர் அட்லா அவர்கள் பின்வருமாறு ஓர் இடத்தில் எழுதி இருக்கிறார்கள்.

"ஜைன சமயப்படி மோக்ஷத்திற்கு மார்க்கமாகின்ற ஞானத்தை நம்மவர்கள் அடையப் பிரயத்தனப் படாமல் அலக்ஷியமா யிருப்பது பரிதாபகரமாயிருக்கிறது; எப்படியாவது நமது இறைவன் ஸ்ரீவர்த்தமான பகவான்நம்முன் தோன்றி, 'நீங்கள் எல்லாம் ஜெயினர்களா?' என்று கேட்டால், 13 லக்ஷம் பேர்களடங்கிய நாம் எல்லாம் 'ஆம்' என்று கூறினால், அவர் அதிக ஆச்சரியப்பட்டு, 'நீங்கள் எந்த ஜினேஸ்வரனைப் பின் பற்றுகிறீர்கள்? நான் 2500 வருஷங்களுக்கு முன்பு உங்களுக்குக் கற்பித்தவைகளில் பலவற்றை நீங்கள் மறந்து விட்டீர்களே; நான் போதித்த ஐந்து விரதங்களும், நான்குவித தானங்களும் எங்கே? நீங்கள் எத்தனை நோயாளிகளைச் சௌக்கியப்படுத்தி யிருக்கிறீர்கள்? எத்தனை பேருக்கு ஞானம் போதித் திருக்கிறீர்கள்? எத்தனை ஆன்மாக்களுக்கு நன்மார்க்கத்தை உபதேசித்தீர்கள்?' என்று கேட்பார். இந்தக் கேள்விகளுக்கு நாமென்னபதில் சொல்ல முடியும்? மௌனமாக நிற்க வேண்டியதுதான். பகவானால் கூறப்பட்ட ஆகமங்களைக் காணும் போதெல்லாம் நாம் அவர் முன்னிலையில் நிற்பதாகவே நினைத்து, அவரால் சொல்லப்பட்ட தத்துவங்களை யுணர்ந்து, நன் மார்க்கத்திற்சென்று, நம்முடைய ஆன்மாக்கள் கடையிலாஞானத்தையும் இன்பத்தையும் அடையப் பிரயத்தனப்படவேண்டும். நாம் முதலில் நம்முடைய ஆன்மாவினுடைய நன்மையையே தேடவேண்டும். 'ஒருவன் உலகமுழுவதையும் ஜெயித்துத் தன்னுடைய ஆன்மாவை விட்டுவிடுவானானால் அது அவனுக்கு என்ன



பாபத்தைத்தரும்' என்று ஒரு பெரியார் கேட்கிறார். இதற்கு விடையாவது: 'எவன் ஒருவன் தன் ஆன்மாவின் நன்மைக்காக உழைக்கிறானோ அவனுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்' என்பதே. ஆகையால், நண்பர்களே! நான் சுருக்கமாகக் கூறுவது யாதெனில், நாம் எல்லோரும் சகோதரர்களைப் போலிருக்கவேண்டும்; நம்மதக்கோட்பாடுகளில் முக்கியமானவற்றையாவது நன்றாகக் கற்றுத்தெளிந்து அவற்றின்படியே நடக்கவேண்டும். நமக்குத் தெரிந்தவைகளைப் பிறருக்கு அன்புடன் கற்பிக்கவேண்டும். நம்மதவிருத்திக்கான விஷயங்களை நம்மவர்கள் பலருடன் கலந்து யோசித்து அவர்கள் சொல்லுகிறபடியே ஊக்கத்துடன் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்; நற்காரியங்களுக்கெல்லாம் அடிக்கடி இடையூறுகள் நேரிடுவதுண்டு. அவ்வாறு நேரிட்டாலும் நாம் அவைகளை ஒரு பொருட்படுத்தாமலும் அவைகளுக்கு பயந்து சிறிதும் தளர்ச்சியடையாமலும் நடப்போமானால் நமக்கு ஜெய முண்டாகு மென்பதில் சிறிதும் சந்தேக மில்லை"

இதனால் நாம் அஞ்ஞானத்தை ஒழித்து ஞானத்தைக் கைக்கொள்ள வேண்டு மென்பதை நன்குணரலாம். ஆகலின் நாமெல்லோரும் நன்மார்க்கத்திற் பிரவேசித்து நம்மதத்தை விருத்தி செய்வோமாக. இக்கடிதத்தை முடிக்குமுன் உங்கள் சங்கம் மேன்மேலும் விருத்தியடையுமாறு யான் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தங்கள் அன்பன்,
சி எஸ். மல்லிநாதன்,
சென்னை.

---

ஷை சங்கத்திற்கு, ஆரணி ஜைன சகோதர சங்கத்தார் அனுப்பிய கடிதம்.

**பிரார்த்தனு சலோகம்.**

ஆரணிஜிநஸம்வஸ்யா: வொரணிஸம்வத்ரிகாம்।
ஊஷ்மாரெளஷ ஸராயாதாம் கஸ்மஷ்தா: ப்ராயஜயார்ஷெஹா॥

ஸ்ரீஷா ஈஸ்வரோஷெவ: ஷஷ்டாஷ ஜிநஸஸ்ஹாம்।
ஆஷரா உஷிம்த்ராணாம் யநவாஹாதி யீஷதா॥

ஆயாராரோரஹ்ய ஷெஷ்வர்யம் ஷதயஷ ஷஷிராம்ஷகிம்।
ஷகவாதஷர்ஸ்ரீதாநாம்வ ஸ்ராவகாணாம் விஷெஷத:॥

சுஷிராக ஸஹ்யஸம்வாநாம் ஸிவாகஷம் கரோதாஸ:।
கஷந்ஹ ஷநிஸவ்யஷாம் வெகஷ்ஷக்ய ப்ரயணத:॥

ஸஹஸ்ரா ஹ்லாதஜநாநாம் ஸௌக்யக்யம் ஸாதுதாத்மகம்।
ஷிஷ்டா ஸாஸ்தாம் ஸம்ஸ: தேவஸ்தேஷ்யவஸ்ததா॥

தா த்ரேஸீ ஹேசீகர்ஸஸ்ஞ்: ப்ரஷஸ்ய ப்ரஸாதத:।
ஸந்தாம் தாரகா ஹ்ரும் ஜீவகாரூண்ய ஸத்ரஆ॥

## கடிதம்.

கேள்விச் செல்வத்தில் மிக்க ஆர்வமுடைய அன்பர்களே! தங்கள் சங்கத்தினின்றும் எங்கள் சங்கத்திற்குக் கிடைத்த அழைப்புப் பத்திரத்தைக் கண்டு மிக்க உவகை கொண்டோம். ஆனால் அவ்விடம் வந்து நடை பெறும் விஷயங்களைப் பார்த்து நேத்ரானந்த மடையவும், பேசப்படும் சத் விஷயங்களைக் கேட்டு மகிழ் வடையவும் கூடாத எங்களது அசந்தர்ப்பத்தை நொந்து கொள்ளுகிறோம். ஆகிலும் இப்பேர்ப்பட்ட அரும் பெருங் காரியங்களைச் செய்து வரும் மகான்களுடைய கைங்கர்யம் மேன் மேலும் அபிவிருத்தி யடையுமாறு நமது முக்குடைச் செல்வனும் எண்குணநாதன் எழிலடியைத் தேவ பாஷையால் போற்றுகின்றோம். அத்தேவரானவர் நமது சங்கத்தையும், ஸங்கபரிபாலனர்களையும், அங்கத்தினர்களான சிராவகர்களையும், தீர்க்காயுசும், ஆரோக்கியமும், செல்வமும், மதாபிமானமும், விடாமுயற்சியும் உடையவராகச் செய்து, கூடிய சீக்கிரத்திலேயே இதர சங்கங்களைக் காட்டிலும் இச்சங்கத்தை முதன்மைப் படுத்துவான் என்று நம்புகிறோம். தவிர ஒரே கிராமத்திலுள்ள ஜைன சகோதரர்கள் ஒன்று சேர்வதே மிக அருமையாயிருக்க இந்த ஆறு கிராமங்கள் ஒன்று சேர்ந்துஉழைப்பதானது அதிகஆச்சர்யத்தைஉண்டாக்குவதுடன் ஓர் தெய்வீகத் தன்மையையும் காட்டுகிறது. இப்பேர்ப்பட்ட தெய்வீகத் தன்மையானது தினந்தோறும் எல்லோர் மனதையும் ஒன்று சேர்த்து விடா முயற்சியோடு சந்திர சூரியர் உள்ள வரையில் நம் மார்க்கப்ரபாவனை நடத்துமாறு நமது இறைவன் பதப்போதை எப்போதும் இதயத்திருத்தி சிரம் தாழ்த்திக் கைகுவித்து வணங்குகிறோம்.

இங்ஙனம்,
ஆரணி ஜைன சகோதர சங்கத்தார்.

---

இங்ஙனம்,
பேரணி ஜைன சகோதர ஷட்கிராம சங்கத்தின்
உபகாரியதரிசி
B. பத்மராஜன்.

---

ஓம்
ஸ்ரீஜிநாயநம:.

# தருமசீலன்.

“ அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. ”

(All Rights Reserved.)

புத்தகம் 3 } இரௌத்திரிஸு ஐப்பசிமீ 1920ஸு அக்டோபர்மீ { சஞ்சிகை 7

## தருமோபதேசம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பருவமுள்ள பெண்களுக்குப் பெண்கள் தம்மைப்
பக்ஷமுடன் துணைசேர்த்து வைக்க வேண்டும்
ஒருவரையுந் துணைசேர்த்து வைத்தி டாமல்
ஒன்றியாப் பெண்கடமை வைக்கொ ணாது
தருணமங்கைக் காடவரைத் துணையாச் சேர்த்தல்
தகுதியற்ற செய்கையந்தோ வேலைக்காக
வருமொருவ னைப்பெண்க ளிருக்கு மில்லில்
வைப்பதென்றுந் தப்பான மார்க்க மாமே. (௫௨)

ஐந்துவய தானவுடன் மைந்தர் தம்மை
அட்டியின்றிப் பள்ளிக்கே யனுப்ப வேண்டும்
எந்தவிதத் துங்கல்வி யவர் மனத்தி
லேறிடவே செயவேண்டும் படிப்பிற் செல்வம்
அந்தமக்கட் களித்தாலோ கல்வி யின்றி
யவர்மூட ராய்விடுவார் பின்னுற் றுன்பம்
இந்தவுல கத்தில்வரும் பழிப்பு மாகும்
எப்பொழுதுங் குடும்பவிர்த்தி யெய்தி டாதே. (௫௩)

அன்னியதே சத்திருந்து வந்த பெண்கட்
கமைந்திடுதே சாசார வலங்கா ரத்தின்
தன்மையினைக் கண்டவுட னந்த நாட்டிற்
சார்ந்தசெய்கை யெனச்சும்மா விருந்தி டாமல்
தன்னுடைய வலங்காரம் பெரிதென் றெண்ணித்
தருக்கியவர் தம்மையென்றும் பரிகசித்துக்
கன்னியர்கள் பலருடனே சேர்ந்து பேசிக்
கலகலெனச் சிரிப்பவள்மூ தேவி யாமே. (௫௪)

# தருமசீலன்.

இரௌத்திரிஸு ஐப்பசிமீ

## காஞ்சிபுரம் ஜைன மஹா சபை.

---

நிகழும் 1920ஸு அக்டோபர்மீ 2உ 3உ களில் காஞ்சிபுரம் தியேட்டர் ஹாலில் ஷை மகாநாடு கூடிற்று. ஷை சபையாரின் வேண்டுகோளின்படி மைசூர் ஸ்வஸ்தி ஸ்ரீ. நேமிசாகர வர்ணிஜி ஸ்வாமி அவர்களும், சென்னை பிரிசிடென்ஸி காலேஜ் தத்துவ போதகாசிரியர் ஸ்ரீமத். A. சக்கிரவர்த்தி M. A. L. T. அவர்களும், இன்னும்பற் பல நகரங்களிலுள்ள ஸ்ராவகர்களும், பல வித்வான்களும், காஞ்சிவாசிகளாகிய பிராம்மணர்களும், பிராம்மணரல்லாதவர்களும், சில வக்கீல்களும், கனதனவான்களும் ஷை சபைக்கு விஜயஞ் செய்தார்கள். முதல்நாள் மாலை 4-மணிக்குச் சபை கூடியதும் ஆரணி சங்கீத வித்வான்—ஸ்ரீமாந். பொன்னைய வாத்தியார் அவர்களால் கடவுள் வாழ்த்து பாடப்பட்டது. அதன்மேல் திருவாரூர் ஸ்ரீமாந் எ. துரைசாமி முதலியார் அவர்களால் ஷை சபைக்கு விஜயஞ் செய்திருந்த கனவான்களின் பொருட்டு இங்கிலீஷில் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது. பின்னர் சென்னை- ஸ்ரீமாக். பெருமண்டூர். பார்சுவநாதநயினரவர்கள் ஸ்ரீமத்.A.சக்கிரவர்த்திM.A.L.T.அவர்களை ஷை சபைக்கு அக்கிராசனபதியாக நியமிக்குமாறு பிரேரேபிக்க, நாகல் ஸ்ரீமாக்-பத்திரபாகுநயினரவர்களும், காஞ்சி ஸ்ரீமாந்-அனந்தநாத நயினரவர்களும் ஆமோதித்ததின் பேரில்சபையார் அங்கிகரித்ததின்படி ஷை ஸ்ரீமத்சக்கிரவர்த்தி அவர்கள் அக்கிராசனம்வகித்தார்கள். அதன்மேல், மேல்மின்னல்ஸ்ரீமாந்.சக்கிரவர்த்தி நயினர் அவர்களால் தமிழில் செய்யுள் ரூபமாக இயற்றப்பட்ட வந்தனோபசார பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன்மேல், வரக்கூடாமைக்காகச் சில கனவான்களால் அனுப்பப்பட்ட அனுதாப கடிதங்களும், தந்திகளும், வாசிக்கப்பட்டன. பின்னர் அக்கிராசனர் அவர்களின்உபந்நியாசம் இங்கிலீஷில் அச்சடிக்கப்பட்டிருந்தபடி அவர்களால் உப



ந்நியாசிக்கப்பட்டது. அதன் தமிழ் மொழி பெயர்ப்பு இதன்கீழ் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பின்னர் ஸ்வஸ்திஸ்ரீ. நேமிசாகர வர்ணிஜி சுவாமி அவர்கள் ‘ஜைன மதம் நாஸ்திக மதமல்ல’ என்னும் விஷயத்தைப் பற்றி கன்னடத்தில் விரிவாக உபந்நியாசம் செய்தார்கள். அதை ஜனங்களுக்குத் தெரியும்படி ஆரணி ஸ்ரீமாந்.வசுபால நயினர் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார்கள்.

மறுநாள் காலை சபை கூடியதும் ஆரணி சங்கீத வித்வான்- ஸ்ரீமாந்.பொன்னைய வாத்தியார் அவர்களால் பக்க வாத்தியத்துடன் கடவுள் வாழ்த்தும் சங்கீத கச்சேரியும் நடைபெற்றன. பின்னர் நாகல் ஸ்ரீமத்சம்பத்ராவ்நயினர் அவர்களால் சமஸ்கிருதத்தில் ஸ்லோகபூர்வமாகச் செய்யப்பட்ட வந்தனோபசார பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன்மேல் அக்கிராசனர் அவர்களின் இங்கிலீஷ் உபந்நியாசத்தை ஜைனகஜட் பத்திராதிபர் ஸ்ரீமத்-மல்லிநாத் ஜெயின் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துச் சொன்னார்கள். பின்னர் ஸ்ரீமாந்.வசுபால நயினர் அவர்கள் இரத்தினத்திரயத்தைப்பற்றி விளக்கமாக ஒரு உபந்நியாசஞ் செய்தார்கள். அதன் மேல் நாகல்- ஸ்ரீமாந். பத்திரபாகு நயினர் அவர்கள் ஆத்மாவைப் பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்தார்கள். அதன் மேல் அன்றுமாலை ஸ்ரீமாந்— பொன்னைய வாத்தியாரவர்களால் கடவுள் வாழ்த்து பாடப் பட்டவுடன் ஸ்வஸ்திஸ்ரீ நேமிசாகரவர்ணிஜி சுவாமி அவர்கள் சிருஷ்டி வாதத்தைப்பற்றிக் கன்னடத்தில்நீண்ட உபந்நியாசம் செய்தார்கள். அந்த உபந்நியாசம் ஆரணி-ஸ்ரீமாந். வசுபால நயினர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன்மேல் சென்னை- ஸ்ரீமாந். பெ. பார்சுவநாத நயினரவர்கள் அஹிம்ஸா என்னும் விஷயத்தை உபந்யாசித்தார்கள். பின்னர் ஸ்ரீமாந்.வசுபால நயினர் அவர்கள் ஜைனர்களின் இரவுண்ணாத விரதத்தைப் பற்றி ஓர் உபந்நியாசம் செய்தார்கள். இன்னும் சிலர் சில விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். முடிவாக அக்கிராசனர் அவர்கள் உபந்நியாசத்தில் ஜைனர்களின் விருத்திக்காக எடுத்துக் காட்டிய சில விஷயங்களை ஒட்டி நாகல்- ஸ்ரீமாந். பத்திரபாகு நயினர் அவர்களால் ஜைனர்களுக்காக “கல்வி விருத்தி செய்தல், விசேஷகாலங்களில் அனாவசியமான செலவைக் குறைத்தல், பாலிய விவாகத்தைத் தடுத்தல், கைத்தொழில்களைக் கைக்கொள்ளல்” என்னும் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு, சென்னை. ஸ்ரீமாந் C. S. மேககுமார ஜைன் அவர்கள் ஆமோதிக்க, ஜைனர்கள் எல்லோரும் அவற்றை அங்கீகரித்தார்கள். ஜை

ஞாகஜட் பத்திராதிபர்- ஸ்ரீமாந். மல்லிநாத ஜெயின் அவர்கள் ஜைனமதத்தைப் பற்றி நீண்டதோர் உபந்நியாசம் செய்தார்கள். அவ்வுபந்நியாசம் இதன் கீழ்வரும். ஸ்வஸ்தி ஸ்ரீ. நேமிசாகரவர்ணிஜீ சுவாமி அவர்களின் உபந்நியாசங்கள் நம் தருமசீலனில் பின்னால் வெளிவரும். ஷை சபை நடவடிக்கைகளின் முடிவில் இதர மதஸ்தர்களாகிய சில கனவான்கள் எழுந்து "இது வரையில் நாங்கள் ஜைனமதத்தின் உண்மைகளை யுணராமல் வெவ்வேறு வித அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தோம்; இப்போது ஸ்வஸ்தி ஸ்ரீ.நேமிசாகரவர்ணிஜீ சுவாமிகளுடைய பிரசங்கத்தையும், அக்கிராசனர் அவர்களுடைய உபந்நியாசத்தையும் கேட்டதினாலேயே ஜைனமதம் ஒரு சிலாக்கியமான மதமென்பதைத்தெரிந்து கொண்டோம்" என்று பலவாறு புகழ்ந்து பேசினார்கள். காஞ்சிபுரம் வக்கீல்-பிரம்மஸ்ரீ. குமார வெங்கடாசாரியார் அவர்கள் 'ஜைனமதம் ஒரு ஞானமதமாகும்' என்று சிலேல்டைவகையால் பல நியாயங்கள் காட்டி ஜைனமதத்தை மிகவும் சிலாகித்துப் பேசினார்கள். இந்த இரண்டுநாளும் சபையின் நடவடிக்கைகள் மிகவும் திருப்திகரமாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றன. மேற்படி இரண்டு தினங்களிலும் ஷை நகர சபையார்கள், மீட்டிங்குக்கு வந்த கனவான்களை வரவேற்று, மேட்டுத்தெரு ம-௱-௱-ஸ்ரீ, பாகுபலி நயினார் அவர்களின் மாளிகையில் போஜன வசதி முதலியவைகளை ஏற்படுத்தி உபசரித்ததும், அங்கிருந்து சுவாமியார் அவர்களையும் அக்கிராசனர் அவர்களையும் அஸ்வரதத்தின்மேலேற்றி பாண்டு வாத்தியங்களுடனும் கொடிகளுடனும் அழைத்துச்சென்று சபை நடத்திய விதங்களும், மீட்டிங் முடிந்ததும் அக்கிராசனர் அவர்களையும் சுவாமியார் அவர்களையும் பாணவேடிக்கைமுதலிய சிறப்புக்களுடன் ஊர் வலஞ்செய்து வைத்ததும், ஊர்வலம் வருங்காலத்தில் ஜைன கிருஹங்களில் பூரணகும்பங்களும் தீபங்களும் வைத்து மரியாதை செய்த விதங்களும் மிகக் கொண்டாடத்தக்கவை. மற்ற நகரங்களில் கூடிய ஜைன சபைகளைக் காட்டிலும் இந்தக் காஞ்சியின் ஜைனமகாநாட்டின் கூட்டமானது மிகவும் சிறந்ததென்றே சொல்லலாம். இரண்டு வருஷகாலமாக ஆங்காங்கே இவ்வாறு ஜைன சபைகள் கூடிவருவது மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. அதனோடு இப்பொழுது சிறந்த மேதாவிகளும் இச்சபைகளுடன் ஒத்துழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆதலின் நம் ஜைன சமூகமானது எல்லாவித நன்மைகளையும் அடையுமென்பதில் என்ன தடையிருக்கிறது. இனி ஒவ்வொரு கிராமத்திலும் ஜைனர்கள் இவ்வாறே சங்கங்களை ஸ்தாபித்து நம்மத முன்னேற்றத்திற்கான விஷயங்களை ஊக்கத்துடன் செய்யுமாறு விரும்புகிறோம்.



பந்திராதிபர்.

---

## காஞ்சிபுரம் ஜைன மகாசபையின்

விசேஷ மகாநாட்டின்

தலைவரான

சென்னை-இராஜதானிக்கலாசாலை தத்துவ போதகாசிரியர்

ஸ்ரீமாந், A. சக்கிரவர்த்தி M. A. L. T.

அவர்களுடைய

உபந்யாசம்.

---

கனவான்களே!

என்னை இந்த மகாநாட்டின் தலைமையாக நியமித்துக் கௌரவப்படுத்தியதற்காக நான் உங்களுக்கு என்னுடைய அன்பார்ந்த வந்தன மளிக்கிறேன். நான் என்னுடைய குறைபாடுகளை நன்கு உணர்ந்தவனாய் அநேக சந்தேகங்களுடன் இங்கு அக்கிராசனம் வகிக்க உங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன்; ஏனென்றால் எனது கடமையைச் செய்யும்படி என்னுடைய வகுப்பினர் இடும் கட்டளையை நான் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கமுடியாது.

தென் இந்தியாவில் மிகப் பழமையானவைகளும் பரிசுத்தமானவைகளுமாகிய நகரங்களில் ஒன்றின் மத்தியாகிய இவ்விடத்தில் கூடும் ஜைனர்களாகிய நமக்கு இவ்விடம் ஒருவித இன்பத்தைத் தருகின்றது. காஞ்சிபுரமும் மதுரையும் தென் இந்திய ஜைனர்களுக்கு புனிதமாகிய க்ஷேத்திரங்கள். தென் இந்திய சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்குக் கிடைத்திருக்கும் மிகப்புராதன சரித்திர சம்பந்தமான குறிப்புகள் இந்தக் காஞ்சி நகரத்தோடு சம்பந்தப் பட்டவைகளாயிருக்கின்றன. கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்த சிவஸ்கந்தவர்மனென்னும் பல்லவராஜன் தர்மத்திற்காகவும் பூஜைக்காகவும் சில கிராமங்களை மான்யம் விட்டதாகத் தெரிகின்றது. இதற்கு சாஸனம் பிராகிருத பாஷையில் எழுதப்பட்டுள்ளது. இந்த சாஸனத்தில் காஞ்சிபுரம் பல்லவராஜ்யத்திற்குத் தலைநகரென்று குறிப்பிட்டுள்ளது. சில சரித்திரக் குறிப்புகளினால் ஸ்ரீகுந்த குந்தாச்சாரியரும் இந்தப் பல்லவ அரசோடு சம்பந்தப் பட்டவரென்று நான் நம்புகிறேன். இன்னும் சமந்த பத்திரர், அகளங்கர் முதலிய பெரிய ஆசாரியர்கள் இந்த நகரத்திலிருந்த புற மதஸ்தர்களோடு வாதம் செய்து வெற்றி பெற்றதாகச் சரித்திரம் இருக்கின்றது. ஆகையால், இந்த நகரத்தின் பழைய சரித்திரம் ஜைனமதத்தோடும்,

ஜைனர் கல்வியோடும் சம்பந்தப்பட்டதாகத் தெரிகிறது. இன்னும், பல்லவ சரித்திரத்தின் ஆரம்பகாலத்தில் கடம்ப பரம்பரையின் தலைவனான மயூரசர்மா என்பவன் கல்வி கற்பதற்கு காஞ்சிபுரத்திற்கு வந்தனன். இந்த விஷயங்களெல்லாம், கி. பி. முதல் நூற்றாண்டிலேயே இந்நகரத்தின் முக்கியத்தையும், மகிமையையும் விளக்குகின்றன.

சமீபகாலத்திலுங்கூட காஞ்சிபுரமானது கல்வியிலும் நாகரீகத்திலும் சிறப்புற்று இருந்ததாகத் தெரிகிறது. வைஷ்ணவ சைவ உத்தாரண காலத்திற்குப் பிறகும், பௌத்தர்கள் இந்த தேசத்திலிருந்து துரத்தப்பட்ட பிறகும், ஜைனர்கள் வலியிழந்த பிறகும், இந்நகரம் வைஷ்ணவ சமயத்திற்கு முக்கியமான இடமாயிற்று. தென்னிந்தியாவில் இத்தகைய மேம்பாட்டை யடைந்த ஒரு நகரம், தூரதேசங்களிலிருந்து வித்வான்களையும் பக்தர்களையும் தன்னிடம் வரச்செய்த நகரம், வெளிநாட்டுப் பிரயாணிகளால் கல்விக்கு முக்கியமான இடமாகக் கூறப்பட்டுள்ள இந்நகரம், அற்பமானதல்ல. ஆதலால் இத்தகைய சிறப்புகள் பொருந்திய இந்நகரத்தில் நாம் கூடியதற்காகச் சந்தோஷப்பட வேண்டும்.

நாம் இங்குக் கூடியதற்குக்காரணம் உங்களுக்கு நன்றாய்த் தெரியும். நாம் கண் விழித்துப் பார்க்க வேண்டும். மற்ற எல்லா வகுப்பினரும் தங்களுடைய நிலைமையைச் சீர் திருத்திக் கொள்ள முயற்சி செய்யும் பொழுது ஜைனர்கள் மட்டும் முழுத் தூக்கத்திலிருந்து வருகிறார்கள். அவர்களைச் சுற்றிலும் ஏற்பட்டிருக்கும் ஆரவாரங்கள் அவர்கள் கண்களை விழித்துப் பார்க்கும்படிச்செய்கின்றன. நாம் இருப்பதும் நம்மைக் காப்பாற்றிக் கொள்வதும் முக்கியமான விஷயங்கள். ஜைனர்கள் ஒரு தனிவகுப்பினராக ஜீவிக்க வேண்டுமானாலும், தங்களுடைய கல்வியையும் நாகரீகத்தையும், தங்கள் மதத்தின் உண்மையையும் காப்பாற்ற வேண்டுமானாலும் உடனே அவற்றிற்கு வேண்டிய முயற்சிகளைச்செய்ய வேண்டும். இப்பொழுது ஆரம்பித்ததே காலதாமதமாகும். அஹிம்ஸா தர்மத்தின் விலைமதிக்கக் கூடாத மஹா பெருமை தங்கிய கொள்கைகளையுடைய தென்னிந்தியாவிலுள்ள குறைந்த எண்ணிக்கையுள்ள ஜைனர்களின் நாகரீக மேம்பாட்டிற்காகவும், கல்விவிருத்திக்காகவும் வேண்டிய வழிகளையும், உபாயத்தையும் செய்ய இந்த மகாசபைக்கு பாக்கியம் கிடைத்திருக்கிறது.

தென்னிந்தியாவில் இரண்டாயிரம் வருஷங்களாயிருந்து இத் தென்னாட்டில் கல்விக்குத் தலைமையான முதல் கல்லூரியை ஏற்படுத்திய ஜைனர்களை, புறமதஸ்தர்கள் அறியாதிருப்பது ஆச்சரிய கரமானது. உயர்தரப் பட்டப் பரீக்ஷைகளில் தேர்ந்தவர்களும், ஜைனர்கள் பௌத்தர்கள் தனித்தனி மதத்தினர்கள் என்னும் உண்மையையும், இவ்விரண்டு மதத்தினருக்குள்ள வித்தியாசம் வைஷ்ணவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் உள்ள வித்தியாசங்களைப் போன்றதென்பதையும் அறிய முடியாமலிருக்கிறார்கள். வருந்தத் தக்க இத்தகைய அபிப்பிராய பேதமானது நம்மவர்களின் தற்கால தாழ்ந்த நிலைமையினாலேற்பட்டுள்ளது. தற்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள ஜைனர்கள் எல்லோரும் விவசாயத் தொழிலை மேற் பூண்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் சிலரிடத்தில் அருமையான ஏட்டுப் பிரதிகள் இருந்தும் லௌகிக படிப்பும் மதக்கல்வியும் சிறிது மில்லாமலிருக்கின்றார்கள்.



அவர்களுக்குத் தெரிந்தவெல்லாம் சில பழய கதைகளும் வழக்கங்களுமாம். எண்ணிக்கையில் குறைவாயும், பொருள், கல்வி முதலியவற்றுள் வறுமை யுற்று மிருக்கின்ற ஒரு வகுப்பினர் மேன்மையுடன் இருக்க வேண்டுமானால் ஊக்கமுள்ள முயற்சிகளைச் செய்யவேண்டும். உங்களுடைய கடமையின் தன்மையைக் காட்டுவதற்கும், நீங்கள் என்னவிதமான உன்னத நிலையிலிருந்து விழுந்து விட்டீர்களென்பதை அறியும்படிச் செய்வதற்கும், பூர்வகாலத்திலிருந்த ஜைனர்கள், இந்தியர்களின் தேர்ச்சிக்காகவும் நாகரிகத்திற்காகவும் செய்திருப்பவைகளைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

சமஸ்கிருதம், தமிழ், கன்னடம் ஆகிய பாஷைகளில் ஜைனர்களால் செய்யப்பட்டிருக்கும் பல சாஸ்திரியமான நூல்களுடையவும் பெரிய இலக்கியங்களுடையவும் அட்டவணை ஒன்றை நான் உங்களுக்குக் கூறப்போவதில்லை. ஆனால் விசேஷமாக ஜைனர்களாலேயே உண்டாகியதும், இந்தியர்களின் மேன்மை தங்கிய ஒழுக்கங்களிலும் கருத்துக்களிலும் முற்றும் பரவிக் கிடப்பதுமாகிய ஒருமுக்கிய கொள்கையை மட்டும் நான் சொல்லுகிறேன். வித்தியார்த்திகளால் இருக்குவேத காலமென்று கூறப்படுவதான ஆரியர்கள் நாகரீக முற்றிருந்த பண்டைக் காலத்தை நீங்கள் நினைத்துக் கொள்ளுங்கள். அக்காலத்திலிருந்த ஆரியர்கள் சிந்து நதிப்பிரதேசங்களில் குடி யேறினவர்களாய்ப் பல வகைப்பட்ட கூட்டுறவுள்ள சமூகங்களையுடையவர்களா யிருந்தார்கள். அவர்கள் நாகரிகவாழ்க்கையின் தொடக்கத்திலில்லை. அவர்கள் கல்வித் தேர்ச்சியும் மதக்கோட்பாடுகளும் உடையவர்களா யிருந்தார்கள். இவைகளெல்லாம், யாகங்கள் செய்யும் காலங்களில் வேத பாராயணர்களால் ஓதப்படும் மந்திரங்களிலும், வாக்கியங்களிலும் அறியக் கிடக்கின்றன. பூர்வ இந்தியாவின் நாகரிகத்தை அறிவதற்கு இவைகளெல்லாம் நமக்கு மிகவும் விலையுயர்ந்த உதவிகளாயிருக்கின்றன. இந்தப் பாக்களுள் அநேகம் வேதங்களில் கூறப்பட்டுள்ள தெய்வங்களில் முக்கியமானவைகளாகிய அக்கினி, இந்திரன், வருணன், சூரியன், வாயு ஆகியவைகளைக் குறித்துப் பாடப்பெற்றுள்ளன. இவைகளெல்லாம் பெரும்பாலும் இயற்கையின் உருவங்களாம். தேவர்களுக்கு ஆகாரம் பரிமாறுகின்றவனாகிய அக்கினிமூலமாக பிராணிகளைக் கொன்று யாகம் செய்தலே அந்தத்தெய்வங்களை பூசிக்கும் முறையாயிருந்தது. போதையைத் தருகின்ற சோமா இரசம் என்னப்பட்ட ஒரு வித பானம் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் முக்கியமான பானமாயிருந்தது. யாகஸ்தம்பத்தினின்றும் விடுவிக்கப்பட்ட சுனக்ஷேபன் என்னும் சிறுவனுடைய கதையினால், தெய்வர்களுக்கு நரபலியும் செய்யப்பட்டதாகக் கருதுவது பிசகாகாது.

அத்தகைய புராதனமான வேதங்களின் காலத்திலிருந்தே அபிப்பிராயத்திலும், நடத்தையிலும் சுதந்திரம் இருக்க வேண்டுமென்றும், தெய்வ வணக்கம் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்றும், அதில் யாதொருவிதமான ஹிம்சையும் கூடாதென்றும் சொல்லும் ஒரு உன்னத சப்தம் நம் காதில் கேட்கிறது. இது கடைசி மனுவாகிய நாபியின் புத்திரராகிய ரிஷப தேவரிடமிருந்துகிளம்பின தொனியே யாகும். இந்த ரிஷபதேவஸ்வாமிக்கு, ஆதி ஜினனென்றும்

ஆதீஸ்வரரென்றும், ஆதிபகவானென்றும் மறுபெயர்களும் உண்டு;இவர், புருவம்சத்தைச் சேர்ந்தவர். இந்தரிஷப தேவரை ஒரு அவதாரமாகவும், தெய்வீகம் பொருந்திய கடவுளாகவும் ருக்வேத பாசுரங்கள் கூறுகின்றன. அவரை ஜைனர்கள் தீர்த்தங்கரர்களில் முதல்வராகச் சொல்லுகின்றனர். அவர் மனமும் செய்கையும் சுத்தமாயிருந்தால் மாத்திரம் மோக்ஷமடையலாமே யொழிய பிறஜீவன்களை பலிகொடுப்பதனால் யாதொரு பிரயோஜனமுமில்லையென்று தம் சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். மதசம்பந்தமான விஷயங்களை வியாபாரமாகக் கருதுவது கூடாதென்று கண்டித்தார். ஆத்மார்த்தமான நித்தியவீடு பெறவேண்டுமானால்,ஏகேந்திரிய ஜீவன் முதல் சர்வஜீவராசிகளிடத்திலும் தயையும், சகோதரத்துவமும் இருக்க வேண்டியது அவசியம் என்பது அவர் கொள்கை. இந்த "அஹிம்சை" என்னும் கொள்கையை இவருக்குப் பிறகு ஒருவர் பின் ஒருவராக வந்த அநேக மதபோதகர்கள் அல்லது தீர்த்தங்கரர்கள், அவரவர் காலங்களில் மறுபடியும் வியாக்யானம் செய்து போதித்தருளினர். கி. பி. ஆறுவது நூற்றாண்டில் ஜீவித்திருந்த கடைசி தீர்த்தங்கரராகிய மஹாவீர சுவாமிகாலத்திருந்தே,இம்மதத்தினர் சாதாரண ஜீவியத்திலும், உன்னத யோசனையிலும் வீரர்களாக இருந்து வருகிறார்கள். அவர்கள் மானிடஜன்மத்தின் சுபாவிகத் தன்மையையும்,அதன் மாட்சிமையையும், மகத்துவத்தையும் சாதித்து வந்தனர். தென்னிந்தியாவின் தேவாராதனையிலுள்ள பரிசுத்தமெல்லாம் ஜைனர்களாலேயே ஏற்பட்டது என்று சொல்லுவது மிகையாகாது. இப்பொழுதும் ஜீவஹிம்சையோடு கூடிய யாகங்கள் செய்யும் பிராமணர்,தங்கள் கோவில்களில் மிருகபலி செய்யார்கள்.

இவ்வாறு கோவிலென்று சொல்லப்படும் இடங்களிலுள்ள பலி பீடங்கள் ரத்த கனமாகவும், பிரகாரங்கள் மாமிசக்குவியல்கள் நிறைந்து கிடக்கும் இடமாகவுமிருக்கும் இந்நாளிலும், ஜைனமதம் மாத்திரமே, பகவான் பாத கமலங்களில் புஷ்பங்களை வைத்தும், தூபங்கள் எரித்தும், தீபாராதனை செய்தும் தெய்வ வழிபாடு செய்வதையே கடைப்பிடைத்தொழுகுகின்றது. அத்தகைய உன்னதகொள்கைகளோடுகூடிய ஒருமதம் தற்கால இந்தியாவிலும் சிறிது பிரயோஜனப்படுமென்பதில் சந்தேகமில்லை.

மற்றும் அதனுடைய தத்துவம் எவ்வகைத்து? அது கடினமானது;அதில் அதிகம் சொல்ல இயலாது. எனினும்இரண்டொரு விஷயம் மாத்திரம் நான்சொல்லுகிறேன். ஜைன தத்துவத்தின் முக்கிய உண்மை'திரவ்யம்'. இது,தன் சுபாவிகத்தைத்தன்னுடைய குணங்களாலும் விதங்களாலும் வெளிக்காட்டும் காரணங்களோடு கூடிய சத்தியம். திரவ்யம் எப்பொழுதும் மாறுபடாத ஒரு வஸ்துவும் அல்ல, அல்லது நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிக்கொண்டே இருப்பதுமல்ல. அது, அத்வைதிகளுடைய, தெரியாததும், தெரியக்கூடாததுமான பொய்யான நிச்சய வாதத்தையும், பௌத்தர்களுடைய க்ஷணிகவாதத்தையும் ஒருங்கே விலக்கி விடுகிறது. அந்த உண்மையான பதார்த்தம் மாறுதல்கள் அடைந்து ஒரே தன்மையையே கொண்டிருக்கிறது. வித்தியாசங்கள் நடுவிலும் ஒற்றுமை காணப்படுகிறது. திரவ்வியம், சேதன, அசேதனமாகிய



ஜீவம், அஜீவமென்று இருவகைத் தாகும். எவ்விதமான சாஸ்திரதந்திரத்தாலும் ஒன்றிலிருந்து மற்றொன்றைஉண்டாக்கமுடியாது. ஜீவசேதனத்திரவ்யமும் அஜீவ அசேதனத்திரவ்யமும் வேறு வேறான பதார்த்தங்கள்.

மற்றும் ஒவ்வொரு ஆத்மா அல்லது ஜீவன் நித்தியமாகவும் நிச்சயமாகவும் இருக்கிறது. அது மற்றொரு வஸ்துவின் சாயலாகமாத்திரம் மாறி நிச்சயமாயிருக்கும் சுவதந்திரத்தை மாத்திரம் உடையது அல்ல. தற்காலத்திய மிகவும் நாகரீகமான அத்வைதவாதத்தை—மாயவாதத்தை—அர்த்தமில்லாததும் அசாத்தியமானதுமாமென்று ஜைனர்கள் தள்ளிவிடுகின்றனர். இதைக் கண்டிப்பது ஜைனதத்துவம் ஒன்று மாத்திரம் அல்ல. இது, சாங்கிய, நையாய, வைசிகமுதலிய தரிசனங்களோடும்,! ராமானுஜர், மாத்வர்களுடைய மகத்தான கொள்கைகளோடும் ஒத்து இருக்கிறது. மானிட சுபாவிகத்தை ஒரு கேவல தோற்றமாகவும், உலகத்தை மாயமாகவும், தள்ளி விடுகிற ஒரு தத்துவம்,நம்முடைய மதசம்பந்தமான நோக்கங்களையாவது அல்லது புத்தி சம்பந்தமான பிரசனங்களையாவது திருப்தி பண்ணவில்லை. அது தன்னைத் தானே தகாதென்று தள்ளி விடுகிறது. இத்தகைய தத்துவம் இந்துக்களை ஒரு வகையான தேசிய தூக்கத்திற்கு உள்ளாக்கி விட்டது. அவர்களை அந்தத் தூக்கத்தினின்றும் எழுப்புவதற்கு மானிட சுபாவிகத்தைத் தவறின்றி ஊன்றிச் சொல்ல வேண்டும். மனிதஜீவன், தன்னுடைய பிறப்புரிமையாகிய சுயேச்சையை அனுபவிக்கும் பொருட்டு, அவன் தன்னுடைய நிச்சயத்தையும் மகத்துவத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். உண்மையான ராஜாங்கக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதற்கு முன்னமே,மானிட சுபாவிகத்தைதன்னுடைய உண்மையான உன்னத பதவிக்குத்திரும்ப உயர்த்தும் பொருட்டு மதத்திலும் தத்துவத்திலுமுள்ளநிலை மாறுதல் அடைவது அவசியம். ஏனென்றால் (மானிட) சுபாவம் ஒரு தோற்றமாகவும், உலகம் ஒரு பரிகாசமாகவும் இருந்தால், சத்தியத்திற்கும், நன்மைக்கும், சௌந்தரியத்திற்கும் இடம் எங்கே இருக்கிறது? இவைகளும் சாயையின் சாயையாகவே மறைந்து விடும்.

உன்னதமான ஞான நோக்கத்தின் பேரிலும், மேன்மையான நீதிநெறிக் கொள்கைகளின் பேரிலும் அல்லாமல் \ எந்தத் தேசமும் ராஜீகவிஷயத்தில் முன்னுக்கு வந்ததுமில்லை, அல்லது அதனுடைய பெருமை நீடித்து இருந்ததுமில்லை. எல்லா ராஜ்ஜியங்களையும் பந்திக்கிற இந்த பொதுவிதிக்கு இந்தியா மாத்திரம் விலக்காக இருக்கப்போகிறதில்லை. ஆகையினால் நாம் ராஜீக விஷயத்தில் முன்னேற்ற மடையும் அதேகாலத்திலும், அதற்கு முன்னமேயும் நீதி நியாயத்திற்கு ஒப்ப ஜனாசார முன்னேற்றத்தையும்,பரிசுத்தமான எண்ணத்தையும் நடத்தையையும் உடைய தெய்வ பக்தியைப் பரவச்செய்ய மத முன்னேற்றமும் அடைய வேண்டியது அவசியம் என்று நான் சொல்லத் துணிவேன்.

ஜனாசார மதாசாரவிஷயங்களில் ஏற்படும் அத்தகைய சீர் திருத்தத்தில், ஜினமதம், மிகவும் முக்கியமாயும், சக்தியுள்ளதாயுமிருக்கும். இத்தேசத்து பூர்வீகசரித்திரத்தில் இந்த ஜினமதம் எண்ணத்தையும் நடத்தையையும் பரிசுத்

தப்படுத்தி மேன்மையடைந்தது யாவருமறிந்த உண்மை. ஆகையால் (மேல் சொன்ன சீர்திருத்த வேலைக்கு) இத்தகைய பிரசாரணவேலைக்குத் தங்கள் வாழ்நாளையும், செல்வத்தையும் உபயோகிக்கும் சுயநலம் கருதாத சிறுவர்கள் வேண்டும்.

ஜினதர்மத்தின் இன்னொரு லக்ஷணம் மூன்று மணிகள் அல்லது ரத்நத்திரயம். "ஸம்யக்தரிசனக்ஞான சாரித்திராணி மோக்ஷமார்க்கா." என்றபடி நற்காட்சி, நன்ஞானம், நன்னடக்கை ஆகிய இம்மூன்றும் மோக்ஷத்திற்கு வழியாகின்றன. நற்காட்சி என்பது தத்துவங்களின் உண்மைச்சுபாவத்திலும், அவைகளின் செய்கைகளிலும் நம்பிக்கை இருத்தலேயாம். ஆத்மாவின் சுபாவம், அசித்துப்பொருள்களினின்றும் வேறுபட்டதென அறிந்துகொள்வதே நற்காட்சியாகும். இஃது பொய்யான நம்பிக்கை அல்லது மித்தியா தரிசனத்தை விலக்குகிறது. நன்ஞானம் என்பது உலகம், ஜீவன் ஆகிய இவைகள் எப்படி நடைபெற்று வருகின்றன என்பதைப்பற்றிய உண்மையான அறிவேயாம். இதை, (நல்லஞானத்தை) நம்முடைய உண்மையான ஆத்மன் அனுபவித்து ரூபிப்பதே நன்னடக்கையாகும். காட்சி, ஞானம், நடத்தை ஆகிய மூன்றும் தனித்தனியே கர்ம பந்தத்தினின்றும் ஆத்மாவை விடுவிக்க சக்தியற்றவைகளாயிருக்கின்றன. அவை மூன்றும் ஒருங்கே வேலை செய்தால் தான் ஆத்மா முன்னடைதல் கூடும். இவ்வாறு ஜினமதம், நடத்தைக்குரிய ஒரு நீதியாக, தற்காலத்திலிருக்கும் மதங்களுக்கு எட்டாக்கையில் இருப்பதுடன் அவைகளைப் பூர்த்தியும் செய்கிறது. சில மதங்கள் நம்பிக்கையே முக்கியமென்று சொல்கின்றன; சில மதங்கள் ஞானம் அல்லது அறிவே அவசியமானதென்றும், மற்றும் சில மதங்கள் மோக்ஷமார்க்கத்திற்கு நடத்தையே முக்கியமென்றும் வற்புறுத்துகின்றன. ஆனால் ஜைன மதம், மோக்ஷமடைய விரும்புகிறவனிடம் இவை மூன்றும் ஒருங்கே இருத்தல் இன்றியமையாததென்று சந்தேகமில்லாமல் தெளிவாகச் சொல்லுகிறது.

இம்மதத்தைப் பற்றி நான் இன்னும் எவ்வளவோ சிறப்பான விஷயங்கள் சொல்லுவேன். ஆனால் பண்டைக் காலத்துப் புகழைப் பாடுவது என்னுடைய வேலையல்ல. நாம் இந்தக் காலத்தில் ஜீவிக்க வேண்டியிருக்கும் பொழுது திரும்பி பண்டைக் காலத்தைப் பார்ப்பதில் பிரயோஜனமில்லை. "இந்த ஜயின தருமத்தை ஸ்தாபித்த சத் புருஷர்களின் பரம்பரையில் ஒருவனாக இருக்க நான் அருகனோ" என்று நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குள் விசாரணை செய்யுங்கள். அதற்குக் கிடைக்கும் மறுமொழிஎல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்ததே. வட இந்தியாவில் ஜைனர்கள் மிகவும் தனிகர்களாகவும் சௌக்கியமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஏறக்குறைய இந்தியாவின் பாதி வியாபாரம் ஜைனர்களால் நடைபெறுகிறது. அப்படி இருந்தும், அவர்களில் ஒரு தரித்திரனும் இல்லாதிருந்தும், அநேக கோடிஸ்வரர்களிருந்தும் அவர்கள் நம்மதத்துக்கான குறைகளை நீக்குவதில் கவலையற்றவர்களாயிருக்கின்றனர்.



சீர்திருத்தத்தில் கீழ் இந்தியா முன்னேறும் இக்காலத்தில்கூட இந்தியா முழுவதிலும் உள்ள ஜைனர்கள் ராஜீகசபைகளில் தங்களுக்காக ஒரு ஸ்தானங்கூடக் கேட்கவில்லை. எந்த அரசாங்கத்தினரும் கேட்காமலிருப்பவர்களுக்கு ஒரு சுதந்தரத்தையும் கொடுக்கமாட்டார்கள்.

ராஜாங்கக் காரியம் நிற்க, தங்கள் கல்வி விருத்திக்காக அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? பிராமணமதத்தைப் பின் பற்றும் ஹிந்துக்கள், அரசாங்கத்தார் கற்பிக்கும் லௌகிக படிப்பில் திருப்தியில்லாமல் தங்களுக்கென்றே ஒரு கல்லூரிசேட்டு ஸ்தாபித்துக் கொண்டனர். முஸ்லிம் ஜாதியாரும் இவர்களைப் பின் பற்றி ஒரு கல்லூரியை கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்திக்கொள்ளப் போகிறார்கள் இப்படியெல்லாமிருந்தும், ஜைனர்களுக்கென்றே ஒருகலாசாலை கூட இல்லை. இப்படி இல்லாதிருப்பது அவர்களுக்கு திறமையும் திரவ்யமும் இல்லாததினால் ஏற்பட்டது அல்ல. அவர்களுக்கு இவை இரண்டும் இருக்கின்றன. ஆனால் அவைகளை அவர்கள் அனாவசியமான காரியங்களில் உபயோகப்படுத்துகின்றனர். அவசியமான விஷயங்களில் அசிரத்தையும், அனாவசியமான காரியங்களில் சிரத்தையும் இருத்தலே, சீர்கெட்டுப் போகும் ஜாதியாரின் லக்ஷணங்களாகும்.

இந்திய ஜாதியார்களின் நாசத்திற்கு காரணமாயிருக்கிற மதவியாஜ்யம், இச்சாதியாரையும் தனக்கு ஆளாக்கிக் கொண்டது. ஜைனர்களில் இரண்டு வகுப்பினராகிய திகம்பரிகளும், ஸ்வேதாம்பரிகளும் உபயோகமற்றவியாஜ்யத்தில் சுமார் 50 லக்ஷம்ரூபா செலவழிக்கப் போகிறதாகக் கேள்விப்படுகிறேன். இருவரும் அஹிம்சைக்கொள்கையைப் பின்பற்றுகின்றனர். இருவரும் ஜீவஜெந்துக்களிடத்தும், மிருகங்களிடத்தும் பக்ஷம் பாராட்டுகின்றனர். ஆனால் அவர்கள் ஒருவரை ஒருவர் பகைக்கின்றனர். ஜைன தர்மத்தை அனுஷ்டிப்பதில் இஃது ஒரு நேர்த்தியான முறைமையாக இருக்கிறது! உலகத்தாருக்கு ஓயாமல் உண்மையையும், தரும நூலையும் ஆதிகாலத்தில் போதித்த ஜைன ஆச்சார்யர்களின் ஆன்மாக்கள், அவர்களைப் பின் பற்றுகிறவர்கள் எங்ஙனம் இவ்வுண்மையை உணர்ந்து கடைப்பிடிக்கிறார்கள் என்பதைக் கண்ணுற மிகவும் வருந்தும். இரு தரத்தாரையும் ஒற்றுமைப் படுத்தி, அவர்களுடைய வித்தியாசங்களை நீக்கி, வக்கீல்கள் வீணே கொண்டு போகும் பணத்தைக் கல்வி விருத்திக்காகச் செலவழிக்கும் பொருட்டுத் திருப்ப ஜைனர்களின் உபய கட்சியாரிலும் யோசனையுள்ள தலைவர் இல்லையா! ஜைனர்களுக்கென்றே ஒரு போதியபலமான மத்திய கலாசாலை ஏற்படுத்துவதற்கு 50 லட்சம் ரூபா ஒரு பெரிய நிதியாகும்.

தென் தேசத்திலும் அதே பரிதாபப் படத்தக்க நிலைமையையே நீங்கள் காண்கிறீர்கள். ஆனால் உங்களோடு சண்டை செய்ய இங்கே ஸ்வேதாம்பரிகள் இல்லை. வீணே செலவு செய்ய உங்களிடத்தில் ஏராளமான ஐஸ்வரியமும் இல்லை. ஆனால் உங்கள் வருமானத்திற் கேற்ப சமாதானத்தால் தீர்க்கக் கூடிய அநேக விஷயங்களை வியாஜ்யங்களாக நடத்தி வருகிறீர்கள்.

பின் சொல்லப்படும் முக்கியமான விஷயங்கள் தமிழ்த் தேசத்துஜனங்கள் அவசியம் கவனித்துச் சீர்திருத்த வேண்டியவை:—

(1) ஜைனர்களின் தொகை குறைதல்.

(2) வறுமை அதிகரித்தல்.

(3) கல்வியில் குறைவாக இருத்தல்.

(1) நாளுக்கு நாள் ஜைனர்களின் தொகை குறைந்து வருதல் வருந்தத் தக்கவிஷயமாகவே இருக்கிறது. இதற்குபால் விவாகமும், அபரிமிதமான கலியாணச் செலவுமே இரண்டு காரணங்களாகும். இந்த ஜாதியாரில் அநேக பாலிய விதவைகளும், கலியாணமாகாத வாலிபச் சிறுவர்களும் இருக்கின்றனர். இந்த இரண்டு குறைகளையும் அவசியம் நீக்க வேண்டும். கூடிய வரைக்கும் பால விவாகங்களைக் கண்டிக்கவேண்டும். பெண்களுக்குக் கலியாணம் பண்ணும்வயது வந்த பின்னரே மணம் செய்தலை ஆதரிக்க வேண்டும். கலியாணச் செலவைக் குறைப்பதில் பணக்காரர்களே குறைந்த செலவு செய்து வழிகாட்ட வேண்டும்.

இத்தகைய அதிகச் செலவினால் நாசமாகி விட்ட குடும்பங்கள் அநேகம் இருக்கின்றன. கடன் வாங்க முடியாதவர்கள் பிரம்மசாரிகளாகவே இருக்க வேண்டியதாயிருக்கிறது. மற்ற ஜாதியார்களுக்குக் குறைந்த செலவில் கோவில்களில் கலியாணம் செய்து கொள்ளும் அதிர்ஷ்டம் இருக்கிறது. அத்தகைய ஒரு உபாயம் ஏழைஜனங்களுக்காக நம்முடைய ஜாதியில் ஏற்படுத்த வேண்டும்.

(2) ஜைனர்கள் நாளுக்கு நாள் வறுமை அதிகரித்துக் கஷ்டப்படுவதைப் பார்த்தல் மிகவும் துக்ககரமாயிருக்கிறது. இதற்கு அவர்களுடைய வேலையாகிய விவசாயமே காரணம். ஒரு குடும்பத்திற்கு ஒரு காலத்தில் போதியபூஸ்திதி இருக்கும். அதற்குப் பிறகு, குடும்பம் அதிகரிக்க, அந்த பூஸ்திதி அநேக பங்குகளாக்க வேண்டியிருக்கிறது. பின்னும் சின்னட்களுக்குள் அச்சிறிய நிலத்தை இன்னும் அநேக பாகங்களாகப் போட வேண்டி இருக்குங்காலத்து, ஒவ்வொருவருக்கும் ஜீவிப்பதற்கு, ஒரு ஏக்ரா நிலங்கூட அகப்படுவது அரிதாயிருக்கிறது. ஜனசாரக் கட்டுப் பாடும், வரையறுத்த வருமானமும், குடும்பங்களை வறுமைக்கு ஆளாக்கி விடுகின்றன. இவ்வறுமை இன்னும் அநேக கஷ்டங்களுக்கு இடம் கொடுக்கும். ஆகையால் ஜனங்கள் சுகமே ஜீவித்து தங்கள் வாழ்நாளைக் கழிக்க வேண்டுமாயின் வியாபாரத்தையும் கைத்தொழிலையும் ஊக்கத்துடன் கைக்கொள்ளல் வேண்டும்.

(3) ஜைனர்களின் கல்விக் குறைவே மிகவும் வருந்தத் தக்க விஷயம். ஜைனர்களிடத்தில் கீழ்தரப்படிப்பும், உயர்தரப் படிப்பும் கொஞ்சங்கூட இல்லை. நாம் அரசாங்கத்தினர் மேல் குற்றஞ் சாட்ட முடியாது. "கேட்டால் கொடுப்பார்கள், தட்டினால் திறப்பார்கள்" என்னும் உண்மையான விதியை நாம் அசட்டை பண்ணக் கூடாது. நீங்கள் மேலான சாதனங்களுக்



காகக் கேட்கா விட்டால் அவைகள் தாமே வரமாட்டா. லௌகீக, நீதி, நெறி விருத்திக்குக் கல்வியே ஆணி வேராகும். இக்கல்வி இல்லாமல் இச்சாதியார் எங்ஙனம் இவ்வுலகில் இருந்து வாழமுடியுமென்பது எனக்குத் தெரியவில்லை. கல்வியில்லாமல் மதாசாரங்களையும் உணர்ந்து பின்பற்றுவது அசாத்தியமாகும். ஆகையால் ஜின வாணி இல்லாமல் ஜினதர்மம் மாத்திரம் நிகழுமென்பது அசாத்தியமான கட்டுக்கதையாகும்.

ஆகையால் நம் சாதியாரின் இந்த முக்கிய குறையைப்பற்றிநீங்கள் சிறிது யோசிக்குமாறு நான் உங்களிடம் முறையிடுகிறேன். நீங்கள் வட இந்திய ஜைனர்களைப்போலஅவ்வளவு தனிகர்கள் அல்லரென்று எனக்குத்தெரியும். அப்படியிருந்தாலும்நீங்கள் ஒற்றுமையினால் அனேகவிஷயங்களைச்செய்து முடிக்கலாம். ஒருவனே தனியாகச்செய்து முடிக்கமுடியாதஒரு விஷயத்தைப்பலர்ஒத்துழைப்பதனால் செய்து முடிக்கலாம்.

அளவில்லாத நன்மைபயக்கும் இப்பொது நோக்கம், நம்முடைய எல்லா எண்ணங்களுக்கும் நோக்கங்களுக்கும் முன்னமே இருத்தல் அவசியம். உயர்தரக்கல்லூரிப்படிப்புஇக்தனைவருஷங்களாகஜனங்களின்கையிலிருந்தும்,ஜைனர்களில் வித்தியாபட்டம் பெற்றவர் ஒருவருக்குமேல் இல்லாதது அவமானமாகியஒருவிஷயமல்லவா? இக்குறைஉண்மையாகவே நீக்கமுடியாததா? கல்விக்கான போதிய சாதனங்கள் இருக்கும் பக்ஷத்தில் படிப்பில் அதிக விற்பத்தியடையக்கூடிய புத்திக்கூர்மையுள்ள சிறுவர்கள் உங்களிடத்தில் இல்லையா?

அப்படியானால் என் இச்சாதியின் தற்கொலை? என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், அது பிசகோ, சரியோ, கல்வி உண்மையாகவும் நன்றாகவும் கற்பிக்கப்பட்டால் அது மற்றெல்லாத் தீங்குகளையும் செவ்வனே நீக்கிவிடுமென்பதே. ஆகையினால், உங்களுடைய உற்சாகத்தை இரண்டு நாள் வேடிக்கையுடன் நிறுத்திவிடாமல், இவ்விஷயத்தை ஊக்கத்துடனும் கவனத்துடனும் யோசித்து ஜைனர்களின் கல்வி விருத்திக்கான பிரயோஜனமுள்ள ஏற்பாடு ஏதாகிலும் செய்யவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

---

## காஞ்சிபுரம் ஜைன மஹா சபையின்

விசேஷமகாநாட்டில்

ஜைனகெஜட்பத்திராசிரியர்

ஸ்ரீமான். C. S. மல்லிநாதம் அவர்கள்

செய்த

உபந்யாசம்.

(3—10—20)

கனவான்களே!

இந்த மகா சபையின் அக்கிராசனாதிபதியான ஸ்ரீமாந் திரு. அனந்தநாத நயினாரவர்கள் ஜைன சமயத்தைப்பற்றிப்

பேச வேண்டுமென்றுசொன்ன பொழுது நான் அதற்குத்தகுதியற்றவனென்று நன்கு உணர்ந்தேன். ஆயினும் நம்முடைய பூர்வீகமான மதத்தின் உண்மைகளைப் பரவச்செய்வதற்கும், நம்மவர்கள் முன்னேற்ற மடைவதற்கும் எடுத்துக் கொள்ளப்படும்பல முயற்சிகளில் சேர்ந்துஎன்னால்கூடியவரைஉழைப்புஎடுத்துக்கொள்ள நான் ஆற்றலுள்ளவனாகையாலும், என்னுடைய மதத்தினர் இடுங்கட்டளைப்படி நடக்கக் கடமைப்பட்டவனாகையாலும், இங்குச் சிலவார்த்தைகள் பேச முன் வந்துள்ளேன். கற்றறிந்த பல பெரியோர்கள்வீற்றிருக்கும் இம்மகா சங்கத்தில் பேசும்படியான பாக்கியத்தைஎனக்கு அளித்ததற்காக நான் உங்களுக்கு அனேகவந்தனஞ்செலுத்துகின்றேன்.

ஜைன சமயமானது ஜினர்களால் போதிக்கப் பட்டமதமாகும். பிறக்கும் பொழுதே மதிஞானம், சுருதஞானம், அவதிக் ஞானம் என்னும் மூன்றுவித ஞானத்தை யுடையவராய், ஐம்பொறிகளையும் வென்று, இருவினைகளையும் ஒழித்து, வேண்டுதல் வேண்டாமையென்னும் குணங்களில்லாதவராகி, கடையிலாவறிவுமுதலிய எட்டுக்குணங்களையும் அடைபவர்குஜினர் என்று பெயர். இப்பெயர் சம்சார துக்கத்தைக்கெடுத்துப்பிறவிக்கடலை நீந்தியவர் என்றும் பொருள்படும்.

பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக அனேக ஜினேஸ்வரர்களால்போதிக்கப்பட்டு வருவது இந்தஜைனசமயம். இதன் உண்மைகளை இப்போது உபதேசிப்பவர்கள் இல்லாத படியால் பிறமதத்தினர்களே யன்றி நம்மவர்களிலும் பெரும்பாலார்க்குநமது சமயக் கொள்கைகள்தெரியாமலிருக்கின்றன. ஜைன சமயத்தைக் கற்றறிந்தவர்களிலும் அனேகருக்கு அதனுடைய ஆரம்பம், சரித்திரம்முதலியவற்றில் இன்னும் பல சந்தேகங்களிருக்கின்றபடியால் இவ்விஷயங்களை இங்குச் சிறிது விளக்கிக் காட்டுவாம்.

### ஜைன சமயத்தின் ஆரம்பம்.

சமீபகாலம் வரையில் ஜைன சமயத்தின் உற்பத்தியைப்பற்றிப் பலரால் அனேக தப்பான அபிப்பிராயங்கள் கொள்ளப்பட்டுக் கடைசியாக, டாக்டர் ஹெர்மன் ஜீ. ஜேகோபி முதலிய சில கற்றறிந்தவித்வான்களுடைய முயற்சியாலும், அவர்களால் செய்யப்பட்டபல அருமையான ஆராய்ச்சிகளாலும் ஜைன சமயம் வெகுகாலமாக இருந்து வருகின்ற ஒரு தனிமையான மதம் என்பது பெறப்பட்டது. ஆனால் சரித்திரம் எழுதுவோர் பலரும் வேறு சில நூலாசிரியர்களும்ஜைன மதத்தின் ஆரம்பத்தைப் பற்றித்தாங்கள் கொண்டிருக்கும் தவறான



கொள்கைகளை இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை. நமது பள்ளிக்கூடங்களில் இந்துதேச சரித்திரம் கற்பிக்கும் உபாத்தியாயர்களில் சிலர் ஜைன சமயத்தைப் பற்றிப் பேசும் பொழுது அது பௌத்தமதத்திலிருந்து பிரிந்ததென்றும், சிலர் பிராம்மண மதத்திலிருந்து உற்பத்தியாயிற்றென்றும், சிலர் அது புத்தமதம் இந்துமதம்ஆகியவற்றின்சேர்க்கையால் உண்டாயிற்றென்றும் தங்கள் மாணாக்கர்களுக்குக்கற்பிக்கின்றார்கள். மாணாக்கர்களும் வேறு ஆராய்ச்சிஉதவியற்றவர்களாய்இவற்றையே சத்தியமெனக் கொள்கின்றார்கள். இந்தக்கொள்கைகள் எவ்வளவு பிசகானவை யென்றும் உண்மை ஏதென்றும் நாம்இங்கு ஆராய்வோம்.

### 1. ஜைனசமயம் புத்தசமயத்தின் பிரிவல்ல.

சுமார் 50 வருஷங்களுக்கு முன்பு ஜைன சமயத்தை முதன்முதலில் கற்கவாரம்பித்த சில மேல் நாட்டு வித்தியார்த்திகள் நம் சமயத்திற்கும் புத்த சமயத்திற்கும் உள்ள சில ஒற்றுமையான விஷயங்களை ஆதாரவாகக் கொண்டு ஜைன சமயம் புத்தசமயத்திலின்றும் பிரிந்திருக்க வேண்டுமென்று அபிப்பிராயம் எழுத ஆரம்பித்தார்கள். இந்தக்கொள்கைக்கு ஆதாரமாக ப்ரொபஸர் லாஸ்ஸன்என்பவர் நான்குகாரணங்கள் கூறுகின்றார். டாக்டர் ஜெகோபி கல்பசூத்திர மொழி பெயர்ப்பிற்குஎழுதியிருக்கும் முகவுரையில் இந்நான்கு கொள்கைகளையும் தக்க சமாதானங்களுடன் மறுக்கின்றார்.

ப்ரொபஸர் லாஸ்ஸன் கூறுவதாவது:-"ஜைனசமயம் பௌத்தசமயத்திற்குப் பிந்தியது; ஏனென்றால் முதலாவது, இரண்டு சமயத்தினரும், ஜினன், அருகன், மகாவீரன், சர்வக்ஞன், சுகதன், ததாகதன், சித்தன், புத்தன், சம்புத்தன் முதலிய பட்டங்களையேதங்கள் போதகர்களுக்கிடுகின்றார்கள்; இரண்டாவது ஜைனர்களும் பௌத்தர்களும் தங்களுடைய போதகர்களாகிய மனிதர்களையே தெய்வங்களெனப் பாவித்து அவர்களுக்குப் பிம்பங்கள் செய்து கோயில்கள் கட்டுவித்து அவர்களை வணங்குகின்றார்கள்; மூன்றாவது இருசமயத்தாரும் உலகத்தினுடைய சரித்திரத்தை எண்ணத்தில் அடங்காத மிகப் பெரிய கால அளவினால் அளக்கின்றார்கள்; நான்காவது இவர்கள் இருவரும் முக்கியமாக 'அஹிம்சை' என்னும் கொள்கையையே வற்புறுத்துகின்றார்கள்" என்பதே.

இருசமயத்தாருடைய கிரந்தங்களிலும் மேலே சொல்லப்பட்ட பதங்களெல்லாம் மகா வீரரையும் புத்தரையும் குறிப்பிட உப

யோகிக்கப் படுவது உண்மையே. ஆனால் ஆராய்ந்து பார்க்கும் பொழுது இப்பட்டங்களில சிலவற்றை ஜைனர்கள் அதிகம் விரும்புகிறார்கள்; மற்றவைகளை பௌத்தர்கள் மட்டும் அடிக்கடி உபயோகப்படுத்துகின்றார்கள். ஜைனர்கள் ஸ்ரீவர்த்தமானரை, மஹாவீரன், அருகன், ஜினன், சர்வக்ஞன், முதலிய பதங்களால் அழைக்கின்றார்கள்; பௌத்தர்கள் தங்கள் கடவுளை புத்தன், சுகதன், ததாகதன் மஹாவீரன் என்னும் பெயர்களால் கொண்டாடுகின்றார்கள். ஜைனர்கள் ஸ்ரீ வீரரை புத்தன் என்று சொல்லும் பொழுது அளவு கடந்த ஞானத்தை யுடையவன் என்னும் அருத்தத்திலேயே உபயோகிக்கிறார்கள். பௌத்தர்களும் வைதி ஜைன பதங்களை உபயோகிக்கும் பொழுது அவைகளின் பத அருத்தத்தையே கொள்வதாகப் புலப்படுகின்றது.

தீர்க்கதரிசிகளுக்கு விக்கிரகங்கள் செய்து அவர்களை பூஜிக்கும் வழக்கம் இந்தியாவில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வருகின்றது. வேதங்கள் உற்பத்தியான காலத்திலேயே இவ்வழக்கம் அக்காலத்திருந்த ஆரியர்களால் அனுஷ்டிக்கப் பட்டதாகத் தெரிகின்றது.

இன்னும் காலத்தைப் பெரிய எண்ணிக்கைகளால் கூறுவது பௌத்தர்களுக்கும் ஜைனர்களுக்கும் மாத்திரம் நூதனமானதல்ல. இந்துக்களும் காலத்தை நான்கு யுகங்களாகவும், பல கல்பங்களாகவும் பிரித்திருக்கின்றார்கள். சில கொள்கைகளின் ஒற்றுமையைக்கொண்டே ஒரு மதம் இன்னொரு மதத்தினின்றும் பிறந்ததாகச் சொல்ல இயலாது. அஹிம்சை யென்னும் கொள்கையும் இத்தகைத்து.

ஒருவன் இரண்டு மதங்களையும் கற்கும் பொழுதே ஜைனசமயத்தினர் தங்களுடைய கொள்கைகளை பௌத்தர்களிடமிருந்து அடையவில்லை யென்பதோடு இருசமயத்தாருக்குமுள்ள சில வித்தியாசக் கொள்கைகளும் நன்கு விளங்கும்.

1. நிர்வாண நிலைமை எத்தகையது என்று புத்தரை அவருடைய சீடர்கள் பலமுறை கேட்டும் அவர் ஒன்றும் சொல்லாமலே போய் விட்டார். ஆனால் ஜைனர்கள் தங்கள் நூல்களில் நிர்வாணப் பதவி இன்னதென்று நன்கு விளக்கியிருக்கின்றார்கள். ஜீவன்கள் கர்மங்களினின்றும் விடுபட்டுத் தங்களுடைய சுபாவ குணங்களை எய்தி, பிறப்பும் இறப்பும் அற்றவைகளாய்நித்தியானந்தத்தை அனு



பவித்துக் கொண்டிருப்பதே அவைகளுடைய நிர்வாணமாகும்.

2. பௌத்தர்கள் கூறும் 5 ஸ்கந்தங்களும் அவற்றின் அநேக பிரிவுகளும் ஜைனர்களுடைய உள நூலில் காணப்படவில்லை.

3. தண்ணீரிலும் சுரங்கங்களினின்று புதிதாகவெட்டிஎடுக்கப்பட்ட உலோகங்களிலும் ஜீவன் உண்டென்று ஜைனர்கள் கூறுகின்றார்கள். இது பௌத்தர்களுடைய கொள்கையல்ல.

4. இந்து மதக்கிரந்தங்களைப் போலவே ஜைன நூல்களிலும் ஒருவனுடையஆன்மாவிருத்தியடைவதற்கானபடிப்படியானஅநேக நிலைகள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய நிலைகள் பௌத்தர்களுக்குக் கிடையா.

இவ்வாறு மேலே சொன்ன பல விஷயங்களாலும் ஜைன சமயம் பௌத்தமதத்தின் பிரிவல்லஎன்பது பெறப்பட்டது. இனி சில முகாந்தரங்களால் ஜைனர்கள் பௌத்தர்களுக்கு முன்னமேயே யிருந்து வருகின்றார்களென்பதைக் காட்டுவோம்:

"ஜைனர்களும் பௌத்தர்களும் ஆகிய இவ்விருமதத்தினர்களுள் ஒரு வகுப்பினர் மற்றவர்களுடையகொள்கைகளைப்பெற்றிருப்பின் அத்தகைய செய்கை பௌத்தர்களுடையதாயிருத்தல் வேண்டும். அதாவது பௌத்தர்களே ஜைனர்களிடமிருந்து சில கொள்கைகளைக் கடன் வாங்கியதாகத்தெரிகின்றது" என்றுஜெர்மனிதேசத்து பிரபல தத்துவ ஞானியும், இந்திய மதங்களை வாசிப்பதிலேயே தம்முடைய வாழ்நாட்களைக் கழித்தவருமான டாக்டர் ஜெகோபி என்பவர் அபிப்பிராயப் படுகின்றார். அவர் கூறும் காரணங்கள் பின்வருமாறு:—

1. பௌத்தர்களுடைய பழைய நூல்களில் ஜைன சமயாசாரம், தத்துவம், நீதிமுதலியவற்றைப்பற்றி அநேக குறிப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக:

(௧) தண்ணீரில் ஜீவன் இருக்கின்றது. (திக்கநிகாயம் பிரம்மஜல சூத்திரம்.)

(௨) ஆன்மாவிற்கு வர்ணம் உண்டு என்னும் அஜீவக கொள்கையை ஜைனர்கள் மறுக்கிறார்கள்.

(௩) ஸ்ரீ பார்சுவநாதருடைய நான்கு விரதங்கள் திக்கநிகாயம் சம்மானபல சூத்ரத்தில் காணப் படுகின்றன.

(ச) ஜைனர்கள் நம்புகின்ற மனோகுப்தி, வாக்குப்தி, காயகுப்தி என்னும் மூன்று குப்திகளை (மஜ்ஜிம்மநிகாயம்.) கூறுகின்றது.

(ரு) வைசாலி நகரத்திருந்த விச்சாவிகளுக் கர்சனை அபயன் என்பவன், ஜைனர்களுடைய முக்கியகொள்கையாகிய, தவத்தினால் கர்மங்களை நீக்கி ஆன்மா முழுஞானத்தையடையக்கூடுமென்பதைக் கூறுகின்றான். (அங்குத்தர நிகாயம்.)

(சு) திக்குவிரதத்தையும் உபவாசத்தையும்பற்றி பௌத்தநூல்கள் கூறுகின்றன.

2. ஜைன சமயத்தின் பழமையை புத்த நூல்கள் வேறு விதமாயும் ருசுப்படுத்துகின்றன:

(க) இந்த நூல்கள் ஜைனர்களை(நிர்க்கிரந்தர்களை)பௌத்தர்களுடைய சத்துருக்களென்று கூறுகின்றனவே யன்றி, புதிதாக உண்டாகிய ஒரு மதத்தினர் என்று குறிப்பிடவே யில்லை.

(உ) மக்காலி கோசலா என்பவன்முனிவர்களை 6வகுப்புகளாகப் பிரித்து ஜைனர்களை மூன்றாவது வகுப்பில் வைத்தனன். நூதனமாய் உற்பத்தியான மதமாயிருந்தால் ஜைனர்கள் மூன்றாவது வகுப்பினராக வைக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.

(ங) ஒரு நிர்க்கிரந்தனுடைய புத்திரனான சச்சாகன் என்பவனோடு புத்தர் வாதம் செய்திருக்கிறார்.

3. ஜைன நூல்களுள் காணப்படும் குறிப்புகள்:-- ஸ்ரீ மகாவீரருடைய சிஷ்யராகிய கௌதமரும் ஸ்ரீ பார்சுவநாத ஸ்வாமிகளுடைய மதத்தைத் தழுவிக்கொண்டிருந்த கேசி என்பவரும் ஒருதோட்டத்தில் சந்தித்ததாகவும் அப்பொழுது அவர்கள் மதக் கொள்கைகளை ஒத்திட்டுப் பார்க்க ஆரம்பித்து அநேக தத்துவ நுட்பங்களைப் பேசியதாகவும், கடைசியில் இருவரும் ஒருசமயத்தினரே என்று உணர்ந்ததாகவும் உத்தராத்தியாயான சூத்ரம்கூறுகின்றது. இதனால் 24-ம் தீர்த்தங்கரராகிய மகா வீரருக்கு முன்னமேயே பார்சுவநாத தீர்த்தங்கரால் ஜினமதம் போதிக்கப் பட்டதாகத் தெரிகின்றது.

4. ஜைன தத்துவங்களின் பழமை.

(க) ஒவ்வொருஜந்துவினிடத்தும் தனித்தனி ஆன்மாஇருக்கின்றது. இத்தகைய ஆன்மாக்கள் முக்தி யடைந்த பிறகும்தனித்தனியாகவே யிருந்து மோக்ஷ சுகத்தை யனுபவிக்கின்றன.



(உ) ஜைனர்கள் கூறும் உலகத்திலுள்ள முக்கியமான மூலவஸ்துக்களில் ஒன்றாக குணவர்க்கம் சேர்க்கப்படவில்லை.

(ங) தர்மமென்றும் அதர்மமென்றும் இரண்டு திரவியங்கள் உலகத்திலுள்ளன வென்று ஜைன சமயம் கற்பிக்கின்றது. எப்படி ஜலமானது தன்னிடத்தில் வசிக்கும் மீன்களுடைய நடமாட்டத்திற்கு சாதகமாயிருக்கின்றதோ அப்படியே தர்மத்திரவ்யமானது உலகத்திலுள்ள ஜீவன்களுடையவும் புற்கல வஸ்துக்களுடையவும் நடமாட்டத்திற்கு அனுகூலமாயிருக்கின்றது. அதர்ம திரவ்வியமானது அவைகள் நிற்றலுக்கு உதவியாகின்றது.

மேலே சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களினால் ஜைன சமயம் பௌத்தசமயத்திற்கு முற்பட்டது என்று டாக்டர் ஜெகோபி எழுதியிருக்கிறார்.

2. ஜைன சமயம் இந்து சமயத்தின் பிரிவுமல்ல.

இனி, சிலர் ஜைன சமயத்தை இந்து மதத்தின் பிரிவென்று சொல்லுகின்றார்கள். இந்த அபிப்பிராயத்தின் உண்மையை இங்குச் சற்று ஆராய்வாம்: ஜைன சமயமானது அநேக ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீவிருஷபஸ்வாமிகள் என்னும் முதல் தீர்த்தங்கரரால் போதிக்கப்பட்டதாக ஜைன சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்துமதக் கிரந்தங்களும் இந்த விஷயத்தை மிகத் தெளிவாக அறிவிக்கின்றன. இஃதல்லாமல் ஸ்ரீ விருஷப தேவபகவானை மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாக இந்துக்கள் போற்றுகின்றார்கள். இவருடைய சரிதம் ஸ்ரீமத் பாகவதத்துள் கூறப்பட்டுள்ளது.

இன்னும் இவரைப்பற்றி வராக புராணமும்அக்கினிபுராணமும் சந்தேகமறக் கூறுகின்றன. பாகவத புராணத்தின்படி விருஷபதேவர் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்பதாவது அவதாரமென்றும் அவ்வவதாரம் வாமனாவதாரம், இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், பத்தாவதாரங்களுக்கு முன்னமேயே தோன்றியதென்றும்அறியக் கிடக்கின்றது. எண்ணிக்கையில் 15வதாகச் சொல்லப்படும்வாமனாவதாரத்தைப் பற்றி இருக்குவேதம்குறிப்பிடுகின்றபடியாலும், விருஷபாவதாரம்வாமனாவதாரத்திற்கு முந்தியதாகையாலும்,ஜைனசமயத்தை முதன் முதலில் உபதேசித்த ஸ்ரீ விருஷபதீர்த்தங்கரர் இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முற்பட்டவர் என்பது தெள்ளிதில் விளங்கும்.

ஆகையால் ஜைன சமயத்தை இந்து சமயத்தினின்றும் பிரிந்ததாகச் சொல்லுவது உண்மைக்கு விரோதமாகின்றது.

### 3. ஜைன சமய சரித்திரம்.

காலம் அளவில்லாததாய் அநேக கல்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்பமும் அவசர்ப்பிணிக்காலமென்றும், உற்சர்ப்பிணிக்காலமென்றும் இரண்டு சமபிரிவுகளை யுடையது. அவசர்ப்பிணிக் காலத்தில் ஜனங்களுடைய இன்பம், பராக்கிரமம், உயரம், ஆயுஷ்யம், சத்தியம் தருமம் முதலியவை குறைந்துகொண்டே வருகின்றன. உற்சர்ப்பிணி காலத்தில் இவை கிரமமாகவிருத்தியடைந்து கொண்டே வருகின்றன. இந்தக் காலங்கள் ஒவ்வொன்றும் ஆறுபிரிவுகளையுடையன. அவசர்ப்பிணியின் ஆறு பிரிவுகள் சுஷமசுஷமம் (சுகம் அசுகம்), 2. சுஷமம் (சுகம்) 3. சுஷம துஷமம் (சுகம் துக்கம்), 4. துஷம சுஷமம் (துக்கம் சுகம்) 5. துஷமம் (துக்கம்), 6. துஷமதுஷமம் (துக்கம் துக்கம்) எனவாகும். உற்சர்ப்பிணியின் பிரிவுகள் துஷம துஷமம் முதலாக ஆறாகும். நாம் இப்பொழுது அவசர்ப்பிணியில் ஐந்தாவது பிரிவாகிய துஷம காலத்தில் இருக்கின்றோம். இந்தக் காலம் தொடங்கி இப்பொழுது 2400 வருஷங்களாகின்றன.

அவசர்ப்பிணி காலப் பிரிவுகளில் முதலாவதான சுஷம சுஷம காலத்திருந்த ஜனங்கள் தேவர்களைப் போல பேரின்பமுடையவர்களாயிருந்தார்கள். பத்துவித கற்பக விருக்ஷங்கள் அவர்களுக்குத் தேவையானவைகளை யெல்லாம் கொடுத்துக் கொண்டிருந்தன. அந்தகற்பக விருக்ஷங்களுடைய ஜோதியும் குளிர்ச்சியும் மிகுந்திருந்தபடியால் சூரியனுடைய ஒளியும் வெப்பமும் தோன்றவில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல அவைகளுடைய பிரகாசமும் பலன்களும் குறைந்து கொண்டு வந்தன. இரண்டாவது காலமான சுஷம காலத்தில் ஜனங்களுடைய இன்பத்தில் பாதி குறைந்து விட்டது. மூன்றாவது காலம் தொடங்கவே ஜனங்களுக்கு சிறிது துக்கமும் தோன்றியது. கற்பகங்களின் சக்தியும், பிரகாசமும், நன்மைகளும் மிகக் குறைந்து போயின. அப்பொழுது ஜனங்கள் தங்களுக்குத் தேவையான உணவு முதலியவற்றை சம்பாதிக்க வழிதேட வேண்டியதாயிற்று. அது நிமித்தம் ஒருவர்க்கொருவர் சச்சரவு உண்டாயிற்று. அக்காலத்தில் ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு இடையிடையே பதினைன்கு மனுக்கள் தோன்றி ஜனங்களுக்குப் பல தொழில்களைக் கற்பித்து, சட்டங்களை ஏற்படுத்தி, நீதியுடன் அரசாண்டு வந்தார்



கள். அவர்களில் கடைசியான நாபிமனுவின் காலத்தில் முதன் முதலில் மேகங்கள் எழுந்து மழை பொழிந்தன. அவர் ஜனங்களுக்கு வியவசாயத் தொழிலின் முறைகளைக் கற்பித்தார். இவருடைய புத்திரரே ஜைனர்களுடைய முதல் தீர்த்தங்கராகிய விருஷபதேவர் என்பார். இவரை பதினைந்தாவது மனுவென்றும் கூறுவதுண்டு. இவர் பிறக்கும்பொழுதே இயற்கையறிவு, நூலுணர்ச்சி, முற்பிறப்பை யறியும் அறிவு ஆகிய மூன்று வித ஞானத்தோடே பிறந்தவர். ஆகையால் ஜனங்களுக்குப் பல தொழில்களையும் அநேக சாஸ்திரங்களையும் கற்பித்தார். இல்லற தருமத்தை தாமே நன்கு நடப்பித்துக் காட்டிய பிறகு துறவுபூண்டு யதியாசாரத்தைப் பெதித்துத் தம்முடைய அனந்த ஞானத்தினால் மோக்ஷமார்க்கமாகிய ஜினதருமத்தைப் போதித்திருக்கின்றனர். இருபதாவது தீர்த்தங்கரரான முனிசுவிரதர்காலத்தில் இராமசரிதம் நிகழ்ந்ததாகவும் தசரதர் இராமர் முதலியவர்கள் ஜைனர்களென்றும் ஜைனசரிதங்கள் கூறுகின்றன. இருபத்திரண்டாவது தீர்த்தங்கரராகிய நேமிநாதர், கிருஷ்ணனுடைய பெரிய தந்தையின் புத்திரரென்று ஹரிவம்ச புராணத்தினால் அறிகின்றோம். நேமிநாதருடைய காலத்தை சில வித்தியார்த்திகள் கி.மு.5000 வருஷங்களுக்கு முன்பென்றும், சிலர் 3000 வருஷங்களுக்கு முன்பென்றும் எழுதியிருக்கின்றார்கள். ஆனால் உண்மை இன்னதென்று வெளிப்படவில்லை. இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரரான பார்சுவநாத ஸ்வாமியை உண்மையாகவே இருந்தவரென்றும், அவருடைய காலம் கி.மு 876 முதல் 776 வரைக்குமென்றும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். இவருக்குப் பிறகு 250 வருஷங்கள் கழிந்த பின் கி. மு. 599 ஆண்டில் ஸ்ரீமஹாவீரவர்த்தமானர் அவதரித்தார். நாதவம்சத்தைச் சார்ந்த சித்தார்த்தர் என்னும் க்ஷத்திரியருக்குப் புத்திரராய்ப் பிறந்தபடியால் மகாவீரருக்கு பௌத்த ஆகமங்களில் நாத புத்தர் என்னும் பெயர் வழங்கப்படுகின்றது. தமது தந்தை அரசு செலுத்திய வைசாலி (குண்டலபுரம்) நகரத்தில் பிறந்தவராகையால் அவரை வைசாலிகர் என்றும் சிலர் கூறுவர். அவர் 30-வது வயதில் துறவறம் கொண்டு 12 வருஷம் தவமும் தியானமும் செய்து அளவில்லா ஞானத்தை யடைந்து பலவிடங்களுக்கும் சென்று ஜைன சமயத்தை 30 வருஷகாலம் போதித்தபிறகு 72 வயதில் கி. மு. 527-ம் வருஷத்தில் பாவாபுரி என்னுமிடத்தில் நிர்வாண பதமடைந்தார். அவருக்குப் பிறகு அவருடைய கணதரர்களால் இம்மதமானது போதிக்கப்பட்டது.

காஞ்சிப் பதியில் 1920 ௵ அக்டோபர் ௴ 2௳ கூடிய
ஜைன மகாசபைக்கு விஜயம் செய்த கனவான்களின்

## வரவேற்புப் பத்திரம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்னகரு மிந்நகர்க்குப் பின்னகரா
மெனவோங்கிப் பொலிந்த தாலே
நன்னகரா மிந்நகர்க்கு முன்னுறுமா
தொன்னகரம் நாடிக் காணும்
என்னவறி வாளர்பகர் எழிற்சதுர்சிம்
மாதனத்தி லேற்ற வொன்றாஞ்
சென்னவுடன் கன்னலுஞ்சூழ் சிநகாஞ்சி
மாசபையர் செப்பல் கேண்மோ. (1)

ஸ்வஸ்தி ஸ்ரீ. நேமி சாகரவர்ணிஜீசுவாமி அவர்கட்கு.

பூமிசையா ரிதற்கிணையாப் பொன்னகரா
மோவென்று புலவோர் நாளும்
நாமிசையார் நலம்படவே நவின்றேத்தும்
மைசூரில் நன்கு வந்து
நேமிசிநன் திருநாமம் நேர்படவே
தான்றரித்த நிமலா நின்னை
நாமிசைய நளிர்பொழில்சூழ் நகர்காஞ்சி
மாசபைச்சே காமாப் பெற்றாம். (2)

அறவாழி யந்தணன்றன் அருமறையை
யகல்மனத்தி லடைவே கொண்டு
பிறவாழி நீந்துதற்குப் பெருநெறியைப்
புகலவல்ல பெருமா னாகித்
திறவாழி யீதெனவே திகழுலக
மாந்தருக்குச் செப்பி யென்றும்
மறவாழி மாழ்கவுயர் மாதவமே
மேற்கொண்டு மகிழும் மேலோய். (3)

இந்திரியக் குஞ்சரத்தை யிருந்தியமா
மெய்ஞ்ஞானக் கயிற்றாற் கட்டிப்
பந்தவினை கெடுத்தசிநன் பகரறச்சிந்
தனையான தூணிற்பூட்டி
முந்தைவினைத் தொடர்பறவே மும்மணிக்கோல்
தனைப்பிடித்து முறிய வாட்டி
எந்தையடி களுமானாய் எங்கட்கோர்
துணையானாய் எமது கோவே. (4)



சென்னை ராஜதானிக் கலாசாலைத் தத்துவ போதகாசிரியர்
ஸ்ரீமான் A. சக்கிரவர்த்தி M. A. L. T. அவர்கட்கு.

சீர்பெருகுஞ் சிராவகர்க்கோர் சிரமணியே
யெனவொளிருந் திருவே யன்ன
நீர்பெருகும் நிலவலயம் புரக்குமன்னர்
மன்னர்பெறு முறைமை யான
பேர்பெருகுஞ் சக்கிரவர்த்தித் திருநாமம்
பெற்றுயர்ந்த பெரியோய் மிக்க
நேர்பெருகுஞ் சிநகஞ்சி மாசபைக்கு
நாயகமா நின்னைப் பெற்றாம். (5)

அலைகடல்சூ ழாங்கிலநாட் டவர்மொழியில்
அறிவுடைநூல அளவில் கற்று
நிலைபடவே எம்ஏபென் னும்பட்டம்
நீணிலத்தில் நிறுவப் பெற்றுத்
தலைமைபெறு தமிழ்மொழியும் தாவில்சீர்
வடமொழியும் தனியா வோர்ந்து
கலைபொதிந்த கட்டுரைகள் நனிபுகன்றாய்
கனமார்ந்தர் களிக்கும் மேலோய். (6)

பூமாதும் நாமாதும் பொருந்திவளர்
பொன்னகராஞ் சென்னை தன்னில்
கோமானுங் குவலயத்தார் கொள்ளுநற்பே
றிதெனவே குலவிக் காட்டத்
தாமாதி பத்தியத்திற் றரித்த
தகைசால்கல் லூரி தன்னில்
பூமானாய் வீற்றிருந்து புலமைமிகச்
செலுத்திவரும் புலவர் கோனே. (7)

தருமசீலன் பத்திராதிபர் ஸ்ரீமாந்-திரு. ஆதிநயினார் அவர்கட்கு.

ஆதிபக வன்மேனா ளலகில்லாத்
திருவறத்தை யகிலத் தோதும்
சோதியருள் பெற்றதிருச் சோமணிகர்
சுந்தரத்தான் சுடரோ னன்ன
ஆதிநயனுந் திருநாம மணியாகத்
தான்பெற்று யடைவாய் மேலோர்
நீடுபுகல் நூல்பலவும் நீணிலத்தில்
நிலைத்தோங்கி நிலவ வைத்தோய், (8)

அருமறைக ளாராய்ந்து அவனியுளோ
ரகமகிழ அறிஞ ராலே

தருமநெறி பலவகையுந் தன்னகத்தே
யடக்கியனை விருஜைநாற
மருவரும சீலனுக்கோ ரதிபதியாய்
விளங்குகின்ற வண்மை யானா
பெருமதியாய் நின்னையிந்தத் திருச்சபைக்கோர்
பொருளாகப் பிறங்கப் பெற்றும். (9)

ஜைன கெஜட் பத்திராதிபர் ஸ்ரீமாந் C. S. மல்லிநாத ஜைன் அவர்கட்கு.

அல்லிருளைக் கடியவொரு அகல்விசும்பி
லாதித்த னமைந்தாற் போல
வல்லிருளா மஞ்ஞானந் தனைவிட்டச்
சிறப்புற்று வயங்கும் கோல
நல்லருளைத் தருஞான மொழிபலவு
நாடிமட மாந்தர்க் கோதிப்
பல்லவரும் பணியவந்த மல்லிநாத
வான்நாமம் வனையப் பெற்றோம். (10)

ஓங்குபுக ழாங்கிலத்தி னுயர்ஞானந்
தனைப்பெற்றிங் கொழியாச் சீசே
தாங்குதிரு ஜைன்கெஜட்டின் தலைவர்களி
லொருவனெனுந் தகைமை தன்னைப்
பாங்குபெறு முத்தரத்தா ரிடம்பெற்றுப்
பச்சிமத்தார் பரிவாய்ப் பேச
ஈங்கொளிரும் பேர்படைத்தா யிச்சபைக்கு
நினையணியா விசையப் பெற்றும். (11)

மகா சிராவகர்கட்கு.

மண்மாக லோகத்தான் மகிழ்ந்தேத்து
மருகனடி வணங்கும் மாண்பீர்
பண்மாகர் கங்கடந்து பண்புறுமிக்
காந்தியவை பரிவி னுற்ற
நன்மாசி ராவகரே நாங்கள் நுமக்
கென்கைம்மா றியற்ற வல்லேம்
பொன்மாலை பூமாலை யினுமேலாஞ்
சொன்மாலை புனைவித் தோமே. (12)

ஜைன மகா சபையார், காஞ்சிபுரம்.*

* இச் செய்யுட்கள் மேல் மின்னல். சக்கிரவர்த்தி நயினாரால் இயற்றப் பெற்றவை.

13 FEB 1921
MADRAS.



சுவஸ்திஸ்ரீ, நேமிசாகரவர்ணிஜி, சுவாமிகள்,

மைசூர்.

ஓம்

ஸ்ரீஜிநாயநம:.

# தரும தீபிகை.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)


| புத்தகம் 3 | இரௌத்திரிஸ்ரீ கார்த்திகைமீ 1920ஸ்ரீ நவம்பர்மீ | சஞ்சிகை 8 |
| --- | --- | --- |


## தருமோபதேசம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தன்னிடம்வந் தேதேனும் வினவு வார்க்குச்
சாந்தமொடு முகமலர்ந்து விடைசொல் லாமல்
சின்னமழி யாவிடக்காம் வார்த்தை பேசிச்
செருக்குடனே யிருப்பவனும் திறந்து வாயை
என்னவித மானசொல்லு மியம்பி டாம
லிருப்பவனு மேயுலகிற் கீழ்க ளாவார்
இன்னுமிவர் தமைக்காண்டா மிருக மென்ன
இயம்புவது மெப்பொழுது மேற்ற தாமே. (௫௩)

பத்தியுடன் பணிவிடைகள் செய்யும் போதும்
பக்ஷமின்றி மருமகள்மேல் விரோதங் கொண்டு
நித்தநித்த மவளோடு போர் தொடுத்து
நேர்மைவிட்டுக் குடும்பத்தில் கலகஞ் செய்து
கத்துகின்ற மாமிபெண்ணின் பிறப்பே யல்ல
கடைப்பட்ட கழுதையவள் குடித்த னத்தை
எத்தினத்துங் கெடுக்கின்ற சனியு மாவாள்
இவளிருக்கும் வீடுசுடு காட தாமே. (௫௪)

பெற்றபிள்ளை யெனநினைத்துத் தினமும் மிக்க
பிரியமொடு மருமகளைப் பாது காக்கும்
குற்றமிலா மாமிதன்மேல் குறையே சொல்லிக்
குதர்க்கங்கள் பலபேசிக் குடும்பந் தன்னில்
சற்றேனுஞ் சந்தோஷம் விளைத்தி டாமல்
சண்டைதனை விளைக்குமரு மகளே பேயாம்
சுற்றுகுடும் பத்தருவுக் கிவளே வேருக்
குள்ளரிக்கும் பூச்சியென வுரைக்க லாமே. (௫௫)

# தருமசீலன்.

இரௌத்திரி௵ கார்த்திகைமீ

## நல்லறிவும் புல்லறிவும்.

---

நல்லறிவாவது, ஒன்றை மற்றொன்றாகக் கருதாமல் எதையும் உள்ளபடி உணர்ந்து அறிவாளராகிய ஆன்றோர் மனதிற்குத் திருப்தியுண்டாகுமாறு ஒழுங்காக நடத்தலாம். புல்லறிவாவது ஒன்றை வேறொன்றாகக் கருதி எந்தப்பொருளின் இயற்கைக் குணத்தையும் உள்ளவாறு உணராமல் விபரீதமான எண்ணங்களுடன் பெரியோர்க்கு வெறுப்புண்டாகும்படி நடத்தலாம். கரும்பு தித்திக்குமென்று அதன் இயற்கைக்குணத்தை உணர்தல், எட்டிக்கனியைக் கசப்புடையதென்று தெளிதல், சீதள பதார்த்தங்கள் உடம்பிற்குக் குளிர்ச்சி நோயை உண்டாக்குமென்றுணர்தல், உஷ்ணபதார்த்தங்கள் வெப்பநோயை உண்டாக்குமென்றறிதல், துஷ்டஜந்துக்களைக் கெட்டவை யென்று நிர்மானித்தல், சாதுவான பிராணிகளை நல்லனவென்று கண்டுகொள்ளுதல், தீயனைத் தீயனென்றே தெளிதல், நல்லோரை நல்லவரென்றே எண்ணுதல், உயர்ந்தோரை மேலானவராகவே கருதுதல், அற்பரை அற்பரென்றே மதித்தல், மெய்யை உண்மை யென்றே உறுதி கொள்ளுதல், பொய்யைப் பொய்யென்றே சிந்தித்தல் முதலியவைபோன்றவைக ளெல்லாம் நல்லறிவைச் சார்ந்தவைகளாம். கசப்பைத் தித்திப்பாகவும் தித்திப்பைக் கசப்பாகவும் கருதுதல், கெட்டவஸ்துக்களை நல்லனவாகவும் நல்ல வஸ்துக்களைக் கெட்டனவாகவும் மதித்தல், மேலோரைக் கீழோராகவும் கீழோரை மேலோராகவும் நிர்மானித்தல், உதவிசெய்தோரைத் தீங்கு செய்தோராகவும் தீங்கு செய்தோரை நன்மை செய்தோராகவும் கருதுதல், மெய்யைப் பொய்யாகவும் பொய்யை மெய்யாகவும் விள்ளுதல், தெய்வத்தைத் தெய்வ மில்லையென்றும் தெய்வ மல்லாததைத் தெய்வமென்றும் சிந்தித்தல்,



சுத்தத்தை அசுத்தமாகவும் அசுத்தத்தைச் சுத்தமாகவும் நினைத்தல் முதலியவை போன்ற குணங்களெல்லாம் புல்லறிவைச் சார்ந்தவைகளாம்.

இவற்றுள் நல்லறிவானது இம்மையிற் செல்வத்தையும், சௌக்கியத்தையும், நல்லோர் உறவையும், புகழையும் உண்டாக்குவதோடு மறுமையிலும் நற்பதவியை உண்டாக்கும்; முத்திக்கும் வித்தாகும். புல்லறிவோ இவ்வுலகத்தில் தீராவறுமையையும், போராத்துன்பத்தையும், பலர் பகையையும், சதா நிந்தையையும் அளிப்பதோடு, இவ்வுலகத்தைத் துறந்த பின்னரும் மீளாநரகின் வாழ்வையுண்டாக்கிவிடும். இவற்றை யுணர்ந்தே நல்லோரெல்லாரும் நல்வழிப்பட்டொழுகின்றனர்; தீயோரெல்லாரும் தீநெறிக்குட் புகுந்து சீர்கெட்டுத் திரிவர். இவர்களுள் நல்லோர் நன்மையையே அடையக்கூடியவர்களாயிருத்தலின் அவர்களைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. தீயோர் தங்கள் குணத்தாலும் செய்கையாலும் கேடடையக் கூடியவர்களாயிருத்தலினாலே, அவர்கள் அக்குணங்களினின்றும் நீங்கி நல்வழிப்பட்டொழுகுமாறு அவரைப்பற்றிச் சில விஷயங்களைக் கூறவேண்டியது அவசியமாதலின், அவர்களின் இயற்கைகளைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறி அவர்க்கறிவுறுத்துவாம்:

புல்லறிவாளர் செய்கைகள் உலகத்தில் மிகவும் விநோதமாயிருக்கும். இவர்கள் நல்லவர் கூறும் வார்த்தைகளைச் சிறிதும் கவனிக்கவே மாட்டார்கள்; இடம்பமில்லாத சாதுக்களைக் கண்டால் அவமதிப்பார்கள்; இடம்பமுள்ள ஓர் அயோக்கியனைக் கண்டால் அவனுக்கு மிக்க மரியாதை செய்வார்கள்; படிப்பாளிகளைக் கண்டால் இகழ்ந்து பேசுவார்கள்; வாயாடித்தனமாகப் பேசும் நிர்மூடனொருவனைக்கண்டால் பெரிய வித்வானென்று நினைத்துக் கொண்டாடுவார்கள்; தமக்கு நன்றி செய்தாரிடத்தே நன்றி பாராட்டமாட்டார்கள்; தீங்கு செய்வார்மீது அதிக விசுவாசமாயிருப்பார்கள்; ஆகாத வஸ்துக்களைத் தின்று அவஸ்தைப்படுவார்கள்; நல்லவற்றைத் தள்ளி விடுவார்கள்; பெருமைக்காக ஆடையாபரணங்களை யணிந்து தெருவில் தலை நிமிர்ந்து நடப்பார்கள்; அடக்கத்தை அடியோடு கைவிட்டு விடுவார்கள்; சிறிது தர்மத்தையாவது பெருமையின்றிச் செய்யவேண்டிய முறைப்படி செய்யமாட்டார்கள்; பெருமைக்காகப் பல ஜனங்களைத் திரட்டி அவர்களுக்கு வெறுந் தண்ணீர் வார்த்து நாங்கள் அளவற்ற தருமஞ்செய்கிறோம்,

என்று பத்திரிகைகளிலும் இடம்பமாக எழுதிவிட்டுக் கண்ட கண்ட விடங்களிலெல்லாம் வாய்ப் பறை யறைவர்; தங்களிடம் ஒரு வெள்ளிப்பாத்திர மிருந்தால் அதைப் பிறரறியும்படி செய்யவேண்டு மென்று அதில் ஜலத்தை யெடுத்துக்கொண்டு ஒரு தெருவின் கடைசிவரை அனாவசியமாக நடந்து போய்க் கையைக்கழுவிவிட்டு அப்பாத்திரத்தைக் கையில் வைத்து வீசி நடந்து வருவார்கள்; சாஸ்திரக் கருத்தை யுணராமல் வாய்க்கு வந்ததையெல்லாம் நீதியாகப் பேசுவார்கள்; ஒரு மதத்தின் உண்மையை உணராமல் அதில் பல தோஷங்களைக் கற்பிப்பார்கள்; மத மயக்கத்தால் தெய்வங்களையும் பெரியோர்களையும் பலவாறு நிந்திப்பார்கள். இன்னும் இவர்களுடைய செய்கைகள் எத்தனையோ உண்டு. அவற்றை யெல்லாம் எழுதப்புகுந்தால் ஒரு புஸ்தகமாக விரியும். இவர்களெல்லோரும் நற்கதி யடையவேண்டுமானால் இக்குணங்களை ஒழித்து நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்; பெரியோருரையை அனுசரித்து நடக்கவேண்டும்; உண்மையை உணரவேண்டும். அப்பொழுதுதான் இவர்கள் சௌக்கியத்தை யடைய முடியும். இப்பொழுது மகா பரிசுத்தம் பொருந்திய நம் ஜைன மதத்தின் உண்மையை உணராமல் சிலர் இதன் மீது தோஷாரோபணம் செய்கிறார்கள். அவர்களும் இங்குக் கூறியவர்களுள் ஒருவராகுவாரே. அவர்கள் இதன் பக்கத்தில் வரும் ஸ்வஸ்திஸ்ரீ நேமிசாகர வர்ணி சுவாமிஜீ அவர்களுடைய உபந்நியாசத்தை நன்காராய்வாராயின் அவர்கட்கு நம் ஜைன மதத்தின் உண்மை புலப்படும். தங்கள் அபிப்பிராய பேதத்தையும் ஒழித்து அவர்கள் நன்னெறிக்கட்புகுவார்கள்.

பத்திராதிபர்.

---

## ஜைனமதம்.

---

1920ஞ் அக்டோபர்மீ 2உ கூடிய, காஞ்சீபுரம் ஜைன மஹாசபையில் மைசூர் ஸ்வஸ்திஸ்ரீ நேமிஸாகரவர்ணி ஸ்வாமியாரவர்கள் கன்னட பாஷையில் செய்த உபந்நியாசத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு:—

### மங்களாசரணம்.

ஆகாஶம் [illegible]
[illegible]



[illegible] ॥ [illegible]
[illegible]
[illegible] மங்களம் ஶ்ரீஜிநேஶ: ॥

கனவான்களே!

தங்களபேக்ஷையின்படி நான் இன்று ஜைன மத ஸம்பந்தமான சில விஷயங்களைச் சொல்வதற்கு ஆரம்பிக்கிறேன். இவ்வளவு பெரிய விஷயத்தை இடையூறின்றிப் பூர்த்தி செய்வதற்கு என்னை எந்த பரமாத்மனது ஸ்மரணையானது சக்தியுள்ளவனாகச் செய்யுமோ அந்த பரமாத்மனை நான் சுத்த மனதினால் மேற்கூறிய சுலோகத்தின் மூலம், ஸ்துதி செய்தேன். அந்த சுலோகத்தின் தாத்பர்யத்தையும் தெரிவிப்பது அவசியமானபடியால் அதைச் சுருக்கமாக விவரிக்கிறேன்:

எந்த பரமாத்மன், இதர பிராணிகளைப் போல் தேகமென்னும் மூர்த்தத்தை யுடையவனும், ஆகாசத்தைப்போல் அமூர்த்தனாக விருக்கின்றவனும், கர்மராசிகளை தன் ஆத்மனை பாதிக்கவிடாமல் நாசஞ் செய்வதால் அக்கினியைப்போல் பிரகாசிக்கின்றவனும், க்ஷமா (பொறுமை) குண பரிபூர்ணத்தினால் பூமிக்குச் சமானமாக விருக்கின்றவனும், வாயுவைப் போல் பற்றற்றவனாயிருக்கின்றவனும், அதி சாந்தனாக விருப்பதால் ஜலத்தைப்போல் விளங்குகிறவனும், எந்த விகாரமு மின்றித் தனது பரிசுத்த குணங்களில் ஸ்வஸ்திதனாக விருக்கின்றவனும், லோகா லோகங்களை வியாபித்துக்கொண்டிருக்கும் ஞானமூர்த்தியாக விருக்கின்றவனுமாவனோ, அந்த ஸ்ரீ பரமாத்மன், தங்களெல்லோருக்கும் (தங்களோடெனக்கும்) மங்களத்தை உண்டு பண்ணட்டும்.

மஹாசயர்களே!

நாம் பிரதமத்தில் "ஜைனமதம்" என்ற சப்தத்திற்கு அர்த்தமென்னென்று விசாரிப்போம்: 'ஜி' என்ற தாதுவிற்கு ஜெயிப்பதென்றர்த்தம்; ஜி தாதுவிற்கு "நக்" என்ற ப்ரத்யயம் சேர்ந்து "ஜிந" என்ற சப்தம் சித்தியாகிறது. ஜிந என்றால் ஜெயிப்பவனென்றர்த்தம். "ஸம்ஸார து:கஹேதூந் ஜந்மஜராமரணாதீந் தத்தேதூந் ஜ்ஞாநாவரணாதி த்ரவ்யபாவாத்மக கர்மஶத்ரூந் ஜயதீதி ஜிந:" என்றபடி ஸம்ஸார துக்கத்திற்குக் காரணமாக விருக்கும் ஜன்ம ஜரா மரண (பிறப்பு, மூப்பு, மரணம்) முதலானவைகளையும், அவைகட்குக் காரணமான த்ரவ்ய கர்ம, பாவ கர்மங்களென்னும் பேதமுள்ள ஞானாவரணீய முதலான கர்ம சத்துருக்களையும் யார் நிர்மூலப்படுத்துகிறானோ அதாவது மேற்சொன்ன ஸம்ஸார துக்கங்களையும், அவைகட்குக் காரணமாகிய சுபாசுப கர்மங்களையும் யார் ஸம்பூர்ண

மாக ஜெயிக்கிறுனே அந்த பரமாத்மனை 'ஜிந' என்ற நாமதேயத்தினுல் ஸ்துதிக்கப்படுகிருன். அந்த பரமாத்மனுல் சொல்லப்பட்ட தர்மத்திற்கு "ஜிநதர்மம்" என்று பெயர். அந்த தர்மத்தை நம்பும் ஜனங்களுக்கு ஜைன ரென்று பெயர்.

பவ்ய சுரோத்ருகளே!

இப்போது ஜிந, ஜிநதர்மம், ஜைனமதம், ஜைனர் என்ற சப்தங்களுக்கு அர்த்த மின்னதென்று தங்களெல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்திருக்கலாம். இப்படி யிருந்தும் இந்தக் கலிகாலத்தின் மகிமையால் அநேக ஜனங்கள் இந்த மஹாமஹிமையுள்ள ஜைன தர்மத்தை வேறு வித மாக நினைத்துக்கொண்டிருப்பதுந் தவிர நானுவித அஸத்யமான தோஷா ரோபணங்களை (தோஷங்களை சுமத்துதலை) இந்த பரிசுத்தம் பொருந்தி யதும், ஸகல பிராணிகளுக்கும் ஹிதத்தை உண்டு பண்ணுவதுமான தர்மத் தின்மேல் கற்பிக்கிருர்கள்.

இவ்விதமான தோஷாரோபணங்களில் "ஜைனதர்மம் நாஸ்திக தர்மம்" என்றது ஒன்ருகவிருக்கிறது. சில துராகிருத பேயினுல் பீடிக்கப்பட்டவர் கள் ஆரோபித்த இந்த மித்யா (பொய்) அபவாதத்தின் விஷயத்தில், இன்று விமரிசையாகப் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று தாங்கள் அபேக்ஷித்திருப்ப தால் நான் அந்த விஷயத்தில் எனது பாஷணை (பேச்சை) ஆரம்பிக்கிறேன். இதர ஜனங்களுக்காகிலும், இதர மதஸ்தர்களுக்காகிலும் மனதை நோகப் பண்ணவேண்டு மென்ற உத்தேசம் நமக்கு ஸ்வல்பமாகிலும் இல்லை. விசா ரசூன்யத்தினுல் சிலர் சுமத்தும் தோஷங்கள் ஜைனமதத்திற்கு சம்பந்தப் பட்டவை யல்லவென்பதை யுக்தி பிரமாணங்களினுல் காட்டுவதே இன்றைய எனது உபந்நியாசத்தின் உத்தேசம்.

சூரியன் அந்தகாரமயனுக விருக்கின்ருனென்று சொல்வது எவ்வளவு அவிவேக வார்த்தையோ அவ்வளவு அவிவேகவார்த்தையாக விருக்கிறது ஜைன மதம் நாஸ்திகமதமென்பது. சமுத்திரத்தில் ஜலமேயில்லை யென்று வாதிப் பது எப்படி அவிசாரரமணீயமானதோ அத்தகைய அவிசார ரமணீயமானதே ஜைனதர்மம் நாஸ்திக தர்ம மென்று வாதிப்பதும், சூரியன் அந்தகாரமயனுக இல்லை; ஆனுல் பிரகாசமயமாக விருக்கிருன் என்று சொன்னுல் அது யாரை தூஷித்ததாகிறது? சமுத்திரத்தில் ஜலமே இல்லை என்று சொல்வது தப் பான வார்த்தை; ஆனுல் சமுத்திரம் ஜல நிதியாக விருக்கிறது என்று சொன் னுல் அது யாரை திரஸ்கரித்த (அலக்ஷியம் செய்த) தாகிறது? அஸத்திய வார்த் தையை அஸத்தியமென்று சொல்வதும், இருப்பதை இருப்பதாகச் சொல்வ தும் யாரையும் தூஷித்ததவையாகமாட்டா. அசத்யமான மித்யாரோபணங்களை பவித்ர (பரிசுத்த) மான ஒரு தர்மத்தின் மேல் சொல்வதற்கு சிலர் பயப்படு வதில்லை யென்ருல், அத்தகைய அசத்யாரோபணங்களை நிவாரித்துக் கொள்வ தற்கும் (அதாவது தடுப்பதற்கும்) யதார்த்த ஸ்வரூபத்தை பிரகடனம் செய்வ தற்கும் சத்ய விசார பரர்கள் ஏன் அஞ்சவேண்டும்?



ஜைனதர்மம் நாஸ்திக தர்மமல்ல. ஆனுல் ஆஸ்திக மதங்களுக்கெல்லாம் சிரேஷ்டமானது. இப்போது நாம் ஆஸ்திக நாஸ்திக என்ற சப்தங்களின் அர்த் தத்தையும் நிஷ்பத்தியையும் விசாரிப்போம்: பாணிநிவியாகரணம் 4-வது அத்தியாயம். 4-வது பாதம். 60-வது சூத்ரத்தில் "அஸ்தி நாஸ்தி திஷ்டம் மதி:" என்றும், இதற்கு பட்டோஜி தீக்ஷித விருத்தி "தத³ஸ்யேத்யேவ அஸ்தி பரலோக இத்யேவம் மதிர்யஸ்ய ஸ ஆஸ்திக:" என்றும், பாணிநியைச் சட்டிலும் பிராசீனரான சாகடாயனுசார்யரது வியாகரணம், அத்தியாயம் 3, பாதம் 2, சூத்திரம் 61-ல், "தை³ஷ்டிகாஸ்திக நாஸ்திகா:" என்றும், இதற்கு விருத்தி "தை³ஷ்டிகாத³ய: ட²ணந்தா நிபாத்யந்தே. தி³ஷ்டம் தை³வம் ப்ரமாணமஸ்ய மதி: தை³ஷ்டிக: அஸ்தி பரலோக இதி மதிரஸ்ய ஆஸ்திக:, தத்³விபரீதோ நாஸ்திக: |" என்றும், அமரகோஶ பிரதம காண்டம் யிவர்கம் 5-வது ஸ்லோகத்தில், "மித்²யாத்³ருஷ்டி நாஸ்திகதா" என்றும், இதற்கு மாஹேஸ்வரீ டீகாவில், "மித்²யா த்³ருஷ்டிர்நாஸ்திகதா இதி த்³வௌ பரலோக அபா⁴வவாதி ஜ்ஞாநஸ்ய" என்றும், இங்கிலீஷ் டிக்ஷனரியிலும், ஆஸ்திக சப்தத்திற்கு, "A believer one who says, there is a God in opposition to an atheist" (அதாவது கடவுள் இருக்கிருரென்று சொல்பவன் ஆஸ்திகன்; அதற்கு விரோதமாகக் கடவுள் இல்லையென்று சொல்பவன் நாஸ்திகன்) என் றும், நாஸ்திகதா என்பதற்கு "The denial of a God. The dis belief of a future world." அதாவது கடவுள் இல்லையென்று சொல்வதும் பர லோகம் இருக்கிற தென்பதை நம்பாம லிருப்பதும் நாஸ்திக்யதா (Atheism) என்றும் அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன.

ஐயா சத்விசார சீலர்களே! மேற் சொன்ன விஷயங்களினுல் நீங்களெ ல்லோரும் ஜைன தர்மம் நாஸ்திக தர்மமென்று சொல்பவர்களின் வார்த்தை அசம்பவ பிரலாபமென்று தெரிந்துகொள்ளக் கூடும். சகல ஜீவாத்மாக்க ளும் தங்கள் தங்கள் பாப புண்ணியங்களுக் கனுகுணமாக பரலோகத்தில் (ஜன் மாந்தரங்களில்) சுக துக்கங்களை அனுபவிக்கின்றன வென்பதும், பாப புண் யங்களென்னும் கர்மங்கள் விநாசமானவுடன் பரிசுத்தாத்மாக்களாகி கைவல்ய சுகத்தை அனுபவிக்கின்றனவென்பதும் ஜைனுகமங்களின் சாராம்சமாக விருக் கின்றன. இந்த விஷயத்தில் ஜைன மதத்தில் ஆயிரக் கணக்கான ஆர்ஷ கிரந்தங்கள் (மஹாரிஷிகளாலருளிய நூல்கள்) ஸம்ஸ்கிருத பிராக்ருத பாஷை களிலும், தமிழ், கன்னடம், ஹிந்துஸ்தானி முதலான தேச பாஷைகளிலும் இப்போதுமிருக்கின்றன. இங்குச் சில பிராக்ருத சூத்ரங்களையும், ஸம்ஸ் கிருத சூத்ரங்களையும், மஹாரிஷிகளால் எழுதப்பட்ட கிரந்தங்களி லிருந்து எடுத்துக் காட்டுகிறேன்:

"ஜீவோ உவஓகமஓ அமுத்தி கத்தா ஸதேஹபரிமாணோ போத்தா ஸம்ஸாரத்தோ ஸித்தோ ஸோ விஸ்ஸஸோட்டகஈ ॥" என்று (நேமிசந்த்ராசார்ய க்ருத த்ரவ்யஸங்க்ரஹத்தில் ஸ்லோகம் கூறப்பட்டிருக்கிறது. இதன் பொருளாவது:—ஆத்மன் ஜ்ஞான தர்சனமென்ற சைதன்யத்தையே லக்ஷணமாக உள்ளவன்; பூத பவிஷ்யத் வர்த்தமானகாலங்களிலும், பஹிரிந்திரியப் பிராணன்கள் 5. பலப்பிராணன்கள் 3. ஆயுஃபிராணன் 1 சுவாசோச்வாசப் பிராணன் 1 ஆக 10 பிராணன்களோடு ஜீவிப்பவன்; விருக்ஷம் முதலான பஞ்சஸ்தாவரங்களுக்கு ஸ்பர்சனேந்திரியப் பிராணன் 1. காயபலபிராணன் 1. ஆயுஃ பிராணன் 1. சுவாசோச்வாச பிராணன் 1. ஆக பிராணன்கள் 4; புழுக்கள் முதலான ஜீவன்களுக்கு மேற் சொன்ன 4 பிராணன்களோடு ரஸனேந்திரியப் பிராணன் 1. வசனபலப் பிராணன் 1. ஆக பிராணன்கள் 6; எறும்பு முதலான ஜந்துக்களுக்கு மேற் சொன்ன ஆறு பிராணன்களோடு கிராணேந்திரியப் பிராணன் 1 சேர்ந்து பிராணன்கள் 7; தும்பி முதலான ஜீவன்களுக்கு மேற் சொன்ன பிராணன்கள் ஏழோடு சக்ஷுரிந்திரியப் பிராணன் 1 சேர்ந்து 8 பிராணன்கள்; உடும்பு, ஓணான் முதலிய ஜீவன்களுக்கு மேற் சொன்ன 8 பிராணன்களோடு, சுரோத்ரேந்திரிய பிராணன் 1 சேர்ந்து 9 பிராணன்கள்; மனிதர்களுக்கும், நாற்கால் ஜீவன்களுக்கும், கிளி, குயில், கருடன், முதலான பக்ஷிகளுக்கும் மேற்சொன்ன 9 பிராணன்களோடு மனோபலப் பிராணன் 1 சேர்ந்து 10 பிராணன்கள்" என்பதாம். இந்த விஷயங்கள் ஜைனாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிராணி சாஸ்திரத்தில் (zoology) அதி விஸ்தாரமாகவும் விசித்ர வர்ணனைகளோடும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ரூபரசகந்த ஸ்பர்சங்களென்னும் மூர்த்த குணங்களில்லாம லிருப்பதால் ஜீவன் அமூர்த்தன்; மனோவாக்கு காயங்களால் தான் செய்யும் கர்மங்களுக்கு கர்த்தா; அந்த கர்ம பலன்களாகிய சுக துக்கங்களை அனுபவிப்பதனால் போக்தா (அனுபவிக்கிறவன்); சமஸ்த கர்மங்களை நாசம் செய்து முக்தனாகும் வரையில் சதுர்கதி ரூபமாகிய சம்சாரத்தில் பிரமிப்பவன்; சரீர தாரியாக விருக்கும் போது அந்தந்த சரீரப் பிரமாணமாக வியாபித்திருப்பவன்; சகல கர்மங்களையும் நாசஞ் செய்தபிறகு தனது ஊர்த்தவகமன சுபாவத்தினால் லோகாக்ரத்தில் ஸ்திரஸ்தாயியா யிருந்து (நிலைபெற்றவனாயிருந்து) 'ஸித்த' என்னும் சுத்தாத்மனாகி மறுபடியும் எப்போதும் ஜன்மமரண கர்ம பந்த முதலான துக்கங்களினின்றும் நீங்கக் கூடியவன்.

சத் புருஷர்களே! இது வரையில் சொன்ன பிரமாணங்களினால் எல்லா ஜீவாத்மன்களும் தங்கள் தங்கள் பாப புண்யங்களுக் கனுகுணமாக இந்த லோகத்திலேயும் பரலோகத்திலேயும் (ஜன்மாந்திரத்திலும்) துக்க சுகங்களை அனுபவிக்கிறார்க ளென்றும், பாபபுண்யங்களென்னும் கர்மங்கள் ஸம்பூர்ணமாக நாசமானபின் பரிசுத்தாத்மனாகி, கைவல்ய சுகமென்னும் நித்ய சுகத்



தை அனுபவிப்பார்களென்றும், ஜைனாகமங்கள் பிரதிபாதிக்கின்றனவென்ற விஷயம் நீங்கள் விசதமாகத் தெரிந்துகொள்ள வில்லையா? இது மட்டுமல்ல. "ஆத்மாக்கள் அனாதியாகவும் அனந்தங்களாகவும் இருக்கின்றன; இவைகளை யாரும் சிருஷ்டிப்பதும் சம்ஹரிப்பதும் இல்லை" என்றவை போன்ற வர்ணனைகள் ஜைன வேதங்களில் எவ்வளவு விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவு விஸ்தாரமாக இதர மதக் கிரந்தங்களில் காண்பது துர்லப மென்று சொல்லக்கூடும். மேலும் பாருங்கள்:

ப்ரதமாமஸம்ஜ்ஞினோ யாந்தி வம்ஶாந்தாஶ்ச ஸரீஸ்ருபா:।
ஶைலாந்தாஞ்ச விஹங்கமாஶ்சாஞ்ஜநாந்தாஶ்ச போகிந:॥ ௧॥
தாமரிஷ்டாஞ்ச ஸிம்ஹாஶ்ச மகவ்யந்தாஶ்ச யோஷித:।
நரா மத்ஸ்யாஶ்ச கச்சந்தி மாதவீந்தாம்ஶ்ச பாபிந:॥ ௨॥
நரகேப்யோ மனுஷ்யத்வம் ஸம்யக்த்வோ நிர்கதா: க்ஷிதே:।
திர்யக்த்வேவ ஸம்ப்ராப்ய நரகம் யாந்தி தேவதா:॥ ௩॥
ஸ்வாம் மனுஷ்ய ஜாதேந ஷஷ்ட்யாஸ்துர்யா விநிர்கத:।
ஸம்யமம் வா ந வாப்னோதி நாராவனிதி நிஶ்சய:॥ ௪॥
நிர்கதா: பஞ்சம்யா லப்தோ ஜன்மனி கேவலஜ்ஞானம்।
ப்ராப்னோதி நவோனதுர்க்கம் ஹாவ ஸம்க்லேஶ யோகத:॥ ௫॥
ஜன்மனி நிர்வ்ருதிம் கேசித்துர்யாயா நிர்கதா: க்ஷிதே:।
ந பாந்த: ப்ராப்னுவந்த்யேவ பவித்ராம் தீர்த்தகர்த்ருதாம்॥ ௬॥
ஜன்மனி தீர்த்தகர்த்ருத்வம் த்ருதீயாந்தாத் விநிர்கதா:।
நிர்கத்ய நாரகா நஸ்யுர்பலகேஶவசக்ரிண:॥ ௭॥

என்று கூறுகிறபடி அஸஞ்ஞி பஞ்சேந்திரிய பிராணிகள் (ஞான மில்லாத பிராணிகள்) இறந்து நரகம் புகுவதாகில் முதல் நரகத்துக்கு மட்டிலும் போகும். ஸரீஸ்ரபஜாதி (நீர்ப்பாம்பு) முதலிய ஜந்துக்கள் இரண்டாவது நரகம் வரையிலும், கருடபேரண்ட முதலான குரூர பக்ஷிகள் 3-வது நரகம் வரையிலும், ஸர்ப்பங்கள் 4-வது நரகம் வரையிலும், ஸிம்ஹங்கள் 5-வது நரகம் வரையிலும், ஸ்திரீகள் இறந்து பாபத்தினால் 6-வது நரகம் வரையிலும், புருஷர்கள் இறந்து மஹா பாபத்தினால் கடைசியாகிய 7-வது நரகத்திலும் போய்ப் பிறப்பார்கள். இப்படியே திமிங்கலம் முதலான மஹா மத்ஸியங்களின் கதியுமாகும். மேலும் ஏழாநரகத்தில் இறந்து வெளிப்பட்ட ஆத்மன்கள் மறுபவத்தில் மனிதனாய்ப் பிறப்பதில்லை. ஆனால் திர்யக்கதியிலே பிறந்து மறுபடியும் இறந்து நரக கதியை யடைவார்கள். 6-வது நரகத்திலிரு

க்து வெளிப்பட்ட ஜீவர்கள் மனிதனாய்ப் பிறக்கக் கூடும், ஆனால் வ்ரத ஸம்யமங்களை அடையக்கூடிய வளவு சக்தி அவர்களின் ஆத்மனில் உண்டாகாது. 5-வது நரகத்திலிருந்து வந்தவர்கள் மனிதராய்ப் பிறந்து விரதாதிகளை அடையக் கூடும். ஆனால் அதே ஜன்மத்தில் முக்தி யடைய முடியாது. 4-வது நரகத்திலிருந்து வந்து மனிதராய்ப் பிறந்தவர்கள் ஒரு சமயம் அதே ஜன்மத்தில் தபஸ் ஸாமர்த்தியத்தினால் சகல கர்மங்களையும் க்ஷயம் செய்து முக்தி யடையவும் கூடும்; ஆனால் தீர்த்தகர பதவியை அடைய முடியாது. 3-2-1 வது நரகங்களிலிருந்து வந்து மனிதராய்ப் பிறந்தவர்கள் தீர்த்தகரர்களாக லாம்; ஆனால் பல தேவ வாசுதேவ பிரதிவாசுதேவ பதவிகளை அடைய முடியாது. மேலும்,

ஸம்ப்ராப்தா யேஷாம் நாகம் தேவேஷு வாஸி ஸம்க்யகா:|
நிஸர்க்கேண ஸம்வேக்ஷாம் யதோ மந்தகஷாயதா|| ௧||

போகா வர்ஷாஸ்தே நைவ ஸம்க்யாதா ஜந்தவ:|
தியஞ்சோ மாநுஷாஸ்சைவ ஸாஜ்ஞ்யா: வைமாநிகா தத:|| ௨||

மித்யாத்ருஷ்டயோ ஜீவா: ஸம்ஜ்ஞிநோ ஸம்ஜ்ஞிநோபவா|
வ்யந்தராத்யேஷு ஜாயந்தே ததா பவநவாஸிந:|| ௩||

ஸம்ப்ராப்தா யேஷா ஸங்க்யாதாயுஷ்யஞ்ச ப்ராப்ய ஸத்ப்ரப:|
உத்க்ருஷ்டாஸ்தா பாஸாஸ்சைவ யாந்தி ஜ்யோதிஷ்க தேவதா:|| ௪||

ப்ரஹ்மலோகே ப்ரஜாயந்தே பரிவ்ராஜ: ப்ரகர்ஷத:|
ஆஜீவாஸ்து ஸஹஸ்ராரம் ப்ரகர்ஷேண ப்ரயாந்திஹி|| ௫||

உத்பத்யந்தே ஸஹஸ்ராரே தியஞ்சோ வ்ரதஸம்யுதா:|
அத்ரைவ ஹி ப்ரஜாயந்தே ஸம்யக்த்வாராதகா நரா:|| ௬||

நக்நா நிர்க்ரந்த லிங்கம் யே ப்ரக்ருஷ்டம் தாரயந்தி தே|
அந்த்ய க்ரைவேயகம் யாவ தபவ்யா: ஸந்தி யாந்தி தே|| ௭||

யாவத்ஸர்வார்த்தஸித்திம் தாவந்நிர்க்ரந்தாஸ்தத: பரம்|
உத்பத்யந்தே தபோயுக்தா ரத்நத்ரய பவித்ரதா:|| ௮||

என்று கூறுகிறபடி போக பூமி மனிதர்களும், திர்யக் பிராணிகளும் இறந்து தேவகதியை அடைவார்கள். சலாகா புருஷர்கள் (சக்ரவர்த்திகள் வாசுதேவப் பிரதிவாசுதேவர்கள்) மறுபவத்தில் திர்யக் பிராணிகளாகவும், மனிதராகவும் பிறப்பதில்லை. அவர்களில் சிலர் முக்தியடைவார்கள்; சிலர் ஸ்வர்க்கத்தை



யும் சிலர் நரகத்தையு மடைவார்கள். ஸக்ஞி அஸக்ஞி என்னும் திர்யக் பிராணிகள் இறந்து ஊர்த்துவ கதி யடைவதானால் பவணதேவர்களாகவும், வியந்தர தேவர்களாகவும் பிறப்பார்கள். போக பூமி மித்யாதிருஷ்டிகளும், தாபஸர்களென்னும் ஒரு விதமான மித்யா தபஸிகளும், இறந்து ஜோதிஷ்க தேவர்களாகப் பிறப்பார்கள். பரிவ்ராஜ ரென்னும் ஒரு வித மித்யாதபஸிகள், இறந்து பிரஹ்ம கல்பமென்னும் 5-வது ஸ்வர்க்கம் வரையில் போய் ஜனிப்பார்கள். ஆஜீவகரென்னும் தபஸிகள், இறந்து ஸஹஸ்ரார கல்பமென்னும் 12-வது ஸ்வர்க்கம் வரைக்கும் போய்ப் பிறப்பார்கள். ஸம்யகத்துவமும், அணுவிரதமுமுள்ள திர்யக் பிராணிகளும் கூட அதே ஸ்வர்க்கத்தில் ஜனிப்பார்கள். கேவலம் சம்யக் திருஷ்டிகளாகிய கிரகஸ்தர்களும் (அவிரதஸம்யக் திருஷ்டிகளென்னும் 4-வது குண ஸ்தான மனிதர்களும்) அதே 12-வது ஸ்வர்க்கம் வரையில் போய்ப் பிறப்பார்கள். அபவ்யராக விருந்து பஹிரங்கத்தில் திகம்பராகி கோர தபசு செய்யும் மனிதர்கள் (திரவ்யலிங்க முனிகள்) அந்திய க்ரைவேயக மென்னும் சுவர்க்கம் வரையிலும் போய்ப்பிறப்பார்கள். பவ்யாத்மனாக விருந்து திகம்பர முனிகளாகி உத்கிருஷ்ட தபஸ் செய்யும் மஹாத்மன்கள், ஸர்வார்த்த ஸித்தியென்னும் ஸ்வர்க்கம் வரையிலும் போய்ப் பிறப்பார்கள். இது தான் கடைசி ஸ்வர்க்கம். ஸகல கர்மங்களையும் துவம்ஸம் செய்த ஆத்மாக்கள் அழிவில்லாத முக்தி சுகத்தை அடைவார்கள். இது மேற்சொன்ன ஸ்லோகங்களின் அபிப்பிராயம்.

ஐயா ஸஜ்ஜனர்களே!

பரலோககத்யாகதி பாப புண்ய சுவர்க்க மோக்ஷ மிவை முதலானவற்றைப் பற்றிய வர்ணனைகள் ஆர்ஹந்திய பரமாகமங்களில் எவ்வளவு விஸ்தாரமாக விருக்கின்றன வென்பது இவ்வளவிலேயே தங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். முன் சொன்னபடி இத்தகைய விஷயங்களை பிரதிபாதிக்கும் பெரிய பெரிய ரிஷிப்பிரணீத கிரந்தங்கள் நூற்றுக்கணக்காக விருக்கின்றன. சமயம் கொஞ்சமானதால் இப்போது அதிக ஸ்வல்பத்தையே தங்களது சுருதி பதத்திற்குக் கொண்டுவந்தேன். இப்பொழுது பரலோக நம்பிக்கை, ஜைனதர்மாவலம்பிகளுக்கு எவ்வளவு திடமாக விருக்கிற தென்பது இதனால் தங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கலாம். இப்படியிருந்தும் ஜைன தர்மம் நாஸ்திக தர்ம மென்று சொல்வதற்கு நாக்கை நீட்டுபவனது ஸாகஸம் மிகவும் ஆச்சரிய கரமானது. சிலர் ஜைனர்கள் கடவுளை ஸ்வீகரிப்பதில்லை; ஆகையால் அவர்கள் நாஸ்திகர்க ளென்று சொல்லுகிறார்கள். ஸ்ரீ ஆர்ஹந்தியமத (ஜைனமத) சித்தாந்தத்தில் பரமேஸ்வர சம்பந்தமான கதனம் (சொல்) எவ்வளவு விஸ்தாரமாகவும், பவித்ரமாகவு மிருக்கிறதோ, அவ்வளவு வியக்தமான கதனம் வேறிடத்தி லிருக்கமாட்டாது. சில சந்தர்ப்பங்களில் இதர மதங்களில் பரமேஸ்வரன் ராகத்வேஷ முதலான தோஷ ஸஹிதனென்று சொல்லி யிருந்தாலும் வேறுசில இடங்களில் அதற்கு விருத்தமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜைன மதத்திலோ வென்றால் எல்லா விடங்களிலும் கடவுள் சர்வதாபரிசுத்த னென்றே சொல்லப்பட்டிருக்கிறது.

மங்களாசரண சுலோகத்தை விவரித்தபோதே இந்த விஷயத்தை நீங்களெல்லோரும் தெரிந்து கொண்டிருக்கலாம்.

கடவுளின் பவித்ரமாகிய ஸ்வரூபங்களையும், குணங்களையும், விவரிக்கும் நூற்றுக்கணக்கான ஆர்ஷ கிரந்தங்கள் இந்தக் கலி காலத்திலேயும் ஜைனர்களிடத்தில் இருக்கின்றன. இவைகள் ஒன்றையாகிலும் தங்கள் சுருதி பதத்திற்கு வரவழைத்துக் கொண்டவர்கள் அதாவது (கேள்விப்பட்டவர்கள்) மேற்சொன்ன அசம்பத்த பிரலாபத்தை என்றும் செய்யமாட்டார்கள். இன்னும்,

ஐயா தூரதர்சிகளே!

க்ஷுதா த்ருஷா பயம் த்வேஷோ ராகோ மோஹஸ்ச சிந்தநம்।
ஜரா ருஜா ச ம்ருத்யுஸ்ச ஸ்வேத: கேதோ மதோ ரதி:॥

விஸ்மயம் ஜநநம் நித்ரா விஷாதோஷ்டா தஶ ஸ்ம்ருதா:।
ஏதே ஜகஸ் ஸர்வபூதாநாம் தோஷா: ஸாதாரணா இமே॥

ஏபிர்தோஷைர் விநிர்முக்த: ஸோயமாப்தோ நிரஞ்ஜந:।
வித்யந்தே யேஷு தே நித்யம் தேऽத்ர ஸம்ஸாரிண: ஸ்ம்ருதா:॥

என்றபடி, பசி முதலான 18 தோஷங்கள் ஸாதாரணமாக லோகத்திலுள்ள சமஸ்த ஜீவன்களிடத்திலு முள்ளவைகள். இந்த தோஷங்களினின்றும் யார் நீங்கி இருக்கிறார்களோ அவர்களே பரிசுத்த பரமாத்மனாகும். இந்த் தோஷங்கள் யாரிடத்தி லிருக்கிறதோ அவர்கள் சம்சாரிகளென்று கருதப்படுவார்கள். இதை நன்றாகப் பரிசீலனை செய்தால் ஜைனமதம் தோஷ ரஹிதமான பரமாத்மனையே கடவுளென்று ஸ்வீகரிக்கிற தென்று தெரிகிறது. ஆனால் மேற்சொன்ன தோஷங்களில் ஒன்றாகிலும் கொஞ்சமேனும் எந்த ஆத்மனிடத்தில் இருக்கிறதோ அந்த ஆத்மன் ஜீவாத்மனே யொழிய பரமாத்மனல்லவென்பது ஜைனமத சித்தாந்தமாக விருக்கிறது.

சிலர் ராகத்வேஷ மோஹமுதலான விகாரமுள்ள ஜீயாத்மன்களையுங்கூட கடவுளென்பதாகச் சொல்லிக்கொண்டு அவரைக் கடவுளென்று ஜைனாகமங்கள் சொல்வதில்லை யாதலால் ஜைனமதம் நாஸ்திக மதமென்று சொல்கிறார்கள். இந்த வார்த்தை அப்படிச் சொல்பவருக்கே அவமானத்திற்கு ஹேதுவாக விருக்கிற தென்பதாக சாதாரண மனிதனும் தெரிந்து கொள்ளக் கூடும். ராகத்வேஷ மோஹ விஷயாசக்த பக்ஷ பாத முதலான களங்கமுள்ள ஆத்மன் கடவுளென்றால் இதர ஜீவாத்மன்கள் எல்லாம் கடவுளாகக் கூடும். "அஜ்ஜனட்ட ஆலதமரவெந்து கேணி ஹாகி கொண்ட" (அதாவது பாட்டன் கட்ட ஆலமரமென்று தூக்கு போட்டுக் கொண்ட) என்னும் கிழமொழிக்கிணங்க, தான் பாடின பாட்டையே பாடிக்கொண்டு, எவ்வளவு பவித்ரமான விஷயமானாலும், எப்படிப்பட்ட ஸத் புருஷர்கள் சொல்லியதானாலும்



அதைக் கேட்காதபடி காதை மூடிக்கொள்பவனுக்கு எந்த வார்த்தைதான் கேட்கக்கூடும். ஆனால் சத்விசார மென்னும் திராசைக் கைக்கொண்ட ஸத் புருஷர்கள் அவர்களை நிறுத்து அவர்களின் பாரத்தை நிர்ணயிப்பார்களல்லவா?

இன்னும் சிலர் கடவுள் எல்லாவற்றையும் சிருஷ்டிக்கிறா ரென்றும், அவரே அவைகளை சம்ஹரிக்கிறா ரென்றும், துர்ப்பலமான சித்தாந்தத்தை ஸ்வமதத்திற்கு மஹாபிராணனாகக் கற்பித்துக்கொண்டு அந்த அனர்த்தகரமான வார்த்தையை ஸ்ரீ ஸர்வக்ஞமதம் (ஜைனமதம்) ஒப்புக்கொள்வதில்லையாகையால் அந்த ஜைனமதம் நாஸ்திக மதமென்று சொல்கிறார்கள்.

இந்த வார்த்தைகள் மத சாஸ்திரங்களிலும் நியாய சாஸ்திரங்களிலும் பரிசய முள்ளவர்களுக்குக் குழந்தைகள் வார்த்தைபோல் காணப்படும். பரமாத்மனாகிய கடவுள் எல்லாவற்றையும் சிருஷ்டிப்பவ ரென்றால், லோகத்திலிருக்கும் அசங்கியாத குரூரப்பிராணிகளையும் பாபப்பிராணிகளையுங்கூட கடவுளே சிருஷ்டிக்கிறாரென்று கடவுளின்மேல் சிருஷ்டி கர்த்திருத்வ பாரத்தைச் சுமத்துகிறவர்கள் ஒப்புக்கொள்ளவே வேண்டும்; இவர்கள் கடவுளின் பக்தர்களல்ல. கடவுளுக்கு துரோகிகளென்று பஹிரங்கமாகச் சொல்லலாம். ஏனெனில், இப்படிப்பட்டவர்கள் தயாமயனும் ஞானமூர்த்தியுமான பவித்ர பிரமாத்மனை நிந்திப்பவர்களாக இருக்கிறார்கள். கடவுள் சகல ஜகத்தையும் அதற்குள்ளிருக்கும் சமஸ்த பிராணிகளையும் ஒருங்கே சம்ஹரிக்கிறாரென்று சொல்லும் வார்த்தையும் மிகப் பயங்கரமானது. மேலும் இவ்விதமான வார்த்தைகள் கடவுளை நிந்திக்கும் வர்த்தைகளே. ஒரு தகப்பன் தனக்குப் பிறந்த குழந்தைகளை ஒருங்கே கொன்று விடுகிறானென்று சொன்னால் அந்தத் தந்தை எவ்வளவு நிஷ்கருணையும் குரூரமும் விசார சூன்யமும் உள்ளவனாயிருக்கக் கூடும். நிஷ்பக்ஷபாதிகளாகிய சத் புருஷர்கள் இந்த விஷயங்களில் சாவதானபராரவார்களென்று நான் நம்புகிறேன். (இந்த விஷயத்தை விஸ்தாரமாக எனது "ஸ்ருஷ்டிவாத" மென்னும் நாளைய உபந்யாசத்தில் சொல்வேன்.)

இன்னும் சில மஹாத்மாக்கள் ஜைனர்கள், வேதத்தை நம்புவதில்லையாகையால் அவர்கள் மதம் நாஸ்திகமதமென்று சொல்கிறார்களாம்:—

இத்தகைய வார்த்தையைக் கேட்கும் போது நமக்கு நகைப்பு வராமலிருக்கவில்லை. ஜைனர்கள் வேதத்தை நம்புவதில்லை யென்பதை எந்த விசார சூன்யன் அவர்களுக்குச் சொல்லி யிருக்கிறானோ அது தெரியாது. ஜைனமத தத்வங்களெல்லாம் துவாதசாங்க வேதமூலமாகவே பிரதிபாதிதமாக இருக்கின்றன. வேதமூலமின்றி ஒரு சப்த மேனும் பிரமாண மல்லவென்று சொல்லும் ஜைனமத வாதம் நிச்சலமாக விருக்கிறது. "யஸ்மாத்வேத பரம்பரா ஸமுதிதா" என்றதில், பரமாத்மனது (ஸர்வஜ்ஞனான அர்ஹத்பரமேஷ்டிகளின்) குணவர்ணனை செய்யும்போது 'இந்த லோகத்தில் ஒவ்வொரு கிருதயுகத்திலேயும் ஸர்வக்ஞனாலே வேதம் பிரகடனப் படுத்தப்படுகிறது, என்பதை ஜைனமதத்தில் ஸ்வல்ப பரிசிரமமுள்ளவன்கூடத் தெரிந்து கொண்டிருக்க

லாம். நித்யமும் பாரத வர்ஷத்திலும், பிரதி பிராந்தியத்திலும் இருக்கும் ஜைன தேவாலயங்களில் மேற் சொன்ன துவாதசாங்கவேத பூஜை நடந்து கொண்டிருக்கிறது. அந்த பூஜையின் ஆஹ்வான மந்திரத்தைக் கவனித்துப் பாருங்கள்.

[illegible] ॥ என்பது மந்திரம். [illegible] வேத சப்தத்திற்கு அர்த்தமும், நிஷ்பத்தியுமாவன:— வேத என்னும் சப்தத்தில், "வித்" "ஜ்ஞானே" என்னும் தாதுவிற்கு "கஞ்" என்னும் பிரத்யயம் பரமாக உண்டாகிறது. "ஜ்ஞான ஜனகவசனம் அதவா ஜ்ஞான போதக சப்த" என்பதே வேத சப்தத்திற்குச் சரியான அர்த்தம். மேதினீ கோசத்தில் "ஸ்ருதௌச வ்ரதேச" என்பதாகவும் வேதாந்த சாஸ்திரத்தில் "[illegible] வாக்யம்" என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. "[illegible]" என்பதாக பௌராணிகர்கள் சொல்கிறார்கள். ஜைனுகமத்திலேயும் மேற் சொன்னபடியே இன்னும் விசதமாக வேதத்தின் அர்த்தமும், வேதத்தின் பிராதுர் பாவமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

தீர்த்தங்கரர்கள் ஸர்வக்ஞாவஸ்தையில் சதுர்முகங்களினாலும் அனக்ஷராத்மகமாகிய திவ்ய த்வனியினால் வேதங்களை லோகத்திற்கு பிரகடனஞ் செய்கிறார்களென்றும், அந்த வேதங்களை கணதர பரமேஷ்டிக ளென்னும் மஹா ஜ்ஞான நிதிகளாகிய ரிஷிகள் இந்த லோகத்தில் அக்ஷராத்மகங்களாக விவகரிக்கிறார்களென்றும், இப்படியே குரு பரம்பரையினாலே லோகத்தில் வேதம் பிரகடனமாகிற தென்றும் ஜைனுகமத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. சுருதி வேதம், சப்த பிரம்மம் ஆகிய இவைகளெல்லாம் வேதத்தின் பரியாய சப்தங்கள். இந்த சப்தங்களெல்லாம் ஆங்காங்கே ஜைன கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதர ஆர்யர்களின் கிரந்தங்களிலும் அவர்கள் இதே சப்தங்களை உபயோகித்திருக்கிறார்கள்.

[illegible] ।
[illegible] ॥

என்பது ஸ்ரீ ஆதிபுராணம் 21 அத்தியாயம், 136 ஸ்லோகம். இதன்படி ஸ்ருதி, சூக்ருத, ஆஜ்ஞா, ஆப்தவசஃ, வேதாங்க, ஆகம, ஆம்நாய ஆகிய இந்த சப்தங்களெல்லாம் வேதத்தின் பரியாயங்களாகின்றன. மேலும்,

[illegible] ।
[illegible] ॥



என்பது ஸ்ரீ ஆதி புராணம், 39 அத்தியாயம், 22 ஸ்லோகம். இதில் ஸர்வக்ஞபிரணீதமும் பவித்ரமுமான த்வாதசாங்கங்களுள்ள ஸ்ருதமே நிஜமான வேதம்; ஹிம்ஸையை உபதேசிக்கிறது வேதமல்ல; அது எமனுடைய வாக்கியம் என்பன சொல்லப்படுகின்றன.

இவற்றை யுணர்ந்தால் ஜைனமதத்தில் வேதம் மஹா பூஜ்யமானது என்னும் விஷயத்தில் இன்னும் விவாத மிருக்குமோ? என்றும் இருக்க முடியாது. இப்படி யிருந்தும், துர்வாதமென்னும் நமைச்சலால் தாளமுடியாத சில விசித்ர பரிணாமமுள்ள ஜனங்கள், அவர்கள் வேதமென்று பெயரிட்டிருக்கும் ஏதோ ஒரு புஸ்தகத்தில் சொல்லி யிருக்கும் ஆசாரணைகளை (ஒழுக்கங்களை ஜைனர்கள் ஆசரிப்பதில்லை என்றும், அவைகளில் சொல்லி யிருக்கும் அனேக வார்த்தைகளை ஜைனர்கள் ஒப்புக்கொள்வ தில்லை யென்றும் கோபத்தினால் மெய்ம்மறந்து 'ஜைனர்கள் நாஸ்திகர்கள்' என்று அதிக தைரியத்தோடு சொல்வதற்கு முந்துகிறார்கள். இவைகளெல்லாம் பூர்வாபர விசாரமில்லாமல் சொல்லும் வார்த்தைகளாக இருக்கின்றன.

எவனாகிலும் தான் சொல்லும் வார்த்தையை மற்றொருவன் ஒப்புக்கொள்ளாமலிருந்தாலும், தன்னடத்தையைப் போல் மற்றொருவன் நடக்காமலிருந்தாலும் அவனை நாஸ்திகனென்று கூப்பிடுவதானால் பிரதி ஒவ்வொருவனும் தன் மார்க்கத்துக்கு உட்படாதவனை நாஸ்திகனென்று சொல்வதற்கு இந்த மஹாசயர்களே வழிகாட்டிகளாக ஆகிறார்களென்று ஏற்படுகிறது.

இங்குக் கூறி வந்த விஷயங்களால், ஜைனமதாவலம்பிகள், பரலோகத்தையும், புண்ய பாபங்களையும், இவைகளின் பலன்களாகிய சுகதுக்கங்களையும், பவித்ர பரமாத்மனாகிய கடவுளையும், கடவுளின் வசனரூபமான பரிசுத்த வேதங்களையும், நித்ய சுகஸ்வரூபமும், அழிவில்லாததுமான கைவல்யத்தையும் நம்புகிறவர்களென்பது தங்களெல்லோருக்கும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறதல்லவா? இதுமட்டுமல்ல. இத்தகைய நம்பிக்கை ஜைனர்களிடத்தில் மிகவும் திடமாக விருப்பதால் ஆஸ்திக மதாவலம்பிகளுக் கெல்லாம் ஜைன மதாவலம்பிகளே முதன்மை பெற்றவர்களென்று சொன்னாலும் அது அதிசயோக்திபாகமாட்டாது. 'கடவுள்' என்று சொல்லிக் கொள்வதற்கு வேண்டிய எல்லா லக்ஷணங்களும், குணங்களும், ஸர்வக்ஞ வேதத்தில் பரிபூர்ணமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியே வேதமென்று சொல்லிக் கொள்வதற்குத் தக்க குண லக்ஷணங்களை ஸ்ரீ ஆர்ஹந்திய வேதமானது பெற்றிருக்கின்றது.

ஜீவாத்மாக்கள் தங்கடங்கள் பாபங்களுக் கனுசாரமாக பரலோகங்களில் (மறு பிறப்பில்) துர்க்கதியை யடைந்து துக்கங்களை அனுபவிக்கிறார்களென்றும், புண்யங்களுக் கனுசாரமாக பரலோகத்தில் சத்கதியை யடைந்து அனேக விதமான விஷய போகங்களையும், அதிகாரம், சுந்தரவடிவம், தீர்க்காயுஷ்யம் முதலான சாம்ஸாரிக (அப்யுதய) சுகங்களை அனுபவிக்கிறார்களென்றும், அந்த பாப புண்யங்களென்னும் பந்தத்தை சம்யக்தர்சன, சம்யக்

ஞான, சம்யக்சாரித்ரங்களென்னும் பலமான ஸஸ்திரத்தினால், கத்தரித்து நித்ய சுகத்தை (அதாவது முக்தி சுகத்தை) அடைகிறார்களென்றும் ஜைன வேதங்கள் கம்பீர நாதத்தினால் கோஷித்துக்கொண் டிருக்கின்றன.

ஐயா ஸஜ்ஜனர்களே! பரலோகமென்பது (மறுபிறப்பு) இருக்கிறது; அங்ஙன மிருக்கும் பரலோகத்தை இல்லை யென்று சொல்பவனும், அப்படியே கடவுள் இருக்கிறார்; அவ்வாறு இருக்கும் கடவுளை இல்லை என்று சொல்பவனும், மேலும் பாப புண்யங்கள் இருக்கின்றன; அவைகளின் பலன்களாகிற துக்கசுகங்களை ஜன்மாந்தரத்தில் ஜீவன்கள் அனுபவிக்கிறார்களென்பதும் இருக்கிறது; அப்படி யிருந்தும் இவைகளை இல்லை என்று சொல்பவனும் நாஸ்திகன் என்பதாக ஆஸ்திக நாஸ்திக பரிசோதகர்களின் நிர்ணயமாக இருக்கிற தென்பது, இது வரையில் நான் சொல்லிக் கொண்டு வந்த வார்த்தைகளால் தங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியக்கூடு மல்லவா? இப்படி யிருக்க ஆஸ்திகத்துவத்திற்கு வேண்டிய சமஸ்த லக்ஷணங்களை ஜைனமதம் பெற்றிருந்தும், ஜைனமதம் நாஸ்திக மதமென்று யாராகிலும் இன்னும் சொல்வதானால் யுக்திபிரமாணங்களினால் சித்தமான ஜைன மதத்தின் ஆஸ்திக்யத்தை அவன் இல்லை என்று சொன்னதாக ஏற்படுகிறது இப்போது நீங்களெல்லோரும், பின்னர் இந்த உபந்யாசத்தைக் கேட்பவர்களும், காலாந்தரத்தில் இதைப் படிப்பவர்களும் உங்கள் மனதை அதிக சாவதானமாக வைத்துக்கொள்ளுங்கள்; இருப்பதை இல்லை என்று சொல்பவன் நாஸ்திகனாகிறானென்பது மேலே விவரித்தபடி உங்களெல்லோருக்கும் சம்மதமான தல்லவா? அப்படியானால் ஜைன மதத்தில் துர்ஜயமான (ஜெயிக்கமுடியாத) ஆஸ்திகத்வம் இருந்தும் இல்லை என்று பிராந்தியினால் ஒருவன் சொன்னால் அவன் இருப்பதை இல்லையென்று சொன்ன மஹா அபராதத்திற்காக அவனை நாஸ்திக சிரோமணி யென்று நீங்களெல்லோரும் கூப்பிடவே கூப்பிடுவீர்கள்.

பவ்ய பாந்தவரே! ஜைனதர்மம் நாஸ்திக தர்மமல்ல (Jainism not atheism) என்னும் விஷயத்தில் நான் பிராரம்பித்த இவ்விஷயத்தை இத்துடன் முடிக்கிறேன். இப்போது அதிக அவசியமான சில விஷயங்களைச் சொல்வதற்கு சொற்ப சமயத்தை மட்டும் எனக்குக் கொடுக்கவேண்டு மென்று அக்ராசனரவர்களையும் சபையோர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

சில ஆதுனிக (நவீன) மஹாசயர்கள் இந்தக் காலத்தில் இத்தகைய தர்ம விசார தத்வவிசார ஸதாசார உபதேச முதலானவைகள் அவசியமில்லை யென்றும், லோகோன்னதிக்கு வேண்டிய விஷயங்களே அவசியமாக விருக்கின்றன வென்றும், சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களில் ஒருவரை ஸம்போதித்துக் கீழ்சொல்லும் விதமாகச் சமாதானப் படுத்துவோமாக: மேலும் தர்மாமிருத விருஷ்டி (மழை) இல்லாமல் உலர்ந்து போயிருக்கும் அவனது ஆத்ம னென்னும் ஸ்வர்ண பூமியிலும் ஸத்தர்மத்தின் ஸேசனையால் (நினைக்கப் படுதலால்) சத்விசாரமென்னும் நூதனமான முளைகள் முளைக்கும்படி செய்வோமாக. எப்படி யெனில் ஐயா! இந்த லோகத்திலும் பரலோகத்



திலும் நீ சுகியாக இருக்கவேண்டுமானால் தர்மமே சாதனமாக விருக்கிறது; தர்ம சூன்யன் எங்குப் போனாலும் துக்க பரம்பரைகள் அவனைத் தொடரும். தர்ம ரஹிதனாகிய பாபி இந்த லோகத்தில் எவ்வித காரியத்தைச் செய்தாலும் அதில் ஜெய மடைவதில்லை. எல்லாப் பிராணிகளின் ஜீவனத்திற்கு ஸ்வாஸோச்வாசம் எப்படி மூலாதாரமாக விருக்கிறதோ அப்படியே ஜகத்திலுள்ள சகல பிராணி வர்க்கத்தின் சுக சம்பத்துக்களுக்கு தர்மமே மூலகாரணமாக விருக்கிறது. தார்மிகப் பிராணி (தர்மத்தோடு கூடிய ஜீவன்) பூர்வ ஜன்மத்தில் தனது ஆத்மனென்னும் க்ஷேத்திரத்தில் தர்மத்தின் விதையை விதைத்திருப்பதனால் அதின் பலனை அனுபவிப்பதற்கு இப்போது சம்பத் யுக்தமான வம்சத்தில் ஜனித்து ஜன்மம் தொடங்கி ஆரோக்ய முள்ளவனாகவும், திடசரீரனாகவும், ஸர்வரின் ப்ரீதிபாத்திரனாகவும், இருந்து பரோபகார முதலான சத்காரியங்களைச் செய்து ஆயுஷ்யாவஸானத்தில் சமாதான சித்த முள்ளவனாக பகவத் ஸ்மரணையுடனே இந்த ஜடதேகத்தை நீக்கி இங்கு நட்ட சத்தர்மமென்னும் விதையினின்றுண்டான ஸ்வர்க்காதி சுகங்களை அனுபவிப்பதற்கு அவனது புண்யமூர்த்தியான ஆத்மன் லோகாந்தரத்தை அடைந்தாலும் அவனது ஜடதேகம் இந்த லோகத்தில் பஸ்மீ பூதமாகக் கழிந்துபோய் விட்டாலும் அவனது ஸத்கீர்த்தி என்னும் விலக்ஷணமாகிய விசித்ரதேகம், ஸர்வாது சிரவணங்களுக்கும் மனதுக்கும் சந்தோஷப் படுத்துவதாக இந்த லோகத்தில் சிரஸ்தாயியாக விருக்கும். அதார்மீகனான (அதர்மனான) பாபியோவெனில் பூர்வ ஜன்மத்திலும் தர்ம சூன்யனாகி அல்லது பாபியாகி பாபமென்னும் பீஜத்தைத் தனது ஆத்மனென்னும் களர்பூமியில் விதைத்து அதன் பலன்களான துக்கங்களை அனுபவிப்பதற்கு இந்த லோகத்தில் துஷ்ட வம்சத்திலோ, அல்லது நீச குலத்திலோ, தரித்திர குலத்திலோ ஜனித்து ஜனனந் தொடங்கி துஷ்டனாகவும், துக்கியாகவும், குரூரனாகவும், வியசனியாகவும் ஸர்வ கண்டகனாகவும், சத்தர்ம துரோகியாகவும், விருத்தி யடைந்து அந்தியத்தில் இந்த லோகத்தை விட்டுப்போனாலும் (இறந்து போனாலும்) அபகீர்த்தி யென்னும் பயங்கரமான தேகத்தை இன்னும் லோகத்திற்குத் தொந்தரவை யுண்டாக்குவதற்கு விட்டுப் போகிறா னல்லவா?

ஆகையால் எல்லாவிடங்களிலேயும், எல்லாக் காலத்திலும், எல்லாப் பிராணிகளுக்கும் எவ்விதமான உன்னதியாகிலும் தர்மத்தை விட்டு ஆகல் முடியாது. ஆகையால் இந்தக் கலிகாலத்திலும் லோகோன்னதிக்குக் கூட தர்ம விசாரமும், தர்ம ஸேவனையும், பாபத்தியாகமும் அவசியமாக விருப்பதால் உங்களுடைய தர்ம துரோக சிந்தனையை விட்டு விடுங்கள். மேலும் தர்மத்தை விடாமல் ஆஸ்ரயத்துக் கொண்டே எல்லா லோகோன்னதியான காரியங்களையும் செய்து கொண்டிருங்கள். இவைகளே எனக்குச் சமாதானம்.

ஐயா மஹாமதிகளே! தர்மத்தின் மஹத்வ விஷயமாக ஞானிகளாகிய பெரியோர்களின் ஒன்றிரண்டு பவித்ரமான வசனங்களை ஸ்மரித்து எனது பாஷணையைப் பூர்த்தி செய்வதற்குத் தங்கள் சம்மதியைக் கேட்கிறேன்.

"[illegible: two lines of a Sanskrit verse in Grantha script]"

என்றபடி பூர்வ ஜன்மத்தில் தர்மமென்னும் விதையை நட்டு, இந்த ஜன்மத்தில் சுக சம்பத்துக்க ளென்னும் பலன்களை அடைந்திருப்பவன் இங்கும் தர்மமென்னும் விதைகெடாமல் அதை ரக்ஷித்துக்கொண்டே போகங்களை அனுபவிக்க வேண்டும். ஒரு கிருஷிகன் விதைக்கும் காலத்தில் தன் நிலத்தில் விதையை விதைத்து அறுவடை காலங்களில் பயிர்களை அறுத்து எதேஷ்டமாக தான்யத்தை ஸம்பாதித்தாலும், முதலில் மறு பசலிக்கு வேண்டிய நல்ல விதையை உலர்த்திப் பிரத்யேகமாக வைக்கிறானல்லவா?

[illegible: two lines of a Sanskrit verse in Grantha script]

என்றபடி கல்பவிருக்ஷத்தை ஆஸ்ரயித்தவர்கள், தமக்கு இன்ன பலன் வேண்டுமென்று வேண்டிக்கொண்டால்தான் அது கிடைக்கும். ஆனால் சத்தர்மமென்னும் கல்ப விருக்ஷம் அப்படி வேண்டாமலே அற்புதமான பலன்களைக் கொடுக்கிறது. சிந்தாமணியை நானுப் பிரயத்தினத்தினால் அடைந்தவர்களும் அதைக் கையில் வைத்துக்கொண்டு தமக்கு இன்ன காரியம் சித்திக்க வேண்டுமென்று சிந்தித்தால் மட்டும் அந்தக்காரியம் சித்திக்குமென்று சொல்கிறார்கள். ஆனால் ஸத்தர்மமென்னும் சிந்தாமணியானது எந்த மஹாத்மாவினிட மிருக்கிறதோ அவனுக்கு இந்த லோகத்திலேயும், பரலோகத்திலேயும் சிந்திக்காமலே அனேக அற்புதமாகிய அப்யுதய நிஸ்ரேயசென்னும் (அதாவது இகலோக சுகம் மோக்ஷசுகம் என்னும்) ஆனந்த சாகரத்தில் ஆத்மனை விளையாடச் செய்வதான மஹா பலன்கள் உண்டாகின்றன.

ஐயா காஞ்சீபுர நிவாஸிகளாகிய ஜைன பாந்தவர்களே! நீங்கள் ஸத்தர்மாபிமானிகளாகி லோகோபகாரமானதும், சர்வ பிராணிகளுக்கும் ஹிதங்கரமானதுமாகிய இந்த ஸ்ரீ ஆர்ஹந்திய தர்மத்தை பிரசாரம் செய்வதற்குச் செய்யும் பிரயத்தினங்கள் மிகவும் ஸ்தோத்திரார்க்கமானது. இத்தகைய பிரயத்தினங்கள் ஸர்வக்ஞ வீதராக ஸ்ரீமதர்ஹத் பரமேஸ்வரனது கருணா கடாக்ஷத்தினால் விருத்தி யாகட்டும்.

சில சமயங்களில் நமது பாரத வர்ஷத்தில் மத சம்பந்தமான கோர விபத்துக்கள் சம்பவித்தது தங்களெல்லோருக்கும் தெரியாத விஷயமல்ல. ஒரு ராஜன், ஒரு மதத்தை அவலம்பித்துக்கொண்டு அந்த மதஸ்தாபகனது பிரேரணையினாலோ அந்த மதாவலம்பிகளில் முக்கியஸ்தர்களின் பிரேரணையினாலோ அல்லது சுவாபிமானத்தினாலோ இதர மதாவலம்பிகளை துவேஷித்து அவர்களுக்கு நானாவித தொந்தரவுகளைக் கொடுத்துக்கொண்டிருந்தான். ஒரு சமயம் ஒரு மதாவலம்பியான ராஜன் இதர மதஸ்தர்களின் தேவாலயங்களையும் ஆயிரக்கணக்காக நிஷ்காரணமாக நாசம் செய்தும், அவர்களின் மத சாஸ்திரங்களை



துவம்ஸப்படுத்தியும், நிரபராதிகளான அந்த ஜனங்களை தன் தேசத்தினின்றும் வெளிப்படுத்தினதுமன்றி, அந்த ஜனங்களையும் கூட சமூலமாக நாசம் செய்யவேண்டுமென்று பிரயத்தினப் பட்டுமிருந்தான். இன்னும் அநேக வித அநியாய பிரவர்த்தனைகள் (சம்பவங்கள்) இந்த நமது பாரத வர்ஷத்தில் சில காலம் நடந்துகொண்டிருந்தன வென்பது நம்மெல்லோருக்கும் தெரிந்திருக்கிறதல்லவா? நமது பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் குடையின் கீழ் விச்ரமித்துக்கொண்டிருக்கும் நமக்கு மேற்சொன்ன அநியாயங்கள் எப்போதும் சம்பவிக்காது. நாமெல்லோரும் நம்முடைய தர்மங்களை நிர்ப்பயமாகக் கைக்கொண்டிருக்கலாம். நம்மிஷ்டம் போல் நமது தர்மங்களை உன்னதத்திற்குக் கொண்டுவரலாம். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மென்னும் வஜ்ர பஞ்சரத்தில் (கூண்டில்) வைக்கப்பட்டிருக்கிற பாரதேயராகிய நமக்கு மதத்வேஷ மூலமாக உண்டாகும் மஹாதனர்த்தங்கள் கெடுதியை உண்டுபண்ணா. பவ்ய சகோதரர்களே! சகல தர்மாவலம்பிகளையும் சமதிருஷ்டியினால் பரிபாலிக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு க்ஷேமம் உண்டாக வேண்டுமென்று நாமெல்லோரும் ஏக மனதினால் பகவந்தனை பிரார்த்திப்போமாக. — இதன் மூலமாக நம்முடைய ஆங்கிலேய சார்வ பௌமருக்கும் அவர்களது வம்சத்திற்கும் சர்வாப்யுதயங்கள் உண்டாகட்டும்; அவரது பிரஜைகளிடத்தில் சாந்தியும், பரஸ்பர பிரேமமும், ராஜபக்தியும், தயாமய தர்மமும் நிலைக்கொள்ளட்டும்.

ஓம் சாந்தி:

---

காஞ்சிமா நகரின்கண் கூடிய ஜைன மஹா சபையில் மைசூர் ஸ்வஸ்தி ஸ்ரீ நேமிசாகரவர்ணி சுவாமியாரவர்கள் இரண்டாம் நாள் (3-10-20-ல்) செய்த உபன்னியாசத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு:—

## சிருஷ்டி வாதம்.

---

கனவான்களே!

இன்று நான் ஸ்ருஷ்டிவாதமென்ற விஷயத்தைக் குறித்துத் தங்களபேக்ஷையின்படி எனது உபந்நியாசத்தை ஆரம்பிக்கிறேன். ப்ரதமத்தில் ஆஸ்திகராகிய தங்கள் பெரியோர்களின் பத்ததியின்படியே ஸர்வ சம்மதமான ஸ்ரீ பகவானது பரிசுத்தமான குணங்களை ஸ்துதிக்கிறேன்.

"[illegible: Sanskrit verse in Grantha script, two and a half lines]॥

இதன் பொருளாவது:—"எந்த பரமாத்மனது உத்கிருஷ்டமும் ஞானமயமுமான தேஜோ ராசியில், சமஸ்த ஜெகத்திலுள்ள சராசர வஸ்துக்களும், அவைகளின் மூன்றுகால (இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம்) சம்பந்த

மாகிய பர்யாயங்களுடனே (மாறுதல்களுடனே) ஸ்வச்சமான கண்ணாடியில் அதற்கெதிர்ப்பட்ட வஸ்துக்கள் காணப்படுவதைப்போல் ப்ரதிபலிக்குமோ அந்த பரமாத்மனது ஞானஜ்ஜோதியானது சர்வோத்கிருஷ்டமாக விளங்கட்டும்; அதாவது: பரமாத்மனது பரிசுத்த ஞான ஜோதியானது ஸதா காலமும் ஒரே விதமாகப் பிரகாசித்துக்கொண் டிருக்கட்டும்'' என்பதாம்.

இவ்விடத்தில் பரமாத்மனை ஸ்தோத்ரம் செய்வதைவிட்டு, பரமாத்மனது ஞானஜ்ஜோதி ரூபமான குணத்தைமட்டும் ஸ்துதிப்பதற்குக் காரண மென்னென்று சிலர் யோசிக்கலாம். எந்த குணமும் திரவியங்களை (வஸ்துக்களை) விட்டுத் தனியாக இருப்பதில்லை; மேலும் குணங்களின் உத்கிருஷ்டத்தினால் தான் திரவ்யங்கள் உத்கிருஷ்டமென்று மதிக்கப்படும். ஆதலால் இப்போது பரமாத்மனது பரமோத்கிருஷ்டமான ஞான குணத்தை இங்கு ஸ்துதித்ததால் அந்த உத்கிருஷ்ட ஞானகுணத்தை யுடைய ஆத்ம வஸ்துவானது உத்கிருஷ்டமானதென்று சித்தமாகிறது; இது பற்றியே இவ்வாறு துதி கூறப்பட்டது.

மேலும் பரிசுத்த பரமாத்மனிடத்திலுங்கூட அனந்த குணங்களும் அபாரசக்தியுமிருப்பதாக ஞானிகள் சொல்லுகிறார்கள்; ஆனால் சாமான்யமாக ஆத்ம சாமான்ய லக்ஷணம் ஞானமாக விருப்பதினாலும், அந்த ஞானம் பரிபூர்ணமாக பரமாத்மாவினிடத்தில் மாத்திரமே இருப்பதாலும் அந்த ஞான குணமே இங்கு ஸ்துதிக்கப்பட்டிருக்கிறது. இங்கு இதைப்பற்றி தத்வ வேதிகள் (தத்வங்களை அறிந்தவர்கள்) நன்றாகக் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயமுமுண்டு. அஃதென்ன வென்றால்:—

பரிபூர்ண ஞானமும் பரிபூர்ண சுகமுமாகிய இரண்டு குணங்கள் முக்கியமாக விருக்கின்றன. ஆகவே பரிபூர்ண ஞானம் எந்த பரமாத்மனிடத்திலிருக்கிறதோ அந்த பரமாத்மன் பரிபூர்ண சுக முள்ளவனாகவு மிருக்கிறான். ஆகையால்தான் பரமாத்மனை "ஸச்சிதானந்த" மூர்த்தி என்று ஸ்துதிக்கும் வழக்கம் நம்மிடத்திலிருக்கிறது.

இனி நான் எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறேன். இன்று நான் சொல்லவேண்டிய ஸ்ருஷ்டிவாதம் (The creation theory) என்னும் விஷயம் மிகவும் பெரிதானதென்று நினைக்கிறேன்; ஆகிலும் அடர்ந்த காட்டில் மதம் பிடித்த யானைகள் ஸஞ்சரித்துச் சரிப்படுத்தின வழிகளில் குட்டியானைகள் கஷ்டமில்லாமல் ஓடி ஆடுவதைப்போல் பரம குருவின் ப்ரசாதத்தால் பெரியோர் காட்டிய மார்க்கத்திற் புகுந்து இவ்வளவு மஹத்தான விஷயத்தை நான் தெரிந்த வரையில் தங்கள் முன் சொல்வதற்குத் தைரிய மடைகிறேன்.

மஹானுபாவர்களே!

ஒரு ஜட்ஜானவர் (நியாயாதிபதி) தாம் விசாரிக்கத்தொடங்கும் கேஸின் (வழக்கின்) உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமானாலும், சத்தியத்திற்குச் சரியாகத் தீர்ப்புச் செய்யவேண்டுமானாலும் அவர் பக்ஷபாத மில்லாதவராக இருக்க வேண்டும். பாருங்கள்!



ஒரு ஜட்ஜிக்கு முன் இராமனென்ற வாதி கோவிந்தனென்ற பிரதிவாதியின் மேல் ஒரு கேஸைக் கொண்டுவந்தானென்று வைத்துக்கொள்வோம். இந்த வாதி ஜட்ஜுக்கு ஏதோ ஒரு காரணத்தினால் ப்ரீதி பாத்ரனாக (அன்பிற் குரியவனாக) விருக்கிறான்; ஜட்ஜியினிடத்தில் பிரதிவாதி தனக்கு ஸாதகமாகிய உண்மையான சாதனங்களை எவ்வளவு ஆஜர் படுத்தியும் ஜட்ஜியின் மனது வாதியின் நன்மைக்குச் சார்பாக விருப்பதால் பிரதிவாதியின் ஸாதனங்கள் அவனுக்கு விருத்தமாகவே தோன்றும். அப்படியே பிரதிவாதி பக்கத்து சாக்ஷிகள் ஸத்யமான வசனங்களைச் சொன்னாலும் இந்த பக்ஷ பாதமென்னும் அந்தகாரத்தினால் மறைக்கப்பட்ட ஜட்ஜி ஸத்யத்தைக்கண்டு பிடிப்பானோ? அதுமட்டு மல்ல. உண்மையைச் சொல்லும் பிரதிவாதி சாக்ஷிகளின் மேல் இந்த ஜட்ஜி அதிகமாகக் கோபித்துக் கொள்ளவும் கூடும். அப்படியே தனது பக்ஷபாத மென்னும் துரபிப்பிராயத்திற்கு எதிராக நியாயமாக வ்யவகரிக்கும் வக்கீல்கள் பேரிலும் இந்த ஜட்ஜி ஒவ்வொரு ஸமயங்களில் கோபித்துக் கொள்வது முண்டு.

இதே அவஸ்தை, ஸத்யதத்வங்களை விசாரித்து நிச்சயிக்க வேண்டு மெனமுற்படும் மனிதர்களையும் ஆக்ரமிக்கிறது. எப்படி யெனில், ஒரு மனிதன், தான் ஏதோ ஒரு மத மென்பதைக் கைக்கொண்டு அதற் கனுகுணமாக ஒரு பெயரை வைத்துக்கொண் டிருக்கலாம். இப்போது அந்த மனிதனை அந்த மதத்தினிடத்தில் அல்லது தான் வைத்துக்கொண்ட பெயரினிடத்தில் பக்ஷபாதம் ஆகர்ஷித்துக்கொண்டிருக்கலாம். அல்லது தான், யாராகிலும் ஒருவரை குருவாக வைத்துக்கொண்டு அவர் சொன்ன வார்த்தைகளையும் போதித்த போதனைகளையும், உண்மையானவைகளா அல்லவா வென்று ஆராயாமல் கேவலம் "அந்த குரு தன்னவன்" என்ற பக்ஷபாதத்தினால் குறுகிய விசார முள்ளவனாகி தன் ஸத்ய விசாரத்தை, யதார்த்த ஸ்திதியைக் கண்டு பிடிப்பவர்களின் முன் வ்யவகரிக்காமல் தன் ஆத்மனது அபார சக்தியை மலினஞ் செய்துகொண்டு ஆத்ம வஞ்சனையைச் செய்து கொள்ளுகிறான். இந்த லோகத்தில் இதர வியாபாரங்களிலுங்கூட கேவலம் ஸத்விசாரமின்றி துஷ்பக்ஷபாதமென்னும் பாசத்தினால் கட்டப்பட்டவர்கள் பசுக்களைப்போல் பரவசராகி அனர்த்த பரம்பரைகளுக்கு இலக்காய்க் கொண்டிருக்கிறார்கள். விசார சூன்யமான பக்ஷபாதங்களினால் மிகவும் ஹானியுண்டாகு மென்பதற்கு இவ்வளவு வார்த்தைகள் போதுமென்று நினைக்கிறேன்.

மஹாசயர்களே!

முன் சொன்ன பிரகாரம் ஸத்புருஷர்களாகிய நீங்கள் இப்போது நான் சொல்லப்போகும் வார்த்தைகளில் ஸத்யாம்சங்களெவை என்பதைப் பரிசோதித்துக் கண்டு பிடிக்கவேண்டுமானால் உங்களில் ஒவ்வொருவரும் உங்களுங்கள் ஆத்மன்களை ஸத்ய பரிசோதனை செய்யும் ஜட்ஜுகளாக

பாவித்துக்கொண்டு தங்கள் தங்கள் ஆஸனங்களை நியாயாஸனங்களாக அலங் கரியுங்கள்.

இந்த உலகத்தையும் இதிலிருக்கும் ஸமஸ்த வஸ்துக்களையும் யாரோ ஒருவர் வேண்டும் போது உண்டு பண்ணியும் நினைத்த போது அழித்தும் விடுகிறார் என்று சொல்லும் மதத்திற்கு சிருஷ்டி வாத மென்று பெயர். இந்தவிஷயம் மிகவும் கம்பீரமான தென்று நான் முன்பே சொல்லி-யிருக்கிறேன். அது மட்டுமல்ல; இது மிகவும் விசாரிக்கத் தக்க தாகவும் அநேக வாதகங்களினால் ஆக்ராந்த மானதுமாக விருக்கிறது.

இந்த உலகத்தில் இப்போது சிலர் மேற் சொன்னபடி ஸ்ருஷ்டி வாதத்தை ஸ்வீகரிக்கிறார்கள். இன்னும் சில மதஸ்தர்கள் இந்த சிருஷ்டி வாதத்தை அங்கீ கரிப்பதில்லை. சிருஷ்டி வாதிகளிலுங் கூட எல்லோரும் ஒரே விதமான சிருஷ்டிக் கிரமத்தைச் சொல்வதில்லை; ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்லுகிறார்கள். அவர்களில் சிலர் பரமாத்மனாகிய கடவுளொருவனே தனது இச்சாமாத்ரத்தினால் (சரீர ஹஸ்த பாதாத்தியவயவங்களில்லாமலே) சகல ஜெகத்தையும் உண்டு பண்ணுகிறா னென்றும், அப்படியே தான் இச்சித்த போது சகலத்தையும் நாசஞ் செய்கிறா னென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இன்னுஞ் சிலர் அந்தக் கடவுள் சிருஷ்டி நிர்மாண காலத்தில் தனக்கு வேண்டியபடி சரீரங்களையுங் கூட உண்டு பண்ணிக் கொள்கிறானென்றும் சொல்லுகிறார்கள். மேலுஞ் சிலர் அந்த சிருஷ்டிகர்த்தனாகிய கடவுளுக்கு ஒரு விதமான சரீரம் எப்போது மிருக்கிற தென்றும் சொல்லுகிறார்கள். சில மதஸ்தர்கள், ஆகாசம், காலம், ஆத்மன், பரமாணு, இவை முதலானவைகள் எப்போதும் நிரந்தரமானவைகளென்றும், அவைகளைக் கடவுள் உண்டு பண்ணுவதில்லை என்றும் சொல்லுகிறார்கள். மற்றுஞ் சிலர் மேற் சொன்னவைகளையுங் கூட கடவுளே சிருஷ்டிக்கிறா ரென்று சொல்லுகிறார்கள். மொத்தத்தில் இந்த சிருஷ்டிவாத மென்பது நிஜமாகவே மஹா கலபையை (கலக்கத்தை) உண்டு பண்ணுவதாகவே இருக்கிறது. ஏதேனு மொரு விஷயத்தைநிச்சயிப்பதற்கு பிரமாணங்கள் வேண்டியதாயிருக்கின்றன. இந்தப் பிரமாணங்களில் பிரத்தியக்ஷ பிரமாணம், ஆகம பிரமாணம், அனுமானப்பிரமாணம்என்ற மூன்று பிரமாணங்களை பிரகிருதத்தில் இதற்கு நாம் எடுத்துக் கொள்வோம்.

பிரத்தியக்ஷ பிரமாணத்தினால் கடவுளே எல்லாவற்றையும் உண்டு பண்ணுகிறா னென்றாவது சம்ஹரிக்கிறா னென்றாவது நாம் சொல்வதற்கு முடியாதல்லவா? ஏனெனில் நமது எந்த இந்திரியத்தினாலும் இதைத் தெரிந்து கொள்வதற்கு சாத்திய மில்லை.

இனி, ஆகமப்பிரமாண மென்றால் சுருதி ஸ்மிருதி முதலான லிகிதப்பிரமாணங்களாம். இவைகளை நாம் எடுத்துக் கொண்டால் சிலரது சுருதிஸ்மிருதிகளிலும், மேலும் சிலர் பிரமாணமாக அங்கீகரித்திருக்கும் அவரது மதசாஸ்திரங்களிலும் கடவுள் சிருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்கின்றானென்றும், மற்றுஞ் சிலரது சுருதி ஸ்மிருதி முதலான மத கிரந்தங்களில் கடவுள் அப்படிச்



செய்வதில்லை என்றும் சொல்வதினால் ஆகமப் பிரமாணம் இந்த விஷயத்தில் விவாதத்தைப் பரிகரிப்பதற்கு (போக்கடிக்க) சமர்த்த முடையதாக மாட்டாது. ஆகவே இப்போது அனுமான பிரமாணம் ஒன்றுதான் இந்த விஷயத்தில் சாதகமாக நிற்கிறது.

அநுமாந (யுக்தி) ப்ரமாணம்.

அனுமான பிரமாணத்தை விவகரிக்கும் போது தாங்களெல்லோரும்சாவதான சித்தத்துட னிருக்க வேண்டுமென நான் விஞ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

அனுமானப் பிரகாரம் (கடவுளே எல்லாவற்றையும்சிருஷ்டிக்கிறாரென்று சாதிக்கும் கிரமத்திற்கு)"க்ஷித்யங்குராதிகம் ஸகர்த்ருகம் கார்யத்வாத் கடவத்" என்பது சிலரது சாதனையாக விருக்கிறது. இதன்படி பூமி, விருக்ஷம் முதலானவைகள் குடம் முதலானவைகளைப் போல கார்யங்களாக விருப்பதால் யாராகிலு மொரு கர்த்தாவினால் உண்டாக வேண்டும்; இத்தகைய கார்யங்களுக்கு நம்போன்ற ஜீவாத்மன்கள் கர்த்தாவாக விருக்க முடியாது; ஆகையால் அவைகளுக் கெல்லாம் யாராகிலு மொரு கர்த்தா இருக்க வேண்டும்; அந்தக் கர்த்தாவே கடவுள் என்று சிலர் சொல்லுகிறார்கள். இவ்விடத்தில் "ஹேதுஸ்ஸாத்ய ஸாதக:" என்றபடி மேற் சொன்ன அனுமானத்தில் பிரயோகித்த "கார்யத்வாத்" என்ற ஹேதுவானது இருக்கட்டும்; ஆகிலும் "ஸகர்த்ருகம்" என்றபடி பூமி முதலானவைகளுக்கு யாராகிலு மொரு கர்த்தா இருக்கிறாரென்ற சாத்பம் இருக்க வேண்டு மென்பது அவசியமில்லை என்ற அப்பிர யோசன சங்கையைச்சிலர் செய்கிறார்கள். அப்போது சிருஷ்டி வாதிகள், "கார்யத்வாத்" என்ற ஹேது விருந்தும் "ஸகர்த்ருகத்வ" மென்ற சாத்திய மில்லாமற் போனால் கார்ய மாத்திரத்துக்கு கர்த்தா காரண மென்ற கார்ய காரண நியமத்துக்குபங்கம் வருவதால் "கார்யகாரண ஸம்பந்தஸம்ப" மென்ற அனுகூல தர்க்க மிருப்பதால் மேற் சொன்னபடி ஹேது விருந்தும் சாத்திய மிருக்க வேண்டிய அவசிய மில்லை என்ற அப்பிரயோஜன சங்கையைச்செய்யக்கூடாதென்று சொல்லுகிறார்கள். மேலும் சிருஷ்டி வாதத்தை நிராகரிப்பவர்கள், கார்ய மாத்திரத்து கர்த்தா வேண்டியதில்லை; வித்யுதாதிகள் (மின்னல் முதலானவைகள்) கார்யரூபமாகக்காணப்பட்டாலும் அவைகளுக்கு ஒரு கர்த்தா காணப்படுவதில்லையாகையால் எல்லாக் கார்யங்களுக்கும் கர்த்தா ஒருவர் இருக்கவே வேண்டு மென்பதற்கு ஆதார மில்லாமலிருக்கிறபடியால் மேலே கர்த்ருவாதி சொல்லி இருப்பதைப்போல் "கார்யகாரண ஸம்பந்தஸம்ப" ரூபமாகிய அனுகூல தர்க்க மில்லாமலிருப்பதால் கார்யரூபமாகிய ஜெகத்துக் கெல்லாம் கடவுள் கர்த்தாவென்று சொல்வது அனுமானப் பிரமாணத்தினாலும் சரியல்லவென்று சொல்லுகிறார்கள்.

மேலும் இப்போது நாம் திருஷ்டாந்தமாக இந்த டேபிளை எடுத்துக்கொண்டு இதைச் செய்தது யாரென்று ஒருவனைக் கேட்டால் "அதைச் செய்தவன்

தச்சன்" என்றே நமக்குப் பிரதி உத்தரம் கிடைக்கும். இந்த மிருதங்கத்தைச் செய்தவன் யாரென்று கேட்டால் அதைச் செய்தவன் அந்த வேலைக்காரனென்றே பதில் கிடைக்கும். இந்த நாடகக் கொட்டகையை யார் கட்டினது என்று கேட்டால் அதைப் பல பேர்கூடிக் கட்டினார்க ளென்பதே சரியான பதிலல்லவா? இந்தப்பிரகாரமே அநேகமான வஸ்துக்கள் மனிதர்களாலே சிருஷ்டிக்கப்பட்டவைகளாக நமக்குத் தென்படுகின்றன. பட்டு முதலானவைகள் இதர ஜந்துக்களால் நிர்மிக்கப்பட்டவைக ளாகவே நம்மெல்லோருக்கும் தெரிந்திருக்கின்றன.

இப்போது இந்தக் காரியங்களுக்குக் கடவுள் கர்த்தாவாகிறானென்று விசாரித்தால் அவைகளுக்கு இதர ஜீவாத்மன்களே கர்த்தாக்களாக பிரத்தியக்ஷத்தில் காணும் போது கடவுள் கர்த்தாவென்று சொல்லுவது அனாவசியமென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். இவர்க ளபிப்பிராயப் படியே பார்த்தால் எந்தப் பிராணியும் உண்டு பண்ணாம லிருக்கும் சில வஸ்துக்களுக்கே மட்டும் கடவுள் கர்த்தாவென்று சித்தமாகிறது.

இன்னும் சிலர் இப்போது மேலே சொன்ன காரியங்களுக்குங் கூட கடவுள் கர்த்தா வென்றும் இதர பிராணிகளால் செய்ய முடியாத காரியங்களுக்கும் கடவுளே கர்த்தாவென்றும் இதர மனிதர் முதலான பிராணிகளால் செய்யப்படும் காரியங்களுக்கு இந்தப் பிராணிகளும் கடவுளுமாகிய உபயஸ்தர்களும் கர்த்தாக்களென்றும் வேறு பிராணிகளால் செய்ய முடியாமல் கேவலம் கடவுளால் செய்யப்படும் காரியங்களுக்குக் கடவுளொருவரே கர்த்தா வென்றும் சொல்லுகிறார்கள். இதனால் லோகத்தி லுள்ள எல்லாக் காரியங்களுக்கும் கடவு ளொருவர் சாமான்ய கர்த்தா வென்றும் வெவ்வேறு மனிதர் முதலான ஜீவாத்மாக்களால் செய்யப்படும் வெவ்வேறு காரியங்களுக்கு அந்தந்த ஜீவாத்மன்கள் விசேஷ கர்த்தாக்க ளென்றும் சொல்லுவதாக ஏற்படுகிறது. கவனியுங்கள்!

ஐயா! ஸத்ய விசாரணை செய்வதற்கு ஜட்ஜுகளாக வீற்றிருக்கும் மஹாசயர்களே! லோகத்தில் ஏதேனுமொரு காரியத்தைச் செய்யும் பிரதியொரு மனிதனும் ஒவ்வொரு பிரயோசனத்தை அடையும் நிமித்தமாகவே அந்தக் காரியத்தைச் செய்கிறானென்பது சகலருக்கும் தெரிந்த விஷயமாகவிருக்கிறது. அப்படியே ஒவ்வொரு ஜந்துக்களுங் கூட ஒவ்வொரு பிரயோசனத்தின் இச்சையினாலேயே ஏதேனுமொரு காரியத்தைச் செய்கின்றன. ஒரு எறும்பும் ஒரு பிரயோசனத்தை அடையும் உத்தேச மில்லாமல் ஒரு இடத்தை விட்டுச் செல்லாது "நிஷ்ப்ரயோஜநம் மந்தோபினப்ரவர்த்ததே" அதாவது: ஏதேனுமொரு பலாபேக்ஷை யில்லாமல் ஒரு மூடனுங் கூட எந்தக் காரியத்தையும் செய்யமாட்டான் என்ற பழமொழியைப்போல் பலனை அபேக்ஷிக்காமல் எந்த மனிதனாகிலும் அல்லது இதர பிராணியாகிலும் எந்தக்காரியத்தையும் செய்வதில்லை என்பதை விசாரபுத்தி யுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளவே வேண்டும். கடவுள் எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறா னென்று சொல்லுபவர்கள் "எந்தப் பலனை அபேக்ஷித்துக் கடவுள் ஒன்றைச் சிருஷ்டிக்கிறார்" என்ற கேள்விக்குப் பதில் சொல்வதற்குச் சித்தமாக விருக்க வேண்டும்.

(இன்னும் வரும்)

ஓம்.
ஸ்ரீ ஜிநாய நம:

# தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)

| புத்தகம் | இரௌத்திரி௵ மார்கழி௴ | சஞ்சிகை |
|---|---|---|
| 3 | 1920௵ டிசம்பர்௴ | 9 |

## தருமோபதேசம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சூதுகொலை பொய்களவு பிறரில் லத்தில்
  துடுக்குடனே தீங்குசெய்தல் இவற்றை யெல்லாம்
ஆதாவாத் தினஞ்செய்தும் வெளித்தோற் றாமல்
  அடக்கிவைத்துச் சாதுவைப்போல் நடித்துத் திண்ணை
மீதிருந்து கபடஞா னங்கள் பேசும்
  மிகுமோசத் திருடர்களை வீட்டில் சேர்த்தால்
தீதுடனே வந்துவிடும் பெண்மட் செல்லாம்
  தீராத வசைமிருந்து சேருந் தானே. (௫௮)

அடக்கமா யுள்ளிருக்கும் பெண்க டம்மை
  அனுதினமும் வெளியேற்றக் கருத்துக் கொண்டு
மடத்தனமா மிச்சிலிலை வீட்டின் பக்கம்
  மறையப்போ டாதுதெருக் கடந்து போயோர்
இடத்தினிற்போ டுங்களென வதிகா ரங்கள்
  இடம்பமுடன் செய்துதம்பா லிருக்குங் குற்றம்
விடத்தகுந்தோ ரிடப்புத்தி கற்றி டாத
  வீணர்களின் முகத்திலென்றும் விழிக்கொ ணாதே. ()

உலகவியல் தனிற்சிறிது முணர்ந்தி டாமல்
  உள்ளத்தில் தீச்செயல்கள் பலவுங் கொண்டு
கலகமிகத் தினந்தோறுஞ் செய்து விட்டுக்
  களங்கமற்ற மனத்தார்போற் பேசித் தங்கள்
பலபாவச் செய்கைகளை நலங்க ளென்றே
  பகர்வதொடு நல்லோரை யும்ப ழித்துச்
சிலமூடர் தமைக்கூட்ட மிட்டுக் கொண்டு
  திரிபவரே மூடருக்குத் திலக மாவார். (௯0)

# தருமசீலன்.

இரௌத்திரி௵ மார்கழி௴.

## மனத்திலுள்ளது வாயில்.

இந்த திவ்ய வாக்கியமானது, பண்டைக்காலந்தொட்டுப் பெரியோர்களால் வழங்கப்பட்டுவரும் ஒரு பழமொழி. இதன் கருத்தாவது:—ஒருவருக்கு மனத்திலுள்ள எண்ணத்தை அநுசரித்துத்தான் வாயிலும் வார்த்தைகள் உண்டாகும் என்பதாம். இது மனிதர் ஒவ்வொருவரிடத்திலும் அமைந்திருக்கும் இரகசியகுணம். எல்லாவற்றையும் வெறுத்துக் கைவிட்டு பகவானிடத்தில் ஒரே மனதாய்ப் புத்தியைச் செலுத்தி யோகங் கூடியிருக்கும் மகான்கள் தவிர மற்றைய உலகினருள் இக்குணம் அமையாதார் ஒருவருமிரரென்றே உறுதியாகக் கூறலாம். ஒவ்வொரு மனிதருடைய வாய்ப்பேச்சைக் கொண்டே அவரவர்களுடைய உள்ளக் கருத்தினை, அறிவுடையார் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். இவ்வுணர்ச்சியில்லாதார் ஞானசக்தியாகிய ஒரு பெரும்பாக்கியத்தை இழந்தவராவார். இவர் இவ்வுணர்ச்சியில்லாமையால், நன்றைத் தீதாகவும், தீதை நன்றாகவும் கருதிப் பல மோசக் காரர்களாலும் ஏமாற்றப்பட்டு இவ்வுலக சௌக்கியத்தை யிழந்து வருந்துவர். ஆதலின் இத்தகையினர், மேற்கூறிய இரகசியத்தை உணர்ந்து, மனிதர்களில் நல்லோரையும் கெட்டோரையும் பகுத்தறிந்து அவரவர்க்குத் தக்கவாறு நடந்து உலகத்தில் கவலையற்ற வாழ்வை யடையுமாறு மனிதரின் வாய்ப் பேச்சால் மனத்திலுள்ளதை உணரும் விதத்தை ஒருவாறு இங்குச் சுருக்கமாக வரைவாம்:

போசனப்பிரியனா யிருக்கு மொருவன், பேசும்போதெல்லாம் இடையிடையே சாப்பாட்டு விஷயத்தை இழுத்துப் போட்டுக்கொ



ண்டு "ஜம்புலிங்க முதலியார் வீட்டுக் கலியாணத்தில் நடந்த சாப்பாடே சாப்பாடு; மாசிலாமணிப்பிள்ளை வீட்டு சீமந்தத்தில் போட்ட சர்க்கரைப் பொங்கலே சர்க்கரைப் பொங்கல்; மோர்க்குழம்பு அவர்கள் வீட்டிலுள்ளது போல் எங்குமிராது" என்று பேசுவான். இதனால் இவனைச் சாப்பாட்டுப் பேர்வழி யென்று தெரிந்துகொள்ளவேண்டும். பக்ஷணப்பிரியனா யிருப்பவன், எந்தப் பேச்சைப் பேசினாலும் ஊடே பலகார வர்க்கங்களையும் இழுத்துப் போட்டுக் கொண்டு, "சாப்பிட்டால் ஸ்ரீ வில்லிபுத்தூர்க் கோவில் வடை சாப்பிடவேண்டும்; மதுரையில் தானையா சர்க்கரைப் பொங்கல்; அழகர் கோவில் தோசையே தோசை" என்று பேசுவான்; இதனால் இவனைப் பலகாரப் பிரியன் என்று தெரிந்துகொள்ள வேண்டும். பாலில் பிரியமுள்ளவன் 'மனிதருக்குப் பாலைப்போல் சிறந்த வஸ்து வேறொன்று மில்லை ஐயா' என்று சொல்லுவான்; மூக்குத்தூளில் பிரியமுள்ளவன், "மூக்குத் தூளைப்போல மனிதனுக்குச் சுறுசுறுப்பையும் புத்தித் தெளிவையும் கொடுக்கக் கூடியது வேறொன்றுமில்லை; அதைச் சிலர் கெடுதியுள்ளதென்று சொன்ன போதிலும் அதில் அநேகம் நன்மைகளு மிருக்கின்றன" என்று கூறுவான். சுருட்டுப் பிடிப்பதில் பிரியமுள்ள ஒருவன், "சுருட்டு வாயுவைக் கண்டிக்கிறது; உடம்பில் தொற்று வியாதிகளைப் பரவவிட மாட்டாது" என்று கூறுவான். புகையிலை போடுவதில் விருப்ப முள்ளவன், "ஐயா! புகையிலை கபத்தைக் கண்டிக்கிறது; சிரசிலுள்ள துர்நீர்களைப் போக்கி விடுகிறது; மலபந்தத்தைப் போக்கி விடுகிறது" என்று அதைச் சிலாகித்துப் பேசுவான். தினந்தோறும் தேகத்தைப் பரிசுத்தமாக வைப்பதில் விருப்பமுள்ளவன், "குளிக்காமல் சாப்பிடுவது தோஷம்; 'கந்தை யாயினும் கசக்கிக்கட்டு' என்றபடி ஆடைகளைத் தோய்த்துக் கட்டாவிட்டால் தரித்திரம் அகலாது" என்றுரைப்பான். குளிப்பதில் சோம்பலுள்ளவன் 'ஐயா மனதைச் சுத்தப்படுத்தவேண்டும்; உடம்பைத் தேய்த்துக் குளித்துத் துணிகளைத் தோய்த்து வெளிச் சுத்தம் செய்வதால் ஒரு பயனுமில்லை' என்று கூறுவான். விரதாநுஷ்டானங்களில் பிரியமுடையவன், "விரதங்களை அநுஷ்டிக்காத மனிதர் ஜென்மம் வீணன்றே; விரதமே மனிதனை நற்கதியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும்" என்று சொல்வான். விரதங் காப்பதில் சோம்பலுள்ளவன், "விரதத்தால் ஒன்றும் பலனில்லை; மனதை ஒருவழிப் படுத்தி பகவானிடத்திற் செலுத்தினாற் போதும்; மனத்தில் கெட்ட எண்ணங்களை

நீக்கினால் போதும்; மனத்தூய்மை யில்லாமல் விரத மிருப்பதால் நோயே உண்டாகும்; கோவிலுக்குப் போய்த் தான சுவாமியைக் கும்பிடவேண்டும்; சுவாமி நம் மனத்திலேயே இருக்கிறார்; அவரை இருந்த விடத்திலிருந்தே தியானிக்கலாம்." என்று கூறுவான்; நாஸ்திக சித்தத்தை யுடையவன், "தெய்வத்தை நேரில் கண்டவாரார்; நாம் உண்பதும் உறங்குவதும் சுகத்தை யடைவதும் தான் கண்ட பலன்" என்று கூறுவான். ஆஸ்திக எண்ணமுடையவன், "தெய்வ அருளின்றி ஒன்றும் நடவாது; கடவுள் சிந்தனையில்லாதவன் கடைத்தேற மாட்டான்" என்றுரைப்பான். பொது நன்மையைக் கருதாமல் தங்கள் பெருமையையும் சௌக்கியத்தையுமே கருதும் ஜனத் தலைவர்கள், தமக்கடங்கிய ஜனங்களை நோக்கி, "நீங்கள் உங்கள் இஷ்டம்போல் அது நன்மை இது நன்மையென்று வீண் காரியங்களிற் பிரவேசித்து வீண் கூட்டம் கூடிப் பேசாதீர்கள்; நமக்கே எல்லாச் சிறப்பையுஞ் செய்யுங்கள்; நம்முடைய காரியத்திற்கே பணத்தைச் செல விடுங்கள்; படிப்பு விருத்திக் கென்றும், தர்மாபி விருத்திக் கென்றும், மதாபி விருத்திக் கென்றும் வகை தெரியாமல் நீங்கள் பணத்தைச் செல விடுவதாற் பயனில்லை" என்று கூறுவார்கள்; கஞ்சாத்தின்னும் ஒருவன், "கஞ்சாவைப் போல் மனதை ஒரு நிலைப் படுத்தும் வஸ்து வேறொன்று மில்லை" என்று கூறுவான். கட் குடியனொருவன், "ஐயா! உடம்பு வலிக்கு வேறொரு மருந்தும் வேண்டிய தில்லை; கொஞ்சம் மதுவை உபயோகப் படுத்தி விட்டால் தேகத்திலுள்ள உளைச்சல் பறந்தோடிப் போகும்" என்று சொல்வான். வேலையில் சோம்பேறியாயிருக்கு மொருவன், "ஐயா! நாம் நாளெல்லாம் கஷ்டப் பட்டுத் தலையில் வாரிக் கட்டிக் கொண்டு போவதென்ன? 'இன்றைக்குச் செத்தால் நாளைக்கு இரண்டு' ஏதோ இருப்பதைச் சாப்பிட்டு விட்டுப் படுத்து எழுந்திருப்பது சுகம்" என்றுரைப்பான். சுறு சுறுப்புள்ளவன், "நாம் சும்மா விருக்கலாகாது; பெரியோர் தேடி வைத்த சொத்து நமக்கிருந்தாலும் நாம் சாப்பிட்டது ஜீரணிக்க வாவது வேலை செய்ய வேண்டும்" என்று கூறுவான். இலக்கணம் படிக்காத ஒருவன், "இலக்கணத்தால் ஒன்றும் பயனில்லை; ஆத்லாபமான நூல்களைக் கற்க வேண்டும்" என்பான். இலக்கண விருப்புடையவன், "எந்த நூலைக் கற்றாலும் இலக்கணத்துடன் கற்க வேண்டும்; இலக்கண வுணர்ச்சியில்லாவிடில் நூற் பொருள்களை உள்ளபடி உணர்தல் முடியாது" என்று கூறுவான். பாட்டுப் பாடத் தெரியாதவன் 'பாட்



டாற் பயனில்லை' என்பான். பேசத் தெரியாதவன், 'பேசுவதாற் பயனில்லை; பாட்டெழுத வேண்டும்; நடை எழுத வேண்டும்; இவற்றால் தான் கல்விச் சாமர்த்தியம் தெரியும்" என்பான். திருடன் திருட்டையே சிலாகித்துப் பேசுவான்; மோசக்காரன் மோசத்தையே சிலாகிப்பான். அடக்க மில்லாமல் வெளியேறித் திரியும் ஒரு பெண், "குடும்பத்திலுள்ள பெண்கள் வெளியேறிக் கடைக்குப் போக வேண்டும்; கண்ணிக்குப் போக வேண்டும்; அதுதான் பெண்களுக்கழகு; சீவி முடித்துக் கொண்டு வீட்டிற்குள்ளிருப்பதா அழகு" என்று கூறுவாள். புருஷனுக்கடங்காத பெண்கள் "ஏன் நாம் ஆண் பிள்ளைக் கடங்கி நடக்க வேண்டும்; இருவரும் யானிட ஜென்மத்தில் தோன்றியவர்கள் தாமே; நன்றாக யோசித்தால் குடும்பப் பொறுப்பை யெல்லாம் நாம் ஏற்றுக் கொண்டிருப்பதால் ஆண் பிள்ளைதான் நமக் கடங்கி நடக்க வேண்டும்" என்று கூறுவாள்.

இப்படியே உலகத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் மனம் போல் ஒவ்வொரு விதமாகப் பேசுவார்கள்; அவற்றை யெல்லாம் எழுதுவதென்றால் பெரிய புத்தகமாகும். இப்படிப் பேசுவதால், ஒவ்வொருவரையும் இன்ன இன்ன நிலைமையிலுள்ளவர்களென்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு தெரிந்து கொள்ளும்போது நாம் அந்தப் பேச்சுக்களின் வன்மையால் எல்லாவற்றையும் சிறந்தனவாகக் கொள்ளக் கூடாது. அவற்றை யெல்லாம் ஆராய்ந்து கெட்டவற்றைத் தள்ளி நல்லவற்றை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு கொண்டால் மட்டுந்தான் இருமையிலும் சௌக்கியத்தை யடைய முடியும். ஆதலால், நம் ஸ்வஸ்திஸ்ரீ நேமிசாகரவர்ணிஜீ சுவாமியவர்களால் பிரசங்கிக்கப்பட்டு முன் சஞ்சிகையின் ஈற்றிலிருந்து இச் சஞ்சிகையில் தொடர்ந்து வரும் 'சிருஷ்டி வாதம்' என்னும் விஷயத்தையும், இதற்கு மாற்றமாகச் சொல்லும் சிலர் கூற்றுக்களையும் நடுவு நிலைமையோடு ஆராய்ந்து பாருங்கள். அப்போது சுவாமிகளுடைய கொள்கையும், மற்றையர் கொள்கையும் தெளிவாக விளங்குவதோடு சுவாமிகளுடைய அபிப்பிராயம் நன்மையானதெனத் தெரியும். இதைப் பின் பற்றுவோமானால் நாமெல்லோரும் நல்வழிப்பட்டுய்வது திண்ணம்.

பத்திராதிபர்.

## சிருஷ்டிவாதம்.

முன் தொடர்ச்சி புத்தகம்-3. சஞ்சிகை-8. பக்கம்-200.

---

சிலர் "உலகத்தி லிருக்கும் பிராணிகளுக்குச் சுகத்தை உண்டு பண்ணும் நிமித்தம் கடவுள் எல்லாவற்றையும் சிருஷ்டிக்கிறார்" என்று சொல்லுகிறார்கள். பிராணிகளையுங் கூட கடவுளே சிருஷ்டிக்கிறா ரென்று சொல்லும் சில சிருஷ்டிவாதிகள் இந்தப் பதிலையுங்கூட சொல்லும் ஸ்வதந்திரத்தை உடையவர்களாக இல்லை. கடவுளின் சிருஷ்டிக்கு முதலே ஜீவாத்மன்கள் கூட இல்லாம லிருக்கையில் அந்த ஜீவாத்மாக்களுக்குச் சுகத்தை உண்டு பண்ணவேண்டுமென்ற குதூஹலம் கடவுளுக்கு உண்டாயிற் றென்று சொல்வது, பிள்ளையைப் பெறாத மலடி, மகனுக்குக் கல்யாணஞ் செய்து சந்தோஷப்படவேண்டுமென்று குதூஹலப்பட்ட கதைக்குச் சமானமாக விருக்கிறது. இன்னும் ஆகாசத்தில் சித்திரம் எழுதவேண்டு மென்று அபேக்ஷிக்கிறவனது பிராந்தியின் குதூஹலத்தையும் ஒத்திருக்கிறது.

பிராணிகள் (ஜீவாத்மன்கள்) நித்யமாக விருக்கின்றன; அவைகளின் சரீர அவயவங்களை மட்டும் அவைகளின் சுக நிமித்தம் கடவுள் சிருஷ்டிக்கிறா ரென்று சொல்லுகிறவர்களும் "இப்படிக் கடவுள் சரீர அவயவங்களை ஜீவன்களுக்குச் சிருஷ்டிப்பதற்கு முன் அந்த ஜீவாத்மாக்கள் சுகிகளாக இருக்கவில்லையா? முன்னமே சுகிகளாக விருந்தால் மறுபடியும் அவைகளுக்குச் சுகத்தை உண்டுபண்ண வேண்டுமென்ற இச்சை கடவுளுக்கு எதற்காக உண்டாக வேண்டும்?" என்பது முதலான ஆக்ஷேபனைகளை நிவாரிப்பதற்காக கங்கணம் கட்டிக்கொண்டிருக்க வேண்டும். ஒரு வேளை கடவுள் சரீராதிகளைச் சிருஷ்டிப்பதற்கு முன் ஜீவன்களெல்லாம் துக்கிகளாக விருந்தன வென்று சொல்லக்கூடுமாகிலும் அப்படிச் சொல்வது கேவலம் விசார மில்லாத பேச்சாய் முடியும். ஏனெனில், சரீரமில்லாம லிருக்கும் போதும் ஜீவாத்மாக்கள் துக்கிகளாக விருந்தன வென்று சொன்னால் அப்படியே சரீர அவயவ முதலானவைகள் இல்லாமலே சுகிகளாக ஆகக் கூடுமென்று ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது? அல்லது கடவுள் பிராணிகளுக்குச் சுகத்தையே உண்டு பண்ண வேண்டுமென்ற உத்தேசத்தினால் சமஸ்த பிராணிகளுக்கும் சரீர அவயவாதிகளைச் சிருஷ்டித்திருந்தால் இப்போது காணுகிற துக்கங்களைப் பிராணிகள் ஏன் அனுபவிக்கிறார்கள்?

துக்கங்களைப் பிராணிகள் தாங்களே உண்டு பண்ணிக் கொள்ளுகின்றன வென்று சொல்லுவதானால் அப்படியே சுகத்தையுங் கூட தாங்களே உண்டு பண்ணிக்கொள்ளக் கூடும். அப்படி யிருக்கையில் அதற்கு மட்டும் கடவுள் கர்த்தாவென்று பெரிய பாரத்தைக் கடவுளின்மேல் வைக்கவேண்டியதில்லை. மேலும் பிராணிகளுக்குத் துக்கங்கள் தாமாகவே உண்டாகின்றன வென்றும், அவைகளைக் கடவுள் உண்டு பண்ணுவ தில்லை என்றும் சொன்னால் சகல



ஜகத்திற்கும் மேலும் எல்லாக் காரியங்களுக்கும் கடவுளே கர்த்தாவென்று சொல்லும் வாதமானது வேரற்றுச் சாய்ந்து போய் விடும். அல்லது கடவுள் பிராணிகளின் சுகத்தையே இச்சிக்கும் தயாமூர்த்தியானால் அத்தகைய துக்கங்கள் ஜீவாத்மன்களுக்குச் சம்பவிக்காதபடி ஏன் செய்யக் கூடாது? அப்படிச் செய்வதற்கு அந்தக் கடவுளுக்குச் சாமர்த்திய மில்லை என்று சொல்வது இந்தச் சிருஷ்டிவாதிகளுக்குப் பெரிய அவமானம். அல்லது அந்த விதமான துக்கங்கள் ஜீவாத்மன்களுக்குச் சம்பவிக்காதபடி செய்யும் சக்தி கடவுளிடத்தி லிருந்தும் அப்படிச் செய்வதில்லை என்று சொல்லுவரானால் இதைக் காட்டிலும் அனர்த்தவாதம் வேறென்ன விருக்கிறது? சிலர் "கடவுள் சுதந்திரர்; அவர் எதைச் செய்தாலும் யாரும் கேட்கக் கூடாது" என்று சொல்லுகிறார்கள். ஐயா! தத்வ பரிசோதகர்களே! இவ்விதமாகச் சொல்லுபவர்கள் எவ்வளவு வரையில் தத்வ ஞானிகளென்று தாங்களே யோசித்துப் பாருங்கள்.

கடவுள் ஜீவாத்மாக்களின் அதிருஷ்டத்தை (பாப புண்யத்தை) அனுசரித்து எல்லாக் காரியங்களையும் செய்கிறா ரென்று அநேக வாதிகள் தங்களது அநேக கிரந்தங்களில் சொல்லி யிருக்கிறார்கள். இந்த விஷயம் தர்சன சாஸ்திரங்களில் (மதசாஸ்திரங்களில்) பழக்கமுள்ளவர்களுக்குத் தெரிந்தே யிருக்கிறது. கடவுள் ஒரு ஜீவாத்மாவின் பாபத்தை அனுசரித்து அதற்குத் தக்க சரீர அவயவங்களைச் சிருஷ்டிக்கிறா ரென்று மேற்சொன்ன வாதத்தினால் தெரிகிறது. இங்கு நாம் ஒரு குஷ்டரோகியைத் திருஷ்டாந்தமாக எடுத்துக் கொள்ளுவோம். அந்தக் குஷ்டரோகி தன் ரோகத்தினால் நெளித்துக் கொண்டு மிகவும் வேதனைப் படுகையில் ஒருவன் வந்து "ஐயா! நீ பூர்வத்தில் செய்த பாபத்துக் கனுகுணமாகக் கடவுள் உனக்கு இந்தக் குஷ்டரோக மயமான சரீரத்தைச் சிருஷ்டித்திருக்கிறார்" என்று சொன்னால், அந்தக் குஷ்டரோகியானவன் "கடவுள் அத்தகைய பாபத்தை பூர்வத்தில் என்னால் ஏன் செய்வித்தார்? அல்லது புத்தி யில்லாமல் நான் பாபத்தில் பிரவர்த்தித்தாலும் அந்த பாப காரியத்திற்குப் போகாமல் கடவுள் என்னை ஏன் தடுக்கவில்லை? இப்போது குஷ்டமயமான சரீரத்தை எனக்குச் சிருஷ்டிப்பது மட்டும் கடவுளுக்கு அத்யாவசியமானதோ?" என்று அதிக துக்கத்துடனே கேட்பான். மேலும் ஒரு ஸர்ப்பம் விஷ ஜந்துவாக விருக்கிறது. இதற்கு இதன் பூர்வ ஜன்மத்தின் பாபத்துக் கனுகுணமாகவே விஷமுள்ள பற்கள் முதலானவைகளைக் கடவுள் சிருஷ்டித்திருக்கிறா ரென்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அந்த ஸர்ப்பம் இந்த ஜன்மத்தில் தனது விஷத்தினால் அநேகப் பிராணிகளைக் கொன்ற பாபத்திற்காக மறுபடியும் அதற்கு துர்க்கதியையே கடவுள் கொடுக்கவேண்டி வரும். அப்படியானால் கடவுளே அந்த ஸர்ப்பத்தின் பல் முதலானவைகளில் விஷத்தைச் சிருஷ்டித்து அதன்மூலமாக அந்த ஸர்ப்பம் இதர பிராணிகளைக்கொன்ற பாபத்திற்காக மறுபடியும் அதற்கு துர்க்கதியைக் கடவுளே கொடுக்கிறா ரென்று சொல்லுவது "ஒரு தகப்பன் தன் புத்தி யில்லாத பிள்ளையிடம் வீட்டைக் கொளுத்தும்படி பிரேரேபித்து வீடு எரிந்து சாம்பலாய்ப் போனபின்பு அந்தக் கோபத்திற்காக அப் பிள்ளையை சிக்ஷித்ததைப்போ லிருக்கிறது. மேலும்

கடவுள் ஜீவாத்மாக்களின் அதிருஷ்டங்களால் (கர்மங்களால்) பிரேரேபிக்கப்பட்டு எல்லாக் காரியங்களையும் செய்கிறாரென்று சிலர் சொல்லும் வார்த்தையானது கடவுளின் மஹத்துவத்திற்கு நிச்சயமாய்க் குறைவை உண்டு பண்ணுவதாக விருக்கிறது. சிறிது மனம் வைத்துக் கேளுங்கள்!

ஒரு ஜீவாத்மா தனது கர்மத்தினால் பிரேரேபிக்கப்பட்டு நானாவித தொந்தரவுகளை அனுபவித்துக் கொண்டு கர்ம பராதீனமாக விருக்கிறதென்று ஏற்படுகையில் அனந்த ஜீவாத்மாக்களின் அதிருஷ்டங்களுக்கு பரவசனாகி அந்த அதிருஷ்டங்களால் பிரேரேபிக்கப் பட்டு "சுழல் காற்றினால் பிரேரேபிக்கப்பட்டுச் சஞ்சலத்துடன் கிறுகிறென்று சுழன்று கொண்டிருக்கும் சருகுகளைப் போல்" எப்போதும் (சிருஷ்டி ஸம்ஹார கிரியைகளால்) சஞ்சலத்துக் குட்பட்டிருக்கும் இத்தகைய சிருஷ்டி வாதிகளின் கடவுள் எவ்வளவு மகிமையுள்ளவரோ? இப்படியே கர்ம பரவச ராகிய ஆத்மன்கள் கடவுளென்றும் பரமாத்மனென்றும் சொல்லிக்கொள்ள முடியாது. இப்பேர்ப்பட்ட தர்க்க விதர்க்கங்களில் மூழ்கினவராகிய மஹா கவி பர்த்ருஹரி தமது சதகத்ரயத்தின் ஆதியில் அடியில் கண்ட சுலோகத்தை ரசித்திருக்கிறார்:

"ப்ரஹ்மா யேந குலாலவந் நியமிதோ ப்ரஹ்மாண்ட பாண்டோ
தரே | விஷ்ணுர் யேந தசாவதார கஹநே க்ஷிப்தோ மஹா
ஸங்கடே || ருத்ரோ யேந கபாலபாணி புடகே பிக்ஷாட
நம் ஸேவதே | ஸூர்யோ ப்ராம்யதி நித்யமேவ ககநே த
ஸ்மை நம: கர்மணே"

இதன் பொருளாவது:—கர்ம பரவசராகிய பிரம்ஹா எப்போதும் குசவன் சட்டிபானை குடம் முதலியவைகளைச் செய்துகொண்டிருப்பதைப் போல் சிருஷ்டி ரசனையின் கிரியைகளைச் செய்துகொண்டிருக்கிறார்; விஷ்ணு தமது கர்மாநுகுணமாக அடிக்கடி அவதாரங்களை எடுக்க வேண்டி யிருக்கிறது; ருத்ரனும் கர்ம பராதீனனாகி பிரம்ஹ கபாலத்தைத் தரித்துக் கொண்டு வெகு காலம் பிக்ஷாடனம் செய்ய வேண்டிய தாயிற்று; சூர்ய நாராயணன் அதாவது சூர்ய பகவான் தன் கர்மத்தினால் பிரேரேபிக்கப் பட்டவனாகிப் பிரதிதினமும் உதயாஸ்தாவஸ்தைகளை அடைய வேண்டிய தாயிற்று. இந்த திரிமூர்த்திகளும் ஜெகஜ்ஜோதி மயமான சூரியனுங் கூட கர்ம பராதீனராகி யிருப்பதால் அவர்களை ஜெயித்துத் தன் வசப்படுத்திக்கொண்டிருக்கும் கர்ம வீரனென்ற தெய்வத்துக்கு நான் வந்திக்கிறேன்" என்பதாம். மேற்சொன்ன சுலோகத்தில் பர்த்ருஹரியின் அபிப்பிராயம் வியக்தமாகிறது. இது நியாயமாக விருக்கிறது. ஏனெனில், இந்தக் கர்மராஜன் திரிமூர்த்திகள் முதலான மஹாத்மாக்களைத் தோற்கடித்து ஜெயக் கொடியை எடுத்துக் கட்டியிருக்கிறானாகையால் அவனை வந்திக்காமற்போனால் தன்னையுங் கூட அந்தக் கர்ம வீரன் (அதாவது அதிருஷ்டம்) எவ்விதமான துன்பத்திற் குள்ளாக்குவானோ வென்ற பயம் மஹாத்மனாகிய பர்த்ரு ஹரியை பயப்படச் செய்தது.



ஐயோ பாவம்! அந்தக் கர்ம மல்லனையும் சம்பூர்ணமாக ஜெயித்து மறுபடியும் அந்தக் கர்ம ராஜன் தன் சமீபத்திற்கு வாராதபடி செய்திருக்கும் ஒரு கர்மவிஜயியான, மேலும் அதிருஷ்டமென்ற ரோகத்திற்கு ஸம்பூர்ண வசமாகாத மஹா ஜெய சாலியான "ஜிந" என்ற பரிசுத்த பரமாத்மன் விராஜமானராக விருக்கிறாரென்று மஹா கவி பர்த்ருஹரிக்குத் தெரிந்திருந்தால் மேற்சொன்னபடி ஜட கர்மத்திற்கு வந்தித் திருப்பாரோ? எப்படியாகிலும் சரி, ஈசுவரனுங் கூட ஜீவாத்மாக்களின் கர்மத்துக்கு வசமாகி ஜெகந்நிர்மாணாதிகளைச் செய்கிறாரென்று சொல்லுபவர்களை, மஹாபிரமை யானது இந்த ஈசுவரனை விட்டு ஜடகர்மத்தையே வந்திக்கும்படி செய்யும். சிலர் "கடவுள் நன்மையையும் தீமையையும் செய்வதே இல்லை; மேலும் அப்படியே நன்மை தீமை செய்த ஜீவாத்மன்களுக்குத் தக்க சுக துக்காதி பலன்களையுங்கூட கடவுள் செய்வதில்லை" என்று சொல்லுகிறார்கள்.

பகவத் கீதை அத்தியாயம் 5, சுலோகம் 14-ல்,

ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு: |
ந கர்மபலஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே ||

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பொருளாவது:—"கடவுள் கர்த்திருத்துவத்தையும், கர்மங்களையும், கர்ம பலன்களையும் உண்டு பண்ணுவதில்லை; ஆனால் வஸ்து ஸ்வபாவத்திற் கனுகுணமாக எல்லாம் ஆகிறது" என்பதாம். மேலும்,

நாதத்தே கஸ்யசித் பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு: |
அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: ||

என்று அதே அத்தியாயம் 15-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; இதன் தாத்பர்யமாவது:—"கடவுள் யாருடைய பாபத்தையும் புண்ணியத்தையும் கைக்கொள்வதில்லை; பிராணிகளின் ஆத்மாக்கள் அஞ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கின்றன; ஆகையால், ஜீவாத்மன்கள் பிராந்தியினால் கடவுள் சிருஷ்டிக்கிறாரென்றும் ஸம்ஹரிக்கிறாரென்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்பதாம்.

மேற்சொன்ன படியே பரமாத்மனாகிய கடவுள் யதார்த்தமாகச் சிருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்வதில்லை என்பது உண்மையான விஷயமே. ஆகிலும் "கடவுள் பரிசுத்தனாக விருந்து நன்மை தீமைகளைச் செய்வதில்லை என்று சொன்னால் ஜனங்களுக்குக் கடவுளிடத்தில் பக்தியுண்டாக மாட்டாதாகையால், கடவுளே எல்லாவற்றையும் செய்கிறாரென்று சொல்லவேண்டியதாக விருக்கிறது" என்றும் சிலர் சொல்கிறார்கள். ஆனால் இவர்களின் வார்த்தைகளால் கடவுளிடத்தி லிருக்கும் பக்தி ஜனங்களால் நஷ்டமாகப் போகவும் கூடுமென்று சொல்லவேண்டி இருக்கிறது. இங்கு இதற்கொரு திருஷ்டாந்தக் கதை சொல்லவேண்டியதா யிருக்கிறது.

ஒரு கிராமத்தில் ஒரு பெரிய குடும்பத்தில் லிங்கம்மா வென்று ஒருத்தி யிருந்தாள். அவளுக்கு தங்கம்மாவென்ற ஒரே பெண்ணிருந்தது. இந்த லிங்கம்மாளுக்கு வெகு காலம் குழந்தை யில்லாம லிருந்ததால் அநேக தெய்வங்களுக்கு காணிக்கை கட்டினதினாலும் பிரார்த்தனைகள் செய்து கொண்டதாலும் இந்த தெய்வங்களை நோக்கி அநேகவித ஜெபங்களை செய்ததினாலும் தனக்குப் பெண் பிறந்ததாக இந்த லிங்கம்மாளுக்கு பரிபூர்ண நம்பிக்கையிருந்தது. இதனால் இவள் பிரதிதினமும் ஸ்நான முதலானவைகளால் பரிசுத்தளாகி அநேக அசுவர்த்த விருக்ஷ (அரசமரம்) பிரதக்ஷணைகளையும், பிருந்தாவன பிரதக்ஷணைகளையும், அநேக தடவை சாஷ்டாங்க நமஸ்காரங்களையும் செய்த தன்மீத் தனக்குத்தயை செய்து ஒரு மகளைப் பரிபாலித்த தெய்வத்தினிடத்தில் எல்லை யற்ற கிருதஞ்யதையை (செய்நன்றியை) காட்டவேண்டி எழுந்திருக்கும் போதும் உட்காரும் போதும் நாராயண: நாராயண: என்ற பதங்களை உச்சரித்துக்கொண்டு மிருந்தாள். மேலும் தன் மகளையும் மேற் சொன்னபடியே ஆசரிக்கும்படி செய்தாள்.

சில காலத்திற்குப் பிறகு இந்த மகளாகிய தங்கம்மாள் தருணப் பிராயத்திலேயே இறந்து விட்டாள். அப்போது தாயாகிய லிங்கம்மாளின் அவஸ்தை விபரீதமாய் விட்டது. அவள் அசுவர்த்த பிரதக்ஷணையையும் பிருந்தாவன பிரதக்ஷணையையும், நாராயண நமோச்சாரணத்தையும் சம்பூரணமாக விட்டு விட்டாள். இதற்குப் பதிலாக (நாராயண நாமோச் சாரணத்திற்கு பதிலாக) மனதுக்குத் தோன்றின படிக் கெல்லாம் தெய்வத்தைத் திட்டுவதும், சாஷ்டாங்க நமஸ்காரத்திற்குப் பதிலாக பூமியை கையாலடித்து தெய்வத்தை சபிப்பதும், தன் விரல்களை முறித்துக் கொண்டு தெய்வத்தை நிந்திப்பதுமே இவளின் நித்ய கிரியை யாயிற்று. "இந்த பாபியாகிய தெய்வம் எனது மகளைக் குரூரமாக கொன்று போட்டதல்லவா? நான் இடைவிடாமல் அதன் பெயரை உச்சரித்துக் கொண்டிருக்கவில்லையா? சாஷ்டாங்க நமஸ்காரத்தை அடிக்கடி செய்ததால் எனது முழங்கால்களும் கைகளும் சோர்ந்து போகவில்லையா? நான் எவ்வித அபராதத்தையும் அத்தெய்வத்திற்குச் செய்ய வில்லையே; இப்படியிருந்தும் எனது ஒரே மகளைக் கொன்று போட்டு என்னை இப்பேர்ப்பட்ட சோகாக்னியில் தள்ளின அந்த நிஷ்கருணையான தெய்வம் நித்தியமும் வாழ்ந்து கொண்டிருக்குமோ? அது (அந்தத் தெய்வம்) என் மகளை இப்படிக் கொல்வதானால் எனக்கு அந்தப் பெண்ணை ஏன் கொடுக்க வேண்டும்? ஹே கருணையற்ற தெய்வமே! நீ என்னுடைய துக்கத்தைப் பார்த்து சிரிக்கிறாயோ? உனக்கு திக்காரம் (கேடுண்டாக)" என்று அந்த லிங்கம்மாள் எப்போதும் பிரலாபித்துக் கொண்டிருந்தாள்.

ஐயா விசார பரர்களே!

கடவுளிடத்தில் ஜனங்களுக்கு பக்தி யுண்டாக்க வேண்டி, கடவுள் எல்லாவற்றையும் சிருஷ்டிக்கிறா ரென்றும். 'சம்ஹாரிக்கிறா ரென்றும், கற்பனைகளைச் செய்து மூடஜனங்களுக்குப் போதித்தாலும் கடைசியாக அந்த மூடஜனங்கள் மேற் சொன்னபடி லிங்கம்மாளின் அவஸ்தையையே அடைவார்கள்.



ஒரு வேளை அந்த ஜனங்களுக்கு "நீ பூர்வத்தில் செய்த பாபத்துக்காகக் கடவுள் உனக்கு நானாவித கஷ்டங்களைக் கொடுத்தார்" என்று நாம் போதித்தாலும் "கடவுள் எல்லாவற்றையும் செய்கிறவரென்றிருக்கும் போது என்னை பாபியாக ஏன் சிருஷ்டித்தார்? அவரே என்னை பாபியாக உண்டு பண்ணினென்றால் பாபத்தைச் செய்வித்து மறுபடியும்நான்பாபம் செய்தேனென்று என் மீது கோபித்துக் கொண்டு நானாவித கஷ்டங்களையும் துக்கங்களையும் எனக்கு உண்டாக்குகிறா ரென்று நீங்கள் சொல்கிறீர்களோ? நன்றா யிருக்கிறது" என்று அவர்கள் (மூட பக்திக்கு உட்பட்ட ஜனங்கள்) அவசியம் பதில் சொல்வார்கள்,

ஐயா தூரதர்சிகளே! சிருஷ்டி வாதத்தின் பரிணாமம் கடைசியில் இது தானென்று நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். ஆகையால் பரிசுத்தமும் பரமாத்ம ஸ்வரூபியும் ஞான தயா மூர்த்தியுமான கடவுள் ஒன்றை சிருஷ்டித்து மறுபடியும் சம்ஹாரிக்கிறாரென்ற மித்யாப வாதத்தை (பழியை) கடவுளின் மேல் சுமத்தி கோர பாபத்துக்கு ஆளாக வேண்டாம்.

இன்னும் சிலர் விநோதத்திற்காகக் கடவுள் இந்த ஆச்சரிய காமான ஜெகத்தை சிருஷ்டிக்கிறாரென்றும், சம்ஹாரிக்கிறா ரென்றும் சொல்கிறார்கள். இப்படிச் சொல்கிறவர்களின் வார்த்தையுங் கூட முழுதும் நிந்தனீயமாக விருக்கிறது. இதற்கு ஓர் திருஷ்டாந்த கதை சொல்லுவாம்:

ஓர் ஏரியின் கரையில் ஒரு பையன் நின்று கொண்டு தட்டையாகிய கற்களை (ஓடுகளை) எடுத்துக் கொண்டு அந்த ஏரியின் ஜலத்தின்மேல் வீசி எறிந்து விநோதஞ் செய்துகொண்டிருந்தான். (இதற்குத் தவளைக் கல் ஆட்டமென்று சொல்வார்கள்) இந்த விநோதத்தினால் அந்த ஏரி ஜலத்திலிருந்த அநேக தவளைகளுக்குப் பிராணாபாயமும் காயமும் உண்டாயின. அப்போது ஒரு பெரிய தவளை "ஐயா ஆட்டக் காரனே! நீ எங்களுக்கு இப்பேர்ப்பட்ட ஹானியை நிஷ்கருணையாகச் செய்யவேண்டாம்" என்று சொல்லிற்று. அப்போது அந்த விநோதக்காரனாகிய பையன் "இது நான் எப்போதும் ஆடுகிற ஆட்டம்" என்று சொன்னான். அப்போது அந்த மண்டூகம் "உனக்கு ஆட்டம் எங்களுக்கு பிராண சங்கடம்" என்று சொல்லி நீரில் முழுகிப் போய் விட்டது. ஆட்டத்திற்காகவும் விநோதத்திற்காகவும் சகல ஜெகத்தையும் சிருஷ்டித்து ஒரு காலத்தில் அநேக ஜீவன்களோடு அதை நாசஞ் செய்யும் கடவுளின் ஆட்டம் மேற் சொன்ன பையனின் தவளைக்கல் ஆட்டத்தைப் போலிருக்கிறது. மேலும் அப்படிச் செய்யும் கடவுளும் அந்த ஆட்டமாடும் பையனை யொத்திருக்கிறார்.

பரமேசுவரன் (கடவுள்) பரிசுத்தனும், ராகத்வேஷ மோக முதலான களங்க மில்லாதவனும், ஞான தயா ஸமுத்திரனுமாக விருக்கிறா னென்பதே ஜைன மதத்தின் சித்தாந்தம். ஜகத்திலுள்ள சர்வ பிராணிகளின் சரீரமும், அவயவங்களும், மற்றும் மனுஷ்ய திர்யக் நாக தேவ முதலான கதிகளும், அவைகளின் சுபா சுப கர்மங்களென்னும் அதிருஷ்டங்களை யனுசரித்தே

உண்டாகின்றன வென்றும், அந்தக் கர்மங்களை (ஸம்யக் தர்சர, ஸம்யக்ஞ் ஞான, ஸம்யக் சாரித்ர) ஸத்ய சிரத்தை, யதார்த்த ஞானம், ஸதாசாரனை என்ற உபாயத்தினல் சம்பூர்ணமாக நாசஞ் செய்தபின் ஆத்மன் நித்திய-சுக மென்னும் முக்தியை அடைகிறு னென்று ஸ்ரீ தீர்த்தகர தர்ம வேதமானது எப்போதும் ஒரேவிதமாக கோஷித்துக்கொண் டிருக்கிறது:

[illegible]
[illegible] என்றபடி,

லோகத்தி| லுண்டாகும் எந்தக் காரியமும் யாதானுமொரு ஜீவாத்மனது பாப கர்மத்தை யனுசரித்தாகிலும், அல்லது புண்ய கர்மத்தை யனுசரித்தாகிலும், உண்டாகிறது. மேலும் எந்த ஆத்மனது புண்யம் அல்லது பாப கர்மங்களென்னும் அதிருஷ்டங்களை அனுசரித்து அந்தக் காரியம் உண்டாயிற்றே அது அந்த ஆத்மனுக்குச் சுகத்தையாகிலும், துக்கத்தையாகிலும், தத்காலத்திலே |யாகிலும், காலாந்தரத்திலே யாகிலும் உண்டு பண்ணியே விடும். இவைகளைக் கர்த்துரு வாதிகளாகிய அநேக மதாவலம்பிகளுங் கூட ஒப்புக் கொள்கிறார்கள். தீர்த்தகர பரம வேதத்திலேயும் இப்படியே சொல்லப்பட்டிருக்கிற தென்பதை நான் முன்னமே சொல்லி யிருக்கிறேன்.

கடவுள் நன்மை தீமைகளைச் செய்வதில்லையானால் கடவுளை நாம் ஏன் நம்பு(ம்) ஸ்துதிக்கவும் தியானிக்கவும் வேண்டுமென்ற ஆக்ஷேபனைகளுக்கு ஸமாதானம்:—

கடவுள் நிஜமாகவே எவ்வித விகாரமு மில்லாத சுத்த பரமாத்ம னென்பது அநேக பிரமாண யுக்திகளினால் சித்த மாகிறது. பதஞ்சலி யோக சாஸ்திரம் முதல் பாதம் 24-வது சூத்திரத்தில்,

“𑌕𑍍𑌲𑍇𑌶𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌪𑌾𑌕𑌾𑌶𑌯𑍈𑌰𑌪𑌰𑌾𑌮𑍃𑌷𑍍𑌟𑌃 𑌪𑍁𑌰𑌷𑌵𑌿𑌶𑍇𑌷 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃”

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பொருளாவது:— “அவித்யயே முதலான 5 விதமான கிலேசங்களும், தர்மா தர்மங்களென்ற அதிருஷ்டரூபமாகிய கர்மங்களும், சித்த ஸம்ஸ்கார ரூபமாகிய ஆசையுமான இவைகளில் சம்பந்த மில்லாத சுத்த பரமாத்மனே ஈசுவரன், அதாவது கடவுள்” என்பதாம். இதனாலேயே கடவுள் சிலருக்கு நன்மையையும் சிலருக்குத் தீமையையும் செய்பவ ரென்றாவது, எந்த காரணத்தை முன்னிட்டும் சரீராதிகளைத் தரிப்பவ ரென்றாவது சொல்வது சுத்த கற்பித மென்று சித்தமாகிறது.

பாருங்கள்! கடவுள் உலகத்தை சிருஷ்டிக்கிறவர், சம்ஹரிப்பவரென்ற விஷயத்தில் ஒரு ஞானி ஹிந்துஸ்தானி பாஷையில் சொல்லி யிருப்பதை விவரிக்கிறேன்:—



[illegible]
[illegible]

(இ-ள்.) பரமேசுவரன் ஜெகத்தை சிருஷ்டிக்கிறா ரென்றும், சம்ஹரிக்கிறா ரென்றும் சிருஷ்டித்துப் பிராணிகளை உண்டாக்குகிறா ரென்றும் கர்த்துருவாதிகள் சொல்லுகிறார்கள். ஆனால் இவர்களின் வார்த்தையில்பெரிய சந்தேக முண்டாகிறது. எப்படி யெனில்,

[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்.) ஈசுவரன் எல்லாவற்றையும் செய்வதானால், ஒருவனைச் சுகியாகவும், மற்றொருவனை துக்கியாகவும் ஏன் செய்தார்? அப்படியே ஒருவனைத் தனவானாகவும், மற்றொருவனைத் தரித்திரனாகவும் ஏன் சிருஷ்டித்தார்? இம் மாதிரி வித்தியாசங்கள் ஈசுவர சிருஷ்டியில் ஏன் உண்டாயிற்று. மேலும்,

[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்.) லோகத்தில் ஒரு மனிதன் உத்தமனாகவும், மற்றொருவன் நீசனாகவும் இருக்கிறான். அப்படியே ஒருவன் தயை யுள்ளவனாகவும், மற்றொருவன் தயை யில்லாதவனாகவு மிருக்கிறான். ஈசுவரன் எல்லா சீவன்களின் மேலும் ஸமதிருஷ்டி யுள்ளவனாக ஏன் இருக்க வில்லை? இதற்குச் சரியான சமாதானத்தை சிருஷ்டி வாதியாகிய நீ சொல்ல வேண்டும். மேலும்,

[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்.) ஈசுவரன் தனது பக்தர்களைச் சுகமாக விருக்கும்படி எப்போதும் செய்கிறான்; மேலும் தன்னை நம்பாம லிருப்பவர்களுக்கு கோர துக்கங்களைக் கொடுக்கிறா னென்று சொன்னால்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்.) ஈசுவரன் பக்ஷபாத முள்ளவனுகிறான்; இது, கடவுளென்று சொல்லிக் கொள்ளும் ஈசனுக்குப் பெரிய தோஷம். சிறிது விசாரஞ் செய்து பாருங்கள். ஈசுவரன் அவ்வவர்களின் கர்மத்துக்கனு குணமாகச் சுகம், துக்கம், சம்பத்து, தரித்திரம் முதலானவைகளைப் பிராணிகளுக்குக் கொடுக்கிறானென்று ஒரு வேளை நீங்கள் சொல்லக்கூடும். அப்படியானால் ஸர்வ சக்தனுகிச் சகலத்தையும் உண்டு பண்ணும் கடவுளின் சிருஷ்டியில் நீங்கள் சொல்லும் கர்ம மென்றது ஜீவன்களுக்கு எப்படிச் சம்பந்தப் பட்டது?

ஜஸ்மாரம்ஸாரெந வடீயஜீவ கொமெவெ ஊகியா ஜமதெக 
ரோஹ உவஷெ கக ஜீவெக ஸம்மஜெமெக ஹரெயெ யாகி 
நாஹ॥

(இ-ள்,) பிரதமத்தில் ஈசுவரன் ஜீவன்களைச் சிருஷ்டிக்கும் போதே கர்மங்கள் ஜீவன்களை கூடிக் கொண்டிருந்தனவாக ஏற்படுகின்றன வல்லவா?

கமாக ஹொமெ கஷஸம்மயெ யஹதா வாதஹரம் 
வொராஹ। கியெகஷவி நகஷ கஹாம் வெஸஜெ ஜீவெக்ராம் 
ஹருக்த வாஹ॥

(இ-ள்.) கடவுள் சிருஷ்டிக்கும் போதே கர்மங்கள் சீவன்களுடனே இருந்தனவென்று நீங்கள் சொல்லக் கூடும். ஆனால், இப்படிச் சொல்வதற்கு ஏதுவில்லை; ஏனெனில், எந்த நன்மையையும் தீமையையும் சீவன்கள் செய்யாமலிருக்கையில் கர்மங்கள் சீவன்களுடனே எப்படி இருக்க முடியும்?

கமாகஹொமெ கஷநஷீயெ ஸம்மஜீவெக ஜநத வாரா 
வீரயஹ க்ருயெகஷ கஹாம்வெஸ உஸகா வதஜா ெ விஷூரா

(இ-ள்.) சீவன்களை ஈசுவரன் உண்டு பண்ணும் போது கர்மங்கள சீவன்களைச் சேர்ந்து கொண்டிருக்க வில்லையானால் அதற்கு மேல் கர்மங்கள் சீவன்களுடனே சம்பந்தமாவதற்கு என்ன காரணம்? அந்தக் கர்மங்கள் எங்கு நின்றும் எப்படி வந்தன? இவைகளை விவரமாகத் தெரிவியுங்கள்.

கியெ கஷக்ராம் வெஷா ஸம்மெந கரெ ஜீவகொஜா 
ராவாரா। கொவஜீவ வாரகியா ஸம்மெந க்ராம்ஸவ ஊவ 
யஹ ஷீநாவாரா॥

(இ-ள்.) ஈசுவரன் ஜீவன்களிடத்தில் கர்மங்களை வரச்செய்தானென்று சொல்வதானால் ஈசுவரன் ஜீவன்களின் மேல் ஏன் கோபித்துக் கொண்டான்? மேலும் ஜீவன்கள் துன்பப்படும்படியும் சுக துக்கங்களை அனுபவிக்கும்படியும் ஏன் கர்மங்களை ஜீவன்களின் மேல் செலுத்தினன்.



ஸம்வாதய ஹஹ ஸம்ஸாரஸா ஃநெ ஸஜெஸாஜ 
ரா வதரா॥

(இ-ள்.) மேலே விவரித்தபடி கடவுள் எல்லாவற்றையும் செய்கிறானென்ற வார்த்தைகளெல்லாம் அஸத்ய மென்று நன்றாகத் தெரிய வருகின்றன. விசார சக்தியுள்ளவர்கள் மனதில் விசாரித்துக் கொள்ளுங்கள்.

இந்த வித்வான் இன்னுமநேக யுக்திகளினால் கடவுள் எல்லாவற்றையும் செய்கிறானென்ற விஷயத்தை நன்றாகக் கண்டித்திருக்கிறார். அவைகளையெல்லாம் சொல்வதற்கு இங்கே நேரமில்லாதபடியால் இதை இத்துடன்நிறுத்திக் கொள்கிறேன்.

இப்போது கடவுளின் ஸ்வரூப மெப்படிப்பட்டதென்ற விஷயத்தில் ஒரு பக்ஷபாத மில்லாத ஸத் புருஷர் எழுதி யிருக்கும் சில பத்யங்களை இங்குச்சொல்கிறேன்.

நகெவஷீ ஹொநராமீஹொ ஸஹநம் ஊவீத ராமீஹொ 
வஹஸவவிஷ யொம்காத்ரா மீஹொஜா ஸம்ஸாரஹொதா 
வெணஸாஹொ॥

(இ-ள்.) கடவுள் த்வேஷமற்றவனுகியும் கடவுள் நித்யானந்தனுகவும், வீதராகனுகவும் (ஆசை யற்றவனுகவும்) இருக்கிறான். மேலும் சமஸ்த விஷய போகங்களின் சம்பந்த மில்லாதவன்.

நவஊவட வடெ ஜாதாஹொமா வடவடகாஜ்ஞாதா 
ஹொவஹஸஜ உவெஜமதாதா ஹொஜா ஸம்ஸாரஹொதா 
வெணஸாஹொ॥

(இ-ள்.) கடவுள் எல்லோருடைய சரீரத்திலும் வசித்திருக்கிறானென்று சிலர் சொல்கிறார்கள். அது அஸத்யமாக விருக்கிறது. பரமேஸ்வரன் சகல சராசர வஸ்துக்களையும் தெரிந்து கொள்கிறான். அதாவது பரமேசுவரனது ஞானமானது சமஸ்தத்தையும் தெரிந்து கொள்ளக் கூடியது.

நகாரதாஹொ நஹாரதாஹொ நஹீம் கவதாரா யாரதா 
ஹொ – ஜாரதாஹொ நஜாதாஹொஜா ஸம்ஸாரஹொதா 
வெணஸாஹொ॥

(இ-ள்.) கடவுள் எதையும் செய்வது மில்லை, அழிப்பது மில்லை; மேலும் நானுவித மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்களை எடுப்பது மில்லை; மற்றொருவரைக் கடவுள் கொல்லுவது மில்லை; கொல்லுவிப்பது மில்லை; மற்றும் தான் இறப்பவனு மல்லன்.

ஜ்ஞாநைக நித்யமேவ ப்ரநித்யஜீவ காநஹீம்ஸாநி।
ஸாஸ்ஸ நித்ய நித்யாநிதேஜோ ஸம்ஸாரமோசகாய தே நம
ஸ்தே॥

(இ-ள்.) பரமாத்மன் ஸம்பூர்ண ஜ்ஞாந ரூபமான ஜோதியுள்ளவனாக விருக்கிறான். மேலும் அந்த ஞான ஜோதியானது எப்போதும் ஏற்றத்தாழ்வின்றி பரமாத்மனிடத்திலிருக்கிறது.

நமோ க்ஷாயிணே நகாரிணே நஷ்டஸ்ய நஹாரிணே நஹாரிணே। ஸஹஸாத ஜநகா ஸர்வஸாக்ஷிணே ஜோ ஸம்ஸாரமோசகாய தே நமஸ்தே॥

(இ-ள்.) கடவுள் சிலர் மீது கோபங் கொள்வதுண்டென்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் கடவுள் எப்போதும் கோபித்துக் கொள்வதில்லை. மேலும் கடவுள் அவதார முதலானவைகள் எடுக்கும்போது இதர மனிதர்களைப் போல் ஸ்திரீ சம்ஸர்க்கத்திலுண்டாகும் சிற்றின்பத்தையுங்கூட அனுபவிக்கிறாரென்று அநேகர் சொல்கிறார்கள். ஆனால் கடவுள் என்றும் சிற்றின்ப அபேக்ஷையுள்ளவனல்ல. சிலருக்குக் கடவுள் சத்துரு வென்று அநேகர் சொல்கிறார்கள்; இது பிரசித்தம். ஆனால் யாருக்கும் எப்போதும் கடவுள் சத்துருவல்ல. இன்னுஞ் சில கடவுள் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு ஸகாயனாக விருக்கிறாரென்று சொல்கிறார்கள். இதுவும் பரமாத்மனாகிய கடவுளின் கடத்தை யல்ல. கடவுள் சமஸ்த லோகத்திற்கும் சுவாமியாக விருக்கிறான்; அதாவது தேவேந்திரன், நாகேந்திரன், நரேந்திரன், முதலானவர்களாலும் வந்திக்கப்படும் பரம பவித்ர பகவந்தனாக விருக்கிறார். இப்படி யிருக்கச் சிலரிடத்தில் துவேஷமும், சிலரிடத்தில் ஆசையும் கடவுள் கொள்வதானால் சகல ஜெகத்திலுள்ள பிராணிகள் ஒரே விதமான பக்தியை அந்தக் கடவுளிடத்தில் வைக்க முடியாதாகையால் அந்த ராகத் துவேஷமுள்ள கடவுள் எல்லோருக்கும் சுவாமி என்று சொல்லிக் கொள்ள முடியாது.

தயாமய ஸர்வஸம்பூர்ண பரம வைராக்யதேஜோ ஜோ। நஜாஸ்ய ஸஹாயகாரிணே ஜோ ஸம்ஸாரமோசகாய தே நமஸ்தே॥

(இ-ள்.) தயாமயனும், சாந்திர ஸம்பூர்ணனும், பரம வைராக்ய மயனுமாக விருக்கும் பரம பரிசுத்த ஆத்மா, மேலும் யாருக்கும் கடவுள் பலாத்காரத்தையும் அநியாயத்தையும் செய்பவரல்லர்.

நிரஞ்ஜந நிஷ்காரிணே நிஜாநந்தரஸ விஹாரிணே।
ஸதாகல்யாண காரிணே ஜோ ஸம்ஸாரமோசகாய தே நமஸ்தே॥



(இ-ள்:) பரமேசுவரன் நிரஞ்சனனாகியும், (என்றும் கர்ம மென்ற களங்கத்தினால் தீண்டப் படாத வனாகியும்) கிஞ்சித்தேனும் விகார மில்லாதவனாகியு மிருக்கிறான். மேலும் தனது சுத்தாத்ம நிஷ்டமாகிய அனந்த சுகத்தில் எப்போதும் மூழ்கினவனாக விருக்கிறான். ஸர்வதா கல்யாண ஸ்வரூபனாகவுமிருக்கிறான்.

இந்த ஹிந்துஸ்தானி புஸ்தகத்திலுங் கூட இன்னும் அநேக அதி சுந்தரமானவைகளும், அர்த்த புஷ்டியுள்ளவைகளுமான பாட்டுகள் இருக்கின்றன. சமயம் சுவல்பமான படியால் இத்துடன் நிறுத்துகிறேன்.

அப்படியானால் கடவுளை ஏன் நம்ப வேண்டும்? என்பதற்கு ஸமாதானம்:—

உண்மையாக நாம் விசாரித்தால் பரம பரிசுத்தமாகிய பரமாத்மனது பக்தி, தியானம், ஸ்மரணை, ஸ்துதி, ஸ்தோத்திரம் முதலானவைகளாலே ஜீவாத்மன்களாகிய நமக்கு இஹபரலோக சுகங்கள் உண்டாகவேண்டுமே யொழிய, கடவுளிடத்தில் கொஞ்சமேனும் இச்சை, துவேஷம், மோஹம், விரோதம் முதலிய விகாரங்கள் உண்டென்பதாக நாம் தியானிப்பதினாலும், ஸ்மரிப்பதினாலும், ஸ்துதிப்பதினாலும் அவை உண்டாக மாட்டா. உபநிஷத்துக்களிலும் பாருங்கள்!

பித்யதே ஹ்ருதயக்ரந்தி: சித்யந்தே ஸர்வஸம்ஶயா:।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது;

(இ-ள்.) "பரமாத்ம வஸ்துவை தியானிப்பதினால் மனதிலுள்ள விகாரங்களெல்லாம் நாச மாகின்றன; அஞ்ஞானங்கள் சம்பூரணமாகச் சேத மாகின்றன; சுபாசுப கர்மங்களென்னும் அதிருஷ்டங்கள் விலயமாகின்றன." என்பதாம்.

கனவான்களே! இப்போது சொன்ன உபநிஷத்தின் ஸ்தோத்திரத்தை நீங்கள் பக்ஷபாத மில்லாமல் சுத்த புத்தியை உபயோகித்து விசாரித்தால் ஜகந் நிர்மாண (சிருஷ்டி), ஸம்ஹார முதலானவைகளில் ராகாதி தோஷங்கள் கொஞ்சமேனு மில்லாத பரமாத்மனது ஸ்மரணத்தினாலே நமது சகல துக்கங்கள் நாசமாகக் கூடுமென்று சத்தியமாகத் தோன்றலாம்.

ஸ்ரீபகவத் கீதை 4-வது அத்தியாயம், 37-வது சுலோகம்,

யதைதாம்ஸி ஸமித்தோ(அ)க்நிர் பஸ்மஸாத் குருதே(அ)ர்ஜுந।
ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது; இதன் பொருளாவது:— "ஹே அர்ஜுனா! பிரஜ்வலனமான அக்கினியானது கட்டைகளை எரித்து பஸ்பமாக்குவதைப் போல் ஞான மென்னும் அக்கினியானது சகல கர்மங்களையும் தகித்து விடுகிறது" என்பதாம்.

இதிலேயும் உபநிஷத்து யோக சாஸ்திர முதலானவைகளின் சூத்திரங்களால் சித்தமானபடியே, நிஷ்களங்கமும், கர்த்திருத்வ அதிருஷ்ட முதலான சம்பந்த மில்லாததுமாகிய பரம சாந்த பரிசுத்த பரமாத்ம விஷயமான ஞானமே ஸர்வோத்தமமானதென்று ஸ்பஷ்டமாகிறது.

ஆர்ஹந்தியாகமங்களிலும் (அதாவது, அர்ஹத் பரமேசுவரனாலருளிய ஆகமங்களிலும்) எல்லா விடத்திலும் கர்த்திருத்வாதி விகாரங்களில்லாத பரிசுத்த பரமாத்மனே தேவனென்றும் அந்த தேவனை நம்புவதினாலும், (சம்யக் தர்ஸநம்-நற்காட்சி யாலும்), அதாவது நன்றாகத் தெரிந்து கொள்வதாலும், (சம்யக் ஞானம்-நல்ஞானத்தாலும்) அதாவது அந்த பரமாத்மனது தியானத்தை நிச்சலனமாக செய்வதென்றும் சமாதியினாலும், (ஸம்யக் சாரித்ரம்-நல்லொழுக்கத்தாலும்) அதாவது பவ்யாத்மன்கள் சமஸ்த ஜனன மரண முதலான துக்கங்களையும் அந்த துக்கங்களுக்குக் காரணமாகிய சகல கர்மங்களென்னும் அதிருஷ்டங்களையும் சம்பூர்ணமாக நாசஞ் செய்து கைவல்யத்தை யடைவதாலும், நித்ய சுகிகளாகவும் ஞான நிதிகளாகவும் அனந்த காலம் விராஜமானராக இருப்பார்களென்று சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விஷயம் நேற்று எனது வியாக்கியானத்தினாலும் இன்றைய உபந்நியாசத்தாலும் தங்களெல்லோருக்கும் வியக்தமாகத் தெரிந்திருக்கலாம்.

இது வரையில் சொன்ன எனது உபந்நியாசத்தினால் கடவுள் எந்த பதார்த்தத்தையும் சிருஷ்டிப்பதில்லை என்றும், புண்ய பாபங்களின் பலன்களாகிய சுக துக்கங்களை எந்தப் பிராணிகளுக்கும் கடவுள் கொடுப்பதில்லை என்றும் இதர ஜீவாத்மாக்களின் அதிருஷ்டங்கள் (கர்மங்கள்) எந்தக் காரியத்தையும் செய்யும்படி கடவுளை பிரேரேபிக்கிறதில்லை என்றும், ஜீவாத்மனே தான் செய்த புண்ய பாப கர்மங்களுக்கனுகுணமாக ஜனன மரணாதிகளையும் சுக துக்கங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறானென்றும் வியக்தமாகிறது

கடவுள் பரம பரிசுத்தனாகிய ஸச்சிதானந்த மூர்த்தியாக விருப்பதால், அத்தகைய கடவுளின் பக்தியினாலும், உபாஸனையினாலும், அவரது பவித்ரமான குண ஸ்மரணையினாலும், தியானத்தினாலும், பிரமரகீட நியாயத்தைப் போல. (அதாவது, குளவி, புழுக்களைத் தன்னைப் போலாக்குதல் போல) ஜீவாத்மன்கள் கூட மேற் சொன்ன கடவுளின் குணத்தை அடைவார்களென்று (அதாவது ஸச்சிதானந்த ஸ்வரூபிகளாவார்கள் என்று) எனது உபந்நியாசத்தால் சத் விசார பாராகிய தங்களெல்லோருக்கும் தெரிய வருமென்று நான் நம்புகிறேன்.

இப்போது பவித்ரமாகிய கடவுளின் நம்பிக்கை, ஸ்மரணை, தியானம் முதலானவைகளினால் ஜீவாத்மன்களாகிய நாமும், கிரமமாக பவித்ராத்மன்களாகி கைவல்யத்தை அடையக் கூடுமென்று அநேக பிரமாண யுக்திகளினால் நிச்சயமாயிற்று. ஆனால்; "இந்தக் கடவுளின் உபாஸனையினால் ஸம்ஸார சுக சம்பத்துக்கள் பவித்ரமாகா; ஏனெனில் லௌகிக சுக சம்பத்துகள் பவித்ராத்மனாகிய பரமேசுவரனுக்கு ஸம்பந்தப்பட்டவைகளல்லவாதலால், பவித்ர பரமேசுவரனின் தியானத்தினால் லௌகிக சுக சம்பத்து போக முதலானவைகளை இச்சிக்கும் ஜீவாத்மன்களுக்கு எவ்வித லாபமும் இல்லையல்லவா? நித்ய சுக முதலானவைகளை பகவானது குணங்களாக விருப்பதால் அந்த பகவானது தியானத்தினால் நித்ய சுக முதலானவைகளை ஜீவாத்மாக்கள் அடையக் கூடுமென்பதில் நமக்கு ஸந்தேகமே இல்லை" என்பதாக சில மஹாசயர்கள் அவசியம் சொல்லக் கூடும்.



இதற்கு சமாதானம்.

பகவத் தியானமானது அக்னி, கட்டைகளைத் தஹிப்பதைப் போல் ஜீவாத்மாக்களின் சுபாசுப கர்மங்களை தஹித்து விடுகிறது; அப்போது சம்பூரணமாக கர்மங்கள் எரிந்து நாசமான பின்பு ஜீவாத்மன்கள் பரிசுத்த கைவல்யத்தை அடைகிறார்களென்பதில் நமக்கும் ஸம்மதந்தான்;

ஒரு பெரிய பசுமரத்தை கொளுத்த வேண்டுமென்று ஒருவன் பிரயத்தனித்து ஒரு சிறிய குச்சியைக் கொளுத்தி அதனால் அந்த மரத்தை அங்கங்கே சுடுகிறான்; எது வரையில் அவன் இப்படிக் கொளுத்திக் கொண்டு வருகிறானோ அதுவரையிலந்த மரம் ஸ்வல்ப ஸ்வல்பமே ஆங்காங்குச் சுடப்படும்; மற்ற பாகங்களெல்லாம் ஈரமாகவும், கெட்டியாகவு மிருக்கும். அந்த மரத்தைச் சுற்றி நாலா பக்கமும் தீயை மூட்டிப் பலமாக எரித்தால் அது கூடிய சீக்கிரம் ஸம்பூர்ணமாக எரிந்து போய் விடக் கூடும்; அல்லது அந்த திம்மையின் மேல் பெரிய வஜ்ராக்னி (இடி) விழுந்தால் அந்த க்ஷணத்திலேயே அது பஸ்மமாகப் போய் விடும். இதே மாதிரியாக மேற் சொன்ன தியானம் அவ்வளவு பலமாக இல்லாமலிருந்தால் அந்த தியான மென்ற அக்னியானது சுபாசுப கர்மராசி என்னும் மரத்தை ஸ்வல்ப பாகமே சுடும். இப்படிச் சுடுவதில் முதலில் அசுப கர்மங்கள் (பாபங்கள்) தஹிக்கப் படுகிறது; அந்த பாப கர்மங்கள் நாசமாகிக் கொண்டே வர சுப கர்மங்கள் (புண்யங்கள்) ஜீவாத்மன்களிடத்தில் மிகுதியாகத் தங்குகின்றன. இந்த புண்ய கர்மங்களின் பலத்தினால் ஜீவாத்மாக்கள் மனித ஜன்மத்தை யடைந்தால் அங்கு மஹத்தான ஐசுவரிய மென்ன, ஸர்வாங்க சுந்தர ரூபமென்ன, நிர் வியாதியும் பலிஷ்டமுமான சரீரமென்ன, அதி தீவிரமாகிய ஸுஞான மென்ன, ஜெயிக்க முடியாத பராக்கிரம மென்ன, இதரர்களால் ஜெயிக்க முடியாத ஸாம்ராஜ்ய பதவி முதலான அதிகாரங்களென்ன, இவை முதலான ஸம்பத்துகளைப் பெற்று லோகாதிசயமான அப்யுதய சுகங்களை அனுபவிப்பார்கள்.

அந்த ஜீவன்கள் (புண்ய கர்ம மிகுந்தவர்கள்) தேவ லோகத்தில் உத்பவிக்கும் பக்ஷத்தில் அங்கும் தேவர்களிலும் சிரேஷ்டமான தேவேந்திர பதவிகளைப் பெற்று அணிமாதிரித்தி (சித்தி) களினால் நீண்ட காலம் தேவ சுகங்களை அனுபவிக்கிறார்கள். ஸ்வர்கத்திலும் கூட இந்த பவ்யவர புண்டரீகராகிய (பவ்ய சிரேஷ்டராகிய) ஜீவாத்மாக்கள் பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரத்தினால் தங்கள் ஆத்மகதமாகிய பரமாத்மனது பக்தி உபாஸனைகளை இடை விடாமல் செய்து கொண்டு வருவதால் பாபகர்மங்களின் சேர்க்கைக்கும், அல்லது அபிவிருத்திக்கும் தங்களாத்மன்களில் இடங் கொடுக்காமலிருப்பதால் தேவாயுஷ்யம் முடிந்தவுடன் மனுஷ்ய லோகத்தில் மேற்சொன்னபடி ஸர்வ விதத்திலும் சிரேஷ்ட

புருஷர்களாக மனிதரா யவதரித்து ஸம்பூர்ண தியானத்தை யடைந்து சுபா சுப கர்மங்களை (புண்ய பாவங்களை) நீர் மூலமாக தஹித்து கடைசியில் கைவல்யத்தை அடைவார்கள்.

ஸத் புருஷர்களே !

பரம பரிசுத்த பரமாத்மனது உபாஸனை தியான முதலானவைகளால், மஹோத்கிருஷ்ட மானதும், அனன்யலப்யமும் (வேறிடத்தில் கிடைக்காதது மாகிய) இஹலோகஸுக ஸம்பத்துகளுங் கூட கிடைக்கு மென்று இப்போது தங்களுக்கு நன்றாக ஏற்பட்ட தல்லவா? ஆகையால் இஹலோக பரலோகமாகிய உபயலோக ஸுகாபேக்ஷிகளும் நிஷ்களங்கமான பரமாத்மனையே விசாரணையா லறிந்து நம்பி தியானிப்பதே அதி உத்தமமானது

பாருங்கள் !

மஹா வித்வாம்ஸனாகிய அமர ஸிம்மன் தனது கோசபிராரம்பத்தில் பரமாத்மனை எப்படி ஸ்துதித்திருக்கிறா ரென்றும், பரமாத்மோபாஸனையினால் உண்டாகும் பலன்களை எவ்வளவு ரஹஸ்யமாகவும் கம்பீரமாகவும் தெரிவித்திருக்கிறார் என்பதையும் கீழ்வரும் சுலோகத்தால் சற்று கவனியுங்கள்:—

அமரகோச மங்கள ச்லோகம்.

யஸ்ய ஜ்ஞாந தயாஸிந்தோ ரகாதஸ்யாநகா குணா:।
ஸேவ்யதாமக்ஷயோ தீரா: ஸ ச்ரியே சாம்ருதாய ச॥

இதன் பொருளாவது:—ஞானத்திற்கும் தயைக்கும் நிதியாகிய பரமாத்மனது நிஷ்களங்கமான குணங்களை தீராகிய, அதாவது ஞானிகளாகிய நீங்கள் பஜியுங்கள்; இதனால் உங்களுக்கு அப்யுதயமும் (இஹலோக சுகமும்) நிச்ரேயஸமும் (மோக்ஷமும்) லபிக்கும்.

ஐயா மஹநீயர்களே !

இந்த அமரகோசத்தின் மங்கள சுலோகத்தைப் பிள்ளைகளுக்கு நீங்கள் கோசாரம்பத்திலே சொல்லிக் கொடுக்கிறீர்கள்; ஆனால் பெரிய பண்டிதர்கள் இதை நன்றாக மேன்மேலும் சாந்த சித்தத்தோடு விசாரித்தால் இன்றைய எனது பாஷணையில் விவரித்தபடியே கடவுள் எப்பேர்ப்பட்டவரென்றும், கடவுளின் குணங்கள் எத்தன்மையனவென்பதும், பகவானை அல்லது பகவத் குணங்களை உபாஸிப்பதி லுண்டாகும் பிரயோசனங்களெவை என்பதும் நன்றாகத் தெரியவரும்.

முடிவுரை.

கடவுள் எல்லாவற்றையும் சிருஷ்டித்ததைப் போலவே ஒரு காலத்தில் ஸம்ஹரிக்கிறா ரென்று சிலர் சொல்வதுண்டு. கடவுள் சிருஷ்டிக்கிறா ரென்னும் சித்தாந்தத்தை ஒப்புக்கொள்வதினால் அநேக தோஷங்கள் தலை காட்டுகிறதென்பது சித்தமானதின்மேல், கடவுள் அனந்த ஜீவாத்மன்களோடு கூடிய சமஸ்த லோகத்தையும் ஸம்ஹரிக்கிறா ரென்று சொன்னால் முன் சொன்னதைக் காட்டிலும் கோடிக்கணக்கான தோஷங்களைக் கடவுளின்மேல் கற்பித்ததைப் போலாகிற தென்று சொல்வதே போதுமான தாகையால் இன்



னும் இது விஷயத்தில் தங்கள் சமயத்தை அதிகமாகக் கைக்கொள்ள வேண்டியதில்லை.

இந்த இரண்டு நாட்களிலும் இவ்விடம் வந்து மனப்பூர்த்தியாக எனது உபந்நியாசத்தை பக்ஷபாதமில்லாமல் கேட்ட சமஸ்த வைஷ்ணவ சைவ மஹாசயர்களுக்கும், மேலும் ஜைன மஹாசயர்களுக்கும் நான் ப்ரீதியோடு வந்திக்கிறேன்.

"சிவ" என்ற சப்தத்திற்கு கல்யாண ஸ்வரூபியான பரமாத்மனென்று அர்த்தம். அந்த சிவ சப்த வாச்யமான பரமாத்மனை உபாஸிக்கிறவர்கள் சைவர்கள். "விஷ்ணு" சப்தத்திற்கு "விஸ்வம் வ்யாப்நோதீதி விஷ்ணு:" என்று சொல்லியிருப்பதால் எந்த பரமாத்மனது ஞானஜ்ஜோதியானது லோகாலோகங்களை வியாபிக்கிறதோ அந்த பரமாத்மனென்று அர்த்தம். அந்த பரமாத்மனை ஆராதிக்கும் பவ்வியாத்மன்கள் வைஷ்ணவர்கள். "ஜைந" என்ற சப்தத்தின் அர்த்தமுங் கூட சமஸ்த கர்ம களங்கங்களினால் சர்வதா ரஹிதனான பரமாத்மனை ஆராதிப்பவர்கள் என்றே ஏற்படுகிறதென்று நேற்று உபந்நியாஸத்தில் நீங்கள் கேட்டிருக்கிறீர்களாகையால் இப்போது நான் சைவ வைஷ்ணவ ஜைனர்களென்ற சப்தமாத்திரத்தினால் பேதமுள்ள பரிசுத்த பரமாத்மனை ஆராதிக்கும் பவ்யாத்மன்களை ஏகபிரகாரமாக வந்தித்ததற்கு யாரும் ஆக்ஷேபிக்க மாட்டார்களென்று நம்புகிறேன்.

ஓ பிரிய மகாசயர்களே!

எனது இரண்டு நாள் உபந்நியாசங்களில் யாதேனும் கடின பதங்கள் என்னால் சொல்லப்பட்டிருந்தால் தாங்கள், உதாரமனதினால் க்ஷமிப்பீர்களென்று நம்புகிறேன்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:.

## ஓர் வேண்டுகோள்.

தலைமகனு நாலு முளியுமிம்மூன்றும்
நிலைமைய தாகும் பொருள். — அருங்கலச் செப்பு.

பூமகட்கோ ரெழின் முகமெனத்திகழுஞ் சீர்மலிந்த இப்பரத கண்டத்தில் குணகடல் குமரி குடகம் வேங்கடம் என்னும் நான்கு எல்லையினுள்பரவி செவிக்கின்பம் மனக்கின்பம் பயப்பதாகிய அமிழ்தினுமினிய செந்தமிழ் மொழியிலே நமது பெரியோர்கள் நமக்குப் பெருந்தனமாகப் பாடியளித்த நூற்கள் எண்ணில; அவற்றில் பல, சமயத்துவேஷிகளாலும் வேற்றரசர்களாலும் அக்கினிக்கிரை யாக்கியும் ஜலப் பிரவாகத்தில் விடப் பட்டும் அழிந்து விட்டன; மற்றுஞ் சில, பர சமயத்தவர்கள் மயக்க உரைகளெழுதி தமது சமயத்தவர் இயற்றிய தெனக் கொள்ளப்பட்டுள்ளன; இன்னுஞ் சில நம்மவர்கள் கவனக்குறைவால் சிதல் கட்கிரையாகிச் சீர் கெட்டன. எஞ்சிய சில, நம்மவர்கத்தில் பரணைகளில் துயில் கொள்கின்றன. அவற்றிற் சிலவே தமிழபிமானிகள் அச்சுவாகன மேற்றி வெளிப்படுத்தினர். இவர்களது காருண்ய செயலுக்கு நாம்

பன்முறை வந்தனம் செலுத்த வேண்டியவர்களாக விருக்கிறோம். நம்மவர்களில் சிலர், வண்டமிழும் வட மொழியும் வளம்பட கற்றுணர்ந்து, மக்கட்கு இன்றியமையாத வேண்டியதான அறவுரைகளை எழுதிவைத்த ஆன்றோர் நூற்களை வெளிப் படுத்தினால் 'அந்நூற்களை நம்மவர்கள் விலை கொடுத்து வாங்காமல், அந்நூல் எங்கள் தகப்பனார் அல்லது பாட்டனார் ஓலையில் எழுதி வைத்திருக்கிறார் அதைப் பார்த்துக் கொள்ளுகிறோம், என்று கூறுகிறார்கள். இவர்கள் இப்படி கூறுவதினால் நூற்களை வெளியிடுபவர்கள் தளர்ச்சி யடைகிறார்கள். முன் பணம் செலவு செய்து வெளியிடும் நூற்களை ஜைனர்கள் வாங்குவதில்லை யானால், இப்பொழுது இலை மறை காய் போல் மறைவு பட்டுக் கிடப்பவைகளும் இன்னும் சில நாட்களில் இறந்தொழியும் என்ற விஷயத்தில் ஜோதிடமும் பார்க்க வேண்டுமோ? பல்லாயிரக் கணக்காக வுள்ள தமிழ் நாட்டு ஜைனர்களிடம் ஐந்நூறு புஸ்தகங்கள் கூட விற்பது அரிதாயிருக்கின்றன. என்னே மதாபிமானம்!

கனவான்களே!

இருதயம் (Heart) இல்லாமல் மனிதன் எப்படி உயிர் வாழ்ந்திருக்க முடியாதோ அப்படியே தத்துவங்களைக் கற்பிக்கும் நூற்கள் இல்லாத மதமும். ஒவ்வொரு மதத்தினரும் இது விஷயத்திற்காக பல்லாயிரக் கணக்காக ரூபாய்கள் செலவு செய்வதை நீங்கள் பார்க்க வில்லையா? சில மதத்தினர்கள் 'நமக்கென்று அருமையான நூற்கள் இல்லையே!' என்று பரிதபிப்பதைக் கேட்ட தில்லையா? சில மதத்தினர் வேறொரு மதத்தினர் இயற்றிய அருமையான நூற்களை தங்கள் மதத்திற்காக்க ஆசைப்பட வில்லையா? இப்படி யெல்லாம் ஒவ்வொரு மதத்தினரும் அவாவுகின்றதை நாம் பார்த்திருக்கின்றோம். நம்மதத்தினர்க்கோவெனின் இப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் யாதுமில்லை. நமது பெரியோர்கள் நம்மை இவ்வித குறையில் ஆளாக்க வில்லை. இத்தகைய பாக்கியம் பெற்ற நாம் நமது செல்வத்தை வீணே இழந்து விட்டு வறுமையாளராக விருக்க இஷ்டப்படலாமா? இருதயம் போன்றுள்ள இருடிகளருளிய திவ்விய கிரந்தங்களை இவ்வித சீர் கேடான நிலையிலிருக்க மனங் கொள்ளலாமா? பல இடுக்கணில் அழிந்து எஞ்சியுள்ள நமது நூற்கள் சிதைந்தும் புதைந்தும் போயினபின் நாம் கஷ்டப்பட்டு ஏங்குவதை விட, முன்னமே அவ்வித கஷ்டப் படாமலிருக்கச் செய்து கொள்வது நலமல்லவா? முற்றும் போயினபின் கஷ்டப்படுவது எதையொக்கு மெனின்:— காட்டிலுள்ள பெரும் பாம்பு தான் நெடுந் துயில்கொள்ளும் பொழுது, அப்பாம்பைச் சுற்றி சில சமயங்களில் அக்காடு தீப்பற்றி எரியா நிற்கும்; அப்பொழுது அப்பாம்பு தலை தூக்கித் தன்னைச் சுற்றித் தீப்பற்றி எரிவதை யுணரும்; உணரினும் அது "நம்மை தீப்பற்ற வில்லையே எங்கேயோ தீப்பற்றி எரிகிறது; நமக்கென்ன; நாம் துயில் கொள்வோ" மென்று தலையை மடக்கிப் படுத்துக்கொண்டு நெடுந்துயில் கொள்ளும். காட்டுத் தீயானது காற்றின் வேகத்தினாலே வெகு விரைவில் பாம்பின் மீது வந்து பற்றும். அப்பொழுது அப்பாம்பானது இத்தீயினின்றும் தப்பித்துயிர் வாழ குதிக்கும். குதித்தும் என்ன பயன்; அதற்கணித்தாயுள்ள பக்க மெல்லாம் அக்கினி மயமாயிருக்க, இஃது உயிர் வாழ்வ தெங்ஙனம், அவ்வக்கினியிலே மடிய வேண்டுவது



தான் அதன் முன்யோசனையின் பலன். இதையே யொக்கும் நமது நூற்களைக் காப்பாற்றாது பொறுமைகொள்வதும். ஆதலால் சிராவக மஹாசயர்களே! நாம் இனியாவது பெரியோர்களருளிய திவ்விய கிரந்தங்களை வெளிப்படுத்தியும், வெளிப்படுத்தும் நூற்களை வாங்கியும் புகழ் புண்ணியங்களைப் பெற்றுய்வோமாக.

தவிர, இது விஷயமான வேண்டுகோளில் நான் சில நாட்கள் தலையிட்டு புலருடனும் உரையாடி வருகின்ற காலத்து ஒரு நாள், (27-12-1920) வேதாரண்யம் ஜவுளி வியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ-S. அப்ய முதலியார் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது மேற் கூறிய விடயங்களை அவர் திருமுன் கூறினேன். அப்பொழுது அவரது உளம் "அகமும் புறமும் துறந்த அரிய முனிவர்களருளிய திவ்விய கிரந்தங்கள் இவ்வாறு ஆகின்றன" வென்றிரங்கி "கிரியை" என்னும் கிரந்தத்தை தமிழுரையுடனும், "திருப்பாமாலை" என்னும் செந்தமிழ் நூலை சில குறிப்புகளுடனும் வெளியிடுவதாக நாடிற்று. அவ்வாறே அவ்விரு நூல்களும் அவரது பொருளுதவியால் அச்சில் கூடிய சீக்கிரத்தில் வெளிவரும். அவ்விரு நூல்களில் முதலாவதாக அச்சிடுவது எந்நூலெனின், பண்டைய இலக்கண உரையாசிரியர்களால் காட்டாக எடுத்தாளப்பட்டதும் அரும் பெரும் பொருள்களை அடக்கி யுள்ளது மான திருப்பாமாலை என்னும் நூலே யாகும். இஃது ஆசிரியப்பா அகவற்பாக்களாலாயது. இதில் ஆலோசனை பக்தி, சித்தபக்தி, சைத்திய பக்தி, பஞ்ச குருபக்தி, ஆருகதபக்தி, நந்தீசுவர பக்தி, பரகதி அகவல், பஞ்ச கல்யாண அகவல்......இருபத்துநான்கு தீர்த்தங்கரர் அகயல் சர்வாபத சுத்தி அகவல் முதலிய பாக்கள் அடங்கி யுள்ளன. இப்பாக்கள் படிப்பவர் மனத்தைப் பசுமரத்தாணி போல் பதிக்கவைக்கும் செவ்விய நடையில் அமைந்துள்ளன. இந்நூல் வெளிவரின் தமிழ் மக்கட்கு மிக்க பிரயோசன கரமாயிருக்கும்."

இத்தகைய நூலை யடியார் வெளிப்படுத்த முன் வந்ததைக் குறித்து நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டியவர்களாக விருக்கிறோம். இவரைப் போலவே மற்றைய கனவான்களும் நமது கிரந்தங்களை வெளியிட்டுப் புகழ் புண்ணியங்களைப் பெற்றுய்ய வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
மேல் மின்னல்-சக்கிரவர்த்தி.

---

## மேல் மலையனூர் A. P. சந்திரநாத நயினார்.

---

இவர் 1920௵ டிஸம்பர்மீ 11௳ ஆஸ்த்மா என்னும் வியாதியினால் பீடிக்கப்பட்டு தேகவியோக மடைந்தார். இச் செய்தியைக் கேட்டவுடன் எமக்கு ஆற்றொணாத் துயர முண்டாயிற்று. இவருக்கு வயது சுமார் 56 இருக்கும். ஆயினும் இவர் இன்னுஞ் சிலகால மிருந்தால் ஜைனமதத்திற்கு எவ்வளவோ நன்மையாக விருக்கும். இவர் தனது ஜீவியகாலமுடிவு வரையி

னும் ஜைனமதம், கல்வி நாகரீகம் முதலியவற்றில் சிறந்து விளங்க மிக்க ஊக்கத்துடன் உழைத்துவந்தார். இவர் தமிழ்நாட்டு ஜைனர்களுக்கென்று ஓர் தனிச்சங்கமில்லாதிருப்பது பெருங்குறையென வுணர்ந்து சென்னை மாகாண ஜைன சங்கம் (The Madras Jain Association) என்ற ஓர் சங்கத்தை ஸ்தாபித்ததுமன்றி, அச்சங்கத்திற்கு அக்கிராசனராகவு மிருந்து வந்தார். இவர் அச்சங்கமூலமாய் பல அரிய பிரசாரங்கள் செய்து வந்தார். அன்றியும் இவர் "திண்டிவனம்" என்னும் நகரில் சரஸ்வதி விலாஸம் என்ற ஒரு அழகிய கட்டடம் பொது ஜனங்களின் உதவியால் கட்டி முடித்து, அதில் ஜைன் போர்டிங் (Jain Boarding) ஒன்றையும் சென்ற வாண்டில் திறந்து வைத்தார். இவர் ஜீவியத்துடன் இன்னுஞ் சிலகால மிருந்தால் நமது சமூகத்திற்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்வாரென்று நாம் எதிர்பார்த்திருந்தோம். 'நாமொன்று நினைக்க நம் வினை யொன்றாய்முடிந்தது' இத்தகைய பெரியாரை நம் ஜைனசமூகம் இழந்தது பெரிய நஷ்டமேயாகும். நமக்கு வேண்டியதே நமனுக்கும் வேண்டியதாயிற்று. என் செய்வது! ஆயினும் இவருடைய ஆத்மன் ஜைனமத முன்னேற்றத்திற்கே உழைத்து நீத்தமையின், அவ்வாத்மன் மறுபடியும் வேறொரு சரீரத்துடன் சன்மார்க்கத்தை ஏற்று ஜைனசமயம் விருத்தியடையும்படி உழைப்பெடுத்துக் கொள்ளுமாறு நமதிர்ஷ்டம் கூட்டுவிக்குமென நாம் நம்புகிறோம். இத்துடன் இவர் தம் குடும்பத்தினரை ஆற்றொணாத் துக்கத்தி லழுத்தவிட்டு உயிர் நீத்ததற்கு நம்முடைய அனுதாபத்தை இவர் சுற்றத்தாருக்கு இதனால் அறிவிக்கிறோம்.

பத்திராதிபர்.

---

## கார்க்கள மஹாபூஜை.

மங்களூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 30 மைல் தூரத்திலிருக்கும் தென் கன்னடம் ஜில்லா கார்க்கள மஹா க்ஷேத்திரத்தில் விராஜமானராயிருக்கும் ஸ்ரீ பாகுபலி ஸ்வாமிகளுக்கு 1921ஆம் பிப்ரவரிமீ 13உ தொடங்கி டிஷ மீ 23உ வரையிலும் மஸ்தகாபிஷேக மகாபூஜை நடப்பதாக நமக்கு சமாசாரம் வந்திருக்கிறது. நற்காட்சியை யளிக்கும் இம்மகா பூஜை சுமார் 85 வருடங்கட்கு முன் நடந்ததாகத் தெரிகிறது. இம்மகா பூஜைக்கு இந்திய நாட்டின் பல பாகங்களிலுள்ள ஜைனர்கள் பல்லாயிரக் கணக்காக வருவார்கள். அன்றியும் ஜைனகஜட் பத்திராதிபரும், இண்டோர் ஹைகோர்ட் ஜட்ஜியாயு மிருந்த ஸ்ரீமத்-ஜெகமண்டர்லால் ஜைனி எம்-ஏ., எம். ஆர், ஏ, எஸ்., அவர்கள் விஜயம் செய்யப்போவதாகவும், அவ்வமயம் அகில இந்திய ஜைன மகாநாடு கூடப்போவதாகவும், அம் மகா நாட்டில் பல அரிய கனவான்களால் சிறந்த உபந்நியாசங்கள் நடைபெறுவதாகவும் நமக்கு சமாசாரம் எட்டியிருக்கிறது. ஆதலின் நம் தமிழ் நாட்டு சிராவக சிராவகிகள் இம்மகா பூஜைக்குத் தவறாமற் சென்று ஸ்ரீ பாகுபலி ஸ்வாமிகளைக் கண்ணாரக் கண்டு நாவார வாழ்த்தி மகா புண்ய சம்பாதனையைப் பெற்றுய்வார்களாக.

---

OFFICE OF ... 19 APR 1921

ஓம்
ஸ்ரீஜிநாயநம:.

# தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)


| புத்தகம் | இரௌத்திரிஆம் தைமீ | சஞ்சிகை |
| --- | --- | --- |
| 3 | 1921ஆம் ஜனவரிமீ | 10 |


## தருமோபதேசம்.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தங்கள் தங்கள் தேசாச்சா ரத்தை விட்டுத்
தாங்கள்புது நாகரிகங் கண்டார் போலப்
பங்கமிக நெற்றியிலே சிகைகள் நீளப்
பகாலுமார் சாம்புவந்தர் வேட மிட்டுச்
சிங்கப்பூர் வெட்டென்றுஞ் சிலோன்வெட் டென்றுஞ்
சின்னுபின் னப்படவே யுரோமம் வெட்டித்
தங்குவயி ரவர்வால்போற் சீவி விட்டுத்
தலைநிமிர்ந்து திரிவோரே புலனி லாரே. (ருக)

கள்ளதனை வாங்கியுடன் வாயில் வைத்துக்
கண்மூடிப் பருகியவ னடுத்தோர்க் கீய
எள்ளளவு மெச்சிலென்ற நினைப்பே யின்றி
எல்லோரும் வாய்வைத்துக் குடித்தல் போலக்
கொள்ளைமிகுங் காப்பிவிற்குங் கடைக்குள் ளேபோய்க்
கூட்டுறவா யொருவரெச்சி லொருவர் வாயின்
உள்ளுறவே சிற்றுண்டி தின்று காப்பி
யுவந்துகுடிப் பவர்கள்பெருங் குடிய ராவார். (ருஉ)

மனத்தினிலே சமத்துவமா நிலைமை யின்றி
வாய்ப்பேச்சில் மட்டுமெல்லாஞ் சமமே யென்று
அனத்தினில்வேற் றுமையில்லை யெனப்பல் லோரும்
அடுத்திருந்தெச் சில்கலந்தா கார முண்டு
வனத்திலுறும் விலங்கினங்கள் போலே கீழும்
வாய்ந்திட்ட மேலுமொன்றாய் மருவச் செய்து
கனத்தகுலா சாரம் விட்டுத் திரிவோ ரிந்தக்
காசினிக்கு வசுரரெனக் கழற லாமே. (ருங)

# தருமசீலன்.

இரௌத்திரிஹு தைமீ.

## நூல்.

நூல் என்பது,

"பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு"

என்றபடி, தன் சொற்களே பஞ்சாகவும், செய்யுளே இழையாகவும், செம்மை யாகிய சொற்களை அறிந்த புலவனே நூற்கின்ற பெண்ணாகவும், குறைவில்லாத வாயே கையாகவும், அறிவே நூற்குங் கதிராகவும், அமைய அவ்வறிவுடைய புலவரால், உலகினர்க் கின்றியமையாததாக ஆக்கப் படுவதாம். சாஸ்திரத்தை இங்ஙனம் நூல் என்றது உவம வாகு பெயராம். பாவை போல்வாளைப் பாவையென்றதுபோல, நூல் போன்றிருக்கும் சாஸ்திரமும் நூல் என்று கூறப்பட்டது. நூலாவது, பலவாகிய நுண்ணிய பஞ்சின் நுனிகளால், கை தேர்ந்த பெண்ணொருத்தியால், தனது செயற்கை நலந் தோன்ற ஓரிழைப் படுத்தலாம். சாஸ்திரமாவது, அவ்வாறே, அநேகமாகிய சொற் பரப்புக்களால், பெரும் புலவனொருவன், தனது அறிவின் மாட்சிமையினாலே, பிண்டம் (பல அதிகாரங்களைக் கொண்ட தொகுதி), படலம், (அதிகாரம் அதாவது பல சாதிப் பொருள்களைக் கொண்ட பெரும் பிரிவு) இயல் (ஒரு சாதிப் பொருள்களைக் கொண்ட சிறு பிரிவு) சூத்திரம் (செய்யுள்) என்னும் யாப்பு நடை படக் கோத்தலாம். நூல் நூற்றல் போலவே, சாஸ்திரமும் செய்யப் படுவதாதலின், அது நூலெனப் பட்டது. இனி,

"உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்



கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு"

என்றபடி, கட்டை மரத்தின் கோணலைப் போக்குகின்ற [illegible] நூலின் மாட்சிமையைப் போல, சாஸ்திரமானது, [illegible] உள்ள அறிவின் வளத்தை வளரச் செய்து, நினைக்கப்பட்ட தீமையாகிய அறியாமையை ஒழித்து, மாந்தரது மனத்தின் கோணலைப் போக்கக் கூடிய தாதலின், இதற்கு நூலெனப் பெயர் வந்தது எனக் கூறுதலுமொன்று. இத்தகைய நூலின் பயன் யாதெனில்,

"அறம்பொரு ளின்பம்வீ டடைதல்நூற் பயனே"

என்றபடி, தருமம், செல்வம், உலக சுகம், மோக்ஷம் ஆகிய நான்கையும் அடைதலாம். இதுபற்றியே, ஆன்றோர்

"நூல்பல கல்"

என்றார்கள். ஜீவர்கள் இவ்வுலகத்தில் இல்லறத்தையோ துறவறத்தையோ முறை பிசகாது நடத்தி இம்மைப் பயனை யடைந்து முத்தி யின்பத்தை யெய்துவதற்கு இன்றியமையாதனவா யிருப்பன அறிவு நூல்களேயாம். இவற்றின் துணையின்றி ஒருவன் இம்மை மறுமைச் சுகங்களை அடைதல் இயலாது; சில அறிவிலிகள், பெரியோர்பலர் ஓதா துணர்ந்து முத்தி யடையவில்லையா என்று வீண் குதர்க்கம் பேசுவர்; அங்ஙனம் ஓதாதுணரும் பெரியோர்களும், தமக்குத்தாமே உணர்வது நூற்கருத்துக்களே என்பது அந்தக் குதர்க்கிகளின் புத்தியில் எட்டுவதில்லை. எவ்வகையினும் மனிதர்க்கு நூலே துணை யென்பதும், நூலுணர்ச்சியில்லார் மிருகங்களையும் கண்ணில்லாத குருடரையும் நிகர்ப்பர் என்பதும் மறுக்கத் தகாதவிஷயங்களாம். இவற்றை,

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து"

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்ற ஆன்றோர் செய்யுட்களானுணர்க. இங்ஙனம் நூலானது மனிடர்க்கு இன்றியமையாததாயிருத்தல் பற்றியே, கடவுளரும், மற்றப் பெரியாரும் ஆதி நாட்டொட்டே, வேத வேதாங்கங்களையும், ஆகமங்களையும், சோதிட சாஸ்திரம், கணித சாஸ்திரம், வான சாஸ்திரம், நீதி சாஸ்திரம், இலக்கண சாஸ்திரம், மாந்திரீக சாஸ்திரம், புராணங்கள், இதிகாசங்கள் முதலிய பல அரிய நூல்களையும், முதனூல், வழி நூல், சார்பு நூல்களாக தேவ பாஷையிலும், திராவிடத்திலும், இன்னும் பல பாஷைகளிலும் இயற்றி வைத்தனர். அவற்றைப் பண்டைக் காலத்திலிருந்தவர்கள் ஓலைச் சுவடிகளிலும் செப்பேடுகளிலும் கஷ்டப்பட்டெழுதிக் காப்பாற்றி ஓதியுணர்ந்து, நற்பயனை யடைந்து, தங்கள் பெயர் என்றும் விளங்குமாறு பல அரிய தொழில்களைச் செய்து புகழ் பெற்றிருக்கின்றனர். அவர்கள் அங்ஙனம் நூலுணர்ச்சியால் பெற்ற புகழ் என்றென்றும் நிலை பெற்றதாய் விளங்குகின்றது. எண்ணற்ற புத்தகங்களை மணிக் கணக்கில் அச்சிட்டு வெளிப் படுத்திப் பரப்பி விடும் அச்சியந்திரங்கள் முதலிய சாதனங்கள் இல்லாத அக்காலத்திலும் அவர்கள் சாஸ்திரங்களைக் காப்பாற்றி வந்த விதத்தை நினைத்தால் மிக்க ஆச்சரிய முண்டாகிறது.

இப்படி யெல்லாம் காப்பாற்றி வந்தும் இந்நாட்டில், வேற்றுத் தேய உயிர்க்கல்வி வந்து பரவவே இந்நாட்டினர், முன்னிருந்த நமது உயிரற்ற கல்வி வேண்டியதில்லை யென்று அதைத் தள்ளி இடையில் வந்து நுழைந்ததை, 'இதுவே நமக்குயிர்' என்று பாராட்டத் தலைப்பட்டனர். அதனால் நம்முடைய அரிய நூல்களெல்லாம் இருந்த இருந்த விடங்களிலேயே புழுங்கி மடியத் தலைப்பட்டன. இவ்வாறு நேர்ந்த போது, பல ஆண்டுகட்கு முன்னர், சிலர், 'நம்முடைய நூல்கள் நசித்துப் போகக் கூடிய நிலைமையிலிருப்பதால், அச்சியந்திரங்கள் மிகுந்திருக்கும் இக் காலத்தில் அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தி விடவேண்டும்' என்று கருதிப் பல அரிய சாஸ்திரங்களை யெல்லாம் வெளிப்படுத்தினார்கள். ஆனால், அவர்களிற் பலர், வியாபாரஞ் செய்து பொருள் சம்பாதிக்க வேண்டு மென்னும் நோக்க முடையவர்களாதலாலும், கல்விப் பயிற்சி யில்லாத சாமான்யர்களாதலாலும், சாஸ்திரங்களென்று, வெள்ளைக் கடிதத்தைக் கறுப்பாக்கிப் புத்தக வடிவஞ் செய்து எங்கும் கடுதாசிக் குப்பைகளைப் பரப்பி விட்டார்களே யன்றி உண்மையாகவே அந்நூல்களை நல்ல விதத்தில் வெளிப்படுத்த வில்லை. இவர்கள் செய்த வேலை குளிக்கப்



போய்ச் சேற்றைப் பூசிக் கொண்ட விதமாக ஆகி ஆபாசப்படிப்பே நாடெங்கும் பரவி அது இன்னும் மாறாமலே யிருந்து வருகிறது. இன்னும் சிலர், சில சாஸ்திரங்களை, மிக்க பிரயாசை யுடன், பல வழியிலும் பொருளீட்டி, அப்பொருளின் சகாயத்தால் நல்லவிதத்தில் அச்சிட்டு வெளிப் படுத்தி யிருக்கின்றனர். ஆனால் இவர்கள், இக்காலத்தில் கேள்வி முறையில்லாமலிருப்பதால், தங்கள் தங்கள் நோக்கங்களுக்கனுகூலமாக, விஷயங்களைத் திருத்தியும், புகுத்தியும், நடுநிலைமை யற்று அநேகம் மாறு பாடுகளைச் செய்தும், பேராசைக் குணத்தால் அந்தப் புத்தகங்களுக்கு அளவுக்கு மிஞ்சிய விலை வைத்தும் உலகத்தார்க்குப் பேருதவி புரிந்து புகழடைந்திருக்கின்றனர். சில பரோபகார சிந்தையுள்ள புண்ணிய சீலர்கள் மட்டும் சில நூல்களைப் பெரும் பாலும் நல்ல விதத்தில் பிரதி பலனை யெதிர் பாராமல் வெளிப்படுத்தி யிருக்கின்றனர். ஆனால், நம்முடைய அரிய சாஸ்திரங்களில் இவ்வாறு வெளியானவைகள் ஆயிரத்திலொரு மடங்கு கூட இல்லை யென்று சொல்லலாம். இன்னும் அநேகம் அருமையான நூல்களெல்லாம் ஒரு வகையிலும் வெளிவாராமலொழிந்தே போயின. வளையாபதி, குண்டலகேசி முதலிய நூல்கள் இருக்குமிடமே தெரியவில்லை; இன்னுஞ் சொற்ப காலத்திற்குள், அவற்றின் பெயர்களும் மறைந்து விடக் கூடியனவா யிருக்கின்றன.

நம் நாட்டினர் புதிய முறைகளை அனுஷ்டித்து அவற்றிலும் நேரான போக்கில் போகாமல் கோணல் வழிகளில் திரும்பி இரண்டும் கெட்டவர்களாய் இவ்வாறு நூல்களை நசிக்கச் செய்து வந்தாலும், இவர்கள் எவர்களுடைய வழியில் சிலவற்றைக் கோணலாகக் கொள்கின்றனரோ அந்த வேற்றுத் தேயத்தவரோ இவர்களைப் போன்றிருப்பதில்லை. அவர்கள் நூல்களைப் பாதுகாத்து விருத்தி செய்யும் விஷயத்தில் மிகவும் ஊக்க முள்ளவர்கள். பாரீஸ், லண்டன், ஜர்மனி, அமெரிக்கா முதலிய விடங்களில் பற்பல லைப்ரெரிகளை ஸ்தாபித்து, அவற்றில் தங்கள் தங்களுடைய அரிய சாஸ்திரங்களைச் சேகரித்துக் காப்பாற்றி வைத்திருப்பதோடு அன்னிய நாட்டு நூல்களையும் தேடி வைத்துக் காப்பாற்றி வருகின்றனர்; நம்முடைய நாட்டில் இப்போது காணப்படாமலிருக்கும் பல நூல்களையுங் கூட பாரீஸ் லைப்ரெரியில் காணலாமென்று அறிவுடையோர் கூறுகின்றனர். பிரெஞ்சுக்காரர்கள் முதன் முதல் இந்தியாவுக்கு வந்த போது, ஏட்டுச் சுவடிகளிலிருந்த நூல்களைத் தான் முக்கியமானவைகளெனக் கருதி எடுத்துக் கொண்டு போனார்களாம். இன்னும், வட மொழியிலிருந்த

பல அரிய நூல்களெல்லாம் ஜெர்மனி தேசத்து லைப்ரெரியிலிருப்பதாக மதி நுட்ப முடையவர் தெரிவிக்கின்றனர். என்னே இவர்களுடைய அறிவு! நூல்களின் விஷயத்தில் இவ்வளவு கவன முடையவர்களாயிருந்து வந்ததினாலன்றே மேற்கூறிய தேசத்தவர்களெல்லாரும் மிக உன்னத பதவியிலிருந்து வருகின்றனர். இன்னும் லண்டன் லைபரெரிக்கு நம்முடைய தேசத்தில் வெளியாகும் ஒவ்வொரு காலணா புஸ்தகமும் போகிறது.

இவர்கள், சாஸ்திர விஷயத்தில் காட்டி வரும் ஊக்கத்தைக் கண்கூடாகக் கண்டிருந்தும், இவர்களுடைய வழிகளைப் பின்பற்றுகிறோமென்று திரியும் நம்மவர்களிற் பலர், இவர்களுடைய இத்தகைய நற் கொள்கைகளை யெல்லாம் தள்ளி விட்டு, சிரசில் முன்னே சிகை வைத்து நீட்டி வளர்த்து விடுவதையும், காலர், நெட்டை, சூட், பூட்ஸ், மேஜோடு, தொப்பி முதலியவற்றை அணிவதையும், மேஜைகளின் பேரில் தட்டுக்களை வைத்து ஜாதிபேத மின்றிக் கரண்டிகளால் ஆகார முண்பதையும், இன்னும் நம்தேசத்திற் கொவ்வாத சில சீர் கேடான செய்கைகளையுமே சிறந்த வைகளென எடுத்துக் கொண்டனர். இவற்றோடு பழைய நூல்களை வெளிப்படுத்துவதிலும், புதிய நூல்களை இயற்றுவதிலும், புதிய முறைகளென, அன்னிய தேசத்துச் சில முறைகளை யெடுத்துக் கொண்டனர். அவற்றில் நூல்களை அரை குறையாக்குவதும், செய்யுட்களையும் பதங்களையும் சந்தி கெட்டு நிற்கும்படி செயவதும், பதங்களைத் திருத்தி விபரீத அர்த்தங்களை யுண்டாக்குவதும், புதிது புதிதாக உபயோக மற்ற விஷயங்களை இடை யிடையே சேர்ப்பதும், நம்தேசஒழுக்கங்கள் பரவாமல் வேற்றொழுக்கங்கள் பரவத்தக்க விஷயங்களையே பெரும்பாலும் சேர்த்தலும் மலிந்து கிடக்கின்றன. நூல்களை முறையாக முற்றுறக் கற்றலும், செய்யுட்களாலும், வசனத்தாலும், பண்டைய நூற்கருத்துக்களைத் தழுவிப் புதிய நூல்களை இயற்றுதலும், அடியோடு தொலைந்து விட்டன. மேல் நாட்டார் மிக்க பிரயாசையுடன் முறையாக வெளிப்படுத்தும் நூல்களை மொழி பெயர்த்துவெளிப்படுத்தலையே அநேகர் சிறந்த புலமை யெனக் கொண்டு அதே வேலையிலிருந்து வருகின்றனர். நாமும் அவர்களைப் போலவே கல்விகற்று நம்முடைய பாஷையில் சுயமாக ஒரு நூலை வெளிப்படுத்துவோமே என்று சிறிதும் நம்மவர் நினைப்பதில்லை. இப்படி அன்னிய பாஷை மொழி பெயர்ப்புக்களாக வெளிவரும் நூல்கள் ஒவ்வொரு வருஷத்திலும் ஆயிரக் கணக்காக வெளிவருகின்றன. இப்படி வெ



ளிவரும் நூல்கள் எப்பொழுதும் நிலைத்து உலகினுக்குப் பேருதவி புரிகின்றனவா என்று பார்த்தால் மின்னலைப் போல் தோன்றிமறையக் கூடியனவாயிருக்கின்றன. நம்முடைய நூல்களோ அப்படியில்லை. எப்பொழுதும் நிலை பெற்று நிற்கக் கூடியவைகளா யிருக்கின்றன. அவற்றில் மொழி பெயர்க்கக் கூடியவை எத்தனையோ இருக்கின்றன; மேற் கூறிய அன்னிய பாஷை மொழி பெயர்ப்புக்காரர்கள் இவற்றில் தங்கள் காலத்தைச் செல விட்டால் எவ்வளவோ நன்மையாயிருக்குமே. இதனால் நாம் அன்னியபாஷை மொழி பெயர்ப்பே அடியோடு கூடாதென்று சொல்ல வரவில்லை. அவற்றில் முக்கியமானவற்றிற்குக் கொஞ்சக் காலமும் நம்முடைய நூல்களுக்கு அதிக காலமும் செல விட்டால் நலமாயிருக்கு மென்றே கூற வந்தோம். அன்றியும், நம்முடைய நூல்களை அடியோடு மறந்து விட்டதைப்பற்றியுங் கூற வந்தோம். மேலும் இந்தப் புதிய முறைகளைக் கைக் கொண்டவர்கள், தமிழுக்கென்றே உழைக்கும் சிலரையும் ஆதரிப்பதில்லை; அவர்களையும், இவ்வாறு நம் குறைகளை எழுதப் புகுவோரையும் பரிகசித்து நகை யாடவும் செய்கிறார்கள்; இவர்கள் மீது சீற்றமுங்கொள்கின்றனர்.

இவ்வாறு பல வழிகளிலும் நம்முடைய நூல்கள் குறைவுபட்டு வருகின்றன. இக் குறைகளை நீக்குதற்குச் சில சங்கங்கள், சுயபாஷாபிமானிகளால் ஸ்தாபிக்கப் பட்டும் அவை சரியாக ஆதரிப்பாரில்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. இப்படி யெல்லாம் நம் நூற்களின் நிலைமை சீர்கேடடைந்திருப்பதால், அச்சிட்ட புத்தகங்களிலும் கூட இராமாயணம் முதலிய வற்றில் பிழையற்ற சுத்தப் பிரதி அகப்படுவதே அருமையாயிருக்கின்றது.

ஆதலின், நம் பாஷாபிமானிகள், நம்முடைய அருமையான நூற்களிற் சற்று கவனம் வைத்து அவற்றைச் சேகரிப்பதிலும், அச்சிட்டு வெளியிடுவதிலும் முயற்சி யெடுத்து வரும் சங்கங்களுக்கு இயன்றவரை உதவி செய்து நம் முயிர்க்குயிரான சாஸ்திரங்களைக் காப்பாற்றும்படி மிகவும் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்:

பத்திராதிபர்.

## காலநஷ்டமும் காரியசித்தியும்.

காரியத்தில் கடைப்பிடி யுள்ளவர்கள், தங்கள் தங்களுக் கேற்பட்டிருக்கும் வேலைகளைச் செய்து ஒழிந்திருக்கும் சொற்ப நேரத்தில் மிகவும் பெரியனவாகிய காரியங்களைச் செய்துவிடும் ஆற்றலுடையவர்களாக விருக்கிறார்கள். தினந் தினம் ஒரு மணிநேரம் வீண் காரியம் செய்வதை விட்டு ஏதாயினும் பயனுளதாகிய ஒரு வித்தையில் பயின்று வந்தால் சாமானிய அறிவாளிகளும் நல்ல அறிவாளிகளாவார்கள். இப் பெற்றிய சாதனை அவிவேகிகளைப் பத்து வருஷத்திற்குள் அறிவாளிகளாக்கும். ஆதலின், அறியத்தக்க ஏதாயினும் ஒன்றைக் கற்றறிவது, அல்லது யாதாயினுமொரு நற்குணத்தில் பயின்று பண்படுவது, சாதகமான நற் பழக்கத்தைப் பலப்படுத்துவது முதலிய எவ்வகைப் பயனுமடைந்துகொள்ள முயலாமல், செல்வம் மிகுந்த சிலர், உண்பதும் உறங்குவதுமே தங்கள் சுக காலமென வெண்ணிக் காலத்தை அவமாக்கல்போல,அறிவுள்ளார் காலத்தை வீணிலே கழிக்கலாகாது. அப்படிக் காலத்தை வீணிலே செலவிட்டு இறக்கும்மனிதனை, சான்றோர் மனிதவர்க்கத்தில் கணக்கெடுத்துக் கொள்ளாமல் மாக்கள் பெருங்கூட்டத்தில் சேர்த்து விடுகிறார்கள். இது மனித ஜன்மத்திற்குப் பெருத்த நஷ்டத்தை யுண்டாக்குவதென்பது அறிஞர் அறிந்த விஷயமே. காலத்தை வீணாக்காது காரியத்திலே கண்ணாயிருந்து கீர்த்தி பெற்றவர்கள் அநேகர் உண்டு: லண்டன் நகரத்தில் வீதிக்கு வீதி சவாரி போய், வியாதியஸ்தரை அவரவர் வீட்டிற் கண்டு வைத்தியம் செய்துவந்த மேஸன் குட் வைத்தியர் (Dr. Mason good.) தாம் சவாரி போகிற வழியில் வீணே கழியும் காலத்தில் ல்யூக்ரிஷியஸ் என்னும் கிரந்தத்தை மொழி பெயர்த்தார். இவ்வாறே டார்வின் வைத்தியரும் (Dr. Darwin) வீட்டுக்கு வீடு வண்டிச் சவாரி போகும் பொழுது, சிறுசிறு துண்டுக் கடிதங்களில் சிற்சில முக்கியமான விஷயங்களைப்பற்றி மனதிற் பிறக்கும் அபிப்பிராயங்களைக் குறித்து வைத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்த வுடன் அவ் விஷயங்களைக் கிரமப்படுத்தி எழுதி வருவார். அவர் எழுதிய கிரந்தங்களெல்லாம் இவ்வாறே எழுதி முடிவுபெற்றனவாம். இவரைப் போலவே ஹேல் (Hale) என்னும் நீதியதிபர் தாம் உத்தியோக முகாந்தரமாய் வெளியிடங்களுக்குச் செல்லும் மார்க்கத்தில் கழியும் நேரங்களில் "தியானம்" என்னும் புஸ்தகத்தை எழுதி முடித்தாராம். மற்றொரு பர்னி பண்டிதர் (Dr. Burney.) என்பவர் தாம் சங்கீத வித்தியார்த்திகளுக்குச் சங்கீதம் கற்பிக்கக் குதிரைச் சவாரி போகுங் காலத்தில் இத்தாலிய பிரான்சிய பாஷைகள் கற்றுத் தெளிந்தார். கேர்க்ஹ்றைவத் (Krike white) என்பவர் நியாயஸ்தல உத்தியோக சாலைக்குப் போகுமார்க்கத்திலும், திரும்பு காலிலும் க்ரேக்பாஷை கற்றுத் தெளிந்தார். வேறொருவர் மான்செஸ்டர் என்னும் நகர வீதிகளில் கூலிக்குக் கடிதம் கொண்டு போகும் பொழுதும் வரும் பொழுதும் லத்தீன் பிரஞ்சுப் பாஷைகள் கற்றுத் தெளிந்து பிரபல பண்டிதராக விருந்தாராம். நிற்க,



பிரான்சு தேசத்து அரசிறைக் கணக்கு நிர்வாகிகளில் ஒருவராகிய டெக்ஸோ (Daguesseau) என்பவர் வேலை ஒழிந்திருக்கும் நொடிப் பொழுதை யாவது வீணிற் கழிய விடாமல் கல்வி முயற்சியி லீடுபட்டுப் பகற் போஜனம் செய்யுமுன் உள்ள சிறிது ஒழிவு நேரத்தில் மிக அரிய பெரும் புஸ்தகம் ஒன்று எழுதி முடித்தார். மாடம் டிஜென்லிஸ் (Madame de Genlis) என்பவர் தாம் ஒரு இராஜ குமாரத்திக்குக் கல்வி கற்பிக்கப்போய் அவர் வருமளவும் காத்திருந்த வேளைகளில் சிறந்த கிரந்தங்கள் சில எழுதி முடித்தாராம். இலைஹூபுரித் (Elihu Burritt) என்பவர் ஆதியில் கருமான் தொழில் செய்து பிழைத்தவர்; அவர் தாம் கல்வி பயின்ற விதத்தை ஒரு காலத்தில் சொல்லும்பொழுது "நான் நூல்களைக் கற்றுத் தெளிந்தது எவ்வகை வேலைக்கும் உதவாதிருந்த சிறிது சிறிதான ஒழிந்த காலத்தில் சிரத்தையாய்க் கல்வி பயின்றதனால்" என்றார். இவர் இப்படிக் கஷ்டப்பட்டு உழைத்த காலம் இவருடைய ஜீவனத்திற்கும் உதவிற்று; பூர்வமும் நூதனமுமாகிய பாஷை பதினெட்டும், ஐரோப்பிய பாஷை இருபத்திரண்டும் பயின்று தெளியவும் அனுகூலித்தது.

ஆதலால் கனவான்களே! நமக்குக்கிடைக்கும் சொற்ப சொற்ப ஒழிவு நேரங்களை வீணாக்காமல் சிரத்தையுடன் கல்வி விஷயத்தில் மனஞ் செலுத்தி வந்தால் அது நல்ல பலனைத் தருமென்பதில் சந்தேகமில்லை. நாழிகை கழிந்தது மீண்டும் வாராது. நாழிகை கழிந்த கணக்கெல்லாம் சர்வாத்மாக்களது பெரிய கடியாரமாகிய சூரிய கடிகாரத்தில் கணக்குப் பதிவுபெறும். இப்படி வீணே காலம் கழிவதைப் பற்றி "பூலோக நோக்கத்தைச் சிதறிச் சிந்தல்" என்னும் அரிய கிரந்தத்தை எழுதின எக்ஸித்தர் வாசியாகிய ஜாக்ஸன் (Jackson) என்பவர் "இதுவரையும் பொருளை வீணிற் சிதறிய நஷ்டம் இனிச் சிக்கனமாயிருந்தால் தீரும். ஆனாலும் இன்று வீணிற் போக்கடித்த பொழுது போகட்டும்; இந்த நஷ்டத்தைநான் நாளை முயற்சி செய்து தீர்த்துக் கொள்வேன் என்று யாவன்சொல்லமாட்டுவான்" எனக் கூறியுள்ளார். ஆதலால் வாசகர்களே! நமக்குள்ள ஒய்வு நேரத்தை வீண் வழக்குப் பேசுவதிலும், தீங்கு விளைப்பதான விளையாட்டுக்களிலும் அளவுக்கு மிஞ்சின தூக்கத்திலும் கழித்து நஷ்டம் செய்து கொள்ளாமல் மேற்கூறிப் போந்த மேதாவியர்களைப் போன்று நல் காரியங்களில் முயற்சித்து, அறிவை, கல்வியாகிய சாணையில் வைத்துத் தீட்டிக் கூராக்கி லோகோபகாரமான வேலை செய்யப் புறப்படுங்கள்.

இங்ஙனம்:

மேல்மின்னல் சக்கரவர்த்தி.

---

## சூளாமணி.

தம்மையுடையார்க்கு உலகில் விரும்பிய அனைத்தும் நல்கும் தேவமணி இரண்டு; அவை சிந்தாமணியுஞ் சூளாமணியுமாம். சூளாமணி என்னும் பதத்திற்கு சூடாமணி அல்லது சிகாரத்தினம் எனப் பொருள் படும், (சூளம்-சிகை,

மணி-இரத்தினம். ஆகவே, இதை யாவரும் சிகரத்தில் விரும்பி யணியத் தக்க சிகாரத்தினம் போன்று புலவர்களாகிய அறிவென்னு முச்சியின்கண் நின்று ஒளிர்வதாகிய மணியென்னலாம். இந்நூல், கலா சமுத்திர மெனப் புகழ் பெற்ற மகிமை பொருந்திய மஹா புராணத்தில் உள்ளபடி ஸ்ரீ சிரேயாம்ஸ தீர்த்தங்கரர் காலத்தில் சுரமை நாட்டின்கண் போதனமா நகரத்திலிருந்து அரசுபுரிந்த பயாபதி அரசனது புதல்வர்களான விஜய திவிட்டர்களின் சரித்திரத்தை விரித்துக் கூறுவது. இது சொற்பொலிவு, பொருள் நயம், நடையழகு, கற்பனை யலங்காரம் முதலிய வற்றால் சிறந்து விளங்கும் 2131 திருவிருத்தங்களாலாயது. இது, மஹா காவிய மென்று புகழப் பெற்றதும், காவிய இலட்சணத்தில் தமிழ்க் காவியங்கட்கெல்லாம் வழிகாட்டியாய் நின்றிலங்குவதும், தமிழ்க் கற்பகமெனச் சிறப்புப் பெயர் பெற்றதுமான சீவக சிந்தாமணிக்கும் முந்தியதாகக் கொள்ளப்படுகின்றது. அஃது எங்ஙன மெனில், யாப்பருங் கல விருத்தியிலும், அதனை முதனூலாகக் கொண்டு அமுத சாகரர் இயற்றிய காரிகைக்குக் குணசாகரர் தாம் எழுதிய விரித்துரையினுஞ் சூளாமணியிலிருந்து அநேக செய்யுட்கள் இலக்கியமாக எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன. குணசாகரர் காலத்தில் சிந்தாமணி முதலிய பெருங் காவியங்கள் இருந்தன வாகில் அவர் விசேஷமாக அவற்றினின்றே உதாரணங்கள் காட்டி யிருப்பர். ஆதலால் இந்நூல் பெருங்காவியங்கட்கெல்லாம் முந்திய தென்று கொள்வதற்குச் சிறந்த ஆதாரமாகிறது. இந்நூலை இயற்றிய ஆசிரியர், சித்தூர், ஜில்லாவைச் சேர்ந்த கார்வேட்டி நகரத்தில் முன்பு சிற்றரசனாயிருந்த விஜய ராஜன் காலத்திருந்தவரென்பதும், இவர் பெயர் தோலா மொழித் தேவர் என்பதும்,

"திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன் புயலனைய
　　கையன் றெவ்வைக்
கைக்கொட்டி நகைக்குமிகற் கார்வெட்டி யரையன்வள
　　நாடற் கேற்பப்
பொக்கெட்டும் பத்துமிலான் புகழ்த்தரும தீர்த்தன்மலர்ப்
　　பதம்பூ சிப்போன்
சொற்கெட்டா வசன்றோலா மொழிசூளா மணியுணர்வோர்
　　துறைகண் டோரே."

என்று இந்நூல் சிறப்புப் பாயிரத்தால் அறியக் கிடக்கின்றன. கார் வெட்டி நகரின் காலம் உறந்தைக்கு முந்தியதாதலின் இந்நூலின் வயது இன்றைக்குச் சுமார் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்திற்குக் குறையாது. நிற்க.

கவிஞர் பெருமானாகிய இந்நூலாசிரியரை 'தோலா மொழித் தேவர்' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப் படுவதற்குக் காரணம் என்னை யெனின், முற்காலத்தில் நூல்களையும் நூலாசிரியரையும், உரையாசிரியரையும் இயற் பெயர் கொண்டழைக்காது மற்றொரு காரணம் பற்றிய பெயரால் அழைக்கப்படுவது வழக்கமாயிருந்தது. உதாரணமாக "ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், வெற்றி வேற்கை" முதலிய நூற்களிற் "ஆத்திசூடி யமர்ந்த தேவனை" "கொன்றை வேந்தன் செல்வனடியினை," "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்" என்று முறையே பாயிரத்துள் முதலிலே நின்ற வாக்கியத் தொடரின் பெயரால் அவற்றிற்குப் பெயர் வழங்கப் பட்டு வருகின்றன. கல்பொரு சிறு நுரையார், தேய்புரி பழங்கயிற்றினார், மீனெறி தூண்டிலார் என்ற புலவர்கள் பெயரும் அவர்கள் உபயோகித்த அவ்வருந்தொடர் மொழிகளானே அழைக்கப்பட்டு வந்தன. இவை போலவே தோலா மொழித் தேவர் என்ற பெயரும் வழங்கியதாகும். இந்நூலாசிரியர் சூளாமணியில், தோல்வியடையாத என்ற பொருளில் "தோலா" என்ற சொல்லை அரசியற் சருக்கம் 349-வது செய்யுளில் "ஆர்கீதந் தோலாதாய்" என்றும், மந்திரசாலைச் சருக்கத்தில் 70-வது செய்யுளில் தோலா நாவிற் சுச்சுதன் சொல்லும் பொருளெல்லாம்" என்றும் அருமையாகப் பிரயோகஞ் செய்துள்ளமைபற்றி, புலவர்கள் இவரை, தோலா மொழித் தேவர் என்ற சிறப்புப் பெயரினால் அழைத்தன ரெனக் கொள்ளலாம். இவரது இயற்பெயரும், இவரது சரித்திரமும் இதுவரை காணக்கிடைத்தில. நமது இந்திய நாட்டில் அரசர்களைப் பற்றியும், சிறந்த புலவர்களைப் பற்றியும் சரித்திரம் எழுதுவதான வழக்கம் அநேகமா யில்லையெனலாம். அதிலும் ஜைன மதத்திலோ வெனில் முற்றுமே இல்லையென ஒரு துணிபாகக் கூறலாம். இங்ஙன மிருக்கும்போது இவரது சரித்திரத்தை எங்ஙனம் காண முடியும்.



சூளாமணிக் காவியத்தில் பிரயோகித்திருக்கும் வாக்கியத் தொடர்களின் அமைப்பையும், அவைகளினது அர்த்த புஷ்டியையும் நோக்கும்போது, இதற்கு ஒப்புயர்வுள்ளதோர் நூல் இல்லை யென்னும் பெற்றியை யுடையது இஃதெனச் சொல்லலாம். இது, கம்பன் கவிச்சக்ரவர்த்தி யெனப் புகழ்பெறுவதற்கு ஆதாரமாயுமிருந்தது. இதைப்பற்றி ஸ்ரீமத்-திருமணம். செல்வக்கேசவராய முதலியார் M. A., அவர்கள் தமது கம்ப நாடர் என்னும் புத்தகத்தில் "ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான சூளாமணி சிந்தாமணிக்கும் முந்தினதாகக் கொள்ளப்படுகின்றது. கம்பருடைய விருத்தங்களின் ஓசைத்திறம் சூளாமணி விருத்தங்களின் ஓசைத்திறத்தை ஒத்திருப்பது உய்த்துணர்வார்க்குப் புலப்படும். கம்பர், சூளாமணியில் நன்கு பயின்றிருக்கக்கூடும்." என்று வரைந்துள்ளார். ஆதலால் இவ்வரிய நூல் செந்தமிழில் சீர்த்தியடையும் புலவர்கட்கெல்லாம் ஒரு செந்தமிழ்ப் பொக்கிஷமாக இருந்தது என்று விசேடித்துக் கூறுவது மிகையாகாது. இந்நூலின் சிறப்பைப்பற்றி,

"பொழிந்து பொருள்விளக்கும் போழ்ந்திருள்கால் சீக்கும்
இழிந்தவரை யேற்றி நிறுத்துஞ்—செழுந்தாளத்
தோளா மணியைநகுந் தோலா மொழிதொகுத்த
சூளா மணியகத்துச் சொல்"

என்று கூறும் வெண்பாவினாலு மறியலாம். இத்தகைய சீர்த்திவாய்ந்த இந்நூலுக்கு இது வரை, யாரும் உரை செய்திலர். அதனால் செந்தமிழ்ப் பயிலும் மாணவர்களும், மற்றவர்களும் இதை வாசிக்க இடர்ப்படுகின்றனர். ஆனால் ஒருவாறு இந்நூலிலுள்ள விஷயங்களை யுணரும் பொருட்டுச் சிலரது முயற்சியினால் "திவிட்ட குமாரன் கதை" "சூளாமணி" என்ற பெயருடன் வசன நூல்கள் கிளம்பின. இவை பயன் தரத்தக்கனவாயிருந்தாலும், இக்காவியத்திலுள்ள முழுச் செந்தமிழ் இன்பத்தையும் அவைகளால்பெறல் முடியாது. ஆதலின், செந்தமிழிலார்வ முள்ள பிரபுக்கள் முன்வந்து இவ்வரிய நூலுக்குத் தெளிவுரை யெழுதி வெளியிடின் தமிழுலகிற்கு எவ்வளவோ பேருபகாரமாயிருக்கும்.

இங்ஙனம்,
நேமி.

---

## திரியோக மருந்து.

பேதற்க ரும்பிணி தாமிவை யப்பிணி
தீதற்க ரியதிரி யோகம ருந்திவை
யோர்த றெளிவோ டொழுக்கமிவை யுண்டார்
பேதப்பிணியுட் பிறவார் பெரிதின்ப முற்றே.

திரியோக மருந்து-மூன்று கூடிய மருந்து,—ஓர்த றெளி........யுண்டார் என்பது-நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கமிவை உபயோகித்தார். திரியோக மருந்தென்றதனாற் றனித்தனி நன்ஞான முதலாகிய மூன்றும் பிறவி நோய் தீர்க்கும் மருந்தாகா தென்றவாறு,— என்னை? நன்ஞானமே மருந்தாயின் நன்ஞானம் பிறந்த பொழுதே முத்தனாதல்வேண்டும்; அன்றியும் கர்மகார்யமாகிய வ்யாதி முதலாயின விலவாதலும் வேண்டும். இனித் தீ ஞானமே ஸம்ஸார காரணமாதல் வேண்டும். வேண்ட, பாவித்தாந்தங்களாகிய ஏகாந்த மதங்களை யறிதல் ஸம்ஸார காரணமாதல் வேண்டும். உபேக்ஷாபத்தாலறிதல் ஸம்ஸாரகாரண மன்றெனில் ச்ரத்தாபத்தா லறியினல்லது அநேகாந்த ஜ்ஞானமும் முக்திஹேதுவாகாதாம். ஆதலால், ஸம்ய தர்சன விகலமாகிய ஸம்யக் ஜ்ஞானம் முக்தி ஹேதுவாகாதாம். ஆகிலிவ்விரண்டுமே யமையும் நல்லொழுக்கம் வேண்டாவெனில், அழிதன்று பிறிதொரு வியாபார மின்றி, இவ்விரண்டுமேயாய் நிகழ்தல் நல்லொழுக்க மாதலின். என்னை? "விளவறவிருமையும் விளங்கத் தன்னுளே, யொள்ளிதிற்றரித்தலே யொழுக்க மென்ப" என்றாராகலின். இனி நற்காட்சியே வீடு பெறும் நெறியெனலுமாகாது. நன்ஞானமொழிய நற்காட்சி கூடாமையின். என்னை? அறிந்தே ச்ரத்தை பண்ண வேண்டுமாதலின். என்னை? இனி நல்லொழுக்கமே பிறவி நோய் தீர்க்கும் மருந்தெனலு மாகாது. அறிந்து தெளிந்தே ஒழுக வேண்டலின். இனி நன்ஞானம் நற்காட்சி யென்னு மிரண்டும் எப்பொழுதுமொருங்கு நிற்றலே நல்லொழுக்கமாதலாலும், ஆதலிம்மூன்றுங் கூடியே மருந்தா மென்பது.

"நீலகேசி"



---

## பாலபோத விளக்கம்

(முன் தொடர்ச்சி புத்தகம்-3. சஞ்சிகை-3. பக்கம்-71.)

14. நேரான வழியோடு வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தவுடன், புஸ்தகங்களை வைக்க வேண்டிய விடங்களில் வைத்துவிட்டு, மேல் உடுப்புக்களைக் களைந்த பின்னர், வெளிக்குப் போய்க் கால் கை முகம் முதலியவற்றைச் சுத்தி செய்து கொண்டு மாலைக் கடனை முடித்துத் தங்கள் தங்கள் மதத்திற்குப் பொருத்தமாக நெற்றியில் எதை யணியலாமோ அதை யணிந்து கோவில் சமீபத்திலிருந்தால் முடியுமானால் கோவிலுக்குப் போய்த் தெய்வ வணக்கஞ் செய்து வீட்டு வர வேண்டும்; அவ்வாறு கோவிலுக்குப் போகும்போது பெரியோரைத் துணைக் கொண்டு போகவேண்டும்; தனியாகச் சென்றால் மிகவும் ஜாக்கிரதையோடு போய் வரவேண்டும். கோவிலில் ஜனங்கள் அதிக நெருக்கமாயிருந்தால் அந்தக் கூட்டத்திற்குள் நுழையாமல் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று கடவுளை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்து வீட்டு வரவேண்டும். கூட்டத்தில் புகுந்தால் உடல் நெருங்கி அவஸ்தை யுண்டாகும்; உடலில் அணிந்திருக்கும் நகைகள் கள்ளரால் களவாடப்படும்; இன்னும் திருட்டு நடந்த விடத்திற்குப் பக்கத்தில் நின்றால் அந்தத் திருட்டை அவ்வாறு பக்கத்தில் நின்றவன் மீதே அத்திருடர்கள் சுமத்தி விடுவார்கள். கோவிலுக்குப் போக முடியாவிடில் வீட்டிலிருந்த படியே தங்கள் தங்கள் இஷ்ட தெய்வத்தை வணங்கிக் கொள்ள வேண்டும்.

15. தெய்வ வணக்கஞ் செய்த பின்னர், படிப்பதற்கென்றேற் படுத்தப் பட்டிருக்கும் இடத்தில் விளக்கேற்றி வைத்துக் கொண்டு முதலில் புதுப் பாடங்களைப் படித்து விட்டுப் பின்னர் பழம்பாடங்களைப் படிக்க வேண்டும்; படிக்குங் காலத்தில் மெழுகு வர்த்தி விளக்காவது, விளக்கெண்ணெய் விளக்காவது தேங்கா யெண்ணெய்த் தீபமாவது வைத்துக் கொள்வது நலம். மண்ணெண்ணெய் விளக்கு எப்பொழுதும் கண்ணுக்குக் கெடுதியை உண்டாக்கி விடும். படிக்கு மிடத்தில் தங்களைப் போலப் படிக்கும் பிள்ளைகளையே சேர்க்க வேண்டும்; வீண் பேச்சுப் பேசி இரைச்சலிட்டு விளையாடும்பிள்ளைகளைச் சேர்க்கலாகாது. பாடங்களைப் படித்து முடியும் வரையில் படிப்பிலேயே சிந்தனை யிருக்க வேண்டும்; வேறு விஷயங்களிற் புத்தியைச் செலுத்தக் கூடாது.

16. இரவு எட்டு மணியானதும், போசனத்திற்குச் செல்ல வேண்டும். வீட்டிலுள்ளவர்கள் எவ்வித போசனம் சித்தப் படுத்தி வைத்திருக்கின்றார்களோ அதை விருப்பத்துடன் உண்ண வேண்டும். பதார்த்தங்கள் சரியாயில்லை யென்று குறை கூறி அது வேண்டும் இது வேண்டுமென்று இல்லாத வற்

றை யெல்லாம் கேட்டுத் தாய் தந்தையரோடு சண்டை யிட்டு இரைச்சல் போடக் கூடாது; போசனத்தைக் காலால் உதைத்துத் தள்ளக் கூடாது; இப்படி உதைத்துத் தள்ளி வம்பு செய்யும் பிள்ளைகளுண்டு. அவர்கள் மீது தாய் தந்தையரும் சுற்றத்தாரும் மற்றப் பெரியோர்களும் வெறுப்புக் கொள்வார்கள். இந்தப் பாவத்தால் பின்னே அவர்களுக்குச் சோற்றுக்குக் கஷ்டப் படும்படியான நிலைமை யுண்டாகும்.

17. போசனத்தை உண்ணும்போது மிகுந்த அவசரமாக உருட்டிஉருட்டி வாயிற் போட்டுக் கோழி தவிட்டுருண்டையை விழுங்குவது போல விழுங்கக் கூடாது. சற்று நிதானமாகவே ஆகார வஸ்துக்களில் பிசைய வேண்டியவற்றைப் பிசைந்தும், சாதாரணமாக எடுத்து வாயில் வைக்க வேண்டியதை வைத்தும் சிறிது சிறிதாக மென்று உட்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் நன்றாக ஜீரண சக்தி யுண்டாகும். தேகத்தில் அஜீரணத்தைச் சார்ந்த பிணிகள் அணுக மாட்டா. ஆகாரத்தை அவசரமாக உருட்டி விழுங்குவதால் அவை அடிக்கடி தொண்டையில் விக்கிக்கொள்வதோடு ஜீரணக் கெடுதி, வயிற்று நோவு, வயிற்றுப்பிசம் முதலிய நோய்கள் உண்டாவதற்கேதுவு மாகும். மேலும் ஆகாரத்தின் சுவையும் தெரியாது. இன்னும், ஆகார முண்ணும்போது அடிக்கடி ஜலத்தைப் பருகுதல் கூடாது. கூடியவரை ஆகாரம் சாப்பிட்டு முடிந்த பின்னரே ஜலம் பருகப் பிரயத்தனப்பட வேண்டும். விக்கலுண்டாகும் போதாவது, காரம் அதிகமாகி உபத்திரவஞ் செய்யும் போதாவது இரண்டொரு முறை கொஞ்சமாக ஜலத்தை உபயோகிக்கலாம்; அப்படிப் பருகும் போதும் மெதுவாகப் பருக வேண்டும். விக்கல் உண்டாகி யிருக்கும்போது அவசரமாகத் தண்ணீரைப் பருகினால் மேலும் அதிகமாகத் தொண்டை யடைத்துக் கொண்டு அபாயத்தை உண்டாக்கி விடும். ஆகாரத்தைக் காட்டிலும் அளவில் அதிகமாயிருக்கும்படி ஜலத்தைக் கடைசியில் பருக வேண்டும். உணவுண்ணும் போது அதிகமாகப் பேசுதலும், வேறு வேலைகளைச் செய்தலும் கூடா. இன்னும், ஒரு மணி நேரம் இரண்டு மணிநேரம் கழியும்படி பல கதைகளைப் பேசி நேரத்தைப் போக்கிக் கொண்டு ஆகார முண்பது எப்பொழுதும் ஆகாத காரியம். மாலைப் போசனத்தைச் சற்று அளவில் குறைத்தே உண்ண வேண்டும்; பகல் போசனத்தை உள்ள அளவு போல் குறைக்காமலும், அதிகப் படுத்தாமலும் சாப்பிடலாம். பகற் காலத்தில் மனிதர் தொழில்களைச் செய்வதாலும், சூரிய வெப்பம் மிகுந்திருப்பதாலும் ஆகாரங்கள் எளிதில் ஜீரணமாகக் கூடும். மாலைக்காலத்திற்குப் பின்பு இராக்காலத்தில் மனிதர்க்கு ஒரு தொழிலுமில்லாமலிருப்பதாலும், குளிர்ச்சி அதிகரிப்பதாலும் ஆகாரம் சீக்கிரம் ஜீரணமாக மாட்டாது.

18. போசனம் சாப்பிட்ட பிறகு அரை மணி நேரம் அல்லது ஒருமணி நேரம் நல்ல அறிவுள்ள பெரியவர்களோடு அறிவை விருத்தி செய்யத் தக்க நற்கதைகளையும், நல்ல விஷயங்களையும் பேசிக் கொண்டிருக்க வேண்டும். கெட்டவர்களோடு சேர்ந்து சம்பாஷணை செய்யக்கூடாது. ஆண் மக்கள், பெண்மக்களிடத்திலும், பெண் மக்கள் ஆண் மக்களிடத்திலும் கூடி வீண் கதைகளைப்



பேசிக் கொண்டிருக்கலாகாது. ஆண் மக்கள், அறிவுள்ள ஆண் பிள்ளைக் கூட்டத்திலேயே சேர்ந்திருக்க வேண்டும்; பெண்பிள்ளை, விவேகமுள்ள மாதர்களுடனே கூடி யிருக்க வேண்டும். பின், பத்தரைமணி வரையில் பாடங்களைப் படித்து விட்டுப் படுத்துக்கொள்ள வேண்டும். (தொடரும்.)

சற்குரு.

---

## நரிவிருத்தம் மூலமும், உரையும்.

(முன் தொடர்ச்சி புத்தகம்-3. சஞ்சிகை-5. பக்கம்-116.)

சந்தனை யென்னு மாதர் சாரணர்க் கண்டு முன்றில்
வந்தனை செய்து பேணி வாகுநீர்ப் புற்கை யீந்தா
ளிந்திர ருவந்து நோக்கி யெல்லையில் செம்பொன் மாரி
அந்தரத் தமர ரார்ப்பச் சொரிந்துவந் தருச்சித் தாரே.

(இ-ள்-) சந்தனை என்னும் மாதர்-சேடகமகாராஜன் புத்திரியாகிய சந்தனை யென்கின்ற பெண்ணானவள், (துன்பத்தை அடைந்திருந்த காலத்தில்) சாரணர்-ஸ்ரீவர்த்தமான சுவாமிகளை, கண்டு-பார்த்து, முன்றில் - வீட்டின்முன்னே, வந்தனை செய்து-வணக்கம் புரிந்து, பேணி-விரும்பி, வாகு நீர்ப்புற்கை-(அவர் தரிசனங்கிமையினாலே திவ்ய நெல் அன்னமாகமாறிய) நீரோடு கலந்த வரகுக் கூழை, ஈந்தாள்-அவர்க்களித்துத் தன்னிடர் நீங்கப் பெற்றாள் (அப்புண்ணியத்தினாலே) இந்திரர்-இந்திரர்கள், உவந்து-சந்தோஷித்து, நோக்கி-அவளைப் பார்த்து, எல்லையில்-அளவில்லாத, செம் பொன்மாரி-சிவந்த பொன் மழையை, சொரிந்து-பொழிந்து, அந்தரத்து-பொன்னுலகத்திலுள்ள, அமரர்-தேவர்கள், ஆர்ப்ப-தேவ துந்துபியை முழக்கி ஆர்ப்பரிக்க, வந்து-மலரோடு கலந்த மாருதத்தாலே, அருச்சித்தார்-புஷ்பங்களைத் தூவி அவளுக்கு அர்ச்சனை புரிந்தார், (அதனால் அவள் மிக்க நன்மை யடைந்தாள்) எ-று.

(வி-ரை.) சந்தனை யென்னும் இராஜ குமாரத்தி, தான் மிகுந்த கஷ்டத்திற் குள்ளாகி யிருக்கும்போதும், பெரியோர்க்கு ஆகாரதானமீந்து நன்மை பெற்றாள்; ஆதலின், எல்லோரும் ஆகாரதானத்தினை அவசியம் செய்ய வேண்டுமென்பது இதன் கருத்து. இங்கே சந்தனையை 'மாதர்' என்றது, "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பால்திணையிழுக்கினு மியல்பே" என்றபடி, உயர்வினால் ஒருமைப் பால் பன்மைப் பாலாக மாறிவந்த பால் வழுவமைதி. சாரணர்-ஜைன முனிவர்; இதற்கு எங்கும் சஞ்சரிப்பவர் என்று பொருள்; இஃதிங்கே ஸ்ரீவர்த்தமான சுவாமியைக் குறித்தது. இவள் ஸ்ரீவர்த்தமான சுவாமிக்கு ஆகாரதானஞ் செய்ததால் அடைந்த நன்மையாவது பஞ்சாச்சரியங்களைப் பெற்றமையாம்; பஞ்சாச்சரியங்களாவன;-தேவர்களாற் சொரியப்பட்ட பொன்மாரி, அவரால் முழக்கப் படும் தேவ துந்துபி, சுகந்த ம

ந்த மாருதம், தேவர்களாற் செய்யப்பட்ட ஸ்துதி, அவர்களால் அருச்சிக்கப்பட்ட புஷ்பமாரி என்பனவாம்; செம்பொன்மாரி எனவே கனகவர்ஷமும், அமரர் ஆர்ப்ப எனவே, தேவ துந்துபியும், தேவஸ்துதியும், அருச்சித்தார் எனவே புஷ்பவர்ஷமும், வந்து எனவே மந்தமாருதமும் அமைதல் காண்க. வந்து அருச்சித்து-மூன்றும் வேற்றுமைத் தொகை; வந்தால் அருச்சித்து என விரியும். 'அருச்சித்தார்' என்றதன்பின், 'அதனால் அவள் நன்மையை அடைந்தாள்; ஆதலின் எல்லோரும் ஆகார தானத்தினை இயற்றல்வேண்டும்' என்ற சொற்கள் இசை யெச்சமாக வருவித்துரைக்க வேண்டும்.

-- சந்தனை ஆகாரதானத்தால் நன்மை யடைந்த கதையாவது:—சந்தனையென்பாள், சேடக மகாராஜனுக்குப் புத்திரியாகப் பிறந்து பருவமடைந்திருந்தாள். அப்படி யிருக்கும் போது ஒரு வித்தியாதரன் ஒரு நாள் இவளை, பந்துக்களினின்றும் பிரித்தெடுத்துக் கொண்டு போய்த் தன் இருப்பிடத்திற்கு இவளுடன் சென்றால் தன் மனைவி கோபிப்பாளென்றெண்ணி, ஒரு காட்டிலே இவளைப் போட்டு விட்டுப் போக, ஒரு வேடன் கண்டு அழைத்துக் கொண்டு போய், வத்ஸவிஷய கௌசாம்பி நகரத்திலே விருஷசேன னென்னும் வைசியனிடத்தே திரவிய லாபம் பெற்றுக் கொண்டு கொடுப்ப, அவன் இவளைப் பெற்றுப் புத்திரிபோலப் பாராட்டி வளர்த்து வந்தான். அப்போது அவ் வைசியன் மனைவியாகிய ஸுபத்திரை யென்பவள் தன் கணவன் சந்தனையிடம் தோஷமான நடக்கையை யுடையவனாயிருப்பா னென்று சந்தேகமுற்று, சந்தனை மேல் வெறுப்புக் கொண்டு, அவளுக்கு வரகாகாரத்தை சராவபாத்திரத்திலே யிட்டளித்தும், கால்களிலே விலங்கிட்டும், நீல வஸ்திரத்துண்டை உடையாகக் கொடுத்தும் அவளை வருத்தி வந்தாள். அக்காலத்தில், பகவான்- ஸ்ரீ வர்த்தமான சுவாமீ அங்கே எழுந்தருளினார். அவ்வா றுணர்ந்த சந்தனை அவரை எதிர் கொண்டழைக்க வேண்டுமென்று மிகுதியும் நினைத்தனள்; அங்ஙனம் நினைத்த பொழுதே அவளுக்கிடப்பட்டிருந்த விலங்கு தானே கழன்றது; சிதைந்த கூந்தலும் அழகு பெற்றது; நீல வஸ்திரத்துண்டு உயர்ந்த பட்டு வஸ்திரமாயிற்று; தேக முழுதும் ஸர்வாபரணாலங்கிருத மாயிற்று; வரகுக் கூழும் திவ்விய நெல்லன்னமாயிற்று; சராவபாத்திரம் ஸ்வர்ணபாத்திர மாயிற்று; உடனே சந்தனை ஆநிக ஆனந்தத்தோடு நவ புண்ணியக் கிரமத்தால் சுவாமிகளை எதிர் கொண்டழைத்து, மூன் வரகுக்கூழாயிருந்து நெல்லன்னமாக மாறிய திவ்விய ஆகாரத்தினை அவர்கட் களிக்க, அந்தத்தான மகிமையால் பஞ்சாச்சரியத்தை யடைந்து, தன் பந்துக்களிடம் போய்ச் சேர்ந்த மேன்மை பெற்றாள். இக் கதை, ஸ்ரீபுராணம் ஸ்ரீ வர்த்தமான தீர்த்தகர புராணத்திற் கண்டது. (௫௨)

பற்றுள மென்றோர் பாவை பாவமும் பழியு மாக்கிச்
சிற்றுள மிலேச்சர் பொல்லா நாற்கதி நவையை நூக்கிச்
சொற்றுள வாய துன்பம் பயத்தலிற் றுறந்து போகிக்
கற்றறி வுடைய மாந்தர் கடிந்தன ரதனையன்றே.



(இ-ள்) பற்று உள்ளம் என்ற-ஆசை பொருந்திய உள்ளத்தை உடையவளாகிய, ஓர் பாவை-ஒரு பெண்ணானவள், பாவமும்-பாதகத்தையும், பழி-நிந்தையையும், ஆக்கி-செய்ய (அவை அவளுக்கு) சிற்று உள்ளம்-அற்ப எண்ணத்தையுடைய, மிலேச்சர்-சண்டாளர்க்குரிய, பொல்லா-கெட்டனவாகிய, நாற்கதி-நான்குகதியாகிய, நவையை-குற்றத்தை, நூக்கி-அடைவிக்க; (அது கண்டு அந் நாற்கதி நவையானது) சொற்று உளவாய-வேதனை உடையன வென்று அறிவுடையோரால் கூறியன வாகிய, துன்பம்-துன்பங்களை, பயத்தலின்-கொடுத்தலினாலே (அதற்கஞ்சி) கற்று அறிவுடைய-நூல்களைப் படித்து அதனாலே நல்ல ஞானங்களைப் பெற்ற, மாந்தர்-மனிதர்கள், (உலக பந்த கர்மங்கள் பாவத்தையும், பழியையு முண்டாக்கு மென்று கருதி அவற்றை) துறந்து போகி-விலக்கித் துறவடைந்து தவத்திற்குச் சென்று, அதனை-அந்நாற்கதித் துன்பத்தை, கடிந்தனர்-நீக்கினார்கள். (ஆதலின் வீட்டின்பம் பெற விரும்புவோர் உலகப் பற்றுக்களைத் துறந்து தவஞ் செய்க.) எ-று.

(வி-ரை.) உலக ஆசை மிகுந்த மனத்தை யுடைய ஒரு பெண், பாவமும், பழியுமாகிய காரியங்களைச் செய்து, சண்டாளர்க் குரிய நாற்கதித் துன்பத்தை அனுபவித்தாள்; அது கண்டு அறிவுடையோர் அக் கெட்ட கர்மங்களை விட்டு நீங்கித் துறவடைந்து அந்நாற் கதித் துன்பத்தை நீக்கி முத்தி யடைந்தனர்; ஆதலின், முத்தி யடைய விரும்புவோர் இங்ஙனம் உலகப் பற்றினை யொழித்துத் தவஞ் செய்க என்பது இதன் கருத்தாம். 'அழுக்கா றெனவொருபாவி' என்னுங் குறளில், அழுக்கா றென்பது குணவாகு பெயராய் அதனை யுடையானை யுணர்த்தினமை போல, 'பற்றுளம்' என்பது அதனை யுடையாளை யுணர்த்திற்று. என்று என்னும் இடைச் சொல் இங்கே ஆகிய என்னும் பொருள் பயந்து, பெயரோடு இயைந்து நின்றது, 'அழுக்கா றெனவொருபாவி' என்பதில் என வென்னும் இடைச் சொல் நின்றது போல; "வினை பெயர் குறிப்பிசை யெண் பண் பாறினும், என வெனு மொழிவரு மென்று மற்றே" என்பது விதி. இனி, 'என்ற ஓர்' என்பது, 'என்றோர்' எனத் தொகுத்தலாகி வந்ததெனக் கொண்டு, 'பற்றுளத்தை யுடையவளென்று சொல்லப்பட்ட ஓர்பாவை' யெனப் பொருள் கோடலு மொன்று. 'பற்றுளமாகிய பாவை' என்பது இரு பெயரொட்டுப் பண்பு. ஆக்க, நூக்க என்னும் செயவெனெச்சங்கள், ஆக்கி, நூக்கி எனச் செய்தெனெச்சங்களாய் மாறி வந்தன; இங்ஙனம் எச்சங்கள் திரிந்து வருதற்கு, "சொல் திரியினும் பொருள் திரியா வினைக் குறை" என்பது விதி. நாற்கதிகளாவன:—தேவ கதி, மனுஷகதி, திரியக்கதி, நரக கதி என்பனவாம். அன்றே-ஈற்றசை. (௫௩)

ஓங்கிய தவத்தின் மிக்க வுறுதவர்க் குறுதி நாடின்
ஈங்கிரண் டல்ல தில்லை யிசைகொடா நிறப மண்மேற்
பாங்கமை செல்வ ராகிப் பகுத்துண்டு வாழ்த லொன்றே
தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை நிற்ற லொன்றே.

(இ-ள்)ஓங்கிய-உயர்ந்த, தவத்தின் மிக்க-தவத்தினாலே மேன்மை யடைந்த, உறு-நன்மார்க்கத்திற் பொருந்தியிருக்கின்ற, தவர்க்கு-தவத்தினையுடையவர்க்கு, ஈங்கு-இவ்விடத்திலே, நாடின்-ஆராய்ந்து பார்க்குமிடத்து, உறுதி-நிச்சயமான பொருள்,(அதாவது புருஷார்த்தம்,) மண்மேல்-இப்பூமியில்,(அவர்கள்) பாங்கு அமை-அழகு பொருந்திய, செல்வராகி-ஐசுவரியத்தை யுடையவராகி, பகுத்து உண்டு-தம்பொருளைப்பலருக்கும் பகிர்ந்து கொடுத்துத் தாமும் உண்டு அனுபவித்து, வாழ்தல் ஒன்று-ஜீவித்தல் ஒன்றும், தாங்கிய-மேற்கொண்ட, தவத்தின்மிக்க-பூர்வ புண்ணியத்தினாலே மிகுந்த, தவநிலை-தபசின் நிலையிலே, நிற்றல் ஒன்று-நிற்பது ஒன்றும் (ஆகிய),இரண்டு அல்லது-இல்லறம் துறவறமென்னும் இரண்டேயல்லாமல், இசை-கீர்த்தியை, கொடா நிற்ப-கொடுக்கக் கூடியவைகள், இல்லை-வேறில்லை, (ஆதலின், அறிஞர் இரண்டிலொன்றைச் செய்யவேண்டும்)எ-று.

(வி-ரை.)தவமுடையார்க் குறுதிப் பொருள், முறையோடு செய்யும் இல்லறமுந் துறவறமுமாகிய இரண்டுமேயாதலின்,மனிதர் இவ்விரண்டிலொன்றைச் செய்யவேண்டு மென்பது இதன் கருத்து. 'தவமுடையார்க்கு உறுதி, மண்மேல், பகுத் துண்டு வாழ்தலும், தவநிலையில் நிற்றலுமாகிய இரண்டல்லது இசைகொடா நிற்ப (வேறு) இல்லை' என இயைக்க. ஆசிரியர், துறவையே சிறப்பித்துக் கூறிவரினும், இங்கு இல்லறத்தையும் அவசியமானதெனக் கூறியது பகுத்துண்டு வாழுதலாகிய இல்லறமும் நற்கதியளித்தற் கேதுவாயிருத்தல் பற்றியென்க. முனனே துறக்கத்தக்கன வென்று கூறியவை,பற்றுளத் தோடு கூடிய இல்லறங்களாம்.தாங்கியதவம்- மேற் கொண்ட ஜன்மாந்தர புண்ணியங்கள். இல்லறம்- சிராவக தர்மம்; துறவறம்-யதிதர்மம். இவையிரண்டுமே நற்கதியளித்தற் குரியன; ஆதலினாலேயே,'உறுதி இரண்டல்லதில்லை' என்றார் ஆசிரியர். உறுதவர்-வினைத்தொகை. உறுதி-நிச்சயம்; அஃதிங்கே ஆகுபெயராய் நிச்சயமான பொருளை யுணர்த்திற்று. ஒன்றே என்னும் இரண்டு சொற்களினீற் றேகாரங்களிரண்டும் எண்ணுப் பொருளன. (௩௪)

(தொடரும்)

சேம்பூர். வீ. ஆறுமுகஞ் சேர்வை.

---

## திருடருக்கும் வித்வான்களிடத்தில் அபிமானமுண்டு.

---

உலகத்தில், கள், காமம், கொலை, களவு, சூது என்னும் பஞ்சமா பாதகத் தொழில்களில் களவும் ஒன்றாகும். இத் தொழிலை மேற் கொண்டிருப்பவர்கள், மகா வன்னெஞ்சர்கள்;கொலைக் கஞ்சாதவர்கள்; நெஞ்சில் சிறிதும் இரக்கமற்றவர்கள்; குழந்தைகளையும், ஸ்திரீகளையும், விருத்தரையும், பிணியாளரையுங்



கூடக் கதறக் கதற அடித்து வருத்தித் துடிக்கத் துடிக்க அவர்களிடம் உள்ள பொருள்களை வெடுக்கென்று பறித்தோடும் துடுக்குச் சுபாவ முடையவர்கள்; கள்ளருந்தல், சூதாடல் முதலிய தொழில் களையும் உடன் கொண்டவர்கள்; பல பிராணிகளும், பல மனிதர்களும் உயிர் விடும்படி வீடுகளின் வாயிற் கதவை இழுத்துப் பூட்டி அவ்வீட்டில் நெருப்பை வைக்கும் பாவிகள்; குழந்தைகள் பட்டினி கிடக்கப் பார்த்து வருந்தி அப்பசிப்பிணியை நீக்க, ஒருவன் அரும்பிரயாசையால் தேடிக் கொண்டு வரும் பொருளையும், அவன் எவ்வளவோ உள்ளதைச் சொல்லிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் விடாமல் பருந்தடிப்பது போல் அடித்துப் பறித்துக் கொண்டு போகும் அநியாயக்காரர்கள். இப்பேர்ப்பட்ட கொடுமையாளரும் ஒரு சமயத்தில் ஒரு வித்வானிடத்தில் அபிமானங் காட்டியிருக்கின்றனர்; இந்தச் சம்பவம் மெய்யாக நடந்தது.

பல ஆண்டுகட்கு முன்னர், மதுரை ஜில்லாவிலுள்ள அழகர் கோவில் என்ற ஸ்தலத்தில் ஆடி மாதம் உற்சவம் நடக்கும் போது, அந்த விழாவிற்காக நாலா பக்கங்களிலுமுள்ள ஜனங்கள் கூட்டங் கூட்டமாகப் போயிருந்தார்கள். அப்படிப் போன ஜனங்களில் மதுரையிலிருந்து போயிருந்த சில பட்டுநூல்கார ஜனங்கள் இராக்காலத்தில் வண்டிகளுடன் திரும்பி வந்தார்கள். மதுரைக்கும் அழகர் கோவிலுக்கும் நடுவில் கள்ளர் நாடாகையால், அந்நாட்டுக் கள்ளர்களில் கொள்ளை யடிக்கும் தொழிலைக் கொண்ட சில கள்ளர்கள் வந்து, மேற்கூறிய ஜனங்களை நடு நிசியில், இடைவழியில் மடக்கிக் கொண்டு அடித்து ஹிம்சித்து அவர்களிடமுள்ள பொருள்களைக் கொள்ளை யாடினார்கள். அப்போது அந்த ஜனங்களுடன் ஒரு வித்வானும் வந்திருந்தான். இவ்வாறு கொள்ளை நடக்கும் போது அந்த வித்வான், "ஐயோ! நாமும் இந்த ஜனங்களுடன் சேர்ந்துவந்து சங்கடத்தில் மாட்டிக் கொண்டோமே; இந்தக் கொள்ளைக்காரர்கள் நம்மையுந்தானே அடித்து வருத்துவார்கள்; நம்மை வித்வானென்று இவர்கள் அறிவார்களா? விரதப்பானை யென்பது நாய்க்குத் தெரியுமா? நாய் எல்லா விடத்திலுந்தானே வாய் வைக்கும்; அது போல இவர்கள் எல்லோரிடத்திலுந் தானே தங்கள் கைவரிசையைக் காட்டி விடுவார்கள்; இந்தத் தடியர்கள் கையினால் ஓர் அடி கூட நம்மால் தாங்க முடியாதே; இவர்கள் கையில் வைத்திருக்கும் இருப்புலக்கை போன்ற ஒரு தடியால் ஒரு போடு போட்டால் நாம் எமலோகத்திற்குப் பிரயாணமாவதில் என்ன தடை? இதற்கென்ன செய்கிறது? ஐயோ! நாம் புறப்பட்ட நேரம் நல்ல நேரமில்லை" என்று எண்ணாது மெண்ணி மனம் புண்ணாகி, 'எந்தநேரத்தில் இவர்கள் நம்பக்கம் திரும்பப் போகிறார்களோ என்று திகிற்பட்டு ஒரு பக்கத்தில் ஒதுங்கிப் பூனை போல் விழித்துக்கொண்டு நின்றான்.

அப்படி நிற்கும்போது இரண்டு நிமிஷத்திற்குள் திருடர்கள் இவனைக் கண்டு கொண்டார்கள். ஐயோ! கண்டதுதான் தாமதம்; அவர்கள் "இதோ ஒரு பயல் பூனைபோல் பதுங்கி நிற்கிறான்; இவனுக்கு இரண்டு தடியாராதனை சமர்ப்பித்து மடியிலுள்ளதைப் பிடுங்குங்கள்"என்று தடிகளை இவன் தலைக்கு நே

ராக ஓங்கி விட்டார்கள். அப்போது வித்வான் பொறி கலங்கிப் போனான்; உடனே அவன், 'இன்னும் சற்று நேரத்தில் நம்முடைய உயிர் போய் விடும் போலிருக்கிறதே' என்று வாய் குளறிக் கொண்டு, 'சமயத்தில் எதையாவது சொல்லித் தப்பித்துக் கொள்ள வேண்டு' மென்ற எண்ணத்துடன், அவர்களை நோக்கிக் கரங்களைக் கூப்பிக் கொண்டு, "ஐயா! நாட்டுக் கள்ளர்களே! நீங்களோ இந்திரன் மரபிலுதித்தவர்கள்; அதனால் தேவாம்சம் பெற்றவர்கள்; நானோ ஒரு வித்வான்; இந்திர குலாதிபர்களாகிய நீங்கள் வித்தையில் விருப்ப முடையவர்கள்; இப்பேர்ப்பட்ட நீங்கள் என் மீது தயவு வைக்க வேண்டு மென்பதைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை" என்று ஸ்தோத்திரம் பண்ணினான். இதைக் கேட்டவுடன் திருடர் கூட்டத்தாருக்குமிக்க சந்தோஷ முண்டாய் விட்டது. வித்வான்கள் வசை பாடினால் அவர்களுக்குத் தீங்கு செய்பவர்கள் கெட்டே போவார்கள் என்ற நம்பிக்கை பண்டைக் காலந்தொட்டு இன்றளவும் அக் நாட்டிலிருந்து வருகிற படியால், அந்த வித்வான் வசை பாடினால், தங்களுக்குக் கேடு வரு மென்ற பயமும் அவர்களிடத்தில் அதிகரித்து விட்டது. அதனால், அத்திருடர்கள், "இவர் ஒரு வித்வான்; இவரை அடிக்காதீர்கள்" என்று சொல்லி அந்த வித்வானை நோக்கி, "ஐயா! உம்மை நாங்கள் அடிக்க மாட்டோம்; நீர் ஒரு பக்கத்திற் போய் உட்காரும்" என்று சொன்னார்கள். வித்வான் 'நம்மைச் சுவாமி காப்பாற்றினார்' என்று ஒரு மரத்தடியிற் போய் உட்கார்ந்திருந்தான்.

திருடர்கள், மேலும்; நின்ற ஜனங்களை யெல்லாம் அடித்து அவரவர்களிடமிருந்த பொருள்களை யெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு அவர்களை, "ஓடிப் போய் விடுங்கள்" என்று துரத்திவிட்டு வித்வானுக்கு மரியாதை செய்யவேண்டுமென்று அவன் பக்கம் திரும்பினார்கள். முன்னே திருடர்கள் வித்வானிடத்தில் பகூமான வார்த்தைகள் கூறியிருந்தாலும் அவ்வாறு அவன்பக்கம் திரும்பியவுடனே, அந்த வித்வான் தனித்திருந்த படியாலும், திருடர்களை எப்பொழுதும் நம்பக்கூடாதென்ற எண்ணம் அவனுக்கேற்பட்டிருந்த படியாலும், அவன், "இவர்கள் இப்போது நம்மிடம் திரும்பிவருகிறார்கள்; இவர்கள் முன்னே அன்பான வார்த்தைகள் பேசினார்களென்று இவர்களை நாம் நம்பக்கூடாது; இவர்கள், 'இவனுக்கினிப்பான வார்த்தைகளைக் கூறி நம்பிக்கை யுண்டாக்கி இவனை ஒரு பக்கத்தில் உட்கார வைத்துக் கடைசியில் பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்து நம்மை ஏமாற்றி வைத்திருந்தாலு மிருப்பார்கள்; ஆதலால் இவர்களை நம்புதல் கூடாது; இங்கே வந்து தனித்திருக்கும் நம்மை நசுக்கி விட்டாலும் நசுக்கி விடுவார்கள்; எப்படி யிருந்தாலும் சரி; நாம் சும்மா இராமல் இவர்கள் மனது சந்தோஷத்தை அடையும்படி ஏதேனு மொரு பாட்டுப் பாட வேண்டும்" என்று தீர்மானித்து உடனே அவர்களுடைய நாட்டையும், தொழிலையும், ஜாதியையும் சிறப்பித்து ஒரு செய்யுளமைத்து இனிய இராகத்தோடு கூட்டி அவர்களுக்கு முன்னிலையில் நின்று பாடி, அந்தப் பாட்டினுடைய அருத்தங்களை யெடுத்துச் சொல்லிப் பிரசங்கமும் செய்தான். வித்வானோ தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இவ்வாறு செய்தானே யன்றித் திருடர்கள் பாட்டின் அருமை யறிந்து தன்னைக் கொண்டாடுவார்களென்று நினைத்துச் செய்ய வில்லை. அவன் இவ்வகை எண்ணத்தோடு செய்தாலும், திருடர்களுக்கு அந்தப் பாட்டின் விஷயத்தில் அளவில்லா ஆனந்தமுண்டாய் விட்டது. அதனால் அவர்கள், "கேவலம்; திருடர்களாகிய நம்மீது கூட இந்தப் புலவர் பாட்டுப்பாடி விட்டாரே; இந்தப் பாட்டை ஏற்றுக்கொள்வதற்கு நாம் எவ்வளவோ தவஞ் செய்திருக்கவேண்டும்" என்று அவனைப் பலவாறு ஸ்தோத்திரம் செய்து, அந்த வித்வானை நோக்கி, "ஐயா! புலவர் சிகாமணியே! இன்று நாங்கள் உங்கள் திருவாக்கினால் பாடல் பெற்றதால் மகா புண்ணியவந்தர்களாய் விட்டோம்; நாங்கள் மிகவும் தாழ்ந்த திருடர்களானாலும், எங்களால் கொடுக்கப்படும் அற்ப வெகுமதியை நீங்கள் மனதிருப்தியோடு அங்கீகரிக்க வேண்டும்" என்று சில பணங்களை அத் தமிழ்ப் புலவனுக்குச் சன்மானமாகக் கொடுத்து அவனெதிரில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்காரம் புரிந்து, அவனை அழைத்துக் கொண்டு போய்,ஓர் ஊருக்குச் சமீபத்தில் மரியாதையாகச்சேர்த்து விட்டு அவனிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்; வித்வானோ, "இன்றைக்கு நாம் புறப்பட்டது நல்ல நேரம்! திருடரும் நமக்குச் சன்மானஞ் செய்வதாயிருந்தால் நம்முடைய புண்ணியத்தின் மகிமையை என்னென்று தான் உரைப்பது! நம் தமிழுக்கு எந்த விடத்திலும் சிறப்புண்டென்பதை இன்று நான் கண்கூடாகக் கண்டேன்" என்று மகிழ்ந்து தன்னூருக்குப் போய்ச் சேர்ந்தான்.



தமிழபிமான மிக்க சகோதரர்களே! இது கட்டுக் கதை யன்று; மெய்யாக நடந்ததே; திருடர்களும் தமிழின் மீதும், தமிழ் வித்வான்கள் மீதும் அன்பு செலுத்தி யிருக்கின்றார்கள்; இப்படி யிருந்தும், இக் காலத்தில் பெரும் பான்மையோர் தமிழென்றாலும் அருவருக்கிறார்கள்; ஒருவித்வான் மிகுந்த கற்பனை நயங்களோடு ஒருவர் மீது கவி பாடினாலும், அவனை நோக்கி, "உமக்கு வேறு வேலையில்லையா? உம்முடைய கவியினால் என்ன இலாபமுண்டு?போம் போம்" என்கிறார்கள். வித்வான்கள் அரும் பிரயாசையுடன் செய்யும் நூல்களையும் அவமதிக்கின்றனர். ஆனால், தமிழ் விற்பத்தியில்லார், நிறைந்த வழுக்களோடு செய்யும் பாடல்களும், நூல்களும் பலரால் கொண்டாடப் படுகின்றன. இது கால வித்தியாசத்தால் நேர்வதென்று சொல்வதன்றி வேறே யாரை நோவது? செந்தமிழ்ச் செல்வி சிறப்புறும் நாள் எந்நாளோ? இறைவன் திருவருளுண்டாகுமேல் நம் மெண்ணம் கை கூடும்.

பாவலர் நேசன்.

## உலகத்தின் அற்புதப் பிராணிகள்.

---

### இரட்டை மீன்.

சமுத்திர ஜலத்தில் கடவுளால் படைக்கப்பட்டிருக்கும் நீர்ப் பிராணிகளின் வகைகளையும், அவற்றின் விநோதங்களையும் அளவிட்டுச் சொல்லுதல்

எவராலும் முடியாது.கடவுளின் படைப்புத் தொழிலின் விசேஷங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் சாஸ்திரிகளுக்கு அளவிறந்த பேதங்களாகிய மீன் வர்க்கங்கள் அவ்விசேஷங்களைக்காட்டி மிக்க உதவி புரிகின்றன. அவற்றுள் அச்சாஸ்திரிகளுடைய அறிவை விருத்தி செய்வதற்கு வேண்டிய வெவ்வேறு வகை உருவங்களுள்ள மீன்களெல்லாம் சமுத்திரத்தில் அகப்படுவதல்லாமல் அசம்பாவிதமான இரட்டைப்பிறவி மீன்களும் காணப்படுகின்றன.

1858. ஆம் வருஷத்தில் ஓர் ஆங்கிலேயேதுரை, அமெரிக்கா தேசத்தில் காலினு என்னும் நதியில் யாத்திரை செய்துகொண்டிருக்கும்போது ஓர் இரட்டைப்பிறவிமீனைக்கண்டாராம்; இப்பிறவியில் இரண்டுமீன்கள் வயிற்றோடு வயிறு பொருந்தும்படி ஒட்டப்பட்டிருந்தனவாம்; அவர் மிக்க பிரயாசையோடு அம்மீனைப்பிடித்து உயிரோடு இங்கிலாந்துக்குக் கொண்டுவந்தாராம். ஆனால், அங்குவந்தபின் அம் மீன், அதிகநாள் ஜீவித்திருக்கவில்லையாம்.

---

## திமிங்கிலம்.

---

சமுத்திரத்தில்வாழும் மீன்களிலெல்லாம் திமிங்கிலந்தான் மிகப்பெரிய வடிவமுள்ளது. இதை அநேகர் பார்த்திருக்கிறார்கள்; அவ்வாறு பார்த்தவர்களெல்லாரும் இதன் தோற்றத்தைப்பற்றி ஆச்சரியப்படுகிறார்கள். நீல்ஸன் என்னும் துரையும், ஒரு சமயத்தில் ஒரு திமிங்கிலத்தைப் பார்த்தாராம்; அதன் நிறை நூறு டன் இருந்ததாம்;(நூறுடன் என்றால் (2,20,000) இரண்டுலட்சத்து இருபதினாயிரம் பவுண்டாகும்; (அஃதாவது: எண்பத்தெட்டு யானை அல்லது காணூற்றுநாற்பது காடியின்பளுவாகும்.) அந்தத் திமிங்கிலத்தின் எலும்புகள்மட்டும் (3,360) மூவாயிரத்து முந்நூற்றறுபது பவுண்டு நிறையிருந்தனவாம். அதன் கொழுப்பிலிருந்து(170)நூற்றெழுபது டன் நிறையுள்ள எண்ணெய் எடுபட்டதாம். இஃதன்றி, பால்டிக் சமுத்திரக்கரையோரத்தில் அநேகம் வருஷங்களுக்குமுன் ஒரு திமிங்கிலத்தின் முள் அகப்பட்டதாம்; அம்முள்ளின்நீளம் (60) அறுபதடியிருந்ததாம். அத்திமிங்கிலம் சாதாரணதிமிங்கிலத்தைக்காட்டினும் (27) இருபத்தேழுபங்குபருமனும் பளுவும் உள்ளதாயிருந்திருக்கக்கூடுமென்று ஆராய்ச்சிக்காரர் யூகிக்கிறார்கள். திமிங்கிலத்தின் ஆயுள் (400) நானூறு வருஷமாகும்.

---

குறிப்பு:—லோகாதிசய விளக்க மென்னும் புத்தகத்திலிருந்து இவை எடுக்கப் பட்டன. அந்தப் புஸ்தகத்தின் விலை எட்டணா.



## தரும சீலன் அநுபந்தம்.

### வெண்பாக்கம் ஜைன சகோதர சங்கம்.

(இரண்டாவது வருஷாந்தரக் கூட்டம்.)

இரௌத்திரி ஞு ஆனிமீ 31உ வெண்பாக்கம் கிராமத்தில் ஸ்ரீவர்த்தமான சுவாமியின் திருக் கோயிலில் ஸ்ரீமான்-லோகநாத நயினர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க்கூடியது.

நடவடிக்கைகள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமான், | லோகநாத நயினர் | அவர்கள் | முன்னுரை. |
| ,, | ஜெயராவு நயினர் | ,, | கடவுள் வாழ்த்து |
| ,, | வசந்தராவு-நயினர் | ,, | தருமம் தலைகாக்கும் |
| ,, | K. A. அய்யாதுரை நயினர் | ,, | பெற்றோர் கடமை |
| ,, | P. R. வஜ்ஜிரபாகு நயினர் | ,, | தேக நிலையாமை |
| ,, | அனந்த விஜய உபாத்தியாயர் | ,, | அகளாங் கஷ்டகம். |

அக்கிராசனர் முடிவுரைப் பிரசங்கம் செய்த பின்பு சந்தன தாம்பூலம் வழங்கப் பட்டு மங்கள வாழ்த்துடன் சபை கலந்தது.

இரண்டாவது நாள் நடவடிக்கைகள்.

திருப்பனங் காடு மணியம் ஸ்ரீமான் தேவ சந்திர நயினர் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமான், | வசந்தராவு நயினர் | அவர்கள் | கேள்வி முயல் |
| ,, | K. A. அய்யாதுரை நயினர் | ,, | முயற்சி |
| ,, | P. R. வஜ்ரபாகு நயினர் | ,, | தற்கால நிலமை |

அக்கிராசனர் முடிவுரைப் பிரசங்கம் செய்த பின்பு சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு மங்கள வாழ்த்துடன் சபை கலைந்தது.

இங்ஙனம்,

K. A. அய்யாதுரை நயினர், காரியதரிசி.

### திருமலை மூன்றாவது வருட மகா சபை.

இரௌத்திரி ஞு தைமீ 3உ (15-I-21)ல் திருமலை மகா க்ஷேத்திரத்தில் விராஜமானரா யெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ சிகாமணி நாதருக்கு மஸ்தகாபிஷேக மஹா பூஜை நடந்தேறியது. அன்று இரவு மஹாபிஷேகத்தைக் காண வந்த மஹாசிராவக சிராவகிகள் அனைவரும் ஸ்ரீ நேமிநாத ஸ்வாமியின் சந்நிதி முன்பாக ஒரு பெருங் கூட்டம் கூடினர்.

இக்கூட்டத்திற்கு மைசூர் சமஸ்தான மஹா வித்வானும் சிரவண பெளிகுளவாசியுமான ஸ்ரீமான் தோர்பலி ஜிநதாஸ சாஸ்திரியார் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி ஸ்ரீமான் நாகல் பத்திரபாகு நயினர் அவர்கள் பிரேரேபிக்க மஹா ஜனங்கள் அங்கீகார கோஷம் செய்தனர். பின்பு மஹா வித்வான் அவர்கள் அக்கிராசன ஆசனத்தில் அமர்ந்து முன்னுரைப் பிரசங்கத்தில் ஜைன மதத்தின் மேன்மை யென்னும் விஷயமாய்ப் பேசினார். பின்பு ஸ்ரீமான் நாகல் பத்திரபாகு நயினர், ஸ்ரீமான் பிரம்ம சூரி சாஸ்திரியார், ஸ்ரீமான் மேல் மின்

னல் சக்கிரவர்த்தி நயினார், ஸ்ரீமான் S. சக்கிரவர்த்தி நயினார், ஆரணி ஜைன சகோதர சங்க சமஸ்கிருத பாடசாலையின் ஆசிரியர் ஸ்ரீமான்-குப்புசாமிசாஸ்திரியார், முதலிய கனவான்களால் ஜைன மதத்தத்துவசம்பந்தமாக உபந்யாசங்கள் நடைபெற்றன. பின்பு, அக்கிராசனர் முடிவுரைப் பிரசங்கத்தில் ஜைன மதம் பூர்வீக மிருந்ததையும் தற்கால மிருப்பதையுங் குறித்து விரிவாகப் பேசினார். இப்பிரசங்கம் முடிந்ததும் அக்கிராசனருக்கு வந்தனம் கூறப்பட்டுச்சபை கலைந்தது.

இங்ஙனம்,
சிகாமணி சாஸ்திரி,
திருமலை.

## புத்தக வரவு.

### ஸ்ரீ. தர்ம தேவதை ஆரூட யந்திரம்.

இத்தலைப் பெயரமைந்த துண்டுப் பத்திரிகை யொன்று, 'காரைக்குடி ஸ்ரீ- தர்மதேவதை ஆரூடயந்திரசாலை'யிலிருந்து நம் பார்வைக்கனுப்பப்பட்டிருக்கிறது. இதில், 168. சதுர வீடுகளையுடைய சக்கரம் ஒன்று அழகிய பச்சை வர்ணத்தில்அமைக்கப் பெற்று ஒவ்வொருவீட்டிலும் வெள்ளை நிறமுள்ள தமிழ் அக்ஷரங்கள் அடைக்கப் பெற்றிருக்கின்றன. தர்ம தேவதையைத் தியானித்துச்சிறுகுழந்தையினிடம் ஒரு புஷ்பத்தைக் கொடுத்து, அக்குழந்தைக் கிஷ்டமான ஏதேனுமொரு வீட்டிலுள்ள ஒரு அக்ஷரத்தைத் தொடச்சொல்லி, அந்த எழுத்தை ஒரு கடிதத்தில் குறித்துக் கொண்டு முறையே அந்த அக்ஷர முதல் ஒவ்வொரு ஒன்பதாம் அக்ஷரத்தையும் எழுதி, முதலில் ஆரம்பமான அக்ஷரம் வந்தவுடன் நிறுத்திக் கொண்டு அந்த எழுத்துக்களைக் கூட்டிப் படித்துப் பார்க்கச் சில வாக்கியத் தொடர்கள் அமைந்திருக்கின்றன. இவைகள்மனிதர்க்குண்டாகும் நன்மை தீமைகளை உணர்த்தக் கூடியவைகளாயிருக்கின்றன. ஒரு காரியத்தைக் குறித்து இது ஆகுமா ஆகாதா என்று பார்க்க விரும்புவோர் அதை மனதில் நினைத்துக் கொண்டு இந்த யந்திரத்தில் நம்பிக்கை வைத்து, மேற்கூறிய விவரப்படி செய்தால் நிச்சயமாக நன்மை தீமைகளை உணர்ந்து கொள்ளலாமென்று இந்த யந்திரத்தைச் சமைத்தோர் உறுதிகூறுகின்றார். நாம் இரண்டொரு முறை இதன் பலனைப் பரிசோதித்துப் பார்த்ததில்மெய்யாகவே விளங்கிற்று.

"மந்திரமுந் தேவும் மருந்துங் குருவருளும்
யந்திரமும் ஞானந் தருமுறையும்—தந்திரமும்
மெய்யென்றால் மெய்யாய் விளங்குமே மேதினியில்
பொய்யென்றாற் பொய்யாகிப் போம்"

என்றபடி இதில் நம்பிக்கை வைப்பார்க்குப் பலனுண்டாகு மென்பதில் ஐயமின்று. ஆதலின் இதனை ஒவ்வொருவரும் வரவழைத்து வைத்துக் கொண்டால் அவர்க்கு ஓர் ஆரூட சாஸ்திரி உதவி புரிவது போல் புரியு மென்பது நமது துணிபு. இந்த யந்திரத்தை, "ஸ்ரீ. தர்ம தேவதை ஆரூட யந்திரசாலை, காரைக்குடி" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஓம்
ஸ்ரீ ஜிநாய நம:

# தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)

22 OCT 192–


| புத்தகம் 3 | இரௌத்திரி ஹூ மாசி மீ 1921 ஹூ பிப்ரவரி மீ | சஞ்சிகை 11 |
| --- | --- | --- |


## தருமோபதேசம்.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இல்லறத்தி லிருப்பவர்க்கு ஜாதி பேதம்
எப்பொழுது மிருப்பதுதான் கிரம மாகும்
இல்லையெனில் மேலவர்கள் கீழோ ரென்கள்
என்றவகை யில்லாமற் போவ தோடு
தொல்லைபல வுண்டாகும் தோட்டி கூடச்
சொன்னபடி பணிவிடைகள் செய்ய மாட்டான்
எல்லாவே லையுந்தாமே யியற்ற வேண்டும்
இதையுணரா ரேபேத மிலையென் பாரே. (௪௪)

மனத்தினிலே ஜீவனெல்லா மொன்றே யென்ற
வகைமட்டும் படிந்திருக்க வேண்டு மன்றி
இனத்தினிலே பேதமட்டு மிருக்க வேண்டும்
இல்லையென்றா லொழுக்கங்க ளெல்லாங் கெட்டு
வனத்திலுள்ள மிருகவியல் பரவ லாகும்
மானமெல்லாம் அடியோடு தொலைந்தே போகும்
அனைத்துமொன் றேயெனுந்தன்மை யோகிக் கன்றி
அகிலத்தில் இல்லறத்தார்க் கடுத்த தன்றே. (௪௫)

எப்பொருளும் பற்பலவாம் பேத மாக
இறைவனார் சிருட்டித்த தன்றி யெல்லாம்
இப்புவியி லொன்றாகப் படைக்க வில்லை
இதனாலே மனிதரிலும் பேத மாச்சு
இப்படியா னாலுமெல்லா வுயிர்கள் மீதும்
ஏகநா யகனன்பு செலுத்தல் போல
ஒப்புறவே மனிதர்வகை பலவா னாலும்
ஒருவரின்மே லொருவரன்பு செலுத்தல் நன்றே ()

# தருமசீலன்.

## இரௌத்திரி ஸ்ரீ மாசிமீ

### யதார்த்தவாதி வெகுஜனவிரோதி.

யதார்த்தம்-உண்மை, வாதி-வாதிப்பவன்; ஆகவே, 'யதார்த்தவாதி' என்பதற்கு, "உண்மை நெறியைப் பற்றி வாதஞ் செய்பவன்" என்று பொருளாம். உண்மை நெறியைப் பற்றி வாதஞ் செய்தலாவது: உண்மை மார்க்கத்தை நிலை நிறுத்தக் கருதி, அதற்கு மாறு பட்டுக் கெட்ட வழிகளில் பிரவேசித்திருக்கும் ஜனங்களிடத்தில், அவர்கள் கொண்டிருக்கும் கொள்கை கெட்டதென்று எடுத்துக் காட்டி, அவர்கள் கூறும் தப்பான வார்த்தைகளைக் கண்டித்துப் பேசித் தர்க்கமிட்டு வாதித்து அவர் கொள்கைகளை நீக்கி, அறநெறிகளைப் போதிப்பதாம். இந்தக் கடமையை மேற் கொண்டவனே யதார்த்த வாதியாம். 'வெகு ஜன விரோதி' என்பதற்கு, 'பலமனிதர்களுக்கு விரோதியாவான்' என்று பொருளாம். ஆக, 'யதார்த்தவாதி வெகு ஜன விரோதி' என்ற தொடர், 'உண்மையைப் பற்றி வாதஞ் செய்து நன்னெறிகளை எடுத்துக் கூறுவோன் அநேக மனிதர்களுக்குவிரோதமுடையவனாவான்' என்ற பொருளைத் தரும்.

இப்பேர்ப்பட்ட நன்மார்க்கத்தை யுடையவன் ஏன் பல ஜனங்களுக்கு விரோதி யாகிறானென்றால், உலகம் மாயா ரூபமானது; அதனால், உலகத்தில் பெரும்பாலும் நியாய விரோதமான செய்கைகளே பரவி யிருக்கும்; மனிதவர்க்கத்தார் ஒவ்வொருவரும் அவற்றால் பற்றப் பட்டவர்களாகவே யிருப்பார்கள்; எப்பேர்பட்டவனிடத்திலும் சொற்ப துர்க்குணமாவது இருந்து கொண்டேதானிருக்கும்; உலகப்பற்று முழுவதையும் ஒழித்துத் தவஞ்செய்து யோகத்திலிருக்கும் மகாத்மாக்களைத் தவிர மற்றவர்களெல்லோரும் ஒரு குற்றத்



துக்காளாகவே யிருப்பார்கள்; எல்லா நற்குணங்களும் பொருந்திய ஒரு மனிதன்கூட, தன்னிடத்தில் ஒரு மனிதன் பேசிக் கொண்டிருந்து சென்றவுடனே, அவனுடைய துர்க்குணத்தைப் பற்றிப் பக்கத்திலிருப்பவனிடம் பேசத் தொடங்கிப் புறங் கூறுதலாகிய குற்றத்திற் காளாகின்றான். இவன், அவனுடைய துர்க்குணத்தைப் பற்றிக் கூறுவது நல்லதே ஆயினும், அவனில்லாத விடத்தில் பேசுவதால் புறங் கூறலாகிய குற்றம் தானே வந்து சம்பவிக் கின்றது. இவன் சற்குணனா யிருந்தாலும் அவனுடைய குற்றத்தை அவனுக்கெதிரில் பேச அஞ்சி, மறைவில்பேசஆரம்பிக்கின்றான். நேரில் பேசும் தைரியம் இவனுக்கேற்படுகிறதில்லை. அதனாலேயே புறங்கூறுதல் வாயிலாகத்தன் னுடையநல்ல சுபாவத்தைக் காட்டிக்கொள்ளுகிறான். அவ்வாறு காட்டிக் கொள்வதில் இவனும்ஒருகுற்றத்திற்காளாகிவிடுகிறான். இது உலகத்தின் இயற்கைக் குணமாக அமைந்திருக் கின்றது. இப்படியே நன்றாக ஆராயுமிடத்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிறிய குற்றத்திற் கேனும் ஆளாவது சுபாவ மாகவே அமைந்திருக் கின்றது. ஆதலின், எவரும், 'நான் சகல விதத்திலும் பரிசுத்தன்' என்று சொல்ல நாவெழாது. வார்த்தையில் வேண்டுமானால் பெருமைக்காகச் சொல்லிக் கொள்ளலாம். அப்படிச் சொல்பவர்கள், தங்கள் மனசாக்ஷிக்கு விரோத மில்லாமல் நடு நிலைமையோடு தங்கள் உள்ளத்தை ஆராய்ந்து பார்ப்பார்களேயானால் தங்களிடத்திலும் ஏதேனும் குற்ற மிருப்பதாகவே தெரியும். இவ்வாறு எல்லோரிடத்திலும் தவறுதல் இருப்பது இயற்கையாகவே யிருந்தாலும், பெரும்பாலும் நல்லசுபாவமுடையவர்கள் நல்லோராகவும், பெரும்பாலும் கெட்டசுபாவமுடையவர்கள் கெட்டவர்களாகவும் உலகத்தவரால் மதிக்கப்படுகிறார்கள். இவ்விரு வகையாருள் முற்காலத்தில் நல்லோர் அதிகமாகவும், பொல்லார் குறைவாகவும் இருந்து வந்தார்கள்; இக்காலத்தில், காலத்தின் இயற்கைப்படி நல்ல வகுப்பினர் எண்ணிக்கையிற் குறைவாகவும், கெட்ட வகுப்பினர் அதிகமாகவும் இருக்கின்றனர். அப்படி யிருப்பதிலும் மேற்கூறிய படி மகா உத்தமர்களிடத்திலும் அற்பக் குற்றம் இருந்துகொண்டேயிருக்கிறது. மனிதன், உலக பந்தத்தை விட்டு எப்பொழுது நீங்குகிறானோ அப்பொழுதுதான் குற்றத்தினின்றும் விடுதலை யடைய முடியும். உலக இயற்கை இப்படி யிருப்பதனால், யதார்த்தவாதியாயிருப்பவன், பற் பல வகையான நீதிகளை எடுத்துக் கூற ஆரம்பிக்கும்போது அந்த அந்த வகைக் குற்றமுடையவர்களுக்கு விரோ

தியாகிறான். இப்படியே இவன் பலநாளும் பல வகையிலும் நீதி கூறிக் கொண்டு வரவர, உலகத்தில் அநேக ஜனங்களுக்கு விரோதியாகி விடுகிறான். இதனாற்றான், "யதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்னும் பழமொழி ஏற்பட்டது.

இப்படி ஏற்பட்டிருந்தாலும் நீதி கூறுவோர் இதற்கஞ்சித் தங்கள் கடமையைச் செய்யாதிருக்க மாட்டார்கள். ஒருவருடைய தாக்ஷிண்யத்தையோ தயவையோ எதிர் பார்க்கவே மாட்டார்கள்; ஒருவருக்கு மன வருத்தம் வருமே யென்பதையும் கவனிக்கவே மாட்டார்கள். இவற்றை யெல்லாம் கவனித்துப் பார்த்தால், ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு குற்ற மிருப்பது உலக இயற்கையாதலால், ஒவ்வொருவரும் தம்மீது விரோதங் கொள்வார்களென்பது விளங்கும்; அப்போது ஒருவகையிலும் நீதி கூறவே முடியாது. இதற்குக் காரணமாகச் சிலவிஷயங்களை இங்கே எடுத்து ஆராய்ந்து பார்ப்போம்: புறங் கூறுவோரைப் பற்றிச் சொன்னால், அக்குண முடையோர்க் கெல்லாம் கோபம் வரும்; பொய்கூறுதல் இழிவென்று சொன்னால் பொய்யருக்கு விரோதமாம்; திருட்டைப் பற்றிப் பேசினால் திருடருக்கெல்லாம் மன சங்கடமாயிருக்கும்; மது பானத்தைப் பற்றிப் பேசினால் மது வுண்பாருக் கெல்லாம் அதிருப்தி யுண்டாகும்; விபசாரத்தைப் பற்றிப் பேசினால் தூர்த்தருக் கெல்லாம் சீற்ற முண்டாகும்; கொலை கூடாதென்று பேசினால், கொலைத் தொழிலாளர்க் கெல்லாம்வெறுப்பாகும்; மித்திர பேதத்தைப் பற்றிச் சொன்னால் அக்குற்ற முடையார்க் கெல்லாம் மெத்தவும் ஆபாசமேயுண்டாகும்; சுத்தத்தைப் பற்றிப் பேசினால் அசுத்தர்களுக்கெல்லாம் கோபமே; பெருந்தீனி கூடாதென்று பேசினால் விலாப் புடைக்கத் தின்று புலி சீறுவது போல் ஏப்பமிட்டுறங்கும் சோம்பேறிகளுக் கெல்லாம் தொந்தரவுண்டாகும்; நடிப்புத் தொழில் கூடாதென்று பேசினால் வேடமிட்டு உலகத்தை ஏமாற்றுவோருக்குக் கோபமுண்டாகும்; கெட்ட உபதேசம் கூடாதென்று பேசினால், துன்மார்க்கப் போதனை செய்வார்க்கு அது எட்டிக்காய் போலிருக்கும்; படிப்பை அவமதித்தல் கூடாதென்று கூறினால், கல்வி யறிவற்ற நிரக்ஷரகுக்ஷிகளுக் கெல்லாம் கோபமுண்டாகும். இப்படியே ஒவ்வொரு வகை நீதியையும் கூற ஆரம்பிக்கும் போது ஒவ்வொரு வகையார்க்கும் விரோதமே யுண்டாகும். உலகம் குற்ற வடிவமாயிருப்பதால் உலகத்தார்க் கெல்லாமே யதார்த்தவாதி விரோதி யாகியே தீரவேண்டும். உலகத்தில் ஒருவருக்கும் மனஸ்தாபம் வாராமல் நீதி கூறவே



ண்டுமென்று ஆரம்பித்தால் எந்த வகையிலும் ஒரு வார்த்தையேனும் கூறுவதற்கு வாய் திறக்கவே முடியாது. மௌனம் சாதிப்பது தான், எவருக்கும் மனஸ்தாபம் வாராமல் நீதி கூறுதலாகும். இவ் வகை அபிப்பிராயங் கொள்வது தகுதியற்றதாகும்.

உலகத்தில் நீதி கூறுவதற்குக் கங்கணங் கட்டிக் கொண்டு வெளியேறியவன், எவ்வகை விரோதத்தையும் எதிர் பார்க்கக் கூடாது; எவருடைய உறவையும் நாடலாகாது; தாய் தந்தையர் மக்கள் சுற்றத்தார் உறவினர் பகைவர் என்ற பார பக்ஷம் பாராட்டலாகாது; எல்லோருடைய குற்றங்களையும் நடுவு நிலைமையோடு எடுத்துக் காட்டியே பேச வேண்டும்; தன்னுடைய குற்றத்தையும் கூட எடுத்துரைக்க வேண்டும். இதனால், என்ன கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் அவற்றைத் தாங்கிக் கொண்டு தன்னுடைய கடமையைச் செய்தே தீரவேண்டும். இத்தகைய பொது நன்மையான காரியத்தில் பிரவேசிக்கும்போது பலருடைய நிந்தனையும் உண்டாகும்; பலர் சகிக்க வொண்ணாப் பல துன்பங்களையும் செய்வார்கள்; உயிருக்கபாயம் வரினும் வரும். எது வரினும் அஞ்சக் கூடாது. எடுத்த காரியத்தைச் சாதித்தே தீர வேண்டும். ஒரு நன்மையான காரியத்தைச் செய்து முடிக்கும் விஷயத்தில் பல துன்பங்களைச் சகித்தல் மகா புண்ணியமாம். பெரிய மகான்களெல்லாம் உலகத்தில் நன்மையை நிலை நிறுத்த வேண்டித் தம்முடைய உயிரையும் பலி கொடுத்தார்கள் என்பதை நாம் சரித்திரங்களின் மூலமாக உணர்கிறோம்; பிரத்தியக்ஷமாகவும் சில சம்பவங்களைப் பார்க்கிறோம். இப்படிப் பாடு பட்டவர்களெல்லோரும் தம்முடம்பு பொன்றினும் புகழ் பொன்றாதவர்களாய் உலகத்தில் என்றும் நிலை பெற்று நிலவுகின்றார்கள்.

ஆதலின், நன்மையை நாடும் நண்பர்களே! உலகத்தில் எதனாலும் தளர்ச்சி யடையாமல் நன்மையை நிலை நிறுத்த நாடுங்கள்; இதனால் பலருடைய விரோத மேற்பட்டாலும் முடிவில் அவருக்கும் நமக்கும் நன்மையே உண்டாகும். நன்மையைக் கெடுக்க நாடும் இருட்சித்த முடையாரின் முரட்டுத் தனமான வார்த்தைகளைப் பொருட் படுத்தாதீர்கள். நல்லோருரையை நாடி எல்லோரும் ஏகமனதாய் இன்புறுமாறு இறைவனைச் சிந்தித்து வந்திப்பீராக.

பத்திராதிபர்.

## ஜலமோகினி.

கதையெழுதுவோர், புராதனகாலத்துக் கட்டுக் கதைகளில் சமுத்திரராஜனுக்கு மகளிருப்பதாகச் சொல்லி, அவளைப் பற்றி யெழுதியிருக்கும் விருத்தாந்தங்கள் அநேக முண்டு. அவை ஒரு பக்க மிருக்க, சமுத்திர கன்னிகைகள் சமுத்திரத்தின் ஆழத்திலுள்ள குகைகளில் வசிப்பதாகவும், சில சமயங்களில் கரையில் வந்து மனிதர்களோடு ஊடாடிப் பழகுவதாகவும் முற்காலத்தோர் வேறு சில கதைகளிலும் எழுதி யிருக்கிறார்கள். சமுத்திர கன்னிகைகள் நம்முடைய கன்னிகைகள்போலிருப்பதில்லையாம். அவர்களுக்கு இடுப்புக்கு மேல் பெண்பாலுடைய உருவமும், இடுப்புக்குக்கீழ் மீனுடைய உருவமும் அமைந்திருக்குமாம். மேல் பாகம் இராஜகன்னிகைகளுக்குரிய வடிவோடு கண்டோர் காமுறும்படி இருக்குமாம். இடுப்புக்குக் கீழுள்ள பாகத்தில் மீன்களுக்குரிய வாலும், சிலாம்புகளும் காணப்படுமாம். அவ்விதஜலமோகினியின் கூந்தல் அதிக நீளமாகவும் கறுத்து மிருக்குமாம். இன்னும் அம்மோகினி சில சமயங்களில் ஒருகையால் தன்னுடைய மயிரைச் சீவிக்கொண்டும், மற்றொரு கையில் கண்ணாடி யொன்று வைத்துப் பார்த்துக் கொண்டும் இருப்பதாகக் கதைகாரர் கூறுகிறார்கள்; வேறு சிலசமயங்களில் வஸ்திரம் தோய்த்துக்கொண்டிருப்பதாகவும், சிலர்சொல்லுகிறார்கள். இவ்வாறு வஸ்திரம்தோய்த்துக் கொண்டிருப்பது உலகத்துக்குக் கெடுதி என்றும் சில ஜாதியார் நம்புகிறார்கள்.

உலகத்தில் வழங்கும் இவ்வகை ஜலமோகினி சம்பந்தமான கதைகள் ஐந்துவகைப்படும். அவற்றுள், 1-ஆவது: -"ஜலமோகினி உலகத்திலுள்ள மனிதனைநேசித்துஅவனைத் தன் மோகவலைக்குட் சிக்க வைத்துச் சமுத்திரத்துக்குள் அழைத்துக்கொண்டுபோகும்" என்பது. இவ்வகைச் சரித்திரம் கதைகளிலும் காவியங்களிலும் காணப்படுகின்றது. 2-ஆவது: "ஜலமோகினி, தானாகவாவது பிறருடைய வேண்டுகோளுக்கிரங்கியாவது வருங்காரியத்தை முன்னறிந்து சொல்லக்கூடும்" என்று சொல்வது. இதைச்சிலர் நம்புகிறார்கள்; இதற்குதாரணமாக கிரீஸ்தேசத்துப் புராதனசரித்திரத்துள், அத்தேசத்தார்களுக்கு வரப்போகும்கேட்டை ஜலமோகினி முன்னறிந்து சொன்னதாக ஒரு விருத்தாந்தம்காணப்படுகின்றது. 3-ஆவது: "ஜலமோகினி, தனக்கு விருப்பமான நாயக னொருவனை வைத்துக்கொண்டிருக்கும்" என்றும், "அவனுக்குப் பிறரால்கேடு விளைந்தால் கேடுசெய்தோரை அது துன்பப்படுத்தும்" என்றும் சொல்வது. இதையும் சிலர் நம்புகிறார்கள்; சிலகிரந்தங்களிலும் இச்சரித்திரம் காணப்படுகின்றது. 4-ஆவது: "ஜலமோகினி, மனிதனுக்குத் தெய்விகத் தன்மையை உண்டு பண்ணும்" என்று கூறுவது. இக்கதையிலும் அநேகருக்கு நம்பிக்கை யுண்டு; ஜல மோகினியால், வாழ்த்தப் பெற்றவர்கள் மனிதர்களால் செய்ய முடியாத காரியங்களை யெல்லாம் செய்து முடிப்பார்களாம். 5-ஆவது "ஜலமோகினி, கரையில் வந்து தனக்கு இஷ்டமான நாயகனோ



டு சேர்ந்து வசிக்கும்" என்பதே. இதிற் பலர் பலவிதமான அபிப்பிராயங் கூறுகிறார்கள்; எப்படி யெனில், மேற் கண்டவாறு சேர்ந்த மனிதன், அக் கன்னிகையினுடைய விருப்பத்துக்கு மாறு செய்யாமல் இருக்க வேண்டுமாம். அவன் ஒரு சிறு விஷயத்திலேனும் அவளுடைய நோக்கத்துக்கு மாறு செய்வானாயின் உடனே அக் கன்னிகை அவனை விட்டுக் கடலிற்குள்தன் இருப்பிடத்துக்குச் சென்று விடுவாளாம்.

இன்னும் சிலர், இதைப்பற்றி வேறு வகைகளான கதைகளும் சொல்லுகிறார்கள். எப்படி யெனில், மனிதனுக்குத் தீங்கு செய்ய வேண்டு மென்னும் எண்ணம் இம்மோகினிக் கில்லாவிடினும், இம் மோகினியைக் காண்பதேமனிதருக்குப் பெருந் துர்ப்பாக்கியமாம். இன்னும் இது, வருங்காரியத்தைச் சொல்வதாயினும், மனிதருக்குத் தெய்விகத்தை உண்டு பண்ணுவதாயினும் அவ்வாறு செய்வது இலேசான காரிய மன்றாம். இம் மோகினியை மிகுதியாக வேண்டிக்கொண்டால் மாத்திரந்தான் இது மேற்கண்டவாறு மனிதருடையவிருப்பத்துக்கு உட்படுமாம். இன்னும், இது மேற்கூறியபடி வருங் காரியத்தைச் சொல்லும்போதும், மனிதனுக்கு அளவற்ற சக்தியைக் கொடுக்கும்போதும், உலகத்தாடவரோடு மனைவியாயிருக்க உடன் படும் போதும் மனிதருக்கு நாசகாலம் கிட்டி விட்ட தென்றே யூகிக்க வேண்டுமாம்; இவற்றால் நன்மையான காரியமொன்று முண்டாவதில்லையாம்; இஃதன்றி, இம் மோகினி ஜலத்தில் வசிக்கும்போது அளவற்ற ஆனந்தத்தை அனுபவிக்குமாம்; சில சமயங்களில் இதன் முகத்தில் துக்கமும், சோகக்குறியும் காணப்படுவது முண்டாம். இதன் இடுப்புக்குக் கீழுள்ள மீன் பாகத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்லும்போது பற்பல தேசத்தாரும் வெவ்வேறு வகையாக வருணிக்கின்றனர். அவர்களுள், ஆங்கிலேயர்கள் இச்சமுத்திர கன்னிகைக்கு ஒரு வால் இருப்பதாகச் சொல்லுகின்றனர்; ஜர்மானியர்களும், பிரான்ஸியர்களும் இதற்கு இரண்டுவால் இருக்கிறதாகச் சொல்கின்றனர்.

இவ்வாறு பற்பல தேசங்களில் பற்பல கதைகளிருந்த போதிலும் உண்மையான தேசசரித்திரங்களில் இந்த ஜலமோகினியின் சரித்திரத்தைப் பற்றி ஒருவரும் எழுதவில்லை. ஆனால், சில கிருஸ்தவ நூல் கதைகளில்மட்டும் மேற்கண்ட கதைகளிற் கூறியபடி முற்காலமுதலே சமுத்திரகன்னிகையும், சமுத்திரமனிதனும் உண்டென்று அந்நூலாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். அதனால் முன்கூறியபடி சாதாரண ஜனங்களெல்லோரும் இவ்வாறு ஒருபிராணி உண்டென்றே நம்பியிருக்கிறார்கள். இப்படி இவர்கள் நம்புவதற்கேதுவாக மேற்கண்டபடி கிருஸ்தவர்கள் எழுதிய சிலகதைகளையும் இங்கெடுத்தெழுதுவாம்: கி. பி. 6- ஆவது நூற்றாண்டில் ஒரு ஜலமோகினி அகப்பட்டதாகவும், அதைக் கிருஸ்துமதத்தில் சேர்ப்பித்ததாகவும் ஒரு கிருஸ்தவ நூல் கூறுகின்றது. இஃதன்றி, 1187 ஆம் வருஷத்தில் இங்கிலாந்தில் ஒரு மீன்மனிதன் அகப்பட்டானென்றும், அவனை அங்குள்ளார் ஆறுமாதகாலம் அரண்மனையில் வைத்திருந்தார்களென்றும் மற்றொருகதைகூறுகின்றது. இன்னும் 1811

ஆம் வருஷத்தில் இங்கிலாந்தின் தென்பாகத்தில், மூன்று வேட்டைக்காரர்கள் வேட்டைக்குப்போயிருந்ததாகவும், அப்போது இரண்டு ஜலமோகினிகள் கரையில் வந்து குளிர்காய்ந்துகொண்டிருந்ததாகவும், அவ்விரண்டில் ஒன்றுக்கு நோய்கண்டிருந்தபடியால், அதற்காக அவ்விரண்டு மோகினியும் பூனை அழுவதுபோல் ஓலமிட்டு அழுதுகொண்டிருந்ததாகவும், அப்படி அழுதுகொண்டிருக்கும்போது அந்தச் சப்தம்வரும் திசையைநோக்கி அம்மூவரும் சென்று பார்த்ததாகவும், அவ்வாறு சமீபத்தில் நெருங்கிப் பார்த்தபோது நோயாயிருந்த மோகினி இறந்து விட்டதாகவும், மற்றொன்று அதற்காக இன்னும் அதிகமாக அழுதுகொண்டிருந்ததாகவும், அத்தருணத்தில் அவ்வேட்டைக்காரர்கள் இறந்தமோகினியை எடுத்துக்கொண்டதோடு தந்திரமாக உயிரோடிருந்த மோகினியையும் பிடித்து அவ்விடரண்டையும்வீட்டுக்குக்கொண்டு வந்ததாகவும், அப்படிக் கொண்டுவந்ததனால் அவற்றைப்பார்க்கச்சிலநாள்வரையில் அதிகமான ஜனங்கள் வந்ததாகவும், அப்படிவந்தவர்களிடத்திலிருந்து அவர்கள் அதிகமான இலாபம் சம்பாதித்ததாகவும், அம்மோகினி யிரண்டும் நான்கடி உயரத்தோடும், ஐந்தங்குல நீளமான மயிரோடும் இருந்ததாகவும், அவற்றிற்கு வாய் மிகச் சிறிதாயிருந்ததோடு பல்இல்லாமலிருந்ததாகவும், உயிரோடிருந்த மோகினி பச்சை மீனைத்தின்றே ஜீவித்துவந்ததாகவும் வேறொருகதை கூறுகின்றது.

இவைதவிர 1610. ஆம் வருஷத்தில் ஒரு தளகர்த்தர் சேன்ட்ஜான் என்னும் துறைமுகத்தில் ஒரு ஜலமோகினியைக்கண்டதாகவும், அதன்மயிர் அதிகமாக நீண்டிருந்ததாகவும், அதைப்பிடிப்பதற்காகச் சமீபத்தில் போவதற்குள் அது கடலுக்குள்மூழ்கிமறைந்துவிட்டதாகவும்சொல்லுவதாகப் பின்னுமொரு கதை எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் 1403. ஆம்வருஷத்தில் சமுத்திரத்திலிருந்து ஒரு ஜலமோகினி ஓர் ஏரிக்குள் வந்துவிட்டதாகவும், அதைச் சிலர் பிடித்துப் பதினாறு வருஷம்வரையில் ஜீவித்திருக்கும்படி செய்தார்களென்றும், அம்மோகினியோடு ஒருவராலும் சம்பாஷிக்க முடியவில்லையென்றும், உலகத்தவரோடு அது பேசாமலிருந்தபோதிலும் மனிதர்களுக்குரிய கைத்தொழிலைக் கற்றுக்கொண்டதாகவும், கிருஸ்தவர்களுடைய சிலுவையையும் தொழுதுகொண்டிருந்ததாகவும் வேறொருகதையும் வழங்குகின்றது. ஆனால் இக்கதை உண்மையென்று நம்பும்விஷயத்தில் அதிகமானசந்தேகமுண்டு. சிலர், அதை மீனாகப்பாவித்திருக்கின்றனர்; வேறு சிலரோ, அதைஉண்மையான ஜலமோகினியென்றே சொல்லுகின்றனர். இக்கதைகளிலெல்லாம் பொய்யும் மெய்யும் கலந்து கிடப்பதாலும், சமீபகாலத்திற்குள் ஜலமோகினி ஒன்றும் அகப்படாமையாலும், உண்மையான சரித்திரங்களில் அதைப்பற்றிய விவரம் ஒன்றும் இல்லாமையாலும், ஜலமோகினி உண்டென்றாவது, அல்லது இல்லையென்றாவது முடிவாகத் தீர்மானம் செய்தல் முடியாமலிருக்கிறது.

“லோகாதிசய விளக்கம்”

---



## ஸ்ரீகார்கள பாகுபலி சுவாமி சரித்திரம்.

நிகழும் 1921௵ பிப்ரவரிமீ 13௳ முதல் 22௳ வரையில் தென்கன்னடம் ஜில்லா கார்களத்தில் பர்வதாக்ரத்தில் விராஜமானராக விருக்கும் ஸ்ரீகோமடேஸ்வர ஸ்வாமிக்கு அபிஷேக மஹோத்ஸவம் நடை பெற்றது. அதின் வைபவங்களெல்லாம் இதன் பக்கத்தில் வரையப் பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். அதற்கு முன் எந்த பகவானுக்கு இத்தகைய சிறப்புக்கள் நடந்தேறினவோ, எந்த பகவானது தரிசன மாஹாத்மியத்தால் பல்லாயிரக் கணக்கான பவ்ய ஜீவன்கள் புண்ய லாபத்தை யடைந்தார்களோ, அந்த ஸ்ரீ பாகுபலி ஸ்வாமியின் திவ்ய சரித்திரத்தைத் தெரிந்து கொள்வது அவசியமா யிருப்பதால் அதனை இங்குச் சுருக்கமாகத் தெரிவிப்பாம்:—

அனாதியாக இந்த பரத க்ஷேத்திரத்தில் உத்ஸர்ப்பிணி, அவஸர்ப்பிணி என்னும் இரண்டு கால பேதங்கள் மாறி மாறி நடந்தேறி வருகின்றன. பிரகிருதத்தில் நடப்பது அவஸர்ப்பிணி காலம். இது நன்னற் காலம், நற் காலம், நற்றீக் காலம், தீநற்காலம், தீக்காலம், தீத்தீக் காலம் என அறுவகை யாகும். இதில் முதற் காலம் உத்தம போக பூமி தன்மையதாகவும், இரண்டாங்காலம் மத்யம போக பூமி தன்மையதாகவும், மூன்றாங் காலம் ஜகன்ய போக பூமி சமான மாகவும் இருந்தன. இந்த மூன்று காலங்களிலும் பத்து விதமான கல்ப விருக்ஷங்கள் ஜனங்களுக்கு வேண்டிய வைகளை யெல்லாம் கொடுத்துக் கொண்டு வந்தமையால் ஜனங்கள் யாதொரு கஷ்டமின்றிச் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இங்ஙன மிருப்ப மூன்றாங் காலத்து அந்தியத்தில் கல்ப விருக்ஷங்கள் அதிஸ்வல்ப பலனைக் கொடுத்ததால் ஜனங்களின்தேவைகள் அதிகரித்து ஜனங்கள் அதிக கஷ்டத்துக் குள்ளானார்கள். இந்த சமயத்தில் 14 மனுக்கள் ஒவ்வொருவராய்த் தோன்றி அவ்வப்போது ஜனங்களின் கஷ்டத்தை நிவாரித்துக் கொண்டு வந்தார்கள். இவர்களில் கடைசி மனுவாகிய நாபிராஜனுக்கு ஆதி தீர்த்தங்கரராகிய விருஷப ஸ்வாமி புத்திரராக அவதரித்தார். இவர் காலத்தில் கல்ப விருக்ஷங்கள் பலன் ஸ்வல்ப மேனும் கொடாமற் போகவே, ஜனங்கள் ஸ்வாமியை யடைந்து, தங்கள் கஷ்டங்களை நீக்கும்படி பிரார்த்திப்ப, பகவானும் ஜீவனோபாயத்திற்காக அஸி, மஸி, க்ருஷி, வித்யா, வாணிஜ்ய, சில்ப மென்னும் ஷட்கர்மங்களை அவர்கட்கு உபதேசித்து நவதான்யங்களை ஆஹாரமாக உபயோகிக்கும் விதத்தையும், கரும்பிலிருந்து சர்க்கரைஎடுப்பதையும், பஞ்சினால் வஸ்திரம் நெய்வதையும், வீடு கட்டுவதையும், ஆபரணங்கள் செய்வதையும், யானை, குதிரை, மாடு முதலான மிருகங்களை வசப்படுத்தி உபயோகித்துக் கொள்வதையும், இன்னும் பல விஷயங்களையும் விஸ்தாரமாக உபதேசித்து அந்த ஜனங்களின் கஷ்டத்தை நீக்கினார். இதனால் இவருக்கு ஆதிப்ரம்ஹா வென்று பெயராயிற்று. இந்தக் காலந் தொடங்கி நடந்த காலத்திற்கு கிருத யுக மென்று பெயராயிற்று.

பின்னர் ஸ்ரீ விருஷப ஸ்வாமி, தம் பிதாவின் வேண்டுகோளின்படி ஜனங்களுக்கு கிருஹஸ்த தர்மத்தைத் தாமே நடத்திக் காட்டுவான் வேண்டி, சுனந்தை, எசஸ்வதி என்னும் இரண்டு கன்னிகைகளை விவாகம் செய்து கொண்டு, கௌசல தேசத்து ராஜதானியாகிய அயோத்தியின்கண் சுகேனஇராஜ்ய பாரம் செலுத்திக் கொண்டிருந்தார்.

இப்படி யிருக்கையில் ஸ்வாமிக்கு சுனந்தை பக்கல் பரதன் முதலான 99 பிள்ளைகளும், பிராம்ஹி என்னும் ஒரு பெண்ணும், எசஸ்வதி பக்கல் நமது சரித்திர நாயகரான பாகுபலி குமாரரும், சுந்தரீ என்னும் ஒரு பெண்ணும் ஜனித்தார்கள். ஆதி பிரம்ஹாவும், லௌகீக தர்மஸ்தாபகருமாகிய விருஷப ஸ்வாமியானவர், நீண்ட காலம், ராஜ்ய சுகங்களை யனுபவித்துக் கடைசியில் ஸம்ஸார விரக்தி யடைந்து, தமது ஜேஷ்ட குமாரனாகிய பரதனுக்குப் பட்டஞ் சூட்டி, மற்ற புத்திரர்களுக்கு வெவ்வேறு ராஜ்யங்களை பாகித்துக் கொடுத்து விட்டு, தாம் ஜிநதீக்ஷாப்ராப்தரானார்.

அதன் பின் ஒரு நாள் பரத ராஜனது ஆயுத சாலையில் சக்ர ரத்னம் உற்பத்தியாயிற்று. அவ்வாறான வுடனே பரதராஜன், சக்ர ரத்ன ஸஹிதம் சாதுரங்க பலத்தோடும் திக் விஜயத்திற்குப் புறப்பட்டு, ஷட் கண்டங்களையும் அடிப்படுத்தி எல்லா அரசர்களிடத்திலும் கப்பம் வாங்கிக் கொண்டு வந்து, தனது புரப்ரவேச ஸமயத்தில் சக்ர ரத்னம் செல்லாதிருப்பதைக் கண்டு, 'இதற்குக் காரணமென்ன?' என்று தெய்வக்ஞனாகிய புரோஹிதனிடம் வினவினன். அவன், "இன்னும் திக் விஜயம் பூர்த்தியாக வில்லை; அதனாற்றான் இது செல்லவில்லை" என்றான். அதைக் கேட்டு ராஜன் "ஷட் கண்டத்திலுள்ள எல்லா ராஜாக்களையும் நான் ஜெயித்து விட்டேன்; இனி என் சகோதரர்கள் தவிர வேறு யாரு மில்லை; அவர்களுக்கு ஸ்வாமியால் தேசங்கள் பாகித்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவர்களிடம் போய் எப்படிக் கப்பம் கட்டும்படி கேட்பது" என்றான். இதைக் கேட்ட தக்ஷணாங்க னென்னும் மந்திரி "அவர்களை யுத்த முகத்தால் ஜெயிப்பத்து முடியாத காரியம்; உபாயத்தால் வசமாக்கிக் கொள்ள வேண்டும்" என்றதும், பரதன் அநேக மந்திரிகளையும் தந்திரிகளையும் தன் சகோதரர்களை வசப்படுத்துமாறு அனுப்பினான். சகோதரர்களும் பரதனது அபிப்பிராய மறிந்து சஞ்சலமான சம்பத்துக்களில் வைராக்ய மடைந்து எல்லா பரிக்கிரஹங்களையும் விட்டுத் தபோவன மடைந்தனர்.

கடைசியாக தக்ஷணாங்க னென்னும் மந்திரி பாகுபலி குமாரரிடம் செல்ல குமாரரும், அவனைக் கண்டு யோக க்ஷேமங்களை விசாரித்த பிறகு, தக்ஷணாங்கன், தான் வந்த விஷயத்தைத் தெரிவித்ததும் பாகுபலி குமாரர் அதிருப்தராகி "ஹே மந்திரீ! உன் அரசனின் பௌருஷத்தை நான் முன்பே யறிவேன்; அவன் திக் விஜய சங்கதிகளையும் கேள்விப் பட்டிருக்கிறேன்; இந்த விஷயங்களை வர்ணித்துப் பேசி நம்மிடம் காரியத்தைச் சாதித்துக் கொள்ள நினைப்பது உனக்குப் பலித மாகாது; நீங்கள் செய்யும் தந்திரம் எனக்குத் தெரியும்; அந்தத் தந்திரத்திற்கு இந்த பாகுபலி மட்டும் உடன் படுவானென்று நீங்கள் சொப்



னத்திலும் நினைக்க வேண்டாம்; மற்ற சகோதரர்கள் பரதனுக்கு தேசத்தை ஒப்புவித்து தீக்ஷைக்குப் போய் விட்டது போல் நான் ஒரு போதும் போக மாட்டேன்; க்ஷத்திரிய ரத்தம் உன் அரசன் சரீரத்திலிருப்பதைப் போல் என்னிடமுமிருக்கிறது; உன் அரசன், தான் சக்ரவர்த்தி பட்டம் பெறுவதற்காகச் செய்த்தகாத அநியாயங்களைச் செய்திருக்கிறான்; சகோதரர்களையும் தேசத்தை விட்டு ஓட்டினானென்றால் இன்னும் என்ன சொல்ல வேண்டும்! உன் அரசனுக்கு சக்ரவர்த்தியாக வேண்டுமென்ற ஆசை யிருந்தால் என்னை யுத்தத்தில் ஜெயிக்கட்டும்" என்று சொன்னார். தக்ஷணாங்கனென்னும் மந்திரி தன் தந்திரம் பலிக்காமற் போகவே திரும்பி வந்து நடந்த சங்கதிகளை பரதனுக் கறிவிப்ப, அவனும் வேறுபாய மின்றி யுத்தத்திற்குப் பிராரம்பித்தான்.

உபய பக்ஷத்து சேனைகளும் குறிப்பிட்ட ஓரிடத்தில் சேர்ந்தன. அப்போது உபய பக்ஷ மந்திரிகளும் ஒன்று சேர்ந்து "பரதபாகுபலிகள் வஜ்ரதேகதாரிகளாகையால் இவர்களுக்கு அப மிருத்யு இல்லை; இவர்கள் சண்டையால் தேசம் கலக்கத்தை யுடைவதுந் தவிர வீணாகச் சேனைகளும் அழிந்து போகுமாகையால் சகோதரரிருவருமே திருஷ்டி யுத்தம், ஜல யுத்தம், மல்ல யுத்தங்களைச் செய்து ஜெயாபஜெயங்களை நிர்தாரணம் செய்யும்படி நாம் இவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்" என்று யோசித்து, பரத, பாகுபலிகளுக்குத் தங்கள் எண்ணத்தை அறிவித்தார்கள். அவர்கள் அப்படியே சம்மதிக்க, அவ்விதமான யுத்தம் பிராரம்ப மாயிற்று.

525 வில் பிரமாண முள்ளவரான பாகுபலி குமாரரும், 500 வில் பிரமாணத்தனாகிய பரத ராஜனும் பல யுத்தங்களைச் செய்து ஒவ்வொன்றிலும் பாகுபலியே ஜெய மடைந்தனர். அதைக் கண்ட பரதன், சக்ரரத்னத்தை நினைக்க அதுவும் வந்து பாகுபலி குமாரரை வதஞ் செய்ய மாட்டாது. அவர் பக்கல் நின்றது. இதைக் கண்ட பாகுபலி குமாரரது சைன்யங்கள் எல்லாம் ஜெய கோஷணை செய்தன.

இந்த சமயத்தில் பாகுபலி குமாரர் பரத ராஜனை நோக்கி "அண்ணா! இதற்கு முன் உன்னைப் போல் ஷட்கண்டங்களையும் ஆண்ட சக்ரவர்த்திகள் எல்லாம் கடைசியாக சகல சம்பத்துக்களையும் விட்டு மரண மடைந்தார்கள், அப்படியிருந்தும் உனது பிரயத்தினத்தைப் பார்த்தால் ராஜ்ய போகங்களை நீ மரண மடைந்த போதும் உன் கூடவே கொண்டு போக நினைத்திருப்பவன் போல் காணப் படுகின்றாய்; பிராணிகளுக்கு ஜன்மங்கள் அஸங்கியாதமாகவிருப்பதால் பூர்வ ஜன்மங்களில் அனுபவித்த போகங்களே அவைகளால் இப்போது மனுபவிக்கப் படுகின்றனவல்லவா? ஒரு தடவை அனுபவித்துக் கழித்த ராஜ்யாதி போகங்கள் எச்சலுக்குச் சமானமானவை; இவைகளினால் சம்பவிக்கும் அனர்த்தங்களை நீயே பிரத்தி யக்ஷத்தில் அனுபவித்தாய்; இனி யாகிலும் விஷ சமான போகாதிகளிலிருக்கும் துராசையை விடு; இவைகளெல்லாம் நாச மடையக் கூடியவைகள்; நித்ய சுகத்தை அடைவதற்கு ஒவ்வொரு ஜீவனும் பிரயத்தினப் பட வேண்டிய தவசியம். ஆனால்பரியக்குவ ஜ்ஞான மில்லா விட்டால் அந்த

மோக்ஷ சுகமானது லௌகிக சுகத்தைக் காட்டிலும், அதிகமான சுகத்தைக் கொடுக்கக் கூடியதென்ற புத்தி யுண்டாகவே மாட்டாது. இனி யாகிலும் அல்ப சுகத்துக்காக அக்ருத்தியங்களை ஆசரிப்பதை நீவிட்டு விடு. நான் தீக்ஷை கைக்கொள்ளத் தீர்மானித்து விட்டேன். உன்னுடைய துரபிமானத்தை பங்கம் செய்வதற்காகவே நான் உன்னுடன் யுத்தஞ் செய்தேனே யொழிய இந்தராஜ்ய சம்பத்துக்களில் நிலைபெற்றவனாக வேண்டுமென்று எனக்கு இஷ்டமில்லை. இதோஎன் ராஜ்யத்தையும் மஹா பலனென்னும் என் குமாரனையும்உன்வசமாக்கி இருக்கிறேன். இந்த ஜெயத்தினாலுண்டான ஸாம் ராஜ்யாதியத்தையும் உனக்கே ஒப்புவித்தேன்; எனக்கு தீக்ஷைக்கு அனுமதி கொடு" என்று சொல்லி விட்டு தீக்ஷோன்முகராயினர். அங்குக்கூடி யிருந்த மஹா ஜனங்கள் அவரைத் தடுத்து, எவ்வளவோ பிரார்த்தித்துக் கொண்டும் கேளாமல் பாகுபலிஸ்வாமி "சபையோர்களே! இந்த லோகத்தில் பிராணிகள் பிறந்தன, வளர்ந்தன, இறந்தன என்ற வார்த்தைகளை யுடையனவே யன்றி, ஸ்திரமாக இருப்பன வென்ற பேச்சை யுடையன வல்ல; நாசஸ்வபாவமான இந்த சரீரத்தினால் ஸ்திர சுகமாகிய மோக்ஷம் கிடைக்கக் கூடியதாயிருக்கும்போது அதற்குப்பிரயத்தினப்படாமல், அஞ்ஞானிகளைப் போல் அழியக் கூடிய போகங்களில் தமது அரிய வாழ்நாளைக் கழிப்பது ஞானிகளின் வேலை யல்ல" என்று சபையோர்களுக்குச் சொல்லித் தம் புத்திரராகிய மஹா பலரை நோக்கி "பிள்ளாய்! பரம்பரை முறைமையின் படி ராஜ தர்மத்திற்கு ஹானி வாராமல் நீ பிரஜா பரிபாலனம் செய்து கொண்டு உன் பெரிய தகப்பனின் அனுமதியின்படி நடந்து, யசஸ்வியாக இரு" என்று ஆசிர் வதித்து அண்ணனை வந்தித்துச் சபையோர்களின் அனுமதியைப் பெற்றுத் தபோ வன மடைந்தார்.

இந்த மஹா புருஷர் தீக்ஷையை ஸ்வீகரித்த ஒரு வருஷம் வரையில் ஒரே இடத்தில் ஸ்திரமாக நின்று ஆத்ம தியானத்தில் மூழ்கித் தம் கர்மசத்துருக்களை ஜெயித்துக் கொண்டிருக்கையில், சரீராதார ஹேதுவாகிய அன்ன பானாதிகளை ஸ்மரிக்கவே இல்லை. இவ்வளவு நீண்ட காலம் ஸ்திரமாக நின்று தியானாரூடராயிருந்த ஸ்வாமியின் தேகத்தின் மேல் அநேக கொடிகள் படர்ந்து விட்டன. பௌதீக சரீரத்தின் நாசத்தைக் குறிப்பிப்பது போல் புற்றுக்கள்தோன்றித் தேகமெங்கும் மூடிக் கொண்டன. ஆனால், ஏகாக்ர பாவனை மட்டும் விருத்தி யடைந்து கொண்டே வந்தது. இஃதன்றோ உண்மையான ஸமாதிஸ்திதி!

இவ்விதம் சுவாமி ஒரு வருஷம் கோர தபஸ் செய்து கர்ம மென்னும் விறகுகளுக்கு அக்னியைப் போன்ற சுக்ல தியானத்தை யடைந்து எல்லாக் கர்மங்களையும் நாசஞ் செய்து மோக்ஷ மடைந்தார்.

இந்த மஹா புருஷருடைய பிரதி பிம்பம் பவ்ய ஜீவன்களின் தர்சனார்த்தம் இந்த பாரத வர்ஷத்திலுள்ள ஒவ்வொரு ஜினாலயத்திலும் இருப்பதும் தவிர, அதி பிரசித்தமானவும், உன்னதமானவும், சுந்தர மானவும், மனோஹரமானவு மான பிம்பங்கள், ஸ்ரவண பெளி குளம், கார்களம், வேணூர் ஆகிய இந்த இடங்களிலிருக்கின்றன. இவைகளில் அதிக உன்னதமானது பெளி குள



த்திலுள்ள ஸ்ரீ கோமடேஸ்வரராகும். கொம்மட ராய னென்னும் மறு நாமம் புனைந்த சாமுண்ட ராயனால் இது பிரதிஷ்டிதமானதால் இதற்கு கோமடேஸ்வரரென்று பெயராயிற்று. இது தவிர பாகுபலி, புஜபலி, தோர்பலி முதலான திருநாமங்களும் இவருக்குண்டு. நாம் சரித்திரங்கூற வந்தது கார்கள ஸ்ரீ கோமடேஸ்வரரைப் பற்றியாதலால், இனி அவரது பிரதிஷ்டிதத்தைப் பற்றி விவரிப்பாம்:—

கார்கள மானது மங்களூர் (S. I. R.) ஸ்டேஷனிலிருந்து 32 மைல் தூரத்திலிருக்கின்றது. இங்கு 15வது நூற்றாண்டில் ராஜ்யபாரம் நடத்தியவன் பைரவராஜனென்பான். இவன் புத்ரன் வீர பாண்டியன். இவன் யாத்திரையாக அநேக தீர்த்த க்ஷேத்திரங்களை தரிசித்துக் கொண்டு வரும்போது ஸ்ரவண பெளிகுள மடைந்து கோமடேஸ்வரரை தரிசித்து அதிசந்துஷ்டனாகி அதைப் போலவே தன் பட்டணத்திலும் ஒரு பிம்பம் செய்து வைக்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டு கார்கள மடைந்த உடனே பிரசித்த கல் தச்சர்களை வரவழைத்து உடனே பிம்பம் தயாரிக்கும்படி ஆக்ஞாபித்தான். இவ்வேலை எவ்வளவோ பிரயத்தினத்தினால் பூர்த்தியாகி கி. பி. 1432ௌ பிப்ரவரி ௴ 12ௗ மஹா வைபவத்தோடு பிரதிஷ்டா மஹோத்ஸவம் நிறைவேறிற்று.

இந்த பிம்பம் மலையின்மேல்சுமார் 41 அடி உயரத்தில் அதிசுந்தர ரூபத்தோடும் மழை வெய்யில் முதலானவைகளால் எவ்வித விகாரத்தை யடையாமலும் சாந்த ஸ்வபாவத்தையும் வைராக்ய பாவத்தையும் தெரிவிக்கும் முக விலாஸத்தோடும், கம்பீர தோற்றத்தோடும் விளங்குகின்றது.

இங்ஙனம்,

ஸமாஜ ஸேவகன்.

---

## கார்கள மஹா புண்ணிய க்ஷேத்திரம்.

---

புண்ணிய பூமியாகிய இப்பாரத கண்டத்தில் ஜைன சமயத்தவர்க்கு முக்கியமை பொருந்திய மஹா க்ஷேத்திரங்கள் பலவுண்டு. அவற்றுள் கார்கள மஹா க்ஷேத்திரமு மொன்றாகும். இது எல்லா ஸ்தலங்களினும் சிரேஷ்டம் பொருந்தியதாய் விளங்குவது; தென் கன்னடம் ஜில்லாவில் மங்களூரிலிருந்து சுமார் 32 மைல் தூரத்திலுள்ளது. இதில் மிகவும் உன்னதமாய் விளங்கும் மலையின் மேல் ஸ்ரீ பாகுபலி ஸ்வாமி எழுந்தருளி யிருக்கின்றார். இந்த விக்கிரகம் பார்ப்பவர் மனத்தைக் கவரத் தக்கது. மலைச் சிகரத்தில் 41- அடி உயரமுள்ளதாய் ஒரே சிலையால் உரு வகுக்கப் பெற்ற மஹோன்னதமான வடிவமுள்ளது., மிகவும் ஆச்சரியம் பொருந்தியது. பற்பல தேசத்து சரித்திர ஆராய்ச்சிக் காரர்களாலும் இந்தியாவின் அற்புதங்களில் ஒன்றாக எடுத்தெழுதிப் பாராட்டப் படுவது. மேல் நாட்டுக் காரர்கள் இந்த விக்கிரகத்தின் அற்புத தோற்

றத்தைப் பற்றித் தங்கள் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் இதன் உருவப் படத்துடன் எழுதிக் காட்டி இதனைப் புகழ்ந்து வருகிறார்களென்றால் இதன் மகிமையை எவரால் அளவிட்டுச் சொல்லுதல் இயலும். ஜைனர்களின் உயர்வை விளக்குதற்கு ஏற்பட்ட அறிகுறிகளில் இது முக்கியமான ஒன்றாகும். இதைப்பார்த்தவுடனே எல்லா மதஸ்தர்களும் "இப்பேர்ப்பட்ட பிரமாண்ட உருவத்தையும் ஜைனர்கள் வகுத்திருக்கின்றார்களே; வேறு எம் மதத்தினரும் தெய்வ சம்பந்தமாக இப்பேர்ப்பட்ட அற்புதச் செயல்களை இது வரை செய்ததில்லையே; இதனாலேயே ஜைன மதத்தின் உயர்வு நன்றாக விளங்குகின்றதல்லவா" என்று புகழ்வதால் ஜைன-மதம் பண்டைக் காலத்தில் எவ்வளவோ மேன்மை பெற்றிருந்ததென்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில்விளங்கக் கூடியதாயிருக்கின்றது. ஆதலின், ஜைனர்கள் எல்லோரும் இந்த சுவாமியைத் தங்கள் உயிர்க்குயிராகக் கருதி மிகவும் பக்தியோடு பூஜித்து வருகின்றார்கள். அன்னிய மதஸ்தர்களும் மத வேற்றுமையின்றி விசேஷமாக பூஜித்து வருகின்றார்கள். இன்னும் இந்த சுவாமி எழுந்தருளியிருக்கும் ஷெ புண்ணிய க்ஷேத்திரத்தில் வேறு பதினெட்டுக் கோவில்களும் உண்டு. அவை யாவன:— 1. சதுர்முக பஸ்தி, 2. பொம்ம ராஜ பஸ்தி, 3. அம்மனவரு பஸ்தி, 4. கிரே பஸ்தி, 5. சிரவண பஸ்தி, 6. அரண்மனை பஸ்தி, 7. அப்பக்க தேவி பஸ்தி, 8. அட்டகேரி பஸ்தி, 9. நேமீஸ்வர ஸ்வாமி தொட்ட பஸ்தி, 10. எட பஸ்தி, 11. பல பஸ்தி, 12. குரு பஸ்தி, 13 அனந்தநாத ஸ்வாமி பஸ்தி, 14. ஆதீஸ்வர ஸ்வாமி பஸ்தி, 15. அம்மநவருபஸ்தி, 16 சந்திரநாத ஸ்வாமி பஸ்தி, 17. நியதி பஸ்தி, 18. இரிபஸ்தி என்பனவாம். இவ்வாலயங்களிலும் ஸ்ரீ பாஹுபலி ஸ்வாமிகள் ஆலயத்திலும் சிராவக சிராவகிகளாலும் மற்ற பக்தி ஜனங்களாலும்கால கிரமப்படி பூசனை சிறப்பு முதலியவைகள் நாடோறும் சரிவர நடந்தேறி வருகின்றன. ஒவ்வொரு நாளிலும் இந்த க்ஷேத்திரத்தில் புண்ணிய ஸ்தல யாத்திரைக் காரர்கள் பலர் வந்து கொண்டே யிருக்கின்றனர்.

இப்பேர்ப்பட்ட முக்கிய க்ஷேத்திரத்திலுள்ள மஹோன்னதமாகிய ஸ்ரீபாகுபலி ஸ்வாமிக்குத் தினந்தோறும் பாத பூஜைமட்டும் நடந்தேறும். 30-அல்லது 35-வருஷங் கட்கு ஒரு முறைதான் மஸ்தகாபிஷேக மஹா பூஜை நடக்கும். ஏனென்றால் இந்த மஹா பூஜைக்கு அளவற்ற திரவியம் வேண்டி யிருப்பதால் பல தனவந்தர்கள் சேர்ந்து போதுமான பொருள் உதவிய பின்னர்தான் இது நடக்கக் கூடியதாயிருக்கிறது. அதனாலேயே இத்தனை வருஷங்களுக் கொரு முறை போதுமான சௌகரியம் நேர்ந்தபோது இது நடந்து வருவது வழக்கமாயிருக்கிறது. இஃதிப்படி பல வருஷங்கள் கடந்த பின் ஒவ்வொரு முறை நடக்கக் கூடியதாயிருப்பதால் இந்த பூஜையை மிகவும் உயர்ந்ததாகவும் கிடைக்கக் கூடாததாகவும் கருதி எல்லா ஜனங்களும் கூடிக் கொண்டாடுவது வழக்கம். இதற்கு அளவற்ற ஜனங்கள் கூடுவார்கள். இந்த பூஜை 10 நாள் வரை நடப்பதுண்டு. ஸ்வாமியின் முடியை அணுகுவது கூடாத காரிய மாதலால் அதுவரை உயர்ந்த சாரங்கட்டி அதன் வழியாக அரும்பிரயாசையுடன் அர்ச்சகர்கள் ஏறிப் போய்த்தான் அபிஷேக திரவியங்களைக் கொண்டு சுவாமியின் முடிமிசை அபி



ஷேகம் புரிய வேண்டும். ஆதலால் இது மிகவும் அருமையான பூஜையாம்.

இத்தகைய அரிய பூஜையானது பல புண்ணியவான்களின் நன் முயற்சியைக் கொண்டு இந்த மாசிமீ 2உ ஆரம்பிக்கப்பட்டு 11உ பூர்த்தி பெற்றது. இந்தப் பத்து நாள் பூஜைக்கும் அலகாபாத், டெல்லி, ஆஜ்மீர், ஆக்ரா, காசி, ராஜபுதனம், பஞ்சாப், சூரத், பம்பாய், தென்னிந்தியா முதலிய இடங்களிலிருந்து சுமார் 45000 ஜனங்கள் வந்து கூடி யிருந்தார்கள்.

ஸ்கௌட் மாஸ்டர் ஸ்ரீமான். பத்மநாப காமத் M. A., B. L. அவர்களின் தலைமைக்குட் பட்டு 45-ஜைனர்களும், 40-ஜைனரல்லாதாரும் கூடிய ஸ்கௌட்ஸ் (அதாவது வாலிப சாரணர் சங்கத்தார்) பூஜைக்கு வந்த ஜனங்களை மங்களூர் ஸ்டேஷனில் வர வேற்று பூஜை நடக்கும் இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் ஆங்காங்கே அவர்களுக்கு இடவசதி, போஜன வசதி முதலியவைகளை ஏற்படுத்தி மிக்க உபசாரம் புரிந்தார்கள். 100-கான்ஸ் டேபில்களும், 11-எட்கான்ஸ்டேபில்களும்,3-சப் இன்ஸ் பெக்டர்களும், ஒரு சர்க்கில் இன்ஸ்பெக்டரும் ஜனங்களுக்கு வேண்டிய பந்தோபஸ்துகளைச் செய்து எவ்வித இடைஞ்சலும் நடக்காதபடி உதவி புரிந்து எல்லோரையும் அங்கசத்தில நிர்ப்பயமாய் வசிக்கும்படி செய்தார்கள். ஸ்ரீமான்-போனி முத்யர் என்பவர் ரூபா 2500 வரை செலவு செய்து ஜனங்களுக்குப் பந்தல் வசதிகளை ஏற்படுத்தி யிருந்தார். ஒவ்வொரு புண்ணிய புருஷர்களின் நன் முயற்சியால் பூஜை ஆரம்ப நாளிலிருந்து கடைசிவரை சமாராதனை நடத்தப் பட்டது. ஒவ்வொரு நாளிலும் சுமார் 5000 ஜனங்களுக்குக் குறையாமல் போஜனம் செய்தார்கள். ஐந்தாவது நாளிலிருந்து முடிவு வரையிலும் ஒவ்வொரு நாளிலும் ஜைனரல்லாத சுமார் 500-ஏழைகளுக்கு ஒவ்வொருவருக்கும் அரைப்படி அரிசியும், அரையணவும், நல்லெண்ணெயும் தானமாக வழங்கப்பட்டன.

மாசிமீ 2உ ஆகிய ஆரம்பதினத்தன்று கட்டேமாரு ஸ்ரீமான்-செலுவைய பல்லாளரு, ஸ்ரீமான்-ரகுசந்திர பல்லாளரு ஆகிய இருவரும் சேர்ந்து ரூபாய் 2500 செலவு செய்து ஸ்வாமி அபிஷேக பூஜையும் சமாராதனையும் நடத்தினார்கள். மாசிமீ 3உ கிரேவாஸ் மாகாணத்தாருடன் மூன்று கிராம வாஸிகள் சேர்ந்து ரூபாய் 1500 செலவு செய்து ஷெ பூஜை சமாராதனை முதலிய, வற்றை நடத்தினார்கள். மாசிமீ 4உ கிராம வாஸிகள் சேர்ந்து ரூபாப் 1500 செலவு செய்து ஷெ சிறப்புக்களை நிறை வேற்றினார்கள். மாசிமீ 3உ கிராமவாஸிகளின் ரூபாய் 1700 செலவினால் ஷெ பூசை முதலிய சிறப்புக்கள் நடைபெற்றன. மாசிமீ 4உ 6 கிராம வாஸிகளின் 1800 ரூபாய் செலவினால் ஷெ அபிஷேகம் முதலியன நிறைவேறின. மாசிமீ 7உ 6 கிராம வாஸிகளின் 2500 ரூபாய் செலவினால் ஷெ பூசனை முதலியவைகள் பூர்த்தி பெற்றன. மாசிமீ 8உ ஸ்ரீமான்-மிஜார் சந்தய எக்ட அவரு, கல்ல முநிகூரு ஸ்ரீமான் ராஜபழி வாளர் ஆகிய இருவரும் சேர்ந்து ரூபாய் 2500 செலவிட்டு ஷெ அபிஷேகம் முதலிய புண்ணியச் செயல்களைப் பூர்த்தி செய்வித்தார்கள். மாசிமீ 9உ

மைசூர் ஸ்ரீமான் வர்த்தமானையா ரூபாய் 2800 செலவு செய்து ஷ்டி பூசனைகளை நடத்தி வைத்தார்கள். அதே தேதியில் உடுப்பி ஸ்ரீமான்-அப்புல்லாகான் சாயபு அவர்கள் ரூபாய் 500 செலவிட்டு சுவாமிக்கு அத்தர் அபிஷேகம் செய்தார்கள். மாசி மீ 10உ எரத்தூர் ஸ்ரீமான்-ஆதிராஜ எக்டே அவரு என்பவர் ரூபாய் 3700 செலவிட்டு சுவாமி அபிஷேகம் முதலியவற்றை நடத்திவைத்தார்கள். மாசி மீ 11உ பாராடி ஸ்ரீமான்-குமாரையாஎக்டே அவரு, மிஜார் - ஸ்ரீமான்-ஜின்னப்பா எக்டே அவரு ஆகிய இருவரும் சேர்ந்து ரூபாய் 7500 செலவு செய்து சுவாமி அபிஷேகம் பூஜை முதலியவற்றையெல்லாம் வெகுசிறப்பாக முடித்தார்கள். இடையிடையே பல ஸத்பிரசங்கங்களும் நடைபெற்றுவந்தன. இந்தப்பத்து தினங்களிலும் சுவாமிக்கு அபிஷேக தீர்த்தத்தை, அர்ச்சகர்கள், பரிசுத்த யானையின் மஸ்தகத்தி லேற்றிக் கொண்டுவந்து அபிஷேகம்செய்தார்கள். யானை தினந்தோறும் மலையின் மீதேறி அபிஷேக தீர்த்த கும்பத்தை சுவாமியின் அருகில் கொண்டு போய்ச் சேர்த்தது மிகவும் வியக்கத்தக்கது. இவ்வாறு அபிஷேகம், நடக்குங் காலத்தில் அளவற்ற ஜனங்கள் திரண்டுசுவாமியை வணங்கித் துதித்ததோடு, இடையில் பாலபிஷேகம் நடக்கும் சமயங்களிலெல்லாம் ஜெய ஜெய வென்று கடலொலி போல முழக்கம் செய்து ஆர்ப்பரித்தார்கள். எங்கும் பக்திமயமாகவே நிறைந்திருந்தது. இந்த பக்தி மிகுந்த சிறப்பினைப் பார்த்தமாத்திரத்தில் கல்மனதும் கரைந்துருகு மென்பதில் சந்தேகமேயில்லை. இந்தப்பத்து நாள் அபிஷேகங்களும் சிறப்புகளும் பல தனவந்தர்களாகிய புண்ணியவான்களின் திரவிய சகாயத்தால் நடைபெற்றன வெனினும், பூஜை ஆரம்ப முதல் முடிவுவரை நடந்த எல்லாக்காரியங்களுமே ஸ்வஸ்திஸ்ரீமன்-நேமிசாகரவர்ணிஜீ சுவாமி யவர்களின் தூண்டுதலாலும், நன்முயற்சியாலுமே நடைபெற்றன. இந்த பூஜைநடப்பதற்கு முன்னரே வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டது இந்த சுவாமியவர்களே. இவர்களன்றோ நம்மத விருத்திக்காகப்பாடுபடும் சிரேஷ்டராவார்கள்; இச்செய்கைகளன்றோ சுவாமிகள் என்ற பட்டந்தாங்கினவர்க்குரியவைகள்; இவர்களை யன்றோ பல ஜனங்களுக்குத் தருமோபதேசஞ் செய்யுந் தகுதி வாய்ந்த குருத்துவமுடையாரெனச் சொல்லவேண்டும். புண்ணியத்திற்கே மிகவும் உழைத்துவரும் சுவாமிகளுடைய பெருங்குணமும், இந்த பூஜைக்குத் திரவியசகாயஞ் செய்து அபிஷேகங்களை நடத்திவைத்த புண்ணிய சீலர்களின் உதார குணமும் மிகப் பாராட்டத்தக்கன. இந்தப் புண்ணிய சீலர்கள் இத்தகைய பெரியபுண்ணியங்களைச் செய்து வருவதைப் பார்த்திருந்தும் நம் தமிழ் நாட்டு ஜைனர்கள் பெரும்பாலும் இவ்வகைக் காரியங்களில் தலையிடப் பின்வாங்குகிறார்கள். என்றாலும் பாதகமில்லை. இத்தகைய அரியவிஷயங்களைப் போதிக்கக்கூடியதும், ஜைனமதாபி விருத்தியையே கருதியிருப்பதும், வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாயாகக் குறைந்த சந்தாவில் வெளிவருவதும், தமிழ்நாட்டில் ஜைனர்களுக்கென்றே முதல் முதல் அருமையாகத் தோன்றியதுமாகிய நம் தருமசீலனைக் கூட வாங்கக் கூடாதென்று சில புண்ணியவான்கள் போதனை செய்கின்றார்கள். சிலர், சீலனை வாங்குவதை நிறுத்தியும் வருகின்றார்கள். இது தான் மிகவும் விநோதமான செய்கை. இந்த அடாச் செய்கையை நீக்கி அத்தகைய சிலரிடத்தில் பத்திரிகாபிமானத்தை உண்டாக்குமாறு இறைவன் பதப்போதை எப்போதும் வேண்டித் துதிப்போமாக.

கண்டு வந்தோன்.



## தமிழ் வித்வான்களும், சாற்றுக் கவிகளும்.

---

தமிழ் விற்பத்தியுடையார், செய்யுள் மூலமாகவோ, உரையாகவோ, வசனமாகவோ பலநூல்களை இயற்றுவதும், அவற்றைப் பலவித்வான்களிடம் காட்டிப்பார்வையிடச் செய்து, அவற்றின் விஷயத்தில் அவர்களுக்குண்டாகும் உண்மையான அபிப்பிராயத்தைச் செய்யுளிலோ நடையிலோ எழுதிவாங்கிச்சேர்த்து வெளியிடுவதும் பண்டைக்காலந்தொட்டு இந்தத் தமிழ் நாட்டில் பெரும் வழக்கத்திலிருந்து வருகின்றன. ஏன் இந்த வழக்கம் ஏற்பட்டதென்றால், பல வித்வான்களின் சாற்றுக்கவியில்லாத நூல் சிறப்படையாதென்பது பற்றியே. பண்டைக்காலத்தில் ஒருவர் ஒருநூல் செய்தால், அதைப் பலவித்வான்கள் கூடிய இராஜசபைகளிலோ, வித்வசங்கங்களிலோ முழுவதும் படித்துச்சொல்லி அரங்கேற்றி, அதைப்பற்றி அங்குள்ள எல்லா வித்வான்களிடத்திலும் சாற்றுக்கவிகள் வாங்கவேண்டும்; பின்புதான் அந்நூலை வெளிப்படுத்தவேண்டும். மகாகவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும,தாம் இயற்றிய இராமாயணத்திற்குச் சாற்றுக்கவி வாங்கும் பொருட்டு ஊரூராகத்திரிந்தலைந்தார்; உலகத்தார்க்கு இன்றியமையாதனவாகிய நீதிகளைப் போதிக்கும் தமிழ்மறையாகிய திருக்குறளைச் செய்த திருவள்ளுவரும் அதற்கு, மதுரைச்சங்கத்தாரிடம் சாற்றுக்கவிகள் வாங்கினர். நூல்களுக்குச் சாற்றுக்கவி வாங்கும் விஷயம் அவ்வளவு கண்டிப்பாக ஏற்பட்டிருந்ததென்பதற்கு இவர்கள் சரித்திரங்களே போதிய சான்று கூறுகின்றன. இந்த ஏற்பாட்டினாலேயே அக் காலத்திற் செய்யப்பட்ட நூல்கள் மிகுந்த சிறப்புடையனவாய் என்றும் நிலை பெற்றுலாவி வருகின்றன. அக்காலத்து வித்வான்களும், 'தப்பின்றி நூலெழுத வேண்டுமே' என்றும் அச்சத்தால் முறைப்படி பிரயாசைப்பட்டுக் கல்வி கற்றுத் தேர்ந்து உயர்ந்த நூல்களைச் செய்து வந்தார்கள்.

இக்காலத்திலோ அந்த ஏற்பாடு வழக்கம்போல் இருந்து வருகின்றதெனினும், அறிவுடையார் அருவருக்கத் தக்க விதமாக மிகுந்த மாறுதலடைந்து போயிருக்கின்றது. வித்வான்கள் நூல்களை இயற்றுவதும், அவற்றிற்கு மற்ற வித்வான்களிடம் சாற்றுக் கவி வாங்குவதும், தெருவில் சிறுவர்கள் சிறு வீடு கட்டி விளையாடுவது போலாய் விட்டன. நூல் செய்வதற்கும் வரம்பேயில்லை; சாற்றுக் கவி வாங்குவதற்கும் கணக்கில்லை. குறைந்த நடுத் தெருப் புலவர்கள் முதல் உயர்ந்த சமஸ்தானப் புலவர்கள் வரையில் உள்ள எல்லா வித்வான்களிலும், நடு நிலைமையை விட்ட பெரும்பான்மையோரிடத்தில் ஒரு நிமிஷ நேரத்தில் சாற்றுக் கவி வாங்கி விடலாம்; அவர்கள் நூலை முழுவதும் படித்துப் பார்க்க வேண்டிய அவசியமுமில்லை, உண்மையான அபிப்பிராயத்தைக் கூறவேண்டு மென்பதுமில்லை. நூலாசிரியருக்கு எந்த விதமான சாற்றுக் கவி எழுதி வாங்கிக் கொள்ள வேண்டுமென்று இஷ்டமிருக்கிறதோ அந்த விதமான சாற்றுக் கவியை எழுதி வாங்கி விடலாம். ஏன், சாற்றுக் கவி வாங்குவது இவ்வளவு எளிதாகப் போய் விட்டதென்றால் இப்போதிருக்கும் வித்வான்களிற் பெரும் பான்மையோர் சில விநோதமான

செய்கைகளை யுடையவர்களா யிருக்கின்றார்கள். எப்படி யெனில், சிலர், 'நாம் எந்த நூலையும் சரியாகப் பார்க்காமல் சாற்றுக் கவி கொடுப்பதே யில்லை; அப்படிக் கொடுப்பதிலும் உண்மையான அபிப்பிராயத்தையே சொல்லுவோம்' என்று தற்பெருமையோடு கூடிய பரிசுத்த வசனத்தைக் கூறுவார்கள்; ஆனால் இவர்கட்கு அதிகப் பொருளுதவி செய்யும் ஒருவர் வந்து சகாய மொழி கூறினால் கண்ணாற் பார்க்கத் தகாத ஆபாசம் நிறைந்த நூலுக்கும் நல்ல அபிப்பிராயத்துடன் சாற்றுக்கவி எழுதிக் கொடுத்து விடுவார்கள்; இன்னும் சிலருக்குப் பாட்டொன்றுக்கு ஒரு ரூபா கொடுத்து விட்டால் அவர்களிடம் எத்தனை கவிகள் வேண்டுமானாலும் எழுதி வாங்கி விடலாம். ஒருபயனும் பெறா விட்டாலும் பணக் காரர் தயவிருந்தாற் போது மென்ற சிந்தனை யுடைய சில கவிகளிருக்கின்றார்கள். ஒரு பணக் காரனை உதவியாக அழைத்துக் கொண்டு போய் இவர்களிடம் கேட்டால் போதும்; எத்தனை செய்யுட்கள் வேண்டு மானாலும் வாங்கிக் கொள்ளலாம். அச்சுப் புத்தகத்தில் தங்கள் பெயர் வந்தால் போது மென்ற நோக்க முடைய சில வீண் பெருமைக் காரர்களிருக்கின்றார்கள்; சாற்றுக் கவி வேண்டு மென்று ஒரு வார்த்தை இவர்கள் காதில் விழுவதுதான் தாமதம்; உடனே நூற்றுக் கணக்கான கவிகளை, கார் மேகம் போல் சொரிந்து விடுவார்கள். இன்னும் செய்யுளை எழுதத் தெரியாமல், வித்வான் என்ற பட்டத்தை யடைய வேண்டு மென்னும் பேராசை கொண்டு, போலித் தனமாகப் புலவர் போன்று நடித்துச், செய்யுள் பாடத் தெரிந்த கவிஞர்களிடம் கெஞ்சிக் கேட்டாவது கவிகளை எழுதி வாங்கித் தங்கள் பெயரால் வெளிப்படுத்தித் திரியும் பேதையர் சிலருண்டு. இவர்களிடம் சாற்றுக் கவி வேண்டு மென்று சொல்லவே வேண்டியதில்லை. எவரேனும் ஒரு புத்தகத்தை அச்சிடுகிறார்களென்று இவர்கள் கேள்விப்பட்டால், தங்கட்குச்சிநேகமான ஒருபாவலரிடம் சென்று தாங்கள் சொன்னவைபோன்றிருக்கும்படி சிலகருத்துக்களை அமைத்துப்பாட்டுக்களைஎழுதச்செய்து, வாங்கிக்கொண்டுவந்து, புஸ்தகம் அச்சிடுகிறவர்களிடம், 'ஐயா! நம்முடையசாற்றுக்கவிகள் மிகவும் அழகாயிருக்கும்; நீங்கள் என்னிடம் கேட்காவிட்டாலும் நான் உங்கள் நற்குணத்தை உத்தேசித்து இவற்றை எழுதினேன்' என்று கொடுத்துச்செல்வார்கள். இத்தகையபலர் என்னிடம் வந்து பாட்டெழுதிக்கொடுக்குமாறு கேட்டுத் தொந்தரவு கொடுப்பதை நான் பலநாளும் பிரத்தியக்ஷமாகப் பார்த்துவருகிறேன்.

சாற்றுக்கவியின் விஷயம் இவ்வாறு எளிதாய் முடிந்து விட்டமையாலும், கேள்விமுறையில்லாமலிருப்பதாலும், வழுக்களே நிறைந்த புத்தகங்களெல்லாம் குப்பைகளைப் போல வெளிப்பட்டுக் குவிந்து விடுகின்றன. சிலர் ஒருவர் செய்தநூலை மற்றொருவர் பெயர் போட்டு வெளிப்படுத்துகின்றனர். (நானே, சென்னையில் ஒருபுத்தகவியாபாரிக்குத் தமிழ் அகராதியொன்றில் வேலைசெய்ய ஆரம்பித்து 72. பாரங்கள் வரை புதியவாக்கியங்கள் சேர்த்து அரும்பிரயாசைப் பட்டுவேலைசெய்து கொடுத்தேன்; அவ்வியாபாரி என்வேலைக்குப் பிரதிப்பிரயோசனம் ஒன்றும் செய்யாமலும், புத்தகத்தில் என்பெயரைப்போடாமலும் எட்டுணையும் கஷ்டமெடுத்து வேலை செய்யாத ஒருவரைக்கொண்டு எஞ்சி



நின்ற சொற்ப வேலையை முடித்துப் புஸ்தகத்தில் அவர் பெயரையேபோட்டு வெளிப்படுத்திவிட்டார். அதற்கு, இக்காலத்தில் மகா உன்னததசையிலிருந்து பரிசுத்தம் பேசக்கூடிய வித்வசிரோமணிகளும் உண்மை உணராமல் போலிப் பெயரைக்குறித்தே சாற்றுக்கவிகள் கொடுத்திருக்கின்றனர்) சிலர், பண்டைக் காலத்துப் பெரியோரால் சுவடிகளில்செய்து வைக்கப்பட்ட நூல்களைத்தாங்கள் செய்ததாகவே வெளிப்படுத்துகின்றனர். இன்னும் எத்தனையோ சொல்லவொண்ணாத அக்கிரமங்களெல்லாம் நடக்கின்றன. செந்தமிழ், இராஜாங்கத்தாரின்முக்கிய திருஷ்டியில் வைக்கப்படாமலிருப்பதனாலன்றோ இவை நிகழ்கின்றன. இக்குறையை எவரிடம் சொல்லி முறையிடுவது? தமிழ்த் தெய்வந்தான் இதற்கொருபரிகாரஞ் செய்யவேண்டும்.

ஆனால், இக்காலத்திலும் உண்மைப்புலவர்கள் அநேகருண்டு; அவர்கள் பண்டைக்காலத்து முறைகளையே எதிலும் அனுசரித்து நடந்து வருகின்றார்கள். அவர்களால் உயர்ந்த நூல்களும் முறைப்படி வெளிப் படுத்தப் பட்டு வருகின்றன. நான் மேலே, 'தாழ்ந்த புலவர் முதல் உயர்ந்தபுலவர்வரை'என்றுகூறினதில் இவர்களும் அடங்குவார்களென்று அறிவுடையோர் கொள்ளலாகாது. குறையுள்ள வகுப்பைச் சொல்லும்போது பரிசுத்த வகுப்பு அதில் எவ்விதகாரணத்தைக் கொண்டும் சாராது. இவர்களிடம் மேற்கூறியவர்கள் எவ்விஷயத்திலும் கலப்பதில்லை. இவர்கள் ஒரு மூலையில் ஒதுங்கி மனம் நொந்து கிடக்கின்றனர்.

ஆதலால், உண்மைப்புலவர்களும், அறிஞரும் இங்குக் கூறிய விஷயங்களை நடுநிலைமையோடு ஆலோசனை செய்து பொய்ந்நெறியை விலக்கி மெய்ந்நெறியை ஸ்தாபித்தற்கான முயற்சிகளைச் செய்யுமாறு வேண்டுகின்றேன். நான் பொதுவாகத் தமிழ் சிறப்புறவேண்டுமென்று இவற்றை எழுதினேனேயன்றி எவரையும் தாழ்த்திக் கூறவேண்டுமென்ற நோக்கங் கொண்டெழுதவில்லை. இது சத்தியம். சான்று-என்பது சாக்ஷி; சான்றுகவி என்பது சாக்ஷிக்கவியென்று அருத்தமாகும்; இது தான் சாற்றுக்கவியென விகாரப்பட்டு வந்தது. ஆகவே, சாற்றுக்கவியாவது நற்சாக்ஷிப்பத்திரமாம். இது பொய்ச்சாக்ஷியாயிராமல் மெய்ச்சாக்ஷியா யிருக்கவேண்டுமென்பது எனதெண்ணம்.

செம்பூர். வீ. ஆறுமுகஞ் சேர்வை.

## மூடுபத்திரி.

---

இப் பரதகண்டத்திலுள்ள ஜைன க்ஷேத்திரங்களில் இது மிகவும் உன்னதமானது; ஜைன காசி யெனப் பலராலும் கொண்டாடப் படுவது; ஜைன சித்தாந்தசாஸ்திரங்களுக்கு இருப்பிடமானது; இந்த க்ஷேத்திரத்தில் நவரத்தினங்கள், ஸ்படிகம், ஸ்வர்ணம் ஆகிய வற்றால் ஏற்பட்ட தெய்வ விக்கிரகங்கள் இருக்கின்றன. இவற்றுள் ஸ்வர்ணத்தாலும் ஸ்படிகத்தாலும் உண்டான விக்கிரகங்கள் சுமார் நாற்பதுக்கு மேலிருக்கும். இங்கே 1. குருபஸ்தி, 2. விக்ரம ஸ்ரே

ஷ்டி பஸ்தி, 3. லெப்பத பஸ்தி, 4. கல்லு பஸ்தி, 5. தேவராஜ பஸ்தி, 6. சோளஸ்ரேஷ்டி பஸ்தி, 7. எடபல பஸ்தி, 8. மஹாதேஸ்ரேஷ்டி பஸ்தி, 9. பெங்கனதிகாரபஸ்தி, 10. கெர பஸ்தி, 11. படு பஸ்தி, 12. மடத பஸ்தி, 13. தொட்ட பஸ்தி, 14. படக பஸ்தி, 15. ஸ்ரேஷ்டி பஸ்தி, 16. இரி பஸ்தி, 17. லெட்டத பஸ்தி, 18. கோடி பஸ்தி, என்னும் சைத்தியாலயங்கள் இருக்கின்றன.

இவற்றுள் முதலாவது குருபஸ்தியில்பார்சுவநாத சுவாமிஒன்றரைப் புருஷாள் பிரமாணத்தில் எழுந்தருளியிருக்கிறார். இந்த விக்கிரகம் சாமள வர்ணமானது; சதுர்த்த கால பிம்பம்; இது 2000-வருஷத்திற்கு முன்பு நாலாங் காலத்தில் ஏற்பட்டது; அதிசயமும் அதிக கம்பீரமுமான காட்சியை யுடையது. இன்னும் இவ் வாலயத்தில் சதுர் விம்சதி தீர்த்தங்கரர்கள் இருக்கக் கூடிய அரிபீடம் உண்டு. முன்னே கூறிய சித்தாந்த சாஸ்திரங்கள் இங்கேதானிருக்கின்றன. அவை தவளம், ஜயதவளம், மஹாதவளம் என்னும் மூன்றுமாம். இவற்றுள் தவளம் 72000 சுலோகங்களையுடையது; ஜயதவளம் 60000 சுலோகங்களையுடையது; மஹா தவளம் 40000 சுலோகங்களையுடையது. இந்த மூன்று சாஸ்திரங்களும் சீதளா எட்டில் அளேகன்னடத்தில் இரங்கியால் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து காகிதத்தில் கன்னட அக்ஷரத்திலும் நாகர அக்ஷரத்திலும் பிரதிகள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றில் பல தத்துவங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன வென்று பெரியோர் கூறுகின்றனர். ஆதி சுவடியிலிருந்து பிரதி செய்த வற்றில் பூர்த்தி பெறாமலிருந்த சில பாகங்களைப் பூர்த்தி செய்வதற்குச் சுமார் 14000 ரூபாய் வரை லிகிதர்களுக்கு உதவி அவர்களைக்கொண்டு அங்குள்ள பெரியோர் அவற்றைச் சமீப காலத்தில் எழுதி முடிக்கும்படி செய்திருக்கிறார்கள். இந்த க்ஷேத்திரத்திற்குச் செல்கின்றவர்களெல்லோரும் இந்த சாஸ்திரங்களைத் தரிசித்து விட்டு வருவது வழக்கம். இவற்றை லோகோபகாரமாக அச்சிட்டு வெளிப் படுத்த வேண்டுமென்று பலமேதாவிகளும் சுவாமியார்களும் சில வருஷங்களாகப் பிரயத்தினப்பட்டு வருகின்றார்கள். எனினும் அங்குள்ள மடாதிபதி யவர்களும், பண்டைய கொள்கைகளையுடைய சிலரும் வெளி யிட்டால் சாஸ்திரங்கள் கெட்டுப் போய் விடுமென்ற ஓர் அபிப்பிராயத்தைக் கொண்டு அதற்கு இடம் கொடுக்காமலிருந்து வருகிறார்கள். எப்படியேனும் இவை அச்சில் வெளி வந்தால் அநேக ஜனங்களுக்குப் பிரயோசனமாயிருக்கும்.

2. விக்ரமஸ்ரேஷ்டி பஸ்தியில் ஸ்ரீவ்ருஷப சுவாமி எழுந்தருளியிருக்கின்றார். அரிபீடமிருக்கின்றது.

3. லெப்பத பஸ்தியில் கீழே சந்திரநாத சுவாமியும், மேல் உப்பரிகையில்வர்த்தமான சுவாமியும் எழுந்தருளி யிருக்கின்றார்கள்.

4. கல்லு பஸ்தியில் சந்திரநாத சுவாமி வீற்றிருக்கின்றார்.

5. தேவராஜ ஸ்ரேஷ்டி பஸ்தியில் கீழே அரர், மல்லிநாதர், முநிசுவிரதர் ஆகிய சுவாமிகள் எழுந்தருளி யிருக்கின்றனர். மேலுப் பரிகையிலும் இவர்களே வீற்றிருக்கின்றனர்.



6. சோள ஸ்ரேஷ்டி பஸ்தியில் பத்மப்ரப சுவாமி வீற்றிருக்கின்றார்.

7. எடபல பஸ்தியில் அநந்தநாதசுவாமி எழுந்தருளி யிருக்கின்றார். இங்கே அரிபீடமும் உண்டு

8. மஹாதேஸ்ரேஷ்டி பஸ்தியில் ஆதி நாத சுவாமி கோவில் கொண்டிருக்கிறார்.

9. பெங்கனதிகார பஸ்தியில் அநந்த நாத சுவாமி எழுந்தருளி விளங்குகின்றார்.

10. கெரபஸ்தியில் மல்லிநாத சுவாமி வதிந்திருக்கின்றார்.

11. படு பஸ்தியில் விமலர், அநந்தர், தருமர் ஆகிய மூவரும் அமர்ந்திருக்கின்றனர்.

12. மடத பஸ்தியில் பார்சுவநாத சுவாமி வீற்றிருக்கின்றார். இங்கேதான் இந்த க்ஷேத்திரத்தின் மடாதிபதி யவர்களின் வாசஸ்தானமிருக்கின்றது.

13. தொட்ட பஸ்தியில் சந்திர நாத சுவாமி ஒரு புருஷ பிரமாணத்தில் எழுந்தருளி யிருக்கின்றார். இந்த விக்கிரகம் வெண் கலத்தால் சமைந்தது. இந்தக் கோவில் 3 அடுக்கு மாடி யுள்ளது. இதற்குத் திரிபுவன திலக சூடாமணி யென்னும் பிரசித்த நாமம் ஏற்பட்டிருக்கிறது. இதன் இரண்டாவது மாடியின் முன் பக்கத்தில் சஹஸ்ரகூட சைத்தியாலயம் வெண்கலத்தால் நிருமிக்கப் பட்டிருக்கிறது. இதில் 1008 பிம்பங்களுண்டு. இதன் மூலஸ்தானத்தில் சுபார்ஸ்வநாத சுவாமி எழுந்தருளி யிருக்கின்றார். 3-வது மாடியில் சித்தகூட சைத்யாலயம் விசேஷஸ்படிக பிம்பங்களாலும், அம்ருத சிலா பிம்பங்களாலும், லோகத்தால் செய்த பிம்பங்களாலும் அலங்கரிக்கப் பட்டுப் பார்ப்பவர் மனதைப் பக்தியிலாழ்த்தக் கூடியதாயிருக்கிறது. இவ்வாலயத்தின் மேற் பாகம் செப்புத்தகட்டால் மூடப் பட்டிருக்கிறது. இந்த ஆலயத்தில் தீபாலங்கார மஹோத்ஸவம் மிகவும் விமரிசையாக நடை பெறுவது வழக்கம். 5000 தீபங்களை யுடைய இந்த தீபாலங்கார காட்சியானது மிகவும் கெம்பீரமானது. இங்கே மூலஸ்தானத்திற்கும் ஜனங்கள் நின்று மூலஸ்தானத்தைத் தரிசிக்க வேண்டிய இடத்திற்கும் இடையில் 50 கஜ தூர முண்டு. இங்கு நடக்கும் தீபாலங்காரமானது சுவாமியின் கமல சரணம் போன்றிருக்கின்றது.

14. படக பஸ்தியில் சந்திரநாத சுவாமி வீற்றிருக்கின்றார். இதன் மேல்மாடியில் ஸ்ரீ வர்த்தமான சுவாமி அமர்ந்திருக்கின்றனர்.

15. ஸ்ரேஷ்டி பஸ்தியில் ஸ்ரீ வர்த்தமான சுவாமி அமர்ந்திருக்கின்றனர்.

16. இரி பஸ்தியில் சாந்தீஸ்வர சுவாமியும், பத்மாவதி சரஸ்வதிதேவி ஆகியவர்களும் எழுந்தருளி யிருக்கின்றனர். இங்குள்ள பிம்பம் லெப்பத பிம்பம்.

இங்கே அரிபீடமும் உண்டு; இதன் மேல்மாடியிலும் அரிபீடம் இருக்கின்றது. இங்குள்ள பிம்பங்களெல்லாம் வெண்கலத்தாற் செய்யப்பட்டவை.

17. பெட்டத பஸ்தியில் ஸ்ரீ வர்த்தமான சுவாமி குடி கொண்டிருக்கிறார்.

18. கோடி பஸ்தியில் நேமிநாத சுவாமி வீற்றிருக்கின்றார். இதன்மேல்மாடியில் ஸ்ரீ வர்த்தமான சுவாமி எழுந்தருளி யிருக்கின்றனர்.

இத்தகையசைத்தியாலயங்களை யுடைய இந்தப் புண்ணியக்ஷேத்திரமானது கார்களாவிற்குச் சமீபத்திலிருக்கிறது. கார்களாவிற்குப் போகும் யாத்திரைக்காரர்கள் ஒவ்வொருவரும் இதற்கும் செல்லாமல் வருவதில்லை. இன்னும்இப்பேர்ப்பட்ட இப் புண்ணிய க்ஷேத்திரத்தில் தேவமான்ய ஸ்வஸ்தி ஸ்ரீமதபிநவ சாருகீர்த்தி பண்டிதாசார்யர் அவர்களால் ஜைன் போர்டிங் ஸ்கூல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் அவர்கள்சந்திரநாத சுவாமியை எழுந்தருளியிருக்கச்செய்திருக்கின்றார்கள். இந்த ஸ்கூலில் 100 பிள்ளைகள் சமஸ்கிருதம் வாசிக்கிறார்கள். இருபது பிள்ளைகள் தர்க்க வியாகரணம் வாசிக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டிலிருந்து வாசிக்கவரும் பிள்ளைகளில் 10 பேருக்கு அந்த ஸ்கூலில் வாசிக்க இடந்தருவதாக ஷை பண்டிதாசார்யர் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

இன்னும் இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திலுள்ளமடாதிபதியவர்கள் இங்கே சுவாமி தரிசனைக்காக வரும் சிராவகசிராவகிகளுக்குத் தகுந்த இடவசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதோடு அணுவிரதிகள் எத்தனைபேர் போனாலும் அவர்களுக்கு ஆகார தானம் செய்தபின்னரே தாங்கள் ஆகாரத்திற்குச்செல்லும் வழக்கத்தைக் கைக்கொண்டிருக் கின்றார்கள். இவர்களுடைய இத்தகைய புண்ணிய குணம் சகலரும் கொண்டாடத் தக்கதாம். நம் தமிழ் நாட்டிலிருந்து இந்த க்ஷேத்திரத்திற்கு யாத்திரை செய்வோருக்கு அனுகூலமா யிருக்கும் பொருட்டே இந்த விவரங்களை யெல்லாம் நாம் அறிந்து எழுதினோம். ஆதலின் யாத்திரைக்காரர்கள் ஷை ஸ்தலத்திற்குச் சுகமாக யாத்திரை செய்து கடவுளரைத் தரிசித்து நற்பேறடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
பத்திராதிபர்.

## பாலபோத விளக்கம்.

(முன் தொடர்ச்சி புஸ்தகம்-3. சஞ்சிகை-10. பக்கம்-239.)

---

19. நித்திரை வரும்போது தெய்வத்தைத் தியானித்துக்கொள்ள வேண்டும்; வேறு தீய எண்ணங்களை மனத்தில் வைக்கலாகாது; நித்திரை வரும் ஆரம்பத்தில் எந்த எண்ணம் மனத்தில் பதிகிறதோ அதற்குத் தகுந்த விஷயங்களே நித்திரை செய்யும் போது சொப்பனத்தில் மாறி மாறி வருமாதலால், தெய்வ சிந்தனை யிருந்தால் நல்ல கனவுகளே காணப்படும்; அல்லது கனவே தோற்



றாது; வேறு கெட்ட சிந்தனை யிருந்தால் பயங்கரமானவைகளும், அருவருக்கக் கூடியவைகளுமான பல கனவுகளே காணப்படும். அந்தத் தீய சொப்பனங்களால் உடம்பில் பல விதமான நோய்களுண்டாகும்; புத்தியும் கெடும்; சோம்பலுண்டாகும்.

20. படுக்கும்போது, தனியாகவே படுக்கையை விரித்துப் படுக்க வேண்டும்; பலபேர் கூடி நெருக்கடியாகப் படுக்கு மிடங்களில் படுக்கலாகாது; அவ்வாறு படுப்பதால் ஒருவர் மூச்சை ஒருவர் இழுக்க நேரிடு வுண்டாகும்; அதனால், பல தொற்று வியாதிகள் ஏற்படும். இன்னும் சிறிய அறைகளில் பலபேர் கூடிச் சன்னல்களையும், கதவுகளையும் மூடிக் கொண்டு படுக்கலாகாது. அவ்வாறு படுத்தால் பலர்சுவாசமும் ஒன்று சேர்ந்து பரவி, வெளிக்காற்று இல்லாத படியால் விஷமாகமாறிப் படுத்திருப்பவர்களுக்குப் பல வியாதிகளை உண்டாக்குவதோடு திடீரெனப் பெரிய அபாயத்தையும் உண்டாக்கி விடும். ஆதலால், குளிர் காலத்தில் சற்றே விசாலமான அறைகளில் சிறிது காற்று வரும்படி சன்னல்களைக் கொஞ்சம் திறந்து வைத்துக் கொண்டும், வெயிற் காலத்தில்சன்னல்களை நன்றாகக் காற்று வரும்படி திறந்து வைத்துக் கொண்டும் இரண்டுமூன்றுபேருக்கு அதிகப் படாமல் தனித்தனியே விலகிப் படுக்க வேண்டும். இன்னும் வெயிற் காலத்தில் நன்றாகக் காற்று வீசத் தக்க கூடம் முதலியவைகளிலும் படுத்துக் கொள்ளலாம். இவ்வாறு படுப்பதிலும் பெண் பிள்ளைகள் படுத்திருக்கு மிடத்திற்குச் சமீபத்தில் ஆண் பிள்ளைகள் படுக்கலாகாது; ஆண் பிள்ளைகள் படுத்திருக்கு மிடத்திற்குச் சமீபத்தில் பெண் பிள்ளைகள் படுக்கலாகாது. இரண்டு வகுப்பாரும் தனித்தனியாகப் பிரிந்து வெவ்வேறு இடங்களிற் படுப்பதே ஒழுங்காகும். கூடிய வரை இவ்வாறு பிரிந்து படுப்பதற்கே முயற்சி செய்ய வேண்டும்.

21. வடக்கிலும் கிழக்கிலும் தலை வைத்துப் படுக்கலாகாது; சுவர் ஓரங்களில் ஒரு முழம் அல்லது அரை முழம் இடை வெளி விட்டுத் தலையணையை வைத்துப் படுக்க வேண்டும்; சுவரோடு ஒட்டித் தலையணையை வைத்து எப்பொழுதும் படுக்கலாகாது; அவ்வாறு படுப்பதால் தூக்கத்தில் மிக்க அபாயமுண்டாகும்; ஏனென்றால், இராக்காலத்தில் சஞ்சரிக்கும் பாம்பு, தேள், எலி முதலிய விஷஜந்துக்கள் சுவர் ஓரத்திற்றான் ஓடிவரும். அப்படி ஓடிவரும்போது சுவருக்கும் தலையணைக்கு மிடையில் வழியிருந்தால் அவை அந்த வழியாகப் போய்விடும். வழியில்லாமல் தலையணை சுவரோடு ஒட்டியிருந்தால் அவை ஓடி வரும்வேகத்தில்தலையணையின் மேலேறிப் படுத்திருப்பவர்களின் தலைமீதும் ஏறிச்செல்லும். அவ்வாறு செல்லும்போது, படுத்திருப்பவர்கள் புரண்டு படுத்தாலும், கை தலை முதலிய அவயவங்களை அசைத்தாலும் அவை தமக்கபாயம் வந்ததெனப்பயந்து உடனே, படுத்திருப்பவர்களைக் கடித்து விடும். சில குதர்க்கம் பேசுவோர், மற்றவிடங்களில் விஷஜந்துக்கள் வருவதில்லையா என்று வீண் தர்க்கம் பேசுவார்கள். மற்றவிடங்களில் ஏதோ ஒரு சமயத்திற்றான் அவை வரும்; பெரும்பான்மையும் சுவர் ஓரங்களிலேயே வரும். இதைப் பெரியோர்

கள் அனுபவமாகக் கண்டு பெரிய குடும்பங்களில் பிள்ளைகளுக்குப் புத்தி கூறி வந்திருக்கின்றார்கள். ஆதலால், இந்தப் பாடத்தை வீண் தர்க்கம் பண்ணி அசட்டை செய்துவிடாமல் எல்லோரும் முக்கிய மானதாகக் கொள்ள வேண்டும்.

சற்குரு.

---

## பறக்கும் மீன்.

---

நீரிலுள்ளமீனை நிலத்திற்பிடித்துப்போட்டால் பிழைத்திரா தென்று சில மனிதர் நினைக்கிறார்கள். ஆனால், இந்த அபிப்பிராயம் எப்பொழுதும் நிறைவேறுவதில்லை. சிலவகை மீன்கள் நிலத்திலும் ஜீவிப்பதோடு பக்ஷிகளைப்போலவும் பறக்கின்றன.

இவ்வாறு பறக்கும் மீன்களுடைய தேகம், நீண்டும் கத்திபோல் ஒடுங்கியும் இருக்கின்றது; அவற்றின்கண்கள் பருத்து நீலநிறமாகக் காணப்படுகின்றன; அவற்றின் முதுகோ சாம்பல் நிறமாயிருக்கின்றது; வயிறுமட்டும் வெள்ளையாயிருக்கும்; அவற்றின் சிறகுகள் வாலைக்காட்டிலும் அதிக நீளமாயிருக்கும். இவற்றின் உதவியால் ஜலத்தில் நீந்தும்போது அம்மீன்கள் அதிக வேகமாகச் செல்லும். இஃதன்றி, ஆகாயத்திலும் சிறுபறவைகள்போல் துரிதமாகப்பறக்கும்; இவ்வாறு பறக்கும்போது ஆகாயதில் முப்பதடி உயரம்வரையில் மேலேகிளம்பும். அவை மேற்கண்டவாறு ஆகாயத்தில்பறந்து சிறகுகளை அடித்துக்கொண்டு கீழிறங்கும்போது பார்த்தால், அத்தோற்றம் மிக்க வேடிக்கையாயிருக்கும். இன்னும் அவை பறக்கும்போது சிறகுகள் அயர்ச்சியடைந்து விட்டால், சமுத்திரத்துக்குள் வீழ்ந்து மூழ்கிப்போம். இவ்வகை மீன்கள் மத்திய தரைக்கடலிற்றான் அதிகமாயுண்டு.

---

## உயரமான மலைச்சிகரங்கள்.

உலகத்திலுள்ள மலைச்சிகரங்களெல்லாவற்றிலும் மகா உன்னதமானது ஹிமாலயாபருவதத்திலுள்ள எவரஸ்ட் என்னும் கொடுமுடிதான்; இதன் உயரம்(29,002) இருபத்தொன்பதினாயிரத்திரண்டடி. இதற்கடுத்த உயரமுள்ளது இம்மலையிலேயே உள்ள தவளகிரி யென்னும் கொடுமுடி; இதன் உயரம் (28,178) இருபத்தெண்ணாயிரத்து நூற்றெழுபத்தெட்டடி.

குறிப்பு:—லோகாதிசய விளக்க மென்னும் புத்தகத்திலிருந்து இவைஎடுக்கப் பட்டன. அந்தப் புஸ்தகத்தின் விலை எட்டணா.

---

ஓம்
ஸ்ரீஜிநாயநம:

# தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)

22 OCT 192

| புத்தகம் 3 | இரௌத்திரிஞு பங்குனிமீ 1921ஞு மார்ச்சுமீ | சஞ்சிகை 12 |
|---|---|---|

## தருமோபதேசம்.

---

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உடம்பில்வந்த பிணியறிந்து மருந்தூட் டாமல்
ஓகோகோ பேய்பிடித்த தெனவே சொல்லி
இடம்பமுள்ள கோடாங்கி தனை யழைத்து
இரவுபக லாயுடுக்கைத் தட்டச் செய்து
மடமிருந்து திமிர்கொண்ட பெண்கள் தம்மை
மானமின்றிப் பூசாரி முன்னே வைத்துத்
திடம்படவே பேயாட்ட மாடச் செய்து
திருப்திகொள்வோ னேபெரிய பேயா வானே (௬௭)

பலநாளும் வந்தடைந்த பாவம் நீங்கிப்
பாகதியை யடைவதற்கு விருப்பங் கொண்டு
நலமாகத் தினந்தோறுங் கடவுள் தன்னை
நாடிவணங் குவதைவிட்டு நானி லத்தில்
நிலமுதலாம் பெரும்பொருள்கள் நிறைய வெண்ணி
நித்தியமுந் தெய்வமற்ற தெய்வங் கட்குப்
பலமாக மாடாடு கோழி வெட்டும்
பாவிகட்கு வாழ்வனைத்தும் பாழ தாமே. (௬௮)

நோய்வந்த பெண்தனக்கு வாகடத்தின்
நுட்பமுறைப் படிசிகிச்சை செய்தி டாமல்
பேய்வந்த தெனநினைத்தோர் தடியன் றன்னைப்
பெருமையுட னழைத்துவந்தோ ரறையில் வைத்து
வாய்வந்த தைப்பேசு மந்தப் பெண்ணை
மந்திரித்துப் பாருமென முன்னே வைத்தன்
பாய்வந்து வெளியில்நிற்கு மடையனேமா
பகுத்தறிவே யில்லாத மிருக மாமே. (௬௯)

# தருமசீலன்.

## இரௌத்திரி௵ பங்குனி௴.

### சந்தா நேயர்களுக்கு விஞ்ஞாபனம்.

நேயர்களே! நமது தரும சீலனுக்கு இந்தப் பங்குனிமாதத்தோடு மூன்றாவது ஆண்டு பூர்த்தி பெற்றுச் சித்திரை மாதம் நான்காவது ஆண்டு ஆரம்பிக்கிறது. இது பெரும்பான்மையும் ஜைன சகோதரர்களை உத்தேசித்தே நடத்தப் பட்டு வருகிற தாதலின் இதன் சஞ்சிகைகளை மொத்தமாகவும் தனித் தனியாகவும் நம்மவர் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் முன்னே அனுப்பிவிட்டுப் பின்னர் நேர்ந்த போது சந்தாதாரர்களிடம் சந்தாத் தொகையை வசூலித்துக் கொள்ளுகிற தென்ற வழக்கத்தை வைத்திருந்தோம். இந்த வழக்கம் நேயர்களுக்கு மிக்க நன்மையைத் தரக் கூடியதாயிருந்தும் இதன் நலத்தை யுணராமல் நம்மவர்களில் பெரும்பான்மையோர் 'இப்படிச் செய்வது தான் மெத்த அனுகூல'மென்று இரண்டு வருஷகாலமாகச் சந்தாத் தொகைகளைநிறுத்திவைத்துக்கொண்டே வருகிறார்கள். பணவசூலுக்குப் போகும் மனிதரிடமும் இனிய வார்த்தை கூறாமல் கடிந்து பேசிவருகின்றார்கள். இதனால் நமக்குப் பெருத்த தொகை நஷ்டமாகியும் எப்படியாவது நம்மவர்க்கு நன்மையுண்டாக வேண்டு மென்ற பொது நோக்கத்தால் சொந்த முயற்சியைக் கொண்டு பத்திரிகையை நடத்தி வருகின்றோம். இதுவரை இந் நாட்டில் நம்மவர்க் கிடையில் தோன்றாது தோன்றிய இப்பத்திரிகையால் உண்டாகிய நன்மைகள் பலவுள. அறிவாளிகள் நன்றாக யோசித்துப் பார்ப்பார்களே யானால் அந் நன்மைகளெல்லாம் தெளிவாக விளங்கும். இதைப் பற்றி எத்தனையோமுறை நம் சீலனில் நாம் எழுதிவந்திருக்கிறோம். அப்படியிருந்தும் நம்மவர்களிற் சில வகுப்பார் சிலருடைய துர்ப் போதனையாலோ வேறுஎக்காரணத்தா



லோ பத்திரிகை வாசிப்பது ஒரு கெட்டகாரிய மென்றே தீர்மானித்துப் பத்திரிகைகளைத் திருப்பிவிடுவதோடு மேற் கூறியபடி இரண்டுவருஷகாலமாகச் சந்தாத் தொகையைச் செலுத்தாமலும் பலவிதமான அலைக்கழிவு செய்து வருகின்றனர். இந்தச் செய்கையானது இதர வகுப்பாருக்கு ஓர் அதிசயமாகவே யிருக்கும்; விசேஷ ஞானமும் கல்வியபி விருத்தியும் பரவியிருக்கும் இவ் விருபதாம் நூற்றாண்டில் கூட இப்பேர்ப் பட்ட ஒரு சம்பவம் ஒரு கூட்டத்தாரில் நிகழ்கிற தென்றால் இதைப் பற்றி யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள். நம் சீலனை ஓர் சார்பாக இல்லாமல் பொது வகையில் நடத்தியிருந்தால் இந்த மூன்று வருஷகாலத்திற்குள் எத்தனையோ பொது ஜனங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து சீலனை விருத்திக்குக் கொண்டு வந்திருப்பார்கள். நாம் நம் வகுப்பினர்க் கென்றே பாடுபட்டு வருவதில் மிகுதியும் அயர்ச்சியே உண்டாகி வருகிறது. ஆதலின் அடுதத சித்திரையிலிருந்து நம் சீலனைப் பொது வகையில்திருப்பி நடத்த உத்தேசித்திருக்கிறோம். நம்மவரில் சீலனை வேண்டாதவர்கள் தயவுசெய்து பாக்கியிருக்கும் சந்தாத் தொகைகளை அனுப்பிவிட்டு எமக்குப் பத்திரிகை வேண்டியதில்லை யென்னும் விவரத்தைச் சித்திரை மாதம் முடிவுக்குள் தெவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். பத்திரிகையில் விருப்பமுடையார் பாக்கிச் சந்தாவை அனுப்புவதுடன் அடுத்த புது வருஷத்திற்கு ஏற்பட்ட சந்தாத் தொகையையும் அனுப்பிப் பத்திரிகை வேண்டுமென்ற விபரத்தையும் எமக்கு அறிவிக்க விரும்புகிறோம். அடுத்த வருஷத்துப் பத்திரிகையைச் சந்தாத் தொகைக்கு வி. பி. யில் அனுப்புமாறு தெரிவித்தாலும் அனுப்புவோம். அடுத்த சித்திரையிலிருந்து பத்திரிகை நல்ல விதத்தில் உயர்ந்த விஷயங்களோடு அச்சிடப் பட்டு ஒவ்வொரு சந்தா நேயர்க்கும் நேரில் சேரும்படி தனித்தனியே போஸ்டில் அனுப்பப்படும். மாதந்தோறும் சஞ்சிகைகள் தவறாமல் வெளிவரும். ஒவ்வொரு சஞ்சிகையிலும் உயர்ந்த நூற் பிரசுரங்களும், நாவல்களும், பொது நன்மையான வியாசங்களும், நீதிகளும், உலக வர்த்தமானங்களும் பிரசுரிக்கப் படும். புதிதாகச் சந்தாதாரராகச் சேர விருப்பமுடைய நண்பர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்து ஆர்டர் கொடுத்தால் அடுத்த சித்திரை மாதம் முதல் சஞ்சிகையை வி. பி. யில் அனுப்பி அவர்களுடைய பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்வோம். முன் பணம் அனுப்புவோர்க்குப் பத்திரிகை வழக்கம் போல் போஸ்டில் அனுப்பப்படும்.

தமிழபி விருத்தியை நாடும் நண்பர் ஒவ்வொருவரும்இதற்குச் சந்தாதாரராகச் சேர்வதோடு தங்கள் சிநேகிதர்களையும் சந்தாதாரராகச் சேரும்படி செய்யக் கேட்டுக்கொள்கிறோம். நீலகேசிமுதலிய நூல்களும் இதில் வெளிவருமாதலின் இது தமிழர்க்கு மிக்க பயன் தருவதாகும். மாதிரிக் காப்பி வேண்டுமானாலும் தெரிவித்தால் அனுப்புவோம்.

இங்ஙனம்,
பத்திராதிபர்.

---

## நூல்களை அச்சிடும் கிரமங்கள்.

---

நூல்கள், மானிடர்க்கு, இருமைப் பயன்களையும் அடைதற்குஇன்றியமையாச் சாதனங்களா மென்பது உலகறிந்த விஷயம். இத்தகைய நூல்களைப்பலர்க்கும் பயன் படும்படி செய்வது அறிவுடையோர்க்கழகாகும். இவ்வாறு செய்வதில் பண்டைக் காலத்திலிருந்த அறிஞர், நூல்களைப் பனையேடுகளிலும், செப்பேடுகளிலும் எழுத்தாணியால் பிரயாசைப் பட்டு எழுதி ஆங்காங்கே வெளிப்படுத்தி வந்தனர். அது அதிகக் கஷ்டமான வேலையாகவே இருந்து வந்தது. எனினும், இக்காலத்தில் பற்பல அச்சியந்திரங்கள் ஏற்பட்டிருப்பதால் அவ்வகைக் கஷ்ட மில்லை. எத்தனை புஸ்தகங்களையும் எளிதில் வெளிப் படுத்தி விடலாம். இதனாலேயே எண்ணற்ற புஸ்தகங்கள் நாடோறும் வெளியாகி உலகிற் பரவி வருகின்றன. இவ்வாறு பரவி வருவது கல்வி யபிவிருத்திக்கு ஒரு பெருஞ்சாதக மென்றே சொல்லலாம். எனினும், இக்காலத்தில் இவ்வாறு நூல்களை வெளியிடுவதில் பல குறைகள் காணப்படுகின்றன. அவை யில்லாமல் நூல்கள் சரியான விதத்தில் வெளி யாகுமே யானால் உலகில் பாஷை கெடாமலிருப்பதோடு, நூற்பொருள்களை உள்ளவாறு உணர்வதற்கும் ஏதுவாகும். ஆதலின், நூல்களை அச்சிடும் விஷயத்தில் என் புத்திக்கு எட்டிய வரையில்சில முக்கியமான முறைகளைத் தெரிவிக்கின்றேன். ஒவ்வொருவரும் இவற்றை அசட்டை செய்து தள்ளிவிடாமல் எடுத்துக் கொண்டால் தமிழ் நாட்டிற்கும் தமிழ்த் தெய்வத்திற்கும் சிறப்புண்டாகும்.

1. புஸ்தகங்கள் வெளியாவதற்கு முக்கிய ஸ்தானங்கள் அச்சுக்கூடங்களாயிருப்பதினாலே அந்த அச்சுக் கூடங்களின் தலைவர்கள் நல்ல கல்வித் தேர்ச்சியுடையவர்களாயிருக்க வேண்டும். வியாபாரத்துக்காக வெளி யிடும் புஸ்தகங்களை நன்றாகப் பரிசோதித்துக் குற்றங்களை நீக்கிச் சுத்தமாக்கி மேலும் நல்ல படிப்பாளிகள் பலரிடத்திற் காட்டி அவர்களைக் கொண்டும் திருத்தச் செய்து நல்ல விதத்தில் அச்சிட்டு வெளிப் படுத்த வேண்டும்; வெளியிலிருந்து கூலிக்கு அச்சிடுவதற்குப் பிறரால் கொண்டு வரப்படும் புஸ்தகங்களையும் இவ்வாறுவழுக்களைந்து வெளிப்படுத்தும் பொறுப்பைத் தாங்களே ஏற்றுக் கொள்ள வேண்



டும். திருத்தவும் முடியாத வழுக்கள் நிறைந்த புத்தகங்களை அச்சிடாமல் நீக்கி விடவேண்டும். அச்சுக்கூடத் தலைவர்கள், கல்வி ஞான மில்லாதவர்களாயிருந்தால், கல்வியில் தேர்ந்த சிலருக்குத் தக்க சம்பளம் உதவி, அவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டாயினும் மேற்கூறிய காரியங்களை நடத்தும்படி செய்ய வேண்டும். இவ்வாறு கல்வி கற்றவர்களை வேலைக்குச் சேர்ப்பதில் உண்மையில் நன்றாகக் கல்வி கற்று நற்குணம் பொருந்தி யிருப்பவர்களை ஆராய்ந்து பார்த்து, நல்ல புத்திமான்களாகிய வித்வான்களிடம் காட்டி அவர்கள் சேர்க்கச் சொன்னதன் மேல் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இப்பேர்ப்பட்டவர்களுக்குச் சம்பளம் அதிகமாகவும் கொடுக்கலாம். சிலர், சரியான இலக்கிய இலக்கணப் பயிற்சியின்றி இடம்பமாகவும், வாயாடித்தனமாகவும் பேசி, நல்ல கல்விமான் என்ற ஒரு பொய்ப் போர்வையை மேலேபோட்டு மூடிக் கொண்டு, 'நான் சர்வகலா வல்லவன்' என்று உறுதி கூறி, நல்லஉழைப் பெடுத்துப் பல நூல்களை வாசித்து நற் குணத்தோடு விளங்கும் கல்விமான்களையும், 'அவர்க்கென்ன தெரியும், இவர்க்கென்ன தெரியும்' என்று நிந்தித்துப் பேசி அவாகள் செய்த நூல்களிலுள்ள நல்ல விஷயங்களை யெல்லாம் குற்றங்களாக எடுத்துக் காட்டி அடித்துத் தாங்களே முழுதும் வழுவாக்கியங்களை நிரப்பித் தாங்கள் பெறும் ஊதியத்திற்கும் சரியாக உழைக்காமல் வேலையிலும் வஞ்சனை செய்து, நல்ல உழைப்பாளிகளுடைய ஊக்கத்தையும் கெடுத்து வேஷதாரிகளாய்த் திரிவர். இவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும், கல்வி சம்பந்தமான வேலைக்குச் சேர்க்கவே கூடாது. சில வியாபாரிகள், நல்ல படிப்பாளிகளைச் சேர்த்தால் அதிகப் பணச் செலவாகுமே யென்று பயந்து, இத்தகைய துர்க்குண முடையவர்களைச் சேர்த்துப் பாஷையையும் கெடுப்பதோடு தாங்களும் பலவித கஷ்ட நஷ்டங்களுக் குள்ளாவர்.

2. இனி, பொதுவாக நூல்களை வெளிப்படுத்தும் எல்லோரும், எழுதும் நூலைக் கூடியவரை பிழையின்றி நல்ல விதத்தில் எழுதவேண்டும். பின்னர் அதனை, நல்ல படிப்பாளிகளாகிய பலவித்வான்களிடம் காட்டி அவர்கள் கண்டுசொல்லும் வழுக்களை யெல்லாம் திருத்திக் கொள்ளவேண்டும். 'இவர்களென்ன சொல்லுகிறது நாமென்ன கேட்கிறது' என்று அகங்காரங் கொண்டு, அவர்கள் கூறும் அபிப்பிராயங்களைத் தள்ளிவிடலாகாது. எப்பேர்ப்பட்ட கெட்டிக்காரர்களும் கூடத் தாங்கள் எழுதினதே சரி யென்று செருக் கடையலாகாது; எவர்க்கும் குற்றம் ஏற்படுவது இயற்கை. ஆதலால், எவரும் தங்கள் நூலை நல்ல அறிவாளிகளிடம் காட்டி அவர்கள் சொல்வதைக் கேட்பதே நலம். அப்படியின்றி வீண் செருக்கடைவோர் எப்பொழுதும் மாசுடையவர்களாகவே விளங்குவர்.

ஏட்டுச் சுவடிகளில் உள்ள நூல்களை அச்சிடத் தொடங்கினால், பல சுவடிகளைச் சேகரிக்க வேண்டும். எல்லா வற்றையும் ஒப்பு நோக்கி வழுக்களை நீக்கிச் சுத்தமாகக் காகிதத்தில் எழுத வேண்டும். அவ்வாறு எழுதிய பின் அவற்றிலுள்ள சந்தேகங்களைப் பலரிடத்தும் காட்டி அவர்களுடைய அபிப்பிராயத்

தைக் கேட்டுத் திருத்திக் கொள்ள வேண்டும். எட்டுச் சுவடிகளில் வழுக்களாகவே மாறுபட்டு விளங்காமலிருக்கும் வாக்கியங்களைப் பலரிடத்திலும் காட்டி, விளங்குமாறு அருத்தபுஷ்டி யுண்டாகும்படி திருத்திக் கொள்ளலாம். அந்த வழுக்களை அப்படியே வைத்துக் கொண்டு, 'இது பெரியவாளுடைய நூல்; இதில் நாம் கை வைக்கவே கூடாது' என்று மௌட்டிக பக்திபேசலாகாது. இதனால் ஒருபோதும் நூல்கள் பரிசுத்த மடையவே மாட்டா. பண்டைக் காலத்துப் பெரியோர்கள் நூல்களைச் சரியாகவே செய்திருந்தாலும் பின்னர் எழுதினவர்களும் படித்தவர்களும் அவற்றைப் பற்பல விதமாக மாற்றி வழுக்களை நிறைத்து வைத்து விடுவது உலக இயற்கை. ஒரு பாடல் இரண்டு மூன்று பேரிடம் சென்றாலே தன்னுடைய பற்பல வாக்கியங்களை இழந்தும், நூதன வாக்கியங்களோடு கலந்தும் விளங்கக் காண்கிறோம். இதுவே இப்படியிருக்க, நூற்றுக் கணக்கான வருஷங்களாகப் பலர் கையேறி வரும் நூல்கள்மாறுபாடடைவதில் சந்தேகமென்ன விருக்கின்றது. ஆதலின் மேற் கூறியபடி வழுவைக்களைந்து விடுதலே நலம். ஆனால், அப்படி வாக்கியங்களைத் திருத்துவதில் பொருந்தாத பொருள் பயக்கும்படியாகவாவது, பார பக்ஷமாக ஒருவகுப்பார்க்குநன்மையையும் ஒரு வகுப்பார்க்குத் தீமையையும் உண்டாக்கக் கூடியதாகவாவது திருத்தக் கூடாது. இப்படியெல்லாம் சீர்திருத்தம் செய்த பின்னரே ஒரு நூலை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும். நூல்களை அச்சிடும் விஷயத்தில் அவசரப்படலாகாது. பணச் செலவு செய்வதில் பின் வாங்கக் கூடாது; உழைப்பதில் சோம்பலடையக் கூடாது. கூடியவரை பணச் செலவு செய்து பொறுமையோடு, அதிக நாட்கள் சென்றாலும் வழுக்களை நீக்கி எந்த விடத்திலும் சந்தேகமில்லாமல் தெளிவாகவே நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும். வெள்ளாடு மேற்றழை தின்றோடுவது போல் மேற் போக்காக வேலை செய்யலாகாது.

பழைய அச்சுக் காப்பிகளை அச்சிடத் தொடங்கினால், நன்றாகப் பரிசோதித்து அவற்றிலுள்ள வழுக்களைக் கண்டு பிடித்துத் திருத்தியும், கற்றறிந்தோர்களிடம் காட்டி அவர்களைக் கொண்டும் திருத்துவித்தும் அச்சிடவேண்டும். நல்ல கல்வித்தேர்ச்சியுடையவர்களால் அச்சிடப்பட்ட புத்தகங்களிலும் சில பிழைகள் நேர்ந்திருப்பது இயற்கை. ஆதலின், எந்த அச்சுக் காப்பியையும் கூடியவரை ஆராய்ந்து பார்த்து அச்சிடுதலே நலம். அச்சுக் காப்பிகள் என்றால் சரியாகவே இருக்குமென்ற நம்பிக்கை சிலருக்குண்டு. இதனால் அவர்கள், கல்வியறிவில்லாத சாமானியர்களால் வழுக்களை நிரப்பி அச்சிடப்பட்ட புஸ்தகங்களையும் சரியாயிருக்குமென்றே நினைத்து, அவற்றைத் திருத்தக் கூடியவர்களையும் திருத்த விடாமல் வழுக்கள் இருந்தபடியே இருக்க, புஸ்தகங்களை அச்சிற்பதித்து வெளியிட்டு விடுகின்றனர். கல்வியறிவுடையவர்கள், வழுக்களைக் கண்டு, 'இவை குற்றங்களே' என்று சொன்னாலும் சிலர் கேளாமல், தாங்கள் அச்சுப் புஸ்தகத்தில் வைத்தபேதை நம்பிக்கையால், அவ்வார்த்தைகளைத் தடுத்து, "அச்சுப் புஸ்தகத்தில் குற்றமேது; எல்லாம் சரியாகவே யிருக்கும்" என்று குதர்க்கம் பேசுவார்கள். இதனால் பாஷைகெட்டுக் கல்வி யில்லாத கல்வி பரவுமென்ப



தில் தடையேயில்லை. ஆனால், கல்வி ஞானமில்லாதவர்களை ஏமாற்றிப் பொருள் பறிக்கும்நோக்கமுடைய சிலர் சுத்தமாக அறிஞரால்எழுதப்பட்ட புஸ்தகங்களிலும், 'அது குற்றம், இதுகுற்றம்' என்று பல குற்றமல்லாத குற்றங்களைக் கூறி நன்றாயிருக்கும் அப்புத்தகங்களைத் திருத்திக் குற்றங்களையே நிரப்பி விட்டுப் பணத்தை வாங்கிக் கொண்டு போய் விடுவார்கள். இவர்களிடம் எந்தப் புஸ்தகத்தையும் காட்டவே கூடாது.

அன்னிய பாஷைகளிலிருந்து மொழி பெயர்த்துப் புத்தகங்களை வெளியிடுவோர், நேர்நேரே வார்த்தைக்கு வார்த்தை எழுதி மொழி பெயர்த்து வெளிப்படுத்தலாகாது. ஏனெனில், ஒவ்வொரு பாஷைக்கும் இலக்கணம் வெவ்வேறு விதமாயிருக்கும்; அதனால் வார்த்தைக்கு வார்த்தை மாத்திரம் நேர்நேராகப் போட்டெழுதிப் பார்த்தால் வாக்கியத் தொடர்களில் எழுவாயில்லாமலும், பயனிலையில்லாமலும், செயப்படு பொருள் இல்லாமலும், பொருள் முடிபில்லாமலும் சர்வ ஆபாசமாகப் பாஷையின் ஒழுங்கு கெட்டு நிற்கும். ஆதலின், அன்னிய பாஷையை மொழி பெயர்க்கும்போது விஷயங்களை ஒருமுறை நன்றாகப் படித்து விட்டுப் பின்னர் தாங்கள் எழுதும் பாஷையில், அப்பாஷையின் இலக்கண வரம்பின்படி எழுத வேண்டும். இவ்வாறு எழுதுகின்றவர்கள் அவ்விரண்டு பாஷைகளிலும் விற்பத்தி யுடையவர்களா யிருக்கவேண்டும். ஒருபாஷையில் மாத்திரம் வன்மையுடையோர் அதை மற்றொரு பாஷையில் எழுதத் தொடங்கினால் ஒருபோதும் சரியாக எழுதவே முடியாது. இரண்டு பாஷையிலும் வன்மையுடையார் ஒழுங்காக மொழி பெயர்க்கும் புஸ்தகங்களையும் நல்ல கல்விமான்கள் சிலரிடம் காட்டி அவர்களைப் பார்க்கும்படி செய்து ஏதேனும் வழுவிருந்தால் திருத்தும்படி சொல்ல வேண்டும். இவ்வாறு செய்யப்படாத புஸ்தகம் பூரணமாகக் குற்றம் நீங்கியதாக ஒருபோது மிராது. இவ்விஷயத்தில், 'நாம் எழுதினதேசரி; இன்னொருவர் என்ன பார்க்கிறது' என்று அகங்காரங் கொள்ளவே கூடாது. பல பேரிடம் காட்டிச் சீர் திருத்தம் செய்துவெளிப்படுத்தும் புஸ்தகங்களிலும் சில தவறுகள் ஏற்படுவது சகஜமாயிருக்கும்போது, மற்றவைகளில் குற்றமேற்படுமென்பதில் சந்தேகமென்ன விருக்கிறது என்பதை நன்றாக ஆலோசித்து ஒவ்வொரு புஸ்தகத்தையும் கல்விமான்களிடம் காட்டித் திருத்திக் கொள்வதே நலமாம். சிலர், "நான் பிடித்த முயலுக்கு இரண்டே கால்" என்று சொல்வது போலத் தப்பான விஷயங்களை எழுதிக் கொண்டு 'இதுவே சரி' என்று சாதிப்பார்கள். இவர்கள் பலரிடத்தும் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லி அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்க வேண்டும். அப்பொழுது குற்றமின்னது, குற்றமில்லாதது இன்னது என்று விளங்கும்.

புத்தகங்களை அச்சிடுங் காலத்தில் ஒவ்வொரு பாரத்தையும் மூன்று முறைக்குக் குறையாமல் ஒப்பு நோக்கித் திருத்த வேண்டும். புத்தகங்களை எழுதினவர்கள் ஒருமுறையாவது வேறொருவரைக் கொண்டு பாரங்களைப் பார்க்கும்படி செய்ய வேண்டும். ஏனென்றால், எழுதினவர்களுக்கு எழுத்துப் பிழை சரியாயிருப்பது போலவே விளங்கும்; அன்னியர் பார்த்தால் அப்பிழைகள்

கூடியவரை களையப்படும். ஒப்பு நோக்குவோர் அவசரப்படாமலும், வேறு விஷயங்களில் புத்தியைச் செலுத்தாமலும் சாந்தமாகப் பொறுமையோடு பாரங்களைப் பார்க்க வேண்டும். முதல் பார்வை அசல் காப்பியை வைத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்; இவ்வாறு செய்யா விட்டால் சில வரிகள் விடுபட்டிருந்தாலும் தெரியாமற் போய்விடும். பின் அடுத்த பார்வைகளில் அசல் காப்பியில்லாமலே வேறு விஷயங்களைக் கவனித்துத் திருத்தலாம். இரண்டாவது பாரம் பார்க்கும்போது முதல் பாரத்தின் தொடர்ச்சியையும் பக்க நம்பர் முதலியவைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும். பெரும்பான்மையும் இந்த முறைகளை அனுசரித்தால் புஸ்தகங்கள் கூடியவரை சுத்தமாகவே வெளிவரும்.

ஆதலின், புத்தக வியாபாரிகளும், அச்சுக்கூடத் தலைவர்களும், புத்தகங்களை எழுதி வெளியிடத் தக்க கல்வியாளரும் இந்த நல்ல முறைகளை அனுசரிக்கும்படி நான் மிகவும்வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன். இதில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் தமிழைப் பற்றிய பொது நன்மையான விஷயங்களே யாதலின், அறிஞர் இவற்றை வெறுக்காமல் அன்புடன் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம்,

வீ. ஆறுமுகஞ் சேர்வை.

## கல்யாணஞ் செய்து கொள்ளுதல்.

புருஷன் இருபத்தஞ்சு வயதில் தன் வயதிற்கு நாலு அஞ்சுவயது குறைந்த வயதையுடையவளாய் அதிக ரூபமாகவும் அசங்கியமாகவுமில்லாமல் நல்ல குடும்பத்தில் பிறந்த விவேகசாலியாக இருக்கிற ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணஞ் செய்து கொள்ளவேண்டியது.

ஒருவன் இருபத்தஞ்சுவயதிற்கு முன்னே கல்யாணஞ் செய்து கொள்ளக் கூடாது. ஏனெனின், அந்தப்பருவத்தில் எல்லாவற்றிற்கும் முக்கியகாரணமாகிய கல்விப்பொருளைச் சம்பாதிக்க வேண்டியதாகையால், அப்போது கல்யாணஞ் செய்துகொண்டால், படிப்பின் மேல் மனஞ் செல்லுவதற்கு அனேகம் இடையூறுகள் உண்டாகின்றன. அதன்றியும், பாலியகாலத்தில் ஒரு வேளை பிள்ளைகளுண்டானால் அந்தப்பிள்ளைகளால் உண்டாகும் இன்பத்தை அடையத் தகுந்த பருவம் அதல்லாதபடியால் பிள்ளைப்பேற்றினால் அடையும் இன்பத்தையும் இழந்துபோவான். அதிபாலியத்தில் கல்யாணஞ் செய்துகொள்வதினால் இன்னும் அனேக வருத்தங்கள் உண்டாகின்றன. என்னவென்றால், பதினாறு-அல்லது பதினெட்டாவது வயதில் புருஷர்களுக்குப் போதுமான பலம் இராதாகையால் அந்த வயதில் உண்டாகின்ற பிள்ளைகளும் அதிக பலசாலிகளாக இருக்கமாட்டார்கள். அது எதுபோலவென்றால், இளசாயிருக்கு மாமானது பழத்தைக் கொடுத்தால் அந்தப்பழம் எப்படி ருசியில்லாமல் இருக்குமோ அப்படித்தான் அதிபாலியர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகள் பலசாலிகளாக இராமல் அதிக சீக்கிரத்தில்தானே மரணத்தை அடைந்து கொண்டு வருகிறார்கள். இந்தத் தேசத்தில் அதிபாலியத்தில்தானே கல்யாணஞ் செய்கிற சில ஜாதியர்களுடைய புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பிறக்கிற பிள்ளைகளுக்கும், நல்ல பருவத்தை அடைந்தபின்பு கல்யாணஞ் செய்கிற இங்கிலீஷ்காரருக்கும் இன்னும் மற்ற ஜாதியர்களுக்கும் பிறக்கிற பிள்ளைகளுக்கும் இருக்கிற பலமே, மேற்சொல்லியதற்குப் போதுமான திருஷ்டாந்தமாக இருக்கின்றது.



இருபத்தஞ்சாவது வயதில் அவன் கல்யாணஞ் செய்துகொள்ள, அவனுடைய இருபத்தாறாவது அல்லது இருபத்தேழாவது வயதில் அவனுக்குப் பிள்ளை உண்டானால், அந்தப்பிள்ளைக்கு இருபத்தஞ்சு வயதாகும்போது தகப்பனுக்கு ஐம்பது ஐம்பத்திரண்டு வயது ஆகின்றது. அப்போது தகப்பன் முதுமையை அடைகிறான். பிள்ளை அவனைக் காப்பாற்றும் நிலையை அடைகிறான். ஆகையால்தான் பெரியோர்கள் "அறுநான்கிற் பெற்றபிள்ளை முன்னாளில் தேடிவைத்த பொருள்" என்று சொல்லியிருக்கிறார்கள். சிலர் இருபத்தஞ்சு இருபத்தாறாவது வயதில் கல்யாணஞ் செய்து கொள்ளாமல் ஐம்பதாவது வயதில் கல்யாணஞ் செய்து கொள்ளுகிறார்கள். அது எவ்விதத்தாலுஞ் சரியானதன்று. ஏனென்றால், மனிதர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற ஆயுட்பிரமாணத்தில் ஐம்பதாவது வயது சரிபாதியானதால் அப்போது—மனிதர்களுக்கு இருக்கும் பலத்திற் பாதிக்கு அதிகமாகவே குறைந்து போகின்றது. ஆகையால் கல்யாணம் அந்த வயதிற் செய்துகொண்டால் பிள்ளை உண்டாகாது. உண்டானாலும் அதிக பாலியர்களுக்குப் பிறக்கிற பிள்ளைகள் எப்படிப் பலவீனமாக இருக்கின்றனவோ அப்படிப்போலவே யிருக்கும். அதன்றியும் பிள்ளைகளை வளர்த்துப் படிப்பு முதலாகியவைகளையுங் கற்பித்துக் கொடுத்து அவர்களைச் சீர்ப்படுத்துவதற்கு முன்னமே தந்தைகள் இறந்துபோய் விடுவார்கள். சிலர் ஐம்பதாவது வயதில் யௌவனத்தை அடையாத சிறு பெண்களைக் கல்யாணஞ் செய்து கொள்கிறார்கள். அது பெரியபாவம். ஏனென்றால், அந்தப் பெண்கள் நல்ல பருவத்தை அடைகிறதற்கு முன்னே பெரும்பாலும் அவர்கள் இறந்து போய் விடுகிறார்கள். அப்போது அந்த நிர்ப்பாக்கியமுள்ள பெண்களுடைய வாழ்நாளெல்லாம் வீணாகி அவர்கள் விதவைகள் என்கிற பெயரை அடைந்து துன்பத்தில் மூழ்கியிருக்கிறார்கள். இந்தக் கெடுதி நேரிடுகிறது அவர்களுடைய குற்றமன்று. அறிவில்லாமையினாலே தங்களுக்குக் கிழத்தனம் வந்ததை அறியாமல் சிறிய பெண்களைக் கல்யாணஞ்செய்து கொள்ளுகின்ற புருஷர்களுடைய குற்றமாகவே இருக்கின்றது.

புருஷர்கள் தங்களுக்குக் குறைவான வயதையுடைய பெண்களைக் கல்யாணஞ்செய்து கொண்டால் அந்தப் பெண்கள் தமது புருஷர்கள் தங்களைப் பார்க்கிலும் அதிக வயதை உடையவர்களாகையால் அவர்களுக்கு உலக நடை தம்மிலும் அதிகமாகத் தெரிந்திருக்குமென்று எண்ணி, அவர்கள் சொல்வதை யெல்

லாம் மிகுந்த மரியாதையோடும் வணக்கத்தோடும் கேட்டு, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள்.

புருஷர்கள் தங்களுக்கும் மேலான வயதையுடைய பெண்களைக் கல்யாணஞ் செய்து கொள்ளுகிறதுஞ் சரியன்று. ஏனெனின், தமது புருஷர்கள் தமக்குப் பிற்காலத்தில் பிறந்தவர்களாகையால் தங்களுக்குத் தெரிந்த மாத்திரம் அவர்களுக்கு உலகநடை தெரியாதென்று எண்ணி அகங்காரத்தை அடைவார்கள். அல்லாமலும் அவர்கள் தங்களுடைய புருஷர்களை அலட்சியம் பண்ணி, அவர்களைத் தம்முடைய கட்டளைக்குக் கீழ்ப்பட்டு நடக்கும்படி செய்துகொள்ளுவார்கள். அப்படிப் பெண்களின் சொற்படி நடக்கிற புருஷர்கள் மற்ற மனிதர்களால் புருஷர்களாக எண்ணப்படமாட்டார்கள். ஆகையால், மனிதர்கள் அதிக வயதையுடைய பெண்களைக் கல்யாணஞ் செய்துகொள்ளக் கூடாது.

புருஷர்கள் அதிரூபமுள்ள பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொள்ள வேண்டுமென்று இச்சிக்கவுங்கூடாது. ஏனென்றால், அப்படி இச்சைப்பட்டுக் கல்யாணஞ் செய்து கொண்டவர்கள் அந்தப் பெண்களுடைய அழகுக்குச் சரியான அழகோடு கூடியவர்களாக இருந்தால்தான் அந்தப் பெண்கள் சந்தோஷமாக அவர்களோடு கூடியிருப்பார்கள். அப்படிக்கில்லாமல், இந்தத்தேசத்தில் நல்ல அழகுள்ள பெண்ணைப் பந்துத்துவத்தையும் அதிக ஐசுவரியத்தையும் உடைய ஒரு மூடவனுக்கு அல்லது கிழவனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுக்கும்வழக்கத்தைப்போலக் கல்யாணஞ் செய்து கொண்டால் அதனுடைய பிரயோசனம் உடனே உண்டாகாமற் போகமாட்டாது.

அழகுள்ள பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொள்ளுவதனால் கெடுதிகள் உண்டாகுமோ வென்று நினைத்துக் குரூபிகளாக இருக்கிற பெண்களைக் கல்யாணஞ் செய்துகொள்வது நலமாயிருக்குமென்று எண்ண வேண்டியதில்லை. ஏனெனில், எதுவும் தன்னளவில் குறைந்தாலும் அதிகமானாலும் துன்பத்தைக் கொடுக்கும். ஆகையால் மிதமான அழகையுடைய பெண்களைக் கல்யாணஞ் செய்து கொள்ளவேண்டியது. குரூபிகளாக இருக்கிறவர்களை விவாகஞ் செய்து கொண்டால் அவர்களைக் காணும்போதெல்லாம் நம்முடைய மனத்திற்கு அதிக அருவருப்பும் வியசனமும் உண்டாவதல்லாமலும், கடவுள் நமக்கு இப்படி விதித்தாரேயென்று அவரைத் தூஷிக்கும்படியாகவும், பெரியோர்கள் கூறிய நீதி நூல்களுக்கு விரோதமாய்த் தூர்த்தராகும்படியாகவும் நேரிடும்.

அந்த மிதமான அழகையுடைய பெண்களும் நல்லகுடும்பத்தில் பிறந்தவர்களாக இருக்கவேண்டும். ஏனென்றால், அவர்களுடைய வமிசத்தார்கள் நல்ல கீர்த்தியை உடையவர்களாக இருந்தால், அவர்களைக் கல்யாணஞ் செய்துகொள்ளுகிறவர்களுக்குப் பெருமையுண்டாகிறது. அபகீர்த்தியை உடையவர்களாக இருந்தால் இன்ன புருஷன் இன்னானுடைய பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொண்டானென்கிற பழிப்பு உண்டாகின்றது. ஆகையால், அந்தப் பழிப்புக்கஞ்சி நாம் எந்தக் குடும்பத்தாருடைய பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்புவோமோ, அந்தக் குடும்பத்தாருடைய காரியங்களை யெல்லாம் நன்றாக



அறிந்து, அவர்கள் குற்றமற்றவர்களாக இருந்தால், அவர்கள் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொள்ள வேண்டும். நாம் கல்யாணஞ் செய்து கொள்ளப் போகிற பெண்களுடைய குடும்பத்தில யாருக்காவது குஷ்டமுதலான வமிசபாரம்பரியமாக இருக்கிற வியாதிகளுண்டா என்றும் விசாரிக்கவேண்டியது. ஏனென்றால், அப்படிப்பட்ட வியாதிகளிருந்தால் அவைகள் அந்தப் பெண்கள் வழியாக அவர்களைக் கல்யாணஞ் செய்து கொள்ளும் புருஷர்களுக்காவது அல்லது அவர்களுடைய பிள்ளைகளுக்காவது உண்டாகுமென்று பெரியோர் சொல்லுகிறார்கள். ஆகையால், அதை முக்கியமாக அறிய வேண்டியது.

ஒருவன் எந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்புகிறானோ, அந்தப்பெண் நல்ல விவேகசாலியாகவும் படித்தவளாகவும் இருந்தால், அவனுக்கு அதைவிடச் செல்வம் வேறே வேண்டியதில்லை. பெண்கள் தங்களுடைய விவேகத்தினால் புருஷர்களுக்குச் சகல மரியாதையும் உபசாரமும் செய்கிறது மன்றித், தமது நன்னடக்கையினாலே கணவர்களுக்கு அழிவில்லாத கீர்த்தியையும் உண்டு பண்ணுகிறார்கள். பெண்கள் அவசியம் படித்தவர்களாகவே யிருக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் படித்திருந்தால் தமது குடும்ப காரியங்களை யெல்லாம் தங்களுடைய புருஷர்களுக்கு வருத்தங் கொடுக்காமல் தாங்களே பார்த்துக் கொண்டு போகுந் திறமை யுடையவர்களாக இருப்பார்கள். அன்றியும், தமது புத்திரர்களைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பும் பருவத்திற்கு முன்னே வீட்டில் தானே பாலிய காலத்தில் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டிய நல்ல புத்திகளை யெல்லாங் கொஞ்சங் கொஞ்சமாகவே போதித்து விடுவார்கள்; அதனால் அந்தப் பிள்ளைகள் மற்றப்பிள்ளைகளைவிட விவேகசாலிகளாகவும், யோக்கியர்களாகவும் இருப்பார்கள். மேலும் பெண்கள் படித்திருந்தால் அவர்கள் கணவர்கள் எவ்விடத்திற்குப் போயிருந்தாலும் வீட்டிலிருப்பது போலவே எல்லாக் காரியங்களையும் தமது மனைவியர்க்குக் கடித மூலமாகத் தெரிவிப்பார்கள். அதற்குப் பதிலாக அவர்களும் எழுதி அனுப்பும் சக்தியை உடையவர்களாக இருப்பார்கள். அப்படிக் கில்லாவிட்டால், அந்தப் புருஷர்கள் தம்முடைய மனைவிகள் மாத்திரம் அறிய வேண்டிய இரகசியங்களை யெல்லாம் எழுதாமல் எல்லாரும் பார்த்து அறியத் தகுந்த காரியங்களை மாத்திரம் எழுதி அனுப்புவார்கள். மனைவியரும் அப்படியே தம்முடைய க்ஷேமத்தை மாத்திரந் தெரிவிப்பார்கள். இப்படி க்ஷேமம் மாத்திரந் தெரிந்து மற்றொரு இரகசியமுந் தெரியாதிருப்பதால் அதைப்பற்றி ஒருவரை யொருவர் காணவேண்டுமென்று ஆவல் கொண்டிருப்பார்கள். ஒரு வேளை ஒருவரை யொருவர் பாரா முன்னமே இறந்துபோய்விட்டால் அப்போது அனேக கெடுதிகள் உண்டாகும்.

இங்கிலீஷ்காரர்களில் ஸ்திரீகள் படித்திருப்பதால் புருஷர்கள் அவர்களை விட்டு எத்தனைநாள் பிரிந்திருந்த போதிலும் அவர்களுடைய சகல சமாசாரங்களையும் கடித மூலமாக அடிக்கடி அறிந்து கொண்டிருக்கிற படியால் அவர்களைப் பிரிந்திருப்பதினால் அதிக வியசனத்தை அடையாமல் இருக்கிறார்கள். பெண்களுக்குப் படிப்பிருந்தால் வியபிசாரஞ் செய்வார்களென்று எண்ணிச் சி

லர் தங்களுடைய பெண்களைப் படிப்பிக்காமல் இருக்கிறார்கள். சிலர் வெகு கொஞ்சங் கற்பித்துப் பின்பு அதிகமாகப் படிப்பித்தால் கெடுதி உண்டாகுமென்று நினைத்துச் சமையல் வேலையைக் கற்பிக்கத் தொடங்குகிறார்கள். படிப்பு வியபிசாரத்துக்குக் காரணமென்று சொல்வது மிகவும் மூடத்தனமாக இருக்கின்றது. நன்றாகப் படித்திருந்தால் ஸ்திரீகள் ஒருகாலும் வியபிசாரஞ் செய்யத் துணியார்கள்.

ஆகையால் தந்தைகள் மேலே சொல்லியிருக்கிறபடி செய்யாமல், பெண்களுக்கு நல்ல நீதிநூல்களையும் கற்புநிலைமையைக் குறித்துச் சொல்லும் சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்பித்து, அவர்களை விடக் கல்வியிற்சிறந்த புருஷர்களைத் தேடிக் கல்யாணஞ் செய்து கொடுத்தால், அந்தப் பெண்கள் அவர்களைத் தம்மைப் பார்க்கிலும் விசேஷமாகக் கற்றவர்களென்று நினைத்து, அவர்களிடத்து விசுவாசமும் மரியாதையு முடையவர்களாகப் புருஷர்கள் சொற்படி நடந்து கொண்டு, எப்போதுஞ் சந்தோஷ முடையவர்களாக இருப்பார்கள். மற்றப் புருஷர்கள் எவ்வளவு அழகை யுடையவர்களாக இருந்த போதிலும், அவர்களையெல்லாந் துரும்புபோல எண்ணித், தமக்கிருக்கிற மேலான கல்வியினாலே தங்கள் கற்புக்கு எந்த விதத்திலும் அழிவு வராமலிருக்கும் படியாக அதைக் காப்பாற்றிக்கொள்ளுவார்கள்.

இங்கிலீஷ்காரர்களின் புருஷர்கள் ஸ்திரீகளைப் பார்த்து, அவர்களுடன் பேசி, அவர்களது திறமையையும் விவேகத்தையும் அறிந்து, பின்பு கல்யாணஞ் செய்கிற வழக்கத்தைப்போல, இந்தத் தேசத்தார்கள் செய்யாமல், தாய் தந்தைகள் அல்லது பந்துக்கள் பெண்களைப் பார்த்துக்கல்யாணஞ் செய்விக்கிறபடியால், புத்திசாலியாகவும், கல்விமானாகவும் யோக்கியனாகவும் இருக்கிறவனுக்கு மிகவுந் துஷ்டையானவள் வந்து சம்பவிக்கிறாள். அல்லது, விவேகசாலியாக இருக்கிற பெண்ணுக்கு அவிவேகியாகவும் தீயொழுக்க முடையவனாகவும் இருக்கிறவன் வந்து சம்பவிக்கிறான். இப்படி ஒன்றுக்கொன்று மாறுபாடான குணங்களையுடைய புருஷர்களும் ஸ்திரீகளும் கல்யாணஞ் செய்துகொள்வதினால் என்ன சவுக்கியம் உண்டாகும். அதைப் புத்திமான்களே யோசிக்க வேண்டியது. ஆனால் மேலேசொல்லிய மூடத்தனம் இந்தத் தேசத்தார்களுக்கு நல்ல விவேகம் வருகிறவரைக்கும் இவர்களை விட்டு நீங்காது. ஆகையால், விவேகசாலிகளாக இருக்கிற புருஷர்கள் தங்களுக்குத் தமது தாய் தந்தைகள் கொள்ளவேண்டுமென்று யோசித்திருக்கிற பெண்களுடைய குணங்களை எவ்விதத்திலாவது விசாரித்துப் பின்பு கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டியது. ஏனென்றால், தாய்தந்தைகளாவது, அல்லது பந்துக்களாவது, பணம் பந்துத்துவ முதலிய காரணத்தினாற் கூன் குருடு முதலிய விகார ரூபங்களையுடைய ஸ்திரீகளை நன்றாக இருக்கிற புருஷனுக்குக் கல்யாணஞ் செய்ய நிச்சயிப்பார்கள். இப்படி அனேகம் பேர்கள் தங்களுடைய சவுக்கியம் பெருமை முதலியவைகளைப் பார்த்தும், பின்பு புருஷன் படப்போகிற வருத்தத்தைப் பாராமலும், விகார ரூபமுள்ள பெண்களைக் கொள்ளத் துணிகிறார்கள். ஆலோசித்துப் பார்



க்குமிடத்து எப்படிப்பட்டவர்களும் முதலில் தங்கள் சவுக்கியத்தை விரும்புகிறவர்களா யிருப்பார்களே யல்லாமல் பிறருடைய சவுக்கியத்தைப் பாராட்டுகிறவர்கள் உலகத்தில் யாருமில்லை யாகையால், கல்யாணஞ் செய்து கொள்ளும் விஷயத்தில பெண்களைப் பார்க்கப் புருஷர்களும், புருஷர்களைப் பார்க்கப் பெண்களுந்தான் தகுந்தவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தேசத்தார்களும் இப்படிச் செய்து கொண்டு வந்தால், ஸ்திரீகளும் புருஷர்களும் ஆகிய எல்லோரும் அதிக சுகத்தோடு கூடி வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அப்போது ஸ்திரீகளிடத்து வியபிசாரமும், புருஷர்களிடத்து வேசிகமனமும் இருக்க மாட்டா.

புருஷர்கள் அதிக ஐசுவரியத்தை யுடையவர்களுடைய பெண்களைக் கல்யாணஞ் செய்து கொள்ளலாகாது. மிதமான தனிகர்களாகவும் சின்னக்குடும்பஸ்தர்களாகவும் இருக்கிறவர்களுடைய பெண்களைக் கல்யாணஞ் செய்துகொள்ளவேண்டியது. ஏனென்றால், மாமன் அதிக பொருளுடையவனாகவும் மருமகன் எளியவனாகவும் இருந்தால், அந்த மருமகனை மாமன் தன்னுடைய வேலைக்காரர்களில் ஒருவனைப் போல எண்ணுவான். அவனுடைய பெண்ணும் செல்வச்செருக்கினால் தனது புருஷனுக்கு உபசார முதலானவைகளைச் செய்ய விரும்பாள். அன்றியும் எப்போதும் தாய் வீட்டிலேயே இருப்பாள். புருஷனுக்கு இவன் இன்னாருடைய மருமகன் என்று சொல்லும் பெயரே யன்றி வேறொரு மரியாதையும் கிடைக்க மாட்டாது. சாதாரணமானவர்களுடைய வீட்டுப் பெண்ணாக இருந்தால், அப்போது அவர்களால் மருமகனுக்கு எல்லா உபசாரங்களும் நடக்கும். பெண்ணும் புருஷனுடைய சொற்படி நடப்பாள். தாய் வீட்டிலேயே குடிகொண்டிராமல் புருஷனுடனே எப்போதும் கூடியிருப்பாள். மாமன் வீட்டார் எளியவர்களாகவும் அதிக குடும்பஸ்தர்களாகவும் இருந்தால், அவர்களுடைய பெண்ணைக் கொண்ட புருஷன் எப்போதும் அவர்களுக்கே தன் ஆஸ்தியைச் செலவழிக்கும்படியாக நேரிடும். புருஷனுக்கு அவர்களால் ஒரு நன்மையும் கிடைக்க மாட்டாது.

நல்ல சம்பாத்தியம் நமக்கில்லாவிட்டால், நாம் கல்யாணஞ் செய்து கொள்ளக்கூடாது. கைக்குப் போதுமான திரவியம் இல்லா முன்னமே, நாம் கல்யாணஞ் செய்து கொண்டால், நமக்குச் சந்துஷ்டி யில்லாமல் எப்போதும் வியசனமாகவே யிருக்கும். நம்முடைய பெண்டாட்டிக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களுக்கு நம்மிடத்திற் பணமில்லாவிட்டால் கடன் வாங்கியாகிலும் போதுமான செலவு செய்யும்படியாக நேரிடும். அப்புறம் அந்தக் கடனைத் தீர்க்க நாம் சக்தியில்லாதவர்களாகிக் கடன் கொடுத்தவர்களால் எப்போதும் பீடிக்கப்பட்டுக் கொண்டிருப்போம். ஒருவேளை கடவுள் கிருபையாற் பிள்ளைகள் உண்டானால் அவர்களுக்குப் போதுமான உபசாரஞ் செய்ய நமக்குச் சக்தியில்லாதபடியால் அந்தப்பிள்ளைகள் அன்னவஸ்திரங்களுக்காகத் தமது தாய்முகத்தைப் பார்க்கும்போது அவள் நம்முடைய முகத்தை நோக்குவாள். நாம் அப்போது அதிக வியசனத்தை அடைவோம். ஆகையால் கையில் பொருளில்லாததற்கு முன்னமே கல்யாணஞ் செய்துகொண்டு இப்படிப்பட்ட துன்பத்தை அடைகிறதைப் பார்க்கிலும் ஒன்றியாக இருப்பதே மிகவும் நலமாக இருக்கின்றது.

சீமான்களுடைய பெண்கள் அதிக திரவியத்தோடு நமக்குக் கிடைப்பதாக இருந்தாலும், நாம் நமது சொந்த முயற்சியினால் சம்பாதிக்கும் பொருள் ஒரு சமுசாரத்தை வைத்துக் காப்பாற்றுகிறதற்குப் போதுமானதாக இல்லாவிட்டால் கல்யாணஞ் செய்துகொள்ளக் கூடாது. ஏனென்றால், அந்தப் பணத்தினால் ஜீவிப்பவன் அதமனென்று சொல்லப்படுகிறான். அதல்லாமலும் வீட்டிற் சேர்ந்த அதிகாரமும் அவர்களுக்கே யிருக்கும்; நாம் அந்தப் பணத்தைச் செலவிடும்போது நமது மனத்திற்கு அருவருப்பும் பலவகை வருத்தங்களும் உண்டாகும். ஒரு பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொண்டு அவளைப் போஷிக்கத் தகுந்த சக்தியில்லாம லிருக்கும்போதே சிலர் இரண்டு பெண்களைக் கல்யாணஞ் செய்துகொள்ளுகிறார்கள். அது பெரிய மூடத்தனம். அல்லாமலும் எப்படிப்பட்டவனும் இரண்டு பெண்களைக் கல்யாணஞ் செய்து கொள்ளக் கூடாது. இரண்டு பெண்டாட்டிகளையுடையவன் வீடு எப்போதும் புகைந்துகொண்டே யிருக்கும். அவர்களைக் கொண்ட புருஷனுக்கு அவர்களது வியாச்சியங்களைத் தீர்ப்புச் செய்யக்கூடாம லிருக்கிறதுந் தவிர, ஒருவேளை அவனுக்கு உயிர்ச்சேதமுஞ் சம்பவிக்கும். ஒவ்வொருத்தியும் புருஷனைத் தன்வசப் படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவனுக்கு மருந்து முதலாகியவற்றைக் கொடுக்கப் பிரயத்தனப்படுவாள். அந்த மருந்துகள் அவனுக்கு வியாதிகளை அதிகப்படுத்தி விரைவில் மரணத்தை உண்டாக்கிவிடும்.

புருஷன் இறந்தபின்பும் அந்த ஸ்திரீகள் அவன் சம்பாதித்துவைத்த திரவியத்தைப் பாகித்துக் கொள்ளும் பொருட்டுக் கோர்ட்டு முதலான இடங்களிற் சென்று வழக்காடி அந்தப்பொருளை யெல்லாம் வியாச்சியச்செலவினால் வீணாக்கித் தமது புருஷனுக்கு அபவாதத்தை விளைவிப்பார்கள். இந்தப்படி அனேக குடும்பங்களில் நேரிட்டிருக்கிறதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்த்தே யிருக்கிறோம். இரண்டு பெண்களைக் கல்யாணஞ்செய்து கொள்ளும்படி சாஸ்திரங்களிலும் விதிக்கப்படவில்லை. ஆனால் மனுவென்பவர் தர்மசாஸ்திரத்தில் ஒரு புருஷனுடைய முதல்தாரம் மலடியாகவாவது குஷ்ட முதலாகிய வியாதிகளையுடையவளாகவாவது இருந்தால், அப்போது மாத்திரம் அவன் இரண்டாவது விவாகஞ்செய்து கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறார். இதையும் மேற் சொல்லியவற்றையும் அறியாமல் இத்தேசத்தில் ஏழைகளும் செல்வமுடையவர்களும் முதல்தாரங்கள் பிள்ளைப்பேற்றினாலாவது அல்லது பலவீனத்தினாலாவது கிழத்தனமடைந்தால், அவர்கள் மனவருத்தமுறும்படி மறுபடியுங் கல்யாணஞ் செய்துகொண்டு, அவர்களையும் அவர்கள் பிள்ளைகளையும் கைவிடுகிறார்கள். இப்படிச் செய்வது தர்மசாஸ்திரத்திற்கு விரோதமாயும், கடவுளுக்குத் திருப்தியில்லாததாயும் இருக்கின்றது.—நாம் கல்யாணஞ்செய்துகொள்வதே பெரிதன்று. நம்மாற் கல்யாணஞ் செய்யப்பட்டவர்களைப் போஷிப்பதும் அவர்கள் மனவருத்தமடையாம லிருக்கும்படி இதமான பெண்களை விரும்பாம லிருப்பதுந்தான் பெரியகாரியம்.

உலகத்தில் பெண்கள் புருஷர்களை விவாகஞ்செய்துகொள்ளுகிறது அவர்



களுடன்கூடிச் சவுக்கியத்தையும் இன்பத்தையும் அனுபவிக்கிறதற்கே யன்றி வேறொன்றுக்குமல்ல. அதையறியாமல் புத்திஹீனர்கள் சிலர் எப்போதுந் தமது மனைவிகளை அடித்தல் திட்டுதல் முதலானவைகளால் வருத்திக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்கிறதை அப்பெண்கள் தம்மாற் கூடியமட்டும் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தூர்நடையை விடாமலிருந்தால் அந்தப் பெண்கள் இதைப் பொறுக்கமாட்டாமல் கிணறு குளங்களில் வீழ்ந்து தங்களுடைய பிராணனைப் போக்கிக் கொள்ளுகிறார்கள். ஒருவன் இல்லாள் கிணற்றில் வீழ்ந்து இறந்தாளென்பதும் அவனுக்குத் தலையிறக்கத்தைக் கொடுக்கின்றது. ஆகையால், அதை அடையாமலிருக்கும்படி நாம்கொண்ட பெண்களை உபசாரத்தோடும் மரியாதையோடும் விசுவாசத்தோடும் நடத்திக்கொண்டு, அவர்களுடன் கூடி இன்பத்தை அனுபவித்துக்கொண்டு சுகமுற்றிருக்க வேண்டும்.

வியாச மஞ்சரி.

---

## தலைவலியும், காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.

---

இது, ஒருவர் கஷ்டத்தை அறியாமற் பேசும் மற்றொருவர் பொருட்டு, அறிவுடையோரால் சொல்லப்பட்டுப் பண்டைக் காலந் தொட்டு வழங்கி வரும் ஒரு பழமொழி. இதன் பொருளாவது:— தலை வலியுஞ் சுரநோயுந் தனக்கு வந்தால் மாத்திரந்தான் ஒருவன் அவற்றாலேற்படும் கஷ்டம் இன்னதென்பதையுணர்வான்; வேறொருவருக்கு வந்திருக்கும்போது அதை எளிதாகவே நினைப்பான் என்பதாம். இக்குணம் உலகத்தில் பெரும்பான்மையோரிடத்தில் சகஜமாகவே நடந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் இது கெட்ட குணமே; ஆகலின் இதை அடியோடு நீக்கி விடுவதுதான் அறிவுடையார்க்கழகு. ஒரு மனிதன் தன் கஷ்டத்தைப் போலப் பிறர் கஷ்டத்தையும் நினைப்பதுதான் அவனுக்குச் சிறந்த குணம். இப்படியின்றித் தனக்கொன்றும் பிறர்க்கொன்றும் பேசுவோர், சுயநலப் பிரியரும், பாரபக்ஷமுடையரும், இரக்கமற்ற வன்னெஞ்சருமாவர்.

ஒருவனுக்குத் தலைநோ வுண்டானால் தலையில் ஒரு பெரிய வண்டு குடைவதுபோல் மிக்க வேதனையுண்டாகும்; கண்ணை வெளியிற் பிடுங்கி யெறிவதுபோல் புருவங்களுக்குக் கீழே மிக்க அதிர்ச்சியுண்டாகும். அப்போது அம்மனிதன் படுக்கையில் அங்கு மிங்கும் புரண்டு கண் கலங்கிக் கதறுவான். அப்போது மேற்கூறிய வன்னெஞ்சர்கள் அவனைப் பார்த்தால் ‘அப்பா! இவனென்ன! தலை நோவுக்காக இவ்வளவு அவஸ்தைப் படுகின்றானே’ என்று எளனம் செய்வார்கள்; தங்களுக்குத் தலை நோவு வந்து விட்டாலோ வீடே அதிர்ந்து போகும்படி கதறுவார்கள். இப்படியே இவ்விருவகையாருடைய தன்மைகளும் ஒவ்வொரு நோயிலும் ஏற்படும். ஒருவன் ஒரு கடினமான வேலை

யைச் செய்து இளைத்துப் பெருமூச்சு விடும்போது மேற்கூறிய கன்னெஞ்சர்கள். அவனை நோக்கி, 'என்ன இவன் இந்த வேலை செய்ததற்கு இப்படிப் பெருமூச்சு விடுகின்றானே' என்று ஈனிதாகப் பேசுவார்கள். அவர்கள் ஒரு அற்ப வேலையைச் செய்வதற்கும் வெகு சிரமப் படுவார்கள்; ஒருவன், தன் பெண்டாட்டியையோ பிள்ளையையோ பறிகொடுத்தால் அச் சமயத்தில் அவனுக்குத் தாங்கமுடியாத வேதனையாயிருக்கும். அதனால் அவன் அழுது பரதவிப்பான்; அச் சமயத்தில் மேற்கூறிய கடின சித்தமுடையவர்கள் அவனை நோக்கி, "என்னமோ ஒரு ஜீவன் போய் விட்டதற்கு இவன் புரண்டு புரண்டு அழுகிறான்" என்று பரிகசிப்பார்கள்; தங்கள் வீட்டில் ஒரு கிழம் இறந்து விட்டாலும் கூட மாடுகதறுவதுபோல் கதறுவார்கள். இப்படியே இவர்கள் ஒவ்வொன்றிலும் பாரபக்ஷமான செய்கைகளையே செய்வார்கள். இந்தச் செய்கைகளால் மிக்கபாவமே யுண்டாகும். கஷ்ட மென்பது எல்லோர்க்கும் ஒரே தன்மை யுடையதுதான். நம்முடைய காலில் ஒரு முள் குத்திவிட்டால் அந்த வேதனையைச் சகிக்காமல் நாம் எவ்வளவோ கஷ்டப் படுகிறோம்; இதுபோல மற்றப் பிராணிகளுக்கும் வேதனை யுண்டாகு மென்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அவ்வாறுணர்ந்து எவர்க்கும் எவைக்கும் கஷ்டத்தை உண்டாக்காதிருக்க வேண்டும்; எல்லாப் பிராணிகளிடத்தும் இரக்கச் சித்தம் வைக்க வேண்டும். இதுவே உலகத்தில் சிறந்த தர்மம். இதனால் நிச்சயமாக நற்கதி கிடைக்கும்.

தயாளன்.

---

## பாலபோத விளக்கம்.

(முன் தொடர்ச்சி புஸ்தகம்-3. சஞ்சிகை-11, பக்கம்-272.)

---

22. நெஞ்சிலாவது, கன்னங்களிலாவது, கால்களுக் கிடையிலாவது கையை வைத்துக் கொண்டு படுத்துறங்கலாகாது; இவ்வாறு செய்வதால் உடம்பில் இரத்த ஓட்டம் தடைப்பட்டுப் பல வியாதிகளுண்டாகும். இன்னும் கைகளை விறைக்க இரண்டு பக்கங்களிலும் நீட்டிக் கொண்டு மல்லாந்து ஆகாயத்தைப் பார்த்தபடியே படுத்து நித்திரை செய்தல் கூடாது. படுத்துறங்கும்போது வாய்வழியே மூச்சுவிடக்கூடாது. குறட்டை விடக்கூடாது. இந்தப் பழக்கங்களை யுடையவர்கள் சிறிது சிறிதாக இவற்றை ஒழித்துவிட முயலவேண்டும். இடப்பக்கம் கன்னத்தைத் தலையணையில் வைத்து ஒருபக்கமாகச் சாய்ந்து மிருதுவாக மூச்சை விட்டு நித்திரை செய்யவேண்டும்.

23. நித்திரை செய்யுங் காலத்தில், வெற்றிலை பாக்கையாவது, வேறுவஸ்துக்களையாவது வாயிலடக்கிக் கொண்டு படுத்துறங்கலாகாது. அவ்வாறு



செய்யின் அந்தவஸ்துக்கள் வாயிலிருந்தபடியே விஷமாகமாறி உள்ளே சென்று தீங்கு செய்துவிடும்.

24. குப்புறப் படுக்கலாகாது; படுத்துறங்குங் காலத்தில்கால்கைகளை உதைத்துக் கொண்டு அங்கு மிங்கும் புரண்டு புரண்டு உருளக் கூடாது. ஓரிடத்திலேயே அசையாமல் படுத்திருக்க வேண்டும். அங்கு மிங்கும் உருண்டு பற்பல விடங்களிற் புரண்டு படுப்பதாலும், குறட்டை முதலியவற்றை விடுவதாலும், அவற்றைச் செய்வோர்க்குப் பல் விதமான நோயுண்டாகிக் கஷ்டம் அதிகரிப்பதோடு பக்கத்தில் படுத்திருப்பவர்களுக்கும் பல விதமான உபத்திரவமுண்டாகும்.

25. படுத்துறங்கும் போது, பல்லைக்கடித்தல், வாயைமெல்லுதல், கையோடுகையைச் சேர்த்துத் தேய்த்தல்,பயங்கரமாகக் கூவி வாய்புலம்புதல், விகார சொப்பனங்காணல் முதலியவைகள் உண்டாகாதபடி ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இவைகளெல்லாம் உண்டாவதற்குக் காரணம் பெருந்தீனியும். பெருந்தூக்கமுமேயாம். ஆதலின், இவற்றைக் குறைத்தால் அவைதாமே குறைந்துபோம்.

26. இரவு பதினொருமணிக்கே தூங்க ஆரம்பிக்கவேண்டும். பதினொருமணியிலிருந்து இரண்டு மணிவரை நன்றாகத் தூங்கவேண்டும். அதன்பின் நான்கு மணிவரையில் அரைத் தூக்கமா யிருக்கவேண்டும். நான்கு மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு பாடம் படிக்க ஆரம்பிக்க வேண்டும். பாடமில்லாதவர்கள், குடும்பகாரியங்களிற் பிரவேசிக்க வேண்டும். நான்கு மணிக்கு எழுந்திருக்கும்போது இரவில் சாப்பிட்ட ஆகாரம் நன்றாக ஜீரணமாகி உடம்பு பரிசுத்தமா யிருந்தால் மாத்திரம் காரியங்களிற் பிரவேசிக்க வேண்டும். ஆகாரம் ஜீரணிக்காமல் புளித்த எப்பம் வந்து கொண்டிருந்தாலும், வயிற்றில் நோவுண்டாகிக் கொண்டிருந்தாலும் மீண்டும் படுத்து ஆகாரம் ஜீரணமாகும் வரை நன்றாகத் தூங்கவேண்டும். ஆகாரம் ஜீரணமான சமயமறிந்து எழுந்திருக்க வேண்டும். ஆகாரம் ஜீரணமாகுமுன் எழுந்து காரியங்களிற் பிரவேசித்தால் பகல்முழுதும் சோம்பலும் தூக்கமும் வயிற்று நோவும் அதிகரித்துக் கொண்டிருக்கும்.

27. இரவில் படுத்துறங்கும்போது முழுத்தூக்கத்திலேனும் அரைத்தூக்கத்திலேனும், ஒருவர் இரண்டு மூன்று முறை கூப்பிடுவதற்குள் எழுந்திருக்கப் பழக்கஞ் செய்து கொள்ளவேண்டும். இவ்வாறின்றிப் பெருந்தூக்கந் தூங்குவதால் பலஅபாயங்களுண்டாவதோடு, பல்லைக் கடித்கல், வாயை மெல்லுதல், கையைப் பிசைதல், வாய் புலம்பல், தீய சொப்பனங் காணுதல், முதலிய அங்க சேஷ்டைகளும், சோம்பல் முதலிய பல வியாதிகளும், ஆயுட்குறைவும் உண்டாகும். சிலர் பக்கத்தில் இடிவிழுந்த போதும் விழிக்காமல், விடிந்தபின்னரும் எட்டு மணி ஒன்பது மணி வரையிலும் தூங்குவார்கள்; சிலர் வீட்டில் நெருப்பு பற்றி யெரியும்போதும் நன்றாகத் தூங்கித் தேகத்தில் அனற்சூடு தாக்

கிய பின்னரே எழுந்திருப்பார்கள். இவர்கள் பல விதத்திலும் துன்பத்திற் குள்ளாவார்கள். உயர்ந்த ஜாதிக் குதிரை சிரம பரிகாரத்தின் பொருட்டுச் சில நிமிஷநேரம் மணலிற் புரண்டு எழுந்திருப்பது போல நடுச் சாமத்தில் சிறிது நேரம் மெய்ம்மறந்து தூங்கி உடனே விழித்துக் கொள்வதுதான் மனிதர்க்குச் சிறந்ததாகும். அதிகத் தூக்கத்தால் சோம்பல் மேலிடுவதை அனுபவத்திற் காணலாம். (தொடரும்)

சற்குரு.

---

## எறும்பின் அதிசயகுணங்கள்.

---

உலகத்தில் உண்டாகி யிருக்கும் பிராணிகளில் மிகவும் அதிசயமான குணங்களை யுடைய அநேகம் பிராணிகள் உண்டு. அவற்றுள் எறும்பு, மிகவும் விசேஷமான அதிசய குணங்களை யுடையது. இதன் குணங்களை ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொன்றும் மிக அருமையாயிருக்கும்.

1-வது, ஜாதி ஒற்றுமை:—எறும்புகளுக்குள் குல வொற்றுமை அதிகமுண்டு;-இவை எப்பொழுதும் தனியாகச் சஞ்சரிப்பது மில்லை; ஓரிடத்தில் வசிப்பதுமில்லை; எப்பொழுதும் ஆயிரக்கணக்கான எறும்புகள் ஒன்றாகக் கூடியே ஒரே வளையில் வசிக்கும்; பல எறும்புகள் ஒன்று சேர்ந்தே பற்பலவிடங்களுக்குப் போய்ச் சஞ்சரித்துவரும். பல எறும்புகள் பிரயாணஞ் செய்கையில் போகும்போதும் வரும்போதும் ஒவ்வொன்றும் எதிரேவரும் எறும்பினோடுமுகத்தோடுமுகம் வைத்துச் சந்தித்து முகமன் கூறித் தங்கள் பக்ஷத்தைக் காட்டிச் செல்லும். இன்னும் இவைகள், தங்கள் இனத்தில் ஒன்றுக்குத் தீங்கு நேர்ந்தால் வெகு சுறுசுறுப்பாக அதை அவ்வாபத்தினின்றும் நீக்க முயற்சி செய்யும். ஒரு எறும்பை வேறொரு பிராணி வருத்தக் கண்டால், மற்ற எறும்புகளெல்லாம் ஒன்று சேர்ந்து அந்தப் பிராணியோடு சண்டை யிட்டுத் தங்கள் இனமாகிய எறும்புக்கு உதவி செய்கின்றன. ஓர் எறும்பு, ஏதேனுமொரு காரணத்தால் இறந்து விட்டால், மற்ற எறும்புகள் சேர்ந்து அதைத் தூக்கித் தங்கள் வளையிற் கொண்டு போய் ஏதேதோ செய்கின்றன.

2-வது, ஒத்துழைத்தல்:—இவை ஜீவனத்திற்கான முயற்சிகளைச் செய்யும்போது எல்லாம் ஒன்றாகச் சேர்ந்தே செய்கின்றன. பெரிய ஆகார வஸ்துக்கள் ஓரிடத்திற் கிடக்கக்கண்டால் பல எறும்புகளும் கூடித் தங்கள் வலிமை முழுவதையும் செலுத்தி அதைக் கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்திப் பல ஜனங்கள் கூடித் தேரை யிழுப்பது போல இழுத்துக் கொண்டு வந்து தங்கள் வளையிற் சேர்த்து விடுகின்றன. அது வளையில் நுழையக் கூடாததா யிருந்தால், வெகு சீக்கிரத்தில் பல எறும்புகள் மாறி மாறித் தொழில் செய்து அ



தைப் பற்பல துண்டுகளாக்கி வளைக்குள்ளே கொண்டுபோய் விடுகின்றன. இன்னும் சிறிய ஆகாரவஸ்துக்கள் ஓரிடத்தில் குவிந்து கிடக்கக் கண்டால் இந்த எறும்புகளெல்லாம் திரண்டு திரண்டு வெகு சுறுசுறுப்பாகப் போய் அவற்றை எடுத்துக் கொண்டு வந்து அதிக நாள் ஆகாரத்திற்குப் போதுமான அளவு தங்கள் இருப்பிடத்திற் சேர்த்து விடுகின்றன.

3-வது, காலமறிந்து ஆகாரவஸ்துக்களைத் தேடிக்கொள்ளுதல்:—
இந்த எறும்புகள் எந்தஎந்தக் காலத்தில் தங்களுக்கு ஆகாரவஸ்துக்கள் கிடைக்
கக் கூடுமோ அந்த அந்தக் காலத்தில் அவற்றைமிகுந்த ஜாக்கிரதையுடன் சேர்
த்துக் கொள்ளும். தை, மாசி மாதங்களில் புன்செய்களிலும், நன்செய்களி
லும் தானியவஸ்துக்கள் மிகுதியாக விளைந்து மலிந்து கிடக்கும். அக்காலங்க
ளில் இந்த எறும்புகள் கூடி இரவும் பகலும் ஓயாமல் அவற்றை மிகுதியாகச்
சேகரித்துக் கொள்ளும்; இந்தக்காலத்திற் சேகரிக்கும் தானியங்கள் இவற்றிற்கு
மறுவருஷம் தைமீ வரும்வரை ஆகாரத்திற்குக்காணும்; மற்றகாலங்களில் ஆகா
ரவஸ்துக்கள் விசேஷமாகக் கிடைக்கா வென்றும், 'காற்றுள்ளபோதே தூற்
றிக் கொள்ள வேண்டும்' என்ற முறைப்படி, கிடைக்குங் காலத்தில் அவற்றைத்
தேடிக்கொண்டால் எப்பொழுதும் கஷ்டமில்லாமல் ஜீவிக்கலா மென்றும்
நினைத்தே இவை இவ்வாறு செய்கின்றன. இப்படி இவைகள் முன்ஜாக்கிர
தையாகக் கிடைக்குங் காலத்தில் ஆகாரவஸ்துக்களைத் தேடிக் கொள்வதால் மற்
றக்காலங்களில் கஷ்டமில்லாமல் ஜீவிக்கின்றன. இவ்வெறும்புகள் இவ்வாறு
அரும்பிரயாசையுடன் தேடிவைக்கும் தானியங்களை, வேடர்கள், முதிர்ந்த வெ
யிற் காலங்களில் அபகரித்துக் கொண்டு போய் விடுகின்றனர். எப்படி யெனி
ல், வேடர்கள் முன்ஜாக்கிரதையாக ஆகாரவஸ்துக்களைத் தேடிவைத்துக் கொள்
வதில்லை. அதனால் அவர்களுக்கு வெயிற்காலத்தில் ஆகாரகஷ்ட முண்டாய்
விடும். அப்பொழுது அவர்கள் எறும்புக்குழி இருக்கு மிடத்தை ஆராய்ந்து
பார்த்தறிந்து அதைக் கடப்பாரைக்கொம்பினால் தோண்டி உள்ளே எறும்புக
ளால் தேடிவைக்கப் பட்டிருக்கும் தானியங்களைக் கூட்டி யெடுத்துக் கொண்டு
போய்ச் சுத்தப்படுத்தி ஆகாரஞ்சமைத்துச் சாப்பிடுவார்கள். ஒவ்வொரு எறு
ம்புக்குழியிலும் இரண்டு மூன்றுபடி தானியங்களுக்குக் குறையாமலிருக்கும்.
வேடர்கள் ஆகாரவஸ்துக்களைக் காலமறிந்து தேடிக்கொள்ளும் அறிவில்லாதவ
ர்களாய்த் தாங்கள் கஷ்டப் படுவது மல்லாமல், முன்ஜாக்கிரதையோடு ஆகாரம்
தேடிவைக்கும் நற்புத்தியை யுடைய எறும்புகளின் பூஸ்திதிகளையும் கொள்ளை
யடித்துக் கொண்டுபோய் அவற்றிற்கும் கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறார்கள்.
நல்ல புத்திமான்கள் இவ்வகைச் சிறந்த புத்தியையுடைய எறும்புக்குத் தீங்கு
செய்யமாட்டார்கள்; அவற்றை மிகவும் கொண்டாடுவார்கள். வேடர்கள், உயிர்களை
வதை செய்யும் வன்னெஞ்சர்களாதலின் இவ்வாறு செய்கின்றனர். துர்க்குண
முடையவர்களும், சோம்பேறிகளும், புத்திமான்களும் நன்முயற்சி யுடையவ
ர்களுமா யிருப்பவர்களின் பொருளைக் கொள்ளை யடித்து அவர்களுக் கிடரைச்
செய்தல் உலக இயற்கை யன்றோ?

**4-வது, தூரதிருஷ்டி:**—நெடுந் தூரத்திலுள்ள உணவுப் பொருள்களை வெகு சுலபமாகத் தெரிந்து கொள்ளும் சக்தி எறும்புகளுக்குண்டு. இவைகளின் கண்ணுக் கெட்டாத தூரத்தில் ஆகாரவஸ்துக்க ளிருந்தால் அவற்றின் வாசனையினுலோ வேறுஎவ்வித காரணத்தாலோ அவைகளிருக்கு மிடத்தை இவ்வெறும்புகள் தெரிந்து கொண்டு சிலஎறும்புகளை யனுப்பி அவற்றைப் பார்த்து வரும்படி செய்கின்றன. அவைபோய்ப் பார்த்துவந்து அங்கே இன்னவஸ்துக்கள் இருக்கின்றன வென்று சொன்னதன்மேல் எல்லாம் திரண்டுபோய் அவற்றைக் கொண்டுவர ஆரம்பிக்கின்றன. எறும்பிற்குப் பயந்து மனிதர்கள் தின்பண்டங்களை வெகுபந்தோபஸ்தான இடத்தில் வைத்திருக்கும் போதுகூட அவற்றில் எறும்புகள் வந்து சேர்ந்து விடுகின்றன. இதற்குக் காரணம் மேற் கூறியவைகளே. இதுபற்றியே, "கரும்பு கட்டோடு கிடந்தால் எறும்பு எண்ணாயிரமும் தானேவந்து சேரும்" என்னும் பழமொழியும் வழங்குதல் காண்க.

**5-வது, எதிர்கால வுணர்ச்சி:**—எறும்புகள், பின்னே நிகழும் ஒரு காரியத்தை முன்னே உணர்ந்து கொள்கின்றன. சில தினங்களில் மழைவருவதாயிருந்தால், நீர் எறிப்பாயு மிடத்தில் வாசஞ் செய்து கொண்டிருக்கும் எறும்புகள், அம்மழை வரப்போவதையும், அதனுல் நீரேறித் தங்களுக்கபாய முண்டாவதையும், அறிந்து உடனே தங்கள் முட்டைகளை யெடுத்துக் கொண்டு தண்ணீர் வரக்கூடாத மேடான இடங்களில் ஏறிப் போய்க் குடி யேறுகின்றன; இவற்றுல் நடக்கும் இந்தச் செய்கையைப் பார்த்து உலக அனுபவ முள்ள 'சிலர், சில தினங்களில் மழைவரு மென்று தெரிந்து கொள்கின்றனர். இது பற்றி, "எறும்பு முட்டை யெடுத்துக் கொண்டு திட்டிலேறினுல் மழை வரும்" என்ற ஒரு பழ மொழி வழங்குதலுங்காண்க.

**6-வது, சோம்பலின்றித் தொழில் செய்தல்:**—எறும்புகள் எப்பொழுதும் இரைதேடும் முயற்சியிலேயே இருக்கும்; ஏதோ ஒரு சமயத்திற்றுன் எல்லாம் ஒன்று சேர்ந்து இளைப்பாறுவதுண்டு. மற்ற நேரங்களிலெல்லாம் வேலை செய்து கொண்டே யிருக்கும். பெரும்பாலும் இவை தூங்குவது மில்லை. வேலை செய்வதில் இளைப்பது மில்லை. மனிதரோ சிறிது வேலைக்கும் இளைத்துப் போகிறார்கள்; ஒவ்வொரு நாளிலும் முக்காற் பாகத்தைச் சோம்பலிலும் தூக்கத்திலுமே கழித்து விடுகின்றனர்.

**7-வது, வீண்காரியங்களிற் பிரவேசிப்பதில்லை:**—எறும்புகள் வீண் விஷயங்களில் பிரவேசிப்பதே யில்லை; எப்பொழுதும் இரைதேடும் விஷயத்திலேயே புத்தியைச் செலுத்திக் கொண்டிருக்கும்.

**8 வது, வாசஸ்தான சுத்தம்:**—இந்த எறும்புகள் கேவலம் சிறிய பிராணிகளாயிருந்தாலும் தங்கள் வாசஸ்தானங்களை வெகு பரிசுத்தமாக வைத்திருக்கும். தங்கள் வளைகளில் ஆகார வஸ்துக்களை வைப்பதற்கு வெவ்வேறு விநோதமான அறைகளையும், முட்டையிடுவதற்கு வெவ்வேறு நல்லஅறைகளையும், தாங்கள் வசிப்பதற்கு விசாலமான அறைகளையும் அமைத்துக் கொள்ளும்;



எறும்புவளைகளைச் சிதைக்காமல் பக்குவமாகத் தோண்டிப்பார்த்தால் இவ்விநோதங்களை நன்றாகக் காணலாம்.

இன்னும் இவற்றினிடத்தில் எத்தனையோ அருமைக் குணங்களெல்லாம் உண்டு. அவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் மிகவிநோதமாகவேயிருக்கும். இந்தக் குணங்களில் அநேகம் மனிதரிடத்திலும் அமைவது அருமை. மனிதர்களிடம் இக் குணங்கள் அமைந்திருந்தால் அவர்கள் எவ்வளவோ மேன்மையடைவார்கள். மனிதர் பார்த்துத் தெரிந்து அறிவோடு நடக்கும் பொருட்டே, கடவுள் இவ்வாறு சிறிய பிராணிகளிடத்திலும் அதிசய குணங்களை அமைத்திருக்கின்றார். இப்படி யிருந்தும் மனிதரிற் பலர் இவ்வருமைக் குணங்களைக் கற்றுக் கொள்வதில்லை. "நம் முடைய பிறப்பு மற்ற எல்லாப் பிறப்புக்களினும் மேம்பட்டதாகும்" என்று அகங்காரம் மட்டுங் கொள்கின்றனர். எறும்பினுடைய எதிர் கால வுணர்ச்சி ஒன்றை மாத்திரம் இவர்கள் ஆலோசித்து, 'இந்த சக்தி நமக்குண்டா?' என்று நினைப்பார்களே யானுல் வீண் அகங்காரம் கொள்வதற்கு இடமே யிராது.

உலகிய லறிவோன்.

---

## நரிவிருத்தம் மூலமும், உரையும்.

(முன் தொடர்ச்சி புஸ்தகம்-3. சஞ்சிகை-10. பக்கம்-242.)

---

இல்லறத் தியல்பு குன்று வேந்துபூண் முலையி னார்தோள்
புல்லறப் புல்லி மண்மேற் பூவணை பொருந்த லொன்றே
நல்லறத் திறைவன் சொன்ன நாற்கதி நவையை நீக்கும்
தொல்லறத் துணிவி லாதார் துன்பத்தைத் துணிந்து நின்றார்.

(இ-ள்.) இல்லறத்து-குடும்ப தருமத்தினுடைய, இயல்பு-இலக்ஷணங்களில், குன்று-குறைவுபடாத, பூண் எந்து-ஆபரணங்களைத் தாங்குகின்ற, முலையினார்-தனபாரங்களையுடைய மனைவியரின், தோள்-தோள்களை, புல்லற-இழுக்கு நீங்க, புல்லி- இல்லற தருமத்திற் கேற்பக்கூடி, மண்மேல்-பூமியில், பூ அணை-மலர்ச்சயனத்திலே, பொருந்தல் ஒன்றே-சேர்ந்து வாழ்தலாகிய ஒரு செய்கையே, நல் அறத்து-நல்ல தருமத்தையுடைய, இறைவன்-அருகக் கடவுள், சொன்ன-கூறிய, நாற்கதி-நான்கு வகைக் கதிகளின், நவையை-துன்பத்தை, நீக்கும்-விலக்கும், தொல்-பழமையாகிய, அறத்துணிவு-இந்த இல்லறத்தின் உறுதியான செய்கை, இல்லாதார்-இல்லாதவர்கள், துன்பத்தை-மேற்கூறிய நாற்கதி துன்பத்தை, துணிந்து நின்றார்-உறுதி கொண்டு செய்து அதன் வழியிலே நின்றவராவார். எ-று.

(வி-ரை.) இல்லற தர்மத்தின் இயற்கையிற் குறைவு படாத இல்லாளுடன் கூடி, முறைப்படி இல்லறம் நடத்துதலே, இறைவனாற் கூறப்பட்ட நாற்கதித் துன்பங்களை நீக்கி நற்கதியை யுண்டாக்கும்; ஆதலின், கிரமப்படி இல்லறத்தை நடத்துவோர் நாற்கதி நவையினின்றும் நீங்கி நற்கதி யடைவர்; பழமையாகிய இவ்வில்லறத்திற் சேர்ந்து இதனைக் கிரமப்படி நடத்துதலாகிய உறுதிப்பாடில்லாதவர்கள் அந்நாற்கதிகளிற் சார்ந்து அவற்றாலுண்டாம் துன்பங்களை அனுபவிப்பார்கள் என்பது இதன் கருத்து. இல்லறம் என்பது சிராவக தர்மம் எனப்படும்; முறைப்படி செய்யும் இல்லறமும், பிறப்பினை நீக்கி முத்தி யின்பத்தை யுண்டாக்கற்கேதுவாயிருத்தலின், இதனை இங்ஙனம் சிறப்பித்துக் கூறினார் ஆசிரியர். உலகப்பற்றின்றி நடத்தும் இல்லறமும் முத்திக்கேதுவாம் என்பது நூற்களின் றுணிபு. "இல்வாழ்வா னென்பானியல்புடைய மூவர்க்கு, நல்லாற்றினின்றதுணை" என்ற திருவள்ளுவர் வாக்கின்படி, இல்லறத்தான், மற்றைய மூன்று ஆச்சிரமத்தார்க்கும் துணையாயிருந்து, அறங்களை வழுவாது புரிந்து தாமரையிலைத் தண்ணீர்போல் இல்லறத்திலிருந்தாலும் அதில் பற்றின்றியிருந்து வீடுபெறுதலின், இல்லறத்தைத் துறவறத்தினும் சிறந்ததெனக் கூறுவர் பெரியோர். இதுபற்றியே திருக்குறளாசிரியரும், "அறனெனப்பட்டதேயில் வாழ்க்கை யஃதூஉம், பிறன்பழிப்பதில்லாயினன்று" என்று கூறினார் (௬௫)

ஈகைநற் றானமீந்தா ரிணையிலாக் குருவின் மிக்க [மே
போகத்தைக் கொடுத்துப் புத்தே ளுலகமுங் கொடுத்து மண்
லேகநல் லின்ப மாக்கி யிறைவனற் காட்சி யீயும்
மேகத்து மின்னோ டொக்கும் விழுச்செல்வ மதிக்க வேண்டா.

(இ-ள்.) ஈகை-இரப்பவர்க்குக் கொடுத்தலாகியகொடையையும், தானம்-பெரியோர்க்கிடும் சாஸ்திரதானம் முதலிய தானங்களையும், ஈந்தார்-கொடுத்தவர்க்கு, இறைவன்-அருகக் கடவுள், இணையில்லா-ஒப்பில்லாத, குருவில்-உத்தர குருவென்னும் போக பூமியிலே, மிக்க-மிகுதியாகிய, போகத்தை-சுகானுபவத்தை, கொடுத்து-அளித்து, புத்தேள் உலகமும்-தேவ லோக பதவியையும், கொடுத்து-நல்கி, மண்மேல்-இந்தப் பூமியின்மேலும், ஏகம்-ஒரே தன்மைத்தாகிய, நல் இன்பம்-நல்ல சுகத்தை, ஆக்கி-உண்டாக்கி, நற்காட்சி-நல்லதாகிய அனந்த தரிசனத்தையும், ஈயும்-கொடுப்பான் [ஆதலால் பொருளை ஈகையிலும், தானத்திலும் செலவிட வேண்டும்; அங்ஙனம் செலவிடாமல் புதைத்துக்காப்பாற்றி வைத்தால்] விழுச்செல்வம்-விரும்பத்தக்க ஐசுவரிய மானது, மேகத்து மின்னோடு-மேகத்தில் தோன்றி மறையும் மின்னலோடு, ஒக்கும்-நிகர்த்துத் தோன்றி மறையும், (ஆதலால் அதனை) மதிக்க வேண்டா-நிலையுள்ளதென நம்புதல் கூடாது. எ-று.

(வி-ரை) நிலையற்ற செல்வத்தைப் பெற்றவர்கள், அஃதிருக்கும் போதே நல்ல தான தருமங்களைச் செய்ய வேண்டும்; அங்ஙனம் செய்வார்க்கு, இறைவன், உத்தர குருவின் போகத்தையும், தேவ லோக பதவியையும் அளித்து, இவ்வுலகத்திலும் இருக்கும் வரையில் சுகத்தை நல்கி, முடிவில் அனந்த தரிச



னத்தையும் ஈவான். ஆதலின், செல்வப் பொருளுள்ளவர்கள் விரைந்து தான தருமங்களைச் செய்யவேண்டும்; அப்பொருளோ மின்னலைப்போலத் தோன்றி மறைவது; அதனை நிலையுள்ளதென மதித்துத் தானமுதலியவற்றைச் செய்யாமல்மறந்திருக்கலாகாது என்பது இதன் கருத்து. ஈகை-ஏற்றார்க்கு வேண்டுவன நல்கல். தானம்-சற்பாத்திரத்திலிடும் நால்வகைத் தானங்களுமாம். குரு-உத்தர குரு; இஃது அறஞ்செய்தார் போகம் அனுபவிக்கும் பூமியாம். காட்சி-அநந்த தரிசனம். இஃது அநந்த சதுட்டயங்களிலொன்று. இந்த நான்கும் வீட்டின்பம் பெறுவார்க்குறுபயன்களாம். அநந்த தரிசனம்-முழுதுணர்ச்சி. ஈந்தார் போகத்தைக் கொடுத்து எனக் கூட்டுக. ஈந்தார் போகத்தை-நான்காம் வேற்றுமைத் தொகை; ஈந்தார்க்குப் போகத்தை எனவிரியும். (௬௬)

(தொடரும்)

வீ. ஆறுமுகஞ் சேர்வை.

## ஔரோரா போரியாலிஸ்.

ஆகாயத்தில் காணப்படும் விசித்திரங்களுக் கெல்லாம் மேலானது, ஔரோரா போரியாலிஸ் என்னும் ஆகாயமின்னல்தான். பூமியின் உத்தர துருவத்துக்குச் சமீபத்தில் இஃது ஆகாயத்தில் அதிகம் விசித்திரமாகக்காணப்படுகின்றது. ஆனால், இதை வடக்கு மூலையிலுள்ளவர்கள் வடக்கொளி என்று சொல்லுகின்றனர். இப்படிப்பட்ட ஆகாயமின்னல் தக்ஷிண துருவத்திலும் காணப்படுகின்றமையால் இதை அவ்வாறு வடக்கொளியென்று சொல்வது தகாது. ஸ்காத்லாந்திலும், ஷத்லாந்திலும், ஸ்காந்தி நேபியத்திலும், வடஅமெரிக்காவிலும் இந்த ஆகாயமின்னல் கண்ணுக்குப் புலப்படுகின்றது. ஆனால், இந்த ஆகாயஒளியின் விசேஷமானபாகம் லாப்லாந்திலும், ஹட்ஸன் குடாக் கடலிலும், உத்தர துருவ தீவங்களிலுமே காணப்படுகிறது.

ஆகாயத்தில்தோன்றும் சாதாரண மின்னலைப்போன்ற ஒருவகை மின்னல்தான் இந்த ஔரோரா போரியாலிஸ் என்பது. ஆனால், நம்முடைய வானத்தில்தோன்றும் மின்னல்களெல்லாம் ஒருவிநாடியில்தோன்றி மறைந்துபோம். ஔரோரா போரியாலிஸ், விடாமல் அநேகாலம்வரையில் மின்னிக்கொண்டேயிருக்கும். வானத்திலுள்ளகாற்று எப்பொழுதும் எலக்டிரிசிட்டி என்னும் மின்சாரத்தால் தாக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் இந்த ஆகாயவொளி, விடாமல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. பூமியிலிருந்து 40. மைல் தூரம்வரையில் வாயு உலாவிக் கொண்டிருக்கிறது. பூமிக்குச்சமீபத்திலுள்ள வாயுவும் மின்சாரத்தால் தாக்கப்படுகிறது; அதிகஉயரத்திலுள்ள வாயுவும் மின்சாரத்தால் தாக்கப்படுகிறது. இவ்விருவகை மின்சாரத்துக்கும் வித்தியாசம் உண்டு. மின்சாரத்தில் உடன்பாட்டு மின்சாரமென்றும், எதிர்மறை மின்சாரமென்றும் இரண்டு பிரிவுண்டு. பூமிக்குச் சமீபத்திலுள்ள வாயுவில் எதிர்மறை மின்சாரமும், உயரத்திலுள்ள வாயுவில் உடன்பாட்டு மின்சாரமும் உற்பத்தியாகின்றன. இவ்விருமின்சாரமும் ஒன்றுசேரும்போது மின்னலுண்டாகும். உத்தரதுருவத்திலும் தக்ஷிண துருவத்திலும் இவ்வாறுதான் ஒருமின்னல். உண்டாகின்றது. சிலசமயங்களில் இந்தமின்னல் நிற்கும்போது பெரும்புயலும் அகோரமாரியும் உண்டாகும். உடனே மின்னலும் நின்றுபோம். துருவ நாடுகளில் ஆறுமாதம் ஓயாப்பகலாகவும் மற்றொரு ஆறு மாதம் ஓயா

16 2018

இரவாகவும் இருக்கும். அப்படியுண்டாகும் இராப்பொழுதில் அங்குள்ளமனிதர்களுக்கு இந்த ஔரோரா பொரியாலிஸால் மிக்க நன்மையுண்டு. அப்பொழுது பகற்காலம் போலவே அம்மின்னலின் ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கும். மற்றொரு ஆறுமாதத்தில் பகலாயிருக்கும்போது இம்மின்னலின் ஒளி அதிக அழகாகத் தோன்றுவதில்லை. இராக்காலத்தில் மின்னலுண்டாகும்போது அம்மின்னலுண்டாகும் உயரத்துக்குத் தக்கபடியும் பார்ப்போரின் தூரத்துக்குத் தக்கபடியும் அது பல பல விதமாகக் காணப்படும். சில சமயங்களில் ஒரே பிரகாசமாகவுங் காணப்படும். மற்றுஞ் சில சமயங்களில் பாம்பு நெளிவது போலும் அழகாகக் காணப்படும். இன்னும் அது, வானத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குத் தாவிச் செல்லும்போது மிக்க இரம்மியமாயிருக்கும். அக்காலத்தில் சித்திரக்காரன் வானத்தில் *தூரியக்கோலால் சித்திரம் எழுதுவதுபோல் காணப்படும். வேறு சமயங்களில் தாவிச்செல்லும் அம்மின்னல் நடுவழியில் முறிந்துபோவதுண்டு. அப்படிமுறிந்த விடத்திலிருந்து மரத்தின் கிளைபோல வேறொருமின்னல் புறப்படும். சிலசமயங்களில் அதிலிருந்து புஷ்பமாரிபோல் மின்னலுண்டாகும். மற்றுஞ் சிலசமயங்களில் விசிறியால் வீசுவதுபோல் மின்னலுண்டாகும். ஒவ்வொரு வேளையில் பார்ப்போருடைய தலைக்குமேல் தங்கவர்ணப்பட்டால் ஆகாயப் பந்தல் போட்டதுபோல் தோன்றும். அப்படித் தோன்றும்போது காற்றடிக்க ஆரம்பித்தால் அந்தத் தங்க நிறப்பந்தல் இனியில்லா ஆச்சரியத்தோடுவிளங்கும். சுருக்கச் சொல்லுமிடத்து, ஔரோரா பொரியாலிஸை ஒருமுறை கண்ணுற்றோர் உலகத்திலுள்ள எவ்வகை வாணவேடிக்கையையும் கண்டு ஆச்சரியப்படமாட்டார். கைதேர்ந்த ஜப்பானியருடைய வாணவேலையும் இந்த ஆகாய மின்னலுக்கு ஒத்திராதென்பது நிச்சயம். ஆனால் சாதாரண காலங்களில் இந்த மின்னொளியில் இடி முழக்கம் உண்டாவதில்லை. இன்னும், எப்போதும் வடபாகத்தில்வானவில் போன்ற ஒரு மின்னல் வில் தோன்றிக் கொண்டேயிருக்கும். இந்த வில்லுக்கும் அடிவானத்துக்கும் இடையில் வெட்ட வெளியான இருள் தோன்றும். இந்த இருளுக்கெதிரில் அந்த வில் தோன்றும்போது அதன் வெண்ணிறமும் செந்நிறமும் அதிகமான பிரகாசத்தோடு காணப்படும். இந்த வில்லிலிருந்து புறப்படும் ஒளி சில சமயங்களில் விசிறிபோல் பரவிக்கொண்டு அடிவானத்திலிருந்து நடுவானம் வரையில் வருவதுண்டு. அங்கே வந்தவுடன் அந்த மின்னல் வெடித்து நெருப்புப் பொறிகள் நான்கு திசைகளிலும் பரவும்; அப்போது வானமுழுதும் வாணவேடிக்கையால் நிறைந்தது போலத் தோன்றும். ஊதா, பச்சை, மஞ்சள், சிவப்பு முதலிய வர்ணங்களெல்லாம் காணப்படும். இரண்டொரு நிமிஷங்களில் இந்த நிறங்கள் மறைந்துபோம். மறையும்போது மங்கலான ஒளியொன்று வானத்திற் காணப்படும். அப்போது வானத்தில் அங்கங்கே வெண்மேகங்கள் போன்ற படர் மேகங்கள் தோன்றி மறையும். சில சமயங்களில் எல்லா மின்னல்களும் ஒன்றோடொன்று கலந்து மங்கிப்போம். அப்போது சிறிதுநேரம் வானமுழுதும் ஒரே இருளாயிருக்கும். சிறிதுநேரத்துக்குள் மறுபடியும் மின்னல்கள் தோன்றும்.

---

* சித்திரமெழுதுங்கோல்.

"லோகாதிசய விளக்கம்".